இந்த நிலைமையில் இருந்துகொண்டுதான் மந்திரிகள் இந்த ராஜ்ஜிய புனரமைப்பு விஷயமாக பேசுகிறார்கள் என்பதை நான் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இங்கே நிதி அமைச்சருடைய பேச்சில் கேட்டுக்கொண்டபடி பார்க்கவேண்டும் மொழிவழியாக ராஜ்ஜியங்களை அமைப்பது, அதுதான் உண்மையில் தேசிய ஒற்றுமையை பலப்படுத்தும். அதுதான் உண்மையாகவே ஜனநாயக முறையில் நாட்டை நடத்திச் செல்லுவதற்கு வாய்ப்பு வசதியளிக்கும், அதுதான் உண்மையாகவே நம் நாடு ஜனநாயக ரீதியில் முன்னேறும், மக்கள் வாழ்க்கைத்தரம் ஒட்டு மொத்தமாக வளருவதற்காக இன்றைய ஐந்தாண்டு திட்டத்தை வைத்திருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கு முழு மூச்சுடன் ஒத்துழைப்புக் கொடுத்து வெற்றியடையும்படி செய்யவேண்டுமென்று என் போன்றவர்கள் அடிக்கடி சொல்லிவந்திருக்கிறோம். ஏன் இப்படி சொல்லுகிறோம் ? நிதி அமைச்சர் அவர்கள், ஒரு ராஜ்ஜியம், இந்திய யூனியனை விட்டு பிரிந்துபோகவேண்டுமென்று நினைக்கும் ஒரு கட்சிக்கு மட்டும் பதில் சொல்லுவதினாலேயே, அவர்கள் சொல்லும் கருத்துக்கள் சரி என்று ஆகிவிடுமா, அல்லது அவர் சொல்லும் இம்மாதிரியான பதிலால் இந்தப் பிரச்சினையை சமாதான முறையில் தீர்த்துவிட முடியுமா என்பதை கவனிக்கவேண்டும். காங்கிரஸ் அதிகாரத்தில் உள்ளவர்களும் இதை யோசிக்கவேண்டும். எல்லோருமாக, நிதானமாக இதை யோசித்து முடிவு செய்யவேண்டும். தற்போது இது விஷயமாக பெரும் தலைவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு டாக்டர் செய்யும் காரியத்தை ஒப்பிட்டு இது சம்பந்தமாக பேசினார்கள். இந்த சமயத்தில் லோகமானிய கங்காதர திலகரைப்பற்றி ஞாபகம் வருகிறது. அன்று இருந்த பிரிட்டிஷ் அதிகாரம், எப்படி இந்த நாட்டுக்கு ஒரு டாக்டரைப்போலிருந்து வேலை செய்தது என்பதை அவர் குறிப்பிடும்போது சொல்லுகிறார், நம் நாட்டை diagnose செய்து, ஜுரம் இருக்கிறதென்று ஒரு மருந்து கொடுப்பது, வயிற்றுவலி என்று சொல்லி அதற்கு மருந்து கொடுப்பது போன்ற காரியங்கள் செய்து, அதிகாரம் செய்துவந்தார்கள் என்று சொன்னார்கள். பிரிட்டிஷ் நிர்- 11-53 a.m.
வாகம் இருக்கிறது என்று கூறினார். நான் வேதனையோடு சொல்கிறேன், இந்த உபமானத்தை நம்முடைய பண்டித நேருவின் தலைமையின்கீழ் இருக்கிற ஆட்சிக்கு கூறக்கூடாது என்று. ஆனால் இந்த மொழிவழி ராஜ்யத்தை பொருத்தவரையில், ராஜ்ய சீரமைப்பு பிரச்சினையில் அவர் எடுத்துச் சொன்னார். அதைப்பற்றி எடுத்த நடவடிக்கைகள், அதைப்பற்றிய கருத்துக்களை அடிக்கடி மாற்றிக்கொள்வது, இதைப் பார்த்தால் வேறு என்ன சொல்ல இருக்கிறது. நம்முடைய தலைவர்கள்தான், ரொம்ப தீர்க்கதரிசனத்தோடு தேசீய போராட்டத்தை நடத்தினவர்கள் தான். ஆனால் ஒட்டு மொத்த தேசிய இயக்கமும், நமது அனுபவம் பூராவும், அறிவு பூராவும் நமக்கு தந்த ஒரு உண்மையை மறுத்து வந்து இருக்கிறோம் என்பதை நிதி அமைச்சர் அவர்கள் விளக்கிய பிறகும் நன்றாக காட்டுகிறது. மொழிவழி பிரிவது ஒற்றுமைப்படுத்துகிறதா, பிரிவை உண்டாக்குகிறதா என்பதைப் பார்க்கவேண்டும். நம் நாட்டின் சரித்திர வளர்ச்சியில் என்ன பார்க்கிறோம் ? மொழிவழியாக நாடு அமையவேண்டும் என்று சொல்கிறவர்கள் தேசீய ஒற்றுமைக்கும் உறுதியாக நின்றுவந்து இருக்கிறார்கள். இது நிதி அமைச்சருக்கும்

[Sri P. Jeevanandam] [28th March 1956

நமக்கும் தெரியாததல்ல. வாழ்க பாரத மணித்திருநாடு என்று பாடினனே, அந்த புலவன் என்ன சொன்னான்? அவனுடைய அப்பழுக்கற்ற தேசபக்தி என்ன சொல்லிற்று? "தமிழ்த்திருநாடு தனைப்பெற்ற தாயென்று கும்பிடடி." "செந்தமிழ் நாடென்ற போதினிலே";

செந்தமிழ்நாட்டு பொருநர், சேரன்தன் வீரர் சிந்தை துணிந்த
 தெலுங்கர்,
தாயின் சேவடிக்கேபணி செய்திடு துளுவர்,
கன்னட ரெட்டியரோடு—போரிற்
காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர்களொப்ப—நிற்கும்
பொற்புடையாரிந்துஸ்தானத்து மல்லர்,
பாரில் மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்
பஞ்சநதத்துப் பிறந்தோர்—முன்னைப் பார்த்தன் முதற்பலர்
வாழ்ந்த நன்னாட்டார், துஞ்சும் பொழுதினுந் தாயின் பத்த
தொண்டு நினைந்திடும் வங்கத்தினோரும், சேர்ந்ததைக்
காப்பது காணீர், அவர் சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க.
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்தேவி துவஜம் சிறப்புற
வாழ்க என்றார்.

தேசீய இயக்கத்தில் கல்மிஷம் ஒன்றும் இடையாது. பிரிந்துபோகிற புத்தி இடையாது. கோவா போராட்டத்தில் தெலுங்கன் சென்று மகாராஷ்டிரனுடனின்று செத்தான். ஆந்திரா பிரிந்தது. அவர்கள் சாதாரணமாக நின்று போராடி வெற்றி பெற்றார்களே ஒழிய, ஆந்திர ராஜ்யம் பிரிந்ததும், இந்திய யூனியனைவிட்டு போய்விடுவோம் என்று கூறவில்லை. இது நாம் கண்ட சரித்திரம். நம்முடைய பரம்பரையில் மொழிவழி பிரியவேணடும் என்பது எல்லா மக்களுக்கும் ஜனநாயக வாழ்வில் ஈடுபடுவதற்கு, வாழ்வை உறுதிப் படுத்துவதற்கு உபயோகப் படுகிறது. மொழிவழி பிரிவினை தேசீய ஒற்றுமையை செழுமைப் படுத்துகிறதே ஒழிய அதைப் பிரித்துவிடவில்லை என்பதை துரதிர்ஷ்ட வசமாக சமீப காலத்தில் நம்முடைய தலைவர்கள்—மேலிடத்தார்—ஒப்புக்கொள்ளவில்லை. ஒப்புக்கொள்ளாமல் மொழிவழி பிரிவினை ஆகிய இன்றியமையாமை இருக்கிறதே, இது வெறியாகத்தான் மாறும், இது separatism தனித்துப்போகிற போக்கைத்தான் கொண்டுவரும் என்று கணக்குப் போடுவது இன்னும் இருக்கிறது என்பது நமது நிதி அமைச்சரவர்கள் விளக்கத்திற்கு பின்னால் உறுதிப்படுகிறது. நாங்கள் அந்த அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அதிலிருந்து பல தவறுகள் வருவதற்கு இடமிருக்கிறது. ஆகையினால்தான் "தமிழ்நாடு" என்று ஆக்கவேண்டும் என்பது பற்றி நிதி அமைச்சரவர்கள் சொல்வார் என்று நினைத்தேன். ஆனால் அவர் அதுபற்றி சொல்லவில்லை. "இமிழ்கடல் வரைப்பால் தமிழகம்" என்று 2,000 வருஷமாக, செந்தமிழ் நாடு என்று பாரதி சொன்னபடி நாமெல்லாம், நிதியமைச்சர் அவர்கள் உள்ளிட்டு, அத்தனைபேரும் பார்த்து வந்திருக்கிறோம். ஆகவே, சென்னை ராஜ்யத்தை தமிழ் ராஜ்யமாக்கினால் என்ன? கேரளம் ஆகலாம்; ஆந்திரம் ஆகலாம்; பம்பாய் என்பது மகாராஷ்டிரமாகலாம்; குஜராத் ஆகலாம். சென்னைக்கு முக்கியத்துவம் உண்டு. ஆனால் நாட்டின் முக்கியத்துவம், நகரின் முக்கியத்துவத்திற்காக குறையக் கூடாது. சம்யுக்த கர்னாடகம் என்றால் மூன்று கோடி கன்னடியர்களுக்கும் இருதயம் சுருங்கி விரிந்து இன்பமாக இருக்கிறது. மைசூர் என்றால் முக்கியத்துவம் இல்லை. அதேமாதிரிதான் ஆந்திரம் விசால ஆந்திரமாக கொடுக்கப்படாமல் ஆந்திரா-தெலிங்கானா என்ற ஒன்றரை முழ நீளம் பெயரை சொல்வதற்கான நிலையைத்தான் வைத்து இருக்கிறோம். இது அந்த மொழிக்கு கொடுக்கவேண்டிய முக்கியத்வத்தை குறிக்க



28th March 1956] [Sri P. Jeevanandam]

வில்லை. சரித்திர வளர்ச்சியில் மொழியை அடிப்படையாக எடுத்துக் கொள்வது முற்போக்குதான். மொழி அடிப்படையில் பிரிவது பிற்போக்கல்ல என்பதை காட்டுகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே மொழிவழியாக ராஜ்யங்கள் பிரிக்கப்படும்பொழுது இந்திய 11 58 a.m.
தேசம் சுக்கு நூறாக உடைந்து விடாது. காங்கிரஸ் கட்சியும்கூட சுக்கு நூறாக உடைந்து விடாது. காங்கிரஸ் தரப்பில் உள்ளவர்கள் அம்மாதிரி யாரும் நினைக்க வேண்டாம். வளர்ந்துவரும் ஜனநாயகத்திற்கேற்ப, வளர்ந்துவரும் தேச பக்திக்கு ஏற்ப நம்முடைய சென்னை ராஜ்யத்தை தமிழ்நாடு என்று ஏன் அழைக்கக் கூடாது என்று நான் கேட்கிறேன். தமிழ் என்று சொல்வதே காங்கிரஸை அழுத்திவிடக்கூடியது என்ற விபரீதமான அர்த்தத்தை யாரும் கொடுத்துக் கொள்ள வேண்டாம். அந்த விபரீதப் போக்கு ஏற்பட வேண்டாம் என்று நான் காங்கிரஸ் தரப்பினரை நான் கேட்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்களும்கூட அம்மாதிரி ஒரு தமிழ் உணர்ச்சியை வைத்துக்கொள்ளக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். நம்முடைய சென்னை ராஜ்யத்தை தமிழ் நாடு என்று தாராளமாகச் சொல்லலாம். ஒவ்வொரு ராஜ்யமும் மொழியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு அந்த மொழியின் அடிப்படையிலேயே ராஜ்யங்களுக்கு பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரிதான் தமிழ் பேசும் பகுதியை தமிழ்நாடு என்று குறிப்பிட்டுவிட வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் வற்புறுத்த விரும்புகிறேன்.

எல்லைப் பிரச்னை சம்பந்தமாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசும் போது ரொம்ப 'மைனர்' பிரச்னையைப் பொருத்தவரைதான் எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும். என்று சொன்னார். அதுவும் எப்படி என்றால் "அவசியப்பட்டால், அவசியம் என்று இந்தியா கவர்ன்மெண்டு ஒத்துக் கொண்டால் அப்பொழுதுதான் எல்லைக் கமிஷன் ஏற்படும்" என்று சொன்னால் இது எப்படி இருக்கிறதென்று பாருங்கள். இது திரிபுரம் எரித்த கதையாகத்தான் இருக்கிறது. முதலில் சம்பந்தப்பட்ட இரண்டு ராஜ்யங்களும் ஒத்துக்கொள்ள வேண்டும். அதுவும் 'மைனர்' பிரச்னையா என்பதை மைக்கிராஸ்கோப் வைத்துக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்குப் பின்னால், இது மைனர் பிரச்னைதான் என்று பெரிய இடத்தார் ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பின்னால் அதைப்பற்றி பேச்சு வார்த்தை ஆரம்பிப்பதற்கு ஏதாவது இடம் உண்டா என்று இரும்புக் கதவு போட்டு அடைத்த மாதிரி எல்லைப் பிரச்னை விஷயம் இருக்கிறது என்பதை வருத்தத்துடன் சொல்லவேண்டியதாக இருக்கிறது.

காங்கிரஸ் தரப்பிலிருந்தே இந்த மொழிவாரி ராஜ்ய பிரிவினை மசோதா வந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்தக் காங்கிரஸ் தரப்பிலிருந்தே திரிபுர எதிர்ப்பு வரக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று மொழிகள் பேசக்கூடிய இனத்தவர்கள் இங்கே இருக்கிறோம். திருவாங்கூர் ராஜ்யத்தில் இருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய நாகர்கோவில், கன்னியாகுமரி, சுசீந்திரம் போன்ற தாலூக்காக்களில் மிகச் சிறப்பான கோவில்கள் இருக்கின்றன என்றும் அந்தக் கோவில்களுக்கு 20 லட்சம் வரையில் செலவாகிறதென்றும், அதை நாம் கேட்கலாம் என்றும் சொன்னார்கள். அதைக் கேட்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழ் என்பது ஒரு கட்சி சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. ஆகவே தமிழ் நாடு என்று சொல்லும்போது அதில் ஒரு குறிப்பிட்ட கட்சிதான் இருக்க வேண்டும் என்பதல்ல. தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியும் இருக்கலாம், கம்யூனிஸ்ட் கட்சியும் இருக்கலாம், வேறு எந்தக் கட்சி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆகவே இந்த ராஜ்யத்தை தமிழ் நாடு என்றுதான் சொல்லவேண்டும். அதில் காங்கிரசுக்கு முதல் பங்கு உண்டு என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ராஜ்யம் தமிழ் நாடு என்று அழைக்கப்பட வேண்டும் என்று சொல்வதனால் அது காங்கிரசுக்கு விரோதம் என்று விபரீதமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. தமிழ்,

தமிழ் நாடு என்ற வார்த்தைகள் எல்லாம் ஏதோ காங்கிரசுக்கே விரோதம் என்ற விபரீதமான கருத்தை காங்கிரஸ்காரர்கள்கூட எண்ண வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தமிழ் நாடு அமையவேண்டும் என்பதில் அவர்களும் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த எல்லைப் பிரச்னையில் ஜனநாயகக் கோட்பாட்டை நீங்களே ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். சித்தூர் ஜில்லாவில் தமிழ்நாட்டைச் சேரவேண்டிய சில பகுதிகள் இருக்கின்றன என்று பல தடவை சொல்லி இருக்கிறோம். அது சம்பந்தமாக எல்லைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்று சென்னைச் சர்க்காரும் ஆந்திரா சர்க்காரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சென்னை ராஜ்யத்தோடு தொடர்ச்சியாக இருக்கும் தமிழ் . பகுதிகளை, கிராமத்தின் அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஜனநாயக முறையில் எல்லைப் பிரச்னை தீர்க்கப் படவேண்டும். ஜனநாயகத்திற்கு விரோதம் காங்கிரஸ் அல்லவே. அதே கொள்கை எல்லையில் தகராறு இருப்பதாகச் சொன்னேன். தமிழர்கள் மலையாள ராஜ்யத்தில் இருக்கவும், மலையாளிகள் தமிழ் இராஜ்யத்தில் இருக்கவும், தமிழர்கள் தெலுங்கு ராஜ்யத்தில் இருக்கவும் சிக்கல் இருப்பது இயற்கையும் இன்றியமையாததும் ஆகும். முழுப்பங்கு எடுத்துக்கொள் வதற்கு கஷ்டம் என்பதை கட்டாயமாக ஒப்புக்கொள்ளவேண்டும்.

12-04 a.m. **THE HON. SRI C. SUBRAMANIAM** : ராஜ்யங்களை எப்படித் தான் மாற்றியமைத்தாலும், தமிழ்நாட்டில் தெலுங்கர்களும், மலையாளிகளும் இல்லாதபடி மாற்றியமைக்க முடியாது. அதே மாதிரி, மலையாளத்தில் தமிழர்கள் இல்லாதபடி மாற்றியமைக்க முடியாது. ஒரு ராஜ்யத்தில் வேறு மொழி பேசுபவர்கள் இல்லாதபடி மாற்றியமைக்க முடியாது. ஆகையால் தமிழர்கள் மட்டும் இருக்கக்கூடிய தனித் தமிழ் ராஜ்யம் அமைக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**SRI P. JEEVANANDAM** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. உலகத்தில் தனியாக யாரும் இருக்கவே முடியாது. நான்கு தமிழர்கள் லண்டனுக்குப் போய் அங்கே இருக்கிறார்கள். (சிரிப்பு.) இப்போது உலகம் முழுவதும் எங்கு வேண்டுமானாலும் போகலாம். கொச்சி, திருவனந்தபுரம், கொல்லம் முதலிய மலையாளப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய தமிழர்களை இங்கு வரவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. அங்கே பெரிய வியாபாரிகளாக இருக்கக்கூடிய தமிழர்களை இங்கே வரவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. அதே மாதிரி சென்னையில் இருக்கக்கூடிய மலையாள வக்கீல்களும் மற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள மலையாளிகளும் மலையாள ராஜ்யத்திற்குப் போக வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. மலையாளிகளுடைய தாயகமாகிய மலையாள ராஜ்யத்தோடு சேர்ந்தாற்போல் இருக்கின்ற பிரதேசங்களிலுள்ள மலையாளிகளை மலையாள ராஜ்யத்துடனேயே சேர்க்க வேண்டும். அதே போல் தமிழர்களுடைய தாயகமாகிய தமிழ் ராஜ்யத்தோடு சேர்ந்தாற்போல் இருக்கின்ற பிரதேசங்களிலுள்ள தமிழர்களை தமிழ் ராஜ்யத்தோடு சேர்க்க வேண்டும். தாயகத்தோடு சேர்ந்தாற்போல் இருக்கின்ற அதே மொழி பேசும் பிரதேசங்களை தாயகத்துடனேயே சேர்க்க வேண்டும். இன்று, பெஜவாடாவில் ரயில்வே உத்தியோகத்தில் உள்ள தமிழர்களை சென்னை ராஜ்யத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் சொல்லவில்லை. மாதுங்காவிலுள்ள தமிழர்களை சென்னை ராஜ்யத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்லவும் முடியாது. ஒரு மொழி பேசுபவர்களுடைய தாயகத்தை ஒரு தனி ராஜ்யமாக்க வேண்டும். அந்த அந்த ராஜ்யத்தில் அந்த அந்த மொழி பேசுபவர்களை முன்னணியில் நிறுத்தி ஜனநாயகத் தன்மையில் ஆட்சி நடத்தப்பட வேண்டும். அந்த அந்த மொழி பேசுபவர்களுக்கு அவர்களுடைய தாயகத்தில் ஜனநாயக ஆட்சியில் உரிய பங்கு கிடைக்க வேண்டும். இதர வசதிகளுக்கு **zonal** கவுன்சில்கள் இருக்கின்றன. பொருளாதாரம் போன்ற துறைகளில் ராஜ்யத்திற்கு ராஜ்யம் உதவி கிடைக்கச் செய்வதற்கு மண்டலக் கவுன்சில்கள் இருக்கின்றன. அந்தக் கவுன்சில்கள் அவசியமானவை.





ஆகவே மொழிவழி ராஜ்யங்கள் அமைக்கும்போது, ஒரு மொழி பேசும் கோடிக்கணக்கான மக்களை அவர்களுடைய தாயகத்தில் சேர்க்க வேண்டுமே தவிர அவர்களை ஈடு ஜோடு தெரியாதபடி பிரித்துவிடக் கூடாது. ஆகவே ஒரே மொழி பேசும் மக்களுக்கு நடுவே 'சீனச் சுவர்' களை எழுப்பக் கூடாதென்றுதான் நான் சொல்கிறேன். ராஜ்யசீரமைப்பு கமிஷன் வந்து என்ன செய்தது ? அதுவும் சுவர்களைப் போட்டுவிட்டுப் போய்விட்டது. தேவிகுளமும், பீர்மேடும் தமிழகத்தோடு சேராதபடி கதவு போட்டு அடைக்கப் பட்டு விட்டது. அதே மாதிரித்தான் மலையாளிகள் விஷயத்திலும் கூடலூரை அடைத்து விட்டது. ஆகவே இரண்டு பக்கத்திலுள்ளவர்களுக்கும் நியாயம் வழங்கப்படவில்லை ; மலையாளிகளுக்கும் நியாயம் வழங்கப்படவில்லை; தமிழர்களுக்கும் நியாயம் வழங்கப்படவில்லை. ஆகவே ராஜ்யங்கள் மொழிவழியாக அமைக்கபடாதோ என்ற பயம் நமக்கு ஏற்படுகிறது. இந்திய யூனியனை பலப்படுத்தி, ஜனநாயக முறையில் நிர்வாகத்தை நடத்தி, ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு, மொழிவழி ராஜ்யங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மண்டலக் கவுன்சில்கள் எந்த முறையில் ஏற்படுத்தப் படும் என்பதுபற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அந்தக் கவுன்சிலின் சேர்மனாக மத்திய அரசாங்க மந்திரி நியமிக்கப்படுவார் என்றும், உதவிச் சேர்மனாக நமது ராஜ்ய மந்திரி நியமிக்கப்படுவார் என்றும், மற்றும் பிரதம காரியதரிசிகளும் அதில் நியமிக்கப்படுவார்கள் என்றும் சொல்லப்பட்டது. இவர்களையெல்லாம் நியமிக்க வேண்டியது அவசியமானது தான் என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால் இதில் இன்னும் கொஞ்சம் ஜனநாயகத் தன்மை வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களை நியமிப்பது என்ற முறையில் இங்கிருந்து மூன்று அங்கத்தினர்களையும் அந்தக் கவுன்சிலில் நியமிக்க வேண்டும். மண்டலக் கவுன்சிலில் வரக்கூடிய தீர்மானங்கள் எந்த ராஜ்யம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் அவைகளை அந்த அந்த ராஜ்ய சட்டசபையில் கொண்டுவந்து முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இந்தக் கவுன்சில்கள் ஜனநாயகத் தன்மையுடையதாக இருக்கும். ஆனால், நமது நிதி அமைச்சர் அவர்கள் மண்டலக் கவுன்சில்களைப்பற்றிக் கூறியதைப் பார்க்கும்போது நமக்கு ஒரு பயம் ஏற்படுகிறது. "இந்த மண்டலக் கவுன்சில்கள் இப்போது ஆலோசனைக் கவுன்சில்களாகத்தான் இருக்கும். ஆனால் பிறகு இவைகளுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்படலாம் ; இவை வேறு உருவத்திலும் மாறி விடலாம்" என்று கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தட்சிணப் பிரதேசம், பூர்வப் பிரதேசம், பஸ்சிமப் பிரதேசம் என்று வேறு உருவங்களில் இந்த மண்டலக் கவுன்சில்கள் மாறி, பழையபடி பாரதம் வந்துவிடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. அம்மாதிரி பல பயங்கள் காரணமாக மக்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். இரண்டு ஆந்திர ராஜ்யங்கள், இரண்டு மஹாராஷ்டிர ராஜ்யங்கள், ஒரு தட்சிணப் பிரதேசம் இவைகள் அமைக்கப் படக்கூடாதென்று மக்கள் கிளர்ச்சி செய்தால், அவற்றிலுள்ள பலாத்கார அம்சத்தைத் தான் கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள் ; மக்களின் உள்ளம் குமுறியதால்தான் அவர்கள் கிளர்ச்சி செய்திருக்கிறார் கள். அந்தக் கிளர்ச்சி ஒரு தேசிய இயக்கம் என்பதை நாம் உணர வேண்டும். சுதந்திரம் வந்ததிலிருந்து ஏழு வருஷங்களுக்குப் பிறகு ராஜ்யப் புனரமைப்பு வருகிறது. ஏழு வருஷங்களுக்குப் பிறகு வரும் போதும், அது குண்டாந்தடியுடன் வருகிறது ; காந்திஜியைத் துன் புறுத்திய அதே குண்டாந்தடியுடன் வருகிறது. ஆனாலும், கனம் நிதி அமைச்சர் அவர்கள் நமது தமிழ் நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சியைப் பாராட்டினார்கள். இதில் கம்யூனிஸ்ட்டுக் கட்சிக்கும் பெரிய பங்கு உண்டு. எங்கோ ஷோலாப்பூரிலும், பெல்காமிலும், பம்பாயிலும் நடந்த கிளர்ச்சியின் தன்மையை சாக்காகக் காட்டி எல்லா இடங்களிலும் நடந்த கிளர்ச்சியை அலட்சியம் செய்யக்கூடாது. உண்மையான தேசிய இயக்கத்தை, தேசியக் கிளர்ச்சியை ஏற்படுத்தும் மக்களை நமது தாய் தந்தையர்களாகக் கருத

[Sri P. Jeevanandam] [28th March 1956

12-09 a.m வேண்டும்; தாய் தந்தையர்களுக்குக் கொடுக்கும் மதிப்புக்குச் சமமான மதிப்பை இவர்களுடைய கிளர்ச்சிக்குக் கொடுக்க வேண்டும். ஆகவே இந்த மண்டலக் கவுன்சில்களை ஜனநாயகத் தன்மையில் அமைக்க வேண்டும். ஸோனல் கவுன்ஸிலைப் பொறுத்தவரை அந்தத் தன்மை இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நிதி அமைச்சரவர்கள் சொன்னபோது இரண்டு மூன்று அம்சங்களைப் பற்றிச் சொன்னார்கள். அதில் ஆட்சேபனை கிடையாது. ராஜ்யங்கள் பிரிவ தற்கு முன்பு இங்கிருந்து லோக சபையில் ஸ்தானம் வகித்த மூன்று பேர் கள் வேறு ராஜ்யங்களிலிருந்து ஸ்தானம் வகிப்பார்கள் என்று சொல்லப் பட்டது. அதில் ஆட்சேபனை கிடையாது. எல்லோருக்கும் பச்சையாகத் தெரியும்.

லோக சபைக்கும், ராஜ்ய அசெம்பிளிக்கும் அங்கத்தினர்களைப் பிரித் திரிக்கும் முறையைப் பார்க்கும்போது, ஆந்திரா-தெலிங்கானுவுக்கு லோக சபையில் 43 ஸ்தானங்களும், ராஜ்ய சட்டசபையில் 301 ஸ்தானங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அஸ்ஸாம் ராஜ்யத்துக்கு லோக சபையில் 12 ஸ்தானங்களும், ராஜ்ய சட்டசபையில் 108 ஸ்தானங்களும் கொடுக்கப்பட் டிருக்கின்றன. பீஹார் ராஜ்யத்திற்கு லோக சபையில் 55 ஸ்தானங்களும், ராஜ்ய சட்டசபைக்கு 330 ஸ்தானங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கேரள ராஜ்யத்திற்கு லோக சபையில் 18 ஸ்தானங்களும் ராஜ்ய சட்டசபையில் 126 ஸ்தானங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மத்தியப் பிரதேச ராஜ் யத்திற்கு லோக சபையில் 36 ஸ்தானங்களும், ராஜ்ய சட்டசபையில் 288 ஸ்தானங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், சென்னை ராஜ்யத் திற்கு லோக சபையில் 41 ஸ்தானங்களும், ராஜ்ய சட்டசபையில் 205 ஸ்தா னங்களும் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்னை ராஜ்யத்திற்கு ராஜ்ய சட்டசபையில் 205 ஸ்தானங்களே கொடுக்கப்பட்டிருக்கின்றன. கனம் நிதி அமைச்சரவர்கள் என்னதான் ஆட்சேபனை செய்து, சிபார்சு செய்து பார்த்தாலும் ஒன்றிரண்டு ஸ்தானங்களை வேண்டுமானால் மேலும் பெற லாமேயொழிய, ஒதுக்கப்பட்டிருக்கிற எண்ணிக்கையானது மற்ற சில ராஜ்யங் களைவிடக் குறைவாகத்தான் இருக்கிறது.

அஸ்ஸாம் ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால் லோக சபையில் ஒரு ஸ்தானம் இருந்தால் ராஜ்ய சட்டசபையில் 9 ஸ்தானம் வீதத்தில் நிர்ண யிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் ராஜஸ்தான் ராஜ்யத்தை எடுத்துக் கொண்டால், அதற்கு லோக சபையில் ஒரு ஸ்தானம் இருந்தால் ராஜ்ய சட்டசபையில் 8 ஸ்தானம் வீதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மத்தியப் பிரதேச ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால் லோக சபையில் ஒரு ஸ்தானம் இருந்தால் ராஜ்ய சட்டசபையில் 8 ஸ்தானம் வீதம் நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. பொதுவாக எடுத்துக்கொண்டால், மிகப் பெரும்பான்மையான ராஜ் யங்களில், லோக சபைக்கு ஒருவர் என்றால், ராஜ்ய சட்டசபைக்கு 7 பேர் வீதம் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லலாம். ஆனால் நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், நாம் என்ன பாவம் செய்தோமோ தெரியவில்லை, என்ன உண்மை இருக்கிறதோ தெரியவில்லை, லோக சபையில் ஒருவர் இருந்தால், ராஜ்ய சட்டசபைக்கு ஐவர் வீதத்தில் ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்திலிருந்து லோக சபைக்கு ஒரு அங்கத்தினர் உண்டு என்றால், ராஜ்ய சட்டசபைக்கு, அதாவது ராஜ்ய அசெம்பிளியில் ஐந்து அங்கத்தி னர்கள் இருக்கலாம் என்ற முறையில் பிரித்திருக்கிறது. மற்ற ராஜ்யங் களில் ராஜ்ய அஸெம்பிளி அங்கத்தினர்கள் எந்த விகிதாசாரத்தில் ஒதுக்கப் பட்டிருக்கிறார்களோ அதே விகிதாசாரத்தில் நம்முடைய ராஜ்யத்திலும் ஏன் ஒதுக்கப்படவில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதிகமான அங்கத்தினர்கள் இருந்தால் தரம் என்ன குறைந்து போய் விடுமா? குறைந்துவிடாதே! அப்படிப் பார்த்தால், மேற்கு வங்காள ராஜ்யத்தில் ராஜ்ய அசெம்பிளியில் 238 மெம்பர்கள் இருக்கிறார்களே; பீஹார் ராஜ்யத்தில் ராஜ்ய அசெம்பிளியில் 330 மெம்பர்கள் இருக்கி றார்களே; மத்தியப் பிரதேசத்தில் 288 பேர்கள் ராஜ்ய அசெம்பிளியில் மெம்பர்கள் இருக்கிறார்களே; பண்டித நேரு அவர்களுடைய ராஜ்யமாகிய



28th March 1956] [Sri P. Jeevanandam]

உத்தரப் பிரதேசத்தையே எடுத்துக்கொண்டாலும், அங்கும் 430 மெம் பர்கள் ராஜ்ய அசெம்பிளியில் இருக்கவில்லையா? அப்படியிருக்கும்போது நம்முடைய சென்னை ராஜ்ய அசெம்பிளிக்கு மட்டும் ஏன் 205 மெம்பர்கள் மட்டுந்தான் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? இதன் காரணம் எனக்கு தெரியவில்லை. அதிகமான எண்ணிக்கையில் ராஜ்ய அசெம்பிளியில் இருந் தால் தரம் குறைந்துவிடுமோ என்று பார்த்தால்கூட, மேற்கண்ட ராஜ்ய அசெம்பிளியில் நம்மைவிட அதிகமான எண்ணிக்கையில் இருக்கிறார்களே. ஆகவே, தரம் குறைந்துவிடாது. அதிகமான எண்ணிக்கையில் அங்கத்தி னர்கள் ராஜ்ய அசெம்பிளியில் இருந்தால், ஜனநாயகத் தன்மைதானே அதிகரிக்கும். ஆகவேதான் நம்முடைய ராஜ்யத்தில் அசெம்பிளி அங்கத்தி னர்கள் குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும் திராவிட அதிகமாக உள்ளவர்கள் என்ற எண்ணத்தில் குறைவாக நிர்ணயித்துவிட்டார்களோ! அதிகமான எண்ணிக்கையில் அங்கத்தினர்கள் இருந்தால் ஜனநாயகத் தன்மை மேலும் மேலும் வளரும். தரம் குறைந்துவிடாது.

நம்முடைய ராஜ்ய சட்டசபை இந்தியாவிலுள்ள வேறு எந்த ராஜ்ய சட்டசபையையும்விட தரத்தில் இளைக்காது; இதர சட்டசபைகளுக்கு வழி காட்டியாக, முன்மாதிரியாக இருந்துவந்திருக்கிறது; அந்தப் பாரம்பரியத் தில் நம்முடைய ராஜ்ய சட்டசபை நடந்துவந்திருக்கிறது. அந்தப் பாரம் பரியத்தை நாம் மேலும் மேலும் வளர்ப்போமேயொழிய, அதிலிருந்து குறைந்துவிடப்போவதில்லை. இதற்குமுன் ராஜாஜி மந்திரிசபை இருந்தது. அதிலும் இப்பொழுதுள்ள நமது நிதி அமைச்சரவர்கள் சர்க்கார்க் கட்சித் தலைவராக இருந்திருக்கிறார். முன்னூறுக்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட பெரியதொரு சட்டசபையில் நாம் எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்துவந்தோம். ஆகவே, அதிகமான எண்ணிக்கையில் ராஜ்ய சட்ட சபையில் அங்கத்தினர்கள் இருந்தால், சுறுசுறுப்பு ஏறுமேயொழிய, இறங்கி விடாது. அதிகமான அங்கத்தினர்கள் இருந்தால், விவாதத்தில் அதிக மான பேர்கள் பங்கெடுத்துக்கொள்வார்கள். ஜனநாயகம் மேலும் மேலும் செழிப்படைய உதவிகரமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எண்ணிக்கை அதிகத்தினால் தரம் குறையும் என்று சொல்லப்படுமானால் இந்தியா முழுவதிலும் உள்ள சட்டசபைகளின் தரமும் குறையவேண்டு மல்லவா? அப்படியானால், உத்திரப் பிரதேச ராஜ்ய அசெம்பிளியிலும் 1 : 5 என்ற விகிதத்தில் லோக சபைக்கும் ராஜ்ய சட்டசபைக்கும் அங்கத்தி னர்களை நிர்ணயித்திருக்கலாமே! அப்படியில்லாமல் அங்கு அதிகமான ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவே. சில ராஜ்யங்களில் 1 : 9 என் றும், இன்னும் சில ராஜ்யங்களில் 1 : 8 என்றும், இன்னும் சில ராஜ்யங் களில் 1 : 7 என்றும் லோக சபைக்கும் ராஜ்ய அசெம்பிளிக்கும் ஸ்தானங் கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கும்போது, நம் ராஜ்ய அசெம்பிளிக்கு மட்டும் ஏன் 1 : 5 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை. குறைந்த பட்சமாக 1 : 7 என்பதையே எடுத்துக்கொண்டாலும்கூட, நமது ராஜ்யத் திற்கு சுமாராக 287 ஸ்தானங்களாவது கிடைப்பதற்கு சிபார்சு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சொத்துக்களைப் பிரிக்கும் விஷயத்தில் ஆந்திர ராஜ்யம் பிரிவினையின் போது என்ன கொள்கை கையாளப்பட்டதோ அதே கொள்கையைத்தான் கையாளப் போவதாகச் சொல்லப்படுகிறது. அதில் ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துக்கொண்டு இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

* SRI B. VAIKUNTA BALIGA : Mr. Deputy Speaker, Sir, 12-14 p.m.
I am indeed very grateful to you and the House for affording me a very early opportunity to participate in this debate and it suits me also very well. But before I embark upon the discussion of the various matters that arise out of this Bill, I wish to pay a tribute to the Hon. the Finance Minister for the very forceful and lucid speech the delivered, though all of us may not be able to concur with him in

[Sri B. Vaikunta Baliga] [28th March 1956

all aspects. The salient points have been presented by him with a clear perception. They will certainly weigh with all those that are concerned with this Bill.

Sir, this very matter came up for consideration before the House at the time when the States Reorganization Commission's Report was in debate. Proper study was made and full attention was bestowed and decisions were arrived at then. They were forwarded to the Government of India and now we have the Bill before us. We find that it is not in full accord or in concurrence with the opinions expressed on the floor of the House then. But that should not make us feel diffident in supporting this Bill because even now the Bill that is before us is not the final measure that is going to be passed into law by the Legislature. It is still open to Parliament to reconsider appropriate cases and it is in that light I wish to say that I stand by all that I stated so far as Kasaragod is concerned. It is even now my hope that the Centre would pay proper attention and set matters in this respect right. But anyway the discussions which we are now having will undoubtedly go a long way in the second stage of the consideration that is the consideration of the appropriate clauses dealing with the organization of States that is to be effected.

Sir, it is seen from the very name of the Bill that it is a reorganization and it is coming appropriately in the course of evolution of things after independence. At the time independence was won, there were about 600 States, small and big, with a variety of structure. It looked like a Lambani country where you had a variety of colours all over. However, the process of integration reduced the problem to appropriate dimensions. Then came the question of exchange of enclaves to round off the corners. Then followed the Andhra Bill and the Andhra State was carved out of the composite Madras State. Now we are having a realignment of all the areas in proper measure. Is it not clear then that this is only following a scheme of things that are evolving and that it is appropriate that this reorganization should come about?

One thing to which I would like to make special reference is what is called the psychological approach with regard to the States that are being formed. The problem arises in a very peculiar manner so far as the new Mysore State is concerned. Of all the new States the new Mysore State that is to be formed has got its own peculiarities. Parts from two ' A ' class States—I emphasise the phrase ' A ' class States—are to be added to the existing Mysore State and the new Mysore State formed. It has always been thought that a ' A ' class State is always a bigger State, better managed and better co-ordinated. Particularly with regard to Madras State, notions have prevailed in certain quarters that Mysore has always been either following or copying it with regard to its statutory enactments and with regard to its policies. Whatever might be the correctness or otherwise of this notion, we that are going now from Madras to Mysore go there with no such complex. We go there as humble workers, devoted pilgrims in the progress of the country trying to work in that area that is allotted by the Centre for us to work for the progress of the nation and society as a whole. It is in that light that we are going there. I am sure that the people that are joining that State from Bombay—it is also a ' A ' class State—will join us with the same spirit of service. So also the people coming from Hyderabad—a ' B ' class State—and people from Coorg—a ' C ' class State. It is also necessary on the part of Mysore—it has always been a progressive State, one of the first-class ' B ' class States—not to feel that it is the parent body receiving its struggling children back into its fold. It is a question of equality. We are all joined, fused together to constitute a new State with perfect equality. Just as in the case of the human body—the 12-20 p.m.
analogy was given by the Hon. the Minister for Finance—every limb is equally important—the size of the limbs does not matter; a big belly or a long arm is not going to matter much, the power of the intellect is also going to play an important part—so also in the formation of the States, every part is equally important. It is nothing but a joint venture on which we are embarking as in the case of any joint family, every partner, every member will have equal rights and equal privileges and equal onerous duties. It is in that light, Sir, that the spirit should be prevailing when new States are started.



28th March 1956] [Sri B. Vaikunta Baliga]

One suggestion, Sir, I wish to make for the very serious consideration by this Government as well as the Central Government. You are aware that what are called the Instrument of Instructions would be given and it would be but proper to consider as to whether there is any necessity to issue any Instrument of Instructions to the various States when they are formed either to the Rajpramukhs or to the Governments themselves. I am saying that, Sir, because on a hasty perusal of this Bill certain ideas are prevailing as if certain basic areas in a new State are going to be what are called the parent body and the rest are all appendages. All this type of ideas should not prevail. Personally, I feel it does not yield that interpretation. But that idea has been mentioned and therefore, I am taking this opportunity of placing it before the House and also the Government, both State and Central, so that appropriate directions may be given in that behalf.

Sir, there are very many points that arise out of this Bill which is a very complicated one and in the drafting of which very serious attention and study has been bestowed. So, it will not be possible for me in the course of this short speech that I am now delivering here to cover up all points. But I wish to touch a few points. I have got in mind the case of the High Courts. There were 18 High Courts and 7 Judicial Commissioners, but in the reconstituted States there will be only 14 High Courts. Sir, you could have seen that even with regard to that, the salary of the Judges has been differentiated. While Rs. 4,000 and Rs. 3,500 have been mentioned as the salary of the Judges with regard to one class of High Courts, the salary has been reduced in some other High Courts. The only reason that I have been able to find is that the level of the income at the Bar at

[Sri B. Vaikunta Baliga] [28th March 1956]

those places is not the one which will warrant the payment. Sir, I do not know whether this is a good reason. But apart from that, I do maintain and submit that this distinction is not wanted and also not warranted, because, all High Courts have the same status and the Judges have to deal with exactly similar problems. The idea that Mysore or Kerala or Rajasthan had small territories will not now rule the field. The areas are going to be augmented and the work that will be entrusted to them and the duties that they will be called upon to discharge are same and similar. Absolutely no comparison could be made to say that a distinction should be drawn. Then again the idea of quantum of work that prevailed with the persons who framed this distinction, I do submit, is no reason for this because the quantum of work can be co-related to the strength of the Judge that is to constitute High Court and not at all with regard to the status. You are aware further that in the Constitution there are provisions wherein a Judge of a High Court can be transferred to another High Court. Is it not going to be causing a lot of hardship to the persons that are going to be appointed as Judges? You are aware that in the matter of selection of particularly the Judges of the High Court, the highest Tribunal of the State, the very best talents should be attracted and there should be no handicaps at all. Sir, you could have further seen that there is the question of promotion of the High Court Judges to the Supreme Court. Above all, as I said in the other matter, a psychological approach should be there. There should not be any kind of complex with regard to the Judges of one High Court to say that they are not up to the status of another High Court. That will not at all be conducive to inspire confidence. I do say, Sir, these and several other reasons which I can cite before the House are deserving of attention and the provision that has been made in the Bill that the Judges of the High Courts of Kerala or Mysore or Rajasthan should be paid a smaller salary is not at all proper. I am sure, Sir, this will receive proper attention.

Then coming to the question of distribution of assets, I really do not understand that very complicated provision of the statute. I know that at the time when assets have to be distributed, they are to be valued according to the market value that prevails today or whatever may be thought of to be a fair value as on this date.

I am not sure according to the provision whether this is going to be the test or what is called the book value or the amount that has been really expended on such matters which has been done long time back. Sir, the amount that was spent in olden times did belong to the entire composite State and there is absolutely no reason why that value should be taken. I do suggest that in the matter of distribution of assets it will not be wrong on my part to say that the values of the properties or the assets as it stand on the day of distribution should be the guiding factor and not any other consideration at all.

Similarly, with regard to the distribution of the various buildings and lands that are there, whether that will go to Mysore, or to Kerala or will remain in Madras, it does not matter, but certainly it is one which should be looked into and appropriate decisions arrived at.



28th March 1956] [Sri B. Vaikunta Baliga]

Then, Sir, there is the question of the integration of Services. This is one of the most complex problems which is full of difficulties and these difficulties are perhaps best revealed in the case of the Mysore State. Protection for Services like Indian Civil Service or Indian Administrative Service or Indian Police Service, has been specifically provided for. Even there, I would say that the recommendation of the States Reorganization Commission with regard to the Indian Administrative Service whose personnel should be at least 50 per cent from outside is a very salutary rule. It is observed in the introductory portion that this has been adhered to or has been followed and even if it is a question of not following it, it will be worthwhile to provide it in the Statute itself so that it will not be possible for any diversion from it. I am saying that because it will inspire confidence—not that anybody will have less confidence in any officer or officers belonging to their own States. There are certain decisions, particularly the policy decisions that have to be taken and that has to be taken by persons who do not have any personal motives or who do not allow personal considerations to prevail. I am having in mind at the moment the great decisions or the decisions of big implication that are to be taken with regard to the development of Malnad area and various other problems that will be arising. An assurance has been given by the Hon. Finance Minister to the Services from whichever category they might come, whether they come from Kanarese or from Kerala some will have to continue in Madras. I am glad that he has mentioned that aspect. I am sure he and the Madras Government will at all times look after them very well and their interest will be safe and fair and just treatment will be given to them. But at the same time viewing it from the new Mysore State I would say that we would like to have as many as possible so that we may have our own people there to settle our problems and take decisions that should not in any way influence the consideration of the issue. So far as the interests of individual officers are concerned, option must be given to them and option has been given to them and should there be any difficulty, the Central Government will have to decide it. In the overall picture, two principles should be borne in mind. One is that their interests should be protected. The other is, as far as possible they should be allotted to the Mysore State.

Apart from these, the question of the seats that have been allocated to new Mysore State, or Kerala or Madras with regard to Council of States or Legislative Council has been one of the topics on which the Hon. Finance Minister has spoken. Coming as we do from South Kanara we do desire that our representatives should go over with us to the new Mysore State. That is the request that we made. That is the request that has been accepted and that is a very proper request because it avoids embarrassment

not only to the Madras State but even to the individual. We do not wish our representatives to be embarrassed, should there be any conflict of interest arising at any stage. It is in that light that we welcome the proposal and support the amendments that South Kanara representatives who are either in the Legislative Council or the Council of State should be allotted or should be transferred to the new Mysore State. So far as the Legislative Council is concerned, there is really no difficulty because in the Mysore State the existing 31 members in the Council there will continue automatically. But so far as the seats are concerned, there has been no allotment. So far as the entire 29 Members are concerned, we have got one Member who could be and who should be transferred or made over. The amendments that are being mentioned have the fullest support so far as the South Kanara Members are concerned.

Sir, we are fast coming to the 1st of October. By the time we assemble again, perhaps within a short time we might have to part. This parting is always sad. We have been friends. We have been good brothers. We have been affectionate towards each other. Whatever we might have said in a spirit of exasperation, irritation or loss of temper are things which ought to be forgotten and I would, therefore, take this opportunity to make an appeal to all the hon. Members. I am sure I have not erred but if I have erred unconsciously, I wish to take this opportunity to tender my apology and ask for forgiveness and request all the hon. Members to remember the Members from South Kanara with affection and to have a soft corner in their hearts for them. We on our part will
12-30 p.m. reciprocate those sentiments and treatment at all times, wherever we may be, whatever the boundary distinctions may be and whatever may be the boundary that separates the new Mysore and Madras. We who are going from here to Mysore will always cherish with affection and regard the treatment that has been given to us. I wish only to say that during the short period that remains the few works that have been undertaken should not be forgotten and should not be neglected. On the other hand, they should be executed with all expedition that is possible. We have that assurance from the Government and if we have not, I would certainly like to make my request and desire acceptance with regard to the completion of the works that are now going on in the South Kanara district. Thank you, Sir.

SRI K. VINAYAKAM: Mr. Deputy Speaker, Sir, with considerable patience and attention, I have heard the arguments adduced by the Hon. the Leader of this House while placing this Bill for our consideration. Lawyer as he is, he is in a position to argue for both sides. Sometime back, he ably argued how and why we should get Devikulam and Peermade to be merged with Madras. Now, the same lawyer comes forward and tells this House that having lost them, we have got to reconcile ourselves to the present position. Sir, for over thirty years the Congress organisation, even before it came to power, has been advocating a



theory that the States have got to be demarcated on a linguistic basis. After the Congress came to power, those people were very reluctant. But being bad doctors, it was proved afterwards, even though they thought they were good doctors, they would not concede the request of the linguistic groups in our State. The Andhras started the agitation and they got a State for themselves. What happened later? Because there was a universal agitation all over the State, the Central Government thought it fit to appoint a Commission known as the States Reorganisation Commission and then a Report has come to us. We had already an opportunity of discussing that Report here threadbare. It was then that the Leader of the House advocated that we should have Devikulam and Peermade on the basis of language, on the basis of population and on the basis of contiguity and culture. Now, he tells us that the Central Government have decided otherwise taking the pros and cons into consideration and we must take the decision lying. If we are going to accept this kind of decision after an agitation which has been peaceful, let us consider what the treatment given by the Central Government to other linguistic groups in our country is. Let us start with the Punjab. The Punjab is an area having a group speaking one language. For instance, in West Punjab and Pepsu the people speak Punjabi language, whereas Himachal Pradesh is a Hindi-speaking area. The States Reorganisation Commission recommended that the Punjab and Pepsu the two Punjabi-speaking people—should be integrated with Himachal Pradesh—the area of the Hindi-speaking people. As against that recommendation, the people of the Punjab agitated, and then they achieved their aim. They made the Central Government take away Himachal Pradesh which, the States Reorganisation Commission recommended, might be integrated with the Maha Punjab and treat it as a Centrally administered area. So, the Punjabis have realised what they wanted.

THE HON. SRI C. SUBRAMANIAM: The hon. Member does not know the real facts. The reorganised Punjab has a Hindi-speaking area in it and there is a separate Punjabi-speaking area. The agitation was that they should be separated. But, now, they have taken them together and for the purpose of satisfying the people, regional councils are being formed.

SRI K. VINAYAKAM: The Hon. the Leader of the House jumps to unforeseen conclusions. He believes that I am not aware that there will be regional councils to safeguard the interests of the people there.

THE HON. SRI C. SUBRAMANIAM: There will be two language-speaking areas. It is not as if the entire Punjab area has been demarcated and a separate State has been given. In the reorganised Punjab, there is a Punjab-speaking area and there is a Hindi-speaking area also.

SRI K. VINAYAKAM: I know that.

[28th March 1956

THE HON. SRI C. SUBRAMANIAM : I am glad the hon. Member knows about that.

SRI K. VINAYAKAM : In any State there will be people speaking some other language which is not the main language of the State. It is not possible to avoid that contingency. Let us come to Maharashtra. With regard to Maharashtra, what is the recommendation of the States Reorganisation Commission? First, it was said that the Marathi-speaking people should have a separate State called the Vidharba State and Gujerathi State should be formed with the City of Bombay and that no State was to be formed for the Maharashtrians as a whole. They agitated for reversing the recommendations of the States Reorganisation Commission. Now, what is the position? They have got now Bombay City to be administered by the Centre. They got the Marathi-speaking people integrated in one contiguous area. There also, they saw to it that Bombay did not go to the Gujerathi-speaking people. They have seen to it that at least for the present it is Centrally administered with the scope of being given back to the Maharastrians as their capital as is evident from the talks which Jaya Prakash Narain and Vinoba Bhave had with our Prime Minister. So, the Maharastrians also to a large extent gained what they wanted. Let us come to Andhra. They wanted Vishala Andhra. The Telengana people would not like to get merged with it. The States Reorganisation Commission recommended that after five years, if the times were propitious then, they might think of integrating Telengana with Andhra. Apart from the formation of the Legislature of Telengana, the Andhra people, the Telugu-speaking people, wanted Vishala Andhra to be formed immediately. What happened? There were protracted talks. Even Sri Sanjeevi Reddi threatened that unless they showed signs of revolt and agitation, the Central Government were not in a position to accede to their request. The Andhra Assembly then passed a unanimous resolution and they demanded Vishala Andhra to be formed immediately. Now, they have got what they wanted even though the Central Government have thought that they could change the name. First, it was agrred to call the State as the Andhra-Telengana State Now, they have composed their differences and they are going to call it the Andhra Pradesh. That is the position with respect to Andhra. So, what they wanted they got. Now, let me come to Mysore. They also thought Bellary, having been given to them, should not go back to Andhra. Then, there was an agitation. There was a satyagraha movement and even the Government helped that
12-40 p.m. tacitly. What happened later? They saw to it that Bellary, once having been given to Mysore, did not go back to Andhra. By putting pressure upon the Central Government, Kannadigas got what they wanted. The Bill goes against the recommendations of the States Reorganisation Commission. The Commission recommended that Bellary should go back to Andhra. But the Bill reverses that recommendation. Coming to Kerala, the Commission recommended that five taluks should be given to Madras. But Madras got only four and a half taluks, having given up half a taluk. Sri Panampalli



28th March 1956] [Sri K. Vinayakam]

Govinda Menon has been giving out in his press interviews that the bifurcation of the Shenkotta taluk was done with the consent of the Madras Ministers. But no Madras Minister comes forward to deny that statement. The Leader of the House tells us that it is not his job to contradict all kinds of statements. How are we to know that the bifurcation of the taluk was not done by agreement between the two State Governments? He throws the blame on the Central Government. We fought the issue of Devikulam and Peermade on their own merits, but Shenkotta was lost on a different footing—that is what he said. But the Chief Minister of Travancore-Cochin State has been going about saying that the bifurcation of the Shenkotta taluk was done in agreement with the Madras Ministers. That is the position.

The Leader of the House tells us that there is a fissiparious tendency to cut away from the Centre. That may be the declared policy of one or two parties in the State, but that is not the declared policy of all the parties in the State. For instance the Communist Party has joined in this agitation, but certainly it is not its policy to cut away from the Centre. The Hon. Minister is making a mountain of a molehill.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member, after his experience in the Joint Front, is saying that the Kazhagams are only a molehill and I am prepared to take that statement.

SRI K. VINAYAKAM : The Hon. Minister is trying to fish in troubled waters.

SRI S. SWAYAMPRAKASAM : Where is the fish and what are the troubled waters?

SRI K. VINAYAKAM : I used an idiom in the English language and the hon. Member should not give a literal meaning to the words in the idiom.

The hollowness of the Madras Cabinet, the incapacity of the Madras Government, is quite evident. Other States are able to get what they want by agitational approach, by peaceful representation or by able argument. But our Ministers come and tell us ' We have done our job, we have argued ably and well, but we have lost. So reconcile yourself to the position as it is '. Does it not mean that our Ministers have been going about doing the job in a wrong way? They have lost their case, whereas all other States have gained. Maharashtrians have gained, Sikhs have gained, Andhras have gained, Kannadigas have gained, even the Keralites have gained, but Tamilians are losing. Our Ministers come and tell us ' We, being a peaceful people, should not agitate We should take the decisions lying down.' This is a situation which I cannot understand.

SRI K. P. KUTTIKRISHNAN NAYAR : May I know the significance of the word ' even ' in his statement that ' even the Keralites have gained '?

[28th March 1956

SRI K. VINAYAKAM: Keralites are supposed to be as good and well-behaved boys as we are. That is why I said that even the Keralites have gained.

I am not totally against this Bill. Some points for which we have been agitating for a long time have been conceded.

THE HON. SRI C. SUBRAMANIAM: For how long?

SRI K. VINAYAKAM: For the past five years. Kanyakumari, the southernmost point of Tamilnad, which we wanted should be given to us, has been given to us. There is a possibility of having a State of our own, namely, the Tamilnad. Whether the Ministers would like to call the State Tamilnad or Madras or whatever else it be is only a temporary question. Simply because the Opposition parties have been harping upon, and doing propaganda for, naming the State as Tamilnad, the Ministers should not flare up. The Congress Party should not think that it should not accede simply because the clamour comes from the Opposition. The Members of that Party think that the feather will go to our cap. We do not want such feathers. We make this very clear that if this Government is willing to name our future State as Tamilnad, the entire credit for it will go to the present Cabinet and the Congress Party, whoever might have been the people who have worked for it. Why should the Congress Party be so indifferent to the universal demand of the Tamilians? Let the Leader of the House or the Cabinet consult and take the view of the people. I suggest that he may hold a public meeting, tell the people that the Madras Cabinet does not want to name the State as Tamilnad but wants to continue the name of Madras, and then study the reaction. The Ministers are saying ' Madras is internationally well known. That name having acquired a reputation, why should it be given up now? By changing the name from Madras to Tamilnad, what is the economic benefit that accrues in terms of rupees, annas and pies? ' Everything should not be view from the economic aspect only. The naming of the State as Tamilnad after the language of the State gives a psychological satisfication to all of us including the Ministers and the Congressmen. London is internationally well known, but Great Britain is not named after the name of the capital of that country. Moscow is internationally well known, but the country of which it is the capital is known as Russia.

What is the origin of the name ' Madras '? Madras is the name of a Dutch settler. If anybody doubts the veracity of my statement, let him refer to the records in the Fort St. George. I had occasion to peruse the records. The State has been named after the name of the Dutch settler. Even the name ' Sennai ' has its origin in the name of a Telugu gentleman according to the story of the English settlers here. Why should we want to perpetuate the memory of those under whose tutelage or subjection we lived? It is in the fitness of things that the name of the State



28th March 1956] [Sri K. Vinayakam]

should be changed into Tamilnad. If the Government do not concede on a point of prestige, if they do not concede to the logical and sane request of the Opposition because it comes from the Opposition, I am afraid they will not be doing the proper thing.

3-30 p.m. * **Sri M. S. Mogral**: Mr. Speaker, Sir, I am very much thankful to you for the opportunity that you have given me to participate in to-day's discussion. The States Reorganization Bill has been placed before this House to elicit the opinion of this House on the provisions contained therein. I do not find much difference between the States Reorganization Commission report and the provisions contained in the present Bill. As such I doubt whether this House has got anything substantial to contribute to its opinion already submitted during the discussion on the States Reorganization Commission report. Anyhow the Bill has come before this House and we should express ourselves in unequivocal terms and make the Central Government understand the exact reaction of this House. I stand by every word I spoke during the discussion of the States Reorganization Commission report earlier. This is in reference to the northern portion of Kasaragod taluk to the north



28th March 1956] [Sri M. S. Mogral]

of the Chandragiri-Payaswami rivers consisting of the revenue firkas of Manjeshwar, Kumbla, and some villages of Kasaragod firka of which I have the honour to represent the latter in this House. This area has been recommended to be merged with Kerala in spite of the wishes of the people of that area and against the wishes of the representatives of both the Houses here and those of the Parliament, nay against the decision of this House as recommended during the discussion of the States Reorganization Commission report. The present Bill is a reiteration of the States Reorganization Commission report, and I do not find anything substantial in it. The States Reorganization Commission report proceeds on the question of language and bases its recommendations on administrative convenience as far as this area to the north of Chandragiri river is concerned. Every argument adduced by the Commission has been met in an exhaustive manner by us during the discussions of the report. Further, Sir, statistics supplied with regard to educational institutions, registration of documents, and a number of other points leave no doubt as to the claim of the area not to be put in Kerala. It has been pointed out that administratively it will be in the interests of the area to remain in Mysore. Geographically, the Chandragiri river is the natural boundary, and the waters of this river separate the distinct cultures of Mysore and Kerala. Any attempt to cut away this area from its natural set-up and include it in any other State is no better than the vain and unimaginative operation of a surgeon to cut an important organ from a human body and graft it on to another lacking that organ. This operation will definitely do harm to the former without conferring any benefit on the latter. This transplanted organ is sure to result in gangrene or any other self-imposed disease. Also, Sir, such a course while certainly working for the detriment of the separating and contiguous region coming under Mysore, will not improve the progress of the disputed area merging with Kerala with any substantial benefit to that State. Furthermore the discontent engendered in the hearts of the people of the area will not die for centuries to come. I say that the area is opposed to such a merger, and I challenge any one who disputes my statement either by plebiscite or by any other method known to democracy. However we do feel that as long as the destinies of this great country are in the hands of our great Prime Minister, there is no room for pessimism. We are glad to note that the Central Government have not banged their doors on the issue of the States Reorganization Bill. Perhaps none among us is a greater believer in the principles of democracy and democratic institutions than our great Prime Minister. Agitation in a number of places has not failed to convince him that the arrangement arrived at against the wishes of the people and without their approval cannot have the moral sanction so necessary for its success. It is heartening to note that the Prime Minister has reiterated his firm belief in his great ideas and expressed the view that any proposal for reorganization would not be undertaken by the Government against the wishes of the people, whom it is going to affect. Under these circumstances, I would submit that plebiscite is an easier method

than any other method known to democracy to ascertain the wishes of the people. Now most of the panchayats having resigned on the reorganization issue, new elections to those boards including those boards that have not resigned so far, may be based on plebiscite. Thank you, Sir.

3-35 p.m. **SRI C. H. KANARAN** : മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, സംസ്ഥാന പുനസ്സംഘടനയെപ്പററി പറയുമ്പോൾ ചില തത്വങ്ങൾ പരിപൂർണ്ണമായും സ്വീകരിച്ചുകൊണ്ട് മുന്നോട്ട് പോകണമെന്നാണ് എനിക്ക് പ്രധാനമായും പറയാനുള്ളത്. അടിസ്ഥാന തത്വങ്ങൾ അംഗീകരിക്കാത്തിടത്തോളം സംസ്ഥാന പുനസ്സംഘടനകാര്യത്തിൽ കുഴപ്പങ്ങൾ ഉണ്ടാവുക എന്നുള്ളത് സ്വാഭാവികം മാത്രമാണ്. ഇന്ന് ഈ രാജ്യത്ത് ഉണ്ടായിട്ടുള്ള കുഴപ്പങ്ങൾക്കെല്ലാം കാരണം അടിസ്ഥാനതത്വങ്ങളെ അവഗണിച്ചു എന്നുള്ളതാണ്. ഭാഷാസംസ്ഥാനങ്ങൾ വേണമെന്ന വാദം ഇന്നോ, ഇന്നലെയോ ഉണ്ടായതല്ല. വളരെക്കാലത്തിനു മുമ്പെ ഇന്ത്യയിൽ ദേശീയപ്രസ്ഥാനം ആരംഭിച്ച കാലം മുതൽക്കേ ഭാഷാസംസ്ഥാനം നമ്മുടെ ഒരു മുദ്രാവാക്യമായിരുന്നു. സ്വാതന്ത്ര്യസമരകാലത്തു സ്വാതന്ത്ര്യസമരത്തിനു നേതൃത്വം നൽകിയ നേതാക്കന്മാരും അതിൽ പങ്കെടുത്ത ധീരഭടന്മാരും ഒരുപോലെ ഇന്ത്യയുടെ എല്ലാ ഭാഗങ്ങളിലും ആവശ്യപ്പെട്ടിട്ടുള്ള കാര്യമാണ് ഭാഷയുടെ അടിസ്ഥാനത്തിൽ സംസ്ഥാനങ്ങൾ സംഘടിപ്പിക്കണം എന്നുള്ളത്. എന്നാൽ സ്വാതന്ത്ര്യം കിട്ടിയതിനുശേഷം പലരും മറന്ന കൂട്ടത്തിൽ ഭാഷാസംസ്ഥാനകാര്യവും ഒട്ടേറെ മറന്നുപോയി എന്നുള്ളതാണ് പരമാർത്ഥം. നാം നമ്മുടെ വാഗ്ദാനങ്ങളിൽനിന്നു കുറെയെല്ലാം പിന്നോട്ടുപോയി. വീണ്ടും ആന്ധ്രസംസ്ഥാന രൂപീകരണത്തിനുവേണ്ടി പൊട്ടി ശ്രീരാമുലു നിരാഹാരവ്രതം ആരംഭിക്കുകയും തെലുങ്കർ പ്രക്ഷോഭണം കൂട്ടുകയും ചെയ്തതിനുശേഷമാണ് അക്കാര്യത്തെക്കുറിച്ചു കാര്യമായി ആലോചിക്കാൻ നമ്മുടെ നേതാക്കന്മാരും ഗവൺമെൻറും മുന്നോട്ട് വന്നിട്ടുള്ളത്. എങ്കിലും ഭാഷാസംസ്ഥാനങ്ങൾ രൂപീകരിക്കുന്നതിനു ഗവൺമെൻറിനുള്ള വൈമനസ്യം വിട്ടുമാറിയിട്ടില്ല എന്നാണ് ഇപ്പോഴും തെളിഞ്ഞു കാണുന്നത്. അതുനിമിത്തമാണ് ഈ അടുത്ത കാലത്തുതന്നെ രാജ്യത്തു വലിയ പ്രക്ഷോഭങ്ങളും, കലാപങ്ങളും കുഴപ്പങ്ങളുമെല്ലാം ഉണ്ടായിട്ടുള്ളത്. ഭാഷാസംസ്ഥാനങ്ങൾ രൂപീകരിക്കുന്നതിൽ എവിടെവിടെയെല്ലാം കൃത്രിമങ്ങളും കുഴപ്പങ്ങളും കാണിച്ചിട്ടുണ്ടോ അവിടെയെല്ലാമാണ് പ്രക്ഷോഭണങ്ങളും ലഹളകളും മററു തകരാറുകളും പൊന്തിവന്നിട്ടുള്ളത് എന്നു കാണാൻ പ്രയാസമില്ല. ബോംബെയിൽ നാം കണ്ടതു അതാണ്. ന്യായമായി മഹാരാഷ്ട്രത്തോട് ചേർക്കേണ്ട ബോംബെയെ എന്തെല്ലാമോ ന്യായങ്ങൾ പറഞ്ഞു മാററിനിർത്തിയതിൻെറ ഫലമായിട്ടാണ് ബോംബെയിൽ ഈ കുഴപ്പം ഉണ്ടായിട്ടുള്ളത്. അതുപോലെതന്നെ ബിഹാറിലെയും ബംഗാളിലെയും സംഭവങ്ങളും. ബിഹാർ-ബംഗാൾ സംയോജനം ആലോചനവിഷയമായതിൻെറ ഫലമായിട്ടാണ് അവിടെ ഈ കുഴപ്പങ്ങളെല്ലാം ഉണ്ടായിട്ടുള്ളത്. ഇവിടെയും ദക്ഷിണസംസ്ഥാനത്തെക്കുറിച്ചു ആലോചനയുണ്ടായപ്പോഴാണ് ചില അസ്വസ്ഥതകളെല്ലാം ആരംഭിച്ചത്. അതുകൊണ്ടു അടിസ്ഥാന തത്വങ്ങൾ ആദ്യം അംഗീകരിക്കുകയും, പിന്നീട് അതു പ്രയോഗത്തിൽ കൊണ്ടുവരികയും ചെയ്യുകയാണ് ഏററവും ശരിയായിട്ടുള്ള മാർഗ്ഗമെന്നു ഊന്നിപ്പറയുവാൻ ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു.

ഈ ബില്ലിലുള്ള എല്ലാ കാര്യങ്ങളെസംബന്ധിച്ചും ഒരു ചർച്ചക്ക് ഞാനിപ്പോൾ ഒരുങ്ങുന്നില്ല. മദ്രാസ് സംസ്ഥാനത്തെ ബാധിക്കുന്ന കാര്യങ്ങളെ സംബന്ധിച്ചു മാത്രം ചിലതു പറയാനാണ് ഞാൻ ഉദ്ദേശിക്കുന്നത്. ഒന്നാമതു് ഒരു കേരളസംസ്ഥാനം രൂപമെടുക്കാൻ പോകുകയാണെന്നുള്ളത് വളരെ വളരെ സന്തോഷിക്കത്തക്ക ഒരു കാര്യമാണ്. കേരളത്തിലെ ജനങ്ങൾ വളരെക്കാലമായി അഭിലഷിച്ചുകൊണ്ടിരിക്കുന്ന ഒന്നാണ് കേരളസംസ്ഥാനം. ദക്ഷിണസംസ്ഥാനമായാലും ശരി, പശ്ചിമസംസ്ഥാനമായാലും ശരി, മറെറന്തെല്ലാം ഉരുട്ടുപിരട്ടുകളായാലും ശരി, അതിലൊന്നും മലയാളികൾക്കു അശേഷം താല്പര്യമില്ലെന്നു സുവ്യക്തമായി ചൂണ്ടിക്കാണിക്കുവാൻ ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു. അതൊന്നും കേരളത്തിലെ ജനങ്ങൾ ആവശ്യപ്പെടുന്നവയല്ല. അതിലൊന്നും അവർക്കു വലിയ താല്പര്യവുമില്ല. പുതുതായി സംസ്ഥാനങ്ങളെല്ലാം രൂപമെടുക്കുമ്പോൾ മലയാളികൾക്കും കന്നടക്കാർക്കും എല്ലാം ഇവിടെനിന്നു പാസ്പോർട്ട് കൊടുത്തു പറഞ്ഞയക്കണം എന്നുള്ള മട്ടിൽ ചിലർ ഇവിടെ സംസാരിച്ചു കേൾക്കുകയുണ്ടായി. തമിഴരല്ലാത്ത ഉദ്യോഗസ്ഥന്മാരെയെല്ലാം ഇവിടെനിന്നു പറഞ്ഞയക്കണം, മററു രംഗങ്ങളിലും തമിഴരല്ലാത്തവരെയെല്ലാം പുറത്താക്കണം എന്നുള്ളമട്ടിൽ ഒരു വാദം ഇവിടെ പൊന്തിവന്നിട്ടുണ്ട്. ഇവിടെയുള്ള മലയാളികളെല്ലാം വിട്ടുപൊയ്ക്കൊള്ളണം, അതുപോലെ അന്നാട്ടിൽ തമിഴരുണ്ടെങ്കിൽ അവരെല്ലാം ഇങ്ങോട്ട് പോരണം എന്നാണ് വാദം. ഇന്ത്യയാണ് നമ്മുടെ രാജ്യം; നാമെല്ലാം ഇന്ത്യക്കാരാണ്; തമിഴനായാലും, മലയാളിയായാലും ഇന്ത്യയുടെ അഭിവൃദ്ധിയാണ് നമ്മുടെ അഭിവൃദ്ധി; ഇന്ത്യ അഭിവൃദ്ധിപ്പെട്ടാലേ സംസ്ഥാനങ്ങൾക്കു അഭിവൃദ്ധിയുള്ളു എന്നീ കാര്യങ്ങളൊന്നും കാണാൻ കഴിയാത്ത ഒരു കൂട്ടരാണ് ഇത്തരം വാദങ്ങൾ കൊണ്ടുവന്നിട്ടുള്ളത്. എന്നാൽ ഇന്ത്യയുടെ ഐക്യത്തിനു സർവ്വപ്രാധാന്യം കല്പിച്ചുകൊണ്ട് ആഭ്യന്തരഭരണത്തിനുള്ള സൌകര്യത്തെ മുൻനിർത്തി ഇന്ത്യൻ യൂനിയനു അകത്തുതന്നെ ഭാഷാഘടകങ്ങൾ രൂപീകരിക്കുക എന്നുള്ള നിലയിലാണ് ഞങ്ങൾ ഈ പ്രശ്നത്തെ കൈകാര്യം ചെയ്യുന്നത്. അതിർത്തികളെസംബന്ധിച്ചിടത്തോളം ചില തർക്കങ്ങൾ ഉണ്ടെന്നുള്ളത് ഞാൻ വിസ്മരിക്കുന്നില്ല. എങ്കിലും ഭാഷയുടെ അടിസ്ഥാനത്തിൽതന്നെയാണ് കേരളസംസ്ഥാനവും മദ്രാസ് സംസ്ഥാനവും കർണ്ണാടകസംസ്ഥാനവും എല്ലാം രൂപീകരിക്കാൻ തീരുമാനിച്ചിട്ടുള്ളത്. ചില്ലറ അതിർത്തിതർക്കങ്ങൾ നിലവിലുണ്ട്. ഗൂഡല്ലൂർ മദ്രാസിൽ നിലനിർത്തണമൊ കേരളത്തിൽ ചേർക്കണമൊ, കേരളസംസ്ഥാനത്തിൽ ഉൾപ്പെടുത്താൻ തീരുമാനിച്ചിട്ടുള്ള സ്ഥലങ്ങളിൽ ഏതെങ്കിലും തമിഴ്നാട്ടിനോട് കൂട്ടിച്ചേർക്കേണ്ടതായി ഉണ്ടോ എന്നെല്ലാം ഉള്ള ചില തർക്കങ്ങൾ ഇനിയും അവശേഷിച്ചിട്ടുണ്ട്. പക്ഷെ ഈ തർക്കങ്ങളെല്ലാം എടുത്തു പരിശോധിച്ചാൽ ഒരു കാര്യം വ്യക്തമാണ്. എവിടെയാണോ ഭാഷയെ അടിസ്ഥാനമാക്കിക്കൊണ്ട് അതിർത്തിനിർണ്ണയം ചെയ്യുക എന്ന തത്വത്തിൽനിന്നു ഗവൺമെണ്ട് വ്യതിചലിച്ചിട്ടുള്ളത് അവിടെയാണ് തർക്കങ്ങളും ഉണ്ടായിട്ടുള്ളത്. എങ്കിലും ഈ തർക്കങ്ങൾ പരിഹാരം കാണാൻ വിഷമമുള്ള മഹാപ്രശ്നങ്ങളാണെന്നു ഞാൻ കരുതുന്നില്ല. വരാൻപോകുന്ന കേരള ഗവൺമെണ്ടും മദ്രാസ് ഗവൺമെണ്ടും കർണ്ണാടക ഗവൺമെണ്ടും ഒന്നുചേർന്നു കൂടിയാലോചനകൾ നടത്തി അംഗീകരിക്കപ്പെട്ട അടിസ്ഥാനതത്വങ്ങളുടെ വെളിച്ചത്തിൽ ഒരു തീരുമാനമുണ്ടാക്കുവാൻ കഴിയാത്ത പ്രശ്നങ്ങളൊന്നും ഇന്നില്ല. അതിർത്തി കമ്മീഷന് ഇതേപ്പററി പരിശോധിക്കാവുന്നതാണ്. ഈ പ്രശ്നം അതിർത്തി കമ്മീഷന് വിട്ടുകൊടുക്കുകയാണ് ഏററവും നല്ലതെന്നു എനിക്കു തോന്നുന്നു. ആ തത്വം ബില്ലിൽ സ്വീകരിച്ചു കാണുന്നുണ്ട്. അതിനെ ഞാൻ സ്വാഗതം ചെയ്യുന്നു.



മേഖലാ കൌൺസിലുകളെക്കുറിച്ചു പറയുമ്പോൾ എനിക്കു ചില ആശങ്കകൾ ഇല്ലാതില്ല. ഈ ബില്ലിലെ വ്യവസ്ഥകൾ പരിശോധിച്ചാൽ വലിയ ഭയത്തിനൊന്നും അവകാശമില്ല. മേഖലാ കൌൺസിലുകൾ വെറും ഉപദേശകസമിതികളായിരിക്കുമെന്നാണ് പറയുന്നത്. എങ്കിലും ഇതു ക്രമേണ ദക്ഷിണസംസ്ഥാനത്തിലേക്കു വഴുതി വീണേക്കുമോ എന്ന ഭയം ഇല്ലാതില്ല. അതുണ്ടാകാതെ സൂക്ഷിക്കണം. സംസ്ഥാന നിയമസഭകളുടെ അധികാരങ്ങളെ ചോദ്യംചെയ്യത്തക്ക ഒരു നിലപാടു മേഖലാ കൌൺസിലുകൾക്കുണ്ടാകരുത്. നദീജലതർക്കങ്ങൾ, ട്രാൻസ്പോർട്ട് മുതലായ കാര്യങ്ങളിൽ ഉപദേശം നൽകുന്നതാണ് മേഖലാകൌൺസിൽ ഉദ്ദേശിച്ചിട്ടുള്ളത്. അതിൽ ആക്ഷേപാർഹമായിട്ടൊന്നുമില്ല. പക്ഷെ സംസ്ഥാന നിയമസഭകളുടെ അധികാരങ്ങളെ ഈ മേഖലാ കൌൺസിലുകൾ വെട്ടിക്കുറയ്ക്കാതിരിക്കാൻ പ്രത്യേകം സൂക്ഷിക്കേണ്ടതാണ്. ബങ്കാൾ-ബിഹാർ സംയോജനം, ഹിന്ദിക്കാരെക്കൂടെ ഉൾപ്പെടുത്തിക്കൊണ്ടുള്ള പഞ്ചാബ്, ഇടയ്ക്കു പൊന്തിവന്ന ദക്ഷിണസംസ്ഥാനം ഇതെല്ലാം ഒരു തരത്തിൽ മേഖലാ കൌൺസിലുകളെ നിയമസഭകൾക്കു മുകളിൽ പ്രതിഷ്ഠിക്കുന്നതിനുള്ള ഏർപ്പാടുകളാണെന്നു സംശയിക്കേണ്ടിയിരിക്കുന്നു. അങ്ങിനെ സംഭവിക്കുകയില്ലെന്നു പ്രതീക്ഷിക്കുന്നു.

ഈ സംസ്ഥാനത്തുനിന്നും ചില ഭാഗങ്ങളെല്ലാം വിട്ടുപോകുന്നുണ്ട്. കർണ്ണാടക പ്രദേശങ്ങളും മലബാറും വേർപിരിഞ്ഞുപോയാലും മദ്രാസിനു രാജ്യസഭയിലുള്ള മൂന്നു സ്ഥാനങ്ങൾ കുറയ്ക്കാതിരിക്കുന്നതു് നന്നായിരിക്കുമെന്നു ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി പറഞ്ഞതു് ശരിയാണ്. ആ അഭിപ്രായത്തെ ഞാൻ അംഗീകരിക്കുന്നു, സ്വാഗതംചെയ്യുന്നു.

സർ, തമിഴ്, മലയാളം, കന്നടം എന്നീ നാടുകളെല്ലാം ഒന്നിച്ചു കിടക്കുകയും ഒരേ സംസ്ഥാനത്തിൻെറ ഭാഗമായിരിക്കുകയും ചെയ്യു കാലത്തു് ഈ പ്രദേശങ്ങളുടെയെല്ലാം സമ്പത്തു് കോരിച്ചൊരിഞ്ഞിട്ടുള്ള ഒരു സ്ഥലമാണ് മദ്രാസ് നഗരം. മദ്രാസ് നഗരത്തിലുള്ളപോലുള്ള സ്ഥാപനങ്ങൾ മലബാറിലൊ സംസ്ഥാനത്തിൻെറ മററു ഭാഗങ്ങളിലൊ ഇല്ല. യൂണിവേഴ്സിററിയുണ്ട്, ടെക്നിക്കൽ ഇൻസ്റ്റിററ്യൂട്ടുകളുണ്ട്, മെഡിക്കൽ

കോളേജുകളുണ്ടു്, അങ്ങനെ മററു പലതും മദ്രാസ് നഗരത്തിലുണ്ടു്. ഒന്നിച്ചു കിടന്ന ഈ ഭിന്നഭാഷാ പ്രദേശങ്ങളുടെയെല്ലാം പൊതുവായ ഉപയോഗത്തിനുണ്ടാക്കിയിട്ടുള്ള സ്ഥാപനങ്ങളാണിവയെല്ലാം. അവയിൽ മലബാറിനും അർഹിക്കുന്ന സ്ഥാനം നൽകേണ്ടതാണ്. എല്ലാമൊന്നും വേണമെന്ന് ഞാൻ പറയുന്നില്ല. എങ്കിലും കുറേക്കാലത്തേക്കു അതു് ആവശ്യമാണ്. മലബാർ ഇന്നു എത്രയോ പിന്നോക്കം നില്ക്കുന്ന ഒരു പ്രദേശമാണ്. അവിടെ ഇത്തരം സ്ഥാപനങ്ങളെല്ലാം ഉണ്ടായിവരണമെങ്കിൽ എത്രയോ കൊല്ലം പിടിക്കും. പോരെങ്കിൽ മലബാർ വളരെക്കാലമായി അവഗണിക്കപ്പെട്ടു കിടക്കുന്ന ഒരു പ്രദേശവുമാണ്. പെട്ടെന്ന് ഇതെല്ലാം നികത്തിയെടുക്കാൻ സാദ്ധ്യമല്ല. സംസ്ഥാനത്തു് വിദ്യുച്ഛക്തി വിതരണത്തിന്നായി 11 കോടി ഉറുപ്പിക ചെലവഴിക്കുമ്പോൾ അതിൽ മലബാറിന്നു കൊടുത്തതു് ഏകദേശം 4 ലക്ഷം ഉറുപ്പിക മാത്രമാണ്. ഉദ്യോഗങ്ങളുടെ കാര്യം പറയുമ്പോൾ ജനസംഖ്യക്കണക്കു പറയുന്ന ഗവർമ്മെണ്ടു് വിദ്യുച്ഛക്തിയുടെ കാര്യം വരുമ്പോൾ ജനസംഖ്യക്കണക്ക് പറയുന്നില്ല. വിദ്യുച്ഛക്തി തുടങ്ങിയ കാര്യങ്ങളിൽ മലബാറിന്നു കിട്ടേണ്ട വിഹിതം കിട്ടിയിട്ടില്ല. അങ്ങനെ അവഗണിക്കപ്പെട്ടു കിടന്ന ഒരു ജില്ലയെ മററൊരു സംസ്ഥാനത്തോടു് ചേർക്കുന്നുവെന്നുള്ളതുകൊണ്ടു മാത്രം ആ ജില്ലയുടെ ധനവുംകൂടി വാരിച്ചൊരിഞ്ഞു ഉണ്ടാക്കിയിട്ടുള്ള സ്ഥാപനങ്ങളുടെ ഗുണം അവിടത്തെ ആളുകൾക്കു നിഷേധിക്കാവതല്ല. പുതിയ സംസ്ഥാനങ്ങൾ രൂപീകരിക്കുമ്പോൾ നാമെല്ലാം തമ്മിൽ തല്ലാനും കടിപിടികൂടാനും പോവുകയല്ല. അതിർത്തികളെ സംബന്ധിച്ചു് തർക്കമുണ്ടാകുമ്പോൾ അല്പം ക്ഷോഭങ്ങളെല്ലാം കാണിക്കാറുണ്ടെങ്കിലും, അതു കിട്ടണം ഇതു കിട്ടണം എന്നെല്ലാം വഴക്കടിക്കാറുണ്ടെങ്കിലും രാജ്യത്തിൻെറ പൊതുവായ ഐശ്വര്യം പടുത്തുയർത്തുന്ന കാര്യത്തിൽ നാട്ടിന്നു നേതൃത്വം നല്കാൻ ചുമതലപ്പെട്ടവരാണ് നാം എന്ന ബോധത്തോടുകൂടി രാജ്യത്തിൻെറ ഐക്യത്തിലും ഭദ്രതയിലും വിശ്വസിച്ചുകൊണ്ടു് അതിന്നനുസരണമായിട്ടുള്ള പദ്ധതികളും നടപടികളും കൈക്കൊള്ളാൻ എല്ലാവരും ശ്രമിക്കണമെന്നുള്ള അഭ്യർത്ഥനയോടുകൂടി ഞാൻ എൻെറ പ്രസംഗം അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു.

SRI A. VELOO: கனம் தலைவர் அவர்களே, இந்த சபைமுன்பு இப்போது விவாதத்திலிருக்கும் ராஜ்ஜிய புனரமைப்பு மசோதாவைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஏற்கனவே இந்த சபையில் ராஜ்ஜியபுனரமைப்பு சம்பந்தமாக வந்த தீர்மானத்தை நல்ல முறையில் பரிசீலனை செய்து விவாதித்து இந்த சட்ட சபையிலுள்ள தமிழர்களின் ஏகோபித்த ஆதரவு பெற்று தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கை இன்னதென்று முடிவு செய்து மத்திய சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறோம். அதை மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. தற்போது சட்டசபைமுன் விவாதிக்கப்படும் ராஜ்ஜியபுனரமைப்பு மசோதாவில் நமக்கு அது சம்பந்தமான விரிவான திருத்தங்கள் செய்ய அதிகாரம் கொடுக்கப்படவில்லை. எல்லாம், சிறுசிறு திருத்தங்கள் செய்ய மாத்திரம் இம்மசோதாவில் நமக்கு இடங்கொடுக்கப்பட்டிருக்கிறது.

3-45 p.m. ராஜ்ஜிய புனரமைப்பு செய்யும் விஷயத்தில் முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது மொழி பிரச்சினையாகும். மொழி வழியாக ராஜ்ஜியங்களைப் பிரிக்க இதில் இடங்கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி கவனிக்கப்படவேண்டும். இரண்டாவதாக, ஜனநாயக ரீதியில் மக்கள் விருப்பத்தை அறிந்து, தொடர்ச்சியாக ஒரே மொழி பேசும் இடங்களை, அதாவது கிராமங்களை unit அடிப்படையாகக்கொண்டு, அவ்விடங்களை அந்தந்த மொழி ராஜ்ஜியத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்றும் கவனிக்கவேண்டும். இப்போது இருக்கும் நிலைமையைப் பார்த்தால் இவ்வித அடிப்படைகளைக் கொண்டு நம் ராஜ்ஜியத்திற்கு எந்த விதமான இடங்களையும் சேர்த்து இருப்பதாகத் தெரியவில்லை. தேவிகுளம், பீர்மேடு இவ்விடங்களில் பெருவாரியான தமிழ் மக்கள் வசிக்கிறார்கள்; மேலும் இவ்விடங்கள் தமிழ் பகுதிகளுக்கு சேர்ந்தாற்போல் இருக்கிறது. அப்படி இருந்தும் அவைகளை நம் ராஜ்ஜியத்துடன் சேர்க்காமல் கேரள ராஜ்ஜியத்துடன் சேர்க்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கதாகும். இவைகள் நம் ராஜ்ஜியத்துடன் சேர நியாயமிருக்கிறதென்று பல புள்ளிவிவரங்களுடன் சென்ற சட்டசபை கூட்டத்தில் வெகு அழகாகவும் ஆணித்தரமாகவும் நிதி மந்திரி எடுத்துக் கூறினார்கள். அப்படி எடுத்துக்கூறியும் அவ்விடங்கள் நமக்கு கிடைக்காமல் ஒருதலைபட்சமாக தீர்ப்பு கூறப்பட்டிருப்பதைக் கண்டால் வருத்தப்படாமலிருக்கமுடியவில்லை.





இந்த புதிய மசோதாவில், ஐந்து மண்டல கவுன்சில்கள் நியமிக்கப்பட்டிருக்கிறது. தேசீய ஒற்றுமைக்கு இவைகள் பயன்படும் என்று சொல்லப்பட்டாலும் மொழிக்கு இக்கவுன்சில் ஏற்படுத்துவதில் முதலிடம் கொடுக்க மறுக்கப்பட்டிருக்கிறதுடன் ஆலோசனை கூறும் கவுன்சில் சபையாகமட்டுமே இருக்கும் என்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மொழிக்கு முதலிடம் கொடுக்காமல், தேசீய ஒற்றுமையைப்பற்றி மாத்திரம் பேசிக்கொண்டே இருந்தால், நமக்கு ஏற்பட்ட அநீதி நீங்கிவிடாது. ஆகவே மொழிக்கு இந்த ராஜ்ஜிய புனரமைப்பு விஷயத்தில் முதல் இடம்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்காக நாம் தீவிர முயற்சிகள் எடுத்துக்கொள்வதுடன் நம் ராஜ்ஜியத்திற்கு தமிழ் நாடு என்று பெயரிடவேண்டியதுதான் பொருத்தமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்னை ராஜ்ஜியம் என்ற பெயர் உலகம் அறிந்த பெயர் அதனால் அந்த பெயரே நம் ராஜ்ஜியத்திற்கு இருக்கவேண்டுமென்று சொல்லுவது தமிழ் நாட்டின் பெயரையே அவமதிப்பதாகும்.

இப்போது டெல்லியில்கூட பல இடங்களில், பெயர்களை எல்லாம் மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் ஆந்திராவில்கூட தமிழ்ப் பெயராக இருந்த சில இடங்களில் எல்லாம் பெயர்களை மாற்றி அமைத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகையால், நம்முடைய இந்தச் சென்னை என்ற பெயரைத் தமிழ்நாடு என்று பெயரிட, நாம் தக்கவிதத்தில் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. P. KUTTIKRISHNAN NAYAR: Mr. Speaker, Sir, it is with a certain amount of pride that I stand before you. This question of the reorganization of the States has created a lot of confusion in various parts of India. Malabar has been free from that and as such I am proud of it. There was not even the slightest demonstration and there was no trouble in Malabar. It is not, as the hon. Member Sri K. Vinayakam pointed out, that Malabar gains something at the hands of the Centre. Hon. Members know that five big taluks, which form the granary of Travancore-Cochin, are taken away. You, Sir, know that Kerala without Kanyakumari is a misnomer. Kerala and Kanyakumari have been connected from the very inception of the State and as such it is a sacrifice. But the people there and here have put forward certain claims to the Central Government. Our beloved leaders have considered all the aspects of the question and they have come to the conclusion that the States should be reorganized on the basis of the recommendations contained in the Bill which is now before us for discussion. 3-50 p.m.

It is true that I had pleaded for Dakshina Pradesh and I still believe that it will come when we realize that the destinies of Tamilnad and Kerala are so intertwined that they cannot exist as two separate States. If we take the population of Malabar, we will find that the Tamil population comes to 119,743. If we take the Malayalam-speaking population of the Tamil districts excluding, of course, Madras and Nilgiris, it comes to 118,119, while the population of Madras including Nilgiris comes to 199,611. I have completely ignored the Tamil population of Travancore-Cochin where out of 92 lakhs, 11 lakhs are Tamil speaking. Considering all this, we will find that the destinies of Malabar and Tamil Nad are so intertwined that from the very early days trade has been in the hands of our Tamil friends. Take any factory there, whether it be the tile factory or the spinning mill or any other factory.

[Sri K. P. Kuttikrishnan Nayar] [28th March 1956

They have been in the hands of our Tamil friends. The bulk of the capital has been invested by them and the majority of the members managing them are Tamilians. Of course, I am restricting my remarks to Malabar district. If we go further South to Travancore-Cochin we will find that important factories are all run by the Tamil people. Their influence is greater. For the development of most of the districts of Tamil Nad, especially the border districts, the water resources available in Malabar and the co-operation of Malabar are absolutely necessary and I have no doubt that in spite of the fact that we are parting as two separate States, there won't be any hitch or trouble with reference to the use of the common resources. These are facts to which most of the people have no access or have not studied. If we analyse the consequences of separation, I am sure it will hit both Tamil Nad and Malabar equally.

Now, let us take another aspect. The hon. Member Sri K. Vinayakam was saying that it was most probable that the idea of forming Dakshina Pradesh and the favour done to Kerala were to prevent the Communists and others from coming to power in Kerala. You, Sir, know that the Congress Party had made the greatest sacrifice by standing by the directions of the Congress leaders. The Ministry there had to quit because the majority Party (the Congress) had accepted the recommendations of the Congress leaders. We thought that the unity and the prestige of India were more important to us than functioning as a Government in a State and so the Congress Party had to quit. It is not due to any other motive but it is due to the self-sacrificing attitude of the Congress Party in Travancore-Cochin, which has accepted the proposals and is prepared to implement them as far as possible.

Intertwined with the linguistic problem is the religious problem. If one temple is transferred to another State, people think that that also will create complications. Hon. Members know that Malayalees usually go to the temples in Tirupati, Palani, Rameswaram and Benares. We are not bothered if one is in Andhra, the other two are in Tamil Nad and the fourth is in North India. All of us have got a common culture. We believe that our conveniences will be met by our brethren.

Another factor which I wish to impress upon is that out of a total forest area which comes to about 60 lakhs of acres in the Madras State, the forest area in Malabar is only six and odd lakhs acres. Salem has got 1,024,099 acres while Coimbatore has got 1,448,347 acres. Only a minor portion of the forest area of the Madras State falls in Malabar district. Like that, if we scrutinize facts and figures, we have nothing to fear about the demarcation and we need not be quarrelling between ourselves for a few inches of land here or for a few inches of land there.

I may also tell that though Malabar has not been fully developed, there is scope for development. So far as paddy cultivation is concerned, Malabar stands second to Tanjore. In Tanjore paddy



28th March 1956] [Sri K. P. Kuttikrishnan Nayar]

is cultivated in an area of 1,353,790 acres while the area in Malabar is 863,997 acres. It will also be seen that in 90 per cent of the area, there is cultivation of the first crop. With the extension of electricity and with the help of seven months' rain, we will be able to increase our production and we will thrive.

We are not afraid of anything else. We are only concerned 4 p.m.
with the unity of India. That is why we have been advocating the formation of Dakshina Pradesh.

Reference was made by the hon. Member Sri Mogral about Kasaragod. The total population of that taluk is 411,031 and the Malayalam speaking population is 295,916 and it is no wonder it has come to Malabar. With reference to Muthala Mada and Attipadi areas, Muthala Mada constitutes 30·87 square miles and the Attapadi area constitutes 28·42 square miles. In Attapadi area, paddy is cultivated in about 10,000 acres and the population there is 11,353. The population in Muthala Mada is 16,352. These form part of Malabar and we will be placing our case before the Boundary Commission, if any, that is appointed.

In 1954, an estimate was prepared for fourteen lakhs of rupees to connect a road to Attapadi area. But the work was not taken up. I hope the Government will take up the work this year itself. You know, Sir, that access to the mountainous regions can be had from the summit or top of the hill. Here you will find jeep transport available to go to Attapadi. You know, Sir, most of us have visited that place and we know something about it. I am sure these aspects will be further examined by the Government and that no claim is made in respect of these areas.

Then, Sir, I have only to thank you for having given me this opportunity to speak about the general aspects of this Bill. As and when clauses are taken up separately, I will be placing my views about them. I hope that in spite of harsh words, which I request hon. Members may not use, there is not going to be much difference of opinion and the situation will not deteriorate. We have not to weigh much in respect of the words that are used. People are intellectually blind and sentiment plays a large part and as such, we have to view all the speeches here with a certain amount of understanding. I am sure both Tamil Nad and Malabar will, at a future date, unite again into another State and they will be able to solve all their problems successfully. *In toto*, the Bill has to be approved. I support it.

* **Sri S. C. Virupakshiah**: Mr. Speaker, Sir, I wish to make a very few observations with respect to the States Reorganization Bill before us. The question of reorganization of States of course, was felt from a very long time and concrete steps were taken towards the implementation of certain proposals. It is only then some controversy began to grow. It is after definite proposals were laid before the country, an attempt at violence was made in certain

parts of the country, and thank God, by the good offices of the top leaders, things have settled down and calm, cool and reasonable considerations prevail now. The present Bill before us is the outcome of such calm and dispassionate consideration. Such acts of violence have led us to conclude that such acts never take them nearer their goal and they will not evoke the sympathy of the people at large. On the other hand it will receive the condemnation from all right-thinking people.

The territorial divisions that have been enunciated in this Bill are the outcome mostly out of agreement and in addition to the Press Communiqué that was issued on the 16th January 1956. In that Press Communiqué, only three points which were held to be controversial were held up. But, decisions were taken after detailed discussion, deep consideration and after broad agreement. So, I feel that there will not be much controversy over the provisions with respect to the division of territories.

There is another improvement in this Bill over the Report of the States Reorganization Commission and that is in regard to the appointment of Boundary Commission. There are three ways in which the question of border disputes can be settled. One is, as is found, by the agreement of parties. Secondly, minor changes in boundaries may be referred to a Boundary Commission. Thirdly, there are the Zonal Councils, and they are empowered to look into border disputes. I feel that the border disputes can be easily settled by the three ways and here the States will have to exhibit their magnanimous nature, their breadth of vision and their forethought to come to conclusions which will give a finality to all controversy. At present, taluk has been taken as the unit. I feel, as it is, the Boundary Commission or the Zonal Council, will be empowered to look into questions that are bordering every area involving less than a taluk. I am keeping in mind the Talavadi firka of Gobichettipalayam taluk in my district. It is such small things wherein administrative inconvenience will be felt. If the Boundary Commission will be seized of such small thing, I feel that we will get justice.

Then, Sir, I would like to state that the appointment of Zonal Councils is a great experiment. If it is found to be more helpful in solving the problems of the country I am sure that it will be vested with greater powers. Otherwise, it will receive early termination. So, the working of Zonal Councils will be watched with great interest all over the country and the different units that go to the Zone will be responsible for the good working of such an institution. Then again, Sir, in the formation of the new State of Mysore, all the Kannadigas distributed over five or six units in different States will now come together and work out their destination. It will infuse great enthusiasm in the minds of the various parts of the country and they will all work to the good of the State and to the good of India at large.





In this Bill, Sir, my constituency, viz., Kollegal has been added on to the new State of Mysore. The people of that area hail this decision with great enthusiasm. But there is a small thing which is agitating their minds, namely, the inclusion of Kollegal in Mandya district. Every day I am getting communications from my area protesting against this. The panchayat boards are passing resolutions that it is more feasible and contiguous to the taluks of Mysore district and as such, it should be tagged on to the district of Mysore. I feel, Sir, that business connexions, social connexions, commercial connexions—all sorts of connexions are more with Mysore than with Mandya. So, instead of including it in Mandya, it is better that Kollegal taluk is tagged on to the district of Mysore. I know, Sir, that under clause 14 the powers of the State Government are saved to reorganize the districts. I feel that immediately after the formation of the reorganization of States, the State Government will be called upon to discharge more onerous duties towards economic and other directions than to think of the small things. So, I plead that the Central Government will be pleased to tag on Kollegal to the Mysore district.

Of course, Sir, as somebody remarked, parting is a sad affair. But, it cannot be helped. I, as a sole Member of the Kollegal taluk, will have to go out of the composite State to the new State of Mysore. I carry with me the happy relationship that I had with all our friends, particularly the friends of the Coimbatore district. I am not going away either complaining that there was neglect or that there were other hardships. I will only feel that any neglect that I had was due to the physical impossibility that the Government had in attending to our needs. On the whole, I support the provisions in this Bill. Thank you, Sir.

SRI A. GOVINDASWAMI NAYAGAR : கனம் சபாநாயகர் அவர்களே! ராஜ்ய சீரமைப்பு மசோதா, தமிழர்களுக்குப் பெரிய பாதகத்தை விளைவித்திருக்கிறது. தமிழர்களுடைய உரிமையைப் பறித்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலேயே, மொழி வழிநாடு பிரியவேண்டுமென்று பல மகாநாடுகளில் தீர்மானம் போட்டு இருந்தும்கூட, இந்த மசோதா வெளிவருகின்ற நேரத்தில், நிர்வாக வசதிக்காகத்தான் ராஜ்யங்கள் பிரிக்கப்படுகிறது. மொழியின் அடிப்படையில் பிரிக்கப்படமாட்டாது என்று சொன்னாலும்கூட, பெருவாரியான மாகாணங்கள் மொழியின் அடிப்படையிலேயே பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பிரித்து இருக்கின்ற நேரத்தில், தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய தேவிகுளம், பீர்மேடு, கொச்சி, சித்தூர், நெய்யாற்றங்கரை போன்ற பகுதிகள் தமிழ்நாட்டோடு ஏன் சேர்க்கப்படவேண்டும் என்ற காரணகாரியங்களை, இன்றைய தினம் சர்க்கார் கட்சியில் வீற்றிருக்கின்ற இதே சுப்ரமணியம் அவர்கள்தான், எடுத்து நல்ல முறையிலே விவாதித்தார். அதையேதான் வலியுறுத்திச் சொல்கிறேன். அன்றைய தினம் அவர் சொன்னதை, இன்றையதினம் ஏன் அவர் பின்வாங்கவேண்டும் என்றுதான் நமக்குப் புரியவில்லை. மேல் இடத்து உத்தரவு என்று கூறி, மக்களுடைய எண்ணத்தைத் தப்புக்கணக்காக நினைக்கிற அளவுக்குச் சட்டசபைத் தமிழ் அங்கத்தினர்கள் பெருவாரியான வோட்டுக்களால், ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தும்கூட, ஒவ்வொரு ஜில்லா போர்டிலும், இந்த தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகள் தமிழ் நாட்டோடுதான் சேர்க்கப்படவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியும், தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து போர்டுகளிலும், மொழித் தீர்மானத்தை நிறை- 4-10 p.m.

[Sri A. Govindaswami Nayagar] [28th March 1956

வேற்றிய பிறகும், பொதுஜனக் கருத்துக்கு மதிப்பு அளிக்காது, நேரு சர்க்கார், யதேச்சாதிகார மனப்பான்மையோடு, இந்தத் தமிழர்களைப் பழிவாங்குகின்ற நிலையில், தமிழர்களுடைய உரிமையைப் பறித்துக்கொண்டார்கள். நமக்குச் சமாதானத்தைச் சொல்லுகின்ற நேரு அவர்கள், நமக்கு ஏற்கனவே, இந்தக் கமிஷன் வழங்கிய செங்கோட்டையின் ஒரு பகுதியை, குரங்கு அப்பத்தைப் பங்கிட்ட கதையாக பிரித்து, அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். அது மாத்திரம் அல்லாமல், ஜனநாயகத்துக்கு முரணுக, ஒரு கட்சிச் சட்டசபையிலே, இந்தப் பிரச்னையானது விவாதத்துக்கு வருவதற்கு முன்னாலேயே, ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவுக்கு, முக்யமான கருத்துக்கு முரணுக, எந்த அங்கத்தினரும் பேசக்கூடாது என்ற அறிக்கை. இது தான் ஜனநாயகமா என்று கேட்கிறேன். ஒரு கட்சி தனி அறிக்கை விடுவதால், சட்டசபையில் இருப்பவர்களுக்கு வேலையே யில்லை. இன்றைய தினம் நாம் பார்க்கிறோம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மலபார் அங்கத்தினர்களுக்கும், கன்னடதேச அங்கத்தினர்களுக்கும், இங்கே பேச உரிமை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் அங்கத்தினர்கள் பேசாமல், அவர்களுக்கு வாய்பூட்டுச் சட்டம் போட்டிருக்கிறார்கள். ஏன் என்று கேட்கிறேன்? அவர்களைப் பேசவிட்டால், எங்கு தேவிகுளம், பீர்மேடு நிச்சயமாகத் தமிழ் நாட்டுக்குத்தான் சேர்க்கப்படவேண்டும் என்பார்களோ என்ற பயத்தால் தான் அவர்கள் இதுவரையில் பேசத்தடைவிதித்து இருக்கிறார்கள். இனி, பின்னால், பேசுவார்களோ என்னமோ தெரியாது. தவிர, இவர்கள் நடவடிக்கையின், அரசியல் காரணம் என்ன என்று புரியவில்லை. தமிழ் நாடு என்று பெயர் வையுங்கள் என்று அன்றைக்கும் வாதாடினோம், இன்றைக்கும் வாதாடுகின்றோம். நிதி மந்திரி சுப்ரமணியம், விவாதத்துக்குப் பிறகு, திருத்தம் கொண்டுவரவேண்டிய நேரத்தில், நம்மை ஏமாற்றிவிட்டார்கள்.

இந்த மசோதா வரும்போது, தமிழ் நாடு என்று பெயர் வைத்துக் கொள்ளலாம் நமக்குள்ளே ஒற்றுமை இருக்க வேண்டாமா? ஏகமனதாக தீர்மானத்தை நிறைவேற்றிவிடலாம். நமக்குள்ளே பிளவைக் காட்ட வேண்டா மென்றுக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் இன்றைய தினம் "மெட்ராஸ்" என்றுதான் பெயர் வந்திருக்கிறது. "ஏன் தமிழ் நாடு என்று பெயர் வைக்கக்கூடாது. பச்சைத் தமிழன் ஆட்சியிலே ஏன் தயக்கம்" என்று கேட்ட போது நிதி மந்திரி சுப்ரமணியம் அவர்கள் சொன்னார்கள்.—"குழந்தை பிறப்பதற்கு முன்னாலேயே, பெயர் வைக்க வேண்டுமென்று கேட்கிறாரே கோவிந்தசாமி" என்று. இப்போது நான் கேட்கிறேன் "வெள்ளைக்காரன் பேரால் மெட்ராஸ் என்று வைக்கப்போகிறீர்களா? அல்லது தமிழ் நாடு என்று வைக்கப் போகிறீர்களா?"

"பெயரை மாற்றினால் உலகத்துக்குத் தெரியாது தமிழ்நாடு என்றால் உலகத்துக்குத் தெரியாது" என்று சொல்லுகிறீர்கள். மூவேந்தர் ஆண்டது உலகத்துக்குத் தெரியாதா? தமிழ் நாட்டின் பேரால்தான் அவர்கள் ஆண்டார்கள் இந்தியாவுக்கு பாரத் என்று பெயர் வைக்க வில்லையா? அது எந்த வெள்ளைக்காரனுக்குத் தெரியும். இந்தியாவுக்கு "பாரத்" என்று பெயர் வைக்கும்போது, சென்னைக்கு ஏன் தமிழ் நாடு என்று பெயர் வைக்கக் கூடாது. மேலும், பார்லிமெண்டு என்பது வெள்ளைக்காரன் வைத்த பெயர்தான். அதை இப்போது "லோக் சபை" என்று மாற்றவில்லையா? இதையெல்லாம் நாங்கள் கேட்டால், எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னால் நாங்கள் ஏன் மாற்றிக்கொள்ளவேண்டுமென்று கேட்கிறார்கள்.

இன்னும், தேவிகுளம், பீர்மேடு விஷயமாக, **Boundary Commission** பரிசீலனை செய்து, திட்ட வட்டமாக சொல்லி, இந்த ராஜ்யங்கள் அமைப்புக்கு வருவதற்கு முன்னாலே, **Boundary Commission** நியமித்த **delimitation constituencies** ஏற்படுவதற்கு முன்னாலே, இந்தப் பிரச்னையைச் அடுத்தப் பொதுத் தேர்தலுக்குள்ளே ஆராய்ந்து, மலையாளத்துக்குச் சேர வேண்டிய பகுதிகளை மலையாளத்துடனும், தமிழ் நாட்டுக்குச் சேர வேண்டிய பகுதிகளைச் தமிழ் நாட்டுடனும் சேர்க்க உறுதி கூறப்



28th March 1956] [Sri A. Govindaswami Nayagar]

படவில்லை. இதையெல்லாம் பார்க்கும்போதுதான் நாங்கள் இவர்கள்
பிரச்னையைக்கண்டிக்காமல் இருப்பதற்கில்லை. நம் முதல் மந்திரி என்ன
பேசுகிறார் தெரியுமா? "குளம் வேண்டும், மேடு வேண்டும்," என்று பிரச்னை
யையே கிண்டல் செய்கிறார். "பீர்மேடு, தேவிகுளம் எங்கே போனால்
என்ன? நான் இங்கேதானே இருக்கப் போகிறேன்" என்கிறார். இந்தத்
தமிழ் நாட்டிலே இருக்கிற மந்திரிகளும், அங்கத்தினர்களும் கேலிக்
குரிய சித்திரங்களாக இருக்கிறார்களே என்றுதான் நாங்கள் வருத்த
படவேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம். இந்தப் பிரச்னையைக்
கிண்டல் செய்யவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள்
கட்சிக்குப் கட்டுப்பட்டு நாகம் போலே நீங்கள் இருந்தாலும் (நிதி மந்திரி
அவர்கள் கூட சொன்னார்கள் உங்களுக்கு இருப்பதை விட அதிகமாக
உணர்ச்சி எனக்கும் இருக்கிறது என்று) ஆனால் வெளியே காட்ட முடிய
வில்லை, கட்சிக்கட்டுப்பாடு காரணமாக. தமிழ் நாடு என்று பேர் வைப்பதற்
குக் கூட நீங்கள் தயங்கினால், வேறே என்னதான் சாதிக்கப்போகிறீர்கள்?

மற்ற சர்வ கட்சித் தோழர்கள் எல்லாம் சேர்ந்து, இந்தப் பிரச்னையை
பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லி ஹர்த்தால் நடத்தவேண்டுமென்று
கேட்டுக் கொண்டதன் பேரிலே, தமிழ் நாடு எங்கும் பொதுமக்கள் ஆத
ரவு காட்டினார்கள். ஆனால் நிதி மந்திரி சுப்ரமணியம் அவர்கள் இதை
ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள். பேச வேண்டிய அங்கத்தினர்களை பேச
விடாமல் வைத்து இருக்கிறார்கள். இதுதான் ஜனநாயகமா? இந்த ஜன
நாயகத்தை வைத்துக் கொண்டு மற்ற நாடுகளுக்கு நீங்கள் என்ன வழி
காட்டப் போகிறீர்கள் என்றுதான் நான்கேட்கிறேன்.

இப்போது இங்கே அங்கம் வகிக்கும் மலையாள மெம்பர்கள் கேரள
நாட்டுக்கும் தமிழ் மெம்பர்கள் தமிழ் நாட்டுக்கும் போகிறது போலே,
இங்கே உத்தியோகம் பார்க்கிறவர்களையும் அனுப்ப வேண்டியது நம்
கடமை. அப்போதுதான் தமிழ் நாட்டிலே இப்போதிருக்கும் வேலையில்லாத்
திண்டாட்டம் ஒழியும். இதை நான் சொல்வதனாலே, மலையாள கன்னட
மெம்பர்கள் மீது எனக்கு வெறுப்பு என்பது அல்ல, தமிழ் நாட்டுக்
காரர்கள் அவர்கள் நாட்டிலே (மலையாள நாட்டிலும் கன்னட நாட்டி
லும்) உத்தியோகத்திலே இருந்தால் அவர்களை நம் நாட்டுக்கு அனுப்பி
விடலாம். இதனால் அவர்களுக்கும் நமக்கும் சண்டை வந்து விடாது,
இன்று காலை நிதி மந்திரி சுப்ரமணியம் அவர்கள் சொன்னார்கள் "பிரி
வினை மனப்பான்மையை நான் ஆதரிக்க முடியாது" என்று இந்தியா
விலிருந்து பாகிஸ்தான் பிரியவில்லையா? பாகிஸ்தான் பிரிந்த காலத்தி
லும் இப்படித்தான் சொன்னார்கள். பாகிஸ்தான் பிரிந்ததா இல்லையா
என்று கேட்கிறேன். மொழியின் அடிப்படையிலே நாடு பிரிவது பைத்
தியக்காரத்தனம் என்று சொல்லுகிறார்கள்.

இன்றைய சர்க்கார், காங்கிரஸ் கட்சி நம் கோரிக்கைகளை ஏற்க முடி
யாதென்று சொல்லுகிறது. ஆனால் நாளை இதை ஒத்துக் கொள்ளத்தான்
போகிறார்கள். நமக்கு மலையாளிகளுடனே மற்ற யாருடனே வெறுப்பு
இடையாது. மொழி வழியாகப் பிரித்து இனவழி சேர்ந்து வாழ
வேண்டுமென்பதுதான் திராவிட முன்னேற்ற கழகத்தின் நோக்கமாகும்.
இதை காங்கிரஸ்காரர்கள் இன்று ஏற்றுக்கொள்ளவில்லை என்றா
லும், என்றாவது ஒரு நாள் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.
கடைசியாக நான் சொல்லுவது. இந்த ராஜ்ஜியத்திற்கு தமிழ் நாடு
என்று பெயர் வைக்க வில்லை என்றால் எதிர்காலத்தில் தேர்தல் வரும்
போது, அதன் பலனை காங்கிரஸ்காரர்கள் அநுபவிப்பார்கள் என்று
எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

**Sri C. KANDASAMY**: "கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 4-30 p.m.
மசோதாவில் பல பல இனங்கள் இருந்த போதிலும் கூட, இந்த
நாட்டின், தமிழ் நாட்டின், வருங்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய, மிகவும்
சக்தி வாய்ந்த ஒரு மசோதா, இது என்று குறிப்பிட விரும்புகிறேன். இன்
றைய தினம், இந்த மசோதாவில் அடங்கி இருக்கும் விஷயங்கள், ராஜ்
ஜியபுனர் அமைப்பு சம்பந்தமான விஷயங்கள். யார் விரும்பினாலும்
விரும்பாவிட்டாலும், இன்றைய தினம் இந்த மசோதா, அமுலுக்கு
வரவேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டது.

இந்த நாட்டு மக்கள் இந்த கோரிக்கைக்காக செய்து வந்திருக்கும் கிளர்ச்சி பலன் தந்திருக்கிறதென்றுதான் சொல்ல வேண்டும். இந்த மசோதாவைக் கொண்டுவந்த நிதி அமைச்சர் பல மசோதாக்களை இந்த சபையில் கொண்டு வந்திருக்கிறார். அந்த சமயங்களில் எல்லாம் அவர் அழுத்தம் திருத்தமாக தக்க காரணங்களோடு, எல்லா மசோதாக்களையும் பிரேரேபித்திருக்கிறார். ஆனால் இன்றைய தினம் இந்த மசோதாவை பிரேரேபிக்கும்போது, அதே மாதிரி இல்லாது வேண்டா வெறுப்போடு நம்பிக்கை இல்லாத முறையில் பிரேரேபித்திருகிறார் என்று நான் கருதுகிறேன். இன்றைய தினம் சிலர் நினைக்கிறார்கள் இந்த மாதிரியான மொழிவழி அடிப்படையில் மாகாணங்களை திருத்தியமைப்பதால் இந்த நாட்டிற்கு நல்ல விளையுமென்று சொல்லுகிறார்கள். இன்னொரு பக்கத்தில், இதனால் நாட்டின் ஒற்றுமைக்கு கேடு விளையுமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால், இன்று நாட்டில் மக்கள் மொழிவழி அடிப்படையில் நாட்டைப் பிரிக்கவேண்டுமென்று சொல்லிவருகிறார்கள். இதன் காரணமாக இன்று காங்கிரஸ் தன்னுடைய கொள்கையை விட்டுக்கொடுக்க வேண்டிய நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் ஏதாவது காரணம் சொல்லி இந்தப் பிரச்னையை ஒத்தி போடவும் ஒரு பக்கத்தில் முயற்சி செய்து வருகிறார்கள். வைத்தியர் உதாரணத்தை நிதியமைச்சர் குறிப்பிட்டார். அந்த உதாரணம் இந்த பிரச்னைக்குச் சற்றும் பொருந்தாது. சென்ற 50 வருஷகாலமாக மொழிவழி மாகாணங்கள் அமைக்கவேண்டுமென்று காங்கிரஸ் மக்களிடம் சொல்லி வந்திருக்கிறது. இன்றைய தினம் காங்கிரஸ்காரர்கள் இதையெல்லாம் நினைக்காமல் இல்லை. சென்ற காலத்தில் ! மொழிவழி அடிப்படையில்தான் காங்கிரசுக்கு பலம் அதிகரித்து வந்திருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட காலத்தில் மொழிவழி மாகாணம் அமைப்புக் கோரிக்கை காரணமாக, இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். காங்கிரஸ் அந்தக் காலத்தில் நடத்திய போராட்டங்களில் வெற்றி கண்டதற்கு இதுதான் காரணமாக இருந்திருக்கிறது. மகாத்மா காந்தி குஜராத்தியில் பிறந்தாலும், C. R. Das வங்காளத்தில் பிறந்தாலும், சி. ராஜகோபாலாச்சாரி, வி. வோ. சிதம்பரம் பிள்ளை இந்த மாகாணத்தில் பிறந்தாலும் சரி, எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள்.

4-24 p.m. அதிகாரத்திற்கு இன்றைய தினம் காங்கிரஸ் வந்ததற்கு பிறகு அந்த நிலைமையை மாற்றிக் கொண்டுள்ளார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் பிரதேசங்களிடையே தாரதம்யமான வளர்ச்சி இருந்திருக்கிறது. ஒரு சில பிரதேசம், இதர பிரதேசங்களை விட வளர்வதற்கான வசதிகளும் சில பிரதேசங்கள் பின் தங்கிய நிலையிலும் வைத்திருந்தான் வெள்ளைக்காரன். எப்படி இந்த நாட்டில் சீர்குலைவு ஏற்படவேண்டும் என்று செய்திருந்தானோ அந்த நிலையை போக்குவதற்கு பதிலாக இந்த நாட்டில் மீண்டும், ஒற்றுமை குலைந்து விடும், திட்டங்கள் தகர்ந்து விடும் என்று மொழிவழி அமைப்புக்கெதிரான விஷயங்களை சொல்லுவது பொருத்தமாக இல்லை.

இன்றைக்கு தமிழ் நாடு அமைக்கப்பட்டதனால், கேரளம் அமைக்கப்பட்டதனால், கர்னாடகம் அமைக்கப்பட்டதனால் ஒட்டு மொத்தமாக இத்தேசத்தின் ஒற்றுமை சக்தியை இந்த பிரதேசங்களிலுள்ள தலைவர்கள் மறந்து விடுவார்கள் என்று சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது. இதைப்பற்றி குறிப்பிடும்பொழுது நிதி அமைச்சர் அவர்கள் கூறினார் "சென்ற சில மாதங்களில் நடந்த சம்பவங்கள் எல்லாம் அவமானகரமானவை" என்று. வாஸ்தவம். பல பலாத்கார செயல்கள் நடந்திருக்கின்றன. இந்த மாதிரி சமயங்களில் எப்படி அபிப்பிராயத்தை வலியுறுத்தவேண்டும் என்பதை நான் உணர்ந்து இருக்கிறேன். அதற்கு ஒரு கட்சியை மாத்திரம் சொல்வது பிரயோஜனமில்லை. வகுப்புவாதிகளாகவே இதைச் செய்துவிடவில்லை. வகுப்புவாதிகளுக்கு கையோங்கும் வகையில் காங்கிரஸ் உட்பட ஆங்காங்குள்ள கட்சிகளும், ஈடுபட்டு இருக்கின்றன. "மொழிவழி மாகாணம் அவசியம், எப்படி எல்லைப் பிரச்னைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும் ? பிறர் பிரதேசங்களை கேட்பது எப்படி தவறு ? நம் பிரதேசங்களை







விட்டுக்கொடுப்பது எப்படி தவறு," என்று மக்களுக்கு அறிவுறுத்த காங்கிரஸ் முன் வந்திருந்தால் இத்தகைய நிகழ்ச்சிகளை தவிர்த்து இருக்க முடியும். இந்த கருத்து மாறுபட்டதாக இருக்கலாம். உதாரணமாக, மகாராஷ்டிரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மகாராஷ்டிரம் அமைப்பதற்கு பழம் பெரும் தேசபக்தரான சங்கரராவ் தேவ் போன்ற காங்கிரஸ்காரர்கள் தலைமை வகித்துள்ளனர். அவர்களுடைய நோக்கத்தைப்பற்றி போராட்ட வழிகளைப்பற்றி குறைகூற முடியாது. மொழிவழி அமைப்பு நாட்டின் வளர்ச்சிக்கு அத்தியாவசியம். அடிப்படை, ஆரம்பம் என்பதை இன்னும் ஒத்துக்கொள்ள மறுப்பது, இந்த மசோதா கடைசி வரையில் நிறைவேற்றப்படுவதற்கு, பண்டித நேரு அவர்களுக்கு எல்லாவித மரியாதையோடும் சொல்லுகிறேன். பண்டித நேரு உட்பட, நிதி அமைச்சர் உட்பட இந்த மசோதாவால் ஏற்படக்கூடிய வருங்கால விளைவைப்பற்றி தலைவர்களே, அரசாங்கத்தில் இருப்பவர்களே. சந்தேகத்துடன் இந்த மசோதாவை அமுலுக்கு கொண்டுவருகிறார்களென்றால் இது எந்த அளவுக்கு அமுலாவதற்கு இவர்கள் கடைசி வரையில் ஒத்துழைப்பார்கள் என்பதிலே சந்தேகப்படுவதற்கு இடம் கொடுக்கிறது.

அதே மாதிரி தான் Zonal Council. அது சாதாரணமாக வந்திருந்தால், இரண்டு ராஜ்யங்களுக்கு இடையேயுள்ள விவகாரங்களை தீர்ப்பதற்கு, மத்திய சர்க்காருக்கும் குறிப்பிட்ட பிரதேசத்திற்குமுள்ள விவகாரங்களை தீர்ப்பதற்கு இந்த மாதிரி ஒரு Zonal Council அவசியம் என்பது முன்னதாகவே கூறப்பட்டிருந்தால் இதில் தகராறே இருந்திருக்காது. இப்பொழுது பிரதேச ராஜ்யம் வேண்டும் என்று, கோரிக்கை, அதற்கு கட்சிக்குள்ளேயே பலவிதமான தகராறுகள், சந்தேகப்படுவதற்கான இடங்கள், இதற்கு கட்சி போட்டுக்கொண்டு தேசம் பூராவும் அபிப்பிராயம் இரு கூறாக பிரியக்கூடிய நிலைமை எல்லாம் வைத்துக்கொண்டு இதைக் கொண்டுவருகிற சந்தர்ப்பத்தில் சந்தேகங்கள் கிளம்புகின்றன. இந்த சந்தேகங்கள் கிளம்புவது மாத்திரமல்ல. அதைப்பற்றி பேசுகிற காலத்திலே பண்டித நேரு அவர்கள் கூட "நான் விரும்புவது பிரதேச ராஜ்யங்கள். ஆனால் அது சாத்தியப்படாத நிலைமையில் தான் இது மாதிரி கொண்டு வருகிறோம்" என்று பேசும்பொழுது பலவிதமான சந்தேகங்கள், இந்த மாதிரி Zonal Council பிறகு பிரதேசங்களாக வந்துவிடுமோ என்று நினைப்பதற்கு வழி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தப்படியாக தமிழ் நாட்டைப்பற்றி ஏற்படக்கூடிய ராஜ்யத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைப்பது என்று கூறுகிற காலத்தில் அபிப்பிராய பேதமில்லை. அதற்கு ஒரு சிலர் சொல்கிறார்கள். பெயரிலே என்ன வந்திருக்கிறது, சென்னை ராஜ்யம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம், ஆகவே சென்னை ராஜ்யம் என்றே இருக்கலாம் என்று. தமிழ் நாடு என்று பெயர் வைப்பதன் மூலம் இந்த பிரதேசத்திலிருக்கக்கூடிய மக்கள் நீண்ட நெடுங்காலமாக கோரிவந்த மொழிவழி மாகாண கோரிக்கை பூர்த்தியாகிவிட்டது என்ற பெருமிதம், மன உற்சாகம் பெற்று நாட்டின் புனருத்தாரண வேலையில் ஊக்கத்துடன் ஈடுபடுவார்கள் என்ற அடிப்படையிலே தான் மற்றவர்கள் "தமிழ் நாடு" என்று பெயர் வைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

பாரதியாரைப்பற்றி கனம் அங்கத்தினர் விநயகம் ஒரு விதமாக கூறினார். "செந்தமிழ் நாடென்னும் போதினிலே" என்ற அவருடைய பாட்டை பூராவும் பார்க்க வேண்டும். சென்னை ராஜ்யம் என்று ஒன்று இருப்பதாக அவர் ஒப்புக்கொண்டதே கிடையாது. வெள்ளைக்காரர்கள் பல ராஜ்யங்களை ஒன்றாக இணைத்து, தங்களுடைய ஏகாதிபத்திய நிர்வாக சௌகரியத்திற்காக ஏற்படுத்திய ராஜ்யம் சென்னை ராஜ்யமே தவிர சென்னை என்று குறிப்பிடுகிற காலத்திலே இங்கே இருந்த கவர்னரின் ஆட்சியும், அவர்கள் அரசாங்கம் செய்த அடக்குமுறைகளும் ஞாபகத்திற்கு வருகிறதே தவிர பாரதியார் பாடி இருக்கிற "செந்தமிழ் நாடென்னும் போதினிலே" என்பது ஞாபகத்திற்கு வருகிறதா. இதை மந்திரி சபையார் சிந்திக்க வேண்டும். இதிலே யாதொரு விதமான பிரச்னையும்

இல்லை. யாருக்கும் எந்த விதமான கௌரமும் கிடையாது. இனி வரப்போகிற காலத்தில், முதல் முதலாக தமிழ் நாடு என்ற் பெயரிட்டு தமிழர்களைக் கொண்டு ராஜ்யத்தை இந்தியாவில் ஏற்படுத்திய ஒரு பெருமை இந்த மந்திரிசபைக்கு வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெயரில் என்ன இருக்கிறது ? என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. மற்ற ராஜ்யங்களுக்கு மொழி அடிப்படையில் பெயர் கொடுக்கும்போது, தமிழ் நாட்டுக்கும் அதே முறையில் பெயர் வைக்க வேண்டுமென்று சொன்னால் அதை ஒத்துக்கொள்வதில் என் தயக்கம் ஏற்படுகிறது என்று நான் கேட்கின்றேன். இருநூறு வருஷங்களாக தமிழ் நாட்டின் பகுதிகள் மற்ற ராஜ்யங்களில் இருந்ததன் காரணமாக, தமிழ் நாடு சிதைக்கப்பட்டு, அளவு குன்றி, அங்கங்கள் பலப் பலவிதமாக பிடுங்கப்பட்டு, சினிதக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதையெல்லாம் கணக்கிலெடுத்துக்கொண்டு, இப்பொழுதாவது, மற்ற ராஜ்யங்களிலுள்ள தமிழ் நாட்டின் பகுதிகள் தமிழ் நாட்டோடு இணைக்கப்பட்டு, பெரும்பாலான தமிழ்ப் பகுதிகளைக்கொண்டு இந்த ராஜ்யத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைப்பது தான் சாலச் சிறந்தது. இது சாதாரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய விஷயம் என்று வற்புறுத்துகின்றேன்.

எல்லைப் பிரச்னை விஷயமாக இன்றைக்காவது அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கு இருக்கக்கூடிய அங்கத்தினர் ஒருவர், " திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து தமிழ் நாட்டோடு சேர்க்கப்பட்ட ஐந்து தாலூகாக்கள் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலேயே இருந்து விடவேண்டும் " என்று பேசினார். அதற்கு முன்பாக பேசிய காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர் " காசர்கோடு எந்தப் பகுதியில் இருக்க வேண்டும் என்பதைப்பற்றி முடிவு செய்வதற்கு அங்கு வாக்கெடுப்பு வேண்டுமானால் வைத்துப் பார்த்துக்கொள்ளட்டும். ரொம்ப அநீதி, அங்கு ஒரு நதி ஓடுகிறது ; அந்த நதி இரு கலாசாரங்களைப் பிரிக்கக்கூடிய எல்லைக் கோடாக அமைந்திருக்கிறது ; பண்டித நேருவிடம் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது ; இந்த மசோதா இறுதியானது அல்ல ; நீதி கிடைக்கும் " என்று முறையில் பேசினார்.

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கூடலூர் போன்ற பிரதேசங்களின் நிலைமை கனம் நிதி அமைச்சருடைய பிரசங்கத்திலிருந்து தெளிவாகி விட்டது. எல்லைக் கமிஷன் என்று ஏற்படவேண்டுமானால், அது சின்னஞ் சிறு பிரதேசங்களைப்பற்றிய அபிப்பிராய பேதத்தை தீர்த்துவைப்பதற்காக வேண்டுமானால் ஏற்படுமே தவிர, தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகளுக்கு அல்ல என்ற முறையில் அமைச்சரவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார். இன்றைக்கு ராஜ்யச் சீரமைப்பு மசோதா இந்தச் சபையில் நிறைவேற்றப்பட்டு, அதற்குமேல் பார்லிமெண்டில் கூட நிறைவேற்றப்பட்டு விட்டாலும், சரியான கோட்பாட்டின் அடிப்படையில், நியாயமான அடிப்படையில், ஜனநாயக அடிப்படையில் எல்லைகள் வகுக்கப்படாவிட்டால், எந்தெந்த பிரதேசங்கள் எந்தெந்த ராஜ்யங்களோடு சேர்க்கப்படவேண்டுமோ, அதன்படி சேர்க்கப்படாவிட்டால், இரண்டு ராஜ்யங்களுக்கும் மத்தியில், இடையூறாகவும், முன்னேற்றத்திற்குக் குந்தகமாகவும், வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவும் இருக்குமென்பதை ஒரு காலத்தில் இல்லாவிட்டாலும், இன்னொரு காலத்திலாவது மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் உணரத்தான் போகிறது.

பொருளாதாரப் பிரச்னை வருகிறது. ஆனால், அதுவேறு விஷயம். இந்தியா தேசம் என்ற ஒரு தேசத்தில் இருக்கிறோம் என்று உணர்வு இருக்கிறவரை பரஸ்பரம் உதவி செய்துகொள்ளவும் ஒரு ராஜ்யத்தில் இருக்கக்கூடிய தண்ணீரை இன்னொரு ராஜ்யத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். இன்றைய தினம் தேசியத்தின் பேரால் இருக்கக்கூடிய காங்கிரசில் இருக்கிறவர்களுக்கு அந்த மனப்பான்மை இல்லையென்றால், அது கேவலமானது, அது வருந்தத்தக்கது. மொழிவழி அடிப்படையை வைத்துக்கொண்டு, தொடர்ச்சியை வைத்துக்கொண்டு, கிராமத்தை " யூனிட் " ஆக வைத்துக்கொண்டு எல்லையை வகுப்பதன் மூலமாக இந்த ராஜ்யத்தின் ஒற்றுமையும், தேசத்தின் ஒற்றுமையும்



நிர்வகிக்கப்படும் என்று திட்டமாகக் கூறி, கனம் திரு. ஜீவானந்தம் அவர்கள் பல திருத்தங்களைப்பற்றி கூறியதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, எனக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில் முடிக்க வேண்டியதைக் கருதி, என்னுடைய சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

**Sri A. RATNAM** : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய 4-32 p.m.
விவாதத்தில் இருக்கும்படியான பிரச்னையானது ஒரு சிறிய பிரச்னை அல்ல. நாம் தமிழகத்திலே இருக்கிறோம். ஆனால், நம்மிடத்திலிருந்து பிரிந்து போகின்ற மலையாளிகளும், கன்னடியர்களும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களது பிரதிபலிப்பை இந்தச் சபையில் கூறியிருக்கிறார்கள். அதே நேரத்தில் தமிழர்களுடைய வாக்குகளைப் பெற்று, தமிழர்கள் பிரதிநிதியாக இங்கு வந்திருக்கிற காங்கிரஸ் தரப்பிலுள்ள தோழர்கள் தங்களுடைய உள்ளக் கிடக்கை எடுத்துச் சொல்வதற்கு இல்லாமல் கிடக்கிறார்கள். அது நேருவினுடைய ஆக்ஞையாகவும் அல்லது நம்முடைய சர்க்கார் அவர்களுக்கு விதித்திருக்கிற ஒரு கட்டளையாகவும் இருக்கலாம். இது உண்மையிலேயே வருந்தத்தக்க விஷயமாகும், என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. எந்த ஒரு சிறிய மசோதாவை கொண்டுவந்தாலும் இதனை நம்முடைய கெஜட்டில் பிரசுரித்து பொதுமக்களுக்கு உணர்த்தி, அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை நம்முடைய சர்க்கார் இதுகாறும் அறிந்து வந்திருக்கிறது.

ஆனால் இந்த ராஜ்ய புனரமைப்பு மசோதாவானது திடீரென்று சபையில் புகுத்தப்பட்டிருக்கிறது. தட்சிணப் பிரதேசம் பற்றி பிரச்னை நாட்டு மக்களிடையே அதிகமான கிளர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. புதிதாக வரப்போகின்ற ராஜ்ய சீர் அமைப்புத் திட்டமானது எப்படி இருக்கும் என்பது பற்றிக் கூட அறிந்துகொண்டு, பொதுமக்கள் அதைப்பற்றி அபிப்பிராயம் எதுவும் கூறுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல், உடனடியாக இந்தச் சபையில் விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்படவேண்டுமென்று அவசரத்தோடு வந்திருக்கிறது.

அப்போது ஆங்கிலேயர்கள் காலத்தில், தமிழ் நாட்டையும், தெலுங்கு நாட்டையும், கன்னட நாட்டையும், மலையாள நாட்டையும் ஒன்றாக இணைத்து வைத்து ஆட்சி புரிந்துவந்த ஆங்கிலேயர் காலத்தில் இந்த ராஜ்யத்திற்கு சென்னை ராஜ்யம் என்று பெயர் வைக்கப்பட்டது என்றால் அந்தப் பெயரே இப்பொழுதும் நீடிக்க வேண்டும், இதனை " மதராஸ் என்றே அழைக்க வேண்டும், அது சரித்திரப் பிரசித்தி பெற்ற பெயர் " என்றெல்லாம் சொல்லப்படுகிறது. பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் வேண்டாமென தமிழ் மொழியைப் புகுத்துகிறோம். வடக்கே ஆங்கிலம் வேண்டாமென இந்தி மொழியை புகுத்துகிறார்கள். அப்படியிருக்கும்போது இங்கே மாத்திரம் ஆங்கிலேயர்கள் வைத்த பெயர் நீடித்து இருக்க வேண்டுமா என யோசிக்க வேண்டும். ஆந்திரர்கள் பிரிந்து போய் விட்டார்கள். மலையாளிகளும், கன்னடர்களும் பிரிந்து போகப்போகிறார்கள். எஞ்சி இருக்கப் போவது தமிழ் நாடு மாத்திரம் தான். ஆகவே மதராஸ் ராஜ்யம், சென்னை ராஜ்யம் என்று இதனை அழைப்பதற்குப் பதிலாக " தமிழ் நாடு " என்று அழைத்தால் என்ன என்று கேட்கிறோம். அந்த மாதிரியாக எடுத்துச் சொல்ல இன்றைக்கு காங்கிரஸ்காரர்களுக்கு உரிமை கிடையாது. இருந்தாலும் கூட எதிர்க்கட்சியில் இருக்கின்ற நாங்கள் எப்படியாவது, எந்தக் காலத்திலாவது இதனைத் தமிழ்நாடு என்றே அழைக்கும்படியாக பெயரை மாற்றி வைப்போம் என்கின்ற உறுதிமொழியை நான் கொடுக்கிறேன்.

அடுத்தப்படியாக ஜோனல் கவுன்சில் ஏற்படுத்தப்படுமென்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு மிக அதிகமான பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தக் கவுன்சிலில் ராஜ்ய முதன் மந்திரிகள், இதர மந்திரிகள், செக்ரடரிகள் முதலியவர்கள் இருப்பார்களாம். இவர்கள் மத்திய சர்க்காரின் கருத்து எதுவோ, ஆணை எதுவோ அதற்கு உட்பட்டு நடப்பார்களே தவிர உண்மையில் மக்களின் உள்ளம் கிடக்கை எடுத்துச்சொல்ல மாட்டார்கள்,

இராமயண காவியத்திலும்கூட—அதில் சிறு சிறு பொய்க் கதைகள் திணிக்கப்பட்டிருந்தாலுங்கூட—அதிலுள்ள சிறப்பைப் பார்க்கும்போது அது மிக மிக பாராட்டத் தகுந்தது தான். " இந்தியா " என்னும் பெயர் எப்படி உண்டாயிற்று என்று பார்த்தால் **India is the land of the Indus** என்று சரித்திரத்தில் படித்திருக்கிறோம். சிந்துநதி தீரத்தில் வசித்தவர்கள் இந்தியர் என்று அழைக்கப்படுவதைப் பார்த்து, இந்தியா என்ற பெயரை இந்த தேசத்திற்கு வைத்து விட்டார்கள். அந்தப் பெயர் இன்னும் வழங்கிவருகிறது. இந்தியா தேசத்தை பாரத தேசம் என்றும் அழைக்கின்றோம். இந்தியா தேசம் முழுவதையும் பாரதத் தாயாக நாம் பாவிக்கின்றோம். அதே முறையில் தமிழ் நாட்டைத் தமிழ்த் தாய் என்று நாம் போற்றுகின்றோம். தமிழ் மொழி ஆராய்ச்சிக்கு (**research**) நாம் ஏராளமான பணத்தை அரசாங்கத்தின் மூலமாகச் செலவிடுகிறோம். அப்படிப் பட்ட உயரிய இலக்கியங்களையும், புகழையும் கொண்ட தமிழ் மொழி பேசுபவர்களைக்கொண்ட நாட்டுக்கு ஏன் தமிழ் நாடு என்று பெயர் வைக்கக்கூடாது என்று நான் கேட்கின்றேன்.

**(Mr. Speaker in the Chair.)**

இயல், இசை, நாடகம் என்று மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ் மொழி. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற துறையில் மிகச் சிறந்த நூல்கள் தமிழில் இருக்கின்றன. ஆகவே, தமிழ் வேறு எந்த மொழிக்கும் பிற்போக்கானது அல்ல. முற்போக்காக இருக்கிறது.

சிற்பத் துறையை எடுத்துக்கொள்ளுங்கள். தமிழ் நாட்டிலுள்ள சிற்பங்களைக்கூர்ந்து பாருங்கள். வானளாவும் கோபுரங்களிலும், தூண்களிலும் கற்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களைக் கண்டு உலகமே போற்றுகின்றது. உலகத்திலேயே எங்கும் இல்லாத அளவிலே சிற்பக் கலையில் நம் தமிழ் நாடு சிறந்திருக்கிறது. அப்படிப்பட்ட தமிழ்நாட்டுக்கு பெருமை கொடுங்கள் என்றுதான் நான் கேட்கிறேன்.

" மதராஸ் " என்பது டச்சுக்காரர்களுடைய பெயரை ஒட்டியிருக்கிறது. " சென்னை " என்பது குறுநில மன்னனுடைய பெயரை ஒட்டியிருக்கிறது. மனிதன் ஒருவனுடைய பெயருக்கு முக்கியத்துவம் கொடுத்து ராஜ்யத்திற்குப் பெயர் வைப்பதா ? அல்லது தமிழ் நாடு பூராவும் உள்ள தமிழர்களாகிய அந்த இனத்தின் பெயருக்கு முக்கியத்துவம் கொடுப்பதா என்பது தான் கேள்வி. நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும், தமிழர்களுக்கும், நாம் வந்த பரம்பரைக்கும் மதிப்பு கொடுங்கள் என்று தான் நாங்கள் கேட்கின்றோம்.

வட நாட்டுக்கு நான் போய்ப் பழக்கம் இல்லாவிட்டாலும், பிறர் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். அதாவது, " மதராஸி " யைப் பற்றி வடநாட்டில் என்ன நினைப்பதாகச் சொல்கிறார்கள் என்றால் " ஏமாற்

[Sri N. Rathina Gounder] [29th March 1956

றக்கூடியவன் " என்று. "மதராஸி" என்ற பதத்திற்கு "ஏமாற்றக் கூடியவர் " என்று வட நாட்டார் பொருள் கொள்கிறார்கள். ஆனால், " தமிழன் " என்று சொன்னால் வட நாட்டிலே நமக்கு மரியாதை இருக்குமென்று நம்புகிறேன். அந்த முறையில் பார்த்தாலும் நம் ராஜ்யத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைப்பது பொருத்தமாக இருக்கும்.

சேரன்-செங்குட்டுவன்கூட வட நாடு சென்று பல இடங்களை ஜெயித்து வந்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. சேர, சோழ, பாண்டிய நாடுகள் தமிழ் நாட்டில் இருந்துவந்தன. அந்த மூன்று நாடுகளை முன் மூவேந்தர்கள் சீரும் சிறப்புடன் ஆண்டு வந்தார்கள். (Interruption.) நான் வசிக்கக் கூடியது கரூர். சேர நாட்டின் தலைநகராக விளங்கி வந்த திருவஞ்சிக்களம் என்பது தான் கரூர் என்று சொல்கிறார்கள். திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த கரூர் நகரில் வஞ்சியம்மன்கோவில் என்ற ஆலயம் இருக்கிறது. பதினெண் சித்தர்களில் ஒருவரான கருவூரார் சமாதியும் உள்ளது. பசுபதீஸ்வரர் என்ற கோவிலும் அங்கு உள்ளது. அது மாத்திரமல்ல. கரூர் புராணத்திலே, கரூர், சேர நாட்டரசர்களின் தலைநகராக இருந்ததாகச் சொல்லியிருக்கிறது.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** கனம் அங்கத்தினரவர்கள் சரித்திரம் வேண்டுமானால் பேசட்டும். கரூர் என்னும் ஊர் கேரள ராஜ்யத்துடன் சேர்க்கப்படவேண்டுமென்ற argument-ஐக் கொண்டுவரவேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

***SRI N. RATHINA GOUNDER:** தமிழ் நாட்டுக் குறுநில மன்னர்கள் வட நாடு சென்று படையெடுத்தார்கள் என்று புதை பொருள் ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது. உதாரணமாக மொஹஞ்சதாரோ ஹாரப்பா முதலிய இடங்களில் காணப்பட்ட புதைபொருள்களிலிருந்து தமிழர்கள் நல்ல மாதிரியாக ஆண்டிருக்கிறார்கள், என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. ஆகவே, இந்த ராஜ்யம் தமிழ் நாடு என்று அழைக்கப்படுவதற்கு எல்லா வகைகளிலும் தகுதி பெற்றிருக்கிறது.

பீர்மேடு, தேவிகுளம் போன்ற தமிழ்ப் பகுதிகள் தமிழ் நாட்டோடு சேர்க்கப்படவேண்டும். அப்படிச் சேர்க்கும்போது மற்ற யாருடைய அபிப்பிராயங்களையும் கேட்கவேண்டாம். அங்குள்ள மக்களுடைய அபிப்பிராயத்தை வோட்டு எடுப்பு முறை மூலம் கேட்டு, யாருக்கு என்னென்ன இஷ்டமோ அதன்படி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றேன். பயப்படவேண்டிய அவசியம் இல்லை. " சோழவளநாடு சோறுடைத்து " என்று பாடியிருக்கிறார்கள். அப்படி நல்ல நிலைமையில் நாம் இருக்கிறோம். ஆகையால் தமிழ்ப் பண்போடு, அமைச்சரவர்கள் தைரியமாக இந்தக் காரியங்களைச் செய்யவேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

12 noon. **SRI M. PALANIYANDI:** கனம் தலைவர் அவர்களே, மாநில புனரமைப்பு யாதாஸ்தைப் படித்த பிறகு மத்திய அரசு கொடுத்த சட்டத்தை இங்கு நாம் நிறைவேற்ற முன் வந்திருக்கிறோம். இதற்கு முன்பு பேசிய பல அங்கத்தினர்கள் இந்த நாட்டை " தமிழ் நாடு " என்று பெயரிட வேண்டும் என்று ஊர்ஜிதமாக பேசியிருக்கிறார்கள். அதை கனம் நிதி மந்திரி அவர்கள் மறுக்க முடியாது. அது உண்மை என்பதை அவரே ஒப்புக் கொள்ள வேண்டும். ஏதோ காரணம் சொல்லி வருகிறார்கள், அப்படி மாற்றக் கூடாது என்பதற்கு. அந்தக் காலத்தில் பாரதியார் ஒன்றைப்பாடியிருக்கிறார் :

> " செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
> தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
> தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
> சக்தி பிறக்குது மூச்சினிலே—எங்கள் "

என்று அன்றைக்கே பாரதியார் பாடியிருக்கிறார். நாடு விடுதலை அடையும் அப்பொழுது நாடு தன்னுடைய தாய் மொழியாகிய தமிழில் இயங்க வேண்டும் என்று பாடியிருக்கிறார். அவருடைய ஆசை இன்று நிறை



29th March 1956] [Sri M. Palaniyandi]

வேறப் போகிறது. நாடு விடுதலை அடைய வேண்டுமானால் நம்முடைய மொழியிலேயே இயங்க வேண்டும். ஒரே மொழி ஒன்று சேர்ந்து நிர்வாகம் செய்ய வேண்டும். நம்முடைய மொழியின் அடிப்படையில் நாட்டைப் பிரிக்க வேண்டும். மொழிவழி மாகாணம் வேண்டும் என்று அன்றைக்கே காங்கிரஸ் கமிட்டி பல திட்டங்கள் போட்டு தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கின்றன. நாம் காந்தியின் அடிப்படையில் வந்திருக்கிறோம். அவருடைய எண்ணமும் நாடு மொழிவழியில் இயங்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வந்தார். அதனால் நாட்டை பிரிக்கும் போது எங்கெங்கு ஒரே மொழியைப் பேசிக் கொண்டு வருகிறார்களோ அவைகளையெல்லாம் ஒன்று சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அந்த அடிப்படையில் நாட்டைப் பிரிக்க வேண்டும் என்றாலும்கூட இன்று எஸ்.ஆர்.சி. கமிட்டி ரிப்போர்ட்டைப் பார்த்தால் நாம் அதைக் கண்டு கொஞ்சம் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. இருந்தாலும்கூட நேற்று கனம் விநாயகம் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்

> " நீலத் திரைக் கட லோரத்திலே—நின்று
> நித்தந் தவஞ் செய் குமரி யெல்லை—வட
> மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
> மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு."

என்ற பாட்டை அவர் குறிப்பிட்டார். தமிழ் நாட்டின் புகழ் மண்டிக் கிடக்குது. இந்த நிலையில் இருக்கும்போது தமிழ் பேசக்கூடிய பகுதிகளை தமிழ் நாட்டுடன் சேர்க்காமல் இருப்பது மிகவும் வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. எஸ்.ஆர்.சி. ரிப்போர்ட்டைப் பற்றி விவாதிக்கும்போது கனம் சி. சுப்ரமணியம் ரொம்பவும் அழகாக எடுத்துக் கூறினார். நம்முடைய விஷயங்களை எடுத்து நன்றாக வாதாடினார். ஆனால் ரிப்போர்ட் வந்த பிறகு பார்த்தால் நம்மிடமிருந்து தேவிகுளம், பீர்மேடு முதலியவைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் நமக்கு வந்தாக வேண்டும். அதைப் போலவே வடக்கெல்லையைப் பற்றி பேசும்போதும் ஒரு கமிஷன் வரும் என்று சொன்னார். அதற்கு வேண்டிய புள்ளி விவரங்களையும் தயாரித்துக் கொண்டு வருவதாகச் சொன்னார். ஆனால் அந்தக் கமிஷன் இன்னும் வரவில்லை. நாம் காந்திஜி வழியைப் பின்பற்றுபவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறோம். அவர் என்ன சொன்னார் ? அதை அனுசரித்து நடக்க வேண்டாமா ? அதை கனம் சுப்ரமண்யம் அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார். தமிழ் நாட்டின் லட்சக் கணக்கான மக்கள் அங்கே போகிறார்களே, அவர்களுடைய பிரச்னை என்ன, அவர்களுடைய கஷ்டம் எவ்வளவு என்பதையும் அவர் நன்கு உணர்ந்திருக்கிறார். ஆனால் என்ன சொல்லுகிறார் என்பதை கவனிக்க வேண்டும். அங்கு நிர்வாக சௌகர்யம் ஏற்பட வேண்டும், அந்த முறையில் அவைகளை அமைக்க வேண்டியதாக இருக்கிறது என்று சொல்லுகிறார். இருந்த போதிலும் அவைகளை தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ் கட்சியின் அரசாங்கத் தீர்மானமாக இல்லா விட்டாலும் காங்கிரஸ் கட்சியின் தீர்மானம் ஒன்று நிறை வேற்றி மேலிடத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு அவர்கள் வேறு என்னமோ காரணங்கள் சொல்லுகிறார்கள். தேவிகுளம், பீர்மேடு தமிழ் நாட்டுடன் சேர்ப்பதற்கு அவர்கள் முன் வரவில்லை. அதற்குக் காரணம் என்ன சொல்லுகிறார்கள் என்றால் ஏதோ ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று. அந்த ஒப்பந்தம் என்ன என்பது தெரியவில்லை. அந்த ஒப்பந்தம் பொருளாதார சம்பந்தப்பட்ட ஒப்பந்தமா ? பொருளாதார சௌகர்யத்திற்காக என்று சொன்னால் நாம் மட்டும் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்திருக்கிறோமா ? நாம்தான் முன்னேற்றமடையவில்லையே. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் தான் இப்பொழுது பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு பொருள் தேடும் வகையில் போயிருக்கிறார்களே. அப்படி இருக்கும்போது நாம் என்ன பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்திருக்கிறோமா ? அதனால் நாம் என்ன கவனிக்க வேண்டும் என்றால் தமிழர்கள் அங்கு அதிகமாக இருக்கிறார்கள், அந்த

[Sri M. Palaniyandi] [29th March 1956

பிரதேசத்தை தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டும். பீர்மேடு, தேவிகுளம் முதலியவைகளை தமிழ் நாட்டுடன் தான் சேர்க்க வேண்டும். என்ன ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை சொல்லித்தான் ஆகவேண்டும்.

அடுத்தபடியாக வடக்கெல்லைப் பகுதியைப் பற்றி கூட இவ்வளவு நாட்களாக சொல்லிக் கொண்டு வருகிறோம். அதற்கு என்று ஒரு கமிட்டியினரை நியமிக்கப் போவதாகவும் சொன்னார்கள். பேச்சு வார்த்தை நடத்துகிறோம். வற்புறுத்தி வருகிறோம் என்றும் சொன்னார்கள். அதைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. தமிழ் நாட்டின் எண்ணத்தை கருத்தில் கொண்டு அதை நிறைவேற்றி வைக்க வேண்டும். அவர்கள் காந்திஜியின் அடிச்சுவட்டில் வந்தவர்கள். அதற்கு வேண்டிய பொறுப்பு அவர்களிடத்தில் இருக்கிறது. பம்பாயில் நடத்தியது போல் இங்கும் நடத்த வேண்டியதில்லை. இங்கு கூட பொது மக்கள் போராட்டம் நடத்தி வெற்றி கண்டிருக்கிறார்கள். அதனால் தேவிகுளம், பீர்மேட்டை தமிழ் நாட்டுடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் பல விஷயங்களில் நாம் வெற்றி அடைந்திருக்கிறோம். வெற்றியையும் காண்பித்திருக்கிறோம். தேர்தல் நடத்திய காலத்தில் அங்கு மெஜாரிட்டியானவர்கள் அவைகள் தமிழ் நாட்டுடன் சேர வேண்டும் என்ற அடிப்படையில் வெற்றி அடைந்திருக்கிறார்கள். அதனால் அவைகள் தமிழ் நாட்டுடன் சேரவேண்டும் என்று பொது மக்களே தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

12-05 p.m. அதுமட்டுமல்ல. செங்கோட்டையில் நமக்குக் கொஞ்சம் காட்டு வளம் இருக்க வேண்டுமென்று கேட்டோம். கொள்ளே காலம் காட்டுப் பகுதியைக் கேட்டோம். நமக்குக் காட்டுச் செல்வம் வேண்டுமென்று வலியுறுத்தியும்கூட இவை ஏன் கொடுக்க மறுக்கப்பட்டது என்று தெரியவில்லை. "பீர்மேடு, தேவிகுளம் இறந்து போன விஷயம். அதைப்பற்றிய பிரச்சினையை எழுப்பக் கூடாது, அதைப் பற்றி வோட்டுப் போடக் கூடாது," என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது எப்படி இறந்து போன விஷயமாகும்? இறந்து போனவர்களையே விடமாட்டேன் என்கிறோம். போஸ்ட்மார்டம் செய்து பார்க்கிறோம். அப்படி இருக்க இந்த விஷயம் செத்துப் போனது, இதைப்பற்றி பேசக் கூடாது என்று எதற்காகச் சொல்ல வேண்டும்? இது எப்போது செத்தது? யாரால் சாகடிக்கப்பட்டது என்பதைக் கனம் மந்திரி அவர்கள் சொல்ல வேண்டும். ராஜ்யப் புனர் அமைப்புக் கமிஷன் அங்கத்தினர்கள் இந்த யாதாஸ்தை சமர்ப்பிக்க எத்தனையோ பாடுகள் பட்டிருக்கிறார்கள் என்பதற்கு நம்முடைய பாராட்டுதலைத் தெரிவிக்கிறோம். அதே சமயத்தில் தமிழர்களுக்கு அநீதி வழங்கப்பட்டிருந்தால், அந்த அநீதியை எடுத்துச் சொல்ல தமிழர்களுக்கு ஏன் உரிமை கிடையாது என்று கேட்கிறேன். இப்பிரச்னை வலியுறுத்தப்பட வேண்டும். திரும்பவும் தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழ்நாட்டோடு வர வற்புறுத்தப்பட வேண்டும். நிர்வாகப் பிரச்சினை என்பதைச் சொல்லி நிரந்தரமாக இந்தத் தமிழ் பகுதிகள் பிற ராஜ்யத்தோடு இணைய விடக்கூடாது. இது அங்கே வாழ்கின்ற தமிழர்களுடைய அடிப்படையான பிரச்சினை. கிராமம் கிராமமாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. பனம்பள்ளி திரு. கோவிந்த மேனன் தமிழ் பகுதியை விடமாட்டேன் என்று சொல்கிறார். ஆந்திரா திரு. கோபால் ரெட்டி திருத்தணிப் பகுதியை விடமாட்டேன் என்று சொல்கிறார். தமிழர்களாகிய நாம் பிறர்களுடைய நாட்டைப் பிடித்து ஆளவேண்டுமென்று சொல்லவில்லை. தமிழ்ப் பகுதிகள் தமிழ் ராஜ்யத்தோடு இணைய வேண்டுமென்று தான் கேட்கிறோம். "தமிழன் என்றொரு இனம் உண்டு : தனியே அவனுக்கோர் குணமுண்டு", என்று பாடிக் காட்டுகிற நாம், நமக்கே உரிய பண்பாட்டோடு, நமக்கே உரிய குணத்தோடு இந்தப் பிரச்சினையை அமைதியாகத் தான் வலியுறுத்தி வருகிறோம். இந்தப் பிரச்சினையை அதிகாரம் பெற்றுள்ள நிதி அமைச்சர் அவர்கள் வற்புறுத்தினாரா? எப்படி வற்புறுத்தினார்? எந்த வகையில் வாதாடினார்? முடிவு எப்படி ஏற்பட்டது? ஏன் அவை செத்துப் போன விஷயங்கள் என்று இன்றைக்கு அவர் பேசுகின்றார் என்பதை அவர் மக்களுக்கு விளக்க வேண்டும். இன்றைக்கு ஆந்திரா பிரிந்து போய்விட்டது. மலையாளிகளும், கன்னடர்களும் பிரிந்து போன பிற்பாடு எஞ்சி இருக்கக் கூடிய தமிழர்கள் தாங்கள்



29th March 1956] [M. Palaniyandi]

வாழும் பகுதியை ஏன் தமிழ் நாடு என்று அழைக்கக் கூடாது? தமிழன் என்று சொல்கின்றவர்கள் தமிழுக்கு மரியாதை செலுத்துவது முதல் கடமை அல்லவா? இதில் அரசியல் பிரச்சினை இல்லை; கட்சிப் பிரச்சினை இல்லை. இது இனப்பிரச்சினை. தமிழர்கள் என்று சொல்லிக் கொள்கின்ற எல்லோருடைய பிரச்சினையும் ஆகும். கல்லூரிகளில் தமிழையே போதனை மொழியாக்க வேண்டுமென்று கல்வி அமைச்சர் முழங்குகிறார். அதனை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் இந்த ராஜ்யத்தை தமிழ் ராஜ்யம் என்று அழைக்க ஏன் மறுக்க வேண்டுமென்று கேட்கிறேன்?

ஆகவே நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது இது தான். இந்த ராஜ்யத்தை தமிழ் ராஜ்யம் என்று பெயரை வைக்கவும், இந்த ராஜ்யத்தோடு பீர்மேடு, தேவிகுளம் போன்ற பகுதிகளும், சித்தூர், திருத்தணி பகுதிகளும் சேரும்படியாகவும் தக்க நடவடிக்கை உடனே எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு இந்த ராஜ்யத்திலுள்ள மக்களின் ஒத்துழைப்பு இருக்கின்றது. திருவாங்கூர் தமிழ் பகுதிகளில் வாழக் கூடிய மக்களின் ஒத்துழைப்பு நிறைய இருக்கின்றது. உடனடியாக இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

மேலும் சென்னை அசெம்பளியின் ஸ்தானம் அதிகப்பட வேண்டும். சிறிய சிறிய யூனிட்டுகளாக இருந்தால் தான் அந்த அந்தப் பிரதேசத்திய மக்களுக்கு அதிகமான நன்மையைச் செய்வதற்கு வழி ஏற்படும். பிற ராஜ்யங்களுக்கும் ராஜ்ய அசெம்பளிக்கும், லோக்சபாவுக்குமுள்ள அங்கத்தினர்கள் விகிதாச்சாரம் 7 : 1 என்பது வரையிலும் இருக்க நமது ராஜ்யத்திற்கு மட்டும் 5 : 1 என்று இருப்பது சரியல்ல. இதையும் அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையை சர்க்கார் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. R. NALLASIVAM : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது ராஜ்யத்தைத் துண்டும் துக்காணியுமாகப் பிரிக்க வேண்டுமென்று மற்றவர்கள் சொல்கின்றது போலச் சொன்னார். ஆனால் இந்த எண்ணத்தைக் காங்கிரஸ் தான் உண்டு பண்ணியது என்று நான் குற்றம் சாட்டுவேன். பாஷாவாரியாக ராஜ்யத்தை அமைக்க வேண்டுமென்ற திட்டத்தைக் காங்கிரஸ் தான் முதலில் மக்களிடையே வைத்தது. மேலும் ஆந்திராவில் கிளர்ச்சி நடந்தவுடன் உடனே பாஷை அடிப்படையில் ஆந்திராவையும் பிரித்தது காங்கிரஸ் தான். அந்தக் காரியங்களின் அடிப்படையாகத் தான் இந்த மசோதா இன்றைக்கு வந்திருக்கிறது. ஆகவே பாஷாவாரி அடிப்படையில் ராஜ்யங்கள் பிரிக்கப்படும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேரவேண்டுமென்று சொல்வதில் தவறு இல்லை.

ஆந்திராவைப் பொருத்த வரையில் ஹைதராபாத் பகுதிகள் எல்லாம் சேர்க்- 12-10
கப்பட்டு, ஆந்திரா என்ற பெயருடன், ஒரு சிறு பெயரையும் சேர்த்து அந்த p.m.
ராஜ்ஜியம் அழைக்கப்படுகிறது. அதே அடிப்படை வைத்துக்கொண்டு உருவாகி இருக்கும், அதாவது தமிழ் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய தமிழ் பகுதிகள் எல்லாம் நம் ராஜ்ஜியத்துடன் சேர்த்து, தமிழ் நாடு என்று நம் ராஜ்ஜியத்திற்கு பெயர் வைக்கா விட்டால், நம் நாட்டில் கிளர்ச்சி இருக்கத்தான் செய்யும். பம்பாயைப் பற்றி மகாராஷ்டிரர்கள் கிளர்ச்சி செய்யும்போது, பண்டித நேரு அவர்கள், இந்த ராஜ்ஜிய புனரமைப்பு தகராறுகளைத் தீர்ப்பதில் நான் தோற்று விட்டேன், தவறு செய்து விட்டேன் என்று ஒரு நண்பருக்கு கடிதம் எழுதினதாக சொல்லப்படுகிறது. இது விஷயம் பத்திரிகையில் வந்ததையும் நாம் பார்த்திருக்கிறோம்.

அடுத்தபடியாக Zonal Council, பிராந்திய கவுன்சில்கள் ஏற்படுத்தப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இக்கவுன்சில்களை ஏற்படுத்துவதின் மூலம் காங்கிரஸ், ஒரு சர்வாதிகார முறையில் இந்நாட்டை ஆள வேண்டுமென்று விரும்புகிறது என்று சந்தேகப்பட வேண்டியதாக இருக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்பாக தக்ஷிண பிரதேசம், பலமொழி

[K. R. Nallasivam] [29th March 1956

ராஜ்ஜியங்கள், இந்நாட்டை ஐந்து பலமொழி ராஜ்ஜியங்களாக பிரிக்க வேண்டுமென்று எல்லாம் பேசப்பட்டது. அவ்வித ராஜ்ஜியங்களை ஏற்படுத்தத்தான் இந்த **Zonal Council**-களை தற்போது புதிய முறையில் நுழைக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது. இக்கவுன்சில்கள் பின்னால் புதிய உருவமெடுக்குமென்றும் சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது. சிலர் நினைக்கலாம், இந்த **Zonal Council**-கள், மாகாணங்களில் நடைபெற வேண்டிய சில முக்கிய விஷயங்களுக்காக, இவைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று நினைக்கலாம். ஆனால் அப்படி நினைப்பதற்கில்லை. உண்மையில் ஏற்கெனவே பண்டித நேரு மற்றும் நமது நிதி அமைச்சர் முதலிய தலைவர்கள் கொஞ்ச நாட்களுக்கு முன்பு தக்ஷிண பிரதேசம் பலமொழி மாகாண அமைப்புப் பற்றி பேசும்போது மக்கள் எதிர்ப்பு ஏற்பட்டது; அதை சமாளிக்கவும், தங்களுடைய பலமொழி மாகாணங்களை ஏற்படுத்தும் கொள்கையை திணிப்பதற்கான முயற்சியே, இந்த **Zonal Council** அமைப்பதின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டுமென்று சந்தேகப்பட வேண்டியதாக இருக்கிறது. இந்த சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் சர்க்கார் காரியங்களைச் செய்ய வேண்டும்.

தமிழ், தமிழ்நாடு என்று எல்லோரும் சொல்லுகிறார்கள், நானும் அதைத் தான் சொல்ல விரும்புகிறேன். நம் ராஜ்ஜியத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தால், நமக்கு எந்த விதமான சங்கடமோ குறைவோ வந்துவிடாது. இப்படி நாம் சொல்லும்போது, நிதி அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? எதிர்கட்சிக்காரர்கள் ஏதாவது இப்படிப்பட்ட சின்ன விஷயங்களை பிடித்துக்கொண்டு, பிரசாரம் செய்து வாழ விரும்புகிறார்கள், தேர்தலில் இந்த பிரச்சினைகளை எழுப்பி ஜெயிக்கப் பார்க்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். நம் நாட்டை தமிழ் நாடு என்று அழைக்க வேண்டுமென்ற பிரச்சினை, தேவிகுளம், பீர்மேடு நம் ராஜ்ஜியத்துடன் சேர வேண்டுமென்ற பிரச்சினை, சரியான பிரச்சினைகளாக இருப்பதால், எதிர் கட்சிக்காரர்கள், இந்த பிரச்சினைகளை மக்கள் முன் நிறுத்தி ஏன் தேர்தலில் கலந்து கொள்ளக்கூடாதென்று கேட்கிறேன். இப்பிரச்சினைகளை நாங்கள் பயன் படுத்திக்கொள்வதில் என்ன தப்பு இருக்க முடியுமென்று கேட்க ஆசைப்படுகிறேன். இதை எல்லாம் சர்க்கார் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்காவிட்டால் அதற்கான பலனை சர்க்கார் அனுபவிக்க வேண்டிவரும் என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

12-14 p.m. ***Sri K. T. RAJU**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ராஜ்ஜிய புனரமைப்பு மசோதாவில், இந்தச் சபையின் கருத்து மாறுபட்டிற்கு, அடிப்படையாக இருப்பது ஒரே தகராறு தான். இதர விஷயங்களில் சிறு சிறு மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், இந்த எல்லையை நிர்ணயப்பதிலும், ராஜ்ஜிய எல்லை தகராறு சம்பந்தமாகத் தான், அதிகமான கருத்துக்களை நம் அங்கத்தினர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைப் பிரேரேபித்து பேசும்போது இந்த எல்லை சம்பந்தமாக ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். இந்த மசோதாவின் முன்னுரையிலுள்ளதை எடுத்துக் காட்டிப் பேசினார்கள். அது என்னவென்றால், அவசியப்பட்டால் எல்லைக் கமிஷன் ஏற்படுத்துவார்கள். அந்த எல்லைக் கமிஷன் நிர்வாக வசதிக்காக ஏற்படும் சிறு சிறு எல்லைத் தகாராறுகளைத் தான் கவனித்துத் தீர்த்துவைக்கும்; ஆனால் கனம் அங்கத்தினர்கள் நினைப்பதைப்போல் தேவிகுளம், பீர்மேடு, கூடலூர், ஆந்திர-சென்னை எல்லைத் தகராறு, இப்பேர்ப்பட்ட விஷயங்களை அந்த எல்லைக் கமிஷன் தீர்த்து வைக்காது, அப்படி தீர்த்து வைக்குமென்று நினைத்தால் ஏமாற வேண்டியதாக இருக்குமென்று திட்டவட்டமாகச் சொன்னார்கள்.

12-15 p.m. **The Hon. Sri C. SUBRAMANIAM**: ஆந்திரா பிரச்னை வேறு. இப்போது இந்த மசோதாவில் எல்லைக் கமிஷன் பிரச்னையை எதற்குக் கொண்டு வரவேண்டும்? அது மத்ய சர்க்கார் விஷயம். அதனால், ஆந்திரா விஷயத்தை இங்கே கொண்டு வந்து புகுத்த வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.



29th March 1956]

***Sri K. T. RAJU**: ஆகவே இப்போது இந்த எல்லைப் பிரச்னையை மக்கள் கவனிக்கவேண்டிய விஷயம் என்று இவர்கள் கூறுகிற நிலையில், இன்றைய தினம், மக்களுக்கு முன்னாலும், எதிர்க்கட்சிக்கு முன்னாலும் இருப்பது என்னவென்றால், நாட்டிலே வறுமையும், பஞ்சமும், மேலும் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தீட்டி இருக்கும் ஆக்க வேலையில் ஈடுபட வேண்டி இருப்பதை விட்டு, சாதாரண எல்லை விஷயத்தில் ஈடுபடுவது, நாட்டின் முன்னேற்றத்தையும், தொழில் வளர்ச்சித் திட்டங்களையும் தடைபடுத்துவது ஆகும். ஆகவேதான் இந்த விஷயத்தை நம் மக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்கிறோம். அவர்களுடைய சக்தியில் நமக்கு நம்பிக்கையுண்டு. நாமும் ஒத்துக்கொள்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், நாட்டின் முன்னேற்றத்திற்காக எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையில், முட்டுக்கட்டையாக இருக்க கூடாது இப்பிரச்னை. இப்போது நாம் இந்தப் பிரச்னையைத் தீர்க்காமல் போனால், அந்தப் பகுதி மலையாளிகள், தமிழ் நாட்டில் இருக்க, இங்குள்ள மக்கள் கேரளத்தில் இருக்க, உண்மையில், அது தகராறுக்கு இடமான காரணமாகப் போய் விடும். இப்படிப்பட்ட முட்டுக் கட்டையினால், மக்களுடைய சக்தியெல்லாம் குறைந்து விடும் என்று நாம் நினைக்கிறபோது, இந்த எல்லைப் பிரச்னையை ஏற்படுத்தி, எல்லைக் கமிஷனுக்குவிடுவதன் மூலம்தான் நாம் இப்படிப்பட்ட ஒற்றுமை மனப்பான்மைக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கான ஆக்க வேலைக்கும், மக்களை உபயோகிக்க முடியும். ஆகவே, எல்லைக் கமிஷன், இந்தத் தேசத்தைப் பிளவுகளாக ஏற்படுத்தக் கூடிய எல்லைக் கமிஷனாக இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று தான் இந்த மசோதாவைப் படித்து, அதற்குத் திருத்தங்களைக் கொடுத்து இருக்கிறோம். இந்த எல்லைக் கமிஷன் எப்படி இருக்க வேண்டும், அந்தந்த பகுதியில் இருக்கக்கூடிய எல்லைப் பிரச்னையை எப்படித் தீர்க்க வேண்டும் என்று நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம்.

2-வது பிரச்னை மண்டல கமிஷன் விஷயம் பற்றியது. மண்டல கமிஷன் ஏற்பட்டால், அது தட்சிண ராஜ்யமாகப் போகுமோ என்ற பயம் எனக்குக் கிடையாது. இதில், நாட்டு மக்கள் ஏற்கனவே, தட்சிண ராஜ்யத்திற்கு ஆதரவாக இல்லை என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கவலை இல்லை எனக்கு. இந்த நாட்டில் அந்த மண்டலக் கமிஷன் தட்சிண ராஜ்யமாக அமைய முடியாது. நாங்கள் அதே சமயம் மண்டலக் கமிஷனை வரவேற்கிறோம். தமிழ் நாட்டின் நிலைமை முன்னேற்றம் அடைவதற்காக இந்தப் பரம்பிகுளத் திட்டத்தை நடத்தி கோவை ஜில்லாவில் உள்ள வரண்ட பிரதேசத்திற்கு, அந்தத் தண்ணீரைக் கொண்டு வந்து நல்ல விதமான வழிகளில் அதை வளம் பண்ண வேண்டும். அதை வளப்படுத்த பரம்பிகுளத் திட்டம் நிறைவேற வேண்டும். மற்றபடி, அடுத்து இரு ராஜ்யங்களின் தகராறு, வறண்ட பாலாறு. அது பாலாறு ஆகவே இருக்க வேண்டுமானால், அதில் தண்ணீர் வரும்படிச் செய்ய வேண்டும். அதற்குத் தகராறாய் இருப்பது, மைசூர் ராஜ்யத்துக்கும் நமக்கும் இருக்கின்ற தகராறுகள். இப்படிப்பட்ட தகராறுகளைத் தீர்ப்பதற்காக, பொதுவாக தமிழ் நாட்டுக்கு, நம்முடைய காடுகள் மாதிரி வரண்ட பிரதேசங்களுக்குத் தண்ணீர் வசதி கொடுப்பதற்கு, நல்ல மாதிரியான வசதிகளை, கண்டிப்பாக இந்த மண்டலக் கமிஷன் மூலம்தான், பெறமுடியும். இந்த நாட்டின் மக்களுடைய முன்னேற்றத்திற்காக ஆட்சி செலுத்துகின்ற அத்தனை அங்கத்தினர்களும் மற்றும் இருக்கின்ற பலரும் இப்படிப்பட்ட விஷயங்களில் வீணாகப் பேசி நாட்டின் முன்னேற்றத்துக்கான பரம்பிகுளத் திட்டத்துக்கு முட்டுக்கட்டை ஆக இருக்க வேண்டாம் என்றும், பாலாறு திட்டம் விஷயத்திலும் முட்டுக் கட்டையாக இருக்க வேண்டாம் என்றும் சொல்லிக் கொள்கிறேன். நம்மிடத்திலும் கோரிக்கைகள் இருக்கலாம். பேசுவதற்குச் சாதகமான நிலையும் இருக்கலாம். அத்தோடு இந்த ராஜ்யத்தின் சட்ட திட்டங்களுக்கு மீறி, தனித்தனியாகச் சொல்லும் அளவுக்குப் போகாமல்—ஆக, இந்தக் கண்ணோட்டத்தோடு, மண்டலக் கமிஷன் ஆனது, உடனடியாக, இந்த 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், பாலாறு, பரம்பிகுளத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இந்தக் காரணத்துக்காக நான் அந்த மண்டலக் கமிஷனை வரவேற்கிறேன்.

[Sri K. T. Raju] [29th March 1956

12-20 p.m. ஆகையினுலேதான் கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையிலும், அந்த மண்டலக் கமிஷன் எப்படியிருக்கவேண்டுமென்று நாங்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிருேம். அமைச்சர்கள், சர்க்கார் அதிகாரிகள், யூனியன் மந்திரிகள் என்பது மட்டுமில்லாமல், இந்த சபையினுல் தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று M.L.A. களும் அந்தக் கமிஷனில் அங்கம் வகித்தால், மக்களுக்கு எந்த பயத்துக்கும் அவசியம் இருக்காது. உண்மையாகவே அந்தக் கமிஷன் ஒரு யோசனை கூறக்கூடிய ஸ்தாபனம்தான். இருப்பினும் பொது மக்களிடை அந்தக்கமிஷன் வேறே விதமாக மாறிவிடுமோ என்ற பயத்தைத் தவிர்க்க இந்தச் சபையின் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று அங்கத்தினர்கள் அங்கம் வகிப்பது நல்லதாக இருக்குமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறது கம்யூனிஸ்டு கட்சி.

மூன்ருவதாக இந்த ராஜ்யத்துக்குத் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்ற பிரச்னை. எனக்கும் கவி பாடத் தெரியும். கவிதை பாடி நான் இதை வற்புறுத்த விரும்பவில்லை. நாட்டு மக்களுடைய உணர்ச்சியை வைத்து வற்புறுத்துகிறேன். இது நாட்டின் பிரிவினைப் பிரச்னையோ பொருளாதாரப் பிரச்னையோ அல்ல. சென்னை ராஜ்யம் என்பது சென்னை அல்ல. 'பம்பாயிலிருந்து ஒருவன் டிக்கட் வாங்கினுல், Madras-க்குத்தான் ticket வாங்குகிருன். ஆனுல் இந்த ராஜ்யத்தைப் பெயரிட்டு அழைக்கிறநேரத்திலே, தமிழ்நாடு என்று அழைக்க வேண்டுமென்றுதான் குறிப்படுகிருேம். வருகிற அக்டோபர் மாதம் 1-ம் தேதிக்கு மேல், இது 'தமிழ்நாடு' என்று இருப்பது ஆனது, இந்த ராஜ்ய மக்களுக்கோ, அரசாங்கத்துக்கோ அல்லது காங்கிரஸ் கட்சிக்கோ விரோதம் ஆனது அல்ல. என்ன காரணத்துக்காக அந்த மாதிரி அழைக்கக் கூடாதென்று சொல்லுகிருர்களோ எனக்குப் புரியவில்லை. இதற்கு பதில் சொல்லுகிற நேரத்திலே, நிதியமைச்சர் இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்களைப் பொருத்தவரையிலும், மக்களைப் பொருத்தவரையிலும் என், காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும் அமைச்சர்களுக்கும் கூட தமிழ் நாடு என்று இருப்பதிலே ஆட்சேபனை இருக்க முடியாது. நாம் இந்த விஷயத்தை முடிவு செய்யும் நேரத்திலே ஏகோபித்த விதத்திலே 'தமிழ்நாடு' என்று இருக்கவேண்டுமென்று ஒரு ஏகோபித்த முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜீவானந்தம் எடுத்துக் காட்டியது போல, இந்த ராஜ்ய சட்டசபை அங்கத்தினர் எண்ணிக்கையைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டும். பல ராஜ்யங்களிலும் ஜனத்தொகைக்கு ஏற்ருற்போல் அங்கத்தினர்கள் இருப்பது போல, நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் ஜனத்தொகை கணக்குப்படி, 250 பேருக்குமேல் நம் சபையிலே இருக்க உரிமை உண்டு. நாம் இதைப் பின்னுல் பார்த்துக் கொள்ளலாமென்று விட்டு விடக்கூடாது. மசோதா சட்டமாகிற நேரத்திலே நம் கருத்தை எடுத்துச்சொல்லி—சிக்கல்கள் இருந்தாலும் துரிதமான நடவடிக்கை எடுத்து அவைகளைத் தீர்த்து—நம்முடைய வசதியைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சபைக் கட்டிடம், சட்டசபைக்காக ஏற்கனவே கட்டியபோது, 370 பேருக்காகக் கட்டினேம். நாம் அன்று கால் வைத்த நேரத்திலிருந்து ஒவ்வொருவராகப் பிரித்து விட்டுக்கொண்டிருக்கிருேம்; 370-லிருந்து குறுகிக்குறுகி வந்திருக்கிருேம். மற்றவர்களை வழியனுப்பக்கூடிய பொறுப்பாளி, தமிழ் நாடு ஆகப்போய்விட்டது. இதனுல் நாம் வருத்தப்படவேண்டியதில்லை. ஐந்தாவது வருஷம் வரும்போது எல்லோரையும் அனுப்பிவிட்டு நாம் மட்டும் தான் இந்த சபையிலே இருப்போம். இதற்காக குறுகி விட்டதே என்று கோட்டைவிட்டுப் போய் விட வேண்டாம். இங்கேயே இருக்கலாம்; 250 பேராவது இருப்பதற்கான விஸ்தாரம் இருக்கவேண்டுமென்று கேட்டால் அதில் அரசாங்கத்தாருக்கும் நமக்கும் எந்த விதமான தகராறும் இருக்காதென்று நம்புகிறேன். தொகுதிகளைப் பிரிப்பதில் கஷ்டம் இருக்கலாம். அதனுல் தேர்தலைக் குறிப்பிட்ட தேதியில் நடத்த முடியாது என்பது அல்ல. குறிப்பிட்ட தேதியிலே தேர்தலை நடத்தமுடி



29th March 1956] [Sri K. T. Raju]

யும். ஆகையால் இந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்ளவேண்டாமென்று சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொண்டு, இத்துடன் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri S. VADIVELU :** சபா நாயகர் அவர்களே, இந்த ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளலாமென்று எண்ணுகிறேன். அதாவது 12-24 p.m. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது என்று சொல்லுவார்கள் பழமொழி. அதே மாதிரி, தமிழ் ராஜ்யம் ஏற்படுகின்ற பூரிப்பிலே தட்சிண பிரதேசம் என்ற ஒரு குழப்பத்தை உண்டாக்கினுர்கள்.

இப்போது எடுத்துக்கொள்ளப்படும் தேவிகுளம், பீர்மேடு மற்ற மசோதாக்களை யெல்லாம் பார்த்தால் நாம் பரிபூர்ணமாகப் பங்கு எடுத்துக் கொள்ளமுடியவில்லை. இருந்தாலும் சிலரிடம் கொடுத்து மொழி பெயர்க்கப்பட்டு எவ்வளவோ முயற்சி எடுத்துக் கொண்டாலும், அப்போது கூட பரிபூரணமாகப் பங்கு எடுத்துக் கொள்ள முடியவில்லை. அக்டோபர் 1-ம் தேதிக்கு மேலே நாம் பரிபூரணமாக பங்கு எடுத்துக் கொள்ள முடியும். பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் சார்பிலே என் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் தங்களுடைய தாய் மொழியில் தமிழ் ஆட்சி இந்த நாட்டில் நடக்கும் என்று சொல்லும்போது அதை எல்லோரும் வரவேற்கிருர்கள். இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு தமிழ் கூட தெரியாது. அப்படி இருக்கும்பொழுது ஒரு சிலர் செல்வாக்கு படைத்தவர்கள்தான் ஆங்கிலத்தை படித்து இருக்கிருர்கள். அவர்கள் முனிசிபாலிடிகளிலும் ஜில்லா போர்டுகளிலும் சட்ட சபைகளிலும் பார்லிமெண்டிலும் அங்கம் வகித்துக்கொண்டு தங்களுடைய கருத்தை எடுத்து சொல்லி வருகிருர்கள். ஒரு மட்டத்தில் இருக்கிற ஜனங்களுடைய கருத்தை அதே மட்டத்தில் உள்ளவர்கள்தான் பிரதிபலிக்க கூடும். அவர்கள்தான் அங்கத்தினராக இருக்கவேண்டும். 1952-ல் புது தேர்தல் நடந்தபோது அவர்கள் சாதாரண மக்களை, என் போன்ற தொழிலாளர்களை இந்த சட்ட சபைக்கு அனுப்பி இருக்கிருர்கள். இந்த நான்கு ஆண்டு காலத்தில் நல்ல முறையில் காரியங்கள் நடக்கவில்லையா? எப்படியாவது தமிழ் ஆட்சி மலரும் என்று பலரும் எதிர் பார்க்கிருர்கள்.

இப்பொழுது தமிழ் நாட்டில் ஒரு பெரிய கிளர்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது. ஒரு எல்லைக் கமிஷனை நியமித்து கிராம அடிப்படையில் தமிழ் பேசும் மக்களை தமிழ் நாட்டுடனும், மலையாளம் பேசும் மக்களை கேரளாவுடனும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ராஜ்யத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைப்பதுதான் பொருத்தம். இதுதான் நியாயமும் கூட. மூன்று கோடி மக்கள் நம் நாட்டில் வாழ்கிருர்கள். அவர்கள் எல்லோரும் இதை விரும்புகிருர்கள். அப்பொழுதுதான் அவர்கள் முன்னேற முடியும் என்று நம்புகிருர்கள். தமிழில் ஆட்சி நடத்த முடியுமா என்று ஒரு சிலர் பரிகாசம் செய்து வருகிருர்கள். ஏனென்ருல், ஆங்கிலத்தில்தான் விஞ்ஞானம் இருக்கிறது என்று அவர்கள் கருதுகிருர்கள். ஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயர், ஸ்ரீ கே. சந்தானம் போன்றவர்கள் மிகப் பெரிய நூல்களை வெளியிட்டிருக்கிருர்கள். ஸ்ரீ மு. வரதராசனுர் எழுதி இருக்கிற புத்தகத்தை பார்க்கும்பொழுது அறிய கருத்துக்களை பார்க்கிருேம், இதைப் பார்த்த பிறகாவது தமிழில் ஆட்சி நடத்த முடியுமா என்று கேட்பது தவறு. வெள்ளைக்காரர் வருவதற்கு முன்னுல் இந்த நாட்டில் அராஜகம் நடந்து வரவில்லை. அதற்குப் பதிலாக நம் முன்னேர்கள் தமிழ் நாட்டில் நல்ல முறையில் ஆண்டு வந்திருக்கிருர்கள். ராஜ ராஜ சோழன் வழி வந்தவர்கள் இந்த நாட்டை ஆண்டு வந்திருக்கிருர்கள். நல்ல முறையில் ஆட்சி நடந்து வந்திருக்கிறது. அந்த ஆட்சி தமிழில்தான் நடந்து வந்திருக்கிறது. இதை உலகம் ஒப்புக்கொண்டிருக்கிறது; 2,000 ஆண்டுகளுக்கு முன்னுல் மூவேந்தர்கள் இந்த நாட்டை நல்ல முறையில் ஆண்டு வந்திருக்கிருர்கள். சென்ற காலத்தில் ஆட்சி நல்ல முறையில் நடந்து வந்திருக்கிறது என்பதற்கு அறிகுறிகள் எவ்வளவோ இருக்கின்றன. அதே மாதிரி தமிழில் இப்பொழுது ஆட்சி நடத்த என்ன கஷ்டமிருக்கிறது. ஆகவேதான் தமிழில் ஆட்சி நடந்தால் தமிழ் நாட்டில்

[Sri S. Vadivelu] [29th March 1956

ஜில்லாபோர்டிலிருந்து பஞ்சாயத்து போர்டிலிருந்து சட்ட சபை வரையில் எல்லா இலாகாகளிலும் மக்களால் பரிபூரணமாக பங்கு கொள்ள முடியும். அப்பொழுதுதான், மக்களுடைய குறைகளை போக்க முடியும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

12-27 p.m. SRI K. P. GOPALAN : Mr. Speaker, Sir, regarding this Bill I must first of all state that it is the outcome of the growth of the democratic movement in our country for formation of States on linguistic basis.

THE HON. SRI C. SUBRAMANIAM : It was sponsored by the Communist party.

SRI K. P. GOPALAN : Whatever may be the shortcomings in the Bill I welcome it because States in India will be reorganized on the basis of language very shortly. Not only people in Kerala, and in Tamilnad but the people in the whole of India will rejoice over this formation of States on linguistic basis. Sir, I do not share the view expressed by the hon. Member, Sri K. Vinayakam, that this Bill should be burnt. I cannot approve of his idea that the Bill should be burnt. It is a very wrong idea. I think the hon. Member has got a very wrong conception of the whole thing. Sacrifices were made and agitations were carried on by our democratic national movement to achieve this objective. Therefore the opinion expressed by the hon. Member, Sri K. Vinayakam, that this Bill should be burnt is entirely wrong.

12-30 p.m. Sir, there was a conference in Malabar attended by about 600 delegates. In that conference an old man came before the delegates of his own accord and supported the move for the formation of Aikya Kerala State; his reason was that under the British Rule a peasant like him could not read even a summons or any paper sent to him; now if the Kerala State is formed, the language of the people would be the language of the State and so he could read any communication sent to him. That is the spirit of the people behind this formation of linguistic States.

Sir, I do not approve of what Dr. Menon said regarding the formation of the linguistic States. Sir, I want to know from Dr. Menon whether he is for a Kerala State, whether he is for the States of Tamilnad and Karnataka. I know the feelings of the people of Malabar as well as the people of Tamilnad. They are all for the formation of the linguistic States, if we take the opinion of the people.

Sir, I know the Hon. the Finance Minister was propagating the idea of Dakshina Pradesh. Whoever may propagate it, it is a dead horse and nobody can wake it up. Though I have great respect for Rajaji even if Rajaji comes and propagates, Dakshina Pradesh will never materialise. The people will never allow the formation of such a Pradesh. That is the sentiment and opinion of the people, not only in Malabar but also in Tamilnad. That is how I understand it.



29th March 1956] [Sri K. P. Gopalan]

Dr. Menon said that it was a hasty action on the part of the Central Government to have started this formation of linguistic States. Sir, my opinion is the linquistic States should have been formed earlier. We know that our National Organization took up this issue even at the time of the formation of Bengal. Since then the Congress and other Democratic parties have been fighting for this. With the growth of national movement, with the masses taking part in it more and more, this urge for the formation of linguistic State has come to stay. Therefore, it is now for our Governments to see that linguistic States are formed as early as possible so that all conflicts would fade away.

Sir, the Hon. Finance Minister went on to blame the Opposition parties and pleaded before this House and before the people that whatever the Congress Party has done on the question of formation of linguistic States is entirely right and what other parties say are all wrong. I can never agree to this view point. The Hon. Finance Minister says that we have got the best of leaders and I may also say that we also have respect for our national leaders. But I want respectfully to submit before the Hon. Finance Minister why our leaders who are tackling international problems of our country and other countries also, are not able to solve this particular problem.

In the formation of linguistic States, the regional language will have to play a prominent part and that is the basic factor. Yesterday the Finance Minister read page 3 of the Bill regarding boundary disputes. Now if we read the Bill we can see that the problem of Bengal and Bihar has not been settled; the problem of Bombay and Mahratta has not been settled. Even at this stage I want to say that the question of language is not taken into consideration very seriously. Even from the very beginning we are of the opinion that contiguity of the territory on the language basis taking village as the unit must be the main consideration. We still feel that that is the correct solution. If the Congress Party had adopted that, there would not have been so much chaos in the country. The present chaotic condition will be taken advantage of by the reactionary forces to disrupt the unity of the country. It is the responsibility of the Congress Party to find correct solutions to this problem.

Sir, in regard to territorial disputes, there are two alternatives and I agree with the Hon. Finance Minister in that. The two problems facing us are, whether we are to agree to this Bill or whether we are to take the recommendations of the States Reorganization Commission Report. Therefore either the linguistic States should be formed as early as possible or we should postpone the formation of linguistic States. Shall we then try to settle the disputes, spending our time and energy? I would prefer the first court, namely, the immediate formation of linguistic States and constitution of boundary commission.

I do not want to speak further on this. As far as I am concerned, as far as our Party is concerned, what we feel is that all

the disputes must be resolved in a friendly manner and on a friendly basis by mutual negotiations. It is not as though we can solve those difficulties by passing amendments or quarrelling with each other or by carrying on agitation and creating more and more confusion in the minds of people. I want to bring to the notice of the Hon. Finance Minister one thing and that is the hartal that was observed here has clearly shown what the feelings of the people of Tamilnad are as also the feeling of people of Malabar. The Hon. Finance Minister also knows what those feelings are. (THE HON. FINANCE MINISTER: About Devikulam and Peermedu?)
12-40 p.m. That also our Finance Minister knows pretty well. Sir, what I want to state here is that we know our claims and the Tamil Nad leaders also know the claims of Malabar. As far as Malabar people are concerned, we are not going to leave an inch of space which belongs to us. At the same time we do not want territories belonging to Tamil Nad people. We want to settle the question by mutual negotiation on a friendly basis and those who advocate that we should fight each other are in the hands of the reactionary forces in the country. That is why we stress more and more upon the unity of Tamil Nad and Kerala and the unity of the entire nation. That is why we are pleading so much.

I want to say a few words about the formation of Zonal Councils. I am for the formation of the Zonal Councils. I have got some special interest in that. I do not think that the Zonal Council will end in the formation of Dakshina Pradesh. I am sure about that. As far as Kerala is concerned, it is industrially and economically a backward area. The Kerala people will try their level best to put their case before the Zonal Council and see that economic and industrial development of Kerala is assured. I want to make one suggestion to the Central Government and the Hon. Finance Minister and that is, some representatives of the Assemblies must be in the Zonal Councils and the recommendations of the Zonal Councils must be placed before the Assemblies.

I want to bring to the notice of this Assembly that on October 1st, we the Malayalee Members will not be anywhere. We will not be in this House and we will not be in the Travancore-Cochin Assembly also because it has been dissolved. The hon. Member, Sri Kuttikrishna Nayar, said that President's rule is very democratic and it was the working of democracy which ended in the President's rule. I never understood the theory behind it. All the linguistic States will be formed on 1st October and Malabar people alone should not be left without getting a State on that date. So, what I want to urge upon this Government as well as the Central Government is that they should conduct elections before 1st October in the Travancore-Cochin State and see that on 1st October along with other States, Kerala State comes into existence. I think even the Hon. Speaker is involved in this . . .

MR. SPEAKER: No, the Speaker is never involved. Speaker is an institution.





SRI K. P. GOPALAN: The Central Government say that no stable Government can be formed in Travancore-Cochin State. Suppose, when we 30 people go there, surely a stable Government can be formed. That is why the President's Rule has come there. As a representative of the people I have to state here that the whole people of Malabar as well as Travancore-Cochin are against the President's rule.

As for the membership in the Council of State, I quite agree with what the Leader of the House has stated regarding the members from Malabar that they must be considered as duly elected from Malabar. Even if the Travancore-Cochin State Assembly is dissolved, those members who belonged to the Southern Travancore must find a place here. On October 1st the President's Rule must end in Travancore-Cochin State and it is the duty of this Assembly also to see that the President's rule must be ended as early as possible.

Another point to which I want to refer is the naming of Madras State. I am for naming the Madras State as Tamil Nad. Even though a Malayalee I feel proud if the Madras State is named as Tamil Nad.

THE HON. SRI C. SUBRAMANIAM: Why don't you name your Kerala State as Malayalee State?

SRI K. P. GOPALAN: Kerala itself is Malayalam. It is a country of coconut trees. It is a beautiful country.

THE HON. SRI C. SUBRAMANIAM: Why don't you follow the advice before preaching it to others?

SRI K. P. GOPALAN: It is not advice. I am expressing the opinion of the people of Tamil Nad. I have got a right to do it so as long as I am a member of this House. Government will have to accept the proposal of the people, whatever may be their opinion.

The number of members in the Tamil Nad Assembly must be increased. I am for that. I think in Assam for one Parliament member there are 9 seats in the Assembly. In other places there are 7 seats in the Assembly for one Parliament member. But in Tamil Nad there are only 5 seats for one Parliament member. I really feel that their number should be increased. I want to state here as far as Malabar also is concerned, the number of the members of the Assembly should be increased. According to the Constitution, for every 750,000 people there must be one member for Parliament. If we calculate on this basis, Kerala will have to get one more member. The Central Government has allowed in the case of Assam 9 seats in the Assembly for one member in Parliament. That is why we demand an increase in the number of members in Kerala Assembly also.

[Sri K. P. Gopalan] [29th March 1956

Lastly, I want to state one thing before this Assembly. Regarding the areas excluded, we have not given any amendment. When we accept the principle of appointing a Boundary Commission, we can argue our case before it. We have to see the working of the Boundary Commission and before that we cannot give a judgment on this question. That is why we do not give any amendments. Some of my friends from Malabar have moved some amendments saying that the 5 taluks in the Southern Travancore also must be joined with Aykya-Kerala. I have to categorically state here that I am against that because even the Congress Party in Travancore-Cochin has accepted that these 5 taluks must go to Tamil Nad. When the recommendations of the States Reorganization Commis-
12-50 p.m. sion and the decisions of the Central Government thereon were made known, the Malayalee people took those decisions calmly and quietly. The Malayalee people know where to fight and what to do in this matter. We never wanted to quarrel with anybody, we never wanted to create hatred and bitterness between the people of Tamil Nad and Malabar. We know that the people of Malabar want that all disputes must be settled amicably and in a friendly manner. There is no justification to say that the taluks which we have already admitted should go to the Madras State should be given to the Kerala State. I know that no decent people in Malabar will accept that. That is meant only as a political game and I am sure that that game cannot be played upon the people of Malabar. People of Malabar want unity to prevail between them and the people of Tamil Nad. We have been living together for a long number of years and we know each other well. I want to bring before this House that the democratic forces of Malabar and Kerala will never countenance any attempts to thwart this unity, from whichever party or quarters they come. At the same time we will see that the economic stability and progress of Kerala is ensured, we will try to get what is due to Kerala and I am sure all decent people will give to Kerala what legitimately should belong to it.

Arguments were advanced that Attapadi Valley and some other places should go to Tamil Nad. There is no case for forming a boundary commission in respect of these places. The Hon. Finance Minister said that there was access to those places from the Coimbatore side. That is not the principle which we should adopt for settling these things. I have got a doubt that a boundary commission for these places may materialize if the Finance Minister takes up the initiative. Even though I have got differences of opinion with the Finance Minister because he wants to do everything on a political basis and blame the Opposition parties for playing a political game, I take it that the statements in his speech were made in good spirits. My appeal to the Finance Minister is that he should see that this Bill is implemented on the 1st of October and that all outstanding disputes are settled by negotiation. This procedure alone will lead to the prosperity of both Tamil Nad and Kerala. We have to try our level best to maintain national unity. To achieve that unity, Linguistic States must



29th March 1956] [Sri K. P. Gopalan]

be formed and the people of the Linguistic States must be made to feel that the Government have sponsored this Bill to enable them to develop to the fullest possible extent. With these words, I hope that a peaceful atmosphere will prevail in our State.

As Dr. K. B. Menon pointed out, it is the responsibility of the Finance Minister and the Cabinet to put before the appropriate authorities the just demands of not only the people of Tamil Nad but also the people of Kerala. I hope the Madras Cabinet will take a realistic and helpful attitude in this matter.

SRI K. P. KUTTIKRISHNAN NAIR: Sir, I rise on a point of personal explanation. The Sub-Deputy Leader of the Communist party, Sri K. P. Gopalan, said that I said that President's rule was a most democratic set-up. The hon. Member has misunderstood my statement. This is what I said:

It was ludicrous to form a cabinet for a party which consists of 17 members in an Assembly of 118 members. Democracy means that it must be organized on party lines and its working must be on party lines and the party must have an ideology and a programme. A hetrogenous combination of divergent parties with a minimum programme is not a party and it will be an insult to democracy if a party having a strength of only 17 in an Assembly of 118 members is allowed to form a ministry in Travancore-Cochin.

Even now I stick to that statement. I am sure people who know the elementary principles of political science will concur with me and not dispute my statement. I wish he had read the full text of my statement and that he puts a more charitable construction upon the statements of persons belonging to parties other than his own.

SRI K. P. GOPALAN: I wish to state that the Congress Party took the help of some other parties when Rajaji formed a ministry in this State in 1952. In the same way Sri Pattom Thanu Pillai had the backing of 61 members of the Travancore-Cochin Assembly and he informed the Rajapramukh to this effect. But he was not called on by the Rajapramukh to form the ministry. Thus he had the support of 61 members and not 17.

MR. SPEAKER: Let us not go into that controversial question.

SRI K. VINAYAKAM: How is it relevant to our discussion here?

MR. SPEAKER: That is exactly what I am telling. It is not relevant.

SRI C. H. KANARAN: When once a point is raised, it should be answered. Sri Kuttikrishnan Nair said that a party of 17 members should not be allowed to form the ministry. That means coalition ministry should not be allowed to be formed, and that will be against democracy.

[29th March 1956

MR. SPEAKER: The hon. Member, Mr. Kuttikrishnan Nair, gave a personal explanation and we cannot launch into questions of democracy and all that.

* THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I am rather weighed with a certain amount of responsibility in replying to the debate. I may assure the hon. Members that I do not approach the various problems posed by the Members of the Opposition in a partisan spirit. I want to approach these problems as an Indian first and Indian last. I do not want to approach them merely from a party point of view. This is a national problem and therefore we have to discuss it from an angle which will benefit the nation as a whole. Therefore I would appeal to the hon. Members to leave off party politics to a certain extent and try to find out what would be in the best interests of the country as a whole. If such an approach is made, I have no doubt it will be realized that the statements I made in introducing this Bill were motivated by that point of view. Even though hon. Members differed in certain details here and there, I am glad that to a certain extent they have echoed my own feelings that the interests of the country should be kept in mind, that fissiparous tendencies particularly tendencies which would lead to the Balkanization of the country should be avoided and that the forces which give rise to them should be put down.

The charge was made that the Congress Party and the Congress leadership are imposing their decision on the people, particularly the people of Madras. That charge is a very uncharitable one and I am sorry it has been made. The hon. Member, Sri K. B. Menon, referred to a resolution of the Indian National Congress—the official resolution sponsored by the Working Committee, endorsed by the All-India Congress Committee, and finally unanimously passed at the plenary session of the Indian National Congress, advocating the formation of bilingual States or trilingual States even in the southern part of the country. If it is a question of imposition of any decision, Sir, I can tell hon. Members here that the Congress Party did have the power to impose the decision whatever might have been the strength of the opposition here. Therefore, to bring a charge in a lighthearted manner that the Congress Party is trying to impose its decision on the people of this part of the country is merely political propaganda. I would request hon. Members not to make that approach once again for party advantages when looking at national problems.

1-00 p.m.

Then, Sir, it was asked, 'How can this decision with reference to Devikulam and Peermede be imposed on the people of Tamil Nad?' I had already explained this. I had also to intervene in the debate when a statement was made to that effect. It is not a question in which one party alone is interested. Here is the disputed—an admittedly disputed—area. The State Reorganization Commission went into the problem and made a recommendation that Devikulam and Peermede should go to Kerala State. But we thought that that was a wrong decision, and we put forward our



29th March 1956] [Sri C. Subramaniam]

இருந்து சில பகுதிகள் தமிழ் நாட்டுக்குச் சென்றால் நமக்கு இழுக்கு, அவர்களுக்கு பெருமை. அதேமாதிரியாக தமிழ் நாட்டிலிருந்து சில பகுதிகள் ஆந்திர நாட்டுக்கு வந்தால் அவர்களுக்கு இழுக்கும் நமக்கு புகழும் ஏற்படும். ஆதலால் மத்திய அரசாங்கம் ஒரு எல்லைக் கமிஷனை நியமிக்கவேண்டும் " என்று அங்கிருக்கும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கருதுவதாக அங்கிருக்கும் ஒரு அங்கத்தினர் ஸ்ரீ ரங்கநாதன் அவர்கள் எனக்குத் தெரிவித்தார். ஆதலால் இந்த பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை. வருகிற அக்டோபரில் ராஜ்ய சீரமைப்புக்கு பிறகாவது இந்த பிரச்னையில் தீர்வு காணமுடியும் என்று சொல்வதற்கில்லை. இந்த சிறிய பிரச்னைகளெல்லாம் இப்பொழுது யோசிக்க முடியாது மற்ற முக்கியமான பிரச்னைகள் இருக்கின்றன என்று இப்பொழுது சொல்லிவிடலாம். ஆனல் இப்பிரச்னையில் தீர்வு காணுததினல் அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள். (Interruption.) நான் தேர்தல் நோக்கத்துடன் இந்த விஷயத்தைச் சொல்லவில்லை. இந்த சபையில் எத்தனை அமைச்சர்கள் திரும்பி வரப்போகிறார்கள், எத்தனை எம்.எல்.ஏ.-க்கள் திரும்பி வரப்போகிறார்கள். இப்பொழுது இருக்கும் அமைச்சர்குழு மறுபடியும் வருமா என்று சொல்வதற்கில்லை. Ex-Ministers, Ex-M.L.As. தொகைதான் அதிகமாகிறது. நான் முக்கியமாக சொல்வது என்னவென்றால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் நிம்மதியற்ற நிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வந்தேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ முனிரெட்டியும் இம்மாதிரியாகத்தான் கருதுகிறார். ஹோசூர் தமிழ் நாட்டோடு சேர்ந்தால் பரவாயில்லை. ஆந்திராவில் சேரவேண்டும் என்றாலும் அதற்கு ஒரு முடிவு காணவேண்டும். அதே மாதிரியாக திருத்தணி பகுதியிலும் இந்த நிம்மதியற்ற நிலைமை ஏற்பட்டிருப்பதால் அங்கே ஐந்தாண்டு திட்டத்திலுள்ள சமூக நல திட்டங்கள், தேசிய விஸ்தரிப்பு திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப் படாமல் ரோட்டுகள் எதுவும் மராமத்து செய்யப்படாமல் இருக்கிறது. திருவாளர் சி. சுப்ரமணியம் அவர்கள் திருத்தணிக்கு மோட்டார் காரில் போனால், அப்போது அவர்களுக்கு அங்குள்ள நிலைமை தெரியும். நமது ராஜ்யத்தின் எல்லை முடியும் வரையிலும் பாதை தார் ரோடாக இருக்கிறது. அதற்குப் பிறகு திருத்தணிக்குப் போகும் பாதை தார் ரோடாக இல்லை. இம்மாதிரி மூன்று ஆண்டுகளாக திருத்தணியை ஆந்திர சர்க்கார் கவனிக்கவேயில்லை. திருத்தணி தமிழ் நாட்டிற்குப் போய்விடும் என்று ஆந்திர சர்க்காருக்குத் தெரியும். ஆகவே, தமிழ் நாட்டிற்குப் போகக்கூடிய பகுதிக்கு தாங்கள் ஏன் வீணுகப் பணத்தைச் செலவு செய்ய வேண்டும் என்று கருதி நமது ராஜ்ய எல்லையோரத்திற்குப் பக்கத்திலுள்ள ரோடுகளை அவர்கள் மராமத்துச் செய்யவில்லை. ஆகவே நமது ராஜ்ய எல்லையோரத்திற்குப் பக்கத்திலுள்ள அந்த ராஜ்ய ரோடுகள் நன்றாக இல்லை. பெஜவாடாவிலும், கர்னூலிலும் உள்ள ரோடுகள் எப்படியிருக்கின்றனவோ, அதைபற்றி எனக்குத் தெரியாது. நமது ராஜ்ய எல்லையோரத்திற்குப் பக்கத்திலுள்ள ரோடுகள் நல்ல நிலையில் இல்லை. இந்தக் காரணங்களினால், நான் இந்தத் திருத்தத்தை வற்புறுத்துகிறேன். 3·44 p.m.

**SRI A. RATNAM** : கனம் சபா நாயகர் அவர்களே, திரு. எம். பி. சுப்ரமணியம் அவர்கள் கொண்டுவந்துள்ள திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் கட்சியின் சார்பில் இந்தத் திருத்தம் நிறைவேற்றப் படாவிட்டாலும், எங்களுடைய பிரச்னையைச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். திருவள்ளூர், பொன்னேரி, திருத்தணி போன்ற இடங்களிலுள்ள மக்கள் கொந்தளிப்பில் இருக்கிறார்கள். குறிப்பாக திருத்தணிக்கும் சூளூர்பேட்டைக்கும் இடையிலுள்ள மக்கள் மிகுந்த கொந்தளிப்பில் இருக்கிறார்கள். ஆந்திர ராஜ்யத்துடன் சேர்க்கப்படுவோமா அல்லது தமிழ் நாட்டுடன் சேர்க்கப்படுவோமா என்பது தெரியாமல் அவர்கள் கொந்தளிப்பில் இருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய ஸ்ரீ விநயகம் அவர்கள் கூறியமாதிரி அந்தப் பகுதிகளில் எந்த விதத்திலும் சீர்திருத்தம் செய்யப்படாததால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கே குடி தண்ணீர் வசதிகூட செய்து கொடுக்கப்படாமல், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எப்படிப் பொன்னேரித் தாலுகாவிலுள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்களோ, அதேமாதிரித்தான் திருவள்ளூர்

தாலூகாவிலுள்ள மக்களும் கஷ்டப்படுகிறார்கள். அங்கே குடி தண்ணீர் வசதிகூட இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அங்கே ஜனத்தொகையில் தெலுங்கர்களும் தமிழர்களுமாகக் கலந்திருப்பதால், அந்த ஜனங்கள் சமூக விஷயங்களில் கூட பல கருத்து வேறுபாடுகளால் சண்டை சச்சரவில் ஈடுபடுகிறார்கள். திருத்தணியிலுள்ள நிலைமையைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். திருத்தணி தகராறைத் தீர்ப்பதற்கு எல்லைக் கமிஷன் போடாத காரணத்தாலும், அது விஷயமாக இது வரையில் ஆந்திர சர்க்காரும் சென்னை சர்க்காரும் கலந்து பேசி நல்லதொரு முடிவுக்கு வராத காரணத்தாலும், அங்கே தொல்லைகள் அதிகமாக ஏற்பட்டு வருகின்றன. எல்லைக் கமிஷனை நியமிப்பதற்கு இந்த மசோதாவில் சரியானபடி விதிகள் போடப்படாதது வருந்தத்தக்க விஷயமாகும். ராஜ்ய சீரமைப்பு மசோதா வந்த பிறகும் இந்தப் பிரச்னையைப்பற்றி கவலைப்படும்படியாக இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. அந்தப் பகுதிகளில் இன்றுள்ள நிலைமை நீடித்தால் எல்லைப் பகுதிகளிலுள்ள ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே ஒரு போராட்டம் இருந்துகொண்டேதான் இருக்கும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை சபையில் சமர்ப்பித்துப் பேசும்போது, "நாட்டை நமது மனதின் முன் நிறுத்தி, எல்லா விஷயங்களையும் கவனிக்கவேண்டும். எல்லோரும் தேச பக்தியோடு எல்லா விஷயங்களையும் கண்காணிக்கவேண்டும்" என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு தேசபக்தியோடு இருக்கும் ஆந்திரர்களும் தமிழர்களும் எல்லைப் பகுதியில் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறார்கள். மேலும், தேவிகுளத்திலும், பீர்மேடிலுமுள்ள தமிழர்கள். . .

**Mr. SPEAKER**: இந்த clause-ஐப்பற்றி பேசும்போது தேவிகுளத்தையும், பீர்மேடையும் பற்றி பேசுவது பொருத்தம் அல்ல. இந்தக் clause–ஐப்பற்றிப் பேசவேண்டும்.

Sri A. RATNAM: சென்னை ராஜ்யத்தோடு நியாயமாகச் சேர வேண்டிய பகுதிகளாகிய திருத்தணி, சூளூர்பேட்டை, திருவள்ளூர் முதலியவைகள் சென்னை ராஜ்யத்தோடு சேர்ந்தால்தான் அந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் நிம்மதியாக வாழ முடியும். அதற்கான அக்கறையை நமது சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாக இருப்பதால், இந்தத் திருத்தத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

3-50 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM: This amendment relates to the border disputes between Andhra and Madras. It has been agreed that these should be settled either by mutual agreement between the Andhra Government and the Madras Government or by reference to a boundary commission. That problem has nothing to do with the clause that we are now considering. I do agree that that problem also is important. Mr. Vinayakam's statement that Mr. Nehru had no time to look into this small matter is wrong. As a matter of fact, this matter was brought to his notice. Hon. Members are aware that there was a conference of the Ministers representing the Madras State and the Ministers representing the Andhra State and that the talks broke down because of the Hosur problem. The hon. Member, Mr. Vinayakam, suggested that we should have started from the sea coast. We did start from the sea coast, but it ended in a debacle when we reached the western boundary. In my view, the Hosur problem is connected with the problem of Kolar. If Andhra wants Hosur taluk, contiguity can only be through the Kolar district. That is my point of view and I think it is generally accepted now. Andhra Ministers did not want to take a decision with reference to Hosur before knowing the decision on their claim to the Kolar district. That was the main difficulty, but that difficulty has



ceased now. As far as I can understand, the problem of Hosur will not be insoluble. When we represented to the Government of India that the talks had broken down and therefore a boundary commission should be appointed, we were told that the decision on Kolar, which would be taken and announced very soon, might facilitate the solution of the Hosur problem without the need for a boundary commission and that it was better that the question was settled by mutual talks. As hon. Members are aware, the decisions on the areas relating to Andhra were announced only very recently. Now we intend approaching the Andhra Government to find out whether they are prepared for direct talks. If they are not prepared, certainly we can ask the Government of India to appoint a boundary commission immediately. I can assure the hon. Members that we shall take all possible steps to see that a decision is reached before the 1st of October, so that the necessary Amending Bill may be passed in Parliament and the disputed areas allotted to Madras may be included in the Madras State when it is reorganized on 1st October. This Government are as much interested in the solution of this problem as the hon. Members. Under these circumstances I would request the hon. Member to withdraw his amendment. No purpose will be served by pressing the amendment for vote because, in my view, it is a little bit out of place here. The Government also are not in a position to accept it because it does not fit into this Bill at all.

Mr. SPEAKER: The amendment itself is dependent on an amendment to clause 4 because it reads "The proposed Andhra-Telengana State shall exclude such of those territories of Andhra State as are to be transferred to the Madras State under sub-clauses (*c*), (*d*) and (*e*) proposed to be added to clause 4." Anyhow, is the hon. Member withdrawing his amendment?

Sri M. P. SUBRAMANYAM: I am not withdrawing the amendment.

The amendment was put and lost.

*Clause 4.*

Mr. SPEAKER: As the hon. Member, Sri S. Daivasigamoney, is absent, his amendment is deemed to have been withdrawn.

Sri KUNHI MOHAMED SHAFEE: Sir, I move—

*Delete* clause 4 and *renumber* the subsequent clauses.

The amendment was duly seconded.

The Hon. Sri C. SUBRAMANIAM: This is a negative amendment opposing the whole clause. Therefore it need not be moved and it is enough if the mover opposes the clause itself.

Mr. SPEAKER: The procedure we are following in regard to this Bill is slightly different from the procedure we have been following in regard to the ordinary Bills. In the case of the

[Mr. Speaker] [29th March 1956

ordinary Bills, the clauses are put to vote. But in the case of this Bill, the clauses are not put to vote. Therefore the amendment may stand, and it will not have the effect of a negative vote.

SRI K. T. SREEDHARAN: Sir, I move—

*For* the existing clause 4, *substitute* the following :—

"4. As from the appointed day, the State of Madras shall consist of its present extent excluding Malabar district, South Kanara district, Gudalur taluk of Nilgiris district and the Laccadive and Minicoy Islands."

The amendment was duly seconded.

SRI K. VINAYAKAM: Sir, I move—

*For* the existing clause 4, *substitute* the following :—

"4. As from the appointed day, there shall be added to the State of Madras the territories comprised in the Agastheeswaram, Thovala, Kalkulam, Vilavancode, Neiyatrinkarai taluks of Trivandrum district and the Shencottah taluk of Quilon district and Deviculam and Peermedu taluks of Kottayam district and Cochin-Chittoor taluk (excluding Nemmara pakuthy) and thereupon the said territories—

(*a*) shall cease to form part of the existing State of Travancore-Cochin; and

(*b*) the taluks of Agastheeswaram, Thovala, Kalkulam, Vilavancode, Shencottah and Neiyatrinkarai shall be included in, and become part of, Tirunelveli district of Madras State and the taluks of Deviculam and Peermedu shall be included in and become part of Madurai district of Madras State and the taluk of Cochin-Chittoor (excluding Nemmara pakuthy) shall be included in and become part of Coimbatore district of Madras State."

The amendment was duly seconded.

SRI S. P. THANGAVELU: Sir, I move—

*For* the existing clause 4, *substitute* the following :—

"4. As from the appointed day, there shall be added to the State of Madras the territories comprised in the Agastheeswaram, Thovala, Kalkulam and Vilavancode taluks of Trivandrum district, the Deviculam and Peermedu taluks in Kottayam district, and the Shencottah taluk of Quilon district; and thereupon the said territories—

(*a*) shall cease to form part of the existing State of Travancore-Cochin; and

(*b*) shall be included in, and become part of, Tirunelveli district in the State of Tamil Nad."

The amendment was duly seconded.



29th March 1956]

SRI S. SWAYAMPRAKASAM: Sir, I move—

In clause 4, *omit* the words and brackets " (excluding Puliyara Hill pakuthy) ", and *add* after the words " of Quilon district ", the words " Devikulam, Peermedu, Chittoor and Neiyatrinkarai ".

The amendment was duly seconded.

SRI M. P. SUBRAMANYAM: Sir, I move—

*Add* the following as sub-clauses (*c*), (*d*) and (*e*) to clause 4 :—

" (*c*) A Boundary Commission shall be appointed within one month from the date of passing of the Bill to decide on linguistic basis such of those disputed areas as the portion of Shencottah taluk that is retained in the proposed Kerala State, the taluks of Devikulam, Peermedu, Cochin-Chittoor, Neiyatrinkarai and Palghat of the present Travancore-Cochin State; and Chittoor, Puthur and Tiruttani taluks of Chittoor district in Andhra State.

(*d*) Dates shall be fixed by the President of the Indian Union for the so appointed Boundary Commission to give its award and for the implementation of the same, the dates being before the ensuing general elections.

(*e*) Such of those territories as are decided by such Boundary Commission that are to be transferred to the State of Madras, shall be included in the State of Madras."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMY: I am not moving the amendment of which I have given notice.

MR. SPEAKER: Mr. K. Vinayakam will move his amendment for the addition of a new clause after clause 4.

THE HON. SRI C. SUBRAMANIAM: Since the amendment proposes the addition of a new clause, it can be taken up separately after clause 4 is disposed of.

MR. SPEAKER: Yes. The clause and the amendments are before the House for discussion.

SRI KUNHI MOHAMAD SHAFEE: Sir, my amendment seeks to retain within the Kerala State the Agastheeswaram, Thovala, Kalkulam and Vilavancode taluks of Trivandrum district and the Shencottah taluk (excluding Puliyara Hill pakuthy) of Quilon district. The future Kerala State will have an area of 14,000 square miles and a population of 13 millions. This large population will have great difficulty in finding the necessary living space in the State. Hon. Members of this House know that the migration of the Kerala people from Travancore-Cochin and Malabar to far off places like Bhopal, and the Andamans and the Nicobar Islands has been going on continuously for so many years. The migration is there because the people in these areas are not able to find living space and scope for development in that part of the country. Just to remedy this difficult situation, I have moved the amendment and I commend it for the acceptance of the House.

[29th March 1956

SRI K. VINAYAKAM: Sir, I shall not repeat the arguments that have already been advanced. Only four and a half taluks that are predominantly Tamil in nature and culture have been added on to the Madras State, whereas the other areas where also 5 p.m. the Tamilians are in a majority have not been added on. But we cannot see any logic in the argument of either our Leader of the House or the Central Government. The Central Government have not adduced any reasons why they are not giving Devikulam and Peermedu to us. We can understand if the Central Government or even our Hon. Ministers come forward to tell us why in spite of the majority of the Tamil population in Devikulam and Peermedu we have not been given those taluks. The only plausible excuse which they can give is contained in a small phrase that has occurred in the States Reorganization Commission Report, namely, 'floating population'. This is a nebulous phrase. This is an international enigma. Who can be called 'floating population' I am at a loss to understand. A man who goes in the morning to a certain place to eke out his livelihood and return to his native village in the evening can be called a member of the floating population. For instance, people from Nellore or Chingleput or even Cuddalore come to the City on business and go back to their respective places in the night. These persons can be classified as 'floating population'. But in Devikulam and Peermedu, what is the position? They have been there for years. They have exercised their franchise in the different elections. They have returned their own candidates on this very issue to their Legislative Assembly. I cannot understand the logic behind the move of the Central Government however much I try to go deep into the matter. The States Reorganization Commission has said that those portions consist of lakhs of floating population of labourers. I believe our Government also have put up a fight in the matter. That is what they tell us. We also sincerely believe them. But still, the Central Government have done the greatest harm—the greatest havoc—that can possibly be thought of to Tamilnadu. It stands to logic that we must have got Devikulam and Peermedu.

As regards Cochin-Chittoor, Sir, we do not claim the entire area of Cochin-Chittoor. I had occasion to go about the villages in Cochin-Chittoor. Cochin-Chittoor consists of two portions. One portion is an enclave, which is in Coimbatore district. The other portion is contiguous to the Travancore-Cochin State. I am speaking of the enclave. I have excluded the Nemmara pakuthy. It is populated wholly by Malayalees. This consists of 13 villages, all of which are populated entirely by Malayalees. We are not claiming the entire Cochin-Chittoor taluk. But there is every logic and there is every reason behind my argument to include the portion (excluding the Nemmara pakuthy) in the Coimbatore district. We say that the enclave in the Coimbatore district consists of 30 villages. The eastern portion of Cochin-Chittoor, which is an enclave in the Coimbatore district, and which is mainly populated by Tamilians, should be included in the



29th March 1956] [Sri K. Vinayakam]

Madras State. Statistics also go to prove my argument. This is the reason why I have tabled this resolution. It is nothing but proper that these areas should come to us.

SRI K. P. KUTTIKRISHNAN NAIR: Sir, I oppose this amendment. It has been unfortunate that the States Reorganization Commission Report has awarded the taluks of Agastheeswaram, Thovala, Kalkulam and Vilavancode to the Madras State. If the same argument the Commission adopted in awarding Gudalur to the Madras State is applied here, I have no doubt that all these taluks must form part of the Trivandrum district, which has a Malayalee population outnumbering the Tamil population. Unfortunately when they came to a concluson about all these taluks, they adopted the taluk as the unit, and they awarded these taluks to the Madras State. Having got those taluks, to claim now other taluks in spite of the fact that the majority of the population is Malayalee—is unwarranted. I can excuse the claimants because most of them do not know what is happening in those areas. The hon. Member, Sri Vinayakam, went up to Palghat to find out whether he could make out a case for more areas. He found that it was impossible for him to claim more areas. Of course, I have to thank him for the little mercies shown by excluding the Nemmara pakuthi. Most probably if he had proceeded beyond Palghat, he might have claimed Calicut or even Mangalore. Fortunately he ended his tour with Palghat.

Regarding Devikulam and Peermedu, there is absolutely no doubt that majority of the people are Malayalees and that they are Malayalam-speaking people. The people who know the work of plantations of tea, rubber, etc., know perfectly well that the persons living in the quarters supplied by the plantation managements are emigrants. They go there. They work there for one or two years. Every year for two months they take leave and take the bus fare from the managements to go to their homes. They take the bus fare also to come back. This is the floating population talked of. This is borne out by the records of these plantations. There can be no doubt that the Commission have gone into this matter, and the Travancore-Cochin Ministry has placed all the facts before them. They were convinced that Devikulam and Peermedu should be in Kerala. We have a right more than anybody else to retain them within the bounds of Kerala State. Sir, I oppose this amendment vehemently.

* SRI A. GOVINDASWAMI NAYAGAR: கனம் சபாநாயகர் அவர்களே, தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் (கொச்சியிலுள்ள), நெய்யாற்றின்கரை போன்ற பகுதிகள் தமிழ் நாட்டோடு சேரவேண்டுமென்பதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிற காரண காரியங்களைப்போல, சரியாகவோ தப்பாகவோ திருவாங்கூர்-கொச்சியிலுள்ள தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் சண்டை சச்சரவு வளர்ந்துகொண்டேயிருக்கிறது. அதற்கு மூலகாரணம், அந்தப் பகுதியிலுள்ள தமிழர்கள் தாயகத் தமிழகத்தோடு சேரவேண்டுமென்ற உணர்ச்சி கொண்டவர்களாக இருப்பதால், அவர்கள் மீது அங்குள்ள மலையாளிகள் ஆத்திரம் கொண்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. திருபட்டம் தாணுப் பிள்ளை பல தமிழர்களை அங்கே சுட்டுத்தள்ளியிருக்கிறார். அப்படியிருந்தும், அந்தப் பகுதிகள் மலையாள

ராஜ்யத்துடனேயே சேர்க்கப்பட்டால், அங்குள்ள தமிழர்களுக்கு திரு பட்டம் தாணுப் பிள்ளை காலத்தில் ஏற்பட்ட துன்பங்கள் மீண்டும் ஏற்படுமோ என்ற அச்சம் நமக்கு இருக்கிறது. ஆந்திர ராஜ்யத்திலுள்ள சித்தூர் திருத்தணி போன்ற தமிழ்ப் பகுதிகளில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இல்லாமல் தெலுங்கு கற்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுவதுபோல, திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலுள்ள தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகளிலும் உள்ள தமிழ் மக்கள் மலையாளம் கற்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுவார்களோ என்ற அச்சம் இருக்கிறது.

மதிப்பிற்குரிய திரு. குட்டிகிருஷ்ண மேனன் அவர்களுக்கு இருக்கிற தன்மான உணர்ச்சியையும் நாட்டுப் பற்றையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் காங்கிரஸ் தரப்பிலுள்ள தமிழ் அங்கத்தினர்களுக்கு ஏன் அப்படிப் பட்ட உணர்ச்சி இல்லை என்று நான் கேட்கிறேன். காங்கிரஸ் கட்சி கட்டு திட்டம் போட்டிருக்கிறது. இருந்தாலும் மலையாள அங்கத்தினர், அவர்களுடைய நாட்டுக்காக வாதாடுகிறார்கள். ஒரு மலையாள அங்கத்தினர் கன்யாகுமரி கூட கேரள ராஜ்யத்துடன் சேர்க்கப்படவேண்டும் என்ற முறையில் பேசினார். ஆனால், அவர் ஏமாந்துவிட்டார். அவர்களுடைய உணர்ச்சியானது தமிழ் நாட்டையேகூட கேட்டுவிடக்கூடிய அளவிலே இருக்கிறதென்றால், காங்கிரஸ் தரப்பிலுள்ள தமிழ் அங்கத்தினர்களில் ஒருவருக்குக்கூட அந்த உணர்ச்சி இல்லையே என்று நான் வருத்தப்படுகிறேன்.

இதை நான் சொல்லும்போது கனம் அங்கத்தினர் திரு. பழனிசாமி கவுண்டர் அவர்கள் சிரிக்கிறார்கள். அவர்களுடைய சிரிப்பு எதைக் காட்டுகிறது என்றால் எனக்கு தமிழ் உணர்ச்சி இருக்கிறது; ஆனால், கட்சிக் கட்டுப்பாட்டுக்கு கட்டுபடவேண்டியிருக்கிறது என்று சொல்வதுபோல் இருக்கிறதே தவிர வேறொன்றும் இடையாது.

காங்கிரஸ் தரப்பிலேயே இருக்கும் கனம் அங்கத்தினர்கள் திரு. கோவிந்தன், திரு. செல்லதுரை போன்றவர்களுக்கு இந்த உரிமையை வழங்கிப் பாருங்கள், எந்த முறையில் வாதாடுவார்கள் என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அவர்களுடைய சுதந்தரம் பறிக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பறி போயிருக்கும் காரணத்தால், தாங்கள் வெளியிலேயே இருப்பது நல்லது என்ற எண்ணத்திலோ என்னவோ பல காங்கிரஸ் அங்கத்தினர்கள் சபையில் இல்லாதிருக்கிறார்கள். வோட்டு போடவேண்டுமென்று வற்புறுத்தி அழைத்துவந்திருப்பதாகத் தெரிகிறது.

**Mr. SPEAKER**: தயவு செய்து திருத்தத்தைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

***Sri A. GOVINDASAMY NAYAGAR**: அந்தத் தரப்பிலே இருக்கும் தமிழ் அங்கத்தினர்களுக்கு நல்ல எண்ணம் இல்லை என்பதற்காகத்தான் சுட்டிக்காட்டினேனே தவிர வேறொன்றும் இல்லை. தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழ் நாட்டோடு சேர்க்கப்படாவிட்டால் பல தொல்லைகள் ஏற்படும் என்பதற்குப் பட்டம் தாணுப் பிள்ளை ஆட்சி ஒன்றே போதும்.

**Sri G. GOVINDAN**: கனம் சபாநாயகர் அவர்களே, நண்பரவர்கள் பேசும்போது காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு தமிழ் உணர்ச்சி இல்லை என்றும், அவர்களுக்குத் தான் தமிழ் உணர்ச்சி உண்டு என்றும் குறிப்பிட்டார். எங்களுக்கும் தமிழ் உணர்ச்சியும், நாட்டுப் பற்றும் உண்டு. ஆனால், எங்கள் எல்லோருடைய உணர்ச்சியையும் ஒன்று சேர்த்து கனம் நிதி அமைச்சரவர்களிடம் கொடுத்திருக்கிறோம் என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***Sri A. GOVINDASAMY NAYAGAR**: கனம் சபாநாயகர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கோவிந்தன் அவர்கள் "காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களுடைய உணர்ச்சியை யெல்லாம் நிதி அமைச்சர் கனம் திரு. சுப்ரமண்யம் அவர்கள் கையில் கொடுத்துவிட்டோம்" என்று சொன்னார். அவர் அப்படிக் கொடுத்துவிட்டதும், நிதி அமைச்சரவர்கள் அந்த உணர்ச்சி பூராவையும் வாங்கிக் கொண்டதும் உண்மையானால்,





காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஏன் இங்கே உட்கார்ந்திருக்கவேண்டும், வீட்டுக்குப் போய்ச் சேர்ந்துவிடலாமே. அந்த நிலையிலே எல்லோருக்கும் மந்திரி என்று சொன்னார்கள். கட்சித் தரப்பிலே நின்றுகொண்டு, நேரு அவர்கள் என்ன சொன்னார்களோ அதைத்தான் இங்குள்ளவர்கள் ஒத்துக் கொள்ளவேண்டுமென்று வாதாடிவிட்டு நிதி அமைச்சரவர்கள் இப்பொழுது தலையில் கையை வைத்துக்கொண்டிருப்பதிலிருந்து கவலைப்படுவது மாதிரி இருக்கிறது. திருத்தத்தை அரசாங்கத்தார் ஒத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***Sri V. C. PALANISAMY GOUNDER**: கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் ஸ்ரீ கோவிந்தசாமி நாயகர் அவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். நானும் அவரைப் பார்த்துச் சிரித்தேன். என்னுடைய சிரிப்பிலிருந்து, எனக்கு உணர்ச்சியில்லை என்று நண்பரவர்கள் நினைத்துவிட்டார் போலும்! உணர்ச்சி இல்லாமல் நான் சிரிக்கவில்லை. எங்களுடைய பகுதியாகிய கோயமுத்தூர் ஜில்லாவுக்கு அடுத்துள்ள தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை தமிழ் நாட்டோடு சேர்க்கவேண்டுமென்று, சர்க்காரே, எங்களுடைய மதிப்பிற்குரிய அமைச்சர் கனம் திரு. சுப்ரமண்யம் அவர்களே எவ்வளவு வாதாடலாமோ அவ்வளவும் இந்த சட்டசபையில் வாதாடியிருக்கிறார். அவர் இந்த சட்டசபையில் வாதாடிய விவரத்தையும், பிரசங்கத்தையும் டில்லி சர்க்காருக்கும் அனுப்பியிருக்கிறார். அந்த முறையிலே எங்களுக்கு உணர்ச்சி இல்லாமல் இல்லை. எங்களுடைய உணர்ச்சியை யெல்லாம் நிதி அமைச்சரவர்களிடத்திலே ஒப்படைத்து நல்ல வழியாகப் போராட வேண்டுமென்று சொன்னோம். ஆனால், டில்லி வேறு விதமாக முடிவு சொன்னால் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு நாங்கள் கட்டுப்படத் தான் வேண்டும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். 4-10 p.m.

* **Sri M. NARAYANAN NAMBIAR**: മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, എന്റെ സ്നേഹിതന്മാർ ശ്രീ കെ. ടി. ശ്രീധരനും ശ്രീ കുഞ്ഞിമുഹമ്മദ് ഷാഫിയും കൊണ്ടുവന്നിട്ടുള്ള ഭേദഗതികളെ ഞാൻ പിന്താങ്ങുന്നു. പുതുതായി രൂപീകരിക്കാൻപോകുന്ന സംസ്ഥാനങ്ങളിൽവെച്ചു ഏററവും ചെറുതാണ് കേരളസംസ്ഥാനം. ജനസാന്ദ്രതകൊണ്ട് ഒന്നാംസ്ഥാനത്തു നില്ക്കുന്നതും കേരള സംസ്ഥാനമാണ്. അങ്ങനെയുള്ള ഒരു സ്റ്റേറ്റിന്ന് ന്യായമായി കിട്ടേണ്ട സ്ഥലങ്ങളെല്ലാം വിട്ടുകൊടുക്കാതിരിക്കുന്നത് വ്യസനകരമായിട്ടുള്ള സംഗതിയാണ്. ഗൂഡല്ലൂർ താലൂക്കിന്റെ കാര്യം നോക്കിയാൽ, അവിടത്തെ നാല്പത്തേഴായിരത്തിൽ ശിഷ്ടം വരുന്ന ജനസംഖ്യയിൽ ഇരുപത്തീരായിരവും മലയാളികളാണ്. അതേ അവസരത്തിൽ തമിഴരുടെ സംഖ്യ ഒമ്പതിനായിരം മാത്രമേയുള്ളു. എന്നിട്ടും ആ താലൂക്ക് കേരളത്തോട് ചേർക്കാൻ തീരുമാനിച്ചിട്ടില്ലെന്നുള്ളത് വളരെ നിർഭാഗ്യകരമാണ്. അവിടത്തെ ജനങ്ങൾ കേരളത്തോട് ചേരാനുള്ള അവരുടെ ആഗ്രഹം വളരെ സ്പഷ്ടമായി രേഖപ്പെടുത്തിയിട്ടുണ്ട്. അതൊന്നും പരിഗണിക്കാതെയാണ് ആ താലൂക്കിനെ മദ്രാസിൽതന്നെ നിലനിർത്താൻ ബില്ലിൽ വ്യവസ്ഥ ചെയ്തിരിക്കുന്നത്. സർ, ഇതു കേരളത്തോടും ഗൂഡല്ലൂരിലെ ജനങ്ങളോടും കാണിച്ചിട്ടുള്ള വലിയൊരനീതിയാണെന്ന് പറയാൻ എനിക്കു മടിയില്ല. അതേ സമയം തിരു-കൊച്ചിയിലെ അഞ്ചു താലൂക്കുകൾ വേർപെടുത്തി മദ്രാസിൽ ചേർക്കാൻ തീരുമാനിച്ചിട്ടുണ്ട്. സർ, ഗൂഡല്ലൂർ കേരളത്തോട് ചേർക്കാൻ ന്യായമില്ലെങ്കിൽ ഈ അഞ്ചു താലൂക്കുകൾ കേരളത്തിൽനിന്നു വേർതിരിച്ചു തമിഴ്നാട്ടിനോട് ചേർക്കാൻ എന്തു ന്യായമാണുള്ളതെന്നു എനിക്കു മനസ്സിലാകുന്നില്ല. കന്യാകുമാരിയില്ലാത്ത കേരളത്തെപ്പററി ചിന്തിക്കാൻപോലും കേരളത്തിലെ ജനങ്ങൾക്കു സാദ്ധ്യമല്ല. ആയിരമായിരം കൊല്ലങ്ങളായി തിരു-കൊച്ചിയുടെ ഭാഗമായിരുന്ന ഈ അഞ്ചു താലൂക്കുകളെ വെട്ടിമുറിച്ചു മദ്രാസിൽ ലയിപ്പിക്കുന്നതിനെ ഒരുതരത്തിലും ന്യായീകരിക്കാൻ സാദ്ധ്യമല്ല. അതുകൊണ്ട് എന്റെ സുഹൃത്തുകൾ ശ്രീ കെ. ടി. ശ്രീധരനും, ശ്രീ മുഹമ്മദ് ഷാഫിയും അവതരിപ്പിച്ചിട്ടുള്ള ഭേദഗതികളെ ഞാൻ പിന്താങ്ങുന്നു.

**Sri S. P THANGAVELU**: கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கெனவே மசோதாவில் விட்டுப்போய்விட்ட தேவிகுளம், பீர்மேடு போன்ற மற்றும் தமிழ் பேசக்கூடிய பகுதிகளைக் கேரள ராஜ்யத்திலிருந்து பிரித்து தமிழ் நாட்டோடு சேர்ப்பதற்கு என்று திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவேயே பல அங்கத்தினர்கள், இந்தப் பகுதியில் தமிழ் 4-14 p.m.

[Sri S. P. Thangavelu] [29th March 1956

நாட்டோடு சேர்க்கப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி, சேரவேண்டிய நியாயத்தையும் பல முறை எடுத்துக்கூறிவிட்டார்கள். கனம் நிதி மந்திரி அவர்கள் வேறொரு சந்தர்ப்பத்திலே இதைப் பற்றி பேசும்போது அந்தப் பகுதிகள் தமிழ் நாட்டோடு சேருவதற்கு வேண்டிய ஆதாரங்களை நன்றாக வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

கனம் அங்கத்தினர் திரு. குட்டிகிருஷ்ண மேனன் அவர்கள் இந்தத் திருத்தத்தை எதிர்த்துப் பேசுகிறபோது, மலையாளிகள் நிரம்ப இருக்கிற பாலக்காடு போன்ற பகுதிகளைக் கூட தமிழர்கள் கேட்க நேரலாம் என்று ஆத்திரமாகச் சொன்னார். மலையாளிகளுக்குச் சேரவேண்டிய பகுதிகள் தமிழர்களுக்கு ஒருபோதும் தேவையில்லை என்று திரு. குட்டிகிருஷ்ண மேனன் அவர்களுக்கு நான் உறுதியாகச் சொல்கிறேன். தமிழர்கள் நிரம்பியிருக்கிற, தமிழ் பேசக்கூடிய மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய தமிழ்ப் பகுதிகள் தமிழ் நாட்டோடு சேரவேண்டியதன் நியாயத்தை முறையாக எடுத்துக்கூறி, அங்குள்ள மக்கள் பல ஆண்டுகளாக கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இந்தக் கிளர்ச்சியின் அறிகுறி, அதன் எடுத்துக்காட்டு தான் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல்லாரும் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் என்று ஒரு கட்சியை அமைத்துக்கொண்டிருப்பதே.

மற்றும் அவர்கள் இந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்துக் கொண்டு தேர்தலில் நின்று வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்தப் பகுதி தமிழ் நாட்டுடன் சேரவேண்டும் என்று கிளர்ச்சி செய்துவந்தாகள். அதற்கு பெரும்பாலான மக்கள் ஆதரவு கொடுத்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அங்குள்ள தமிழ் நாட்டு காங்கிரஸ் கட்சியும் அங்குள்ளவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் சேர்ந்து திருவாங்கூர்-கொச்சியிலுள்ள சர்க்கார் கவிழும்படியாகச் செய்தார்கள். இதுதான் அந்த சர்க்கார் கவிழ்ந்து போனதற்குக் காரணம். பட்டம் தாணுப் பிள்ளை ஆட்சியில் தமிழர்கள் இங்கு சேரவேண்டும் என்று கிளர்ச்சி செய்ததனால் அங்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதும் எந்த விதத்தில் அவர்களின் பேரில் பழி வாங்கப்பட்டது என்பதும் எல்லோருக்கும் தெரியும். அந்தக் கிளர்ச்சி நியாயமான வரம்பிற்குட்பட்டதாக இருந்தாலும் அங்குள்ள தமிழர்கள் பேரில் பழி வாங்கப் பட்டிருக்கிறது. அங்குள்ள சர்க்கார் அங்குள்ள மக்களை மிருகத்தைப் போல் நடத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சி இனிமேல் நடவாமல் இருப்பதற்கு அங்குள்ள சட்டசபை உறுப்பினர்களும் இங்குள்ள உறுப்பினர்களும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் பலன்தான் அந்த சர்க்கார் கவிழக்கூடிய நிலைமை ஏற்பட்டது: இனி மேலாவது அப்படிப்பட்ட சம்பவங்கள் நடவாமல் இருக்க இந்த சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி மலையாள சர்க்கார் அங்குள்ள தமிழர்களின் பேரில் பழி வாங்கும் வகையில் மறுபடியும் ஏற்கெனவே நடந்துகொண்டதுபோல் நடவாமல் இருப்பதற்கு அவர்களைப் காப்பாற்றுவதற்குப் அந்த பகுதிகளை தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நாம் இதைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அதனால் மறுபடியும் அப்படி நடவாமல் இருப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்வதற்காகத்தான் இந்த திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **SRI M. P. SUBRAMANYAM :** கனம் தலைவர் அவர்களே, இந்த திருத்தத்தின் பேரில் பேசிய அங்கத்தினர் இரண்டு அபிப்பிராயங்களை எடுத்துப் பேசினார்கள். ஏற்கெனவே நமக்குக் கொடுக்கப்பட்ட நான்கு தாலூகாக்கள் திருவாங்கூர்-கொச்சியிலேயே இருக்கவேண்டும் என்கிறார்கள் சிலர். மற்றவர்கள் மசோதாவில் காணப்படாத நான்கு தாலூகாக்களையும் சென்னையுடன் சேர்க்கவேண்டுமென்கிறார்கள். மசோதாவில் கண்ட தாலூகாக்கள் நான்கையும் திருவாங்கூர்-கொச்சியிலே இருக்கவேண்டுமென்றும் சொல்பவர்கள் கூறும் காரணங்கள் இரண்டு. அதற்குக் காரணம் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் திருவாங்கூரில் மக்கள்



29th March 1956] [Sri M. P. Subramanyam]

எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதனால் இந்த தாலூகாக்களை வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அங்குள்ள இடம் போதாது இங்கு சேரவேண்டிய இடத்தை கொடுக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ஹிட்லர் ஆதியில் சொன்னது போல் இருக்கிறது. அதாவது தன்னுடைய ராஜ்யத்தில் பலருக்கு தொழில் இல்லாத காரணத்தாலும் அவர்களுக்கு வேறு வேலைகள் கொடுக்க வேண்டிய காரணத்தாலும் பக்கங்களிலுள்ள சில ராஜ்யங்களை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னதுபோல் இருக்கிறது. அந்த விதத்தில் இருக்கிறது இப்பொழுது திருவாங்கூர் பகுதியில் சேரவேண்டுமென்று சொல்பவர்கள் சொல்லக் கூடிய காரணம். அதைப் போலவே கனம் குட்டிகிருஷ்ணன் நாயர் என்ன சொல்லுகிறார் என்றால் தாலுகாவை ஒரு யூனிட்டாக வைக்கக்கூடாது திருவாங்கூரை ஒரு யூனிட்டாக வைக்கவேண்டும். அப்படி வைத்தால் தமிழர்கள் குறைவாக இருப்பார்கள், ஐந்து சத விகிதம்தான் இருப்பார்கள் என்று சொல்லுகிறார். அது எந்த அளவில் பொருத்தமாக இருக்கும் என்பதை சட்ட சபை அங்கத்தினர்களே தெரிந்துகொள்ளவேண்டும்.

திருவாங்கூரிலிருந்து சில பகுதிகள் இங்கு கிடைக்கவேண்டும் என்றும் அதைப்போல ஆந்தரப் பகுதியிலிருந்து இரண்டு மூன்று தாலூகாக்கள் இங்கு கிடைக்கவேண்டும் என்றும் சொல்லி வந்தோம். தகராறுகள் உள்ள பகுதிகளை உடனடியாக சேர்த்து விடவேண்டும் என்று இப்பொழுது சொல்லவில்லை. ஒவ்வொரு பகுதியையும் அவர்களும் உரிமை கொண்டாடுகிறார்கள், நாங்களும் உரிமை கொண்டாடுகிறோம். அதற்கு அவர்களும் ஆதாரங்கள் எடுத்துக்கூறுகிறார்கள், நாமும் ஆதாரங்கள் எடுத்துக் கூறுகிறோம். அதனால் ஒரு முடிவுக்கும் வராமல் இருக்கிறது எனக் கூறலாம். திருவாங்கூர்-கொச்சியில் உள்ள தமிழ் பகுதிகளில் இந்த அடிப்படையில் தேர்தல் நடந்திருக்கிறது. அந்தத் தேர்தல் காலங்களில் தமிழ் நாட்டுடன் சேர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் தேர்தல் நடந்து வெற்றி அடைந்திருக்கிறார்கள். அவர்கள் வெற்றி பெற்றிருப்பது மக்களுடைய கருத்து இல்லையா ? அதை மக்களுடைய கருத்தாக வைத்துக்கொள்ள வேண்டும். அதை ஒப்பவில்லையானால் மீண்டும் மக்கள் கருத்தை வோட்டு மூலமாக அறியட்டும் என்கிறோம். அப்படி தகராறுள்ள பகுதிகளில் வோட்டெடுத்தால் குழப்பம் ஏற்படும். கலவரம் ஏற்படும் என்ற காரணங்களைக் காட்டி நிதி அமைச்சர் வோட்டெடுப்புக்கு மறுக்கிறார். இதையும் வாதத்திற்காக ஒப்புக்கொள்ளுகிறோம். கடைசியில் எல்லைக் கமிஷன் நியமித்தாவது முடிவு செய்யட்டும் எனக் கேட்கிறோம். அப்படி நியமிக்கப்படும் எல்லைக் கமிஷனில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் நியாயமாக நடந்து கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது. அவர்கள் எங்களுக்குச் சேரவேண்டிய பகுதிகளை அவர்களுக்கு கொடுத்துவிட்டால் அதனால் நாங்கள் வருத்தப்படப் போவது இல்லை. கிடைத்து விட்டால் அதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். அவர்கள் எந்த விதத்தில் தீர்ப்பு அளிப்பார்கள் என்பதில் எங்களுக்கு கவலை இல்லை. எல்லைக் கமிஷனை அமைத்துக் கொடுத்தால் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய பகுதிகள் எங்களுக்குக் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் எல்லைக் கமிஷன் ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஒரு பகுதி (clause) இருக்கிறதென்று கூறலாம். ஆனால் எந்த எந்தக் காரியங்களை அது விசாரித்து முடிவு செய்யும், எந்த எந்த ராஜ்யத்தில் எல்லைக் கமிஷன் அமைக்கப்படும் என்பன போன்ற தகவல்கள் இல்லை. சித்தூர் தாலுக்கா பற்றி தகராறு கடந்த மூன்று ஆண்டுகளாக தீர்க்கப்படாததொரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கும்பொழுது, இந்தப் பிரச்சினை பின்னர் தீர்க்கப்படுமென்றால் எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று சொல்ல முடியாமல் இருக்கின்றது. இந்தப் பிரச்சினையின் உண்மையையும், தன்மையையும் அவர்கள் ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவேதான் இது சம்பந்தமாக ஒரு எல்லைக் கமிஷனை அமையுங்கள், அதுவும் இந்த மசோதா பார்லிமெண்டில் சட்டமாக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள்ளாக அமைக்கப்படவேண்டும், அவர்களுடைய முடிவை இருசாராரும் ஒப்புக் கொள்ளலாம் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். வருகிற பொதுத் தேர்தலுக்கு முன்பாக இந்தப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும்.

[Sri M. P. Subramanyam] [29th March 1956

ஆகவே மசோதா பார்லிமெண்டில் நிறைவேறியபின் ஒரு மாதத்திற்குள்ளாக இந்த எல்லைக் கமிஷனை நியமிக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். தேர்தலுக்குள் அறிக்கை சமர்ப்பித்து முடிவடைந்து அமுலாக்கவேண்டுமென்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது திருத்தத்தில். இந்தத் திருத்தத்திற்கு எந்தச் சார்பிலுமிருந்தும் எதிர்ப்பு இருக்க அவசியமில்லை. அபிப்பிராய பேதத்திற்கும் இடமில்லை. எவ்வொரு தகராறுக்குரிய பிரதேசத்தை நான் எல்லைக் கமிஷனின் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று சொல்கிறேனே தவிர, அவற்றைத் தமிழ்நாட்டுடன் சேர்த்துவிடவேண்டுமென்று திருத்தம் கொடுக்கவில்லை. ஆகவே கேரள நண்பர்களும் கூட என் திருத்தத்தை ஒப்புக்கொள்வார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

4-23 p.m. SRI S. SWAYAMPRAKASAM : Mr. Speaker, Sir, I do not want to advance a number of arguments for the purpose of including these portions of Devikulam and Peermedu. As the Hon. the Finance Minister himself put it, all the arguments have been advanced. I wish to advance only one argument. The matter has been thoroughly discussed on the floor of this House on a previous occasion when the Report of the States Reorganization Commission was discussed. I think that so far as Devikulam and Peermedu are concerned, the proposals of this House were unanimous. The stand was taken by the Hon. the Leader of the House himself on behalf of the Government that Devikulam and Peermedu must go to Madras State and that still stands. My only request to the Congress Party and to the Hon. the Leader of the House is not to take a different attitude now. After all, we are not the final masters to decide this matter. Ultimately the Parliament has to decide this matter and we need not embarrass them to take a different view. My appeal to the Government is not to take a different stand and support it. After all, what the Parliament decides is binding on everybody. Therefore, I would request the Hon. the Leader of the House to stick to the original stand and leave the matter to be decided by the Parliament.

SRI A. RATNAM : கனம் சபாநாயகர் அவர்களே, தேவிகுளம், பீர்மேடு, சித்தூர், நெய்யாற்றங்கரைப் பிரச்சினை சாதாரணப் பிரச்சினை அல்ல. இதற்கு முன்பு ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் யாதாஸ்து வந்தபோதே இதைப் பற்றி அதிகமாகப் பேசியிருக்கிறோம். அந்த யாதாஸ்திலேயே அந்தப் பகுதியில் 72 சத விகிதத்துக்கு மேல் தமிழர்கள் இருக்கிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட பொருளாதார நிலைமையை உத்தேசித்து அவை திருவாங்கூர்-கொச்சியோடு இணைக்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அது தவறானது, அந்தப் பகுதிகள் தமிழகத்தோடு இணைக்கப்படவேண்டுமென்பதாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் சென்ற தடவை இங்கே புள்ளி விவரங்களுடன் பேசியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு, அந்தப் பகுதிகள் நிரந்தரமாக கேரளத்தோடு தான் சேர்க்கப்படவேண்டும், இது நேருவின் கட்டளை, இதை யாரும் எதிர்த்துப் பேசக் கூடாது, என்பதாக நிதி அமைச்சர் அவர்கள் பேசுவதைப் பார்க்கிறோம். காங்கிரஸ் அங்கத்தினர்கள் தங்கள் கருத்தை எடுத்துச் சொல்லக்கூட அனுமதிக்கப்படவில்லை. எல்லாப் பொறுப்பையும் நிதி அமைச்சர் அவர்களிடமே விட்டுவிட்டோம் என்பதாகச் சொல்லி காங்கிரஸ் அங்கத்தினர்கள் உட்கார வைக்கப்படிருக்கிறார்கள். அந்த யாதாஸ்து சமர்ப்பிக்கப்பட்டபொழுதே பம்பாயிலும், இதர நகரங்களிலும் பலத்த கலவரங்கள் நடந்து இருக்கின்றன. ஆனால் இந்த ராஜ்யத்தில் தங்கள் கருத்துக்களை ஜனநாயக அடிப்படையில் திருத்தங்கள் மூலமாகக் கூட எடுத்துச் சொல்ல அனுமதி கொடுக்கப்படவில்லை என்றால், அவர்களும் பேசாமல் இருக்கிறார்கள் என்றால்



29th March 1956] [Sri A. Ratnam]

என்ன அர்த்தம் ? பொதுத் தேர்தல் வரப்போகிறது. பல இடங்களில், ஸ்தானங்களில் போட்டி இடுவதற்கு காங்கிரஸ் டிக்கெட்டுகள் வரவேண்டும், இந்தச் சமயத்தில் காங்கிரஸ் மேலிடத்திற்கு இஷ்டமில்லாத காரியத்தைச் செய்யக் கூடாது எனச் சும்மா இருக்கிறார்களோ என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

**MR. SPEAKER : I have told the hon. Member already that there should be no discussion about the political parties and that the discussion should be strictly confined to the clauses that are being discussed. I find the hon. Member for the second time speaking only about the Congress Party. I request him to confine his remarks pertinently to the clauses which are under discussion.**

SRI A. RATNAM : தலைவர் அவர்களே, ஸ்ரீ கோவிந்தன், பழனிசாமி கவுண்டர் முதலியவர்கள் பேசிய நிலையிலிருந்து தான் நான் அவ்வாறு பேசும்படியாக ஏற்பட்டது. ஒருவர் கருத்தை எடுத்துக் கூறக் கூடாதென்பது அல்ல. ராஜ்ய சீர் அமைப்புக் கமிஷனுடைய யாதாஸ்தில் ஒருவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவில் செங்கோட்டை தாலுக்காவின் பூராப் பகுதியும் கேரள ராஜ்யத்தோடு சேரவேண்டுமென்று இருக்கிறது. இது சரியல்ல. அந்தப் பகுதியிலுள்ள தமிழ் பிரதேசங்கள் தமிழகத்தோடு சேர வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம்.

எஸ்.ஆர்.சி. ரிப்போர்ட்டு தயார் செய்யும்போது, பண்டித நேரு அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இரண்டு ராஜ்யங்களின் சில காரியங்களில் சில திருத்தங்கள் செய்யவேண்டிவரும்போது, இரண்டு ராஜ்யங்களின் சம்மதத்தின் பேரில்தான் கொண்டு வரப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இப்போது தமிழ் மக்களை கேட்காமல் இந்த சட்டசபையையும் கலந்தாலோசிக்காமல் செங்கோட்டையில் ஒரு பகுதியை திருவாங்கூருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த செங்கோட்டைப் பகுதி (புளியாரா **மலைப்பகுதி நீங்கலாக**) திருவாங்கூர்-கொச்சி ராஜ்ஜியத்துடன் சேர்க்கக்கூடாது, தமிழ் ராஜ்ஜியத்துடன் சேர்க்க வேண்டுமென்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். செங்கோட்டை-பீர்மேடு, தேவிகுளம் தமிழ் ராஜ்ஜியத்துடன் சேரவேண்டுமென்று ஏற்கெனவே எஸ்.ஆர்.சி. ரிப்போர்டில் சொன்னபோது அங்கு 72 சதவிகித மக்கள் தமிழர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்பொது கொடுக்கப்பட்ட சமாதானம் வேறு. அங்கு இருக்கும் தமிழர்கள் எல்லாம் **floating population** என்று சொல்லப்படுகிறது. நிதி மந்திரி அவர்கள் ஏற்கனவே இந்த எல்லைப்பகுதிகளைப்பற்றி பேசும்போது இதைப்பற்றி வெகு விளக்கமாக பேசினார்கள். அங்கு பல ஆண்டுகளாக தமிழர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அங்கே இருக்கும் நிலங்கள், சொத்துக்கள் எல்லாம் தமிழ் மக்களுடையது. அங்கு 72 சத விகிதத்திற்கு மேல் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆகவே பீர்மேடு, தேவிகுளம் நம் சென்னை ராஜ்ஜியத்துடன் சேரவேண்டுமென்று இங்கே தீர்மானம் ஏற்கனவே செய்து முடித்திருக்கிறோம். அந்த தீர்மானத்திற்கு எதிரிடையாக எங்கள் திருத்தமில்லை. எந்த தமிழர் பிரதிநிதியினுடைய கருத்துக்கும் இத்திருத்தம் விரோதமாக இருக்கமுடியாது. கட்சி கட்டுப்பாட்டின் காரணமாக இந்தத் திருத்தத்துக்கு விரோதமாக இருக்கலாமே ஒழிய மற்றபடி எவரும் இத் திருத்தத்தை புறக்கணிக்கமுடியாது. எனவே இந்த 12வது திருத்தத்தை உடனடியாக இந்த சபை ஒத்துக்கொண்டு சிபார்சு செய்தால் தேவிகுளம், பீர்மேடு, சித்தூர், நெய்யாற்றங்கரை போன்ற பகுதிகள், செங்கோட்டை பகுதியும் சென்னை ராஜ்ஜியம் பெற நாம் உதவியவர்கள் ஆவோம். அப்போது தான் நம் தமிழ் மக்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் நல்ல தொண்டு செய்தவர்கள் ஆவோம். (4-26 p.m.)

[Sri A. Ratnam] [29th March 1956

நாம் தமிழ் மக்களுக்கு நன்மையைச் செய்ய இந்த சபைக்கு வந்தோம். தற்போது மொழி அடிப்படையில் ராஜ்ய புனரமைப்பு உருவாக இருக்கிறது. இந்த சமயத்தில் தமிழ் பேசும் பகுதிகளை எல்லாம் சென்னை ராஜ்யத்துடன் சேர்க்க முயற்சிக்கவேண்டும்.

பட்டம் தாணு பிள்ளை திருவாங்கூர்-கொச்சி ராஜ்ஜியத்தில் ஆட்சி நடத்தும்போது, சமீபத்தில் தேவிகுளம், பீர்மேடு மற்ற தமிழர்கள் வாழும் பகுதிகளில் நடந்த சதி, கொலைகள், துப்பாக்கிப்பிரயோகம் போன்றவைகளை நாம் இன்னும் மறக்கவில்லை.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் கவனிக்கவேண்டியது, பட்டம் தாணு பிள்ளையின் ஆட்சியைப்பற்றி இதிலே சொல்லவேண்டியதில்லை.

SRI C. H. KANARAN : മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഇപ്പോൾ അവതരിപ്പിച്ചിരിക്കുന്ന ഭേദഗതികളെല്ലാം കുറെ സ്ഥലങ്ങളുമൊത്തും കുറെ സ്ഥലങ്ങളില്ലാതെയും വേണമെന്നുള്ള വാദത്തിന്റെ അടിസ്ഥാനത്തിലുള്ളവയാണ്. തമിഴ്നാട്ടിനോട് കുറെ ഭാഗങ്ങൾ കൂടെ കൂട്ടിച്ചേർക്കണമെന്ന് ഒരു കൂട്ടർ. തമിഴ്നാട്ടിൽ ചേർക്കാൻ തീരുമാനിച്ചിരിക്കുന്നത് വിട്ടുകിട്ടണമെന്ന് മറ്റൊരു കൂട്ടർ. ഇത് കണ്ടാൽ ആ പ്രദേശങ്ങളിലെ ജനങ്ങൾക്ക് ഇതിനെ സംബന്ധിച്ച് യാതൊരു അഭിപ്രായവുമില്ലെന്ന് തോന്നിപ്പോകും. നാം ഇവിടെ ഇതൊന്നു തീർച്ചപ്പെടുത്തിയാൽ മതി, സകലരും അത് സ്വീകരിച്ചുകൊള്ളും എന്ന അടിസ്ഥാനത്തിലാണ് ഈ ഭേദഗതികൾ കൊണ്ടുവന്നിരിക്കുന്നതെന്ന് തോന്നുന്നു. എന്റെ സ്നേഹിതന്മാർ ശ്രീ മുഹമ്മദ് ഷാഫിയും ശ്രീ കെ. ടി. ശ്രീധരനും കൊണ്ടുവന്നിരിക്കുന്ന ഭേദഗതികളിൽനിന്ന് അതാണ് എനിക്ക് മനസ്സിലാക്കാൻ സാധിച്ചിട്ടുള്ളത്. അതുപോലെ [illegible] ചിറ്റൂരും തമിഴ്നാട്ടിനു വേണമെന്ന ഭേദഗതി കൊണ്ടുവന്നിരിക്കുന്നതിന്റെ ഉദ്ദേശ്യം മനസ്സിലാകുന്നില്ല. തമിഴ്നാട്ടിനു വേണ്ടിയും കേരളത്തിനു വേണ്ടിയും ഞങ്ങൾ ഗംഭീരമായിട്ട് വാദിച്ചിരുന്നു എന്നെല്ലാം നാട്ടിൽ ചെന്ന് പ്രചരണം നടത്താൻവേണ്ടി മാത്രമാണ് ഈ ഭേദഗതികൾ കൊണ്ടുവന്നിരിക്കുന്നതെന്ന് ഞാൻ പറയും. കന്യാകുമാരി മുതൽ കോയമ്പത്തൂർ നീലഗിരിയെല്ലാം ഉൾപ്പെടുന്നതിന് ലോകസഭ വരെ കിട്ടാൻവേണ്ടി ഞങ്ങൾ വാദിച്ചു, പക്ഷേ ഫലപ്പെട്ടില്ല എന്ന് നാട്ടിൽ ചെന്ന് പ്രചരണം നടത്താൻ ഇത് പ്രയോജനപ്പെട്ടേക്കാം. അതിർത്തിതർക്കങ്ങൾ തീർക്കാൻ ഒരു കമ്മീഷനെ നിയമിക്കണമെന്നും ആ കമ്മീഷന്റെ തീരുമാനം എല്ലാ കക്ഷികളും സ്വീകരിക്കണമെന്നുമുള്ള തത്വം അംഗീകരിച്ചു കഴിഞ്ഞാൽ ഈ വാദകോലാഹലങ്ങൾകൊണ്ടൊന്നും കാര്യമില്ല. തർക്കം തീർക്കേണ്ട മാർഗ്ഗം ഇതല്ല. കുറെ ഭേദഗതികളെല്ലാം അവതരിപ്പിച്ച് വോട്ടെടുത്ത് [illegible] പറ്റുമെന്ന് തന്നെയിരിക്കട്ടെ, തർക്കം അതുകൊണ്ടൊന്നും തീരാൻ പോകുന്നില്ല. [illegible] തീരണമെങ്കിൽ ഒരു കമ്മീഷനെ വിട്ടുകൊടുക്കുകയാണ് ഏറ്റവും നല്ല മാർഗ്ഗം. ഈ ഭേദഗതികൾ സ്വീകരിച്ചാൽ അതിർത്തിതർക്കങ്ങൾ തീർക്കാൻ [illegible] വരുമെന്നാണ് എന്റെ അഭിപ്രായം.

4-32 p.m. SRI R. KRISHNAN : മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഞാൻ ഈ ഭേദഗതികളെ എതിർക്കുന്നു. എന്റെ സ്നേഹിതൻ ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ ശ്രീ വിനായകം കൊണ്ടുവന്നിട്ടുള്ള ഭേദഗതിയിൽ ചിറ്റൂർ താലൂക്കുകൂടെ വേണമെന്ന് പറയുന്നുണ്ട്. ചിറ്റൂർ താലൂക്കിന്റെ കാര്യം എനിക്കു നല്ലപോലെയറിയാം. ചിറ്റൂരിൽ തമിഴർ ഭൂരിപക്ഷമുണ്ടെന്ന് പറയുന്നതിന് യാതൊരടിസ്ഥാനവുമില്ല. മലയാളികളായ നായന്മാർ, ഈഴവർ മുതലായ സമുദായക്കാരാണ് അവിടെ അധികമുള്ളത്. ചിറ്റൂരിന്റെ പ്രകൃതിയും കൃഷിയും കൃഷിരീതിയുമെല്ലാം കേരളത്തിലേതുപോലെയാണ്. അങ്ങിനെയിരിക്കെ ചിറ്റൂർ താലൂക്ക് തമിഴ്നാട്ടിനോട് ചേരേണ്ടതാണെന്ന് പറയുന്നത് എന്ത് ന്യായത്തിന്മേലാണെന്ന് മനസ്സിലാകുന്നില്ല. പിന്നെ പാലക്കാട്ടിന്റെ കാര്യം ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ ശ്രീ എം. പി. സുബ്രഹ്മണ്യം കൊണ്ടുവന്നിട്ടുള്ള ഭേദഗതിയിൽ "തിരു-കൊച്ചിയിൽപ്പെട്ട പാലക്കാട് താലൂക്ക്" തമിഴ്നാട്ടിൽ ചേർക്കണമെന്നാണ് പറഞ്ഞിരിക്കുന്നത്. പാലക്കാട്ടിനെ കുറിച്ച് അദ്ദേഹത്തിന് അത്രയ്ക്ക് വിവരമുള്ളവെന്ന് പറഞ്ഞുകഴിഞ്ഞാൽ പിന്നെ അതിനെപ്പറ്റി കൂടുതൽ പറയേണ്ടതായിട്ടില്ലല്ലോ. പാലക്കാട് ഏത് ദിക്കിലാണെന്നുപോലും മനസ്സിലാക്കാതെയാണ് അദ്ദേഹം ഈ ഭേദഗതി അവതരിപ്പിച്ചിരിക്കുന്നത്. അതുകൊണ്ട് ഈ ഭേദഗതികളൊന്നും കാര്യം മനസ്സിലാക്കിക്കൊണ്ടോ ന്യായം വച്ചുകൊണ്ടോ കൊണ്ടുവന്നിട്ടുള്ളതല്ല, തർക്കങ്ങളും കുഴപ്പങ്ങളും വർദ്ധിപ്പിക്കാൻവേണ്ടി മാത്രമുള്ള ശ്രമങ്ങളാണിത്. ഈ ഭേദഗതികളൊന്നുംതന്നെ സ്വീകരിക്കരുതെന്നാണ് എന്റെ അപേക്ഷ.



29th March 1956]

* THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, there are two sets of amendments. The first set claims that the five southern taluks of Travancore-Cochin should not be allotted to Madras. The second set claims that Devikulam, Peermede and certain other areas also in the Travancore-Cochin State should be allotted to Madras. It is something like claim and counter-claim in a Court of Law. I could very well understand if these claims are made for the first time. Then we need not take any decision and we may leave it to the decision of Parliament or the concerned authorities. All these matters have been considered and the very argument which I put forward, viz., that reopening these decisions will create further bitterness and lead to arguments and counter-arguments is proved by these two sets of amendments. Therefore, Sir, for the reasons I have already adduced, I would once again appeal to the hon. Members not to attempt to reopen this question once again and then bring in confusion into the picture. That is my answer to Amendment Nos. 10, 11 and 12. With regard to Amendment No. 13, viz., appointment of a Boundary Commission, I can very well understand if there is a new case which requires investigation and after investigation those facts have to be assessed again and a decision to be taken. There was the States Reorganization Commission presided over by an Ex-Judge of the Supreme Court who was also the Governor of a neighbouring State and also two other important public men. As far as Mr. Panikkar is concerned, we may say that he is a Malayalee. Leave him alone. But there were Messrs. Fazl Ali and Kunzru against whom we cannot say that they were likely to take a partisan attitude. They have gone into the matter carefully and they have given certain decisions. Then after that, all the matters were placed before the Prime Minister, the Home Minister and after considering all the facts and figures put before them, they have also given their decision. Whom are we going to convince hereafter that the decision is wrong and that therefore there should be a reversal of this decision? It will be merely for our satisfaction and to keep this case pending, it can be done. At certain stage we should have the courage to take up the responsibility and tell the people that we have tried our best here but a final decision has been reached and so, we should abide by it. Of course, if we do not have that courage, then we can leave everything undecided even with regard to the five southern taluks. We may say " Let a final decision be taken by the Boundary Commission or somebody. We do not want to express any view in respect of any issue ". So, my appeal once again to the hon. Members would be not to press these amendments and create further confusion and increase the bitterness by claims and counter-claims. After all, it is not we alone that can claim as we have seen the hon. Members from Malabar have put in their counter-claims. Therefore, since these claims have been considered and decisions have been taken and since it is not a case of losing what we already had, I would appeal to all hon. Members not to press any of these amendments. I am sorry it is not possible for the Government to accept any of these amendments.

[29th March 1956

SRI K. VINAYAKAM : A point of clarification, Sir. The Fazl Ali Commission consisted of three eminent men. We do not for one moment doubt their integrity or their honesty or their efficiency to tackle this problem. But, is it not a fact that Mr. Fazl Ali who hails from Bihar has abstained from taking part in the deliberations of this Commission whenever question concerning Bihar were taken up whereas Mr. Panikkar who hails from Malabar has not done the same thing so as to absolve him from all accusations?

MR. SPEAKER : The hon. Member is not quite in order when discussing this clause to go into the constitution of the Commission and all that. The Hon. Minister said that in order to show that it was an impartial Committee which had gone into this question. I would also like to impress upon the hon. Members that this is not a Bill which we are going to pass into law. The main object of this Bill being referred to this Assembly is to have the benefit of the views and the opinions of the hon. Members on various points that are there in the Bill and these amendments serve the useful purpose of focussing attention on those points. Therefore, it is not very necessary that each one of these amendments should be actually put to vote. Full freedom is given for expressing your opinions on these points and then it would be advisable that these are withdrawn in the light of the discussions that we had. Of course, it is open to any hon. Member to press his own amendment.

SRI K. VINAYAKAM : I would request the Hon. Speaker to permit me to say what I have got to say. Sir, I have not cast any aspersions against any individual. I only wanted to raise a point for clarification which I thought the Hon. the Leader of the House could enlighten me. Because, is it not a fact that Mr. Panikkar, coming from Kerala, has had a hand in solving all these problems and he has a right because he has been appointed to serve as a Member of that Commission? But, if really such eminent men wanted that we should not suspect them of their *bona fides*, Mr. Panikkar could have followed the example of Sri Fazl Ali, who abstained from the deliberations whenever questions concerning Bihar were discussed.

4-40 p.m. The amendment of Sri Kunhi Mohamed Shaffee was put and lost.

The amendment of Sri K. T. Sreedharan was put and lost.

MR. SPEAKER : Is the hon. Member, Sri Vinayakam, pressing his amendment?

SRI K. VINAYAKAM : Sir, I press my amendment with all the emphasis at my command. (Laughter.)

The amendment of Mr. Vinayakam was put and lost.

The amendment of Sri Thangavelu was put and lost.

The amendment of Sri Swayamprakasam was put and lost.

The amendment of Sri M. P. Subramanyam was put and lost.



29th March 1956]

*New Clause 4-A.*

MR. SPEAKER : We shall take up this clause at the end as it deals with the general point, viz., the naming of the reorganized State of Madras as ' Tamil Nad '.

SRI K. VINAYAKAM : This can be taken up now

MR. SPEAKER : Yes, it can be taken up now.

SRI K. VINAYAKAM : Sir, I move the following amendment which stands in my name :—

SRI P. RAMAMURTHI: Sir, I bow to your ruling. But before proceeding further, I would like to bring to the notice of the Hon. Speaker that this amendment was given notice of not to this particular clause. This amendment was given as an amendment to the resolution which the Hon. the Leader of the House had given notice of. Unfortunately this amendment had been put under this clause. There must be some mistake somewhere. Therefore, I submit that I may be allowed to move this amendment to the final resolution that will come later on.

MR. SPEAKER: After all, the States Reorganization Bill is before the House for expressing opinion. And, as I said, these are not strictly amendments. If the hon. Member has got any other method by which he can express his opinion, that can be decided later. Because, I find that in the end the views and the resolutions of the House regarding this Bill are going to be forwarded to the Government of India.

*Clauses 15 to 21.*

MR. SPEAKER: The hon. Member Sri S. P. Thangavelu will move his amendment.

SRI S. P. THANGAVELU: Sir, I move the amendment . . . .

SRI A. RATNAM: Sir, I want to know why the hon. Member Sri S. P. Thangavelu has been asked to move the amendment when my name stands first in the list.

MR. SPEAKER: I was told that the hon. Member Sri S. P. Thangavelu would move his amendment, and so I called on that hon. Member to move his amendment. You can as well move your amendment.

[31st March 1956

Sri A. RATNAM : Sir, I move the amendment standing in my name, namely :—

" *Delete* clauses 15 to 21 in Part III and *renumber* the other clauses."

(Sri K. T. Sreedharan rose in his seat.)

Mr. SPEAKER : It is enough if one of the five hon. Members who have given notice of the amendment moves the amendment. It is not necessary that all the five hon. Members should move the same amendment.

The amendment was duly seconded.

Mr. SPEAKER : Amendment moved :

" *Delete* clauses 15 to 21 in Part III and *renumber* the other clauses."

Sri A. RATNAM: கனம் சபாநாயகர் அவர்களே இந்த திருத்தமானது மிகமிக முக்கியத்வம் வாய்ந்த திருத்தம். காரணம் இந்த சபையிலே ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட S.R.C. ரிப்போர்ட்டில் இந்த Zones, Zonal Council-ஐப் பற்றி ஒரு வார்த்தையும் கிடையாது. இந்த Zonal Council என்பது 15-லிருந்து 21 கிளாஸ்கள் வரை பொருந்தியது ஆகும். இதற்கு முன்னர் மொழிவழி அடிப்படையில் ராஜ்யங்களை பிரிக்கவேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டு அது அறிவிக்கப்பட்டது. அ த நேரத்திலே நம்முடைய ராஜ்யத்திலே மட்டுமல்ல, எல்லா ராஜ்யங்களிலும் கிளர்ச்சிகள் கிளம்பி 'இது சரியான தீர்ப்பு அல்ல; மக்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டிருக்கிறது' என்று கோஷங்களும், கிளர்ச்சிகளும் ஏற்பட்டு அதனால் பல இடங்களிலே துப்பாக்கி பிரயோகங்கள்கூட நடந்து இருக்கின்றன. அவைகளைப்பற்றி இன்று விவரிக்கவேண்டிய அவசியம் கிடையாது. இந்த குழப்பங்களையும், போராட்டங்களையும் கொண்ட நேரு சர்க்கார் மத்தியிலே தட்சிண பிரதேசம் போன்ற மண்டலங்களை எல்லாம் அவர்களுடைய ஆலோசனைகளாக சொல்லிவந்தார்கள். அப்படி சொல்கின்ற நேரத்திலே நம்முடைய ராஜ்யத்தில் இதனை எதிர்த்து பல காரியங்கள் நடைபெற்றன. இதனை பல ராஜ்யங்கள் எதிர்த்தன. அதற்காக பலர் உயிரைக்கூட இழந்தனர். அந்த நிலையிலே இருக்கும்பொழுது Zonal Council என்றெல்லாம் இந்த புதுமாதிரியான திட்டம் புகுத்தப்பட்டு இருக்கிறது என்றால் இது பசுந்தோல் போற்றிய புலியாக மாறிவிடும்போல் இருக்கிறது. இதற்கு முன்பு நிதி அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, இவைகளுக்கு இன்னும் அதிகமான பொறுப்புகளும் கொடுத்து பல காரியங்களை செய்ய முடியும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். தட்சிண பிரதேசத்தை ஏற்றுக் கொண்டால் ஒருவாறு மக்களுக்கு நன்மை கிடைத்ததாக இருக்குமே தவிர இந்த Zonal Council-ல் இருக்கிற விதிகளைப் பார்த்து பரிசீலிக்கிற நேரத்திலே பிரசிடெண்டு அவர்களாலே நியமனம் செய்யப்படுகின்ற Union Minister ஒருவரும் நம்முடைய ராஜ்யத்திலே இருக்கிற முதலமைச்சரும், மற்றவர்களையும் போட்டு செய்யப்படுகிற ஒரு காரியமாக இருக்கிறது; இதன் மூலமாக நம் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு மக்கள் சபைக்கு M.P.-களாக அனுப்பப்பட்டு இருக்கிறவர்கள் அங்கு நம்முடைய ராஜ்யங்களைப்பற்றி நம்முடைய ராஜ்யத்திலே இருக்கிற மக்களுடைய அபிப்பிராயம் என்ன என்று பிரதிபலித்து பேசுவதற்குக்கூட இது தடையாக முடியும். காரணம் இது மத்திய சர்க்கார் என்ன சொல்கிறார்களோ அதனை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்த Council இருக்க முடியுமே தவிர, இந்த நியமனம் பெற்ற மெம்பர்கள் அங்கே இருந்து கொண்டு அந்த மத்திய சர்க்கார் என்ன சொல்கிறார்களோ அதனை தீர்மானித்து அவர்களுக்கு சிபார்சு செய்யக்கூடிய நிலையிலேதான் இந்த Zonal Council இருக்குமே தவிர வேறு கிடையாது. உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் என்றால் உத்தியோகஸ்தர்கள்தான் எல்லா காரியத்தையும் நடைமுறையில் செய்யக்



31st March 1956] [Sri A. Ratnam]

கூடிய பொறுப்பு வாய்ந்தவர்கள். அவர்களுக்கு ஓட்டுரிமை இன்று கொடுக்கப்படவில்லை. ஏதோ மெம்பர்களுக்குத்தான் ஓட்டுரிமை கொடுக் கப்பட்டிருக்கிறதே தவிர ஆபீசர்களுக்கு கிடையாது. ஆனால் அட்வைசரும், முதல் மந்திரிகளும்தான் இந்த கவுன்சிலில் உட்கார்ந்துகொண்டு ஏதாவது செய்வார்கள் என்றால், அதனை ஒவ்வொரு ராஜ்யமும், மத்திய அரசாங்க மும் உத்தரவுகளையோ அல்லது சர்குலர் போன்ற நோட்டீஸ்களையோ அனுப்பி என்ன வேண்டுமோ அதனை அமுல் செய்துகொள்ளலாம். இந்த நிலையில் இருக்கிற இந்த கவுன்சில் மூலமாக மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏதாவது பார்லிமெண்டில் பேசினால், இது Zonal Council-லிருந்து சிபார்சு செய்யப்பட்டு காரியங்கள் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது. எனவே மெம்பர்கள் பேசுவதற்கு ஆதாரமே கிடையாது என்று அங்கு rule out செய்வதற்கு வேண்டிய காரியமும் இருந்துகொண்டிருக்கும் என்று நாங்கள் அச்சப்படுகிறோம். அது மட்டுமல்ல. இந்த தட்சிணப் பிரதேசத்தை தமிழ் மக்கள் விரும்புவது கிடையாது. விரும்பவும் இல்லை. அம்மாதிரியே மைசூரிலும், மற்ற ராஜ்யங்களிலும் இதனை எதிர்க்கிறார்கள். அந்த நேரத்திலே மறைமுகமாக ஒரு Zonal Council, இதனாலே எல்லாவற்றையும் தீர்த்துக்கொள்ள முடியும் என்று சொல்வதானது மக்களை ஏமாற்றும் வித்தையாகத்தான் முடியுமே தவிற வேறு அல்ல என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படு கிறேன். எனவே இந்த திருத்தத்தின் மூலமாக இந்த Zonal Council-ஐ நாம் தவிர்க்க முடியும். எனவே 15-வது விதி முதல் 21 விதி வரையிலுள்ள 3-வது அத்தியாயம் இந்த திட்டத்திலே தேவைப்படாது என்று கூறிக்கொண்டு இந்த திருத்தத்தின் மூலமாக 3-வது அத்தியா யத்தை எடுத்துவிடும்படி கோருகிறேன்.

* Sri K. VINAYAKAM : Mr. Speaker, Sir, we are objecting to 11-11 a.m.
the provisions made in this Bill for the formation of Zonal Councils because in no other Constitution of any country in the world there exists such a provision for the formation of Zonal Councils. This Zonal Council which is created is an intermediary body between the State and the Central Government. This is a new innovation, Sir. Why we are objecting to the formation of such Councils is for the reason that these Councils are given powers of supervision over us. I may even say that Zonal Councils will act as watch-dogs of the Central Government over the affairs of the various States. The Governor has got powers under the provisions of the Bill to nominate two Ministers as Members of this Zonal Council while the Chief Minister *ipso facto* by virtue of his office is also a member of this Council. Therefore, the invisible hand of the Governor in the functioning of the Council is there. This is a vital matter and this goes against the very spirit of the provisions of the Constitution itself. By vesting the Governor with the power to nominate two Members to the Council, *ipso facto* he becomes more powerful than even the President of the United States of America. This Zonal Council is supposed to be an advisory body. But this has been given statutory powers, according to the provisions of the Bill. The Chief Secretary of each State represented on the Zonal Council will also be a Member of the Council. This Council has been given wide powers. According to the provisions made, ' this Council may discuss any matter in which some or all of the States represented in that Council . . . have a common interest ' and ' all questions . . . shall be decided by a majority of votes of the Members present . . .' Therefore, in deciding questions the majority of members in that body will have a voice, and therefore this Council becomes a statutory body . . .

[31st March 1956

THE HON. SRI C. SUBRAMANIAM: It may be a statutory body but still it is an advisory body. The hon. Member was saying that some statutory power was being conferred on this body. I wish to know what statutory power has been conferred on this body. By statute, it is only an advisory body and that is why no executive or legislative or judicial power is being transferred to this body at any time. Evidently the hon. Member is under a misapprehension.

SRI K. VINAYAKAM: Sir, any decision taken in this Council is to have effect if it commands the support of a majority of the Members present at the time the decision is taken. (The Hon. Sri C. Subramaniam: That is only a recommendation.) Though to start with this Council may be entrusted with advisory powers, later on this Council may be vested with statutory powers. Our fear is this. In the South there is a clamour against the introduction of Hindi. As far as this question is concerned, the attitude taken by our State Government is conciliatory. I consider that the formation of Zonal Councils is only a ruse and an indirect move for imposition of Hindi on all the Southern States. I shall explain this. If four Southern States are brought in this Zonal Council, and if they function together in this Council, I wish to ask what language except Hindi is going to be the medium of communication between the four States in the Zonal Council and between the Zonal Council and the Central Government. This is an indirect move for spreading Hindi to a greater degree in the South. This is another way of forming Dakshina Pradesh. I was told in a private talk by one or two Ministers that this is nothing but 'Dravida Nadu', for achieving which some people in our State are agitating. But, it is not so, Sir. Who is going to preside over this Zonal Council? It is the Minister coming from the Centre that will be presiding over the meetings of this Council. Even the agenda to be discussed at the meetings of this Council will have to be approved by the Chairman of the Council. This Zonal Council is only a limb of the Central Government. I can appreciate if some of the subjects coming within the purview of the Central Government are transferred to the Zonal Councils. Then, it can be said there is some semblance of democratic principle adopted in the provisions. But, on the other hand, none of the subjects under the purview of the Centre is transferred to this body. So, I consider that it is quite unnecessary to form Zonal Councils. That is why, Sir, I oppose the formation of Zonal Councils.

11-16 a.m. SRI S. P. THANGAVELU: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ராஜ்ய புனர் அமைப்பு மசோதாவில் மண்டல சபைகள் ஏற்படுத்துவதற்காக இருக்கின்ற ஷரத்துகளாகிய 15-ல் இருந்து 21-வது அம்சம் வரை உள்ள ஷரத்துகளை இந்த மசோதாவிலிருந்து எடுத்துவிடவேண்டும் என்று கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த திருத்தத்தின் கீழ் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த ஷரத்து அவசியமில்லாதது. ராஜ்ய புனரமைப்பு மசோதாவில் இந்த ஷரத்துக்கள் இருக்கவேண்டிய அவசியமே இல்லை. மண்டல சபைகள் செய்யவேண்டிய பல வேலைகள்



31st March 1956] [Sri S. P. Thangavelu]

இந்த ஷரத்துக்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவைபற்றியெல்லாம் ஏற்கெனவே நமது அரசியல் சட்டத்திலேயே 263-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறதென்பதை சபையோரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் இடையேயுள்ள பொதுவான விஷயங்கள் சம்பந்தமாகவும் எல்லா ராஜ்யங்கள் சம்பந்தமாகவும் உள்ள பல பொதுவான விஷயங்களிலும் ராஜ்ய அரசாங்கங்களுக்கு அரசியல் சட்டத்தில் 263-வது பிரிவில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரங்களை உபயோகித்து ராஜ்ய சட்டசபைகளின் மூலம் காரியங்களைச் செய்யலாம். ராஜ்ய சட்ட சபைகளின் மூலம் நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் தாராளமாக நிறைவேற்றலாம். ஆகவே ஏற்கெனவே அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் நாம் வேண்டிய காரியங்களை நிறைவேற்ற முடியும். அந்த அதிகாரங்களை மறுபடியும் ராஜ்யபுனரமைப்புச் சட்டத்திலுள்ள ஷரத்துக்களிலும் கொண்டுவரவேண்டிய அவசியமில்லை. ஆகவே இந்த ஷரத்துக்களை இந்த மசோதாவிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று கோரும் இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்த சபையில், பேசும்போது கனம் நிதி அமைச்சர் அவர்கள், இந்த மண்டல சபைகள் எப்படி வேலை செய்யும் என்பதுபற்றி குறிப்பிட்டார்கள். முதலில் இவை ஆலோசனை சபைகளாகத்தான் இருக்குமென்றும் பிறகு இவைகளுக்கு மேலும் மேலும் அதிகாரங்கள் கொடுக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்குமிடையே எப்படி மண்டல சபைகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படுமென்பது சரியாகத் தெரியவில்லை. ஒருவேளை, இந்த மண்டல சபைகளுக்கு அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டு நாளாவட்டத்தில் தட்சிணப் பிரதேசம் போன்ற ராஜ்யங்கள் ஏற்படுத்தப்படுமோ என்று தோன்றுகிறது. பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக இப்போது தட்சிணப் பிரதேசம் அமையமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகவே மறைமுகமாக தட்சிணப் பிரதேசம் கொண்டுவருவதற்கு இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவோ என்ற பயம் ஏற்படுகிறது. தட்சிணப் பிரதேசம்பற்றி நமது ராஜ்ய மந்திரிகள் இன்னும் அதிகார பூர்வமாக தங்கள் கருத்தைத் தெரிவிக்கவில்லை. கனம் நிதி அமைச்சர் அவர்கள்தான், தன் சொந்தக்கருத்து என்ற முறையில், தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படுவதால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி பத்திரிகையாளர்களிடத்தில் விளக்கமாக கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த சர்க்காரின் திட்டவட்டமான அபிப்பிராயம் என்ன என்பதைப் பற்றி இந்த சபையிலோ வெளியிலோ மந்திரிகள் சொல்லவில்லை. மக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டுதான் தட்சிணப் பிரதேசம் அமைப்பது முடிவு செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருந்துங்கூட, இந்த மண்டல சபைகளுக்குக் கொடுக்கப்படும் அதிகாரங்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கும்போது, இந்த மண்டல சபைகள் ஏற்பாடு கடைசியில் தட்சிணப் பிரதேசம் என்று உருவாகிவிடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. அப்படிச் செய்தால் அது உண்மையில் ஜனநாயகத்திற்கு விரோதமாகும். மண்டல சபைக்கு அதிகப்படியான அதிகாரம் கொடுக்கப்படுமேயானால், 11-22 a.m. ராஜ்ய சட்டசபையாகிய இந்தச் சபையினுடைய அந்தஸ்தே பாதிக்கப்படக்கூடும் என்று நான் கருதுகின்றேன். ராஜ்ய சட்டசபையும் மத்திய சட்டசபையும் சில வரையரைக்குட்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் இயங்கிவருகின்றன. இந்த இரண்டு சபையும் ஒன்றுக்குள்ள அதிகாரத்தில் மற்றொன்று சாதாரணமாக தலையிட முடியாத அளவு அரசியல் திட்டத்திலே திட்டவட்டமாக வகுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு சபைகளுக்கும் இடையிலே வேறொரு அதிகாரம் கொடுக்கப்படக்கூடிய ஒரு சபையை ஏற்படுத்துவதன் மூலமாக இங்கிருக்கிற ராஜ்ய சட்டசபையின் சுய நிர்ணயத் தன்மை பாதிக்கக்கூடும். ராஜ்ய சட்டசபைகளின் சுய நிர்ணய உரிமையை பாதிக்கக்கூடிய அளவு முறையிலே மண்டல சபை பின்னால் வளரக்கூடும் என்று அஞ்சுவதற்கு இடம் இருக்கிறது. ஆகவே, 15 முதல் 21 வரையுள்ள ஷரத்துக்களை நீக்கிவிடவேண்டுமென்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தத்தை சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

[31st March 1956

* SRI K. T. SREEDHARAN : Mr. Speaker, Sir, I also have given notice of the amendment for deleting clauses 15 to 21. The intention of bringing in these clauses into the Bill may no doubt be good, but I am afraid the result cannot be achieved by the mere introduction of these clauses. We know the working of the Advisory Councils. Even the unanimous recommendations of these Advisory Councils are not implemented by the Government. So I am afraid that this will entail only huge expenditure that cannot be borne at all. By this, I am not pleading that greater executive powers should be given to these Zonal Councils. If these Councils are given executive powers, then the functioning of the State Governments would also become impossible. In order to avoid the huge expenditure and in view of the practical difficulties I suggest that these clauses may be deleted.

* THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I have been listening to the arguments put forward by hon. Members to find out the reason for opposing the idea of Zonal Councils. After listening to the arguments, I am only tempted to say that this opposition exhibits a certain amount of narrow-mindedness and parochialism if I may say so. Whatever be the set-up it is necessary for us to co-operate with the neighbouring States for the purpose of economic development. After all, hon. Members have been pleading that it should be possible by negotiation with the Travancore-Cochin Government to utilize the waters of the Western Ghats. There is a dispute about the Palar waters also, so far as Mysore is concerned. So also with respect to Andhra. It is not as if Nature has created the big rivers Godavari and Krishna mainly or solely for Andhra. It is Nature's gift to the country as a whole. Therefore, there will be economic factors which will have to be considered for the region as a whole and then recommendations will be made—not that those recommendations should be binding on anybody. Therefore, taking the benefits which will accrue for the region as a whole, if that theory is accepted, it will be good. A body is created wherein all these things could be discussed and recommendations made to the various State Governments and the Central Government. Instead of welcoming such a proposal, if it should be opposed on the ground " No, no, we should not have anything to do with neighbouring States; we should function only as separate entities ", my impression that this arises out of narrow-mindedness and parochialism is further strengthened.

Then, the hon. Member Sri K. Vinayakam brought in the argument of Hindi here. I am really surprised at his ingenuity. Leave alone these Zonal Councils. We will have to communicate with the neighbouring States and Inter-State problems will be coming up for discussion and as between the Tamil area and the Andhra area, or as between the Mysore area and the Tamil area, or as between the Kerala area and this area, we will have to talk at some stage or other even without these Zonal Councils. Because some common language would have to be used and Hindi may become the common language and therefore there may be the



31st March 1956] [Sri C. Subramaniam]

possibility or the necessity to use Hindi for these talks, shall we say that we will have nothing to do with the neighbouring States? Certainly absurdity cannot go farther than this. Therefore, I would appeal to the hon. Members not to look at it from this narrow aspect. Later on if they want to increase the powers of these Councils, we can oppose it if we think that it will not be in the interests of our State or in the interests of the region. But when that body is purely an advisory body and is a forum for discussing not only Inter-State problems but also common problems which may be within the jurisdiction of the Centre, I am afraid I cannot be a party to lend support to the opposition. Hon. Members are afraid of the ghost of Dakshina Pradesh and think that this may be the starting point for Dakshina Pradesh. It is for the people to decide whether Dakshina Pradesh should come, if it is to come later on. But, certainly, the Zonal Council is not Dakshina Pradesh and I may assure the hon. Members if they want any such assurance. Therefore, to think of something which . . .

SRI K. VINAYAKAM : Sir, the Hon. Minister stated that we are afraid of the ghost.

* THE HON. SRI C. SUBRAMANIAM : I am saying ' ghost ' because hon. Members do not know what Dakshina Pradesh is. As even children get frightened at the very mention of the word ' ghost ', so also some of the hon. Members get frightened by the fact that Dakshina Pradesh is coming and they are afraid of it even without knowing what it is. That is why I am saying it is a ' ghost '.

Apart from that, the point for consideration is this. Whether we want Dakshina Pradesh or not is not the issue here. Here is a solely advisory body being created for the purpose of considering inter-State problems and common problems relating to this region. Instead of supporting the proposal, I am really surprised to find that the Opposition should have thought fit to oppose it. 11-30 a.m.

MR. SPEAKER : Now, I put the amendment to the vote of the House. The question is—

" *Delete* clauses 15 to 21 in Part III and *renumber* the other clauses."

The amendment was put and lost.

*Clause* 16.

SRI S. RAMALINGAM : Sir, I move the following amendment standing in my name, namely :—

" *For* sub-clause (1) (*b*) of clause 16, *substitute* the following :—

' (*b*) the Chief Minister of each of the States included in the zone, two other Ministers of each such State to be nominated

by the Governor and three members of the Legislative Assembly of each such State elected by the elected members of the said Assembly on the system of proportional representation.' "

SRI K. P. GOPALAN : I second it, Sir.

SRI K. T. SREEDHARAN : Sir, I move the following amendment standing in my name, namely :—

" *For* the existing sub-clause (1) (*b*) of clause 16 *substitute* the following :—

' (*b*) the Chief Minister of each of the States included in the zone and three members of each of the Legislative Assemblies, elected on the principle of proportional representation.' "

SRI O. KORAN : I second it, Sir.

SRI H. B. ARI GOWDER : Sir, I move the following amendment standing in my name, namely :—

" *After* the existing sub-clause 1 (*d*), *add* the following new sub-clause 1 (*e*) :—

' One non-official member from each State to be nominated by the Governor to represent minority interest.' "

SRI A. RATNAM : I second it, Sir.

SRI A. RATNAM : I move the following amendment standing in my name, namely :—

" *After* the existing item (*c*) of sub-clause (4) of clause 16, *insert* the following item (*d*) :—

' (*d*) three persons for the time being holding the office of the members of the Legislative Assembly in the States elected by the concerned Legislators.' "

SRI K. VINAYAKAM : I second it, Sir.

MR. SPEAKER : I find the amendments of Mr. K. P. Gopalan, Mr. Ramalingam, Mr. Sreedharan and Mr. Ratnam are almost similar. So, we may have only the amendment of Mr. Ramalingam and the other two amendments (Nos. 35 and 37) may be withdrawn.

SRI K. VINAYAKAM : I submit, Sir, that hon. Members may be allowed to speak on their amendments.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I have to move an amendment.

MR. SPEAKER : Mr. Sreedharan's amendment (No. 35) is comprised in amendment No. 34. So also the amendment of Sri Ratnam (No. 37). So, I take it that amendment Nos. 35 and 37 are, with the leave of the House, withdrawn.





THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg to move the following amendment, namely :—

" In clause 16, sub-clause (4), to item (*c*) *add* the following, namely :—

' or any other officer nominated by the State Government concerned.' "

MR. SPEAKER : Now, the amendments are before the House for discussion.

SRI S. RAMALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, ஸோனல் கவுன்சிலில் மத்திய மந்திரி ஒருவரும், அந்தந்தப் பிரதேச ராஜீய முதல் மந்திரிகளும், கவர்னரால் நியமிக்கப்படக்கூடிய இரண்டு மந்திரி களுடன், அந்தந்த சட்டசபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அங்கத்தினர்களும் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தத்தின் பிரதான அம்சமாகும். 11-35 a.m.

பொதுவிவாதத்தில் நான் பேசும்போது இது விஷயத்தை சர்க்காருக்கும் சபைக்கும் விளக்கிச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பதில் கூறுகையில் மந்திரி அவர்கள் பேசும்போது, "ஸோனல் கவுன்ஸிலிலே இங்கிருந்து போகக்கூடிய மந்திரிகளும் பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான், அவர்களும் மக்களுடைய பிரதிநிதிகள்தான் ; அவர்கள் செல்வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்கமுடியாது, முதல் மந்திரியும், மற்றும் இரண்டு மந்திரிகளும் ஸோனல் கவுன்ஸிலில் இருக்கும்போது, அவர்களைத் தவிர வேறு சட்டசபை அங்கத்தினர்கள் மூவர் இங்கிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பவேண்டிய அவசியம் இல்லை" என்று குறிப்பிட்டார்கள்.

சர்க்காரிலே வேலை செய்யும், சர்க்காருக்குப் பிரதிநிதித்துவமாக இருக்கும் முதல் மந்திரியும் இரண்டு மந்திரிகளையும் தவிர ஏன் மூன்று சட்டசபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த ஸோனல் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கவேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம் என்றால், மந்திரிகள் அந்தச் சபையில் அங்கம் வகிக்கும்போது அவர்கள் சர்க்காருடைய கொள்கையைப் பொறுத்தவரை அங்கு பிரதிநிதித்துவம் செய்வார்கள். சபையில் இருக்கக்கூடிய எண்ணத்தையும்கூட பிரதிநிதித்துவம் செய்வோம் என்று நிதி அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், இங்கு எதிர்க் கட்சியில் இருக்கிற எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் தங்களுடைய நோக்கங்கள் என்ன, கருத்துக்கள் என்ன என்பதையும் ஸோனல் கவுன்ஸிலில் எடுத்துச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கவேண்டும். இங்கிருந்து மூன்று அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஸோனல் கவுன்சிலுக்கு அனுப்பப் பட்டால், சர்க்கார்த் தரப்பிலுள்ள கருத்துக்களை மந்திரிகள் தெரிவிப்பது போல், எதிர்த்தரப்பினுடைய கருத்துக்களையும் அவர்கள் எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே, சர்க்காருடைய பிரதிநிதிகளாக மூன்று மந்திரிகளோடு சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அங்கத்தினர்களும் ஸோனல் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கவேண்டுமென்று கோரும் என் திருத் தத்தை சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

* SRI K. T. SREEDHARAN : Sir, I second the amendment. This is only to make the clause more democratic and less bureaucratic. As it is, only the Government nominees can function in the Zonal Council. The amendment seeks to provide for the representation of Opposition Members also on these Zonal Councils. The three Members of this honourable Assembly should be elected to that body on the principle of proportional representation. It is only with this intention that this amendment is moved and I am sure the Government can accept the amendment.

[31st March 1956

11-38 a.m. **Sri A. RATNAM:** கனம் சபாநாயகர் அவர்களே, ஸோனல் கவுன்ஸிலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும் என்பதுதான் இந்தத் திருத்தத்தினுடைய முக்கிய நோக்கம். ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் உள்ள தொடர்புகளை அதிகப்படுத்தி, ராஜ்யங்களுக்கிடையே உள்ள சிக்கல்களை போக்கி, அந்த மண்டலத்திலுள்ள பொதுப்படையான விஷயங்களை ஆலோசித்து மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்து, மக்களுக்கு ஆவன செய்வது என்பதை நோக்கமாகக் கொண்டு ஸோனல் கவுன்ஸில் ஏற்படுத்துவதாக இருக்கிற நேரத்திலே, ஏதோ **benami** ராஜ்யத்தைப் போன்று பிரஸிடெண்ட் அவர்களால் பொறுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்களையும், முதல் மந்திரியையும், வைத்துக்கொண்டு செய்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

**The Hon. Sri C. SUBRAMANIAM:** "**Benami**" என்றால் அர்த்தம் என்ன என்பதை அங்கத்தினரவர்கள் விளக்கவேண்டும்.

**Sri A. RATNAM:** மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.-க்கள் மூன்றுபேர்கள் இந்தச் சபை அங்கத்தினர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஸோனல் கவுன்ஸிலுக்கு அனுப்ப வழிவகை செய்யவேண்டுமென்று சொல்கிற திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**Sri P. CHELLATHURAI:** கனம் சபாநாயகர் அவர்களே, தகவல் தெரியும் பிரச்னை . . .

**Mr. SPEAKER:** The information required by the hon. Member will be given after the hon. Member Sri Ratnam finishes his speech.

**Sri A. RATNAM:** ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பிரதிநிதிகளாவது அந்தச் சபையில் அங்கம் வகிக்க ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். மக்களுடைய உள்ளடக்கத்தை அவர்கள் அங்கு பிரதிபலிக்கவேண்டும் என்பதுதான் எங்கள் திருத்தத்தினுடைய முக்கிய நோக்கம். மேலும் ஒரு சர்க்கார் ஊழியரை அதற்கு நியமனம் செய்யவேண்டுமென்ற ஒரு திருத்தத்தை நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார். எத்தனை உத்தியோகஸ்தர்களை வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளட்டும். ஆனால், நாங்கள் கேட்பது ஒவ்வொரு ராஜ்யத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பிரதிநிதிகளும் அதில் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டும் என்பதுதான். இதனைப் பிரதிபலிக்கும் எங்களுடய திருத்தத்தை சர்க்கார் சார்பில் ஏற்றுக்கொண்டால் நலமாக இருக்கும் என்று வேண்டிக்கொள்கின்றேன்.

11-40 a.m. * **Sri K. VINAYAKAM:** Sir, the amendment before the House is very simple. It only says that three Members elected by this House may be given an opportunity to serve on the Council. It does not even say that they will carry votes. (Interruption.) Even if they carry vote, it is all right. I cannot understand why the Hon. the Leader of the House is against the democratic principle involved in this amendment. When Mr. Ramalingam was pleading that an opportunity might be given to the Opposition to express their views in the Council, I overheard him saying that that was the reason why he was . . .

**Mr. SPEAKER:** The hon. Member should not refer to anything which is overheard. He should refer only to matters which are public.

**Sri K. VINAYAKAM:** Sir, the Hon. Leader of the House is going to oppose this amendment because the Opposition should not be given an opportunity to express their views in the Council.



31st March 1956] [Sri K. Vinayakam]

Sir, to-day happens to be a very unlucky day for the Opposition. We have been losing battle after battle. The Hon. the Leader of the House is not in a mood to entertain any amendment however reasonable it may look, but we have got to do our duty. We once again reiterate that, when after all, the Government are going to have confidence in their officer, they can have so much confidence in the Members of the House, not the Opposition Members but Members belonging to their Party which commands a majority in the House. They can take their own Members if it is not possible for them to take the Members belonging to our side. Therefore, I hope that the Hon. Leader of the House will at least accept this amendment which seeks to elect three Members of the House to serve on the Council. Now he comes forward with an amendment asking us to have confidence in an officer whom the Government are going to choose. That is not the Socialistic theory and the very basis of it is unreasonable. I believe, the Hon. the Leader of the House will accept our amendment.

**Sri P. CHELLATHURAI:** கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு தகவல் கேட்கவேண்டும் என்று விரும்புகிறேன். ராஜ்யத்தின் முதல் மந்திரி அவர்களும் மற்ற மந்திரிகளும் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லையா என்பதை கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாக கனம் ஏ. ரெத்னம் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**Mr. SPEAKER:** அதற்கு பதில் கனம் ரத்னம் அவர்கள்தான் சொல்லவேண்டும்.

* **Sri K. T. RAJU:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ராமலிங்கம் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். ராஜ்ய புனரமைப்பு நடந்த பின் ஸோனல் கவுன்சில் அமைக்கப் போகிறார் ராஜ்ய புனரமைப்பு நடந்த பின் ஸோனல் கவுன்சில் அமைக்கப் போகிறார்
கள். அப்போழுது நமது ராஜ்ய மந்திரிகளில் சிலரை அதில் எடுத்துக் கொள்ளப்போகிறார்கள். அப்படி எடுத்துக்கொள்ளப்போகும்போது அவர்களுக்கு ஆலோசகர்களாக இந்த சட்டசபையிலிருந்து மூன்று பேர்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த திருத்தம் குறிப்பிடுகிறது. அப்படி மூன்று பேர்களை எடுத்துக்கொண்டால் இந்தக் கட்சியிலுள்ளவர்களுடையவும் அந்தக் கட்சியிலுள்ளவர்களுடையவும் யோசனைகளைச் சொல்ல வசதியாக இருக்கும் என்பதுதான் எங்களுடைய கருத்து. சாதாரணமாக இப்பொழுது ஐக்கிய நாட்டில் சபை கூடுகிறது. அப்பொழுது பலர் யோசனையாளர்களாகச் சொல்லுகிறார்கள். சர்வதேச கவுன்சில் நடக்கிறது. அதற்கும் சிலரை யோசனையாளர்களாக எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதைப் போலவே நம்முடைய ராஜ்யத்தின் விஷயங்களைப் பற்றி ஸோனல் கவுன்ஸிலில் விவாதிக்கும்போது நம்முடைய மந்திரிகளுக்கு ஆலோசகராக இருப்பதாக மற்றும் மூன்று பேர்களை இந்த சட்டசபையிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டும் என்று திருத்தம் குறிப்பிடுகிறது. ஸோனல் கவுன்ஸிலில் பல விஷயங்களைப்பற்றி விவாதிப்பார்கள். அப்போழுது நம்முடைய மந்திரிகள் பல விஷயங்களைப்பற்றி எடுத்துச்சொல்ல மறந்துவிடுவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு பல பல வேலை பளு இருக்கிறது. இதற்கு மத்தியில் இந்த ராஜ்யத்திலுள்ள சில இலாகாக்களைப்பற்றிய விஷயங்களை எடுத்துச் சொல்ல முடியாமல் போய்விடலாம். அந்த சமயம் அவருக்கு ஒரு ஆலோசகர் இருந்தால் அதுவும் சட்டசபை அங்கத்தினர்களாக இருந்தால் அவர்கள் தவறாமல் சொல்லவேண்டியவைகளைச் சொல்வதற்கு சௌகர்யமாக இருக்கும் என்பது எங்களுடைய எண்ணம். அதனால் சட்டசபையிலிருந்து மூன்று பேர்களையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது எந்த விதத்திலும் ஜனநாயகத்திற்கு விரோதமாக இருக்காது. விவாதம் நல்ல முறையில் நடைபெறாமல் இருந்துவிடாது. பல வேலைகளோடு மந்திரிகள்

[Sri K. T. Raju] [31st March 1956

அங்கு போவதால் இப்படிப்பட்ட ஆலோசகர்கள் இருந்தால் அவர்களுக்குச் சௌகர்யமாக இருக்கும். இது ஒரு குறைந்தபட்ச கோரிக்கை. இந்தத் திருத்தத்தையாவது ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI P. RAMAMURTHI : கனம் சபாநாயகர் அவர்களே, மொழிவாரி அடிப்படையில் ராஜ்யங்கள் அமைக்கப்படவேண்டும் என்று உறுதியாக நின்று வந்தவர்கள் நாங்கள். அப்படி மொழிவழி ராஜ்யங்களை அமைத்த பிறகு ஒரு ராஜ்யத்திலுள்ள மக்களுடன் மற்றொரு ராஜ்யத்திலுள்ள மக்களுக்கு தொடர்பு இருக்கக்கூடாது என்று நாங்கள் விரும்பவில்லை. நிச்சயமாக ஒரு ராஜ்யத்திலுள்ள மக்கள் மற்றொரு ராஜ்யத்திலுள்ள மக்களுடன் தொடர்பு இருக்கவேண்டும் என்று முதலிலிருந்தே சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். ஒற்றுமை மனப்பான்மை வளரவேண்டும், அதற்காக நாம் பாடுபடவேண்டும் என்று நாங்கள் உறுதியாகச் சொல்லிக்கொண்டுவருகிறோம். அதற்காக எவ்வளவோ வேலைகள் செய்தாகவேண்டும். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தொடர்பு இருக்கவேண்டியது அவசியம். அந்த முறையில் ராஜ்யங்களைப் பிரித்து அமைக்கப்படவேண்டும் என்று சொல்லி இப்பொழுது அந்த முறையில் இந்த மசோதா வந்திருக்கிறது. அந்த முறையில் ஒரு ஜோனல் கவுன்சிலையும் அமைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்தந்த ராஜ்யங்களிலுள்ள தகராறுகளை அவ்வப்போது தீர்த்துக்கொள்வதற்காக அப்படிப்பட்ட ஜோனல் கவுன்சில்களை அமைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். தகராறுகளை தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். இவ்வளவும் இந்த மசோதாவில் அடங்கி இருக்கிறது. அந்த முயற்சியில் வெற்றி அடைவோமோ அல்லது தோல்வி அடைவோமோ அது வேறு விஷயம்.

MR. SPEAKER : I wish to draw the attention of the hon. Leader of the Opposition to the fact that we have already had a general discussion on the Zonal Council. Now we are discussing Clause 16 which relates to the composition of the Council.

SRI P. RAMAMURTHI : It is only with reference to the composition of the Council, that my argument is relevant. இந்த சபையின் நடவடிக்கை மேலும் மேலும் ஒற்றுமையை வளர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளும். விவகாரங்களை தவிர்க்க வேண்டும் என்றால் இந்நிலைமையில் நிச்சயமாக ஒற்றுமை வளரப்போவதில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். நடைமுறையில் பார்த்தால் இப்பொழுதுள்ள நிலைமையில் ராஜ்யங்களில் ஒற்றுமையைத் தீர்ப்பது என்பது முடியாத காரியம். அதிகாரிகளை நியமித்தால் கூட அந்தத் தகராறுகளை சுலபமாகத் தீர்க்க முடியாது. மக்களுடைய பிரதிநிதிகளாக இருந்தால் தான் ஒரு ராஜ்யத்துடன் மற்றொரு ராஜ்யத்திற்கு ஏற்படக் கூடிய தகராறுகளை தீர்த்து வைக்கலாம். இதை மனதில் கொண்டு தான் நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம். இது முக்கியமான திருத்தம். மேலும் மேலும் ஒற்றுமை மனப்பான்மையை வளர்ப்பதற்கு மக்களுடைய பிரதிநிதிகள் இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. அந்த முறையில் இன்றைக்கு அரசாங்கம் வேலை செய்ய வேண்டும். அந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது சட்டசபையின் பிரதிநிதிகள் வந்தால் தான் முடியும். அரசாங்க பக்கத்திலுள்ளவர்களாக இருந்தாலும் சரி எதிர்க் கட்சியிலுள்ளவர்களாக இருந்தாலும் சரி சட்ட சபையின் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். அப்பொழுது தான் எல்லோரும் ஒன்றுபட்ட அபிப்பிராயத்தைச் சொல்லுவார்கள். அப்பொழுதுதான் சகஜமான நிலைமை ஏற்படும். இந்த கண்ணோட்டத்தில் எடுத்துக் கொண்டு இந்த வகையில் இன்றைக்கு சட்டசபை அங்கத்தினர்களிலிருந்து குறைந்த பட்சம் மூன்று பேர்களை எடுத்து அனுப்பவேண்டும் என்று கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும், இது விவகாரத்திற்குள்ள விஷயம் அல்ல,



31st March 1956] [Sri P. Ramamurthi]

சண்டை போடுவதற்காக அல்ல. பொதுமக்களிடத்திலே தொடர்பு உள்ள 11-45 a.m.
அங்கத்தினர்கள் அதில் இருப்பதினால் எல்லாப் பிரச்னைகளையும் சௌஜன்யமான முறையில், ஜனநாயக அடிப்படையில் தீர்த்துக் கொள்வதற்குப் போதுமான சந்தர்ப்பங்கள் எல்லாம் கிடைக்கும் என்பதினால் இது வற்புறுத்தப்படுகிறது. முதலிலே எந்தப் பிரச்னையைத் தீர்ப்பதானாலும் நாட்டில் தகராறுள்ள இரு சாராருக்கும் சௌஜன்யமான நிலைமை இருக்கும்படியாகச் செய்ய வேண்டும். அந்த மண்டல சபைகள் ஒழுங்காக வேலை செய்ய வேண்டுமானால் இந்த அமைதியான சூழ்நிலை அவசியமாகும். ஆகவே தான் சட்டசபை பிரதிநிதிகள் மூன்று பேர் இந்தச் சபைகளில் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அமைச்சர் அவர்கள் சட்ட சபை பிரதிநிதிகள் தானே என்று பேசுவதில் பிரயோஜனம் இல்லை. எந்த அடிப்படை நோக்கத்தோடு இந்தச் சபை அமைக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறதோ அது நிறைவேற வேண்டுமானால், மந்திரிகள் அல்லாத சட்டசபை மெம்பர்கள் மூன்று பேராவது இருக்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தோடு தான் இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கியே நடக்க வேண்டும். மத்திய சர்க்காரில் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சபையில் அவர்கள் பூர்ண சுதந்திரமாகப் பணியாற்ற முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. ஜனநாயகத் தன்மை இந்தச் சபைகளில் பரிணமிக்க வேண்டுமென்றால் அவசியம் இந்தத் திருத்தம் ஒப்புக்கொள்ளப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI H. B. ARI GOWDER : Sir, as the original mover of the 11-52 a.m.
amendment, I have got to say a couple of words. I associate myself with all that has been said by the hon. Member, who preceded me. I am really surprised to see an attitude of opposition from the Hon. the Leader of the House to this. I think the day before yesterday, he said that a Minister representing the State as a whole was quite enough to represent every interest in the State on the Zonal Council. That is begging the question. I am afraid, I should differ from him. Minorities have got to be there properly represented. Whether they are in the border areas or in the central places of the States concerned or widely dispersed all over, minorities are bound to be there in each State. Their interests will have to be safeguarded. If, however, there is difference of opinion between the nominated Minister and a non-official member, the Council, will decide. Sir, I believe the Zonal Council is not meant to be a show-piece. I shall withdraw the word, if it is not acceptable. I hope it is going to be an effective organization, especially when the future set-up is likely to be on the lines of re-integration of States. It may be Dakshina Pradesh, down here and it may be something else elsewhere. Otherwise, the tiny States of the South will be mere satellites. Moreover, to make the voice of each State effective in the Council, we shall have more or less an equal number of representatives there. It is to be hoped that this Councill will be made the nucleus of a future organization that will administer more than one State. That is bound to come and if I may infer from something which I have heard personally from one of the Ministers in Delhi, these Councils are likely to be given greater powers in due course. Only the Centre wants that the States themselves ask for more powers.

SRI S. SWAYAMPRAKASAM : While supporting all the arguments advanced for the purpose of having a member of the

Assembly besides the Minister in the Zonal Council, I wish to advance one more argument. The day before yesterday, when winding up the debate the Hon. the Minister for Finance said that the Minister was after all a representative of the people and that he would take care of the interests of the people. I may point out that Ministers who may be on the Council have far less opportunities of coming into contact with the public than Members. Even now we find Ministers are led away by the departments and by the official papers before them. They do not study problems in the proper perspective. From this point of view, if Members of the Assembly are there on the Council, public opinion will be more representative there than it will be as it is.

* THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I am afraid the amendment arises out of a misconception of the functions of the Zonal Council. I am really surprised to see that those who oppose the very idea of the Zonal Council support the amendment. They do not perhaps understand the implications of this amendment. It is not as if the Zonal Council is going to function as a super-legislature over the legislatures of the various States comprising the Zone. If, however, this Zonal Council has to function as a super-legislature, I quite agree that all points of view should be expressed there and that after hearing all points of view, the Council should come to a decision on all matters before it. The Zonal Council which the Members contemplate under this amendment should have much greater powers and functions than those contemplated in the Bill. Unfortunately, even to the limited functions of the Council, there has been opposition. If it is the idea that there may be elected representatives of the people—representatives not only of the Government but also of the Legislature—I am afraid the Council will become a body which is not contemplated in the present Bill but something more than that. Therefore, if Mr. Vinayakam has supported this amendment, I beg to submit that he is contradicting himself in the light of the stand he took on a previous occasion. I will now explain the real scope of the Zonal Council because hon. Members seem to think that different points of view in the State itself should be put forward in the Council. If we allow, with reference to a particular State, different points of view and differences of opinion to be exhibited, then the Council will not be a Council of the States concerned but some other body, some committee discussing certain other things. The idea of the Zonal Council is that each State should go there to discuss matters relating to various States. Take for example a particular issue. The Ministers going there will put forward the Government's point of view. Suppose non-official members are also sent there, and they put forward a completely different point of view, then what is the position of the State Government in that Council? It is bound to be irksome and it is bound to lead to confusion there. Suppose we come to an understanding with the non-official Members who are elected to the Zonal Council that we should not disagree in the views we put forward in the Zonal Council, then those members become superfluous. The State as a unit will have to be represented there and not the different points of view existing in the State. What

12 noon.



attitude the Government should take with reference to the particular problem, that I do agree, should be decided in consultation with the parties and with the leaders of parties. I am prepared to consider that point of view. But that is not the amendment. The amendment is to the effect that the members as such should be elected by the system of proportional representation and they should have a right to function as Members of the Zonal Council having the right to take part in the discussion in the Council and in the voting and all those things. If they are elected and sent to the Council as Members, they are entitled to participate in the business of the Council. Then if with reference to a particular problem relating to the State the Ministers put forward one point of view and the others elected by the legislature if they happen to belong to another party, put forward another point of view with which the Government are not in agreement, then the position which will be created in the Council will be very difficult. It might be where we want to have a legislative forum by the method of indirect election or some other method for the whole zone, then the idea is welcome. But the Zonal Council is not such a thing at all. I would therefore tell hon. Members, particularly those who oppose the Zonal Council idea, if they are under the impression that it is a super-legislature, that it is not so. In order at least to remove that impression, this amendment should be opposed especially by those who do not want to enlarge the scope of the Zonal Council and who have objections to the proposals already made in the Bill itself. Either the non-official members now proposed by the amendment, should oppose the views of the Government or support it. As I already said, if they oppose the Government view, the situation will become irksome. If they voice the same views, then they become superfluous. In either case it is not necessary to send non-official Members to the Zonal Council. We have to function as a unit in the Zonal Council. Each State will function as a separate unit in the Council and not as a forum where the different view points of the same State are put forward and a decision arrived at there. For the purpose of deciding what attitude Government should take with reference to a particular issue coming up before the Zonal Council whether that should be discussed with the party leaders or by a committee to be specially appointed for the purpose by this House, these are quite different considerations. We are prepared to consider these things at the appropriate place. To ask that there should be elected representatives on the Zonal Council is to enlarge the scope of the conception of the Council. That is bound to lead to difficulties. Therefore I am sorry I am not able to accept this amendment.

Then, Sir, it was stated 'after all the Ministers will be nominated by the Government'. Nomination by the Governor is only a constitutional phrase. He cannot appoint his own nominees. He will have to be guided by the views of the Hon. the Chief Minister. The Chief Minister takes the responsibility for the names he recommends. The Chief Minister represents the Council

of Ministers also. Therefore the Governor takes the advice of the Chief Minister. Therefore the question of nomination by Governor is only a Constitutional phrase that is used here.

Then, Sir, some hon. Members said: 'The Government are moving an amendment to add one more Official to the Council'. It is not for the purpose of adding one more Official Member to the Council. It is contemplated in the Bill that the Chief Secretary and the Development Commissioner shall become the Official Members on the Council. But in certain States I think, the Chief Secretary holds the position of the Development Commissioner in which case that State won't have two representatives but only one whereas in States where there is a separate Development Commissioner, two officials will be there on the Council representing that State. In order to avoid this anomaly in the States where the Chief Secretary is also the Development Commissioner, I have suggested the amendment, namely: 'or any other officer nominated by the State Government concerned'. That is the scope of my amendment. In our State the Chief Secretary is the Development Commissioner.

Sir, I am unable to accept the amendment of the hon. Member Sri Ramalingam. If I accept it, then I will be in a way submitting to the charge which was sought to be levelled against me by hon. Members that we are seeking to enlarge the scope of the Zonal Council. Therefore I am not prepared to accept it.

SRI P. RAMAMURTHI: I may just request the Hon. the Leader of the House to consider one point and tell me what he thinks about it. He was saying that the representatives of the State Government will go and put forward their point of view in the Zonal Council and that there can be only one point of view put forward there on behalf of a State. He also said that before putting forward that view he would consult the leaders of parties. May I just remind him that the purpose of the Zonal Council is not just to create a body where the different view points of the States are put forward but it is also a body where the different States can come to some agreement, come to some understanding with regard to problems common to all the States. Therefore although a particular State Government may have a particular view point at a particular moment as a result of discussion, they might try to change their views. Therefore it is I would like to ask the Hon. Leader of the House whether he is prepared to consider the possibility of associating non-official members, elected or chosen in some other form, with the work of the Zonal Council. They may not be the deciding factors there, they may not have the voting powers there. They can at least help the Ministers from our State and from different States in the discussions for the purpose of arriving at some agreement when differences arise, when different view points are put forward in the Council. They will help in the unification process and in the process of coming to an agreement. I would like to know from the Hon. Minister whether he is prepared to consider some such procedure or organization which will help them in these things.



* THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, the hon. the Leader of the Opposition has in mind that apart from the Ministers going there, they should have a delegation of non-official advisers to advise Government representative if any difficult situation should arise. That is a matter for consideration by each State Government, whether they should be advised by a body of non-official advisers or not. That is quite a different thing altogether. That need not be statutorily incorporated here in this Bill. It should be left to each State Government. The Legislature of each State has got the power to impress upon the Government that they should take such non-official advisers along with them for such purposes. But once you give the power to these non-official members to participate, then trouble will arise as I have already stated. Therefore I am sorry I am unable to accept the amendment. The other question I am certainly prepared to consider when the matter comes up for decision, whether we should associate non-officials for the purpose of advising the delegation as such. It has nothing to do with the provision in the Bill.

MR. SPEAKER: The question is—

"*For* sub-clause 1 (*b*) of clause 16, *substitute* the following:—

'(*b*) the Chief Minister of each of the States included in the Zone, two other Ministers of each such State to be nominated by the Governor and three members of the Legislative Assembly of each such State elected by the elected members of the said Assembly on the system of proportional representation.'"

The amendment was put and lost.

Sri Ari Gowder's amendment was put and lost.

MR. SPEAKER: The question is—

"In clause 16, sub-clause (4), to item (*c*), add the following, namely:—

'Or any other officer nominated by the State Government concerned.'"

The amendment was put and carried.

The other amendments were by leave withdrawn.

### *Clause* 17.

SRI A. RATNAM: I move the amendment standing in my name, namely:—

"*Add* the following at the end of sub-clause (5) of clause 17:—

'And the Members of the Legislative Assembly of the States concerned.'"

இந்த திருத்தமானது மிகவும் சாதாரணமானது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதில் சர்க்காருக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இருக்காதென்று நினைக்கிறேன். **Zonal Council**-களினுடைய **Proceedings**-யை சென்டிரல் கவர்ன்மெண்டுக்கும், ராஜ்ய சர்க்காருக்கும் அனுப்பவேண்டுமென்று இருக்கிறது. இந்த திருத்தம் அந்த **Proceedings**-யை சட்டசபை

[Sri A. Ratnam] [31st March 1956

12-9 p.m. மெம்பர்களுக்கும் அனுப்பவேண்டுமென்று சொல்லும் திருத்தம் தான். **Zonal Council** கூடும்போது, இந்த **Council** ஆனது, அதை ஆலோசனை செய்கிறது. இதை நிறைவேற்றுகிறதென்று பத்திரிக்கையில் வருவதைத்தான் பார்க்கிறோம். ஆனால் அதனுடைய **Proceedings** சட்டசபை மெம்பர்களுக்குக் கிடைக்காது. சென்டிரல் கவர்ன்மெண்டுக்கும், ராஜ்ய சர்க்காருக்கும்தான் அதை அனுப்புவார்கள்.

SRI M. PALANIYANDI: பஞ்சாயத்து போர்டு கூட்டங்களில்கூட ஹரிஜன மெம்பர்களை உட்கார்த்தி வைப்பதற்கு இடம் அளிப்பதில்லை. அந்த முறையிலே பஞ்சாயத்து போர்டு மெம்பர்களாக உள்ள ஹரிஜனங்கள் நடத்தப்படுகிறார்கள் என்றால், சாதாரண ஹரிஜனங்களைப்பற்றி சொல்லவே தேவையில்லை. அப்படிப்பட்ட ஹரிஜனங்களுடைய குழந்தைகளை சேரிகளிலிருந்து பக்கத்திலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதற்கு சரியான ரோடு வசதி கிடையாது. ஆகையால், பஞ்சாயத்து நிதியிலிருந்து பணத்தை செலவிட்டு ஹரிஜன காலனிகளை அமைப்பதற்கும், ரோடு வசதி செய்துகொடுப்பதற்கும் சட்ட பூர்வமாகவோ, அரசாங்க உத்தரவு மூலமாகவோ ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI: ஹரிஜன சேரிகளுக்கு பஞ்சாயத்து போர்டு நிதியிலிருந்து செலவிட்டு வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்னமேயே நடவடிக்கை எடுத்துவருகிறது. புதிதாக நடவடிக்கை எடுப்பதற்கு அவசியமில்லை.

SRI A. RATNAM: நேற்று இந்தியப் பிரதம மந்திரி நேரு அவர்கள் 'சேரிகளைக் கொளுத்திவிடவேண்டும்' என்று பேசியிருக்கிறார். சென்னை ராஜ்யத்திலுள்ள சேரிகளை எப்பொழுது அகற்றிவிட அரசாங்கம் யத்தனிக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI: சேரிகளைக் கொளுத்தவேண்டும் என்றால் அது 'வென்ஜன்ஸ்' இனால் சொல்லப்பட்டது அல்ல. சேரிகளைத் திருத்தியமைக்கவேண்டுமென்பதற்காகத்தான் கூறப்பட்டது.





*Police station at Edachery amsam*

* 3510 *Q.*—SRI C. KUNHIRAMA KURUP: Will the Hon. the Minister for Finance be pleased to state whether any action has been taken on the memorandum presented to the Chief Minister at Nadapuram in Kurumbranad taluk, North Malabar, on 3rd May 1955 by the Nadapuram Congress Committee for the opening of a Police station at Edachery amsam?

THE HON. SRI C. SUBRAMANIAM: The matter is engaging the attention of the Government.

* 3511 *Q.*—SRI N. K. PALANISAMY: Mr. Speaker, Sir, I am not putting my question.

*Payyanur Block Development area*

* 3512 *Q.*—SRI K. P. GOPALAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of applications received by the Block Development Officer, Payyanur, from peasants requesting for short-term or long-term loans since 1954 up to date; and

(*b*) how many were accepted and how many rejected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The particulars are given below:—

| | *Long-term loan.* | *Short-term loan.* |
|---|---|---|
| (*a*) Number of application received since 1954 up to date .. .. .. .. .. | 381 | 3,930 |
| (*b*) Number of applications accepted .. .. | 39 | 1,440 |
| (*c*) Number of application rejected .. .. | 64 | 1,031 |

MR. SPEAKER: Question No. 3513 is postponed to the 6th April 1956.

*Subsidy to libraries*

* 3514 *Q.*—SRI M. DHARMALINGAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any provision under the National Extension Service and Community Project Schemes to grant subsidy for the libraries run by grama sangams;

(*b*) if so, the number of libraries so far organized under the National Extension Service and Community Project Schemes in Uttukottai, Tiruvallur and Kadambathur blocks, in Tiruvallur taluk, Chingleput district; and

(*c*) the number of libraries to which subsidy has been granted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. A grant of Rs. 200 per library is permissible. Provision may be made accordingly taking into account local needs and demand, while drawing up the overall programme.

(b) Nil. It is proposed to organize libraries in ten villages of Kadambathur block.

(c) Nil. A sum of Rs. 15,000 has already been sanctioned for payment to the local Library Authority, Chingleput district, to organize Library service in the Tiruvallur, Uttukottai and Kadambathur blocks at the rate of Rs. 5,000 per block.

SRI M. DHARMALINGAM : Sir, I believe the Hon. Minister will also agree if I say that there are two parts in each and every village in the rural areas, namely, one part is called "Gramam" and the other part is called 'Cheri' and if a Sangam is organized in the Gramam it is called 'Gramasangam' and if a Sangam is organized in the Cheri it is called 'Harijan Munnetra Sangam' or 'Adi-Dravida Munnetra Sangam' but with no difference between these sangams in principle and policy. Is it a fact that the Government have decided to grant subsidy only to Gramasangam and not to the other Sangam? May I know what is the principle involved in the policy adopted by the Government and also may I know will the Government change their view at least in the future?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not at all agree that Gramasangams exclude Harijans. Therefore the other questions do not arise.

### Labour Gazette

* 3515 Q.—SRI K. P. GOPALAN (on behalf of Sri S. Ramalingam and Sri K. V. Ramaswamy) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government propose to start a "Labour Gazette"; and

(b) if so, from what date?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI M. PALANIYANDI : மற்ற மாகாணங்களிலே லேபர் கெஜட்டுகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. தொழிற் சங்கங்கள் நல்ல முறையில் நடைபெறுவதற்கும் தொழிலாளர்களுக்கும் நன்மை பயப்பதற்கும் லேபர் கெஜட் தேவைப்பட்ட விஷயம் ஆகையால், லேபர் கெஜட் ஒன்றை ஆரம்பித்து நடத்துவதற்கு சென்னை அரசாங்கத்தார் உடனடியாக முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 'இண்டஸ்ட்ரீஸ் அண்டு லேபர்ஸ்' என்ற பத்திரிகையில் 'லேபர்'ஐப்பற்றி ஒரு பக்கம் சேர்க்கப் பட்டு வருகிறது. அது போதுமா போதாதா என்பதும், லேபர் கெஜட் போடவேண்டுமா என்ற பிரசினையும் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. இது விஷயத்தை அரசாங்கம் மேற்கொண்டும் பரிசீலனை செய்யும்.



### Government Khadi Sales Depot, Madras

* 3515-A Q.—SRI M. PALANIYANDI (on behalf of Sri A. Veloo) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there was theft in the Government Khadi Sales Depot, Wallajah Road, Madras, last year;

(b) if so, the value of the stocks of Khadi stolen;

(c) the value of Khadi recovered; and

(d) the steps taken by the Government to recover the value of the stocks of Khadi lost from the persons responsible?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Rs. 3,383–1–8 (rupees three thousand three hundred and eighty-three, anna one and pies eight only);

(c) Rs. 1,040-2-3 (rupees one thousand and forty and annas two and pies three only); and

(d) the question of recovering the balance value of Khadi stolen is under active consideration of Government.

SRI M. PALANIYANDI : கதர் உற்பத்தி நிலையங்களை அரசாங்கம் முறையாகவும் ஒழுங்காகவும் நடத்துவதில்லை என்ற வதந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சர்வீஸ் கண்டிஷன்கூட சரிவர இல்லாது பல ஊழல்கள் இருப்பதாக நமக்கு தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, கனம் அமைச்சரவர்கள் அந்த நிர்வாகத்தைப் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களென்று நம்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வதந்திகள், கேள்விப் பட்டது என்றெல்லாம் சொல்வதில் பிரயோஜனம் இல்லை. குறிப்பான புகார்கள் ஏதாவது இருந்தால் தயவு செய்து கனம் அங்கத்தினர் தெரிவித்தால், நான் அதைக் கவனிக்கின்றேன்.

### Loans to agriculturists in cyclone-affected areas

* 3515-B Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have authorized the grant of a maximum amount of Rs. 250 as loan on their personal security to agriculturists in cyclone-affected areas, if such persons are prevented technically from obtaining loans under the Takkavi Loan Rules; and

(b) if so, the details and date of such an order?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) No. The Government have however recognized all the areas in the districts of Tanjore, Tiruchirappalli, Ramanathapuram and Madurai affected by the cyclone and floods as distress areas and have ordered the grant of subsistence loans to agriculturists up to a maximum of Rs. 200 each at 3 per cent interest recoverable in not more than six annual instalments. These loans are granted on personal security under the Takkavi Rules.

[2nd April 1956

SRI V. BALAKRISHNAN : Sir, is the Hon. Minister aware that this revision of the so-called rule has not reached the district authorities or the people and that they are quite in the dark about it? Will the Hon. Minister kindly order the necessary publicity to enable people to know how the Government have modified the rule favourable to the loanees?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am surprised at the information furnished by the hon. Member. I do not think it had not reached the districts. Anyway I shall look into the matter.

*Schemes started by the Electricity Department*

* 3515-C Q.—SRI V. R. NAGARAJAN (on behalf of Sri K. Aranganathan) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Electricity Department has started any schemes and works without the previous sanction of the Government during 1955 up to 15th October 1955; and

(b) if so, what the schemes and works are and the reasons therefor?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : (a) Yes, Sir.

(b) A statement* is placed on the table of the House.

SRI V. R. NAGARAJAN : Sir, it is found from the statement placed on the table of the House that the electricity extension schemes in the districts ordered by the Government Electricity Department are not uniformly spread throughout the State even though there is clamour for electricity supply in such of those districts as do not find a place in the statement. The reasons given in the last column of the statement for supply to most of the places are that the parties are anxious to have supply and that they are pressing for supply. May I know, Sir, why a distinction has been made between districts which are found here and others which are not found here?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : There is no distinction made here. These are schemes awaiting the sanction of the Government and already framed. Revised estimates had been on the anvil. At that stage, the officers though it fit to execute the works in anticipation of the sanction of the Government. It is not to the detriment of any other districts that certain districts have been favoured.

SRI V. K. RAMASWAMI MUDALIAR : Sir, is there any harm in giving electricity connexions and providing electricity in advance to the public, especially when the Chief Engineer for Electricity knows that the Government are sure to sanction the schemes?

* Printed as Appendix II on pages 462–463 infra.



2nd April 1956]

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : That is what has been done, Sir. This is an instance of that kind.

*Bridge over Mambaram river*

* 3515-D Q.—SRI K. MADHAVAN NAMBIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to question No. 397 on 26th March 1954 whether this Government have since recommended to the Central Government to include the construction of a bridge over the Mambaram river at Mambaram in the Second Five-Year Plan?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : No, Sir.

SRI K. MADHAVAN NAMBIAR : Sir, this is an important road connecting Wynaad with Cannanore. Why have this Government not recommended to the Central Government to include this in the Second Five-Year Plan? Or are this Government going to take up this work themselves?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : Yes, Sir. The matter is being considered for inclusion in the Five-Year Plan now under finalization, in view of the representations made.

*Upper Subordinates in the Agricultural Department*

* 3515-E Q.—SRI P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state— 9.30 a.m.

(a) whether any candidates were selected by the Madras Public Service Commission for the post of Upper Subordinates in the Agricultural Department in March 1956; and

(b) if so, how many applied for the same, how many of them were interviewed and how many selected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) A selection was held by the Madras Public Service Commission in March 1956; and

(b) 122 candidates applied for the selection. The results of the selection have not yet been intimated by the Public Service Commission.

SRI P. RANGASWAMI REDDIYAR : May I know how many permanent incumbents in this grade resigned during 1955–56 and whether it is a fact that some candidates are recruited as emergency candidates by the Director of Agriculture without any reference to the Public Service Commission?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question.

SRI M. PALANIYANDI : விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்கள் பி.எஸ்.ஸி. (விவசாய) படித்துவிட்டு வேலைக்கு வரும்போது, மற்றபடி இஞ்சினியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைக் காட்டிலும் குறைவாக அதாவது

ரூ. 100 கொடுக்கப்படுவதால் அவர்கள் அதிக சம்பளம் கிடைக்கக்கூடிய இடங்களுக்குச் சென்று விடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிகச் சம்பளம் கொடுக்கக்கூடிய இடங்களுக்கு போகிறார்கள் என்பது இந்த இலாகாவில் மட்டும் அல்ல மற்ற எந்த இலாகாவிலும் அப்படித்தான் நடந்துகொண்டு வருகிறது.

SRI P. RANGASWAMI REDDIYAR : May I know why the list of selected candidates has not been finalized so far and is it likely that this list may not be even finalized?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think the list will have to be cancelled. Out of 122 applicants only 105 applicants were *prima facie* qualified. Regarding the candidates who are found to be unqualified the Government have been examining whether any of the rules may be relaxed and on receipt of Government's advice, the Public Service Commission, will take up the consideration of the applications and finalize the list.

SRI M. PALANIYANDI : பணத்தை செலவழித்து கோயம்பத்தூரில் படித்து பி.எஸ்.ஸி. பட்டம் பெற்று, அவர்கள் வந்தால் அவர்களை குமாஸ்தாக்கள் செய்யக்கூடிய வேலைக்குத்தான் போடுகிறார்கள். சதாரணமாக சாமான்களை விநியோகிப்பதற்கும், சாதாரண வேலைகளைப் பார்ப்பதற்கும்தான் அவர்களை நியமிக்கிறார்கள். அப்படி இல்லாமல் அவர்களுக்கு கிராமங்களிலுள்ள விவசாயிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடிய வேலைகளையும் மற்றும் உற்பத்தி பெருக்குவதற்கான வேலைகளையும் அரசாங்கம் கொடுக்க முன் வந்தால் விவசாயம் பெருகுவதற்கு வழி ஏற்படும் அல்லவா ? இதில் அரசாங்கம் கவனம் செலுத்துமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்லுகிறபடி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI V. R. NAGARAJAN : May I know whether the date mentioned in clause (*a*) of the question is March 1956 or March 1955? May I also know how many candidates were required by the Department for the various National Extension Scheme Areas in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The date is March 1956 and not March 1955. About the number of candidates required by the Department, I would like to have notice.

SRI P. RANGASWAMI REDDIYAR : The Hon. Minister was pleased to say that out of 122 candidates who applied for the selection, only 105 candidates were found to be qualified. May I know the minimum educational qualifications fixed for this post? May I know why in these days of unemployment among the educated, only 122 candidates applied and why there is lack of enthusiasm on the part of educated people to apply for this post and whether this is due to the poor pay offered when compared to other posts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir. There are very few agricultural graduates available. The minimum qualification is B.Sc. Agriculture. I only said that 105 candidates were found *prima facie* qualified. Regarding others, by the relaxation of the rules they could be qualified for appointment to the post of District Agricultural Officer.



SRI M. DHARMALINGAM : May I know whether the Hon. Minister is in a position to tell us whether Harijans have applied for this post of Agricultural Demonstrators? If sufficient number of Harijans have not applied, is it due to the fact that that there are no sufficient number of Harijan candidates with the prescribed qualification? The Hon. Minister was saying that the Service Commission was considering the question of relaxation of the rules. If so, will the Government take steps to see that from among the unqualified Harijan candidates sufficient number of people are selected at least to fill up the vacancies constitutionally reserved for Harijans?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, even if the candidates are not *prima facie qualified*, they must possess the Degree in B.Sc. Agriculture. Regarding admission to the Agricultural College, Harijans, if they have the minimum qualifications, are admitted into this college. If there are agricultural graduates, they will surely be absorbed in the department.

SRI M. PALANIYANDI : மந்திரி அவர்கள் பதில் சொல்லும் பொழுது ஜில்லா அதிகாரிகளை எடுப்பதற்கு சட்டத்தைத் தளர்த்துவதாகச் சொன்னார்கள். B.Sc. (Ag.) படித்துவிட்டு டிமான்ஸ்ட்ரேட்டர்களாகப் பல ஆண்டுகள் வேலைசெய்தவர்களுக்கு ஜில்லா அதிகாரிகள் வேலைகள் கொடுக்காது, சட்டத்தைத் தளர்த்தி வெளியாட்களுக்குக் கொடுத்தால், நிர்வாகத்தில் வேலை செய்கின்ற சக்தியுள்ளவர்களைப் பாதிக்காதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாய கிராஜுவேட்கள் டிமான்ஸ்ட்ரேட்டராக இருக்கலாம். அவர்கள் விவசாய ஆபீசர்களாக ப்ரமோஷன் ஆவதற்கு சில குவாலிபிகேஷன் வேண்டும், அவர்களுக்கு மேலே இருக்கிறவர்களை கவனித்துத்தான் கொடுக்கப்படும்.

SRI P. VENKATESHA SHOLAGAR : விவசாய நுணுக்கங்களை படிக்கிறவர்கள் விவசாயிகள் எந்தெந்த பிரதேசங்களில் எந்தெந்த சமயங்களில் எந்தக் காரியத்தைச் செய்யவேண்டும், என்கிற பருவம் தெரிந்து காரியம் செய்தால் விவசாயிகள் பலன் அடையக்கூடியதாக இருக்கும். அவர்களுடைய தரத்தை உயர்த்தும்படியாக நல்ல காரியங்களைச் செய்ய நல்ல பருவம் பார்த்து அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்களுக்கு பிரமோஷன் கொடுக்கும்போது, பிரதேசங்களில் பருவத்தை பயன்படுத்த அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளாரா என்பதை கணக்கில் எடுத்துக் கொண்டால் பருவ காலங்களில் விவசாயம் பயனடையும்படியாக டிமான்ஸ்ட்ரேட்டர்கள் வேலை செய்வார்கள். அதனால் அவர்களுக்கு வேண்டிய பிரமோஷன் கொடுக்க அரசாங்கம் அவர்கள் பருவகாலத்தை பயன்படுத்தியதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்லுகிற யோசனையை கவனித்து அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

SRI S. R. ARUMUGAM : இருபது வருஷம் டிமான்ஸ்ட்ரேட்டராக வேலை செய்தும் இன்னும் ப்ரமோஷன் இல்லாமல் இருக்கிறவர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அது மந்திரி அவர்களின் கணக்கில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2nd April 1956

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை.

MR. SPEAKER : Question time is over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—STATEMENT UNDER RULE 40 *RE* PREVENTION OF HARASSMENT IN RECOVERING WELL LOANS AND WAIVER OF RECOVERY.

MR. SPEAKER : I have received notice of a motion under Rule 40 of the Assembly Rules from the hon. Member, Sri V. K. Ramaswamy Mudaliyar. He will call attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, viz., prevention of harassment in recovering well loans issued prior to 1952 and waiver of recovery in hard cases.

* SRI V. K. RAMASWAMI MUDALIAR : Mr. Speaker, Sir, I would like to draw the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, viz., prevention of harassment in recovering well loans issued prior to 1952 and waiver of recovery in hard cases.

When there was scarcity of foodgrains in this State and throughout India also, the Government of India came to the rescue of our Government and gave timely help for the sinking of wells and in giving help they gave both subsidy and loans. In many cases, as a result of the loans granted by the Government many wells were sunk in the State and the food problem was to a great extent solved. I am not speaking in support of those persons who spent the loan amounts on marriages and other functions. My contention is that in *bona fide* cases the Government must come to the rescue of ryots and see that they order waiver of recovery in hard cases. Now most of the ryots are under the impression that loans which have not been collected all these years have been written off. Further there is a fall in the prices of foodgrains. The Government have ordered now that the recoveries of all loans due to Government should be made simultaneously and this order causes considerable hardship to the ryots. I would request the Hon. Minister to see that waiver of recovery is made only in hard cases and that is my submission.

9-40 a.m. THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, the scheme of granting financial assistance to the agriculturists for sinking wells under the Grow More Food Campaign had been in operation between the years 1946 and 1951–52 both years inclusive, with the assistance of the Government of India. The quantum of loan advanced to the ryots ranges normally between Rs. 300 and Rs. 750 per well in districts other than those in the West Coast, while in the West Coast districts, loans up to a maximum of Rs. 2,000 in each case have been granted per well or tank, as the case may be. The amount advanced also varies with the year in which such an advance was made. No fresh sanction of loans was



2nd April 1956] [Sri M. A. Manickavelu]

made from 1952–53. Under the 1946 scheme, the ryots were granted outright subsidies, subject to a maximum of Rs. 300 per well and they were also allowed to do the work at the site selected by them, recovery being effected for non-compliance of certain conditions. Under the subsequent schemes from 1947–48 to 1951–52, the assistance granted to the ryots was in the form of loans, in the first instance, which was liable for conversion into subsidies subject to certain terms of the grant. Under these latter schemes, sites were selected by the Revenue Officials. The amounts converted into subsidy are being shared by the State and the Central Governments on a 50 : 50 basis.

Consequent on the decision of the Government of India to stop financial assistance to a scheme of this type from 1952–53, this Government also discontinued advancing of fresh loans. But, the Government of India have thereafter been pressing every year for the early settlement of accounts under the sanctioned continuation schemes, which are being declared complete after 1952–53 and for which Central assistance is sought towards amounts converted on such completed works. The State Government have been, at the same time, impressing upon the Government of India time and again the difficulties experienced by the agriculturists of this State due to drought and adverse seasonal conditions for over six successive years and have been obtaining extension of time year after year for the final settlement of accounts with the Centre. Under the existing orders of the Government of India, the last date for settlement of accounts has been finally fixed as 31st March 1956. The Government of India will not grant any further extension of time beyond 31st March 1956. With a view to adhere to the date fixed by the Government of India, a time-schedule for inspection of well works by the Revenue Officers was drawn to enable expeditious conversion work to the maximum extent possible. As a result of this, large-scale conversions have taken place during the period to the best advantage of a number of the grantees.

Summary recovery of subsidy loan advanced is resorted to, in cases where either no work or negligible work has been done. Waiver of recovery of subsidy advanced is ordered in all *bona fide* cases, where genuine attempts have been made and where the wells sunk have failed, for reasons beyond the control of the grantees, irrespective of the financial status of the grantees. In cases, where substantial work has been done, the loan advanced is converted into a regular takkavi loan recoverable in five equal annual instalments. All these recoveries—either summary or in instalments—are put off to the extent to which collections of takkavi loan arrears in specific areas are postponed due to adverse seasonal conditions, etc. This provides ample relief to the people deserving of real help. Besides, for declaration of well works as complete, rules regarding minimum depth of well are relaxed, change of site is ratified, in all *bona fide* cases. The Government have also been granting extension of time for completion of well works under each scheme, bearing

in mind the difficulties experienced by the agriculturists due to freaks of monsoon and the following table will show the large scale concession granted in this regard :

| *Name of the Scheme.* | *Date originally fixed for completion at the time of sanction of the scheme.* | *Last extended date fixed for completion.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. The Accelerated Well Subsidy Scheme, 1946. | | |
| (a) Repair to old wells .. | 15th June 1946. | 30th June 1948. |
| (b) Construction of new wells. | 15th June 1946. | 30th June 1949. |
| 2. The New Wells Subsidy Scheme, 1947–48. | 30th June 1948. | 30th June 1950. |
| 3. The New Wells Subsidy Scheme, 1948–49. | 30th September 1949. | 30th June 1952 * |
| 4. The New Wells Subsidy Scheme, 1949–50. | 30th September 1950. | 30th June 1952 * |
| 5. The New Wells Subsidy Scheme, 1950–51. | 30th June 1951. | 30th September 1954. |
| 6. The New Wells Subsidy Scheme, 1951–52. | 30th June 1952. | 30th September 1954. |

*30th June 1953 in certain districts and areas affected by adverse seasonal conditions.

The Government have also been not very strict in observing whether the actual date of completion of the well works under each scheme is within the last date fixed for it; but have all along been liberally condoning delays in the completion of works and granting conversion with a view to enable the ryots to get the full benefit of the scheme. The above facts will clearly show that the Government have been generously sanctioning conversions of loans into subsidies and also in the matter of either waiver or recovery of loans advanced in deserving cases. Coercive steps are taken for recovery only in very hard cases where the ryots have not made any attempt to sink wells.

## III.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

### (1) MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House the following message, dated the 16th March 1956, received from the Governor of Madras :—

" In pursuance of Article 207, Clause (3) of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Assembly the consideration of the Madras State Aid to Industries (Amendment) Bill, 1956, as passed by the Madras Legislative Council."



### (2) MESSAGE FROM THE COUNCIL.

MR. SPEAKER : I have also to announce to the House the following message, dated the 28th March 1956, received from the Hon. the Chairman, Madras Legislative Council :

" In accordance with rule 115 of the Madras Council Rules, I transmit a copy of the Madras State Aid to Industries (Amendment) Bill, 1956 (L.C. Bill No. 1 of 1956) as passed by the Legislative Council on the 28th March 1956 and signed by me for the concurrence of the Assembly."

The next item is discussion of the draft outline of the Second Five-Year plan.

## IV.—GOVERNMENT MOTION *RE* DRAFT OUTLINE OF THE SECOND FIVE-YEAR PLAN.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபா நாயகர் அவர்களே, இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் சபை முன்னால் விவாதத்திற்கு வரும்போது எல்லா அங்கத்தினர்களும் இதைப்பற்றி நல்ல முறையில் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தமிழிலேயே பேச வேண்டும் என்று அங்கத்தினர்களுடைய அனுமதியின் பேரில் ஆரம்பித்திருக்கிறேன். சில அங்கத்தினர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய விருப்பத்தின் பேரிலும் ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய அனுமதியைப் பெற்றும் நான் தமிழில் பேசுகிறேன்.

இன்றைக்கு நாம் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்பத்தில் இருக்கிறோம். நேற்றுதான் அந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் அதிகார பூர்வமாக ஆரம்பமாகிறது. பலர் கேட்கலாம் மார்ச் 31-ம் தேதிக்கும் எப்ரல் முதல் தேதிக்கும் என்ன வித்தியாசம் ஒன்றையும் காணோமே என்று.

SRI S. S. KOLKEBAIL : On a point of information, Sir. The Hon. the Leader of the House was pleased to remark in Tamil—of course, I did not understand—that he has already obtained the permission of some of the members who did not understand Tamil to speak in Tamil.

MR. SPEAKER : **No, he did not say like that. He said that he would get the implied consent of those members who did not know Tamil and that he might be permitted to speak in Tamil.**

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு நாளுக்கு மற்றொரு நாள் வித்தியாசமும் ஒரு வருஷத்திற்கு மற்றொரு வருஷம் வித்யாசமும் உண்டு. நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் மாறுதலையும் வளர்ச்சியையும் நாம் நேரில் தெரிந்துகொள்ள முடியாது. அதிலும் நாம் இங்கேயே இருந்துகொண்டு ஒவ்வொரு விஷயத்தையும் நேரில் பார்த்துக்கொண்டே வரும்போது அதில் ஏற்படக்கூடிய வளர்ச்சியை நாம் நன்றாக உணர்வது கஷ்டம். உதாரணமாக ஒரு குழந்தை இருக்கிறது. அந்தக் குழந்தையை நாம் நேராகவே பார்த்துக்கொண்டு வரும்போது அந்தக் குழந்தையின் வளர்ச்சி நமக்கு நன்றாகத் தெரியாது. ஆனால் கொஞ்ச நாட்களுக்கு முன்னதாகவே அந்தக் குழந்தையைப் பார்த்தவர் வந்தால் அந்தக் குழந்தையைப் பார்த்துவிட்டு அந்தக் குழந்தை நல்ல வளர்ச்சி அடைந்திருக்கிறது என்றுதான் சொல்லுவார்கள். அதே முறையில் நாம் பிணைந்திருப்பதால் நாமே நேரில் எல்லாவற்றையும் அனுபவித்துக்

[Sri C. Subramaniam] [2nd April 1956

கொண்டு வருவதால் ஏற்பட்ட மாறுதல்களை நாமே தெரிந்துகொள்ள முடியாது. அந்த மாறுதல் நமக்குத் தெரிவது இல்லை. அதைப்போல வே ஐந்து வருஷங்களுக்கு முன்னால் நம்முடைய நாடு எந்த நிலைமையில் இருந்தது, இன்றைக்கு நம்முடைய நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி யோசித்துப் பார்த்தால் திட்டமாக வளர்ச்சி ஏற்பட்டிருப்பது தெரியும். அபிவிருத்தி ஏற்பட்டிருப்பது தெரியும். இதைப் பற்றி யாரும் மறுக்க முடியாது.

ஆனால் சிலர் சொல்லலாம், வேண்டிய அளவு நாட்டில் அபிவிருத்தி ஏற்பட்டிருந்தாலும் நாட்டின் பிரச்னை பூராவும் தீர்ந்து விடவில்லை என்று சொல்லுவார்கள். அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இந்த ஐந்தாண்டு திட்டத்தினால் எந்த நாட்டிலும் உள்ள பிரச்னைகள் எல்லாவற்றையும் தீர்த்துவிடமுடியாது. இந்த ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ராஜ்யத்திலும் என்னென்ன வேலைகளைச் செய்யவேண்டும் என்பதைக் கருதி அதற்கு ஏற்படுத்தப்பட்ட திட்டத்தை ஒரு குறிக்கோளாக வைத்து அதற்கு திட்டம் போடவேண்டும். அப்படி திட்டம் போட்டு அதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு திட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதன்படி வேலை செய்யவேண்டும். அப்படி வேலை செய்தால்தான் நாட்டில் பல பகுதிகளில் அபிவிருத்தி ஏற்படும் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம்.

இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் பொறுத்த வரையில் முன்பு முதல் ஐந்தாண்டு திட்டத்தை உருவாக்கியதுபோல் இல்லாமல் முன்பு இருந்த ஒரு லட்சியத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு மக்களையும் கலந்தாலோசித்து சட்ட சபைகளையும் கலந்தாலோசித்து நிபுணர்களையும் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். முதலில் ஒரு திட்ட நகலை தயாரித்து அதை மக்களுடைய ஆலோசனைக்கும் சட்ட சபையின் ஆலோசனைக்கும் வைத்து அதற்கு மேல் அவர்களுடைய ஆலோசனை யெல்லாம் கேட்டு அந்த ஆலோசனைகளில் எதெதை தீர்க்கமுடியும் எதெதை தீர்க்கமுடியாது என்பதை ஆலோசனை செய்து கடைசியில் இரண்டாவது ஐந்தாண்டு டிராப்ட் அவுட் லைன் அதாவது திட்ட வரையறைப்பு நகல் என்றுசொல்லுவார்களே அது இப்பொழுது நம்முன் சபையில் சர்ச்சைக்கு இருக்கிறது.

9-51 a.m. இன்றைக்கு எந்த அடிப்படையில் நம்முடைய பொருளாதார அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்பதைப்பற்றி யாரிடத்திலும் அபிப்பிராயபேதம் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு சிலர் இதில் தனிப்பட்டோர் சுதந்திரத்தைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. அவரவர்களுடைய இஷ்டம்போல சுதந்திரமாக காரியங்களை நடத்திவருவதில் தொழில்களையும், வியாபாரங்களையும் விவசாயங்களையும் நடத்தியுமோ சுதந்திரத்துக்குமுன் இருந்ததுபோல சுதந்திரமாக காரியங்களை நடத்திவருவதில் ஒருவிதமான தடை கட்டுப்பாடு இருக்கிறது என்று சிலர் குறை கூறலாம், ஆனால் நம் நாட்டில் சாதிக்கவேண்டிய காரியங்களை உத்தேசித்து இந்த திட்டத்தில் அடிப்படையான காரியங்களைச் செய்ய ஆரம்பித்தால் எவ்வளவு சீக்கிரத்தில் முன்னேற்றமும் அபிவிருத்தியும் அடையவேண்டுமோ அவ்வளவு முன்னேற்றத்தையும் அடைய முடியாது. நமக்கு இருக்கக்கூடிய வசதிகளையும், உழைப்பையும் விரயம் ஆக்காமல் நாட்டின் முன்னேற்றத்துக்கு உபயோகப்படுத்த முடியும் என்று நாம் உணர்ந்திருக்கிறோம். முதல் ஐந்தாண்டு திட்டத்தினால் ஏற்பட்ட மாறுதலினால் மக்களிடத்தில் இந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. திட்டம் அவசியம் என்பதை எல்லா மக்களும் உணரும்படியாக வைத்து இருப்பதே முதல் ஐந்தாண்டு திட்டத்தின் பலன் என்று கொள்ளலாம். ஆகவே இப்பொழுது இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி யோசிக்கவேண்டும். இந்தத் திட்டம் சிறந்த குறிக்கோளைக்கொண்டுதான் உருவாக்கப்படுகிறது என்பதைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும். அதைத் தெரிந்துகொண்டபிறகு அந்தக் குறிக்கோளை அடைவது எப்படி என்ற முடிவைப் பொறுத்து அமைந்து இருக்கிறது என்பதைப்பற்றி இரண்டாவது பரிசீலனை பண்ணிப் பார்க்கவேண்டும். இரண்டாவது இந்தக் குறிக்கோள் என்ன என்று



2nd April 1956] [Sri C. Subramaniam]

யோசிக்கவேண்டும். இன்றைக்கு மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமான நிலைமையிலிருக்கிறது. நூற்றுக்கு ஒருவர் இருவருக்கு வேண்டுமானால் வாழ்க்கையில் அத்தியாவசியமான தேவைகள் இருக்கின்றன என்று நான் சொல்ல முடியும். இதற்குமேல் இருக்கவேண்டிய வசதிகளை பற்றிச் சொல்லவில்லை. அதனால் தேவையான வசதிகளை நூற்றுக்கு ஒன்று இரண்டு ஐந்து பேருக்குமேல் அனுபவிக்க முடியவில்லை. மற்றும் எல்லோரும் ஏழ்மை நிலைமையில் வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்களை வாங்க வசதி இல்லாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை அதிகமாக உயர்த்த வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். இன்று வாழ்க்கைத் தரம் உயர்வது என்றால் இன்றைக்கு உற்பத்தியை பொறுத்து தான் இருக்கிறது. வாழக்கைத் தரம் உயர்வது என்றால் அவசரமாக தீர்க்கப்படவேண்டிய பிரச்னை உணவு பிரச்னையாக இருந்தாலும் சரி, உடைப்பிரச்னையாக இருந்தாலும் சரி குடியிருப்பு வசதிகளைப் பொருத்த பிரச்னையாக இருந்தாலும் சரி, பள்ளிக்கூட வசதி இன்னும் வேண்டிய வசதிகள் எதை எடுத்துக்கொண்டாலும் அடிப்படைக் கொள்கையைக் கொண்டே இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டியதிருக்கிறது. ஆகவே பொருள் உற்பத்தியை எப்படி அதிகப்படுத்துவது என்பதைப் பற்றி நாம் உத்தேசித்து இந்த பொருள் உற்பத்திக்கான ஒரு நல்ல திட்டத்தை வகுக்கவேண்டியது அவசியம் என்பது நம் கடமையாக விருக்கிறது. இதில் அதிக உழைப்பையும் வசதிகளையும் விரயம் செய்து அது வீண் ஆகக்கூடிய நிலைமையில் நாம் திட்டத்தை வகுக்க கூடாது. நாம் கொடுக்கக்கூடிய உழைப்புக்கும் செலவு செய்யக்கூடிய பொருளுக்கும் உகந்த முறையில் நல்லபலன்கள் தரக்கூடிய முறையில் திட்டம் அமைக்கவேண்டும் இதுதான் அடிப்படியில் இருக்ககூடிய கொள்கை. இதில் நாம் நம் நாட்டில் இருக்கக் கூடிய சூழ்நிலைக்கு தகுந்தவாறு ஒரு திட்டத்தைத்தான் உருவாக்கவேண்டும் என்பதை மனதில்வைத்துக் கொள்ள வேண்டும் பிற நாடுகளில் இருக்கக் கூடியதை அப்படியே நாம் எடுத்துக் கொள்வதோ அல்லது ஆரம்பிப்பதோ இந்தத் திட்டத்திற்கு ஆபத்தாகத் தான் முடியும் என்பதை நாம் முதலில் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இங்கே இருக்கும் சூழ்நிலையை அனுசரித்து நாம் திட்டத்தை உருவாக்கவேண்டியது மிக அவசியம். சிலர் சொல்கிறார்கள் **America** வில் ஏற்பட்டிருக்கிற அபிவிருத்தியைப் பாருங்கள். அங்கே நடந்ததைப்போல் இந்தத் துறையில் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று யோசனை சொல்லக் கூடியவர்களும் இருக்கிறார்கள். இன்னொரு சிலர் **Russia** வை நமக்கு உதாரணமாகக் காட்டுகிறார்கள். அங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய அபிவிருத்தியைப் பாருங்கள். ஆகவே அவர்கள் திட்டங்களை நாம் ஏற்றுக் கொண்டு அவைகளை அடிப்படையாகக் கொண்டு நம் திட்டத்தையும் வகுத்து நாமும் ஏன் முன்னேற்றம் அடையக் கூடாது என்று சிலர் சொல்லுகிறார்கள்.

அமெரிக்காவிலே ஏற்பட்டிருக்க கூடிய அபிவிருத்தியும் சரி, ரஷ்யா 9-57 a.m.
விலே ஏற்பட்ட அபிவிருத்தியும் சரி, பலமுறைகளிலே அவர்கள் பயிற்சி செய்து பார்த்து தவறிப்போய் இப்போது ஓரளவுக்கு வெற்றி கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்த தப்பெல்லாம் நாம் செய்யவேண்டிய அவசியமில்லை. இன்று திட்டங்கள் போடுவதிலே மனித சமுதாயம் ஓரளவு முன்னேறி இருக்கிறது. மனித சமுதாயத்தின் அனுபவம் நமக்கு இருக்கிறது. ஒரு மோட்டார் செய்ய வேண்டுமென்றால் முதலிலே ஆரம்பித்தது போல படிப்படியாக மோட்டார் கட்டி வரவேண்டுமென்பதல்ல. இப்போது மோட்டார் உற்பத்தி செய்வதென்றால் மனித சமுதாயத்தின் அனுபவமிருக்கிறது. அதை வைத்துக் கொண்டு ஆரம்பிக்கலாம். பல தவறுகளை இழைத்து முன்னுக்கு வரவேண்டியதவசியமே இல்லை. திட்டமிடுவதிலேயும் அப்படித்தான். மற்றநாடுகளின் அனுபவங்கள் நமக்கு இருக்கிறது. அவர்கள் செய்த தவறுகள் நம் முன்னிலையில் இருக்கிறது. மற்ற நாடுகளின் அனுபவத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு நம் திட்டத்தை உருவாக்க வேண்டியதவசியம். நம் நாட்டைப் பொறுத்தவரை மக்கள் எண்ணிக்கை மற்ற எந்த நாட்டிலேயும் இவ்வளவு அதிகமாக கிடையாது. நமக்கு இருக்கும் இயற்கை வசதிகள், நிலப்பரப்பை

[Sri C. Subramaniam] [2nd April 1956

கொண்டு பார்த்தால், நம் மக்கள் எண்ணிக்கை அதிகம். ஆகவே இதை அடிப்படையாகக் கொண்டு திட்டத்தை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். ஒரு உதாரணத்திற்கு சொல்லுகிறேன். இன்று ரஷ்யாவிலுள்ள மக்கள் நம் நாட்டிலுள்ள மக்களை விட பாதிபேர் தானிருக்கிறார்கள். ஆனால் அங்கு இருக்கக்கூடிய நிலப்பரப்பு நம் நாட்டை விட இரண்டு பங்கு அதிகம். அதேமாதிரி இங்கே இருக்கக்கூடிய இயற்கை வசதிகள் மிகக்குறைவு. அமெரிக்காவிலே எடுத்துக் கொண்டால் இந்த ஏற்றத் தாழ்வு இன்னும் அதிகமாக இருக்கிறது. இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு நம் திட்டத்திற்கான ஆலோசனை செய்யவேண்டியதவசியம் ஏற்படுகிறது. இந்த திட்டத்திலே இன்று பொருளாதார உற்பத்தியை அதிகப்படுத்த இரண்டு அம்சங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒன்று நீண்டகால திட்டம். நீண்டகால திட்டத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, உடனடியாக பலன் ஏற்படா விட்டாலும், நம் பொருளாதாரத்திற்கு அஸ்திவாரமாக இருக்கக்கூடிய பல காரியங்களை உடனடியாக செய்வது அதன் மூலமாக இன்று மக்கள் அனுபவிக்க முடியாவிட்டாலும். அடுத்த 5 அல்லது 10 வருஷத்திலே பலன் தரக்கூடிய பல திட்டங்களிருக்கின்றன. அந்த திட்டங்களை எடுத்துக் கொண்டால் தான் இன்று இருக்கக் கூடிய முக்கியமான குறைகள் நீங்க முடியுமென்பதை நாம் நன்றாக தெரிந்துக் கொள்ள வேண்டும். இன்று பொருளாதார உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்றால், அதற்காக கனரக பொருட்கள் உற்பத்தி செய்ய வேண்டிய தவசியம். அப்படி ஏற்படக்கூடிய பொருட்கள் இரும்பு, உருக்கு இரண்டும் அல்லது மற்ற உலோகங்கள், **cement**, நிலக்கரி போன்ற **Heavy Chemicals**. இப்படிப்பட்ட பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தவேண்டும். இரும்பை உற்பத்தி செய்வதில் முதல் 5 ஆண்டு திட்டத்தில் பார்த்திருக்கிறோம். பலபேர் கணக்குப் போட்டார்கள். மூன்னும் இரண்டு இரும்பு உற்பத்தி சாலைகள் ஏற்படுத்தினால் இரண்டாவது ஐந்து ஆண்டு திட்டத்திற்கு போதுமென்று கணக்கு போட்டார்கள். ஆனால் அப்படி இரண்டு ஏற்பட்டாலும் போதாது. இன்னும் இரண்டு இருந்தாலும் போதாது. வெளி நாட்டிலிருந்து இரும்பை நாம் இறக்குமதி செய்துதான் ஆகவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். ஆகவே அதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

10-02 a.m. அதேமாதிரி சிமெண்டு பற்றியும் சொல்லுவார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னால் இங்கே உற்பத்தியான சிமெண்டு பூராவும் செலவாகவில்லை. ஆகவே வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி கோரிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று வெளி நாட்டிலிருந்து நாம் சிமெண்டு இறக்குமதி செய்ய வேண்டிய கட்டத்திலிருக்கிறோம். இன்று சிமெண்டு உற்பத்தியை நாம் 9 அல்லது 10 லக்ஷம் டன் அதிகப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் அது கூடப்போதாது. அந்த **basis**-ல் **materials** நமக்கு ரொம்ப வேண்டியிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். அதற்கு நுணுக்கமான இயந்திரங்கள் தேவை. இந்த இயந்திரங்களை வெளி நாட்டிலிருந்து தான் நாம் வரவழைக்கவேண்டியிருக்கிறது. இப்போது இரும்பு உருக்குசாலை ஏற்படுத்துவதற்கு நாம் **Britain, Russia** அல்லது செக்கோஸ்லோவோகியா அல்லது வேறு ஒரு நாட்டிற்குப் போகவேண்டியதாக இருக்கிறது. அதுவும் ஏதோ ஒன்று அல்லது இரண்டு உருக்கு சாலைகளை ஏற்படுத்துவதாக இருந்தால் அதற்காக நாம் வெளி நாட்டிலிருந்தே அந்த இயந்திரங்களைத் தருவித்துக் கொள்ளலா மென்று நாம் முடிவு செய்யலாம். ஆனால் இன்று உள்ள நிலைமை அப்படியல்ல. இன்று உள்ள புள்ளி விவரங்களைப் பார்த்து நிபுணர்கள் சொல்லுகிறார்கள், வருடம் ஒன்றுக்கு ஒரு மில்லியன் டன் உற்பத்தியை அதிகரித்துக் கொண்டு போனால் தான் நமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமென்று கணக்கு போட்டிருக்கிறார்கள். ஆகவே வருடத்திற்கொரு உருக்கு சாலையை ஏற்படுத்திக் கொண்டால் நமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். இப்படி ஒவ்வொரு ஆண்டும் ஒரு தேசத்திடம் கடன் அல்லது பிச்சை கேட்டுக் கொண்டிருக்க முடியாது. ஆகவே வெறும் இயந்திரக் கருவிகளுக்கு அத்தியாவசியமான பொருள்களை உற்பத்தி செய்வது ஒரு



2nd April 1956] [Sri C. Subramaniam]

புறமிருக்க அந்த இயந்திர உற்பத்தி சாலைகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம். ஆகவே இந்த இயந்திரம் உற்பத்தி செய்யக் கூடிய சாலைகளை நாம் ஏற்படுத்தினால் தான் அத்தியாவசியமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுக்கமுடியும். இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு தான் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் உருவாக்கப் பட்டு வருகிறது. இதை நாம் மனதில் வைத்துக் கொண்டால் நமக்குள்ள பல சந்தேகங்கள் விலகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இப்படி நடந்து கொள்ளுவதால் பிறகு மக்களுக்குப் பயன்தரக் கூடிய திட்டங்களைத் துருவிவகுத்துக் கொண்டிருக்கும்போது பொது மக்களின்பாடு என்ன என்பதைப்பற்றி நாம் யோசிக்கவேண்டும். இன்றைக்கு நான் சொல்லிய மாதிரி 100க்கு 90 அல்லது 95 பேர் அத்தியாவசியமான தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமையில் இருக்கும்போது இன்னும் தொடர்ந்து மக்களை நாம் அந்த நிலைமையில் வைத்துக் கொண்டு இருக்கமுடியாது. ஆகவே உடனடியாக அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியவற்றை நாம் செய்ய வேண்டும். அதற்காக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இதில் முக்கியமாகத் துணி, உணவு உற்பத்தியை அதிகரிக்க நாம் என்ன செய்யவேண்டும். அது மட்டும் போதாது. குடி இருப்பு வசதிகள் வேண்டும். பள்ளிக்கூட வசதி, வைத்திய ஆஸ்பத்திரிகளெல்லாம் ஏற்பட்டாக வேண்டும். இவைகளெல்லாம் அத்தியாவசியப்பொருள்கள் என்ன என்பதை யோசிக்க வேண்டும். இதில் நாம் இன்று முக்கியமாகச் செலவழிக்கக் கூடிய திட்டம் குறைவு. குறைவு என்று சொல்லும்போது ஏதோ ஒரு அளவிற்காகச் சொல்லுகிறேன். நமக்கு இருக்கக்கூடிய பெரும்பாலான வசதிகள் இந்த அடிப்படை தொழில்களை ஏற்படுத்துவதற்கும் உருக்கு சாலைகளை ஏற்படுத்துவதிலும் செலவாகிவிடும் என்பதில் சந்தேக மில்லை. ஆகையினால் மக்களின் உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய சாமான்களை உற்பத்தி செய்ய நாம் என்ன செய்ய வேண்டும் ? சிலர் சொல்லுகிறார்கள் இன்று **mills**-ன் மூலமாக அனைவருக்கும் துணி உற்பத்தி செய்யலாமென்று. இன்னும் இரண்டுமடங்கு ஆலைகளை இதற்காக ஏற்படுத்தலாமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அதற்கு வேண்டிய இயந்திரங்களை நாம் பெற முடியுமா என்பதை யோசிக்கவேண்டும். அப்படி அதில் பணம்போடுவதா, அல்லது அதை உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளை ஏற்படுத்துவதற்கு அதில் பணம் போடுவதா என்பதை யோசிக்கும்போது இப்படி உடனடியாக மக்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களை வரவழைத்துக் கொண்டு அதன் மூலமாக நாம் அடையக் கூடிய வசதி நமக்கில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

நமக்கு இருக்கக்கூடிய வசதிகள் என்ன என்பதைப்பற்றி பின்பு 10-07 a.m. விஸ்தாரமாக சொல்லப்படும். இதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கும் முக்கியமான பிரச்னை மக்கள் வசதியுடன் வாழ, அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய போதுமான வருவாய் இல்லை. இது முக்கியமான காரணம். ஏதாவது தொழில் செய்வதற்கு அவர்களுக்கு மார்க்கமில்லை. மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டுமென்றால், அவர்களுக்கு ஏதாவது ஒரு தொழில் செய்ய வகை செய்து கொடுக்கவேண்டும். இது முக்கியமான விஷயம். இதை செய்துகொண்டு போனால், பிற்காலத்தில் மக்கள் க்ஷேமமாக வாழ வகை ஏற்பட்டாலும் ஏற்படலாம். மக்களுக்கு வாழ்க்கை இன்னும் கஷ்டமாக இருக்கக்கூடாது என்பதை மனதில் வைத்துத்தான், பெரிய இயந்திரசாலைகளை அமைத்து இன்றைக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களை உண்டாக்கவும், குடிசைத்தொழில்கள் மூலமாகவும், சில சாமான்களை உற்பத்தி செய்யவும் முடியும். இந்த அடிப்படைத் தேவைகளைதான் நாம் கவனிக்கவேண்டும். இவை இரண்டுதான் மிகவும் முக்கியமான விஷயம். **Basic Industries** அமைப்பதின் மூலம் உற்பத்தியை பெருக்க முயற்சி செய்தும், மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு, சிறிய தொழில்கள் மூலமாகவும், குடிசைத் தொழில்கள் மூலமாகவும், மூலதனம் அதிக

மில்லாமல், வகை செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியை பெருக்குவது என்ற அடிப்படையில்தான் நாம் இந்த திட்டத்தை ஒப்புக்கொண்டு இருக்கிறோம். இதில் இன்னும் ஒரு விஷயத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். வெறும் உற்பத்தியை மட்டும் பெருக்கினால் போதாது. உற்பத்தியை பெருக்குவதின் மூலம், மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்கள் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் மக்களை விடக்கூடாது. ஆகவே இதைப் பூர்த்தி அடையச் செய்வது மிகவும் அவசியம். ஓர் இடத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் மற்ற இடங்களிலுள்ள மக்களுக்குப் போய் சேரவில்லை என்றால், அந்த உற்பத்தியால் பெரும்பாலான மக்களுக்கு தேவையான பலனில்லாமல் போய்விடும். உற்பத்தியைப்பெருக்கும் சமயத்தில் இதை அனுசரித்து, இந்த உற்பத்தியின் முழு பலன்களை பெரும்பாலான ஏழை மக்கள் அடைய செய்வதற்கு நாம் ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதைத்தான் " **Socialistic Pattern** " என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு மக்களிடையே இருக்கக் கூடிய ஏற்றத்தாழ்வுகளை அகற்றாவிடில், இன்று ஏழையாக இருக்கும் மக்கள் என்றும் ஏழையாகவே இருக்கவேண்டிய நிலை ஏற்படும். பணக்காரர்கள் அதிகமான வசதிகளை அடையும் நிலைமை ஏற்படும். நமது குறிக்கோளில் ஒன்று ஏற்றத்தாழ்வுகளை நீக்கவேண்டுமென்பதை நாம் மனதில் வைத்துக்கொண்டிருக்கிறோம். தனிப்பட்ட மனிதர்களிடைமட்டும் ஏற்றத் தாழ்வு இல்லை. இன்றைக்கு ஒரு பகுதிக்கும் இன்னொரு பகு
10-13 a.m. திக்கும் ஏற்றத் தாழ்வு இருக்கிறது. அதைப்பற்றியும் திட்டக் கமிஷன் ஆலோசனை செய்திருக்கிறது. அதற்கு என்ன செய்வது என்பதைப்பற்றியும் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் இருக்கக்கூடிய வித்யாசத்தைப்பற்றி என்னால் இயன்ற வரையில் சென்ற ஒன்றரை வருஷங்களாக திட்டம் வகுத்துக் கொண்டிருந்த நிலைமையிலே இந்த தேசிய **(National Development Council)** கௌன்சில் முன்னாலே நான் எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். இதை ஒப்புக்கொண்டு அந்த லட்சியத்தை ஒப்புக்கொண்டு இப்போது இப்படி இருப்பது நியாயமல்ல என்று அதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைச் செய்துதான் தீரவேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டு அதை அமுலாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று வேறே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எல்லாப் பகுதிகளிலும் எப்படி எல்லா நாட்டிலும் மக்களிடை அதிகமான ஏற்றத்தாழ்வு இல்லாமல் முடியாதோ, அதே மாதிரிதான் எல்லா பகுதிகளிலும் இருந்து வரும் வித்யாசம் இருக்கத்தான் இருக்கும். எல்லாப் பகுதிகளையும் ஓரளவு ஒரே நிலைமையான அபிவிருத்தி அடையச் செய்யும்போதுதான் மக்களிடையே இருக்கக்கூடிய வித்யாசங்கள் நீங்கும் என்பதில் சந்தேகமில்லை. நாம் எல்லாம் " கலோனியலிசம் " **(Colonialism)** என்று பேசிக் கொண்டு வந்திருக்கிறோம். **Colonialism** என்றால் என்ன. வெறும் அரசியல் பிடிப்பு மட்டுமல்ல. அரசியல் ஆதிக்கம் மட்டுமல்ல அது. வெறும் அரசியல் ஆதிக்கம் ஏற்படுவது கலோனியலிசம்மல்ல. அதிலே முக்கியமாக உள்ளதைப்பற்றி யோசித்துப் பார்க்கும்போது **Colonialism** என்றால் அரசியல் ஆதிக்கத்தினாலே பொருளாதார ஆதிக்கம் ஏற்படுவது தான் அதிலே ஏற்படக்கூடிய பெரிய தீங்கு என்பதை நாம் அறிகிறோம். இன்று இங்கிலாந்து இந்தியாவை அரசியல் அடிமையாக வைத்து இருந்தது என்றால் அது அதன் காரணமாக ஏற்படக்கூடிய பொருளாதார ஆதிக்கம்தான் நம்மை அதிகமாக பாதித்து இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. நம் உத்தியோகஸ்தர்களுக்கு கொடுத்த காரணமாக நம்முடைய நாட்டு, இந்திய நாட்டின் பெரும் பொருள் செல்வம் அந்த நாட்டுக்குப் போய்விடவில்லை. ஆனால் அதிகமாகப்போனது பொருளாதாரத்துறையில் தான். பொருளாதாரத்துறை என்று சொல்கிறபோது வர்த்தகம் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் ஏற்பட்ட வெளி நாட்டு வர்த்தகத்தைத்தான் குறிப்பிடுகிறேன். இந்த வெளிநாட்டு வர்த்தகத்திலே இருந்த பலவிதமான, நியாயமில்லாத பொருத்தமற்ற ஏற்றத் தாழ்வுகள் அவைகள் காரணமாக இந்தியா மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டது. என்னுடைய அபிப்பிராயத்தில் தொழில்களின் அபிவிருத்தியில் வேறு ஒரு நாட்டுக்





கும் நம்முடைய நாட்டுக்கும் அதாவது இந்தியாவுக்கும் எப்படி இந்த ஒரு ஆதிக்கத்தின் காரணமாக அரசியல் பிடிப்பு காரணமாக தீங்கு ஏற்பட முடிகிறதோ அதேமாதிரிதான் ஒரு பகுதி மேல்தட்டில் இருக்கும்போது இன்னொரு பகுதி அதிக அபிவிருத்தி இல்லாமல் இருக்கும்போது "**Colonialism**" ஏற்பட்டால் தீங்குகளும் ஏற்படுகின்றன. இப்படி அபிவிருத்தி இல்லாமல் பின் தங்கி இருக்கும் பகுதியாக ஏற்பட்டு இருக்கக்கூடிய நிலைமையில் ஒன்று பார்க்கமுடியும். இப்படி அரசியல் ஆதிக்கம் வேண்டியது இல்லை. பொருளாதார அபிவிருத்தியில் ஏற்றத்தாழ்வு ஏற்படும்போது இந்த **(Colonialism)** ஏற்படுகிறது. இதை நாம் எதிர்த்தே வந்தோம். இப்படி பொருளாதாரத் தீங்குகள் ஒரு நாட்டிலே ஏற்படாமல் நம்முடைய தொழில்களின் அபிவிருத்தியை அதை அடைய நாம் யோசித்து பார்க்கவேண்டியது மிகவும் அத்தியாவசியம். ஆகையினாலே இந்தப் பொருளாதாரத் தீங்குகள் நீங்கவேண்டியது. இப்படி **Colonialism** நாட்டிலே வேறு ஒரு உருவத்திலே தலையெடுக்காமல் இருக்கவேண்டியது மிக மிக அத்தியாவசியமாகும். இப்படி ஏற்றத் தாழ்வுகள் அபிவிருத்தி இல்லாமல் பொருளாதாரத் துறையிலே இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகள் ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் இருக்கக்கூடியதை சரி செய்யவேண்டியது மிகவும் முக்கியம். அதை நீக்குவதைத்தான் திட்டக் கமிஷன் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆகவே இதை நாம் நன்றாக மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்: இங்கிலாந்து இந்தியா மீது ஆதிக்கம் செலுத்தி வந்தபோது இருந்த நிலைமையை நன்கு ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். இங்கிலாந்து **Industrialization** இயந்திரத் தொழிலில் முன்னேறி இருந்த காரணத்தினால் இங்கு இருந்து சாதாரணமாக உற்பத்திப் பொருள்களை அங்கே கொண்டுபோய் அங்கு இயந்திர மூலமாக மூலப்பொருள்களை உபயோகப் பொருள்களாக மாற்றி திரும்ப இங்கே கொண்டுவந்து அதிக விலைக்கு விற்று அதன் மூலமாக நம் நாட்டு செல்வத்தை பெரும் அளவில் எடுத்துக்கொண்டே போனார்கள். தாதா பாய் நௌரோஜி ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார்கள். அதைப் படித்துப் பார்த்திருந்தால் தெரியும். எப்படி இயந்திரத் தொழிலிலே அபிவிருத்தி அடைந்திருக்கக்கூடிய ஒரு நாடு சாதாரணமாக விளைபொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நாட்டை எப்படி எப்படியெல்லாம் சுரண்டுவதற்கான வாய்ப்பும் வசதியும் இருக்கிறது என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்து அதிலே அவர்கள் காண்பித்து இருக்கிறார்கள். **Poverty in India** என்று குறிப்பிடுகையில் உண்மையில் அத்தகைய ஒரு துர்ப்பாக்கியமான அவல நிலைமை எப்படி ஏற்பட்டது ; பிரிட்டிஷ் **(British)** ஆதிக்கத்தின்கீழ் என்பதைப்பற்றி மிக அழகாக புள்ளி விவரங்களோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மேற்கண்ட உண்மைகளை மனதில் வைத்துக்கொண்டு பார்க்கும்போது, இன்றைக்கு ஒரு பகுதியில் மட்டும் இயந்திர உற்பத்தி சாதனங்களை அதிகமாகப் பெருக்கியும் இன்னொரு பகுதியில் வெறும் விவசாய பொருள் உற்பத்தி செய்யும் நாடாக மட்டும், இப்படி மூலப்பொருள்களை, விவசாயப் பொருள்களை மட்டுமே உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தால் அந்த அளவிற்கு இப்படி பொருள்களை மட்டுமே உற்பத்தி செய்யக்கூடியவர்கள் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவைகளையெல்லாம் நன்றாக நினைவில் வைத்துக்கொண்டுதான் நாம் இன்றைக்குப் பார்க்கவேண்டும். இது ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் மாத்திரம் பொருந்தக் கூடியதல்ல. இன்றைக்கு அடுத்தாற்போல் நகர்புறங்களையும், கிராமாந்திரப்பகுதிகளையும் அதாவது நாட்டுப்புறங்களை எடுத்துக்கொண்டால் நகரத்திற்கும் நாட்டுப்புறங்களுக்கும் இருக்கக்கூடிய ஒரு தொடர்பும் இதேதான். அதன் மூலமாகத்தான் இன்றைக்கு இயந்திர சாதனங்கள் ஏற்படுத்தி இருக்கக்கூடியதெல்லாம் நகர்புறங்களிலே இருக்கிற காரணத்தினாலேதான் செல்வம் நகர்புறத்தின் பக்கத்திலே வந்து சேர்ந்துகொண்டு இருக்கிறது. இப்படிப்பட்ட காரணங்களினாலேதான் நாட்டுப்புறங்கள் கீழான நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஆகையினாலே இயந்திரத் தொழில்கள் பெரும்பாலும் எல்லாம் ஒரே பகுதியில் அமையாமல் பார்த்துக்

கொள்ளலாம். எனவே எல்லா இடத்திலேயும் இப்படி பொருளாதார அபிவிருத்தி ஓரளவிற்கு அதிக ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஏற்பட்டால்தான் ஒரு பகுதியினுடைய இயந்திரத் தொழில் அதிகமாகப் பாதிக்கப்படாமலும் இன்னொரு பகுதி அதிகமாக உயராமலும் இதைப் பார்த்துக்கொள்ள முடியும். இதை அடிப்படையாக வைத்துத்தான் இன்று நாம் கேட்பது. இப்படி பெரிய தொழில்களை ஏற்படுத்துவதை ஒரு பகுதியில் மட்டும் ஏற்படுத்துவோமானால் இந்த தீங்குகள் எல்லாம் நம் நாட்டிலே ஏற்பட்டுத்தான் தீரும். அதன் காரணமாக ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகள் இன்னும் அதிகமாகத்தான் செய்யும். அதன் காரணமாக நாட்டிலே மக்களிடை இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகள் இன்னும் அதிகப்பட்டுத்தான் தீரும். அதன் காரணத்தினால் ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் இருக்கக் கூடிய துவேஷ மனப்பான்மை அதிகப்படத்தான் ஆகும். இவைகளையெல்லாம் நன்றாக மனதில் வைத்துக்கொண்டுதான் இன்றைக்கு நாட்டிலே எல்லா பகுதிகளிலும் நல்ல முறையிலே பெருமை கொண்டு வருவதற்கு திட்டம் வேலை செய்யவேண்டும். ஒரு பகுதிக்கும் இன்னொரு
10-18 a.m. பகுதிக்கும் இருக்கக்கூடிய துவேஷ மனப்பான்மை அதிகப்படும். இதை மனதில் வைத்துக்கொண்டுதான் திட்டத்திலே எல்லாப்பகுதிகளையும் நல்ல முறையில் முன்னுக்குக் கொண்டுவருவதற்காக திட்டம் வேலை செய்ய வேண்டும் என்ற ஒரு முக்கியமான கருத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தை ஒப்புக்கொண்டது மட்டும் போதாது. நடைமுறையில் அமுல் நடக்கும்போதுதான் எல்லாப் பகுதிக்கும் இதனால் நன்மை ஏற்படும்.

பிற்போக்கான பகுதி என்றால் என்ன என்பதைப்பற்றியும், அதை எப்படி நிர்ணயிப்பது என்பதைப்பற்றியும் பட்ஜெட் பொது விவாதத்தின் போதும் நான் எடுத்துச் சொன்னேன். ஒருவனுடைய சராசரி வருமானம் எவ்வளவு இருக்கிறதென்பதை வைத்துக்கொண்டுதான் ஒரு பகுதியில் எந்த அளவு பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதென்பதைப்பற்றி நாம் முடிவு செய்யமுடியும். வெறும் கல்வித் துறையிலே மட்டும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அல்லது போக்கு வரத்து துறையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், அதை பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் அடைந்த பகுதி என்று சொல்வோமேயானால், அது தவறு என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் நாட்டிலேயே ஒரு உதாரணம் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் கல்வித் திட்டத்தைப்பற்றிய அறிக்கையைப் படித்துப் பார்த்திருப்பார்கள். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் புள்ளி விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே பார்த்தால் சேலம் ஜில்லாவும், கோயம்புத்தூர் ஜில்லாவும் கல்வித்துறையில் முன்னேற்றம் அடையவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பொருளாதார நிலையை எடுத்துக்கொண்டால், நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற எல்லா ஜில்லாக்களையும் விட பொருளாதாரத் துறையிலே முன்னணியில் இருப்பது கோயம்புத்தூர் என்பதில் சந்தேகம் கிடையாது. தொழிற் துறையிலும் சரி, விவசாயத் துறையிலும் சரி, கோயம்புத்தூர் ஜில்லா முன்னணியில் இருக்கிறதென்பதில் சந்தேகம் இல்லை.

**Sri V. C. PALANISAMY GOUNDER** : பொருளாதாரத் துறையிலே கோயம்புத்தூர் ஜில்லாவானது முன்னணியில் இருப்பதாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். **Per Capita income** விஷயத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவானது மற்ற ஜில்லாக்களை விட முன்னணியில் இருக்கிறது என்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து விளக்கம் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அந்தக் கணக்கைப்போட்டுத்தான் சொல்கிறேன். கோயமுத்தூர் ஜில்லாவானது பொருளாதாரத் துறையில் மற்ற ஜில்லாக்களைவிட முன்னணியில் இருக்கிறது





என்று சொல்லிக்கொள்ள நாம் தயக்கப்படவேண்டிய அவசியம் இல்லை. மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறோம் என்ற முறையில் நாம் பெருமைப்படவேண்டும். ஒரு பகுதி மட்டும் பொருளாதாரத்தில் முன்னேறியிருக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து அல்ல. எல்லா பகுதிகளும் முன்னேறவேண்டும் என்பதுதான் என்னுடைய வாதமே தவிர முன்னேறி இருப்பதை கீழே இழுத்து விடவேண்டும் என்பது என்னுடைய வாதம் அல்ல. ஆனால் அது மற்றவர்களுடைய வாதமாக இருக்கலாம். மற்ற பகுதிகள் கீழேயே இருந்துகொண்டு ஒரு பகுதி மட்டும் முன்னேறிக்கொண்டிருக்கவேண்டும் என்பது வேறு சிலருடைய வாதமாக இருக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரை எல்லாப் பகுதிகளும் முன்னேறவேண்டும் என்பதுதான் என்னுடைய வாதம். இதற்காக பம்பாயினுடைய முன்னேற்றத்தைக் குறைக்கவேண்டும், வங்காளத்தினுடைய முன்னேற்றத்தைக் குறைக்கவேண்டும் என்பதல்ல. அவர்களும் முன்னேறவேண்டும். முன்னேற்றம் அடையாத பகுதிகளும் முன்னேறவேண்டும். ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்படவேண்டும். நான் சொல்லுவது எதற்காக என்றால், கல்வியிலே முன்னேற்றம் அடைந்துவிட்டோம், ரோடுகளை அதிகமாகப் போட்டுவிட்டோம் என்ற காரணத்தால் அங்கே பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது, மக்களிடமே சுபீட்சம் ஏற்பட்டுவிட்டது என்று நினைத்துக்கொண்டோமானால் அது வெறும் மயக்கம் என்று தான் சொல்லவேண்டும்.

திருவாங்கூர்-கொச்சியை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கே சில பகுதிகளிலே படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் இருப்பதைப்போல் உலகத்திலேயே வேறு எங்கும் கிடையாது. திருவாங்கூர்-கொச்சியில் அந்த அளவுக்கு படித்தவர்கள் இருந்தாலும் அங்கு பொருளாதாரத் துறையிலே பார்க்கும்போது, வறுமை அதிகமாக, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆகையால் தயவு செய்து ஒன்றை மறந்துவிடவேண்டாம். ஏதோ ஒன்றிரண்டு பள்ளிக்கூடங்களை வைத்தால், சில ரோடுகளை போட்டுவிட்டால் மக்கள் முன்னேறிவிடுவார்கள் என்று நினைத்தால் அது வெறும் தவறு. பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் அடையும்போதுதான் உண்மையான திட்டம் என்று சொல்ல முடியும். பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் அடைவதற்கு ஒரு தகுந்த கல்வி முறை இருக்குமானால் அது உபயோகப்படலாம். ஆனால் கல்வியின் மூலமாக மற்ற வசதிகள் இல்லாமல், 10-23 a.m.
ஒரு பகுதி முன்னுக்கு வந்துவிட முடியும் என்று நாம் தவறாக நினைத்துவிடக்கூடாது என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். புள்ளி விவரங்களைப் பார்த்த பிறகு எல்லோர் மனதிலும் கொஞ்சம் பதிந்து இருக்கும் என்று நம்புகிறேன். ஆனால்தான், தொழில்களை ஆரம்பிக்கும்போது பகுதிக்குப் பகுதி இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் முறையில் நமது திட்டங்கள் அமைய வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். ஆகவே இந்தக் கொள்கையை ஒப்புக்கொண்டால் மட்டும் போதாது ; ஒவ்வொரு பகுதியும் எல்லாத் துறைகளிலும் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதில் அக்கறை கொள்ளவேண்டும். அப்போதுதான் கொள்கையை ஒப்புக்கொண்டதாக அர்த்தம் ஏற்படும். இல்லாவிட்டால், அர்த்தமில்லாமல் பேச்சளவில் மட்டும்தான் இருக்கும் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த விஷயங்களை யெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் நாம் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

அடுத்து ஐந்து வருஷங்களுக்கு எவ்வளவு பெரிய திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்பதுபற்றி இரண்டு வருடங்களாக பலத்த விவாதம் நடந்து வருகிறது. இது விஷயமாக, பல நிபுணர்களைக்கொண்ட குழுக்களின் மூலம் பரிசீலனை செய்யப்பட்டது. நிபுணர்களின் குழுவினர்களும் நமக்கு சிபாரிசு செய்திருந்தார்கள். அந்த சிபாரிசில் பொதுத் துறையில் (Public sector) ரூ. 4,300 கோடி அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவு செய்யலாம் என்று முதலில் சிபாரிசு செய்திருந்தார்கள். "பொதுத் துறையில், சர்க்கார் சார்பில் ரூ. 4,300 கோடி செலவுசெய்வதென்பது முடியாத காரியம் ; தனிப்பட்டவர்களின் முயற்சியை இது ரொம்பவும் பாதிக்கும் ;

[Sri C. Subramaniam] [2nd April 1956

ஆகையால் இதைக் குறைக்க வேண்டும். சர்க்கார் சார்பில் ரூ. 3,300 கோடி செலவு செய்ய வேண்டும்; அல்லது அதிக பட்சமாக ரூ. 3,800 கோடிதான் செலவு செய்யவேண்டும்" என்று பெரிய தலைவர்கள் பல தடவை சொல்லிவந்தார்கள். எனக்குத் தெரிந்தவரையில் ரூ. 4,300 கோடி போதாது, இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று நான் சொல்லி வந்தேன். நான் வெறுமனே அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்ல வில்லை; புள்ளி விவரங்களோடு, அதிகப்படுத்த வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டி, அவ்வாறு சொன்னேன். அதாவது, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருஷத்தில் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதை அடிப்படையாக எடுத்துக்கொள்ளவேண்டும். அந்த வருஷத்தில் செய்யும் செலவுகளை அடுத்த வருஷங்களில், அதாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைக்க முடியாது. ஒவ்வொரு வருஷமும் படிப்படியாக மேலே போய்க்கொண்டுதான் இருக்கவேண்டும். ஆகவே ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு அதிகமாகச் செலவு செய்யவேண்டும் என்பதற்கும் ஒரு அளவு வைத்துக்கொண்டிருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய வருமானம் 12 சத விகிதம் உயர வேண்டுமென்ற நோக்கத்தோடு செலவு செய்தோம். இன்றைக்கு, அதை இரட்டிப்பாக்கி, 25 சத விகிதம் உயர வேண்டுமென்று சொல்கிறோம். அப்படியானால், ஒரு வருஷத்திற்கு எவ்வளவு தொகை அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்று கணக்குப் போட்டுப் பார்த்து, ரூ. 4,500 கோடி அல்லது ரூ. 4,600 கோடி செலவழித்தால்தான் அந்த அளவு முன்னேற்றத்தை நாம் அடைய முடியும் என்ற காரணத்தோடுதான், ரூ. 4,300 கோடி போதாது, அதிகப்படுத்த வேண்டும் என்று கூறி வந்தேன். ஆகவே அதிகரிக்க வேண்டியிருக்கும் போது குறைக்கிறார்களே என்று எனக்குத் தெரிந்தவரையில் நான் சொல்லிக்கொண்டிருந்தேன். இன்றைக்கு எல்லாவற்றையும் பரிசீலனை செய்த பிறகு, ரூ. 4,800 கோடியை சர்க்கார் செலவு செய்யும் தொகையாக திட்ட யோசனையில் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ரூ. 4,800 கோடியைத் தவிர, தனிப்பட்டோரின் அபிவிருத்தித் திட்டங்களில் ரூ. 2,300 கோடியை தனிப்பட்டோர் செலவு செய்வது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த ரூ. 7,100 கோடிச் செலவில் நாட்டில் பொருளாதார அபிவிருத்தியையும் மற்றத் துறைகளில் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படும் என்பதுதான் திட்டத்தின் அடிப்படை. இந்த ரூ. 4,800 கோடியில் பல முதலீடுகள் (investments) உள்ளன; அதாவது, பணம் செலழித்தால், உடனடியாக முழுப் பலனையும் அடைந்துவிட முடியாது; பின்பு, போகப்போகத்தான் பலன் ஏற்படும். ரூ. 4,800 கோடியில் ரூ. 3,800 கோடியை சிறிய இயந்திரங்களை உற்பத்தி செய்யும் பெரிய இயந்திரசாலைகளுக்காகச் செலவழிப்பது என்று யோசனை கூறப்பட்டுள்ளது. பாக்கி ரூ. 1,000 கோடியை மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டங்களுக்காக செலவழிப்பது. இது ஒரு கணக்கு. இன்னொரு விதமாகக் கணக்குப் போட்டால், மத்திய அரசாங்கத்தாரால் எவ்வளவு செலவு செய்யப்படும், ராஜ்ய அரசாங்கங்களால் எவ்வளவு செலவு செய்யப்படும் என்று கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, ரூ. 4,300 கோடியில் ரூ. 2,214 கோடியை ராஜ்யங்களில் நிறைவேற்ற வேண்டிய திட்டங்களுக்காக எல்லா ராஜ்யங்களும் செலவழிப்பது என்றும், பாக்கித் தொகையை ராஜ்யங்களில் நிறைவேற்ற வேண்டிய திட்டங்களுக்காகவே மத்திய அரசாங்கத்தார் செலவழிப்பது என்றும் கணக்குப் போட்டிருக்கிறார்கள். அந்த பாக்கித் தொகையும் தேசியத் திட்டங்களில்தான் செலவழிக்கப்படும்; ஆனால், அது மத்திய அரசாங்கத்தாரால் ராஜ்யங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களுக்காக செலவழிக்கப்படும்.

10-28 a.m. இந்தத் திட்டத்தை நாம் இப்பொழுது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது அவசியம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நாம் எவ்வளவு செலவு செய்தோம், இப்பொழுது நாம் எவ்வளவு செலவு செய்ய உத்தேசித்திருக்கிறோம் என்பதைப் பார்க்கும் போது, முதல் திட்டத்தின் ஐந்து வருஷ காலத்தில் 2,356 கோடி ரூபாய் வரையில் செலவழித்திருக்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 4,800 கோடி ரூபாய் வரையில் செலவிட உத்தேசித்துள்ளோம். அதாவது, சென்ற திட்டத்தைக் காட்டிலும் இரண்டு மடங்குக்குச் சற்று அதிகமாக இப்பொழுது செலவு செய்ய முன்வந்திருக்கிறோம் என்பதைத் தான் நாம் இதிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டும்.

[2nd April 1956] [Sri C. Subramaniam]

மத்திய அரசாங்கத்தின் மூலமாக நிறைவேற்றப்படும் திட்டங்களிலே முக்கியமானவை உருக்கு உற்பத்திச்சாலைகள். அதன் மூலமாக பல கோடி கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படும். இவைகளுக்கெல்லாம் மேலாக, அடிப்படையாக உள்ள போக்கு வரத்து சாதனங்கள் சரியாக இருந்தால் தான் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருள்கள் (raw materials) போய்ச் சேர முடியும். போக்குவரத்து சாதனங்கள் சரியான முறையில் அமைந்திருந்தால்தான் உற்பத்தியான பொருள்கள் வெளியிடங்களுக்கும் சென்று நல்ல முறையில் விநியோகிக்கப்பட முடியும். போக்குவரத்து சாதனங்களுக்காக திட்டத்திலே—பாலம் கட்டுவது, கப்பல் கட்டுவது, ரோடுகள் போடுவது போன்ற துறைகளுக்காக—1,384 கோடி ரூபாய் வரையில் செலவழிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் சேர்ந்து மேற்கண்ட தொகையைச் செலவிடுவார்கள். ரயில்வேக்களுக்காக மட்டும் 900 கோடி ரூபாய் செலவழிக்கப்படும். இதுதான் திட்டத்தில் இருக்கக்கூடிய முக்கியமான அம்சங்கள். 10-22 மு.ப.

SRI S. S. KOLKEBAIL: On a point of information, Sir. I want to know whether the figures quoted by the Hon. Minister include the money to be spent in other districts which are to be ceded from the State of Madras?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I am giving the all-India figures. Perhaps the hon. Member is not able to follow my speech. If he goes through the papers supplied to him he will find that most of the materials are there. I am only giving a little more information so that hon. Members may understand what is contemplated in the Second Five-Year Plan. I am sorry the hon. Member is not able to follow my speech. But that can be rectified later on.

இரண்டாயிரத்து முன்னூறு கோடி ரூபாய் வரையில் தனிப்பட்டவர்கள் எப்படி செலவு செய்வார்கள் என்பதைப்பற்றி சில பேர்கள் ஆட்சேபனை சொல்வார்கள். இதிலே முக்கியமாக நாம் எடுத்திருக்கக்கூடிய முடிவு என்னவென்றால், முக்கியமான தொழில்களையெல்லாம் சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும் என்பது. அதாவது கன ரகத் தொழில்கள் பூராவையுமே சர்க்காரே நடத்த வேண்டும் என்பதைப்பற்றி ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். திட்டக் கமிஷனும், மத்திய அரசாங்கமும், தேசிய அபிவிருத்திக் கவுன்சிலும் ஓரளவு தனிப்பட்டவர்களுக்கு விட்டுக் கொடுத்திருக்கிறார்கள் என்று சிலர் நினைக்கலாம். ஆனால், இதிலே நாம் ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும். ஏதோ **nationalization**, **public sector** என்று சொல்லும்போது **doctrinaire approach** என்று சொல்லக் கூடிய முறையிலே, அதாவது ஒரு லட்சியத்தை மட்டும் மனதிலே வைத்துக் கொண்டு, அந்த லட்சியத்திலிருந்து நாம் ஒன்றும் பிறழக்கூடாது என்ற முறையிலே நாம் அணுகவேண்டுமா என்பதைக் கவனிக்க வேண்டும். பொருளாதார அபிவிருத்தியை எப்படி நாம் சீக்கிரமாக ஏற்படுத்த முடியும் என்பதையும், பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு நம் நாட்டில் இருக்கக்கூடிய சகல மக்களையும், சாதாரண வசதிகளையும் எப்படி உபயோகப்படுத்துவது என்பதையும் நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கும்போது இன்றைக்கு தொழில் பகுதியில், அபிவிருத்திப் பகுதியில் வேலை செய்து வருகிற தனிப்பட்டவர்களுடைய பகுதியை நாம் உபயோகப்படுத்த வேண்டாமா என்பதையும் யோசிக்க வேண்டும். அவர்களையும் உபயோகப்படுத்தினால், பொருளாதார

[Sri C. Subramaniam] [2nd April 1956

துறையிலே நாம் அதிகமாக முன்னேற முடியும் என்பதில் சந்தேகம் இடையாது. அந்த லட்சியத்தை மனதில் வைத்துக்கொண்டு, தனிப்பட்டவர்களையும் நாம் உபயோகப்படுத்தி, அதன் மூலமாக நாட்டிலே மக்களுக்கு மக்கள் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முதல் கடமை. ஆனால், அதே சமயத்தில், தேசிய திட்டத்திற்குப் புரம்பாக தனிப்பட்டவர்களுடைய நடவடிக்கை இல்லாமலும் பார்க்கவேண்டியது அவசியம்.

10-33 உ.ம. இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஏன் தனிப்பட்டவர்களுடைய முயற்சியையும் பயன்படுத்திக்கொண்டு நடத்தக்கூடாது என்பதை நாம் யோசிக்கவேண்டும். ஒரு சிறு தொழில் எந்தப் பக்கம் போக வேண்டும், தனிப்பட்டவர்களுக்குப் போக வேண்டியதா அல்லது சர்க்காருக்குப் போக வேண்டியதா என்பதை ஆலோசனை செய்து ஒரு முடிவு செய்யலாம். தனிப்பட்டவர்களுடைய பகுதிக்கு பூராவையும் ஒதுக்கி விடுவது அவசியமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அப்படி உபயோகித்துக் கொள்வதற்கு 2,300 கோடி ரூபாய் இருக்கிறது. நாட்டின் பூராவும் சுமார் 4,800 கோடி ரூபாய் செலவு செய்யப் போவதில் 2,300 கோடி ரூபாயில் 500 கோடி ரூபாய் தொழிலுக்கும் 1,800 கோடி ரூபாய் கட்டிடங்கள் கட்டுவதற்கும் வேறு ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்கும் இன்னும் வெவ்வேறு வகையில் முன்னேற்றமடைவதற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் தனிப்பட்டவர்கள் முயற்சி மூலம் நடந்து வருகிற தொழிலுக்கு மட்டும் அல்ல, மற்ற காரியங்களையும் செய்தாக வேண்டும். அவர்கள் முதலீடு போடக் கூடியது 500 கோடி ரூபாய் அளவுக்குத்தான் இருக்கும். ஆகவே மற்ற தொழிலுடன் சர்க்கார் ஏற்படுத்தக்கூடிய தொழிலுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 500 கோடி ரூபாய் அதிகம் அல்ல. இதற்கு வேண்டிய வருமானத்திற்கு எங்கு போவது என்று பயப்பட வேண்டியதில்லை. இதை நினைத்துத்தான் திட்டக் கமிஷன் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. இதற்கு வேண்டிய வருமானம் தனிப்பட்டவர்களுடைய பகுதியிலிருந்து இயங்க வேண்டும். இந்த முடிவுக்கு வந்து 2,300 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். இதைப் பற்றியும் நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். இதைப்பற்றி அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டியது முக்கியமானது. இதில் முதல் திட்டத்திற்கும் இரண்டாவது திட்டத்திற்குமுள்ள வித்யாசத்தைப் பார்க்கவேண்டும். போன ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றிய விவரம் இப்பொழுது எனது ஞாபகத்தில் இல்லை. சுமாராக சொல்லும் போது, சர்க்காருடைய பகுதியைப் பார்க்கும்போது, தனிப்பட்டவர்களுடைய பகுதி 100-க்கு 55, அதில் சர்க்கார் பகுதி 100-க்கு 45 என்று ஏற்பட்டிருந்தது. ஆனால் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் பப்ளிக் செக்டார், அதாவது சர்க்கார் பகுதி 100-க்கு 62-ம், தனிப்பட்டவர் பகுதி 100-க்கு 38 என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே குறைந்து கொண்டே போவதைப் பார்க்கலாம். இதை அங்கத்தினர்கள் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்த நிலைமையில் இன்றைக்கு எல்லா வசதிகளையும் எல்லோருடைய திறமையையும் நாம் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதை தவிர்க்கமுடியாது. இதையே எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

இப்படிச் செலவழிப்பதன் மூலம் என்ன எதிர் பார்க்கப்படுகிறது. தேசீய வருமானத்தைக் கணக்குப் பார்த்தால் 1955–56-ல் தேசீய வருமானம் நாடு முழுவதும் சேர்ந்து 10,800 கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் காரணமாக ஐந்து வருஷ முடிவில், அதாவது 1960–61-ல் தேசீய வருமானம் 13,480 கோடி ரூபாய் அதிகப்படியாகி இருக்கும், அதாவது 25 சத விகிதம் அதிகமாக இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதை லட்சியமாக வைத்துக்கொண்டுதான் இந்த நிலைமையில் நாம் முன்னுக்கு வரவேண்டும், மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும், தேசீயத் தொழில் உயர வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நான் சொல்வதெல்லாம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நீல புஸ்தகத்தில் 20 முதல் 26 ஆவது பக்கம்



2nd April 1956] [Sri C. Subramaniam]

வரையில் விவரங்கள் பூராவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் அதில் விஸ்தாரமாக சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்குக் கணக்குப் பார்த்தால் ஆள் ஒன்றுக்கு சாரசரி வருமானம் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் பத்து சத விகிதம் அதிகமாக ஆகி இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஆள் ஒன்றுக்கு முதல் ஐந்தாண்டு திட்டத்தில் 100-க்கு 10 சத விகிதம் சராசரி வருமானம் அதிகப்பட்டிருக்கிறது.

SRI M. PALANIYANDI: The other day the Hon. Minister said that the increase was only 3 per cent.

THE HON. SRI C. SUBRAMANIAM: Ten per cent for the whole period, and three per cent for each year.

SRI V. BALAKRISHNAN: How are these figures worked out?

THE HON. SRI C. SUBRAMANIAM: There are certain technical methods adopted by the statisticians. I am sorry I am not conversant with those technicalities. It is a complicated process but ultimately it is simple in that you have to calculate certain figures and then divide it by certain other figures and then you get this per capita income and the national income. As I said, it is a rather difficult process but certain methods have been evolved in other countries to calculate these figures and those methods have been adopted to suit conditions prevailing in our country and the figures have been worked out.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் 100-க்கு 18 சத விகிதம் அதிகமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது ஜனத்தொகை அதிகமாகிக்கொண்டே போகிறது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். தேசிய வருமானம் 25 சத விகிதம் அதிகமானாலும்கூட ஆள் ஒன்றுக்கு சாரசரி வருமானம் 100-க்கு 18 சத விகிதம் அதிகமாகத்தான் இருக்கும். நாம் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம் இது. திட்டத்தை போட்டால் மட்டும் போதாது. அதற்கு வேண்டிய பொருள் வசதி, மற்றும் எல்லா வசதிகளும் வேண்டும். இதையும் எல்லோரும் யோசித்துப் பார்க்கவேண்டும். இதைப்பற்றி 27-வது பக்கத்தில் பார்த்தால் நன்றாகத் தெரியும். பணம் எங்கேயிருந்து வரப்போகிறது என்றும் காண்பித்திருக்கிறார்கள். இதையும் முக்கியமாக கவனிக்கவேண்டும். 1,200 கோடி ரூபாய் டெபிசிட் பைனான்சிங் மூலமாக கிடைக்கிறது. அதாவது நோட்டுகள் அச்சடித்துக் கொடுப்பதன் மூலம் கிடைக்கிறது. அதனால் ஒரு கஷ்டமும் ஏற்படாது என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். அதிகப்படியான நோட்டுக்களை அச்சடித்துக் கொடுத்தால் நாணயச் செலாவணி அதிகமாகிக்கொண்டே போகும், அதனால் இன்பிளேஷன் என்று சொல்வார்களே பண வீக்கம் அது இல்லாமல் இருக்கும் என்றும், அதனால் விலை உயர்ந்துவிடாது என்றும் நிபுணர்கள் சொல்லுகிறார்கள் அந்த நம்பிக்கை இப்பொழுது இருக்கிறது. அதன் மூலம் 1,200 கோடி ரூபாய் அதிகம் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். அதற்கு மேல் வெளிநாடுகளிலிருந்து வாங்கிக்கொள்ளலாம் என்றும் முடிவு செய்திருக்கிறார்கள்.

SRI N. K. PALANISAMY: பொருளாதார நிபுணர்கள "raw materials" வெளி நாடுகளுக்குப் போவதனால் பண வீக்கம் ஏற்படாது, பொருளாதாரம் அதிகரிக்கும், அதனால் பற்றுகுறை ஏற்படாது என்றுதான் சொல்லுகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் சொல்வதிலிருந்து கொஞ்சம் தைரியம் ஏற்படுகிறது. இப்படி கனம் என். கே. பழனிசாமி அவர்களும் தைரியம் கொடுக்கிறார் என்பதையும் நான் நிபுணர்களுக்கு சொல்லுகிறேன். 1,200 கோடி ரூபாய்க்கு அச்சடிக்க பயப்படவேண்டாம் என்று அவர் சொல்லுகிறார் என்றும் சொல்லுகிறேன்.

இதைக் கணக்குப் போட்ட பிறகும் மற்றும் 450 கோடி ரூபாய் எங்கே இருந்து வரப்போகிறது என்பதைப்பற்றி கணக்கு இல்லை. கனம் பழனிசாமி அவர்கள் பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்படும் என்று சொல்வதை வைத்துக்கொண்டும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இதற்கு வேண்டிய வருமானத்தையும் தேடிக்கொள்ளவேண்டியதாக இருக்கிறது. திட்டம் செய்யும்போது பல வசதிகளைச் செய்கிறோம். மக்களுக்கு அதனால் பல நன்மைகள் ஏற்படும், அப்படி பல நன்மைகள் ஏற்படும்போது அவர்கள் கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டியதாகத்தான் இருக்கும். இந்த 450 கோடி ரூபாயும் எங்கிருந்து கொண்டுவரவேண்டும் என்றால் மக்களுக்கு வரி விதிப்பதின் மூலமாகத்தான் கொண்டுவரமுடியும். மக்களுக்கு வரி எவ்வளவு போடவேண்டும் என்பதைப்பற்றியும் யோசிக்கவேண்டும். அதிக அபிவிருத்தி ஏற்படும்போது, மக்கள் உற்சாகமாக இருப்பார்கள், அதனால் அதிகப்படியாக வரி கொடுக்க தயங்கமாட்டார்கள். வசதி இல்லாமல் இருந்தால்தான் வரி கொடுக்க தயங்குவார்கள், திட்டத்தையும் அமுல் நடத்த முடியாது. இதை அங்கத்தினர்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அதிகப்படியான வசதி செய்து கொடுத்தால் மக்களும் அதிகப்படியான வரி கொடுக்கவேண்டியதாக ஏற்படுகிறது. அதற்கும் அவர்கள் தயாராகத்தான் இருக்கவேண்டும். நல்ல காரியங்களைச் செய்து கொடுத்தால்தான் பணத்தையும் வசூல் செய்ய முடியும். வேறு விதத்தில் வசூல் செய்யமுடியாது. இந்த சமுதாயம் கொஞ்சம் தியாகம் செய்தால் பிற்காலத்தில் வரக்கூடிய சமுதாயம் நன்மை அடையும், நன்றாக வாழ முடியும். அதற்கு வேண்டிய தியாகத்தை இந்த சமுதாயம் கொஞ்சம் செய்யவேண்டியதாகத்தான் ஏற்படுகிறது. பிற்காலத்திய சமுதாயம் சுபிட்சமாக வாழவேண்டுமானால் இந்தக் காலத்திய சமுதாயம் கொஞ்சம் தங்களுடைய வாழ்க்கையில் தியாகம் செய்துகொள்ளவேண்டும். ஒருவன் கையில் இப்பொழுது 10,000 ரூபாய் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதை வைத்துக்கொண்டு இப்பொழுது ஒரு வீடு கட்டிவைத்தால்தான் பிற்காலத்தில் வரக்கூடிய அவனுடைய சந்ததி நன்றாக வாழ வசதியாக இருக்கும். ஆனால் பிற்காலத்தைப்பற்றி யோசிக்காமல் அந்த பத்தாயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 100-க்கு ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதிகப் பணத்தை மாதாமாதம் செலவு செய்துவிட்டால் பிற்கால சந்ததி நன்றாக வாழ முடியாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் அங்கத்தினர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தொடர்ந்து சமுதாயத்திற்கு சுபிட்சம் ஏற்படவேண்டுமானால் இன்றைக்குள்ள சமுதாயம் தான் அனுபவிப்பதைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் பிற்காலத்தில் அபிவிருத்தி ஏற்படும். அப்பொழுதுதான் திட்டத்தை நல்ல முறையில்
10-43 a.m. அமுல் நடத்தலாம். ஆகையால் ஒரு விஷயத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இன்றைக்கு நாம் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் இந்த நாட்டின் வருங்காலச் சந்ததிகள் நன்றாக வாழவேண்டுமென்பதற்காகப் போடப்படும் திட்டங்களாகும். எப்படி பிற்காலச் சந்ததிகளுக்காக நாம் சொத்துக்கள் தேடி வைக்கின்றோமோ, அதேபோல பிற்காலச் சந்ததிகளின் நன்மைக்காக தேசீயச் சொத்தை அதிகமாக்கி வைக்கின்றோம். தேசீய வசதிகளை அதிகமாக்கிவைக்கின்றோம் என்பது என் கருத்து. பொதுவான இவ்விஷயத்தை எல்லோரும் மனதில் கொள்ளவேண்டும். இதனை மனதில் கொண்டு பார்த்தால் நான் சொல்கின்ற விஷயத்தைப் புரிந்துகொள்ள முடியும். நாம் 350 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டிருக்கிறோம். இதனால் இப்பொழுது இருக்கக்கூடிய வருமான அளவை அதிகப்படுத்தியாகவேண்டும். தேசீய செலவினத்தை அதிகப்படுத்தி இருப்பதால் தேசீய வருமானமாகிய வரியை அதிகப்படுத்தவேண்டியிருக்கிறது. புதிய வரியின் மூலமாக 450 கோடி ரூபாய் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. "கொள்ளுக்கு என்றால் வாயைத் திறப்பது; கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்வது," என்றபடி இவ்விஷயத்தில் இருக்கக்கூடாது. திட்டத்தை அதிகப்படுத்தும்போது, திட்டத்திற்கான செலவுகளை எல்லாம், வசதிகளை எல்லாம் சேகரிப்பதற்கான உதவியிலும் எல்லோரும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திட்டத்தை அதிகமாக்கிக்கொண்டு போகும்



போதே, நாட்டின் வருமானமாகிய வரி வசூல் கம்மியாகப் போகவேண்டுமென்றால் பொருளாதார அபிவிருத்தி ஏற்படாது. இருக்கக்கூடிய வரி இனத்தை அதிகப்படுத்தக்கூடாது என்றால் இருக்கக்கூடியதை, அப்போதைக்கப்போது வரக்கூடியதை செலவு செய்யக்கூடிய நிலைமைதான் ஏற்படும். இதனால் ஒரு சாசுவதமான பலம் பொருந்திய பொருளாதார சமுதாயத்தை நாம் அமைக்கமுடியாது என்பதை எல்லோரும் மறக்கக்கூடாது. இந்தத் திட்டத்திற்கு மொத்தமாக ஆகும் 450 கோடி ரூபாய்க் கணக்கில் மத்திய அரசாங்கமே 250 கோடி ரூபாய் வருமானத்திற்கு வரி போடும் என்றும், பாக்கித் தொகைக்கு இதர ராஜ்ய சர்க்கார்கள் சேர்ந்து வரிபோட்டுவசூல் செய்துகொள்ளவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஜனத்தொகை பிரகாரம் சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் நூற்றிலே பத்து பங்கு, அதாவது 22½ கோடி ரூபாய்க்கு வரி வசூல் செய்யவேண்டுமென்பது தப்பு என்று சொல்லியிருக்கிறேன். எப்படி இந்த அபிவிருத்தியில் மக்களும் அவரவர்களுக்குத் தகுந்த பிரகாரம் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார்களோ, அதைப்போலவே வரி கொடுக்கும் போதும் அவரவர்களுடைய சக்தியைக் கணக்கில் எடுத்துக்கொண்டே போடவேண்டும். இந்தக் கண்ணோட்டத்தை அடிப்படையாக வைத்து இந்த ராஜ்யத்திலிருந்து எவ்வளவு வரி வசூல் அதிகப்படுத்தப்படவேண்டுமென்பது முடிவாகவேண்டும். நிதிக் கமிஷனும் இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லுகிறேன். ஏற்கெனவேயே நமது ராஜ்ய மக்கள் அதிகமான வரி செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சக்திக்கு அதிகமாகவே அவர்களிடமிருந்து வரிப்பணம் வசூல் செய்யப்பட்டுவருகிறது. நிதி அமைச்சர் என்ற முறையில் நான் இதை உணர்ந்திருக்கிறேன். பலர் என்னைக் குறை கூறலாம். ஆனாலுங்கூட மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற ஒரே கருத்தோடு இந்த அதிக வரிப்பணம் வசூல் செய்வதினால் என்னைக் குறைகூறுவதில் பிரயோஜனமில்லை. பணம் விரயமாக்கப்பட்டால் குறை கூறுவது பொருந்தும். ஆகவே நாம் புதிதாகப் போட உத்தேசித்திருக்கும் திட்டங்கள் என்ன என்ன? அவற்றினால் தேசீய வருமானம் எவ்வளவு அதிகப்படும்? அவற்றுக்கு ஆகும் செலவு எவ்வளவு? இதை மக்கள் எப்படி பிரித்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை எல்லாம் கணக்குப் போட்டு மக்களிடத்தில் சொன்னால் மக்கள் இவற்றை ஆதரிப்பார்கள் என்றே நான் நம்புகிறேன். இவ்விஷயத்தில் யோசித்து நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

தேவிகுளம், பீர்மேடு விஷயமாக மத்திய சர்க்கார் சொன்ன முடிவை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளதான் வேண்டுமென்று நான் சொன்னதுபோல இந்த விஷயத்தில் மத்திய சர்க்கார் சொல்லும் முடிவை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் சொல்லமாட்டேன். சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையிலும் இன்னும் அதிகமான திட்டங்களைப் போடுவதற்கு வேண்டிய உதவிகளை எல்லாம் அளிக்கவேண்டுமென்று தொடர்ந்தே சொல்லிவருவேன். அவற்றைத் தொடர்ந்தே வாங்கவும் போகிறோம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இதிலே இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கிற குறைகளை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டியதும் அவசியம்தான். மத்திய சர்க்கார் எல்லா ராஜ்யங்களுக்காகவும் என்று 2,514 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தை மிகவும் முன்னேற்றம் அடைந்த ராஜ்யம் என்று நான் சொல்லத் தயாராயில்லை. அதேபோல ரொம்பவும் பின்னடைந்த ராஜ்யம் என்றும் கூறமுடியாது. ஆனால் ஸ்ரீ சந்தானம் அவர்கள், நமது ராஜ்யத்தை தொழில் துறையில் மிகவும் அபிவிருத்தி அடைந்த ராஜ்யம் என்று சொல்லியிருப்பது மிகத் தவறாகும். நிதிக் கமிஷன் தலைவராக வரக்கூடிய ஒருவர் இந்த மாதிரியாக அபிப்பிராயம் சொல்வதே சரியில்லை. கொஞ்சம் விலகியிருப்பது நல்லது என்பது தமிழ்நாட்டின் அபிப்பிராயமாக இருக்கும். இறிய விந்தியப் பிரதேசத்தில் அவர் கவர்னராக இருந்து வந்ததால், சென்னை ராஜ்யத்தில் ஆங்காங்கே இருக்கக்கூடிய பச்சை பசுமையைப் பார்த்து அபிவிருத்தி அடைந்த ராஜ்யம்

[Sri C. Subramaniam] [2nd April 1956

இது என்று சொல்கிறாரே என எண்ணவேண்டியிருக்கிறது. பம்பாயைப் பார்த்தால், வங்காளத்தைப் பார்த்தால் நம் ராஜ்யம் எவ்வளவு பின்னடைந்து இருக்கிறது என்பது தெரியும். கனத் தொழில்கள் சம்பந்தமான திட்டம் எதுவும் கிடையாது என்பதை யாரும் மறுக்கமுடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே நம்முடைய ராஜ்ய அபிவிருத்தியைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நாம் ஒரு திட்டம் சமர்ப்பித்திருந்தோம். ஆனால் நமக்கு அவர்கள் 172 கோடி ஒதுக்கியிருப்பதாக தாக்கீது வந்திருக்கிறது. ஜனத்தொகையைக் கணக்கு எடுத்துப்பார்த்தாலும், சராசரியைக் கணக்கெடுத்துப் பார்த்தாலும் நமக்கு 220 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டும். திட்டக் கமிஷன், அதிகாரிகளோடுகூட உட்கார்ந்து கொண்டு இந்தத் திட்டங்களையெல்லாம் பரிசீலனை செய்தபோது எல்லாத் திட்டங்களையும் 'ஏ' திட்டம், 'பி' திட்டம் என்று பிரித்தார்கள். "ஏ" திட்டம் என்றால் உடனடியாக அத்தியாவசியமாக ஒப்புக்கொண்டு பணம் ஒதுக்கப்படவேண்டிய திட்டம் என்றும், "பி" திட்டம் என்றால் பின்னால் பண வசதி இருந்தால் கவனிக்கப்படவேண்டிய திட்டம் என்றும் வைத்துக்கொள்ளப்பட்டது. அப்போது நம் ராஜ்யத்திற்காக "ஏ" பகுதிக்கு 204 கோடி ரூபாயும், "பி" பகுதிக்கு ஒரு இருபது முப்பது கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டது. ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் இதர ராஜ்யம் எதற்கும் "ஏ" திட்டப் பகுதிக்காக ஒதுக்கப்பட்ட பணம் குறைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நம்முடைய ராஜ்யத்தின் "ஏ" திட்டப் பகுதி பணம் தான் குறைக்கப்பட்டிருக்கிறது. முன்பு தப்பாகக் கணக்குப் போட்டு, 170 கோடிதான் தருவோம் என்று சொன்னார்கள். தப்பை எடுத்துக்காட்டியவுடன் இன்றைக்கு 172 கோடி தருவதாகக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அதாவது எல்லா ராஜ்யத்திற்கும் முன்பு போட்ட பணத்தில் 5 சத விகிதம் வெட்டியிருப்பதாகச் சொல்கிறார்கள். எல்லா வகையிலும் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கும் நம் ராஜ்யத்திற்கு இந்த 172 கோடி ரூபாய் போதவே போதாது. இதுபற்றி அங்கத்தினர்களுக்கும் தெரியவேண்டியது அவசியம். நாங்களும் விடாமல் வற்புறுத்துவோம். இந்த அங்கத்தினர்களும், இந்தச் சபையில் ஒவ்வொரு கூட்டத்திலும் வற்புறுத்தி நமக்கு வரவேண்டிய தொகை பூராவையும் பெறுவதற்கான முயற்சியைச் செய்யவேண்டியது அவசியம். அதேமாதிரி மொத்தத் தொகையில் மத்திய அரசாங்கம் போட்டிருக்கும் திட்டத்திலே கல்வித் துறையிலும், இதர துறையிலும் எவ்வளவு செலவிடப்படுகிறது என்பதையும் கொஞ்சம் பார்க்கவேண்டும்.

10-53 a.m. மூவாயிரம் கோடி ரூபாய் செலவில் வகுக்கப்பட்ட திட்டத்தில் நம் பகுதியில் எவ்வளவு செலவு செய்யப்படவிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது குறைவாகவேயிருக்கிறது. தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால் நம் நாட்டில் பெரிய தொழில் என்று சொல்லப்படுவது Neiveli திட்டம்தான். இதுதான் பெரிய திட்டம் என்பதை நாமும் நம்புகிறோம். தொழில் துறையிலும் அதைத்தான் சொல்லுகிறார்கள். அங்கே பரீட்சை செய்வது வெற்றிகரமாக நடந்தேறினால் இந்தத் திட்டம் கூடிய சீக்கிரத்தில் முதலில் எடுத்துக்கொள்ளப்படும்.

**Sri S. PANCHAKSHARAM**: While the Hon. Minister is talking about Neiveli, I want to bring to the notice of the Government that three days ago there was conflicting report in the *Madras Mail* . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM**: சில விஷயங்கள் வெற்றிகரமாக வந்துகொண்டிருக்கும்போது மத்தியில் கல்லைத் தூக்கிப் போட்டு மக்களிடையே பயத்தை உண்டாக்குவதாகும்; அதனால் பலன் இல்லையே என்ற பயத்தை உண்டாகுவதற்கு பெரிய பெரிய பத்திரிகைகளில் இம்மாதிரி போட்டுவிடுவார்கள். அதனால் நமக்கு ஒரு நன்மையும் ஏற்படுவதில்லை. நமக்கு தீமைதான் உண்டாகிறது. நெய்வேலித் திட்டம் தொழில் நிபுணர்களால் பரிசீலனை செய்யப்பட்டு வெற்றிபெறக் கூடிய நிலைமையில் இருக்கும்போது மக்களிடையே ஏமாற்றம் ஏற்படக் கூடிய காரியங்களைச் செய்வது மக்களுக்கும் நல்லது இல்லை. நம் ராஜ்யத்



2nd April 1956] [Sri C. Subramaniam]

திற்கும் நல்லதில்லை என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஆகையினால் நெய்வேலித் திட்டம் விஷயத்தில் மூன்றாவது நான்காவது ஐந்தாண்டு திட்டங்களில் பொருளாதாரத் துறையில் அதிகப்படியாக முன்னேற்றம் காணலாம்: இப்பொழுது இந்த திட்டத்தினால் ஐம்பது கோடி, அறுபது கோடி ரூபாய் செலவு செய்யக்கூடிய நிலைமையில் நம் நாட்டு கனரகத் தொழில் பல துறைகளிலும் அமைக்கப்பட்டாகவேண்டும். அதனால் உண்மையாகவே நம் பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி ஏற்படுவதற்கு அஸ்திவாரமாயிருக்கக்கூடும். ஆகையினால் அங்கே கைத்தொழில், குடிசைத் தொழில் முன்னேற்றம் அடையும். குடிசைத் தொழில் ஏற்பட்டால்தான் நம் பொருளாதாரம் அபிவிருத்தியடையும். நெய்வேலித் திட்டத்தை மேற்கொள்வதினால் இந்த சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே எல்லாப் பகுதிகளிலும் அபிவிருத்தி ஏற்படக்கூடிய முறையில் கனரகத் தொழில்களை பரவலாக கிடைக்கும்படி நாம் வற்புறுத்தவேண்டும். இதில் நமக்கு பல இயற்கையான வசதிகள் ஏற்பட்டிருக்கிறது. மிகவும் பிற்போக்காக இருக்கக்கூடிய ஜில்லா என்று சொல்லக்கூடிய சேலம் ஜில்லாவில் அலுமினியம், இரும்பு கிடைப்பதால் இரும்புத் தொழில் ஏற்படுத்த வசதியாகவிருக்கிறது. ஆகவே இந்தத் தொழிலை அங்கே அமைக்க வற்புறுத்தவேண்டும். நானும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். இன்னும் அதை அதிகப்படுத்தவேண்டுமென்று விஷயத்தை ஒப்புக்கொண்டதிலிருந்து அதிகப்படுத்துவார்கள் என்றே நம்புகிறேன். நம் பகுதியில் சில கனரகத் தொழிலை ஏற்படுத்த கூடிய திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளில் நாமும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளவேண்டும். அது நம் கடமை. அதை செய்துகொடுப்பது அவர்கள் கடமை. யாரும் செய்யவேண்டிய கடமையைச் செய்ய தவறிவிடக்கூடாது என்பதற்காக இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலும் இன்னொரு விஷயம் நம் ராஜ்யத்தைப் பொருத்தவரை சிறு கைத்தொழில் அபிவிருத்திக்கான சாதனங்கள் நிறையவிருக்கிறது. அதற்கான வசதிகளும் இருக்கின்றன. ஆகவே கைத்தொழில்களைப் பெருக்க அதற்கான பல திட்டங்களை தயாரித்து அவைகளை நிறைவேற்றவேண்டுவதற்கான திட்டங்களும் திட்டக் கமிஷன் ஆலோசனையில் இருந்து வருகிறது: நம் பகுதிக்கும் என்னென்ன திட்டங்கள் என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே அதற்காக திட்டங்களைப் போடும்போது அதற்கான பணத்தையும் இந்திய சர்க்கார் ஒதுக்கவேண்டியது அவசியம். எவ்வளவு ஒதுக்கவேண்டும் என்பதைப்பற்றியும் பொதுவாக கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே அதற்கு வேண்டிய பணத்தையும் ஒதுக்குவதும் மிக அவசியம். நமது ராஜ்யத்தில் கைத்தொழில் குடிசைத் தொழில் வளர்ச்சிபற்றியும் நாம் கவனிக்கவேண்டியதவசியம். உத்தேசிக்கப்பட்ட வருமானம் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றியும் யோசிக்கவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொரு முக்கியமான பிரச்னை இருக்கிறது. அது Ambar charka பிரச்னை. இதில் பலவிதமான பிரச்னைகள் எழும்புகின்றன. இதனால் நம் பொருளாதாரம் முன்னேற்றம் அடையாது என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி பிரசாரமும் செய்து வருகிறார்கள். கோடிக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்குமா என்று சொல்லுகிறார்கள். Ambar charka-வைப்பற்றி சில விவரங்கள் கூற விரும்புகிறேன். அது நமது ராஜ்யத்தைச் சேர்ந்த ஏகாம்பரம் என்பவர் கண்டு பிடித்தது. அவர் நான்கு கதிர்களை ஒரே சமயத்தில் இயங்கச் செய்ய முடியும் என்று காட்டியிருக்கிறார். இந்த நிலையில் அதை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த Ambar charka இன்னும் நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய முடியாது என்று Textile கம்பெனிக்காரர்கள் சொல்கிறார்கள். பஞ்சு உடைக்கவும் அதில் வசதி இருக்கிறது. இந்த விஷயமாக நாம் Polytechnic Institute களிலும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியே Coimbatore textools ஒரு புரட்சிகரமான மாறுதலைக் கண்டுபிடித்து அதை பரீட்சை செய்துகொண்டிருக்கிறார்கள். இதில் நான்கு கதிர்களிலிருந்து பதினான்கு கதிர்கள் போகவும் பஞ்சை உடைக்கவும் நயமான நூலாக்கவும்

[Sri C. Subramaniam] [2nd April 1956

இயந்திரத்தில் சேர்த்து செய்யக்கூடிய முறையில் பதினாறு கதிர்கள் வேலை செய்யக்கூடியதும் பட்டை போடுவதும் இயந்திரத்தினால் செய்யக்கூடியதுமாகச் செய்து இருக்கிறார்கள். நூலின் தரத்தையும் பரீட்சை செய்து இருக்கிறார்கள். நூல் தரம் குறையாமல் இருக்கிறது. அதைவிட இன்னும் நன்றாய் செய்யமுடியும் என்றும் சொல்லுகிறார்கள். இப்பொழுது மில் நூல் தரத்தைவிட குறைவாக இல்லை. இது ஒரு பெரிய புரட்சிகரமான மாறுதல். இதை இயங்குவதற்கு ஒரு பையனும் ஒரு ஆளும் போதும் அதுவும் சாத்தியம் இல்லாவிடில் கால் குதிரை motor-ஆல் ஓடும் இயந்திரமாகவும் செய்யலாம். Motor-ஐ போட்டுவிட்டால் அது ஓடும். அதன் மூலம் இன்று வேலையில்லாத குடும்பங்களுக்கு மாதம் 90 ரூபாய் வரும்படி வரலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதனால் நூல் அதிகமாக உற்பத்தி செய்துவிடலாம். நூல் விலையைக் கணக்குப் போட்டாலும் mill நூல் விலையைவிட அதிக கம்மியாகவே செய்யப்படுகிறது. இதைக் கொண்டு பார்த்தால் நம் நாட்டில் ஒரு பெரிய முன்னேற்றமும் ஏற்படலாம். அதன் மூலம் நூல் உற்பத்தியை மேலும் அதன் தரமும் குறையாமல் உற்பத்தி செய்யலாம். தரம் எந்த வகையிலும் குறைந்து போகக்கூடாது. அதிகமான விலையைக் குறைக்கவும் பரீட்சை செய்து பார்க்க வேண்டும். Mill காரர்களும் இதை உபயோகிக்கலாம். இந்த மாதிரி இயந்திரங்களும் நாட்டின் முன்னேற்றத்திற்கு மிக அவசியம். இது வெற்றிகரமானால் இது ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இந்த மாறுபட்ட Ambar charka-வை நானும் தொழில் மந்திரியும் இந்த மாதம் 15-ம் தேதி பார்வையிட ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த நிலைமையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது ஒரு mill கதிர் வைப்பதற்கு செலவு, என்ன என்று பார்க்கும்போது ஒரு மில் கதிர் போடவேண்டுமானால் ரூபாய் 200 முதலீடு செய்யவேண்டும். அதாவது Investment capital. ஆனால் இதற்கு அதாவது Ambar charka-வுக்கு ரூபாய் 90 தான் ஆகிறது. Mill-களுக்கான பெரிய management-ம் வேண்டியதில்லை. அதற்கென்று பெரிய கட்டிடமும் வேண்டியதில்லை. இந்த நிலையில் பார்த்தால் நாம் இதைக்கொண்டு ஒரு புரட்சிகரமாக யுகத்தில் நாட்டைக் கொண்டுவந்துவிடுவோம் என்பதில் சந்தேகமில்லை. மக்களிடையே அதற்கான ஆற்றலும், திறமையும், அறிவும் இருக்கிறது. ஆகையால் தொழில் வளம் பெருக முடியும்.

11-00 a.m. நம்முடைய நிபுணர்கள் எவ்வளவோ புதிய இயந்திரங்களைக் கண்டு பிடிக்க முடியும். நம் நாட்டிலே பெரிய புரட்சி செய்ய முடியுமென்பதற்காக ஒரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். ஆகவே மனத்திலே சோர்வு கொள்ளவேண்டிய அவசியமில்லை. நம்மிடையே புதிய இயந்திரங்களை கண்டு பிடிக்கக்கூடிய நிபுணர்களிருக்கிறார்கள். இன்று Coimbatore-ஐ பார்த்தால் சிறு சிறு பட்டரை வைத்துக்கொண்டிருப்பார்கள். இயந்திரத்திலே எந்த பகுதியையும் செய்து கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள். தமிழ்நாட்டை பொறுத்த வரை தொழில் வளரக்கூடிய ஆற்றல் இருக்கிறது. மக்களுக்கு திறமையும் இருக்கிறது. இயற்கை வசதிகள் இருக்கின்றன. ஆகவே தொழில் வளம் ஏற்படவேண்டுமென்று விரும்புகிறோம். அதற்காக நாம் பாடுபடவேண்டுமென்று விரும்புகிறோம். அதற்காகத்தான் 100 அல்லது 200 கோடி ரூபாய் அதிகம் வேண்டுமென்று சொல்லுகிறோமே யொழிய வெறும் போட்டிக்காக அல்ல. அதற்காகத்தான் நம் திட்டத்தை இன்னும் பெரிய திட்டமாக வகுக்கவேண்டுமென்று விரும்புகிறோம். வெறும் சுயநலத்திற்காக அல்ல. பொருளாதார அபிவிருத்திக்காக விவசாய துறையிலே அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்று அதன்படி புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தை பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். துவேஷ மனப்பான்மையுடன் பார்க்கவேண்டிய அவசியமில்லை. இம்மாதிரி இயந்திரங்கள் செய்யமுடியும். புதிய இயந்திரங்கள் கட்ட முடியும் என்று நிரூபித்தால் நம் முன்னேற்றத்திற்கு முன்பாக யாரும் நிற்க முடியாது. நம் மக்களின் சக்தியை உபயோகப்படுத்தி நாம் மேன்மேலும் முன்னேறவேண்டும். நாம் முன்னேறி மற்றவர்களுக்கு உதாரணமாக விளங்கவேண்டும். அவர்கள் சக்தி முழுதும் ஆக்க வேலையில் ஈடுபடவேண்டும். குழப்ப வேலைகளிலே நம் சக்தியை ஏவிவிட்டால் குழப்பமான நிலைமைதானிருக்கும்.



2nd April 1956] [Sri C. Subramaniam]

இயந்திர துறையிலே முன்னேறுவதற்கும், பொருளாதாரத் துறையிலே முன்னேறுவதற்கும், விவசாயத் துறையிலே முன்னேறுவதற்கும் மக்களிடையே ஒன்றுபட்ட சக்தி வேண்டும். குழப்பமில்லாத நிலைமை வேண்டும். அவ்வித நிலைமை இருப்பதற்கு நீங்கள் எல்லோரும் உதவி செய்ய வேண்டும். அந்த பகுதி வேண்டும். அந்த பெயரை மாற்ற வேண்டுமென்பது இப்போதுள்ள பிரச்னை அல்ல. அதை எல்லாவற்றையும்விட பொருளாதார துறையிலே முன்னேற்றம் அடைந்து மக்கள் வறுமையை போக்குதல்தான். இதுதான் பெரிய காரியம். அதற்கான சக்தியை திரட்ட வேண்டும். நம் சக்தியை வேறு வகைகளிலே விரயம் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்த அடிப்படையிலே இத்திட்டத்தை நீங்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று உங்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Motion moved—

" That the Draft Outline of the Second Five-Year Plan be taken into consideration."

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, I move—

" *Add* the following at the end :—

' and on such consideration, this House is of the opinion that the allotment of Rs. 170·3 crores to this State is totally inadequate to meet the development needs of the State.' "

SRI S. DAIVASIGAMONEY : I second the amendment.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, I move—

" and on further consideration, this House is of opinion that due consideration should be given to the needs and the suitability of this State for the location of heavy industries in this State and for due allotment for the same in the Plan."

SRI S. RAMALINGAM : I second the amendment.

MR. SPEAKER : The motion and the amendments are before the House for discussion.

* SRI K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தின் நகல் திட்டத்தைப்பற்றி என்னுடைய கருத்துக்களை சொல்லுவதற்கு முன்னால் இந்த சபையில் இந்த வரயறுப்பு நகல் திட்டத்தின் முக்கியமான சாராம்சங்களை எல்லாம் தமிழ் மொழியிலே எடுத்து இந்த சபையில் நீண்ட நேரம் விளக்கமாக எடுத்துக்கூறிய நம் கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு இச்சபையின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். மொழிவாரி ராஜ்யம் அமைவதற்கான சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே முதல் முறையாக அதுவும் இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தைப்பற்றி ஏதோ குறைச்சல் நேரமில்லாமல் அதிக நேரமாக அந்த திட்டத்திலே உள்ள கருத்தை எடுத்து சொல்லியிருப்பதை நாம் யாவரும் வரவேற்கவேண்டும். 11-08 a.m.

அடுத்தபடியாக இந்த சபையிலே ஏற்கனவே இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தைப்பற்றி நாம் பேசி இருக்கிறோமென்றாலும் இப்போது விவாதத்திலே இருக்கக்கூடிய இந்த நகல் திட்டத்திலே பல முக்கியமான விஷயங்களைக் குறித்துபேச விரும்புகிறேன். உதாரணமாக நம்முடைய ராஜ்யத்தில ஏற்கனவே முதல் நகல் திட்டத்தின்போது நம் சென்னை ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த 4,213 லட்சத்தை, இந்த தடவை வரயறுப்பு நகல் திட்டத்தை பரிசீலிக்கிற காலத்திலே இந்தத் தொகை முழுதும் எடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக சிறு தொழில்கள், கிராம கைத்தொழில்கள் இவைகளுக்காக 4,725 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்ததை இப்போது வரயறுப்பு நகல்

[Sri K. T. Raju] [2nd April 1956

திட்டத்திலே 1,643 லட்சமாக குறைக்கப்பட்டிருக்கிறது. இங்கே இந்த இரண்டாவது 5 ஆண்டு திட்ட காலத்திலே மத்திய அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கை கனரக இயந்திரசாலைகளை ஏற்படுத்துவது, இயந்திரங்களை உற்பத்தி செய்வதுதான். அதற்குறிய கவனம் செலுத்தவேண்டும். அடுத்தபடியாக மக்கள் தேவைக்கான பொருட்களை எல்லாம் சிறு தொழில் குடிசை தொழில் மூலம் உற்பத்தி செய்வது. இந்த தொழில்களின் மூலம் மக்கள் தினசரி உபயோகப்படுத்தக்கூடிய மக்களுக்கு தேவையான பொருட்களை பூர்த்தி செய்வது என்கிற திட்டங்கள் மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள் ஆகும். இவைதான் இந்த இரண்டாவது 5 ஆண்டு திட்டம். ஆனால் அப்படிப்பட்ட சிறு தொழில்கள், குடிசை தொழில்கள் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட 4,725 லட்சத்திலே இன்றைய தினம் 1,643 லட்சமாக குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இந்த ராஜ்யம் வகுத்திருக்கிற திட்டத்தை மத்திய அரசாங்கம் கொடுக்கும் பொருளதவியை உபயோகப்படுத்தி எப்படி அதிக உற்பத்தி செய்ய முடியும்? இது சம்பந்தமாக கனம் நிதி அமைச்சர் நம் ராஜ்யம் எந்த வகையிலே புறக்கணிக்கப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றி எடுத்துச் சொன்னார். இந்திய உபகண்டத்தை எடுத்துக் கொண்டால், ராஜ்யத்திற்கு ராஜ்யம் பகுதிக்குப் பகுதி தாழ்ந்த நிலைமை வசிக்கக்கூடிய வித்தியாசங்கள் இருப்பதை எடுத்துச் சொன்னார். நம் ராஜ்யத்தை பொறுத்தவரை கனரக தொழில் விஷயத்திலே நம் ராஜ்யம் மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருப்பதாக அவர் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லலாம். **Neiveli** திட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக 50 கோடி ரூபாய் சிலவழிக்க திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. **Neiveli** நிலக்கரி சுரங்கம் ஒரு பெரிய கனரக இயந்திரத் தொழிலாகாது. இதை காண்பித்து ஏனைய கனரக தொழில் ஆரம்பிக்க முடியாமலிருப்பதற்கு, இந்த நியாயத்தை சொல்லி மறுக்க முடியாது. **Neiveli project**-ஐ ஒரு கனரக இயந்திர தொழிலாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதைக்கொண்டு மின்சார உற்பத்தி செய்வதற்கு அதை ஒரு மூலப்பொருளாக கருதலாமே தவிர, அதை ஒரு கனரக இயந்திர தொழிற்சாலையாக கருத முடியாது. ஆகவே இங்கே கனரக இயந்திர தொழிலைப்பற்றி கவலைப்படவேண்டிய அவசியமில்லை என்று சொல்லிவிட முடியாது. ஆகவே நம் ராஜ்யத்தை பொறுத்தவரை நாம் ஒரு பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறோம். இந்த நாட்டிலே கனரக இயந்திர தொழில் வளர்ச்சிக்கு நல்ல வசதிகளிருக்கின்றன. அந்தத் தொழிலிலே ஈடுபட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களிருக்கிறார்கள். அவர்கள் சக்தியை உபயோகப்படுத்தி உண்மையாகவே தமிழ்நாட்டிலே ஒரு பெரிய தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியுமென்று கனம் நிதி அமைச்சர் கூறுகிறார். எங்களை பொறுத்தவரை அதை ஆதரிக்கிறோம்.

11.13 a.m. பொதுவாகத் தொழில் வளர்ச்சியிலே தனியார் துறைக்கும் சர்க்கார் துறைக்கும் உள்ள வித்தியாசத்தைச் சொன்னால் 4,800 கோடி ரூபாய் சர்க்கார் துறையில் செலவழிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தனியார் துறையில் 2,300 கோடி ரூபாய்க்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த 4,800 கோடி ரூபாயில் முக்கியமாக ரெயில்வேக்கு மட்டும் 900 கோடி ரூபாய். நீர்பாசனம், மின்சாரம், விவசாயம் இவையெல்லாம் கணக்குப்பார்க்கும்போது சர்க்கார், மத்திய அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்காக அது செலவழிக்கக்கூடிய பணம் 560 கோடி ரூபாய். ஆனால் தனியார் துறையில் கிட்டத்தட்ட 620 கோடி ரூபாய் இப்படித் தொழில்த்துறையில் செலவழிப்பதற்கு அவர்களுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே 4,800 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் இந்த 5 ஆண்டுத் திட்டத்தில் பெற இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, 2,300 கோடி ரூபாய் தனியார் துறைக்கு அனுமதிக்கப் போகிறோம் என்று சொல்லுவது முடியாது. ஆனால் உண்மையில் சர்க்கார் தொழில்த் துறையில் எவ்வளவு செலவழிக்கப்படுகிறது? அதே மாதிரி தனியார் தொழில்துறையில் எவ்வளவு என்று பார்த்தால் அது 560 கோடி ரூபாய் சர்க்கார் தரப்பில். 620 கோடி ரூபாய் தனியார் துறையில். ஆனால் சுரங்கத் தொழில் எல்லாம் தனியார் தொழிலுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. முப்பது கோடி ரூபாய் அந்தத் தொழிலுக்குச் செலவழித்தாலும் கிட்டத்தட்ட மத்திய



2nd April 1956] [Sri K. T. Raju]

சர்க்காருக்கும் தனியார் துறைக்கும் சமம். சமமாகத்தானிருக்கும். ஆகவேதான் 4,800 கோடி ரூபாயை சர்க்கார் நமக்கு எடுத்துக்காட்டினால் போதாது.

அடுத்த படியாக இந்த இரண்டாவது 5 ஆண்டுத் திட்ட காலத்தில் உபயோகப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு கர்த்தாக்களாக இருக்கிறவர்கள் தனியார்தான். அவர்களுக்கு ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட தொகை 200 கோடி. ஆனால் இன்றைய தினம் 620 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதல் நடை திட்டத்தில் மத்திய அரசாங்கம் 150 கோடி ரூபாய் கனரக இயந்திரங்களை வரவழைப்பதற்கு ஒதுக்கி இருக்கிறது. ஆனால் அந்தத் தொகை என்ன ஆயிற்று. தனியார் துறைக்கு வகை செய்து கொடுக்கவேண்டுமென்று அந்தக் கன இயந்திரங்களை உற்பத்தி செய்ய வேண்டியது. நாட்டிற்கு மிகத்தேவையாக இருந்தால அதற்குத் தகுந்த மாதிரித் திட்டத்தில் இல்லை. இந்த 150 கோடி ரூபாய்க்கு வரையறுப்புத் திட்டத்தில் வழிவகையில்லை. ஆகவே 200 கோடியிலிருந்து 620 கோடி ரூபாய் தனியார் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றால் அர்த்தமென்ன?

1,200 கோடி ரூபாய்க்கு நாம் நோட்டுகள் அச்சடிக்கப்போகிறோமென்று நிதி அமைச்சர் சொன்னார். இந்த 1,200 கோடி ரூபாய் பெருமானமுள்ள பணம் எப்படிச் செலவாகும்? தனிநபர்களிடத்தில்தான் இந்தப்பணம் போய்ச்சேரும். இதைக் கட்டுப்படுத்த இன்றையத் தினம் ஏதாவது கட்டுப்பாடிருக்கிறதா? இன்றையத் தினம் பாங்குகள் அவர்கள் கையில். அந்தப் பணத்தை நிர்வகிக்கக்கூடிய சக்தி அவர்கள் கையில். ஆகவே 1,200 கோடி ரூபாய்க்கு நோட்டு அச்சடிப்பதின் மூலம் பண வீக்கம் ஏற்பட்டு விலைவாசி ஏறாதா? அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதாவென்று பார்த்தால் இந்தத் திட்டத்தைப் பார்த்த நேரத்தில் அப்படி இல்லையென்றுதான் சொல்லவேண்டும். ஆகவே அப்படி அச்சடிக்கக்கூடிய நோட்டுகளால் பணவீக்கமாகி ஏழை எளியவர்களைச் சுரண்டுவதாக இல்லாமல் கட்டுப்படுத்தவேண்டிய முறையில் மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கை இருக்கிறதா? நோட்டுகளை வைத்து தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா வென்று பார்த்தால் இந்தத் திட்டத்தில் இல்லையென்று நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளவேண்டிய நிலைமையில் இருக்கிறேன்.

இரண்டாவது அம்பர் சர்க்காவைப்பற்றி ஒரு புரட்சிகரமான மாற்றம் என்றும் நாட்டு மக்களில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைகிடைக்கும் என்றும் சொன்னார். ஆனால் அதே சமயத்தில் அந்தத் திட்டத்தில் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் (மந்திரி) படித்திருக்கிறார். ஆனால் சொல்லமறந்துவிட்டார். இந்த 5 ஆண்டு திட்ட காலத்தில் தனியார் துறையில் கிட்டத்தட்ட பஞ்சாலைத் தொழிலுக்கு 150 கோடி ரூபாய் நவீன இயந்திரங்களைக் கொண்டுவந்து புகுத்துவதற்காக ஒதுக்கி இருக்கிறார்கள். மொத்தம் 480 கோடி ரூபாய்க்கு வெளிநாட்டிலிருந்து **Machinery** இறக்குமதி ஆகிறதாக இருந்தால் அதில் 150 கோடி ரூபாய்க்கு இந்த நவீன **Machinery**. இதன் அர்த்தமென்ன? அம்பர் சர்க்காவிற்கு வெடி வைக்கிற நடவடிக்கையாகும். இன்று இருக்கிற உற்பத்தியை விட அதிகமான உற்பத்திக்கு அங்கே கொடுத்துவிட்டு இங்கே அம்பர் சர்க்காவிற்கு வேண்டிய ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்கிறோம். உண்மையில் இந்த நவீன இயந்திரங்களைப் பஞ்சாலைகளில் புகுத்தாமல் தடுக்கக்கூடிய ஒரு முயற்சியை நாம் செய்யவேண்டும். இந்த நெருக்கடியான காலத்தில் நமக்குக் கன இயந்திரம் உற்பத்தி ஆகிறவரையில் நமக்குத்தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்யலாம். ஆனால் ஏற்கனவே இருக்கக்கூடிய பஞ்சாலைகளிடம் அதிகமான சக்திகளை நாம் உபயோகிக்கலாமா என்பதைப் பார்க்கவேண்டும். ஆனால் இந்த பஞ்சாலை, சர்க்கரையாலை, சணல் ஆலையெல்லாம் 4-வது ஷரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இருக்கிற இயந்திரங்களுக்குப் பதிலாக நவீன இயந்திரங்களைக்கொண்டுவந்து புகுத்தி 5-வது ஷரத்தில் புகுத்துப்

பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அம்பர் சர்க்கா நமக்குப் பலன் அளிக்க இந்த நவீன இயந்திரங்களைப் பஞ்சாலைகளில் புகுத்தாமல் தடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக பதிய வரிகளில் 450 கோடி ரூபாய் வேண்டியிருக்கிறது. வருவாய்க்கு என்ன வழியென்று சொல்லப்படுகிறது ? பல துறைகளில் நம் நாடு முன்னேறவேண்டும். புதிய வரிகள் போடுகிற நேரத்தில் நாம் கொடுக்கமுடியாது என்றால் நாம் என்ன செய்யமுடியும் ? ஆகவே அதற்காக 450 கோடி ரூபாய்க்கு வகை செய்ய நாம் புதியவரி போடவேண்டாமா என்று கூறினர். இப்படிப் பின் தங்கிய நாடு துரிதமாகத் தொழில்த்துறையில் முன்னேறவேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில் நாம் ரஷ்யாவைப் போல அல்லது அமெரிக்காவைப்போல முன்னேற வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இந்த நாட்டு மக்களின் மனோபாவத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இங்கே எப்படி எப்படி Socialism தைக் கொண்டுவருவது என்பதல்ல என் கோரிக்கை. இன்றுள்ள நிலைமையில் நமக்குத் திட்டங்கள் தேவையென்று சொல்லுகிற நேரத்தில் அதற்கான பணத்திற்கு நாம் வகை செய்யவேண்டாமா ? வெறும் திட்டங்களை நிறைவேற்றுவதாக இருந்தால் எப்படிமுடியும். தனியார் துறையில் பெரிய தொழில்களை நடத்துகிற முதலாளிகள் வருடம் ஒன்றுக்கு 500 கோடி ரூபாய் வரி செலுத்துவது போக லாபமடைகிறார்கள். இந்த 500 கோடி ரூபாய்க்கு ஒரு தொழில் நடத்தினால் முதலாளிகளுக்கு நாம் எவ்வளவு வரிப்போட்டிருப்போம். இன்று கணக்குப்போட்டுப் பார்த்தால் 100 கோடி ரூபாய் வரிப்போடவேண்டும். உபயோகப் பொருள்களை அவர்கள் கையில் கொடுத்துவிட்டோம். அச்சடிக்கிற நோட்டுகளை அவர்கள் கைக்குப்போகக்கூடிய நிலைமையை ஏற்படுத்திவிட்டோம். இந்த நிலைமையில் அவர்கள் அடிக்கிற அதிக வருமானத்தைக்கொண்டு மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்காரும் அந்த வருமானத்தின்மேல் வரிகளைப் போட்டு இன்று 100 கோடி என்பதை 200 கோடியாக உயர்த்தினால் ஐந்து வருடங்களில் நாம் 500 கோடி ரூபாய் வருமானத்திற்கு வகை செய்யமுடியும்.

11-23 a.m. அந்த மாதிரி பல முக்கிய விஷயங்களில் இன்று நம் நாட்டிற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் தொடர்பு கிடையாது. தனிப்பட்டமுறையில் வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி, வியாபாரம் நடக்கிறது. வெளிநாட்டு வியாபாரத்தின் பிடிப்பு மத்திய அரசாங்கத்தின் கையில் இருப்பதால், நம்முடைய பற்றுக்குறைகாரணமாக, நம்முடைய திட்டங்களை நிறைவேற்றவும், நமக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொள்ளவும் முடியாது. பாராளு மன்றத்தில் இதைப்பற்றி பேசி இருக்கிறார்கள். தொழில்களைச் சர்க்கார் மயமாக்கி நடத்துவதற்கு, திறமை வாய்ந்த நபர்கள் தேவை இல்லையா ? தகுதி வாய்ந்த நபர்கள் கிடைக்காததால், உடனடியாக வெளிநாட்டு வியாபாரங்களை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமையில் இல்லை என்று, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். நாம் என்ன சொல்லுகிறோம். வெளிநாட்டு வியாபாரத்தை நடத்தக்கூடிய நபர்களெல்லாம் பெரிய முதலாளிகளல்ல. இன்றைக்கு பிர்லா, டாட்டாவைப் போன்றவர்களல்ல. அரசாங்கத்திலிருக்கும் நூற்றுக்கணக்கான உத்தியோகஸ்தர்களைக் கொண்டுதான் இவ் வியாபாரம் நடைபெற்று வருகிறது. ஏன் இந்த ஊழியர்களை வைத்துக்கொண்டு மத்திய அரசாங்கம், இந்த வியாபாரத்தை நடத்தமுடியாதென்று கேட்கிறேன். நாம் திட்டம்தேவை என்று சொல்கிறோம். நமக்குப் போதிய வசதிகள்வேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் வரி என்று கேட்கும்போது மக்கள் கொடுக்க வருத்தப்படுகிறார்கள். யாரிடம்நாம் அதிகமான வரியை விட்டுவைத்திருக்கிறோம். பணக்காரர்களிடமிருந்து நாம் அதிகமான வரியை சேகரிக்க ஏன் முயற்சிக்கக்கூடாது. இது சரியா வழி இல்லை, சைனாவழியில்லை. இவ்வகையில், சர்க்காரின் வருமானத்தைப் பெருக்கினால், நமக்குத் தேவையான காரியங்களை நாம் செய்து கொள்ளமுடியுமென்று நாம் கருதுகிறோம். அடுத்தப்படியாக நாம் பார்க்கவேண்டியது, வருஷத்திற்கு ஒரு லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி செய்கிறோம். சர்க்கரையின் விலை ஏறிவிட்டதால், மார்க்கட்டில் இந்த சர்க்கரைக்கு கிராக்கி இல்லை. விலையைக் கட்டுப்படுத்தி, வருஷா வருஷம் ஒரு லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யவேண்டுமென்று திட்டம் இருக்கவேண்டும். உற்பத்தி செய்கிறவர்கள் அதன் விலையை ஏற்றிவிடுவார்கள் என்ற காரணத்தால் அதைக் கட்டுப்படுத்த வேறு வழி இல்லையா ? ஒரு லட்சம் டன் சர்க்கரை வருஷா வருஷம் நாம் இறக்குமதி செய்வதின் மூலம், நமக்கு தேவையான பணம் இல்லாமல் இருக்கிறோம். தானியங்களின் விலை ஏறுகிறது. இதைக்கட்டுப்படுத்தி மார்க்கட்டில் உறுதியான நடவடிக்கை எடுத்து, வருஷா வருஷம் 10 லட்சம் டன் தானியத்தை இறக்குமதி செய்து வைத்துக்கொள்வதென்று மத்திய அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்கள். நமக்காகவே மத்திய அரசாங்கம், குறிப்பாக பொருள்களின் விலை ஏறும் காலத்தில். அதைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று கருதினால், இங்கே நிலச்சொந்தக்காரர்கள் இடம் உற்பத்தியாகும் பொருள்களின் விலையைக்கட்டுப்படுத்த, அரசாங்கமே தங்கள் தேவைக்கான ஸ்டாக்கை விலைகொடுத்து வாங்கி ஏன் அவர்கள் கையில் வைத்து கொள்ளக்கூடாதென்று கேட்கிறேன். பற்றுக்குறையில் நாம் இறக்குமதி செய்வதில் அர்த்தமுண்டு. இதுதான் என்னுடைய அபிப்பிராயமும். மூன்றாவதாக நாம் என்ன கவனிக்கவேண்டும். நம் நாடு இருக்கும் நிலையில், இப்படி தனியார் தொழில் துறைக்கு அதிக முக்கியத்தவம் கொடுக்ககூடதென்று நான் சொல்லவில்லை. அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய லாபங்கள் இவ்வளவுதான் இருக்கவேண்டுமென்ற வரம்பை ஏற்படுத்த வேண்டும், பாராளுமன்றத்தில் பட்ஜட் விவாதத்தின் மேல் நிதி மந்திரி தேஷ்முக் அவர்கள் பதில் சொல்லும் காலத்தில் இதைப் பற்றி பேசி இருக்கிறார். இந்த தேசத்தின் மொத்த சராசரி வருமானம் 254 ரூபாய் என்றால் ஒருவன் வரியின் மூலமாய் சர்க்காருக்கு 9 ரூபாய் அதில் கொடுப்பதாக சொல்லப்படுகிறது. இந்த நாட்டிலுள்ள 36 கோடி மக்களில், சுமார் 5 லட்சம் பேர்கள் தான் வருமான வரி கொடுக்கிறவர்களென்று தெரிகிறது. இவர்கள் மூலமாக நாம் அதிகமான வரியை எதிர்பார்க்கமுடியுமா ? உண்மையில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து தொழில் துறையிலும், மற்ற துறைகளிலும், அபிவிருத்தி செய்வதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. சோவியத் நாடாக இருந்தாலும், சைனா நாடாக இருந்தாலும் அங்கே இருக்கும் மக்களின் முன்னேற்றத்திற்காக பல வசதிகளை அவர்கள் செய்து கொள்கிறார்கள். அங்கே இருக்கும் நிலமைக்கும் இங்குள்ள நிலமைக்கும் வித்தியாசம் என்ன ? நம் கனம் நிதி மந்திரி அவர்கள் சொல்லி இருக்கிறார். நம் நாட்டில் வாழ்க்கைக்கு மிகமிக அத்தியாவசியமான பொருள்களை மக்கள் வாங்கமுடியாத நிலையில் இருப்பதால், மக்களின் பொருளாதார நிலையை முன்னேற்றமடையச செய்யவேண்டுமென்று சொல்கிறார். மக்களின் வருமானத்தை உயர்த்த பல வசதிகள் இருக்கும்போது அவை முழுதும் நாம் அடைய செய்யவேண்டுமென்று சொல்கிறேன். நான் முடிவாக சில வார்த்தைகள் சொல்லிக்கொள்கிறேன். பின்தங்கிய நாடு அபிவிருத்தி அடையவேண்டுமென்றால் கனயந்திரத் தொழிற்சாலைகளை அமைப்பது அவசியம். நம் சென்னை ராஜியம் மற்ற ராஜியங்களைப்போல் முன்னேற முயற்சிகள் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.



MR. SPEAKER : I prescribe a time-limit of ten minutes for each speaker.

* SRI K. KUNHI MOHAMED SHAFEE : ബഹുമാന്യനായ അദ്ധ്യക്ഷൻ 11-30 a.m.
been approved by the ex-Labour Minister to the Government of India Mr. V. V. Giri. If there is a dispute between workers and management in a particular industry and if a section of workers want to come to some agreement with the management, such an agreement must not be implemented unless all the other workers employed in that industry ratify the same. It has been stated in the Draft Outline that the Government propose to bring in legislation to protect office bearers of Trade unions against victimization. I welcome wholeheartedly that move.

It has been stated in the Draft Outline that as the public sector will grow rapidly during the Second Five-Year Plan period the State Government in its capacity as employer should set appropriate standards. In this connection I wish to bring to the notice of the Government the pitiable conditions of municipal workers, workers employed by the Highways Department and in other Government industries.

* **Sri G. VAGHEESAM PILLAI:** கனம் சபாநாயகர் அவர்களே,
10 55 a.m. இப்போது இரண்டாவது ஐந்து ஆண்டு திட்டம் பரிசீலனையில் இருப்பதை நிதி மந்திரி அவர்கள் மிக விளக்கமாகவும் தெளிவாகவும் அனேக விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நமது ராஜ்யத்திற்கு இப்போது 172 கோடி தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமக்குள்ள **Population** பிரகாரம் 220 கோடி ஒதுக்கப்படவேண்டும். இதற்குக் கடைசிவரையில் நமது குரலை எழுப்பியே தீருவோமென்று சொல்லியதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். நாம், சட்டசபையிலுள்ள மெம்பர்கள் அதை வற்புறுத்திச் சொல்லவேண்டும். இந்தக் கூட்டத்தில் மாத்திரமின்றி அனேக சந்தர்ப்பங்களில் அவற்றை வற்புறுத்திச் சொல்லவேண்டும். அவர்கள் குறிப்பிட்டார்கள். கல்வி, போக்கு வரத்து, சுகாதாரம் முதலியவற்றில் மாத்திரம் முன்னேறினால் போதாது, **Heavy Industries** அதாவது இயந்திர சாதனங்களை எங்கெங்கு புகுத்த வகை இருக்கிறதோ அங்கே தான் பொருளாதாரத் துரையில் விருத்தி அடையமுடியுமென்று சொன்னார்கள். அதற்கு உதாரணமாக திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் இருக்கிற மாதிரி படித்தவர்கள் அளவு உலகிலேயே இல்லை என்றும், இருந்தாலும் பொருளாதாரத்துறையில் அவர்கள் முன்னேறவில்லையென்றும், ஆகவே நமது ராஜ்யம் பொருளாதாரத்துறையில் முன்னேறவேண்டுமென்றால் இயந்திர சாதனத் துறையில் அதிகமான தொழிற்சாலைகள் ஏற்படவேண்டுமென்றும் சொன்னார்கள். நேற்றையதினம் நெய்வேலி பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது, இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் நெய்வேலியில் ஜலம் அதிகமாக ஊறுகிறது. அதை வெளியேற்றுவது கஷ்டமென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நேற்றைய தினம் அதைச் சமாளிக்க முடியுமென்றுசொல்லியிருப்பது நமக்கு வெற்றிகரமான காரியம். நமது ராஜ்யத்திற்கு அதுதான் முக்கியம். அது எப்படியாவது உருவாகி விடுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். நெய்வேலித்திட்டம் உருவானால்தான் சேலத்திலுள்ள இரும்புத் தொழிற்சாலையையும் ஏற்படுத்தலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனால் அதற்கு வேண்டிய முயற்சியை இன்னும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப் போது **Mining Course** நமது தேசத்தில் எங்கோ ஒரு இடத்தில், அதுவும் வட நாட்டில் தானிருக்கிறது. இப்போது நெய்வேலி வேலை நடக்கப்போகிறது. ஆகவே அண்ணமலை **University**-யில் ஒரு **Mining Course** வைத்தால் நலமாக இருக்கும். வட நாட்டில் வைத்திருப்பதால் ஏதோ ஒருவர் இரண்டுபேர்தான் வர முடிகிறது, ஆகவே அடுத்து வருகிற **University Course** ஆரம்ப வருஷத்திலிருந்தாவது அண்ணமலை **University**-யில் **Mining Course** ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று



கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது 172 கோடி நமக்கு ஒதுக்கி இருப்பது போதாது, ஆகவே நமக்கு 220 கோடி கொடுத்தால்தான் காணும் என்பதற்கு அனேக காரணங்கள் இருக்கின்றன.

நம்முடைய சென்னை ராஜ்யத்தில் இப்போது உணவு பற்றுக்குறை 10-59 a.m.
தீர்ந்துவிட்டது என்ற காரணத்தால், இரண்டாவது ஐந்து ஆண்டு திட்டத்தில், விவசாயத்திற்கு கொஞ்சம் துகை குறைக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய சென்னை ராஜ்ஜியத்தில் யுத்த காலத்திற்கு முன்பு வெளிதேசங்களிலிருந்து உணவு இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இப்போது கிடைக்கக்கூடிய புள்ளி விவரங்களிலிருந்து, புதிய நீர்ப்பாசன திட்டங்களின் மூலம், இந்தியா பூராவும் பன்னிரண்டு மில்லியன் **(million)** ஏகரா நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்படுமென்று குறிப்பிட்டிருக்கிறது. சென்னையில், இதில், 1/72 பாகம்தான் இருக்குமென்று தெரிகிறது. சிறிய நீர்ப்பாசன திட்டங்களின் மூலம் தேசம் பூராவும் 9 மில்லியன் ஏக்கர் நிலங்கள் புதியதாக சாகுபடிக்கு கொண்டுவரக்கூடுமென்றும், சென்னை ராஜ்ஜியத்தில் மாத்திரம் இதில் ·26 மிலியன்தான் வரக்கூடுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது. இந்த ராஜ்ஜியத்திலுள்ள பழைய ஏரி குளங்களை சீர்திருத்தம் செய்வது சேர்த்து மேற்கண்ட ·26 மில்லியன் ஏக்கர். இப்போது கிருஷ்ண கோதாவரி நதிகளின் மூலம் வரும் ஜலத்தில் ஆந்திர ராஜ்யத்திற்குத் தேவையானது போக மிஞ்சும் ஜலத்தைக் கொண்டு நம் ராஜ்ஜியத்திலுள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுக்கவேண்டுமென்று நாம் பல சமயங்களில் வற்புறுத்தி இருக்கிறோம். இதனால் நம் ராஜ்ஜியத்திலுள்ள செங்கல்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு முதலிய ஜில்லாக்களில் உள்ள சுமார் 250,000 (2½ லக்ஷம்) ஏகரா நிலங்கள் சாகுபடியின்கீழ் வரக்கூடும். ஆந்திர ராஜ்ஜிய சர்க்காருக்கும், டில்லி சர்க்காருக்கும், இதை வற்புறுத்தி, இந்த வசதிகள் நமக்கு கிடைக்கும்படிச் செய்தால்தான், சென்னை ராஜ்ஜியத்தில் உணவு பற்றுக்குறை நீங்கும். சாகுபடிக்கு பருவ மழை **(south-west monsoon)** முக்கியமாக இருக்கிறது. சில ஜில்லாக்களில் மாத்திரம் காவேரி நதியின் தண்ணீரை உபயோகித்து, வெள்ளாமை நடக்கிறது. ஆனால் மற்ற ஜில்லாக்களில் மகசூல் குறைவாக இருக்கிறது. இதற்கு என்ன செய்யவேண்டுமென்றால் **(underground water)** ஊற்றுகளை, ஜில்லா வாரியாக பரிசீலனை செய்து, நம் மாகாணத்தில் பாசன வசதிகளை அதிகரிக்க இந்த திட்டத்தை உடனே பரிசீலனை செய்யவேண்டும். பழைய வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள் இவைகளை மராமத்து செய்யவேண்டுமென்று சில அங்கத்தினர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள். இதை முக்கியமாக அரசாங்கத்தார் கவனிக்கவேண்டும். புதிய திட்டங்களின் மூலம் ஏற்படக்கூடிய பலனைவிட இது அவசியம்தான். பழைய வாய்க்கால்களில், பழைய ஏரிகளில் உள்ள (மணலை) தூறை வாரவேண்டும். நிலத்தின் தரத்தை உயர்த்த ஒரு ஏக்கராவிற்கு 5 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரை செலவு செய்தால், உணவு உற்பத்தி அதிகரிக்குமென்று கருதப்படுகிறது. ஆனால் அதிகாரிகள் இதைக் கவனிப்பதில்லை. ஏனென்றால் புதிய அணைக்கட்டுகளைக் கட்டினால்தான் அவர்களுக்கு **credit** வருமென்று நினைக்கிறார்கள். இரண்டாவது ஐந்து ஆண்டு திட்டத்தின் மூலம் இதை முக்கியமாக நிறைவேற்றுவதினால் உணவு பற்றுக்குறையை போக்க முடியும். பிறகுதான் மற்ற முற்போக்கு காரியங்களில் நாம் ஈடுபடமுடியும். முதல் ஐந்தாண்டு திட்டத்தைவிட, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் செலவிடப்படும் துகை அதிகம். யுத்தகாலத்தில் ஜெர்மனியில் ஒருவர் எழுதியிருந்தார். ஆசிய நாடுகளில் நிலசீர்திருத்தம் வராவிட்டால் அவை கம்யூனிஸ்டு நாடுகளாக மாறிவிடுமென்று எழுதி இருந்தார். நம் நாட்டில் நில சீர்திருத்தத்தை உடனே கொண்டுவரவேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். இது அவசியம்தானென்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக படிப்படியாகத்தான், இத்துறையில் முன்னேற வகை செய்ய வேண்டும். இப்போது நம் ராஜ்ஜியத்தில் நியாய வார சட்டம் **(Fair Rent Bill)** அமுலுக்கு கொண்டுவரப்பட இருக்கிறது. இதன் மூலம் நிலத்தை சாகுபடி செய்கிறவர்களுக்கு, 60 (அறுபது) சதவிகிதம் மகசூல் கிடைக்கும்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது சாகுபடிதாரருக்கு அதிகம்.

[Sri G. Vagheesam Pillai] [3rd April 1956

தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்திற்கு முன்பு 25 பர்சண்ட் வாரம். பிறகு சட்டத்தின்படி 40 பர்சண்ட் உயர்த்தியிருக்கிறது. இப்போது சரிபாதி 50 பர்சண்ட். 50 பர்சண்ட்டாக இருக்கலாம். நிலச்சுவான்கள் மூலதனம் போட்டால்தான் விவசாயம் நல்ல முறையில் நடக்கும். குத்தகைதாரர்களுக்கு **(tenants)** விவசாயத்தை சரிவர நடத்த அவர்களுக்கு போதிய முன்பணம் கிடைக்கிறதில்லை. ஆகவே இந்த வகையில் நாம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறவேண்டும். திடீரென்று முன்னேறினால், இடையில் பல இடையூறுகள் ஏற்படும். உணவு உற்பத்தி குறையும். அம்பர் சர்க்காவைப்பற்றி அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார். இதை முதலில் தமிழ் நாட்டில் ஏகாம்பரம் என்பவர்தான் கண்டுபிடித்து இருப்பதாக சொல்லி இருக்கிறார். இதுபற்றி நாம் சந்தோஷப்படக்கூடிய விஷயம்தான். சென்னையில்தான் நெசவாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அம்பர் சர்க்காவின் வினியோக விகிதாசாரங்களை நிர்ணயிக்கும்போது, நம் மாகாணத்திற்கு அதிக பாகம் வேண்டுமென்று வற்புறுத்தி வாங்க வேண்டுமென்று சொல்கிறேன். நம் ராஜ்ஜியத்தில் சர்க்கரை ஆலைகள் குறைவாக இருப்பதால், இந்த இரண்டாவது ஐந்து ஆண்டு திட்டத்தின் கீழ் அதிகமான ஆலைகள் திறக்கப்பட இருக்கிறது. வீடுகள் கட்டும் திட்டம்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் **(Low income groups)**-க்கு சர்க்காரில் 250 ரூபாய் கடனாகக் கொடுக்கிறார்கள். இத்துடன் அவர்கள்கூட 250 ரூபாய் போட்டு வீட்டை கட்டிக்கொள்ளவேண்டும். இந்த இனத்தில் 20 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள். இது போதாது. **Broadcasting** மூலம் செலவு செய்ய 10 ஆயிரம் செட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. வீடுகட்டும் திட்டத்தில் இன்னும் அதிக பணம் கொடுத்து உதவ அரசாங்கம் முன்வரவேண்டும். ஏனென்றால், மக்களுக்கு வீடுதான் முக்கியம். சமுதாயநல திட்டம், தேசீய வளர்ச்சி திட்டம், இவைகள் இரண்டாவது ஐந்து ஆண்டு திட்டத்தின் கீழ் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதை கிராமங்களில் உள்ள பொதுமக்களிடம் பரப்புவது நல்லது. ஸ்தல அபிவிருத்தி திட்டத்திற்கு அதிக பணம் செலவு செய்தால் நன்மை அடையமுடியுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

11.09 a.m. * SRI R. KRISHNASAMI GOPALAR : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கிற இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். எங்கள் தஞ்சை ஜில்லாவிற்கு ஒரு வைத்தியக் கல்லூரி கொண்டுவருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். தஞ்சை ஜில்லாவிலே முன்பு ஒரு கல்லூரி இருந்து இருக்கிறது. தஞ்சை ஜில்லாவிற்கு ஒரு வைத்தியக் கல்லூரி வந்தால் நாங்கள் ரொம்பவும் சந்தோஷப்படுவோம்—ஆறுதல் அடைவோம். இப்போதுதான் முதன் முதலாக ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை வந்து இருக்கிறது. அதைப் பார்த்து நாங்கள் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அதேமாதிரி தஞ்சை ஜில்லாவிற்கு ஒரு வைத்தியக் கல்லூரி வந்தால் நாங்கள் மிகவும் ஆனந்தப்படுவோம். எங்கள் ஜில்லாவிலே முன்பு இருந்து இருக்கிறது. இன்றைக்கு அவசியமாக இருந்துவரும் ஏற்பாட்டை செய்துவிடுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். மற்றும் பட்டுக்கோட்டை தாலூகா மிகவும் பிற்போக்கான தாலூகா எனலாம். இப்போது அடித்த புயலினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு கவர்ன்மெண்டார் நல்ல முறையிலே இது வரை உதவி செய்து வந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் செய்து இருந்தபோதிலும் தேசீய அபிவிருத்தித் திட்டத்தைக் கொண்டுவந்து வசதிகளில் ரொம்பவும் பிற்போக்கான நிலைமையில் உள்ள பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதிகள் உடனடியாக தேசீய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கொண்டுவந்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எங்கள் தாலூகாவில் ரொம்பவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிற இடங்களில் விவசாய சம்பந்தமான உதவி செய்யவேண்டும். மற்றும் தென்னை மரங்கள் புயலினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உடனடியாக தென்னையை நவீன முறையில் உற்பத்தி செய்யவேண்டிய உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பிரசங்கத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.



3rd April 1956]

* SRI S. C. C. ANTHONY PILLAI : Mr. Speaker, Sir, on all sides we hear that there should be full co-operation with regard to the implementation of the Second Five-Year Plan. It is a very noble sentiment, Sir. But, unfortunately the complaint that I would make is this. To what extent have facilities been given for an intelligent discussion of the Second Five-Year Plan and for seeking the co-operation of the people or even the co-operation of the Legislative Assembly Members? Any co-operation or any criticism of the Second Five-Year Plan to be of benefit or even to be respected, must be of informed criticism. To what extent are facilities given even to the Legislative Assembly Members to inform themselves with regard to the target set and the policies now framed under the Plan? Even if we go to the Legislative Assembly Library, we get only inadequate number of reports that are required for a study of the Plan or a study of the economy. The Secretariat Library is also in a similar position. In the Legislative Assembly Library you will not get any of the Central Government reports; you will not get even the Memorandum given to the Members of Parliament on the Budget. Under such circumstances, is it possible for informed criticism of the Second Five-Year Plan even by this House? I shall cite a case, with regard to the manner in which draft proposals were sent up for inclusion in the Second Five-Year Plan relating to the City of Madras.

There was only a Notification in the Gazette. Subsequent to that no letter was sent to the Commissioner of the Corporation. The Commissioner, after seeing the notification in the Gazette, on his own initiative, sent some proposal which he formulated without adequately consulting the Council. There was only one day's discussion on it in the Council and I do not know how many citizens in Madras are aware of it. But that is supposed to be the Plan for the Madras City under the Second Five-Year Plan. That is the position with regard to the Plan for the major city in the Madras State.

Now, Sir, the Central Government have set up a Planning Commission and have sought the assistance of experts in the matter of planning for the country. But as far as the Madras State is concerned, who are the Ministers concerned with planning? As far as I can see there are only three Ministers—The Hon. Minister for Finance, the Hon. Minister for Agriculture and perhaps to some extent the Hon. Minister for Public Works. The other Ministers in the Cabinet are merely administrators of departments having no connection with planning. Nor does this Government give us sufficient information with regard to the resources available within the State itself for the formulation of a Plan. They have given us a brief cyclostyled note on the likely expenditure under various heads in Madras State during the Second Five-Year Plan. They are shifting the blame on to the Central Government by saying that the Central Government unfortunately are not doing this or that even though the Madras Government are pressing forward and pleading their case most eloquently. Sir, even for pleading to be

[Sri S. C. C. Anthony Pillai] [3rd April 1956

successful, it must be informed pleading. Now, in this House we can only criticise the Second Five-Year Plan in so far as it is going to be implemented in the Madras State. Yesterday, a pointed question, viz., what is the increase in the national per capita income in respect of Madras State, was put in the House. Have the Madras Government set up a statistical organization to help them analyse the impact of the First Five-Year Plan and the Second Five-Year Plan on the welfare of different strata of the people? Sir, very little information can be gathered from the papers placed on the Table of the House in respect of the Plan. For instance, take the unemployment problem. It is well known that unemployment of landless labourers is more severe in the Madras State than in any other State. Sir, I must humbly state that if the Government really want to put pressure on the Central Government, they can only do it by pointing out to what extent the situation in the Madras State is fast deteriorating and showing, for instance, how the per capita income in the State has not risen appreciably even after the completion of the First Five-Year Plan. If only they had done it, undoubtedly it would have been a very powerful argument for them to advance before the Central Government for the establishment of more industries in this State. The mere fact of pleading on the basis of population, I submit, is not going to yield results. Of course, the Hon. Minister for Finance has assured us that he is pressing and he will continue to press the case of the Madras Government on the Central Government that they should play fair by the Madras Government. But whatever be his sincerity of purpose, unless he argues the case with facts and figures and on an informed basis, I submit, he is not likely to succeed in his endeavours to get more industries started in this State. For instance, we can point out the urgent need for increasing employment opportunities for landless labourers in the State.

Take again another important problem on which emphasis has been laid in the Draft Outline of the Second Five-Year Plan, viz., the problem of the educated unemployed. With regard to the educated unemployed in this State where are the figures to show their number and whether there is a significant fall in their number after the completion of the First Five-Year Plan? We do not have such figures. Under such circumstances, the enthusiasm of the people for the implementation of the Second Plan cannot be canalized. It is suggested that during the Second Five-Year Plan period the per capita income should be increased by 25 per cent and that there should be emphasis on industrialization as compared to the emphasis on agricultural development laid in the First Plan and the disparities in income between different strata of the population and the disparities between developed and undeveloped areas should be removed. Now what are the Madras Government doing to implement them? What are they going to remove these disparities? Take for instance, land reform on which emphasis has been laid both in the First and Second Plans. They have been most backward in this respect. As a result of it, a large number of evictions is taking place all over the State.



3rd April 1956] [Sri S. C. C. Anthony Pillai]

Coming to employment opportunities again, I find from the figures taken from the reports on the working of the Factories Act, the employment opportunities in the organized industries have gone down and not gone up during the First Plan period. There is no prospect of its increasing during the Second Plan period.

Sir, it appears that under the Second Plan the total investment both in the public and private sectors, will be about Rs. 6,000 crores. But is there any indication from the Madras Government that at least 1/10th or even 1/15th of the amount is likely to be invested in the Madras State? Unless these figures are available, how can we expect the co-operation of the people. Unfortunately there will be more frustration than co-operation. For co-operation to be given, there should be clear indications to the people that every effort is being made to do social justice. Take for instance, the question of enforcing a minimum wage. What steps have the Madras Government taken to fix a minimum wage? What they have done in fixing minimum wages for the workers in both the urban and agricultural sectors, is a very poor record.

Regarding preserving the level of employment, under the Industrial Disputes Act, an employer is required to give one month's notice before retrenchment is made. In the tyre industry, notice was given that a certain number of men employed in the tyre industry would be retrenched. But for what reasons? For the simple reason that the Government of India thought that the price of tyre had gone up.. They appointed a Tariff Commission to go into the price of tyres and they found that the prices were exorbitant. The moment the prices were compulsorily reduced, there was retrenchment of the workers. The tyre industry in Madras State gave notice of retrenchment to its staff on account of the fact that it did not want to continue retail trade in cycle tyres and motor tyres. Because the industrialists refused to carry on retail trade, the prices of cycle and motor tyres have gone up in the City of Madras. Under the Industrial Disputes Act, this Government has to reduce the volume of unemployment by bringing pressure to bear on the managements concerned. The tyre industry is a monopolistic industry and the Madras Government should have intervened and seen that the volume of employment in the tyre industry was not reduced both in the interest of the workmen concerned and also to reduce the price of the commodity paid by the ultimate consumer. 11-20 a.m.

If the Government of India and the Government of Madras really want the co-operation of the people in implementing the Second Five-Year Plan, they should take the representatives of the people into their fullest confidence and furnish them with all details so that they may be able to understand and appreciate the problem. Unless the Government come forward to implement sincerely the objectives of distributing equitably the national income laid down in the First and the Second Five-Year Plans, that co-operation will not be forthcoming.

[3rd April 1956

11-23 a.m. * **Sri S. JAYARAMA REDDIAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தன்மையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நமக்கு 170 கோடி ரூபாய் போதாது இன்னும் அதிகமாகக் கிடைக்கவேண்டும் என்னும் விஷயத்தில் தனக்கு ஆதரவாக இருந்து ஒத்தாசை செய்தால்தான் மேற்கொண்டு பணம் வாங்க முடியுமென்று சொன்னார்கள். நான் அதை ஆதரிக்கப்போவதில்லை. மற்றவர்களது தயவும், ஆதரவும் இல்லாமலேயே வாங்கும் சக்தி அவர்களிடம் இருக்கிறது. நாங்கள் எல்லாம் அவருக்கு ஆதரவாக இருக்கிறோம் என்று வெளிப்படையாகச் சொல்லி அவரை தைரியப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய தயவும் யாருடைய ஆதரவும் குறிப்பாக இங்கு உள்ளவர்கள் யாருடைய ஆதரவும், தயவும் இல்லாமலேயே அவரே மத்திய சர்க்காரை பயமுறுத்திச் செய்ய முடியுமென்று நம்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அந்த சக்தியை இழந்து விட்டேன் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**Sri S. JAYARAMA REDDIAR** : அவர் சொன்னாலும் நான் அதை நம்பத் தயாராய் இல்லை. சபாநாயகர் அவர்களே நான் இந்த சந்தர்ப்பத்திலே ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்ல முற்படுகிறேன். பொதுவாக நம்முடைய தமிழ் நாட்டிலே இன்றைக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தொழில் வசதி செய்து கொடுப்பதுதான் மிக முக்கியம் என்று சொல்லப்படுகிறது. தொழில் வளர்ச்சி எப்படி இருக்கவேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்களுக்கு நல்லதொரு திட்டத்தை போடச்சொல்வது தவிர வேறு ஒன்றும் சொல்ல முன்வரவில்லை. முக்கியமாக இன்றைக்கு கடலைப் பருப்பு ஒரு இடத்தில் விளைகிறது. விருத்தாசலம், விழுப்புரம், திருவண்ணாமலைப் பக்கத்திலே இந்த இடத்திலே விளையும் பொருள்கள் 300 மைல் தொலைவிற்கு கொண்டு சென்று திரும்ப மதராஸுக்கு கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். அதே மாதிரி பருத்தி ஒரு இடத்தில் உற்பத்தி ஆகிறது. பருத்தி நூற்கும் ஆலைகள் வேறு ஒரு இடத்திலே இருக்கிறது. ஒரு இடத்தில் விளையும் பருத்தி பஞ்சு மில்களுக்கு கொண்டு போகப்பட்டு நூல் ஆக்கப்படுகிறது. இந்த சமயத்திலே எனக்கு அனுபவபூர்வமாக உள்ள நிலைமையைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்படி டிரான்ஸ்போர்ட் (Transport) கஷ்டங்களால் எவ்வளவோ தாமதம் ஆக வாய்ப்பு இருக்கிறது. டிரான்ஸ்போர்ட், ரயில் மற்ற வாகனங்கள் இவைகளை தேசிய அடிப்படையில் பார்த்தால் நம் திட்டத்தை அனாவசியமாக அது பாதிக்கிறது என்பதைத்தான் இப்போது இந்த இடத்திலே குறிப்பிடுகிறேன். எந்த எந்த இடத்திலே நாம் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதைக் கணக்கிட்டு எந்தத் தொழில்களை எந்தப் பிரதேசத்தில் ஆரம்பிப்பது என்பதை நிர்ணயித்து இனிமேலாவது நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கனரக தொழிற்சாலைகள் ஏற்படுவதைப்பற்றி பார்த்தால் அதை மூலப் பொருள்கள் எங்கே கிடைக்கிறதோ அங்கேதான் ஆரம்பிக்க வேண்டும். ஆனால் முதல் முதலாக தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னால் அப்படி ஆரம்பிக்கப் புகுமுன் எந்த எந்த இடங்கள் பிற்போக்காக இருக்கிறதோ அந்த அந்த இடத்திலே அவைகளைத் துவக்க முடியுமாவென்று ஆரம்பிக்கும் முன்னால் நீங்கள் யோசித்துச் செய்ய வேண்டுமென்று நான் முதலாவதாக கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவதாக கிராமங்களில் இப்போது நீங்கள் எப்படி நம்முடைய தேசத்தில் கனரக தொழிற்சாலைகளை முற்றும் வட இந்தியாவிலே இருக்கிற மாதிரி நம்முடைய தேசத்திலும் ஆரம்பிக்கவேண்டுமென்று வற்புறுத்தவேண்டுமென்று நினைக்கிறோம், அதே மாதிரியாக பிற்போக்கான ஜில்லாக்களிலும், பிரதேசங்களிலும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்கு தொழில் அமைக்கவேண்டும், மற்றும் பல வசதிகள் செய்யக் கூடிய பல திட்டங்கள் இருக்கின்றன. நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். மின்சாரம்தான் முக்கியமாக அந்தத் தொழில் வளர்ச்சிக்கு



3rd April 1956] [Sri S. Jayarama Reddiar]

அடிப்படையாக இருக்கிறது. தொழிற்சாலை அமைப்பது மின்சார வசதியைப் பொறுத்துத்தான். நான் முன்பு பல தடவைகளில் பேசியிருக்கிறேன். மின்சாரத்தை நன்றாகப் பயன்படுத்தி தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும். இதுதான் என் கோரிக்கை. ஏன் என்றால் மின்சாரம் இல்லாமல் விவசாயம் விருத்தி அடைவது இல்லை. இந்த முறையில் குழாய் கிணறுகள் ஏராளமாக பெரிய அளவில் அமைக்கவேண்டும். இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இனிமேல் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து பம்பையாறு, திருநெல்வேலி ஜில்லாவிலே பம்பையாறு, கீறியாறு திட்டங்கள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது நடை முறையில் வரும் வரை இங்கே ஆஸ்திரேலியாவில் பிரிட்டன் காலனிசேஷன் (Colonization Scheme) ஸ்கீம் ஆரம்பிக்கும் காலத்தில் அவர்கள் பிரிட்டிஷ் பண உதவியைக்கொண்டு **deforestation** செய்து ஆழமான குழாய்களை அமைத்து குழாய்க் கிணறுகள் கவர்ன்மெண்ட் சிலவிலே ஆரம்பித்தார்கள் என்று நான் படித்திருக்கிறேன். அதே மாதிரியாக இங்கும் பிற்போக்கான பிரதேசங்களில் பெரும் குழாய் கிணறுகள் அமைத்து எலெக்டிரிக் பம்பு செட்டுகள் வைத்து கவர்ன்மெண்ட் செலவிலே ஏற்பாடு செய்து கொடுத்து அவர்களுக்கு இப்படி முற்போக்கான வசதி செய்து கொடுத்தால்தான் இப்போது எங்கள் ராமநாதபுரத்திலே கிழக்கு பிரதேசங்கள் எந்தவிதமான முற்போக்குக்கும் இடம் இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு சூழ் நிலையை நீங்கள் மாற்றுகிறதற்காக வரவேண்டுமென்று மிக மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மற்ற வகையான **cottage industry** பொருளாதாரத்தை மாற்ற முடியுமென்று பலபேர் கருதுகிறார்கள். ஆனாலும் என்னுடைய நண்பர் கனம் **Daivasigamoney** பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். இப்படி **cottage industry** மூலமாக பொருளாதார நிலைமை சீர்படுவதற்கு ஓரளவிற்கு முடியுமென்று சொன்னார்கள். ஆனால் இதைப்பற்றி சம்சயத்தைக்கொண்டவன். இந்த மாதிரி முறையில் இருந்தாலும்கூட வளர்ச்சி அடைய ஆங்காங்கு செய்யக் கூடியதை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடைசியாக கிராம வாசி என்ற முறையிலே ஒரு சிறு விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இதைப் பார்த்தால் நண்பர் (**Jayarama Reddiar**) ஜெயராம ரெட்டியார்கூட இப்படிச் சொல்லுகிறாரே என்று கனம் நிதி மந்திரி அவர்கள் நினைப்பார்கள். நான் அப்படித் தான் நினைக்கிறேன். கிராமவாசி என்ற முறையிலே இப்படி நினைக்கிறேன். இதை முக்கியமாகக் கருதுகிறேன். நண்பர் சோமயாஜுலு கிராமாந்திரங்களில் உள்ள மக்களின் நிலை உயரவேண்டுமென்று சொன்னார். நாங்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு 10 மைல், 5 மைல் போய் கம்போஸ்ட் வாங்கி அதை உபயோகிக்கிறோம். கம்போஸ்ட் மெனியூர் (**manure**) போடாமல் இந்த விவசாயம் இந்தியாவில் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதை விவரிக்கத் தேவையில்லை. இப்படி கம்போஸ்ட் செய்வதற்கு எந்த விதமான திட்டமும் கிடையாது. ஸ்தல ஸ்தாபன அமைச்சர் இடமும் சொல்லி இருக்கிறேன். குப்பையைச் சேகரித்து கொட்டுவதற்கு ஒரு வரைமுறையில்லை. இதனால் ஒவ்வொரு ஊரிலும் கட்டாய பஞ்சாயத்து வைத்து கம்போஸ்ட் மனியூர் (**manure**) உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்துகொடுக்கவேண்டும். இந்த சௌகரியத்தையெல்லாம் செய்தால் கம்போஸ்ட் உரம் விவசாயிகளுக்கு பயன்படும் என்கிற காரணத்தினால் இன்றைக்கு ஒரு திட்டம் தயாரித்து கிராமாந்திரங்களில் இந்தக் காரியத்தை உடனடியாகச் செய்வதற்கு சர்க்கார் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri M. PALANIYANDI** : பண்புமிக்க கனம் சபாநாயகர் 11-30 a.m.
அவர்களே நேற்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட நகல் திட்டத்தை சபை முன் சமர்ப்பித்து மிகவும் அவை அடக்கத்துடன் தனக்கே உரித்தான நல்ல முறையிலே பொறுப்போடு நிதி அமைச்சர் அவர்கள் நகல் திட்டத்தை சமர்ப்பித்தார். இருந்தாலும்கூட அவர் பேசும் காலத்தில் பல தடவைகள் சொல்ல முடியாமல் தேசீய கௌன்சில் இடம் போராடிக் கொண்டிருக்கிறேன் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்

கூட ஒத்துக்கொண்டு நடை முறையிலே கொண்டு வருவார்கள் என்று எண்ண இடம் உண்டு என்று சொன்னார்கள். அதே போல் நாட்டு மக்கள் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பார்த்தால் நாட்டு மக்களின் வாழ்க்கையை சீர்படுத்துவதற்கு வேண்டிய ஒன்றையும் இந்த நமது சென்னை அரசாங்கமும் சரி, மத்திய அரசாங்கமும் சரி வேண்டியதைச் செய்திருக்கிறார்களா என்றால் ஒன்றுமே இல்லை. நிச்சயமாக இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. இவர்கள் போடும் திட்டங்களிலே மக்கள் செயல் ஆற்றுவதற்கு ஆன தன்மை ஏதேனும் உண்டா என்று நாம் பார்க்கவேண்டும். கீழ்த்தட்டில் வாழ்க்கையில் பிற்போக்கான நிலைமையில் உள்ளவர்களுக்கு என ஒன்றும் செய்ய இந்த சர்க்கார் முன் வரவில்லை. சேரிகளை ஒழிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படவில்லை. நேற்று பேசிய நமது பிரதமர் பண்டித நேருவும் சேரிகளைப் பார்த்து மிகவும் உணர்ச்சி வசப்பட்டு பேசி இருக்கிறார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலே கூடி இருந்தவர்களும் இந்த முதல் ஐந்தாண்டு திட்டத்தால் பணக்காரர்கள் பணக்காரர்களாகவும், ஏழைகள் ஏழைகளாகவும் இருக்கும் நிலைமையே தவிர மக்களின் வாழ்க்கைத் தரம் சிறிதும் உயரவில்லை என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல்தான் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். முதல் ஐந்தாண்டு திட்டத்திலே 10% வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலே 23% உயரப்போகிறது என்று சொல்லுகிறார்கள். இது புள்ளி விவரங்கள். இதை வாஸ்தவம் என்றே வைத்துக்கொண்டாலும்கூட ஒரு துறையிலே தான் சில முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பார்ப்போமானால் நிச்சயமாக தொழிலிலே எந்த விதமான முன்னேற்றமும் இல்லை. பெரும் பணக்காரர்கள், கடைக்காரர்களின் வாழ்க்கைத் தரம் வேண்டுமானால் உயர்ந்திருக்கலாம். **Average** மக்களுக்கு வேண்டியது, நமது விவசாயிகளிடை காணப்படும் ஏழ்மை இன்னும் பாமர மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக சொல்லமுடியாது. மக்களது வாழ்க்கைத்தரம் உயர என்ன செய்கிறோம்.

11-32 a.m. வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்று சொன்னால் அது இன்னும் உயரவில்லை. இதை கனம் நிதி மந்திரி அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் மூலமாக மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதற்காக பல பெரும் பெரும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். அதனால் உற்பத்தி பெருகும் என்று கூட சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய பணம் இப்பொழுது இல்லை. அதனால் அதற்கு என்று 4,213 கோடி ரூபாய் ஒதுக்கி செலவு செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய பணம் வேண்டும். ஆனால் அந்தப் பணத்தைக் காணோம். நம்முடைய மாகாணத்தில் நெய்வேலி திட்டம் இருக்கிறது. அதற்கு மத்திய அரசாங்கம் உதவி செய்வதாக இல்லை. ஆனால் பத்ராவதியில் இருக்கும் இரும்பு தொழிற்சாலைக்கு மத்திய சர்க்கார் சப்சிடி கொடுக்கிறார்கள். டன் ஒன்றுக்கு 100 அல்லது 200 என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். டாட்டாவுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் சேலத்தில் இரும்பு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் அதைப்பற்றி கவனிக்கவே இல்லை. அங்கு ஆரம்பிக்க வேண்டுமானால் நெய்வேலியில் இருக்கும் நிலக்கரியை எடுத்தாக வேண்டும். அதை எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். மற்ற இடங்களில் பார்த்தால் இரும்பைத் தோண்டி எடுத்து ஜப்பான் முதலிய நாடுகளுக்கு அனுப்பி வைத்து அது அங்கிருந்து திரும்பி நம் நாட்டிற்கே வருகிறது. தமிழ் நாட்டில் நல்ல மூலப்பொருள்கள் இல்லையா என்று கேட்கிறேன். ஜப்பானுக்கு அனுப்பி அங்கு செய்ய வேண்டிய வேலைகளை இங்கு செய்வதற்கு ஏன் வசதி செய்து கொள்ளக் கூடாது என்று கேட்கிறேன். அலுமினியம் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு தமிழ் நாட்டில் வளம் இருக்கிறது. அதையும் ஏன் ஆரம்பிக்கக் கூடாது என்று கேட்கிறேன். ஆகவே தமிழ் நாட்டிலுள்ள மூலப் பொருள்களை வைத்துக்கொண்டு வேண்டிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



அதற்கு கனம் நிதி மந்திரி என்ன சொல்லுகிறார் என்றால் அதற்கு வேண்டிய சக்தியை நாம் இழந்து விட்டோம் என்று சொல்லுகிறார். நம்மிடம் வேண்டிய சக்தி இருக்கிறது. ஒன்றையும் நாம் இழந்துவிடவில்லை. மத்திய அரசாங்கத்துடன் போராடுவதற்கு வேண்டிய சக்தி நம்மிடம் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் சக்தியை இழந்து விடவில்லை. நமக்குள்ள சலுகைகளைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதைப்பற்றி நமது நிதி அமைச்சர் அவர்கள் நாஷனல் கவுன்சிலில் நல்லபடி பேசியிருப்பதாகத் தெரிகிறது. அந்த முறையில் நமது சர்க்கார் நமது நாட்டில் வேண்டிய தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் எல்லா வகைகளிலும் தொழில் வளம் பெருகுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். சிமெண்ட், இரும்பு, முதலிய எல்லாவற்றிலும் உற்பத்தி பெருக வேண்டும்.' அதன் மூலம் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். ஆனால் இப்பொழுது என்ன நடக்கிறது ? உற்பத்தி பெருகினாலும் வாழ்க்கைத்தரம் உயருவதாக இல்லை. காரணம் கொள்ளை லாபம் அடித்துக் கொண்டு போகிறார்கள். அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவில்லை. கனம் அந்தோனி பிள்ளை அவர்கள் ரப்பர் டயர் கம்பெனி கொள்ளை லாபம் அடித்துக்கொண்டு போகிறது, அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டார். டயர் இண்டஸ்ட்ரியின் பாலன்ஸ் ஷீட்டைப் பார்க்கவேண்டும். மகாணத்திலுள்ள பெரும் தொழில்கள் அதிகப்படியான லாபம் அடித்துக்கொண்டு போகின்றன. அவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். பி அண்ட் சி மில் இருக்கிறது. அதற்கு என்ன லாபம் வருகிறது என்பதை கவனிக்க வேண்டும். டயர் கம்பெனி கொள்ளை லாபம் அடித்துக்கொண்டு போனாலும் அங்குள்ள குமாஸ்தாக்களை குறைத்துக்கொண்டு போகிறார்கள். காரணம் கேட்டால் லாபம் பெறவில்லை என்று சொல்லுகிறார்கள். கனம் நிதி மந்திரி அவர்கள் நாஷனல் கவுன்சிலில் பேசும்போது லாபத்திற்கு வரம்பு கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். வரி போடவேண்டும் என்று சொல்லுகிறார். யாருக்கு வரி போட வேண்டும் ? போடும் வரியை கட்டக் கூடியவர்களுக்குத்தான் வரி போட வேண்டும். வரி பளுவை தாங்கக் கூடியவர்களுக்குத்தான் வரி போட வேண்டும். அப்படி வரி போட்டால்தான் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் வெற்றியைக் காணலாம். தமிழ் நாட்டில் சில தொழில்கள் முன்னுக்கு வரவே இல்லை. அவைகளுக்கு உதவி அளித்து முன்னுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அவைகள் புறக்கணிக்கப்பட்டால் நிச்சயமாக அரசாங்கத்தின் பேரில் குற்றம் சாட்டுவார்கள். தமிழ் நாட்டில் இப்பொழுது பெரும் தொழிற்சாலைகளை அமைக்கவில்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் பெரும் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கனரகத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI V. R. NAGARAJAN : Mr. Speaker, Sir, we are on the eve of two important and momentous events in our country this year. The one affects the geographical and political set-up of the various States in the country and the other, namely, the Second Five-Year Plan, which is under discussion now, turns upon the variation of the economic life of the country. Left to myself I would prefer all importance and all encouragement to be given only to the implementation of the Second Five-Year Plan, which we are all

[Sri V. R. Nagarajan] [3rd April 1956

bent upon making a success. I for one will not be more enthusiastic about the reorganization of the various States in this country especially at this juncture. For obvious reasons, I do not want to go deeper into the question of why I am making a distinct preference to the economic upliftment of our country rather than to the breaking up of the country into various States. We need all the man power and all the resources and also the best wishes that we can mobilize for the industrialization and for the advancement of our country as a whole. We should not spend our energies on bickerings and various quarrels which have now become the order of the day consequent on the reformation of States. Instead of dilating on this any more, I would straightway go to speak on the Second Five-Year Plan as envisaged in the draft outline.

The First Five-Year Plan has been a phenomenal success in that we have succeeded in increasing the agricultural and industrial production. Secondly the First Five-Year Plan has been a success in stabilizing the price levels and ensuring to this country a very favourable balance of trade. Last but not least, what the first plan has achieved is a definite increase in the national income. Whereas the first plan envisaged only an increase of 11 per cent in our national income, we actually have reached the target figure of 18 per cent. This is a great success indeed. The aim and objective of the Second Plan in the matter of increasing the national earnings is to increase it by 25 per cent in the five-year period at the rate of five per cent per annum. But what I would personally prefer to enjoin in this matter is that instead of merely aspiring to increase our national income in a horizontal way, we must also be able to mobilize our resources to increase the vertical possibilities of each man in the State coming up socially, educationally, economically,
11 40 a.m. and otherwise. Sir, instead of having a large number of persons who are all poverty stricken, who may not be able to earn as much as is needed to maintain themselves, and who may not be able to earn even as much as is required for providing themselves with a single meal a day, we can better have less number of persons who are able to provide themselves with two meals at least a day. In this connexion, the objective of economic policy to be pursued during the Plan period has been stated very well in the Draft Outline and it is very difficult to improve upon the language adopted to express the objective. Therefore, I propose to read it. This is what is stated at page 9 of the Report: "The benefits of economic development must accrue more and more to the relatively less privileged classes of society and there should be a progressive reduction of the concentration of incomes, wealth and economic power. The problem is to create a milieu in which the small man who has so far had little opportunity of perceiving and participating in the immense possibilities of growth through organized effort is enabled to put in his best in the interests of a higher standard of life for himself and increased prosperity for the country. In the process, he rises in economic and social status. Vertical mobility of labour is thus no less important than horizontal mobility."



3rd April 1956] [Sri V. R. Nagarajan]

I now come to the second objective of the Plan, which aims at increasing employment opportunities by rapidly industrialising the countrq. Having experimented for thousands of years on agriculture, we have found that it is still in a backward condition and is not able to provide employment opportunities for a large number of people. Therefore, the only way of finding increased employment is by rapidly industrializing the country, apart from carrying out programmes for agricultural improvement. We must be in a position to set up heavy and basic industries all over the country. It has been pointed out by several hon. Members that no provision has been made in the Plan for locating some of the heavy and basic industries in our State. I also share their views in the matter. I appeal to the Central Government through our Government and through particularly our Finance Minister that the Centre must take up the question of locating some heavy industries in our State. Industries like the heavy electrical equipment industry, machine tools industry and heavy chemical industries for manufacturing fertilizers must be located in the South.

Lastly I wish to refer to yet another objective of the Plan which is a very laudable one. It relates to reduction of inequalities in income and wealth and a more even distribution of economic power. I submit, Sir, it will be very difficult to achieve this objective. The objective can be more easily stated than attained. If I wish to dwell on this subject I may have to speak for a long time. But as the time at my disposal is very short, I am not able to speak on it at length. The fulfilment of this objective will lead to the establishment of a Socialist Pattern of Society. Most of the people of our country are very backward, downtrodden and have been neglected for ages. The Backward Classes and the Harijans come under this category and Government must do everything in their power to uplift them.

**Sri V. MADANAGOPAL**: கனம் சபாநாயகர் அவர்களே, 11·45 a.m.
கனம் நிதி அமைச்சர் அவர்களால் சபை முன்பு பிரேரேபிக்கப்பட்ட
இரண்டாவது ஐந்தாண்டு திட்ட நகலைப் பற்றி பேசுவதற்கு முன்வந்துள்
ளேன். பொருளாதாரத் துறையிலும் தொழில் துறையிலும், மற்றும்
இதர தொழில் துறைகளிலும் நாடு முன்னேற்றமடைய வேண்டும் என்ற
நோக்கத்துடன் இந்த திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஐந்து
வருஷத்தில் இந்த நாடு பெரிய அளவில் முன்னேற்றமடைந்து விடும்
என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதற்கு வேண்டியபடி பெரிய அளவில்
திட்டமிட்டிருக்கிறார்கள். அந்த திட்டம் நிறைவேற வேண்டுமென்றால்
அதுவும் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால் அதில் சில
பிரதான கடமைகள் இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது.
அவைகள் இருந்து கண்டிப்பாக இந்த திட்டம் வெற்றிகரமான முறையில்
நிறைவேற்றப்படவேண்டும், அதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டியதாக
இருக்கும் என்றும் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக
நம் நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு பிரதான கவனம் செலுத்த
வேண்டும். இது ஒரு விஷயம். பல காலமாக நம் நாட்டில் நிலச் சீர்
திருத்தம் செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டு வருகிறது. இது சம்
பந்தமாக ஏற்கெனவே பட்ஜெட் பிரசங்கத்தில்கூட கனம் நிதி அமைச்சர்
அவர்கள் இதைப்பற்றி வற்புறுத்திக் கூறவில்லை. நேற்றைய தினம்
கூட இந்த திட்டத்தைப் பற்றி விளக்கிக் கூறும்போதுகூட நிலச்
சீர்திருத்தம் சம்பந்தமாக ஒன்றும் சொல்லவில்லை. அதைப்பற்றி எந்த

இடத்திலும் வற்புறுத்திக் கூறவில்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலாவது எந்த இடத்திலாவது நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி கூறப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அதைப்பற்றி கூறவே இல்லை. இதைப்பற்றி என்ன செய்யவேண்டும் என்பதை நாங்கள் எதிர் பார்த்து வந்தோம். அதைப்பற்றி ஒரு குறிப்பும் காணோம். முதல் ஐந்தாண்டு திட்டத்தில், நாட்டில் 75 முதல் 80 வரையில் பாடுபடக்கூடிய விவசாயிகளுக்கு செய்ய வேண்டிய சலுகைகளைப்பற்றி ஒன்றுமே இல்லை. நில வரம்பு கட்ட வேண்டிய விஷயத்தைப்பற்றியும் ஒன்றையும் காணோம். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிச்சயமாக நாட்டில் 80 சத விகிதம் உள்ள விவசாயிகளுக்கு பங்கு நிச்சயம் இருக்க வேண்டும். ஆதி காலத்திலிருந்தே நில வரம்புக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நஷ்ட ஈடு கொடுப்பதைப்பற்றியும் ஆழ்ந்து பரிசீலனை செய்து கூறியிருக்கிறோம். ஆனால் அது கஷ்டமான விஷயம் என்று சொல்வதில் சந்தேகமில்லை. இதை நிறைவேற்றுவது என்பது சிரமம்தான். இதைப்பற்றி சர்க்கார் கட்சியில் இருக்கக் கூடியவர்கள் பேசியிருக்கிறார்கள். சர்க்கார் கட்சியில் இருக்கக் கூடியவர்களும் தொழில் வளர்ச்சியைப்பற்றி பேசியிருக்கிறார்கள். பல மெம்பர்கள் தொழில் வளர்ச்சியைப்பற்றி பேசும் காலத்தில் நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி ஒருவரும் பேசவே இல்லை. ஒரே குரலில் 60:40 வாரம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி வந்தோம். அந்த விஷயத்தில் இன்னும் கவனம் செலுத்தவில்லை. கனம் அந்தோனி பிள்ளை மட்டிலும் நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி குறிப்பிட்டார். இது விஷயமாக ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கிறது. அதை அமுல் நடத்தியும் வருகிறோம். அது எந்த முறையில் அமுல் நடத்தப்படுகிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். தஞ்சை ஜில்லாவில் மிகப் பெரிய போராட்டம் நடத்திய பிறகு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பண்டித நேரு அவர்கள் திடுக்கிடும்படியாகக் கூட விவசாயிகளின் நிலைமை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். கடைசியில் நில வெளியேற்றத்தைத் தடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொல்லப்பட்டது. அது விஷயமாக எந்த நடவடிக்கையும் இது வரையிலும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. தஞ்சை ஜில்லாவிற்கு என்று ஒரு சட்டம் வந்த பிறகு பல விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றியிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு இன்னும் சட்டம் வரவில்லை. இப்பொழுது வந்துள்ள சட்டம் பல தாலூகாக்களில் நல்ல முறையில், நடைபெற்று வந்தாலும் பல இடங்களில் அதன் பயனை விவசாயிகளுக்கு அளிக்கவில்லை. அது எந்த முறையில் அமுல் நடத்தப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தச் சட்டம் வருவதற்கு முன்னதாகவே அவகாசம் கொடுத்து விட்டதனால் பல விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றியிருக்கிறார்கள். சட்டம் வந்த பிறகு அவர்களில் 100-க்கு பத்துப் பேர்களைக் கூட திரும்பி எடுத்துக் கொள்ளவில்லை. அப்பொழுதே பல திருத்தங்களை எதிர்கட்சியில் கொடுத்தோம், அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்து விட்டது. அதனால்தான் இந்த நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தை தமிழ் நாடு முழுவதும் அமுலுக்கு கொண்டு வரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வரும் போது பல இடங்களில் இப்பொழுதே வெளியேற்றம் நடந்து கொண்டு வருகிறது. அதைத் தடுக்க இந்த ரிப்போர்ட்டில் ஒன்றும் இல்லை. வெளியேற்றம் இன்றைக்கு வேகமாக நடந்து கொண்டே இருக்கிறது. சமீபத்தில் வாரத்தை 60:40 என்று கொடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது. அது ஏப்ரல் முதல் தேதி முதற் கொண்டு அமுலுக்கு வரும் என்றும் சொன்னார்கள். அது இன்னும் அமுலுக்கு வரவே இல்லை. இன்னும் அதைப்பற்றி யோசித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். இந்தச் சட்டம் வரப்போகிறது என்று தமிழ் நாட்டில் அறிவாளிகளான மிராசுதார்கள் மகாநாடுகள் கூட்டி அந்த சட்டத்தை எதிர்த்து வருகிறார்கள். அறுபது:நாற்பது கொடுக்க முடியாது என்றும் சர்க்காரை பயமுறுத்தவும் கிளம்பி விட்டார்கள். போராட்டங்களை நடத்துகிறார்கள். அந்த மசோதா சர்க்காரினால் அமுல் நடத்த முடியாதபடி இருக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கு பல தலைவர்களும் தலைமை



தாங்கி வருகிறார்கள். (ஒரு குரல்: லீடர் ஆப் தி ஜாயிண்ட் பிரண்ட்.) லேவாதேவிக்காரர்கள் மகாநாட்டில் கனம் பி. டி. ராஜன் அவர்கள் தலைமை வகிக்கிறார். மதுரையில் நடந்த லேவாதேவிக்காரர்கள் மகாநாட்டில் கனம் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் தலைமை வகித்து பேசுகிறார். ஆனால் மொழிவாரி பிரச்னை சம்பந்தமாக எல்லோரும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஒன்றுமே இல்லை. தமிழ் நாட்டிலுள்ள பிரதானமான பத்திரிகைகளை எடுத்துக் கொண்டாலும் அவைகளும் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஒன்றும் எழுதுவது இல்லை. மிராசுதார்கள் மகாநாடு கூட்டுவதை மட்டும் எழுதுகிறார்கள். தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று சொல்லுகிற அவ்வளவு பேர்களும் நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி பேசுவது இல்லை. அதைப்பற்றி பேசுவதற்குக் கூட முன்னுக்கு வருவதில்லை. அதனால் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால் நில சீர்திருத்தத்திற்கு பிரதானம் கொடுக்கப்படவேண்டும். இது சம்பந்தமாக எல்லா கமிட்டிகளும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கிராமங்களிலுள்ள காங்கிரஸ்காரர்களுக்கு நிலப் பிரபுக்களுடைய பிடிப்பு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதனால் மிராசுதார் சட்டம் அமுலுக்கு வர விடாமல் தடுத்து வருகிறார்கள், அதைத் தடுக்கவும் இவர்களால் முடியவில்லை. அதனால் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமானால் நிலச் சீர்திருத்த விஷயத்தில் எல்லா துறைகளிலும் வரக் கூடிய எதிர்ப்புகளை சமாளித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு உறுதியாக இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிதி மந்திரி கூறுகிறார்கள். முக்கியமாக இரண்டு விஷயங்களில் கவ 11-5
னம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம் நாட்டு மக்கள் a.m.
பட்டினி கிடந்தாலும் வரி கொடுத்தாக வேண்டு மென்று சொல்கிறார்கள். இதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் ஐந்தாண்டு திட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பு வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதை நான் பரிபூர்ணமாக ஒப்புக்கொள்கிறேன். நிலச் சீர்திருத்த சட்டம் விஷயத்தில் 60 : 40 கொண்டுவரக்கூடிய சட்டத்தை உடனடியாக கொண்டு வரும்படியாகக் கெட்டுக் கொள்கிறேன். ஆனால் சர்க்கார் இதில் அவசர உணர்ச்சி காட்டுவதாகத் தெரியவில்லை. சர்க்கார் மேடைகளில் பேசினாலும் காங்கிரஸ் மேடையில் பேசினாலும் பேசலாம். ஆனால் திட்டத்தை உடனே அமுலுக்கு கொண்டுவரவேண்டும். இல்லாவிட்டால் இந்த விஷயத்தில் **Communist** கட்சி அதையும் செய்ய தயார். நாட்டிலுள்ள சாதனங்களையும் சீர்தூக்கிப் பார்த்து நாட்டின் ஜனங்களின் சக்தியைக் கொண்டு ஐந்து ஆண்டு திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு நல்லதொரு சூழ்நிலையை உண்டாக்கக்கூடிய நிலச் சீர்திருத்த சட்டத்தை கொண்டு வரவேண்டும். இந்த விஷயத்தில் சர்க்கார் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri A. RATNAM:** சபாநாயகர் அவர்களே, நாம் இப்பொழுது 11-51
இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் ஆரம்பம் ஆகும் கட்டத்தில் இருக்கிறோம். a.m.
முதலிலேயே ஐந்தாண்டு திட்டத்தில் நாட்டு மக்களும் நாமும் அக்கறை கொள்ள வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்கள் முறையாக கூறிவிட்டார். யோசித்துப் பார்ப்பதற்கு முடியாத விதத்தில் திட்டங்களை அமைத்து இருந்தாலும் அவையெல்லாம் சாதிக்கப்பட இருக்கிறது. ஆனால் விரைவில் இது நல்ல பலனளிக்கும் என்று நாம் நம்புகிறோம். பல கோடிக்கணக்கான ரூபாய் நாம் நம்முடைய ராஜ்யத்தில் பல துறைகளிலும் செலவு செய்யவிருக்கிறோம். ஆனால் சாதாரணமாக இந்த நாட்டின் ஜனத்தொகையைக் கணக்கெடுத்துப் பார்க்கும் போது நமக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 172 கோடி ரூபாய் போதாது என்று கூறுகிறோம். ராஜ்ய அதிகாரிகள் போட்ட திட்டங்கள் எல்லாவற்றையுமே நிறைவேற்றி வைக்க நம் ராஜ்ய ஜனத்தொகைக்குத் தகுந்தவாறு நிறை

[Sri A. Ratnam] [3rd April 1956

வேற்றி வைக்கப் பாடுபடவேண்டும். எல்லா மக்களும் பயனடையும் வரை
நாம் செலவு செய்தாக வேண்டும். சாதாரணமாக கனரகத் தொழில்
கள் இன்று நாட்டில் ஏற்பட்டு, உற்பத்தி பெரியதாக வேண்டும். பல
பெரிய தொழில்கள் ஏற்பட்டால்தான் தொழில்வளம் இந்த நாட்டில்
மிகுந்து அதன் மூலம் லட்சக்கணக்கான தொழிலாளிகளுக்கு தொழில்
களைக் கொடுக்க முடியும். இதனால் தான் Coimbatore போன்ற இடங்
களில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து இருக்கிறது என்று கூறுகிறார்கள்
நிதி அமைச்சர் அவர்கள். ஆனால் நம் நாட்டில் எவ்வளவு
கனரகத் தொழில் நடத்த முடியும் என்று பார்க்கும்போது நெய்வேலியில்
மட்டும் தான் கனரகத் தொழில் ஆரம்பிக்க முடியுமென்றும் சொல்லி
யிருக்கிறார்கள். அதே மாதிரி மற்ற ஜில்லாக்களிலும் தொழில்களையும்
அங்கு உள்ள பொருளாதாரத்தையும் நல்ல நிலைமைக்கு கொண்டுவர
முடியுமா என்று பார்த்து அதற்கான திட்டங்களை உருவாக்கி அவைகளுக்
காக மத்திய சர்க்காரிடம் ஒதுக்கப்பட்ட 172 கோடி ரூபாய் போதாது என்று
சொல்லி ஜனத்தொகை விகிதாச்சாரப்படி நாம் பெற வேண்டிய 220
கோடி ரூபாய்க்கும் நமக்கு அவசியம் இருக்கிறது என்று நாம் வற்புறுத்த
வேண்டும். அந்த அளவுக்கு மத்திய சர்க்கார் வழி வகை செய்யவேண்டு
மென்று வட இந்தியாவில் பல கனரகத் தொழில்கள் அங்கே செய்யப்
படுகிறது. மற்றும் project-களும், தொழிற்சாலைகளும் அங்கே
ஏற்படுத்திக்கொண்டு அதைப்போலவே தென் இந்தியாவிலும் செய்ய
வில்லையென்றால் விரைவில் தென் நாடு வட இந்தியாவிலிருந்து விடு
படுவதற்கு அவர்கள் கிளர்ச்சி செய்து விடுவார்கள் என்பதை எச்சரிக்க
விரும்புகிறேன். காரணம் நம்முடைய சென்னை ராஜ்யம் புறக்கணிக்கப்
படுகிறது. மற்றும் வட இந்தியாவில் இருக்கிற ராஜ்யங்களுக்கு அங்குள்ள
ஜனத்தொகை விகிதாச்சார முறையிலும் எல்லாவற்றிலும் அதற்கு
அதிகமாகவே பெறுகிறார்கள். ஆனால் நம் நிதி அமைச்சர் கூறியபடி
அதிகமாகவே வரி செலுத்தக்கூடிய சென்னை ராஜ்யம் மட்டும் தென்
நாட்டு மக்களும் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஐந்தாண்டு திட்டத்தில்
அதுமட்டுமில்லை. அதிகாரிகளுக்கு கிடைக்கிற சலுகைகளும்கூட அதிலும்
நாம் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கிறோம். எனவே நாம் தென்
இந்தியர்கள் வட இந்தியர்கள் இந்த மாதிரி பணம் ஒதுக்குவதும் புறக்
கணிக்கவும்பட்டால் அவர்களுடைய அரசியல் பிடிப்பிலிருந்து அறுத்துக்
கொள்வார்கள். திராவிடநாடு பிரிய வேண்டுமென்ற கொள்கையில்
மக்கள் இறங்கி விடுவார்கள். ஆகவே வட நாட்டு ஆதிக்கத்திலிருந்து
விடுபடுவார்கள். அதற்காக எத்தகைய போராட்டத்திற்கும் தயாராகி
விடுவார்கள். அதுமட்டும் இல்லை. ஒரு நாடு பொருளாதார அபிவிருத்தி
அடைந்தால்தான் அந்நாட்டு மக்கள் சுபிட்சம் அடைய முடியும் என்று
நிதி அமைச்சர் கூறியிருக்கிறார்கள். இன்னும் ஒரு முக்கியமான விஷயம்.
அது தான் ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக நடந்தேற வேண்டுமானால்
நாட்டு மக்களின் ஒத்துழைப்பு வேண்டும். அத்தகைய நிலைமை நாட்டில்
நிலவி வருகிறதா என்று நாம் கவனிக்கும்போது இந்த நாட்டில் உள்ள
மக்களுக்கு முக்கியமாக உழுது ஜீவனம் நடத்தக்கூடியவர்களுக்கு நிலம்
கிடையாது. சர்க்கார் வசம் இருக்கிற லட்சக் கணக்கான நத்தம் புறம்
போக்கு நிலங்களை அவர்களுக்குக் கொடுக்க தயங்குகிறார்கள். ஏதோ
பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இங்கேயிருக்கும் முறைப்படி புறம்
போக்கு தரிசு நிலம் ஏரிப் பாய்ச்சல் நிலம் மேய்ச்சல் நிலம் நீர் பிடிப்பு
போன்ற இந்த மாதிரி நிலங்களை உழக்கூடிய விவசாயிகளுக்குக் கொடுக்க
வேண்டும். சமயத்தில் அவர்கள் அனுபவித்து வந்த நிலங்களைக்கூட
பிடுங்கி விடுகிறார்கள். இது விவசாயிகளுக்கு பெரும் ஆபத்தில் முடியும்.
நாட்டில் இருக்கிற நிலங்களை நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கொடுக்க
இங்கு மனமில்லாமல் இருக்கிற சர்க்கார் இருக்கும் வரை இந்த நாட்டில்
சுபிட்சம் எப்படி நிலவ முடியும். பொருளாதாரம் எப்படி அபிவிருத்தி
அடைய முடியும். விவசாயம் எப்படி அதிகம் செய்ய முடியும். தொழில்
களையும் கனரகத் தொழில்கள் ஆரம்பித்து இருப்பதால் மட்டும் அல்லது
பல project-கள் கட்டி அபிவிருத்தி அடைவதால் மட்டும் நாம்
பொருளாதார முன்னேற்றமும் சுபிட்சமும் க்ஷேமமும் நல்ல நிலைமில்
அடைய முடியாது. இந்த ஐந்தாண்டு திட்டங்கள் எல்லாம் பிரசாரத்



3rd April 1956] [Sri A. Ratnam]

திற்குத்தான் உதவும். அதுவும் கடைசியில் வீண் பிரசாரமாகத்தான்
ஆகும். வேறு ஒன்றும் இல்லை. ஒரு மனிதனுக்கு அல்லது ஒரு குடும்
பத்திற்கு குறைந்தது ஒரு ஏக்கர் நிலம் இருந்து அதில் விவசாயம்
நடத்தினால் அவனுக்கும் வயிரார உணவு கிடைக்கும். மற்றவர்களுக்கும்
உணவை உற்பத்தி செய்ய முடியும். நாட்டு மக்களும் க்ஷேமமாய் வாழ
முடியும். மேலும் தண்ணீருக்கு கிணறுகள் வெட்டிக் கொடுத்து அல்
லது கிணறு வெட்டுவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். இது
இல்லாவிட்டாலும் விவசாயி பாடு திண்டாட்டம்தான். இவைகளுக்குத்
தக்க வழிவகைகள் செய்வதில்லை. ஆனால் இந்த ஐந்தாண்டு திட்டத்
தின் மூலம் பெரிய முதலாளிக்கு வேண்டிய வசதியும் அவர்களுடைய
நலன்கள் மற்ற காரியங்களையும் பாதுகாக்க தக்க வசதிகள் அமைந்திருக்
கின்றன. ஆனால் ஏழைகள் மட்டும் பாட்டாளிகள் மட்டும் பட்டினி கிடக்கிறார்
கள். அவர்கள் மீது எல்லாம் வரி விதிக்க முடியாது. ஆனால் அதிக
லாபம் அடையும் மில் முதலாளிகள் மீதும் வரிகளை அதிகரிக்க வேண்டும்.
ஏழைகள் பாட்டாளிகள் மீதும் அவர்கள் உணவு மீதும் sales tax கூடாது.
விவசாயிகள் மீதும் வரி போடுவதும் மிக ஆபத்தானது. இந்த நாட்டையும்
குட்டிச்சுவராக்குவதுமாகும். உணவைப் பெருக்க வேண்டிய இச்சமயத்தில்
நிலங்களை முடங்கக்கூடிய சர்க்கார் இன்று ஆட்சியில் இருக்குமானால்
அந்த அரசாட்சியை அசுரர் ஆட்சி என்று தான் சொல்ல முடியும்.
நிலத்தை வைத்திருக்கக்கூடியவர்களுக்கு இன்று நிலத்தைக் கொடுக்க
மனம் வரவில்லை. கோடிக்கணக்கில் பணம் செலவு செய்யக்கூடிய திட்டங்
கள் போடும்போது அத்திட்டங்கள் ஏழை மக்களுக்கு உதவக்கூடிய திட்டங்
களா என்று கவனித்து அதற்கேற்றவாறு திட்டங்களை அமைக்கவேண்டும்.
அதற்காக வழி வகைகளையும் செய்து கொடுக்க 172 கோடி
ரூபாய் போடப்பட்ட திட்டங்களின் மூலம் 90 சத விகிதம் பெரிய முத
லாளிகளுக்கு நன்மையை உண்டாக்கக்கூடியதும் ஏழை விவசாயிகளுக்கு
ஒன்றும் இல்லையென்றால் அதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா?
இது தமிழ் நாட்டு அரசியலை எத்த நிலைக்குக் கொண்டுபோய் விடும் என்
பதை சர்க்கார் உணர்ந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே உணவு, உடை, இருப்பிடம் பாடசாலை முதலிய விஷயங்களைப் 12
பற்றி நிதி அமைச்சர் விரிவாக எடுத்துசொல்லி இருக்கிறார்கள். சிறு கைத் noon.
தொழில் அபிவிருத்தி திட்டங்களைப் பற்றியும் விரிவாக சொல்லப்பட்டிருக்
கிறது. ஆனால் அதிலேகூட ஆயிரக்கணக்கான முதல் ஈடு செய்து வைத்தி
ருக்கிறவர்களுக்குத்தான் வழி வகைகள் செய்யப்பட்டிருக்கிறதே தவிர,
புதியதாக ஆரம்பிக்கப்போகும் எந்த தொழிலுக்கும் வழிவகை செய்யப்
படவில்லை. ஏதோ குடிசை தொழில்கள் என்று சொல்லி Small
Scale Industries அபிவிருத்திக்காக வசதி செய்து கொடுக்க
வேண்டுமென்றால், அதை ஆரம்பிக்கிறவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருக்க
வேண்டும் அல்லது அவர்கள் அடிமைகளாக இருக்கவேண்டும். எதிர்
கட்சிக்காரர்கள் ஆரம்பித்தால் அவர்களுக்கு அதிகாரிகள் தொடர்பு இல்லா
மலிருந்தால், வசதி கிடையாது. Backward Community-யாக இருந்தா
லும்கூட ஒரு வித சலுகையும் கிடையாது. நாம் ஏழைமக்கள். மக்க
ளுக்கு ஜனநாயக முறையிலே நிர்வகாம் என்று சொல்லுகிறோம். மக்கள்
சுபிட்சமாக இருக்கவேண்டுமென்று சொல்லித்திரிகிறோமே தவிர அதற்
கான வழி வகைகள் செய்வதில்லை. நல்ல திட்டங்கள் தீட்ட நம்
மாகாணத்திலே ஒரு கமிட்டி நியமனம் செய்து வழிவகைகள் செய்ய
வேண்டும். கனரக தொழில்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால்
சிறு தொழில்களை நல்ல முறையிலே செய்தால்தான் விவசாய மக்கள்
நலமுற முடியும்.

**Sri S. SWAYAMPRAKASAM**: சபாநாயகர் அவர்களே, இரண் 12-02
டாவது ஐந்து ஆண்டு திட்டத்தின் முக்கிய அம்சங்களை எடுத்து விளக்கிய p.m.
நிதி அமைச்சர் பேச்சை கேட்டபிறகு அதன் முடிவைப்பற்றி சந்தேகத்திற்கே
இடமில்லை. அதன் நோக்கம் மிகவும் நல்ல நோக்கம்தான். அது நிறை
வேறினால் மக்களுக்கு உள்ளபடியே நன்மை பயக்கும் என்பதிலே சந்தேக

[Sri S. Swayamprakasam] [3rd April 1956

மில்லை. ஆனால் அந்த முடிவு அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு நல்ல வகையிலே முடிவை தருமா என்ற சந்தேகமிருக்கிறது. இன்றையதினம் இரண்டாவது ஐந்து ஆண்டு திட்டம் உடனே ஆரம்பித்து விட்டதாக சொல்லலாம். சில தினங்களுக்கு முன்னால் முதல் 5 ஆண்டு திட்டம் முடிவு அடைந்து விட்டது. முதல் 5 ஆண்டு திட்டம் முடிவடைகிற காலத்திலே பொதுவாக மக்கள் அதன் பயனை எந்த முறையிலே அனுபவித்து இருக்கிறார்கள் என்பதைப்பற்றி ஒரு புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி பின்னால் பேசுகிறேன். அந்த 5 ஆண்டு திட்டம் நாட்டிலே இருக்கிறதென்பதை மக்கள் தெரிந்துகொள்வதற்கு எத்தனை ஆண்டுகள் வேண்டிஇருந்ததென்று பார்க்கும் போது நாட்டு மக்களின் பிற்போக்கு தன்மை நன்றாக தெரியும். ஏன், இப்படிப்பட்ட திட்டங்கள் நடந்து கொண்டிருக்கிறதா என்பதையே தெரிந்து கொள்ளாத மக்களும் இன்றைய தினம் இருக்கிறார்கள் என்று நான் சொன்னால், அதை மறுக்க முடியாது. நகரத்திலே மக்கள் முற்போக்கு தன்மையுடன் இருக்கலாம். நகரத்திற்கு அடுத்தாற்போல் **Major Panchayats**, பிறகு சிறிய, கிராம **Panchayat**-கள், **Panchayats** இல்லாத குக் கிராமங்கள், வெறும் குடிசைகளுள்ள சிறிய கிராமங்கள். இன்றையதினம் இப்படிப்பட்ட சிறு கிராமங்களையும் **Cheri**-களையும் பார்த்தால் நாட்டின் முன்னேற்றம் இந்த முதல் 5 ஆண்டு திட்டத்திலே எவ்வளவுதூரம் முன்னேறி இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ளலாம். இரண்டாவது 5 ஆண்டு திட்டத்திற்கும் வழி வகைகள் செய்துகொள்ளலாம். அதிலே வேலை செய்தவர்களெல்லாம் நகரத்திலே, வசதிகளுள்ள இடத்திலே அதிக வசதிகள் செய்துகொண்டார்களே ஒழிய பிற்போக்கு தன்மையுள்ள கிராமங்களிலே வசதிகள் ஏற்படுத்துவதற்கு இடமேற்படமுடியவில்லை. எதற்காக சொல்லுகிறேனென்றால் நாம் கிராம மக்களுக்கு வசதிகள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தபோதிலும்கூட, அந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்துகிற தன்மையும் அறிவும் சக்தியும் மக்களிடம் இல்லாத நிலைமையை பார்க்கிறோம். ஆகவேதான் இந்த 5 ஆண்டு திட்டத்தை நகரத்திலிருந்து போவதற்கு பதிலாக, கிராமங்களிலிருந்து மேல்படியாக நகரத்திற்கு வருகிற முறையிலே திட்டத்தை அமைத்தால் நன்றாக இருக்கும். அத்துடன் இன்று இருக்கிற தாரதம்மியத்தை மாற்றி அமைத்தால் ஒழிய நாட்டின் நிலைமை உயராது. நம் கிராம மக்களிடையேயும், நகர மக்களிடையேயும் பொருளாதார தாரதம்மியம் அதிகமாக இருக்கிறது. நில சீர்திருத்தத்தைப்பற்றி பல **Member**-கள் பேசினார்கள். இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தினால் ஏற்படக்கூடிய வசதிகளை இன்றையதினம் அதிக வசதியுள்ள மக்கள் அதை உபயோகப்படுத்தி அனுபவிக்கவும் வசதியில்லாத மக்கள் முன்னிருந்த நிலைமையிலேயே இருக்கக்கூடிய ஒரு தன்மை இருக்கிறது. இரண்டாவது 5 ஆண்டு திட்டம் வெற்றி அடைவதற்கு இது ஒரு இடைஞ்சலாக இருக்கிறது. 5 வருஷ திட்டம் போட்டிருப்பதை பார்த்தால் ஏதோ பொது மக்கள் ஒத்துழைப்பிருந்தால் எதிர்பார்த்தபடி உணவு பொருட்கள் உற்பத்தி அதிகமிருந்தால் இரண்டாவது 5 ஆண்டு திட்டம் நிறைவேறுமென்று, "இருந்தால் இருந்தால்" என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் நிச்சயமாக இருப்பது இத்தனை கோடி ரூபாய் சில வழிப்பது நிச்சயம். அதனால் துண்டு விழுந்தால் வரி பளுவு ஏற்படுவது நிச்சயம். பொதுமக்களுடைய ஆதரவின்றி இத்திட்டம் வெற்றி காண முடியுமா என்ற தன்மை இருக்கிறது.
12-10 p.m. ஓரளவு வரி போட்டு பணம் செலவு செய்யப்படுகிறது. பிற்போக்கான இடத்தில் வசதிகள் செய்து கொடுப்பதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. இதற்கு பொருளாதார முன்னேற்றம் இருந்தால்தான் ஒரு நிலை ஏற்படமுடியும். அபிவிருத்தி ஏற்படாத பிரதேசங்களிலுள்ள மக்களின் தலையில் நிச்சயமாக போய்விழுகிறது. பொருளாதாரத்தில் அங்குள்ள மக்கள் உயராவிட்டாலும் அந்த இடத்தில் நிச்சயமாக வரிபோடும்படியான தன்மை ஏற்படுகிறது. ஆகவே அடியோடு திட்டத்தை வகுக்க ஸ்கீம் போட்டு வருவது என்பது உபயோகிக்கக்கூடிய தன்மையில் இந்த திட்டத்தை ஒருவிதமாக அமைத்து நல்ல முறையில் திருத்தம் செய்தால் மிகவும் பிரயோஜனமாக இருக்கும். மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமானால் ஒரு இடத்திலேகூடி காரியம் செய்கிற தன்மையிலே அதிகாரிகள் தகுந்த



3rd April 1956] [Sri S. Swayamprakasam]

முறையில் ஒரு குழு அமைக்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பாக மாகாண அதிகாரிகள் சிபார்சுப்படி அதிகாரிகள் தகுந்த முறையில் இந்த திட்டங்களை மக்களுக்கு போய்ச்சேரும்படியான முறைகளை ஒத்துக்கொண்டு அந்த பாகத்திலுள்ள மக்களுக்கு சரியாகப்போய்ச் சேருகின்றனவா என்பதைப்பார்ப்பதற்கும், சிந்தித்து திறம்பட செய்வதற்கும் ஒரு குழுவை அமைக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இன்றையதினம் பார்க்கிறோம். எங்கு பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம்தான் அதிகரித்துக்கொண்டேபோகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் மக்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். இந்த வேலையில்லாத்திண்டாட்டத்தை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு பக்கம் படித்தவர்கள் வேலையில்லாமல் வேலைக்காக அவதிப்படுகிறார்கள். இன்னொரு பக்கம் தொழில் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருப்பதைப் பார்க்கிறோம். இதற்காக இந்தத் திட்டத்தில் வேலையில்லாத்திண்டாட்டத்தை போக்குவதற்காக பரிகாரம் ஒன்றும் சொல்லப்படவில்லை. உண்மையில் பார்க்கபோனால் இது மிகவும் சிக்கலான பிரச்னைதான். இது உடனடியாக தீர்க்கப்படவேண்டிய மிக மிக அவசியமான பிரச்னை. இதனால் பல குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. ஆதலால் அரசாங்கம் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்கு தகுந்த முறையில் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி முறையைப் பார்க்கிற காலத்தில், இன்னும் இரண்டு தினங்களில் வெள்ளை அறிக்கை விவாதத்திற்கு வர இருக்கிறது. பிற்பட்ட வகுப்பு, ஹரிஜன வகுப்பு குழந்தைகளுக்கும் பள்ளிக்கூடங்கள் அதிகமாக்கப்படவேண்டும் என்று பேசுகிறார்கள். இவைகளெல்லாம் சிரமமாக இருந்தபோதிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு இந்தத் திட்டத்தில் இடம் பெறவேண்டும். அதற்குதக்க முறையிலே பயிற்சி அளிக்கக்கூடிய தொழில் நுட்ப வல்லுனர்களையும், நல்ல அனுபவசாலிகளையும் போட்டு பள்ளிகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும். முதலாவது ஐந்தாண்டு திட்டக்காலத்திலேயே இதை செய்திருக்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றி பெறவேண்டுமானால் இந்தத் தொழில் தெரிந்தவர்களைக்கொண்டு உள்ளபடி இந்த மாதிரியான பயிற்சி பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொளுகிறேன். இவைகளுக்கு வேண்டிய சாதனங்கள், வசதிகள் எல்லாவற்றையும் பெறுவதற்கு உடனடியாக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும். இதைப்பற்றி இந்த திட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். இதை எடுத்து அரசாங்கம் செய்யாமல் போனால் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக முடியும் என்று சொல்வதற்கில்லை. ஆதலால் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்கு இவ்விதமான பயிற்சி பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு இதை ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

உணவுப் பொருள்கள் சம்பந்தப்பட்டவரையில் நாட்டிலே உற்பத்தி செய்வதற்கு ஒரு விதமான வசதி செய்யவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே நீர்ப்பாசனங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தந்த மக்களின் விகிதாசாரப்படி உணவுப் பொருள்கள் சாதாரணமாக பல இடங்களுக்கு கொடுக்கும்படியான தன்மையை ஏற்படுத்தவேண்டும். மேலும் உணவுப்பொருள் சக்தியை அதிகரிக்கச் செய்வதற்கு வழிவகை செய்யவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் பெருக்கவேண்டியது அதிகமாக இருக்கிறது. இதற்கான திட்டம் இப்புதிய திட்டத்தில் இல்லை. இதையும் முக்கியமாக சேர்க்கப்படவேண்டும். இவை யல்லாமல் நாட்டில் சுகாதாரக் குறைவால் எங்கு பார்த்தாலும் நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்கள். நோய் வருவதற்கு மூலகாரணம் எது என்று பார்த்து அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும். வெளியே விற்கப்படும் உணவுப்பொருள்களும் சத்துள்ள முறையிலும் சுகாதார முறையிலும் இருக்கிறதா என்று

பார்க்கவேண்டும். நல்ல சுதகாதார முறையிலே ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்து வதற்கும், நோய் வராதாபடி சுகாதார முறைகளை அனுஷ்டிப்பதற்கும் இந்த ஐந்தாண்டு திட்டத்தில் எதுவும் கூறப்படவில்லை. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து செய்தால் இந்த திட்டம் வரவேற்கக்கூடியதாகவும், எல்லோரும் ஒத்துழைக்கக்கூடியதாயும் இருக்கும். ஆதலால் அரசாங்கம் இதிலுள்ள குறைபாடுகளை நீக்கி ஆவன செய்வார்கள் என்று சொல்லிக் கொண்டு என்பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri P. RAMAMURTHI :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி சென்ற 1½ வருஷ காலமாகவே பெரிய பெரிய சர்ச்சைகள் இந்த நாட்டில் நடைபெற்று வந்திருக்கின்றன. திட்டக் கமிஷன் இறுதியாகத் தயாரித்திருக்கக்கூடிய இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டம் இப்போது சபை முன் விவாதத்திற்கு வந்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில், சென்ற சமயத்தில் விவாதம் செய்த காலத்தில் இருந்த யோசனைகளையும் திட்டக் கமிஷன் வெளியிட்டிருக்கிறது. இதனால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது ? மாறுதல்கள் என்னென்ன ஏற்பட்டி ருக்கின்றன ? நன்மை பயக்கக்கூடிய மாறுதல்கள் ஏற்பட்டிருந்தபோதி லும், கோளாறுகளும் அதிகமாக இருக்கின்றன என்பதை உணர்ந்து, அவற்றை நீக்க ஆலோசனை செய்யக்கூடிய கட்டத்தில் நாம் இன்றைக்கு இருக்கிறோம். கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் நிகழ்த்திய பிரசங்கத்தைப் பாராட்ட விரும்புகிறேன். இத்திட்டங்களைப் பற்றியெல்லாம் தமிழிலே பேசுவது என்பது மிகவும் கஷ்டமான காரியம். இருந்தபோதிலும் அவர் மிகவும் திறம்பட அவைகளை தமிழில் விளக்கி பேசியிருக்கிறார். ஆனால் இந்த பிரசங்கம் இன்னொரு வகையிலே, மிகவும் காலம் தாழ்ந்து வந்த பிரசங்கம் என்பது என்னுடைய அபிப் பிராயம். அந்த மாதிரி அவர் செய்யவில்லை. இந்த திட்டத்தைப்பற்றி அவர் பேசக்கூடிய காலத்தில் திட்டத்தினுடைய நான்கு லட்சியங்களைக் குறிப்பிட்டார். அதாவது,

**"(*a*) a sizeable increase in national income so as to raise the level of living in the country ;**

**(*b*) rapid industrialization with particular emphasis on the development of basic and heavy industries ;**

**(*c*) a large expansion of employment opportunities ; and**

**(*d*) reduction of inequalities in income and wealth and more even distribution of economic power."**

என்ற நான்கு லட்சியங்களோடு இந்தத் திட்டம் வரையறுக்கப்பட்டுள்ள தாகக் கூறினார். இந்த நான்கு லட்சியங்களின்படி தேசிய வருமானத்தை ஒட்டி மொத்தமாக ஓர் அளவு அதிகரித்து, நாட்டிலுள்ள வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது என்பது முதலாவது லட்சியம். தொழில்களை நரிதமாக வளரச் செய்வது, அதிலும் குறிப்பாக மூல இயந்திரத் தொழில்களையும், கனரக இயந்திரத் தொழில்களையும் வளர பிரதான கவனம் செலுத்துவது என்பது இரண்டாவது லட்சியம். வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது என்பது மூன்றாவது லட்சியம். வருமானத்திலும் செல்வத்திலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, பொருளாதார சக்தியை சமமாகப் பங்கிடுவது என்பது நான்காவது லட்சியம். இந்தத் திட்டத்தின் வரையறுப்பைப் பரிசீலிக்கும்போது, இந்த நான்கு லட்சியங்களும் நல்ல லட்சியங்கள்தான் என்பதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். இன்றைக்கு, வரையறுக்கப் பட்டுள்ள இந்த நகல் திட்டத்தின் அளவு இந்த நான்கு லட்சியங்களையும் எந்த அளவுக்குப் பூர்த்தி செய்ய முடியும், எந்த அளவுக்கு அது பூர்த்தி செய்யமுடியாது என்பதை நாம் பார்க்கவேண்டும். அது பூர்த்தி செய்ய முடியாது என்றால் ஏன் அது பூர்த்தி செய்ய முடியாது என்று பார்க்க வேண்டும். இந்த விஷயத்தைப்பற்றித்தான் நான் இப்போது பேச





விரும்புகிறேன். நம் ராஜ்யத்திற்கு இந்தத் திட்டத்தில் அதிகமாகப் பணம் ஒதுக்கப்படவேண்டியது அவசியம் என்று எல்லோரும் சொல்லி விட்டார்கள். இந்த விஷயத்தை சென்ற பட்ஜெட் கூட்டத்தின்போதே நான் சொல்லிவிட்டேன். அப்போது, நமது நிதி அமைச்சர் அவர்கள் "எனது கைகள் பலப்படுத்தபடுகின்றன" என்று கூறினார்கள். அதைப்பற்றி யெல்லாம் இப்போது நான் பேச விரும்பவில்லை. முக்கியமாக, அடிப் படையான சில விஷயங்களைப்பற்றி இப்போது சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியிலுள்ள அங்கத்தினர்களும் அவைகளை கவனிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ற ஏப்ரலில் வெளியிடப்பட்டு பரிசீலிக்கப்பட்ட "திட்டத்தின் கட்டுக்கோப்பு-ல்" (**Tentative framework of the Second Five-Year Plan**), இந்த நான்கு லட்சியங்களையும் நிறைவேற்றுவதற்காக ஒரு **main strategy**-ஐ உபயோகப்படுத்தப்போவதாக யோசனை தெரி விக்கப்பட்டது. அதாவது, நாட்டில் வறுமையைப் போக்கி சுபிட்சத்தை ஏற்படுத்துவதை ஒரு போராட்டமாகக் கருதி, யுத்த தந்திரங்களைக் (**strategies**) கையாளப்போவதாகக் கூறினார்கள். அந்த யுத்த தந்திரத்தைப்பற்றிக் கூறும்போது என்ன சொன்னார்கள் :

**"The basic strategy in the second plan must, therefore, be to invest large sums in the development of basic industries, transport and mining at one end and to economize as much as possible in the capital requirements for other sectors without restricting the supply of consumer goods. This strategy requires all-out efforts for the maximum utilization of capacity in existing industries and for the development of additional production in the capital-light or small-scale sector of industries . . ."**

என்று சொன்னார்கள். ஆகவே பிரதான யுத்த தந்திரம் என்று சொல்லும் காலத்தில், நாட்டின் மூலதனச் செலவில் பிரதான பகுதியை மூலப் பொருள் தொழில்களிலும், கனரகத் இயந்திரத் தொழில்களிலும் செலவழிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக, ஜனங் களுக்குத் தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்யும் பெரிய தொழிற் சாலைகளில் இன்றைக்கு உபயோகப்படுத்தப்படாமலிருக்கும் சில இயந்திரங் களையும் உபயோகப்படுத்தவேண்டும், அதாவது அந்தத் தொழில்களில் அதிகப்பட்ச முயற்சி எடுத்து, அதிகபட்சம் உற்பத்தி செய்யவேண்டும். அப்படிச் செய்து மூலத் தொழில்களுக்கும், கனரக இயந்திரத் தொழில் களுக்கும் தேவைப்படும் மூலதனத்தைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டது. அதுவும் போதாவிட்டால் இந்த நாட்டிலுள்ள சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் அபிவிருத்தி செய்து அதன் மூலம் கிடைக்கும் நிதி வசதிகளை நாட்டிலுள்ள மூலத் தொழிற்சாலை களுக்கும் கனரகத் தொழிற்சாலைகளுக்கும் மூலதனமாகப் போட்டு, அந்தத் தொழில்களை வளர்க்கவேண்டுமென்பது பிரதான யுத்த தந்திரம் என்று சொல்லப்பட்டது. இந்த அடிப்படையில் நமது நாட்டில் பெரிய தொழில் கள் எப்படி வளர்க்கப்படும் என்பதுபற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசினார்கள். இந்த அடிப்படையில் தொழில்கள் வளர்க்கப்படும் என்று சொல்லப்பட்டது குறித்துப் பேசும்போது, நான் இந்தத் திட்டத்தை சோவி யத் யூனியனின் திட்டங்களுடனோ, அல்லது அமெரிக்காவின் திட்டங்களு டனோ ஒப்பிட்டுப்பேச விரும்பவில்லை. அமெரிக்காவில் திட்டம் என்பதே இல்லை. ஆகவே அமெரிக்காவைப்பற்றிப் பேசப்போவதில்லை. ஆனால் சோவியத் யூனியன் சம்பந்தமாக, நமது திட்டத்தைப் பொருத்தவரையில் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். நமது நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்றால், கனரக இயந்திரத் தொழில்களில் அதிகமான கவனம் செலுத்தவேண்டும். முதலாளித்துவ சரித்திரப் போக்கிற்கு மாறாக நாட்டில் சமத்துவத்தை ஏற்படுத்த முயற்சிக்கும்போது **rate of development** அதிகமாக இருக்கவேண்டும் என்பது சோவி

யத் யூனியனின் அடிப்படையான கொள்கை. அந்தக் கொள்கை இன்றைக்கு நமது நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கனம் நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமணியம் அவர்கள் "கன ரக இயந்திரத் தொழில்களில் அதிக கவனம் செலுத்தி தொழில்களை அபிவிருத்தி செய்யும் அடிப்படையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பிறகு நமது நாட்டில் 45 லட்சம் டன் உருக்கு கிடைக்கும்படி திட்டம் வகுக்கவேண்டும். நமது நாட்டிற்கு 45 லட்சம் டன் உருக்கு மட்டும் போதாது; 2 கோடி டன் உருக்கு தேவை. நாம் மறுபடியும், மறுபடியும், பிரிட்டனையோ ஜெக்கோஸ்லேவேகியாவையோ, சோவியத் யூனியனையோ **steel plants**-க்கு நம்பியிருக்கக்கூடாது. ஆகவே வருஷத்திற்கு 10 லட்சம் டன் உருக்கை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளைக் கட்டுவதற்காக திட்டம் வகுக்க வேண்டும்." என்று நேற்றையதினம் சொன்னார்கள். ஆனால் அவர் ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டார். அதாவது, இந்தத் திட்டத்தில் அடிப்பட்ட அம்சம் இருக்கிறதா என்பதைக் குறிப்பிடவில்லை. ஏற்கனவேயுள்ள **tentative plan frame**-யில் அது இருக்கிறது, அதில் நிச்சயமாக இருக்கிறது. இந்தக் கண்ணோட்டத்தோடு நாம் இப்போது சில விஷயங்களை கவனிக்கவேண்டும். சர்க்கார் தரப்பில் நடத்தப்படும் கன ரக இயந்திரத் தொழில்களுக்காக ரூ. 1,400 கோடி செலவிடுவதில் பிரதான கவனம் செலுத்தவேண்டுமென்று திட்டக் கட்டுக்கோப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மட்டுமல்ல, மேலும் இரும்பை உற்பத்தி செய்யக் கூடிய உருக்குத் தொழிற்சாலைகளை **(fabrication of steel plants** கட்டுவதற்காக ரூ. 150 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், செயற்கை பெட்ரோலுக்கு **(synthetic petrol)** வெளி நாடுகளை நம்பியிராமல் இங்கேயே உற்பத்தி செய்வதற்காக ரூ. 80 கோடி ஒதுக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கு நாட்டில் வரவேற்பு இல்லாமலா இருந்தது? வரவேற்பு நிச்சயமாக இருந்தது. கம்யூனிஸ்டு கட்சியினராகிய எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் வரவேற்கிறோம். கம்யூனிஸ்டுக் கட்சி வரவேற்றது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பெர்ஹாம்பூரில் கூடியபோது இந்தத் திட்டத்தை வரவேற்றது. **Panel of economists**-ஐ அமைத்து ஆலோசனை கேட்டபோது, அவர்களும் இந்தத் திட்டத்திலுள்ள யோசனைகள் சரியான யோசனைகள்தான் என்று சொன்னார்கள். ஆனால் இவ்வளவு பேரும் இந்தத் திட்டத்தை வரவேற்றாலும், இந்த நாட்டிலுள்ள சிலர் இதை எதிர்க்கத்தான் செய்தார்கள். அப்படி எதிர்த்தவர்கள் யார்? இந்த நாட்டிலுள்ள பெரு முதலாளிகள் தான் இந்தத் திட்டத்தை எதிர்த்தார்கள். இந்த மாதிரியாகத் திட்டமிட்டால், சர்க்கார் பெரிய தொழிற்சாலைகள் மூலமும், பெரிய ஆலைகள் மூலமும் உடனடியாக நிறைய லாபமடைந்துவிடுவார்கள் என்ற காரணத்தால் பெரு முதலாளிகள் இதை எதிர்த்தார்கள். தங்களுடைய தொழிற்சாலைகளுக்கு ரூ. 200 கோடி போதாது, ரூ. 700 கோடி ஒதுக்கவேண்டும் என்று பெரு முதலாளிகள் சொன்னார்கள். அடிப்படையான திட்டங்களை பெரு முதலாளிகள் எதிர்த்துக்கொண்டிருந்தார்கள், ஓயாமல் எதிர்த்து வந்தார்கள். அவர்கள் பத்திரிகைகளில் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து எழுதினார்கள். அவர்கள் கூட்டம் போட்டுக் கிளர்ச்சி செய்யமாட்டார்கள். அவர்கள் பத்திரிகைகளில் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். **Central Advisory Council of Industries**-இன் கூட்டங்களில் அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். திட்டம் என்ன என்று முடிவு செய்யப்படுவதற்கு முன்னதாகவே, சென்ற ஜூலை மாத இறுதியிலேயே என்ன நடந்தது? **Industries Advisory Council**-இன் கூட்டம் முடிந்தவுடன், இந்த நாட்டிலுள்ள பெரிய முதலாளிகளின் பத்திரிகைகள் எல்லாம் கொம்மாளம் போட்டுக்கொண்டு தலையங்கங்கள் எழுதின.

**"Expect nothing and you shall be gloriously surprised. Something like this proverbial surprise was achieved at the meeting of the Central Advisory Council of Industries held in New Delhi last Friday . . ."**



என்று முதலாளிகளின் பத்திரிகையான '**Eastern Economist**' என்ற பத்திரிகை தலையங்கம் எழுதியது. அதாவது, "ஒன்றும் எதிர்பார்க்காதீர்கள், நிறையக் கிடைக்கும்" என்று எழுதியது. அந்தக் கவுன்சில் கூட்டத்தில் நடந்தது என்ன? அந்தக் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட ஸ்ரீ டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பிரசங்கத்தையும், ஸ்ரீ தேஷ்முக்கின் பிரசங்கத்தையும் வரவேற்று இந்தப் பத்திரிகை என்ன எழுதியது என்பதை கவனிக்கவேண்டும்.

**"There are good reasons why the private sector should be gratified at the new place that has been assigned to it in the organised industrial sector. While plan frame seemed to envisage an investment of only about Rs. 200 crores in this sector, the figure how mentioned 'for the private corporate sector other than coal sugar and small-scale industries' is to be of the order of Rs. 750 crores."**

என்று இந்தப் பத்திரிகையில் எழுதப்பட்டது. "**Plan-frame**-ல் தனிப்பட்ட முதலாளிகளால் நடத்தப்படும் தொழில்களுக்கென்று ரூ. 200 கோடி தான் ஒதுக்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று 750 கோடி ஒதுக்குவதாகக் கூறியிருக்கிறார்கள்." ஆதலால்தான் "**Expect nothing and you shall be gloriously surprised**" என்று அந்தப் பத்திரிகை கொம்மாளம் போட்டுக்கொண்டு எழுதியது. "முடிவு ஒன்றும் ஏற்படவில்லை, **Plan frame** எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், உங்களுக்கு ரூ. 600 கோடி அல்லது ரூ. 700 கோடிக்கு உத்தரவாதம் கொடுத்துவிடுகிறோம் என்று ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் ஸ்ரீ தேஷ்முக்கும் **Industries Advisory Council** கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். அதே "**Eastern Economist**" பத்திரிகையின் இன்னொரு இதழில் "**Planed eclipse of the Plan frame**" என்று தலையங்கம் எழுதப்பட்டது. அதாவது, "திட்டத்தின் கட்டுக்கோப்பிற்குத் திட்டமிட்ட கிரஹணம் பிடித்தாகிவிட்டது" என்றுகொம்மாளத்துடன் எழுதினார்கள். அது சாதாரண கிரஹணம் அல்ல. அதாவது, திடீரென் பிடித்த கிரஹணம் அல்ல, திட்டமிட்டுப் பிடித்த கிரஹணம் என்று எழுதினார்கள். ஆகவே பெரும் முதலாளிகள் இப்படிக் கூடாது **12-30 p.m.**
என்று விளக்கிக் காட்டிய காலத்தில் போன டிசம்பர் மாதம் **Planning Commission** சமர்ப்பித்து இருக்கிற **Memorandum**-ல் என்ன செய்திருக்கிறார்கள்? **Planning Commission** உத்தியோகஸ்தர்களெல்லாம் சேர்ந்து ஒரு பக்கத்தில் காங்கிரஸ் தலைவர்கள் பண்டித நேரு, சி. சுப்பிரமணியம், எல்லோருமே இந்தப் **Plan frame**-ஐ நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று அதைப்பற்றி பேசினார்கள். ஆனால் மற்றொரு பக்கத்தில் **Planning Commission** உட்கார்ந்துகொண்டு அதன் அஸ்திவாரத்திற்கே உலை வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே என்ன ஆயிற்று? நேற்றையதினம் சி. சுப்பிரமணியம் சொல்லிய மாதிரி உருக்கு சாலைகளை உண்டாக்கும்படி ஒதுக்கப்பட்ட 150 கோடி ரூபாய் கயா. சின் தடிக் பெட்ரோலுக்கு ஒதுக்கப்பட்ட தொகை இருந்ததே அதுவும் போய்விட்டது. அதற்குப் பதிலாக **Consumer goods** ஆரம்பித்து, அதே **Consumer goods**-ஐ மேலும் வளர்த்துவதற்காகக் கிட்டத்தட்ட 620 கோடி ரூபாய் வரையில் **Private section**-க்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரயன் சில்க் **Industry**-க்காக 31 கோடி ரூபாய் வரை அவர்கள் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரிப் பல அயிட்டங்களை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே இந்த விஷயத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டுமென்ற நிலைமை மாறி இது எங்கே கொண்டுபோய் விட்டிருக்கிறது? இந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் இதன் விளைவு என்ன? இந்த மாதிரி **Consumer goods**-க்குப் பெரிய ஆலைகளுக்கு அனுமதி கொடுத்தால் அந்த சரக்குகள் **market** ஜாஸ்தி தேவைப்படுகிறது. அதற்காக **transport** ஜாஸ்தி ஆவதால் **transport**-க்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட அசல் 900 கோடி ரூபாய் இன்று 1384 கோடி ரூபாயாக

[Sri P. Ramamurthi] [3rd April 1956

அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒன்றுக்கு ஒன்றரை மடங்கு தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் விளைவு என்ன ? இப்போது இருக்கிறதைப் பார்த்தால் 4,800 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டிய தொகையில் **Agriculture and Community Development**-க்கு 12 சத விகிதம், **Irrigation and food control** 9 சத விகிதம், **power** 9 சத விகிதம், **Industries and Minerals** 19 சத விகிதம், **Transport and Communications** 24 சத விகிதம், **Social services, housing and rehabilitation** 20 சத விகிதம். ஆகவே **Heavy Industries**-க்கு இன்று பிரதான கவனம் செலுத்த வேண்டுமென்ற கொள்கை மாறி இந்தத் திட்டம் இன்று ஒரு **Transport Planning**-ஆக மாறிவிட்டது. ஒட்டு மொத்தமாகக் கிட்டத்தட்ட 30 சத விகிதம். இந்தத் **Transport**-க்குச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. காரணம் **Consumer goods**-க்கு ஆலைகளுக்கு அனுமதி கொடுத்ததால் ரெயில்வே **transport** அதிகப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு 900 கோடி 1,384 கோடியாக உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நமக்கு ரெயில்வேப் போக்குவரத்து வசதி வேண்டாம் என்பதல்ல என் வாதம். ஆனால் இந்த திட்டம் இன்று இருக்கிற திட்டத்தை எடுத்துக் கொண்டாலும், இது நிறைவேற்றப்படுமா இல்லையாவென்பது யாரைப் பொறுத்திருக்கிறது தெரியுமா ? அயல்நாடுகளைப் பொறுத்திருக்கிறது. ஏன் ? நமது திட்டத்தில் நாம் **machineries** வெளிநாடுகளிலிருந்து வாங்குவதற்கு நமக்கு அன்னியச் செலாவணி தேவை. இன்று இருக்கக்கூடிய நிலைமையில் நாம் இன்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், அவர்களிடமிருந்து நாம் வாங்குகிற பொருள்களும் கிட்டத்தட்டச் சமமாக இருக்கிறது. இந்த 1955–56-ல். ஆக இன்று வியாபாரம் சம்பந்தப்பட்டமட்டில் நாம் ஒரு நல்ல நிலைமையில், சமமான நிலைமையில் இருக்கிறோமென்று சொல்லலாம். அதாவது **Balance of Trade**. ஆனால் நாம் இந்த மாதிரித் திட்டம் போட்டால் என்ன ஆகுமென்று கேட்டால் ரெயில்வேப் போக்குவரத்தை விருத்தி செய்தாலும் சித்தரஞ்சன் என்ஜின் உற்பத்திசாலையில் உற்பத்தி அதிகரிக்கப் போவதில்லை. அதனால் நாம் வெளிநாடுகளிலிருந்து தருவிக்க வேண்டி இருக்கிறது. ஆகவே இதற்காக அதிகமான **Foreign exchange** வேண்டி இருக்கிறது. இதே மாதிரி **Foreign**-லிருந்து **machineries** கொண்டு வருவதற்கு 400 கோடி ரூபாய் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதற்கு இன்று வெளிநாட்டுச் செலாவணி வேண்டி இருக்கிறது. ஆகவே இதில் 1,200 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இன்று எல்லா வகையிலும் பார்த்தாலும் 800 கோடி ரூபாய் துண்டு விழும். இந்தத் தொகையை வெளிநாடுகளிலிருந்து பூர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்தத் தொகை கிடைக்காவிட்டால் இந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்ற முடியாது. ஆகவே முதலில் போடப்பட்ட திட்ட சம்பந்தப்பட்ட மட்டில் இந்த அளவு வெளிநாடுகளின் உதவியை எதிர்பார்ப்பதோடு நிற்கவில்லை. இதை ஓரளவிற்கு நாம் செய்தால்த்தான் நமது நாட்டின் வளர்ச்சி சீக்கிரமாக ஏற்படும். இன்று தற்காலிகமாக ஜனங்கள் தியாகம் செய்யவேண்டியவசியம் ஏற்படுகிறது. ஐந்து வருடங்களுக்குப் பிறகு நமது **rate of development** பெருகும். ஆகவேதான் இது அவசியமென்று இன்று வற்புறுத்தப்பட்டது. ஆனால் இன்று இந்தத் திட்டம் பெரும் முதலாளிகளின் நிர்ப்பந்தத்திற்குப் பணிந்து மாறுதல்களைச் செய்திருப்பதால் இது கஷ்டமளிப்பதாக இருக்கிறது. நாம் வெளிநாடுகளை நம்பி இவற்றை நிறைவேற்றப்பட வேண்டி 'இருக்கிறது. எண்ணூறு கோடி ரூபாய் இன்று வெளிநாட்டிலிருந்து கிடைக்குமா கிடைக்காதாவென்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

**As compared to this an average of Rs. 160 crores a year proposed in the scheme of financing presented above represents a large increase, even allowing for the newer form of trade credits for steel plants or other industrial undertakings. But Rs. 800 crores represent the order of requirements.**



3rd April 1956] [Sri P. Ramamurthi]

வருஷத்திற்கு 160 கோடி ரூபாய் கிடைக்குமாறு பார்ப்பது ஜனங்கள்தான். ஆகவே கிடைக்குமென்று சொல்ல முடியாது. ஆனால் 800 கோடி நமக்குத் தேவை. ஆனால் கிடைக்குமா வென்பது சந்தேகம். இந்த நிலைமையில் ஏன் நாம் வெளிநாடுகளை நம்பித் திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்கிறேன் ? ஏற்கனவே நாம் போட்ட **Plan frame**-படி நடந்திருந்தால் இந்த அளவிற்கு நாம் **transport** செலவை அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

வெளிநாட்டை நம்பி இருக்க முடியாது. வெளிநாட்டை நம்பி திட்டமிடுவது ஏன் ? இதனால் இந்த திட்டம் சரிவர நிறைவேறுமா என்ற சந்தேகம் இருக்கிறது **(uncertainty)**. இது சம்மந்தமாக இருக்கிற பெரிய **uncertainty** என்னவென்றால்— 12-40 p.m.

" All these factors add up to a reasonable prospect of external assistance being available on a large scale than in the past. Nonetheless, this is a field where the uncertainties in the estimation of foreign exchange requirements and in the availability of external resources necessitate a periodic and continuous review of needs and possibilities."

ஆகவே இந்த திட்டம் ஐந்து வருடங்களுக்கு போட்டிருப்பதாலும், இதனால் நிச்சயமற்ற தன்மை ஏற்படும்போலிருப்பதால், வருஷா வருஷம், இந்த திட்டத்தை பரிசீலனை செய்து பார்த்தாக வேண்டும். அவ்வப்போது அதைக் குறைத்து நீட்டியாக வேண்டும். இரண்டாவது விஷயத்தை எடுத்துக் கொள்வோம். இதில் ஒன்று தெளிவு. இதில் காணப்படும் முக்கியமான அம்சம், இங்கே இருக்கும் வித்தியாசங்களைப் பாருங்கள். ஜனங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு **capacity** அதிகமாக வேண்டும்.

" The expansion of industrial capacity during the Second Plan is conceived in terms of the following priorities :—

(1) development of iron and steel production, machine-building, heavy engineering, and heavy chemicals, including nitrogenous fertilizers;

(2) expansion of capacity in respect of other developmental commodities and producer goods, e.g., cement and phosphatic fertilizers;

(3) modernization and re-equipment of national industries already in existence, e.g., jute, cotton and sugar;

(4) fuller utilization of installed capacity in existing industries wherever there are wide gaps between capacity and production; and

(5) expansion of capacity for consumer goods."

முதலில் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டால், இன்றைக்கு இருக்கும்படியான பஞ்சாலைகளை, மில்களை, தொழில்சாலைகளை நவீனமயமாக்க வேண்டும். இன்றைக்கு உபயோகப்படுத்தப்படாமல், பூட்டிக் கிடக்கும், மூடி இருக்கும் மெஷீன் **(machines—Harvey & Co.)** இதைத் திறந்தாக வேண்டும்.

தொழில் சாலைகளை நவீன மயமாக்கவேண்டுமென்று சொன்னால் என்ன ? இதற்கு போதிய மெஷின்கள் வெளி நாடுகளிலிருந்து வந்தாக வேண்டும். இதன் விளைவு என்ன ஆகப்போகிறது. தொழிலாளர்கள் மீது பளுவு விழுமென்ற காரணத்தால் நான் பேசவில்லை. அந்நிய நாட்டுச்

[Sri P. Ramamurthi] [3rd April 1956

செலவாணி இருக்கிறதே அதை தடுக்க முடியாது. தொழில்களை நடத்துவதற்கு வெளி நாடுகளை நம்பி இருக்கும் நிலைமையில் இந்த திட்டம் சரிவர நிறைவேற்றப்படுமா என்ற சந்தேகங்கள் இருக்கின்றன. இந்த காரணங்களால் நாம் நாளுக்கு நாள் கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே கடைசி விஷயத்தை எடுத்துக்கொண்டு அதில் சொல்லப்படுகிற அசம்பாவிதங்களை நாம் ஒழித்துக்கட்டியாகவேண்டும். செல்வத்திலுள்ள வித்தியாசத்தை, தாரதம்யத்தை குறைப்பது நமது முக்கியமான லட்சியமாக இருக்கவேண்டும். இதை நிறைவேற்ற சந்தர்ப்பம் இருக்கிறதா என்பதைப் பற்றி நிதி மந்திரி அவர்கள் சொல்லி இருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் **final draft**-ல் (**Blue book**)-ல் இந்த விஷயத்தைப் பற்றி என்ன சொல்லப்படுகிறது என்று கேட்டால் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதின் விளைவு—

"In India, on the other hand, on account of the historical circumstances under which modern economic development has taken place, disparities in wealth and income and in standards of living and culture have been accentuated, especially in urban areas during and since the Second World War. With so large a part of production being left to the private sector and the small proportion drawn back through taxation and loans and small savings, increased outlay on development in the Second Five-Year Plan is likely to enhance the gap between the higher income brackets and the lower income brackets."

தனிப்பட்ட முதலாளிகள் கையில் ஜனங்களுடைய தேவைக்கான உற்பத்தியில் பெரும்பகுதியை அவர்களிடம் விட்டுவைத்து அதன் பிறகு சர்க்கார் **development**-க்கு பெரும் பணம் கேட்டால் அதை மக்கள் எப்படிக் கொடுக்கமுடியும். அதிக வருமானம் பெறுகிறவர்களுக்கும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் இடையில் உள்ள தார தம்யத்தைத்தான் போக்கவேண்டும். இந்த மாதிரி ரிப்போர்ட்டு வந்த பின் பார்லிமெண்டரி (**Parliamentary group**)-ல் இதற்கு எதிர்ப்பு பிரமாதமாக கிளம்பி இருக்கிறது. பண்டித நேரு இதற்குப் பிறகு அதே மாதிரி செய்தாகவேண்டுமென்று ஒப்புக் கொண்டிருக்கிறார். இதற்கு பிறகு **Development Council meeting**-க்கு நிதி மந்திரி சென்றிருக்கிறார். **February** மாதத்தில் என்று நினைக்கிறேன். பண்டித நேருவும் இதில் பேசியகாலத்தில் இதை வற்புறுத்தி இருக்கிறார். **Steel plant** உற்பத்தியை நாம் கவனித்தாகவேண்டுமென்று அங்கே வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. அதற்குப்பிறகு காங்கிரஸ் மகாசபை கூட்டம் நடந்த சந்தர்ப்பத்தில் **final draft**-ன் மேல் வந்திருக்கும் **criticism**-த்தை எல்லாம் கவனித்து நாங்கள் திருத்தி திட்டத்தை அமைத்திருக்கிறோமென்று சொல்கிறார்கள். ஆனால் நடந்திருக்கிறது என்ன கணக்கைப் படிக்காமல், **production target**-ஐ மாத்திரம் கொடுத்து விட்டு **final draft**-ஐ வெளியிட்டிருக்கிறார்கள். இதை குறிப்பாக விவாதத்தில் சுட்டிக் காட்டப்பட்டு இருக்கிறது. இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின் விளைவாக ஜனங்களுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லும் காலத்தில் ஏன் இந்த நிலைமை ஏற்பட வேண்டும். இதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாம் அனுஷ்டிக்கப் போகும் முறையை நிதி மந்திரி அவர்கள் பேசும் காலத்தில் சொல்லி இருக்கிறார். "கொள் என்று சொன்னால் குதிரை வாயைத் திறக்கும். கடிவாள மென்று சொன்னால் வாயை மூடிக்கொள்ளு மென்றும் சொல்லி இருக்கிறார். கொள் என்று சொல்லி கொள்ளை தவிட்டுடன் கலந்து வைத்தால் முக்கால்வாசி தவிடு, கால்வாசி கொள்ளு இதைக் கொடுத்தால் குதிரை வாயைத் திறக்காது. இரண்டையும் தனித்தனியே கொடுத்தால் வயைத் திறக்கும். ஆகவே ஜனங்களுடைய தலையில் வரி சுமையை வைத்தால் அதை ஏற்றுக் கொள்ளமாட்டோமென்று சொல்லமாட்டார்கள். ஆனால் பளுவு அவர்கள் தாங்கக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். தொழில்கள் மூலம் நடுத்தர



3rd April 1956] [Sri P. Ramamurthi]

மக்களை மட்டும் வளர்க்கும்படிச் செய்யவேண்டுமென்று நான் சொல்லத் தயாராக இல்லை. நம் நாட்டு வளர்ச்சியின் வேகத்தைக் குறைப்பதென்ற முறையில், பெரிய முதலாளிகள் அதிகமாக லாபம் சம்பாதிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இந்த நோக்கம் இன்றைக்கு அவர்களிடத்தில் வளர்ந்துவிட்டது.

ஆகவேதான் இதை திரும்ப கவனிக்கவேண்டுமென்று இன்றைக்கு **12-50 p.m.** வற்புறுத்திக் கூற ஆசைப் படுகிறோம். வருமானம் சம்பந்தப்பட்ட மட்டில் என்ன பார்க்கிறோம் 500 கோடி ரூபாய் வரி வருகிறது. 100 கோடி ரூபாய் ரயில் மூலம் கிடைக்க இருக்கிறது. 250 கோடி பிராவிடண்ட் பண்டு இனங்களில் கிடைக்கும். 1,200 கோடி வரிகள் மூலம், கடன்கள் மூலம் ஒரு 1,200 கோடி உத்தேச சிறு சேமிப்பு மூலம் 500 கோடி ரூபாய், வர்த்தக மூலம் 700 கோடி ரூபாய் கிடைக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இதற்கும் மேல் 1,200 கோடி ரூபாய்க்கு ஏற்பாடு செய்தால், அதாவது நோட்டுகள் அச்சடித்தல், இது 1,200 கோடி ரூபாய்க்கு மேற்படாமல் 800 கோடி ரூபாய் வெளி நாட்டில் இருந்து வரலாம். இப்படி எல்லா இனங்களிலும் கிடைக்கக்கூடிய தொகை 4,800 கோடி ரூபாய் ஆகும் என்று திட்டக் கமிஷன் அறிவிக்கிறது. பிளானிங் கமிஷன் சயண்டிபிக் பாடி என்ற அந்த பொருளாதார குழு பூராவாகப் பரிசீலனை செய்து 4,800 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டு கொடுத்திருக்கிறார்கள். இப்படி கணக்குப்போட்டு 800 கோடி ரூபாய் வரவேண்டுமென்று அந்நிய நாடுகளிலிருந்து கிடைக்க வேண்டுமென்று கணக்குப் போடுவதுதான் **Deficit Financing**. இப்படி **Deficit Financing** ஏற்பட்டால் பெரிய ஆபத்து வந்து விடும் என்று ஒத்துக்கொண்டு விட்டு பாக்கி இருக்கும் 400 கோடி வரையில் அதிக வரி மூலம் கிடைக்கும் என்றும் சொல்லுகிறார்கள், எப்படி வரும். இன்னும் உத்தேசித்த 400 கோடி வரை ஜாஸ்தி வரி போடப்போகிறோம் என்கிறார்கள். இப்படி அதிக வரி போட்டால் இந்த எதிர்ப்பார்க்கும் 400 கோடி ரூபாய் கிடைக்குமா என்பது யாருக்கும் தெரியாது. அது ஒரு நிச்சயம் அற்றதன்மையில் இருக்கிறது. ஒரு ஸ்திரம் அற்றதன்மையில் அமைந்திருக்கிறது. நமக்கு வேண்டிய தொகை 4,800 கோடி, 4,800 கோடி ரூபாய் வேண்டியதாக இருக்கிறதா என்றால் வேண்டிய தாகத்தான் இருக்கிறது. அதனாலே என்ன ஏற்படுகிறது **Deficit Financing** ஏற்படும். ஆனால் இதை இன்றைக்கு நாம் விரும்பவில்லை. அது வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது ஒன்றுதான் இப்போது நம் முன்னுள்ள ஒரே பிரச்னையாகும். எந்த நாட்டிலும் எந்த ஒரு காலத்திலும் இப்படி **Deficit Financing** என்ற நிலைமை ஏற்படுவது சகஜம். அதைச் சமாளிப்பதற்கு வேண்டிய தகுந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படத்தான் வேண்டும். இதைச் சரித்திரம் அறிந்தவர்கள் அதாவது பொருளாதாரக் கண்ணோக்கு உடையவர்கள் நிச்சயமாக அநுமதிக்கத்தான் செய்வார்கள். **Deficit Financing**-ஐ சரிக்கட்ட அதிகப்படியான நோட்டு அச்சடித்து போடுவதற்கு வசதி செய்துக் கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் ஏன் 800 கோடி ரூபாய் வரை மார்க்கட்டுகளில் கடன் வாங்கவேண்டும். 700 கோடி ரூபாய் போதாதா? இந்த ஐந்து வருஷ காலத்திற்குள் 425 கோடி ரூபாய் வரையில் சர்க்கார் கடன் பத்திரங்கள் காலவதியாகிறது. அவைகளைத் திருப்பிக் கொடுத்தாகவேண்டும். அவர்கள் சொல்லுகிறார்கள் மார்க்கட் கடன்கள் 150 கோடி வரை இந்த ஐந்து வருஷ காலத்திற்குள் வாங்க வேண்டும், இது சாத்தியமா. கஷ்டம் தான் அதில் கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும் அது நம்முடைய அத்தியாவசத்தேவை என்பதை நாம் உணர்கிறோம். தேவைப்படுகிறது உண்மை. நாமும் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கிறோம். இப்படி நாம் எதிர்பார்க்கும் தொகை நமக்குக் கிடைக்காமல் போனால் என்ன ஆகும். பாங்குகள்தான் பணம் **credit** கொடுக்கவேண்டும். பாங்குகள் கொடுக்கும் **Credit** போதாது. அதனால் மேலும் கடனை சிருஷ்டிக்க வேண்டிய நிலைமை தான். அதனால் 1,200 கோடி ரூபாய் நோட்டுக்கள் அச்சுப் போட்டு சரிக்கட்ட நினைக்கலாம். ஆனால் இந்த 1,200 கோடி போதாது. 1,300 கோடியில் நிற்காமல் 1,800 கோடிக்குக் கூட போகவேண்டி ஏற்படும். இதை பார்த்திருக்கிறோமா இல்லையா. இந்த ஏற்பாட்டுக்கு

[Sri P. Ramamurthi] [3rd April 1956

**Deficit Financing** என்று சொல்லுவார்கள், ஆனால் இன்றைக்கு இருக்கக்
கூடிய நிலைமையிலே இன்றைக்கு **Deficit Financing** இதனால் ஏற்
படக்கூடிய விளைவுகளைத் தடுக்க வேண்டாமா? தடுக்கக்கூடிய பலம் வாய்ந்த
சர்க்கார் இருக்கிறதா என்றால் இல்லை. இன்னொன்று ஜனங்களுடைய
தேவை, அவைகளில் ஒரு பெரும்பகுதியைப் பெரும் முதலாளிகள் கையில்
விட்டு விட்டு அவர்களுக்கு இன்னும் தேவைப்படும் பொருள்களை அதிக
மாக உற்பத்தி செய்வதற்கு வேண்டிய பணத்தை அதிகமாக அவர்கள்
கையிலே வைத்திருப்பதினால் பல தவறுகள் நேரும்படியான நிலைமை
ஏற்படுகிறது. இதே சந்தர்ப்பத்திலே வேறு சூதாட்டம் நடத்துவதற்கு
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் கையிலே இருக்கும்படியான
பண வசதி பலர் சர்வநிதி அதோடு கூட பாங்குகளில் அவர்களுக்கு இருக்
கும் ஆதிக்கம் நாட்டிலே இருக்கக்கூடிய ஜனங்களிடத்திலே இருந்து
வசூலிக்கும்படியான கிட்டத்தட்ட 900 கோடி ரூபாயை பாங்குகள் டிபாசிட்
பாங்குகள் கையிலே அவர்கள் ஆதிக்கத்திலே வைத்து இருக்கிறார்கள்,
இப்படிப்பட்ட ஸ்தாபனங்களை வைத்துக் கொண்டு **Deficit Finance**
விளைவு ஏற்பாடான விலைவாசி தூக்கல். இதைக் கட்டுப்படுத்துவதற்கு ஆவன
செய்வதற்கு இல்லாமல் போய் விடுகிறது. ஆகவேதான் அதன் விளைவு
களைப் பார்த்தோம் போன வருஷத்திலே **Deficit Financing**
விளைவாக பல முதலாளிகள் பத்திரிகை எழுதின முதலாளிகளுக்கு
இவை சாதகமாக முடியுமே தவிற பாதகம் ஒன்றும் ஏற்படாது என்று
**Deficit Financing** கொஞ்சம் ஆரம்பிச்ச உடனே என்ன ஆச்சு? சென்ற
வாரம் பத்திரிகைகள் எழுதின 1955-ம் வருஷம்தான் நல்ல வருஷம்,
மிகவும் முக்யமான லாபம் கிடைத்த வருஷம் யுத்த காலத்தில் கூட இந்த
மாதிரி கிடைக்கவில்லை. சென்ற 1955-ம் வருஷத்தில் ஸ்டாக் மார்க்கக்கட்டு
களில் பங்குகள் விலை ஜாஸ்தி ஆக இருந்தது. என்று பார்க்கிறோம்,
இப்படித்தான் முதலாளிப் பத்திரிகைகள் எழுதின மார்க்கட் பங்கு நில
வரத்தைப் பாருங்கள் என்ன ஏற்பட்டது. ஸ்டாக் மார்க்கட்டுகளில் பங்கு
விலை உயர்கிறது என்றால் என்ன பொருள், லாபம் அதிகமாகக்
கிடைக்கிறது. அவர்களுக்குக் கொழுத்த லாபம் கிடைத்துக் கொண்டு
வருகிறது. ஆகவே எப்படி கிடைக்கும். லாபம் அதிகமாகக்கிடைக்கவேண்டி
யது என்றால் இந்த **Deficit Finance**-ஐ உபயோகப்படுத்திக் கொண்டு
அதன் விளைவாக விலைவாசியை உயர்த்துவதற்கு தங்கள் கையிலே இருக்
கும் படியான சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. என்ன பார்க்
கிறோம். ***Statesman*** பத்திரிகை எழுதுகிறது. கல்கத்தாவிலே மட்டும்
இந்த மார்ச் மாதத்தில் இதற்கு முன் மாதம் பிப்ரவரியை விட, இந்த
மாதத்திலே 13·5 ஜாஸ்தி ஆகி இருக்கிறது. இதே அளவிற்கு வாழ்க்கைத்
தரத்தின் அளவு எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. இந்த மார்ச்
மாதத்தில்தான் இப்படி புது பட்ஜெட் வந்த பிறகு பார்த்தால் விலை
வாசிகளின் கணக்கைப் பார்த்தால் பூர்ணமாகத் தெரியும். விசேஷ
விலைவாசி உயர்ந்திருக்கிறது. இங்கே எப்படியோ நான்
விசாரிக்கவில்லை. விலை வாசிகள் ஏறிக்கொண்டே இருந்திருக்கின்றன
என்பது நிச்சயமாக தெரியும். ஆகவே இந்த வகையில் **Deficit Financing**
முறையால் ஆபத்துதான் ஏற்படுகிறது. ஆகவே ஏன் இது ஏற்படுகிறது
காரணம் என்ன? தனிப்பட்ட பெரும் முதலாளிகளுக்குச் சலுகை கொடுக்
கிறோம். அவர்கள் லாபம் கொடுப்பதற்கான வழியில் இன்றைக்கு வாதி
கள் ஏராளமாக உள்ளன. ஆகவே இத்தகைய ஏற்பாடு இருக்கும் வரை
யிலும் ஆபத்துத்தான். இவைகளையெல்லாம் ஆலோசித்துப் பார்த்து
நம் சம்பந்தப்பட்ட மட்டில் கவனமாக நடத்த வேண்டிய கிளர்ச்சி இப்படிப்
பட்ட முயற்சியால் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அந்த கட்சியிலே
காங்கிரஸ்காரர்கள் அனைவரும் ஈடுபட்டு இந்த விலை வாசி உயர்வைத்
தடுத்து நிறுத்தும் பாடுபட வேண்டுமென்று விரும்புகிறேன். ஏன் என்று
கேட்டால் நீங்கள் ஒப்புக் கொண்டு இருக்கும் நல்ல கொள்கைகள் நடை
முறையில் வர வேண்டும். இதற்கு முன்னாலே காங்கிரஸ் கட்சி ஒப்புக்
கொண்டதிலிருந்து மாறும்போது தான் நாம் எதிர்க்கிறோம். இப்படிப்
பெரும் முதலாளிகளின் கூக்குரலுக்கு அரசாங்கம் செவி சாய்க்கிறது.
இன்றைக்கு காங்கிரஸ் கட்சி அகில-இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்
திலே நிறைவேற்றிய தீர்மானங்கள் என்ன சொல்கின்றன. "நிலச் சீர்



3rd April 1956] [Sri P. Ramamurthi]

திருத்த சம்பந்தமானவைகளுக்கு அவசியம் இல்லை." அப்படிப்பட்ட
கிளர்ச்சியில் நீங்கள் ஈடுபடவேண்டாமென்று சொல்ல ஆசைப்படுகிறோம்"
என்று சொல்லியிருக்கிறார்கள். என் அபிப்பிராயத்தில் இப்படிப் பெரும்
முதலாளிகளுக்குச் சலுகை கொடுப்பதின் காரணம் என்ன என்று கேட்
டால் நம் சம்பந்தப்பட்ட மட்டில் தீர்மானம் போட வேண்டுகிறோம். ஸ்ரீ
சுப்ரமண்யம் சட்ட சபையில் பேசக் கூடிய காலத்தில் இந்த விஷயத்தைப்
பற்றி சம்சயமாகப் பேசுகிறார்கள். அவருக்கு ஒன்று தெளிவாகத் தெரி
வித்து விட விரும்புகிறேன் காங்கிரஸ்காரர்கள் இப்படிச் சிருஷ்டிக்கும்
பெரும் முதலாளிகள் அவர்கள் நடத்தும் கிளர்ச்சிகளைக் கணக்கில் எடுத்துக்
கொள்ளாமல், அவர்களுக்கு இன்று பொருளாதாரத் துறையில் இருக்கும்
செல்வாக்கு காரணத்தினாலே அரசியல் துறையிலே செல்வாக்கு இருக்கிறது.
பிளானிங் கமிஷனிலே செல்வாக்கு இருக்கிறது. சர்க்கார் உத்தியோகஸ்
தர்களிடம் செல்வாக்கு இருக்கிறது, பெரிய உத்தியோகஸ்தர்களிடம்
அவர்களுக்கு செல்வாக்கு இருக்கிறது. ஆகவே என் அபிப்பிராயத்தில்
இந்த பிளானிங் முறையிலே முக்கியமாக இருக்கக்கூடிய இந்த நாட்டில்
இருக்கும் சர்வ அரசியல் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து பெரிய அளவில்
தம் சக்தியைத் திரட்டி இந்த எதிர்க்கும் படியான முயற்சிகளுக்கு
நன்றாக வகையான கிளர்ச்சி நடத்தி இருக்குமானால் பெரும் முதலாளி
கள் கை உடுக்கப்பட்டிருக்கமுடியும். ஆனால் அது இல்லை இன்றைய கால
கட்டத்திலே. அதனாலேதான் அவர்கள் தைரியம் பெற்று விட்டார்கள். இப்
போது பிரமாதகமாக்கப் பத்திரிகைகளிலே எழுதுகிறார்கள் சென்ற வாரத்
திலே நம் மாகாணத்திலே இருக்கக்கூடிய ஒரு பெரிய அறிவாளி அவர்
சமீபத்திலே ஒரு பெரிய கூட்டத்திலே பேசினாராம் **Public sector** வளர்ச்சி
அடையாது என்று. **Public sector** என்றால் என்னவென்றே
தெரியாது. இவர்கள் **Public sector**-ஐ எதிர்க்கிறார்கள். காரணம் என்ன.
**Private sector** நன்றாக வளரவேண்டுமானால் **Public sector** தடையாக
இருக்கும். இதுதான் அடிப்படைக்காரணம் **Public sector** வள
ர்ந்தால் தனிப்பட்ட முதலாளிகளின் ஆடம்பர வாழ்க்கைக்கு வகை இல்
லாமல் போய்விடும். அவர்கள் எப்படிப் பெரிய மனிதனாக இது வரை
சமூகத்திலே உயர்ந்த தட்டில் வாழ்ந்த மாதிரி வாழ முடியாத நிலை
ஏற்படும் என்ற உண்மை தான் இந்த எதிர்ப்புக்கும் காரணம்.

**(Deputy Speaker occupied the Chair.)**

ஆகவே அதிகாரத்தில் இருந்தால் பணம் எப்படி சம்பாதிப்பது ? 1 p.m.
ஒன்று லஞ்சம் வாங்க வேண்டும் இல்லா விட்டால் திருட வேண்டும். ஒரு
பக்கம் கவனித்தால் முதலாளிகள் தொழில் நடத்துகிறார்கள். மற்றொரு
பக்கம் வியாபாரிகள் தொழில் நடத்துகிறார்கள். அவர்கள் நேரடியாக
தொழில்களை நடத்தவில்லை. அவர்கள் குமாஸ்தாக்களையும் மானேஜர்
களையும் வைத்துக்கொண்டுதான் தொழில்களை நடத்துகிறார்கள். அதைப்
போலவே அரசாங்கமும் மானேஜர்களையும் குமாஸ்தாக்களையும்
வைத்துக் கொண்டு அந்தத் தொழில்களை அதாவது பெரிய தொழில்
களை, ஏன் நடத்தக் கூடாது என்று கேட்கிறேன்? நேற்று கூட பார்லிமெண்
டில் சிந்தரி பாக்டரி சம்பபந்தமாக பிரமாதமாக விவாதம் நடைபெற்றது.
அதற்குக் காரணம் அவர்கள் காட்டியிருக்கக் கூடிய பாலன்
ஷிட் விவரம் தான். பல தில்லுமுல் நடந்திருக்கிறது என்பது
அதிலிருந்து நன்றாகத் தெரியும். அங்கிருக்கும் கஷ்டங்களை போக்க
வேண்டுமானால் அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையை கவனிக்க வேண்டும்.
அங்குள்ள அதிகாரிகளை மட்டும் நம்பிக் கொண்டு இருப்பதில் பயன்
இல்லை. அப்படி அதிகாரிகளை மட்டும் நம்பிக்கொண்டிருந்தால் நிலைமை
என்னவாகும் என்பதை கவனிக்கவேண்டும். பல தொழிலாளர்கள் பாதிக்
கப்படுவார்கள். பல தொழிலாளர்கள் வேலையை விட்டு நீக்கக் கூடிய
நிலைமை ஏற்படும். அந்த நிலைமை ஏற்படாமல் இருக்க வேண்டும். அத
னால் அங்கு இருக்கக் கூடிய குமாஸ்தாக்களுடனும் அங்கு வேலை செய்
கிறவர்களுடன் ஒத்துழைப்பு இருக்க வேண்டும். அப்படி ஒத்துழைப்பு
இருந்தால்தான் வேலை நன்றாக நடைபெறும். அப்பொழுதுதான்
அங்குள்ள ஊழல்களை நிவர்த்தி செய்யலாம். தொழிலாளர்களின் பேரில்

[Sri P. Ramamurthi] [3rd April 1956

பழி வாங்க மாட்டார்கள். தொழில்களில் நடக்கக் கூடிய சுரண்டல்கள் எல்லாம் அங்கிருக்கக் கூடிய வேலையாட்களுக்கும் குமாஸ்தாக்களுக்கும் தான் தெரியும். மற்றவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது. அதனால் அவர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் அங்குள்ள ஊழல்களைக் கண்டு பிடிக்கலாம். வேலையாட்களின்பேரில் பழிவாங்க மாட்டேன் என்று சொன்னால்தான் அவர்கள் ஒத்துழைக்க முன் வருவார்கள். பெரிய அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்றால் அதைக் கண்டு பிடிக்க எந்த சி.ஐ.டி. யை வைத்தாலும் முடியாது. ஆனால் அங்கு வேலை செய்யக் கூடியவர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் தான் மேலே லஞ்சம் வாங்குகிறவர்களைக் கண்டு பிடிக்கலாம். அவர்களுக்குத்தான் எப்படி வாங்குகிறார்கள் என்பதெல்லாம் நன்றாகத் தெரியும். அவர்களுக்கு நாம் வசதி கொடுக்காமல் இருந்தால் அவர்கள் அதிகாரிகளை கண்டு நடுங்க வேண்டியதாக இருக்கிறது. ஆபீசர்களை டிபெண்ட் பண்ண வேண்டியதாக இருக்கிறது. அதனால் உத்யோகஸ்தர்களிடம் இருக்கும் ஊழல்களைக்கண்டு பிடிக்க வேண்டுமானால் அங்கு வேலை செய்யக் கூடியவர்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். பழி வாங்கும் நிலைமை கூடாது. அந்த முறையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அதனால் அவர்கள் வேலை செய்யக் கூடிய ஸ்தாபனங்களுக்கு ஒரு பெரிய அந்தஸ்து கொடுத்து ஆதரவு கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு பெரிய அந்தஸ்து கொடுத்தால் தான் இன்றைக்கு மானேஜ்மென்டை அடக்கக் கூடிய சாத்யம் ஏற்படும். அதற்கு வேண்டிய வழி நிச்சயமாக இருக்கிறது. அப்பொழுதுதான் நாடு நிச்சயமாக நல்ல வழிக்கு வரும். இதைப்பற்றி கனம் நிதி மந்திரி அவர்களும் சரியானபடி யோசனை செய்து கொண்டு தான் இருக்கிறார் என்று தெரியவருகிறது.

வியாபாரம் சம்பந்தப்பட்ட மட்டில் நாட்டின் நிலைமை என்ன என்பதை கவனிக்கவேண்டியதாக இருக்கிறது. வியாபாரத்தில் வரும் லாபம் யாருக்குப் போகிறது. இதைப்பற்றி நமக்குத் தெரியாது. ஏனென்றால் பாங்குகள் அவர்களுடைய கையில் இருக்கிறது. எக்சேஞ்சு பாங்கு அவர்கள் கையில் இருக்கிறது. இந்நாட்டில் தொழில் விவகாரம் பூராவும் அவர்களுடைய கையில்தான் இருக்கிறது. அதாவது வெளி நாட்டு தொழிலாளர்களுடைய கையில்தான் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அவர்கள் வெளி நாட்டின் நாணய செலாவணிய நடத்திக்கொண்டு வருகிறார்கள். விலையை கட்டுப்படுத்துவதோ கூட்டுவதோ அல்லது குறைப்பதோ அவர்களுடைய கையில்தான் இருக்கிறது. உள் நாட்டில் தொழில் முதலீடு போடுவதற்கு வந்து விட்டார்கள். உள்நாட்டு க்ரெடிட் ஸ்டரக்சரில் அவர்கள் சேர்ந்து விட்டார்கள். அதனால் தான் அவர்களுடைய லாபம் பூராவும் வெளி நாட்டிற்குப் போகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உள் நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முக்கியமான தொழில்களாகிய சணல், தேயிலை, மாங்கனீஸ் முதலிய மூலபொருள்களில் வியாபாரம் பூராவும் அவர்கள் கையில்தான் இருக்கிறது. அவைகள் சம்பந்தப்பட்ட வரையில் வெளி நாட்டினர் கையில் விட்டு விட்டார்கள். அவைகளை ஏன் நாமே வைத்துக்கொள்ளக்கூடாது என்று கேட்கிறேன். அவைகள் நம் அரசாங்கத்தின் கையில் இருந்தால் உபயோகமாக இருக்காதா என்று கேட்கிறேன், வரும் லாபத்தையெல்லாம் வெளி நாட்டிற்குப் போகாமல் தடுப்பதற்கு வசதியாக இருக்கும் அல்லவா? இன்னும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அவர்கள் அதிகப்படியாக லாபம் அடையலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய லாபத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் அல்லவா? தேசத்திற்குத் தியாகம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார். அதைப்போலவே அவர்களும் தேசத்திற்கு கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டும் அல்லவா? இது சம்பந்தமாக தெலுங்கில் ஒன்று சொல்வதுஉண்டு. அதாவது என் வீட்டிற்கு வந்தால் என்ன கொண்டு வருவாய், உன் வீட்டிற்கு வந்தால் என்ன கொடுப்பாய் என்று சொல்வது போல் இருக்கிறது. அவர்கள் வியாபாரம் செய்வதில் லாபம் ஜாஸ்தியாக வருகிறது. அதைப்போலவே அவர்களையும் தேசத்திற்கு என்று தியாகம் செய்யச்சொல்லவேண்டும். அவர்கள் செய்ய மாட்டேன் என்று



3rd April 1956] [Sri P. Ramamurthi]

சொன்னால், அவர்கள் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இதைப்பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை.

**DEPUTY SPEAKER: The Hon. Minister will reply tomorrow after question hour.**

**Sri P. RAMAMURTHI:** பணத்திற்கு வசதி உண்டு என்று சொல்லுகிறார். ஐந்நூற்று பதினொரு கோடி ரூபாய் வேண்டும் என்று கணக்குப் போட்டாலும் இந்த வருஷத்தில் அதற்கு மேல் இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது. அவர்களுடைய லாபம் வருஷத்திற்கு வருஷம் வளர்ந்து கொண்டே போகிறது. அதை வைத்துக் கொண்டு அவர்கள் கொம்மாளம் போடுகிறார்கள். வரும் லாபத்தை வைத்துக் கொண்டு அவர்கள் கொம்மாளம் போடுகிறார்கள். போன வருஷத்திற்கு முன் வருஷத்தை விட போன வருஷம் லாபம் அதிகப்படியாக வந்திருக்கிறது, அப்படி 302 கோடி அதிகமாக வந்திருக்கிறது, அதன் பிறகு 302 கோடியிலிருந்து 342 கோடி ரூபாய் அதிகமாக வந்திருக்கிறது என்றும் அவர்களே சொல்லுகிறார்கள். அதைப்பற்றி எகனமிஸ்ட் ஜொர்னலில் வந்திருக்கிறது.

**In fact, 1955 was the best year for stock markets since 1947 it was better than even 1951, when the Korean boom was at its height.**

கொரியா யுத்தத்திற்குப் பிறகு ஸ்டாக் மார்க்கெட் ரொம்ப ஜோராக இருக்கிறது என்று அவர்களே சொல்லுகிறார்கள்.

In the coming years as the Second Plan with its bigger targets gets into swing, this tempo of production will certainly rise further, mainly due to the incentive provided by the large outlay under the Second Plan. Some of the encouraging factors are the trend of shift in emphasis in the Second Plan on increased expansion of industries, in particular the steps taken to utilize installed capacities more fully and to allow industries to modernize their equipment. All these should help economic development considerably.

இன்றைக்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப் பார்த்தவுடன் அவர்கள் தங்களுக்கு இன்னும் அதிகப்படியான லாபம் கிடைக்கப் போகிறது என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக லாபம் கிடைக்கப் போகிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதார நிலைமை அப்படி வரப்போகிறது என்று நினைக்கிறார்கள். ஸ்டாக் மார்க்கெட் விலை ஜாஸ்தியானால் பங்கு மார்க்கெட் விலை ஜாஸ்தியாக ஆகும் என்று நினைக்கிறார்கள். அதனால் நாடு ரொம்ப நன்றாக இருக்கிறது என்று அவர்கள் கணக்குப் போடுகிறார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் கணக்குப் போட்டு நிச்சயமாக லாபம் கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறார்கள். நாடு நல்ல நிலைமைக்கு வந்தால் கூடுமான வரையில் அவர்களுக்கு நல்ல பணம் கிடைக்கும் அந்த நிலைமை ஏற்படும் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் தனிப் பட்ட சிறு தொழில்களை வளர்க்க வேண்டும். நாம் இப்பொழுது அதற்கு என்று 200 கோடி செலவழிக்கப் போகிறோம். அதனால் நல்ல பலன் கிடைக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். நல்ல பலன் கிடைக்கப் போகிறதோ இல்லையோ அதைப்பற்றி தெரியவில்லை. அம்பர் சர்க்காவைப்பற்றி எவ்வளவோ சர்ச்சைகள் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. கைத்தொழில்களைப் பற்றி எவ்வளவு சர்ச்சைகள் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. அம்பர் சர்க்கா பிரயோசனப்படுமா அல்லது படாதா என்று இன்னும் சர்ச்சையில் இருக்கிறது. அதனால் நாட்டில் பெரும் முதலாளிகளுடைய தொழில்களை விஸ்தரிக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைப்பற்றி யோசிக்க

[Sri P. Ramamurthi] [3rd April 1956

வேண்டும். ப்ளானிங் கமிஷன், டெவலப்மெண்ட் கமிஷன் இவைகளில் இதைப்பற்றி பேசப்படுகிறது. எந்த வகையில் பார்த்தாலும் இதற்கு வேண்டிய. பணத்தை அடைய இந்நாட்டிலுள்ள பெரும் முதலாளிகள் அடைந்து வரும் லாபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு மேல் இருக்கக் கூடிய பணத்தை வரையறுக்கச் செய்ய வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். தொழிலாளர்களுடைய சம்பளம் இவைகளை யெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். போனஸ் வேண்டும் என்று சொல்லுகிறார்கள், அதற்கு வழி இல்லை. அதைப்பற்றி யோசனையில் இருக்கிறது. எல்லாவற்றையும் கட்டுப்பாடு செய்துவிட்டு அதற்கு மேல் வரக் கூடிய லாபத்தை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை, அதிகப்படியாக வரும் லாபத்தை நாட்டின் உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறேன்.

SRI S. DAIVASIGAMONEY : Sir, if poor and deserving caste-Hindus are prepared to go and live in the midst of Harijan colonies, would the Government give them all the facilities to do so?

THE HON. SRI B. PARAMESWARAN : What is the facility needed? They can go and remain there. If they are going to construct their houses in places which are not objectionable, there would not be any difficulty for the caste-Hindus to go and remain there. On the other hand, the Government will appreciate the attitude and encourage such action on the part of the caste-Hindus.

SRI S. RAMALINGAM : சேரியில் வாழ்கின்ற மக்கள் எல்லா விதமான வசதிகளையும் பெற்று, சுகாதார வசதியோடு வாழச் செய்ய, தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள் சேரியில் வசிப்பவர்களாக இருக்க வேண்டுமென சட்டத்தைத் திருத்த ஆலோசிப்பார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அங்கத்தினருடைய தாராள மனப்பான்மையை வரவேற்கிறேன். ஆனால் அப்படிச் செய்ய முடியும் என்பதற்கு இப்பொழுது வாக்குறுதி ஒன்றும் கொடுக்க முடியாது.

MR. SPEAKER : Question No. 3539 will be taken up to-morrow.

### *Appointment of District Munsifs*

* 3540 Q.—SRI A. M. RATHNASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) how many District Munsifs have been appointed from the Scheduled Castes during the last two years; and

(b) whether the ratio fixed for this community has been reached, and if not, what steps have been taken to reach this ratio?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) One, Sir.

(b) No, Sir. No candidate belonging to the Scheduled Castes and Scheduled Tribes was available for selection except the one selected in 1954. Under the rules as they stand, if a qualified and suitable candidate belonging to the Scheduled Caste, etc., is not available for appointment in the turn allotted to that caste in the prescribed cycle, the turn will lapse and the vacancy shall be filled by the next turn in the order of rotation. In the circumstances no steps could be taken to reach the ratio fixed in the Service rules.

SRI A. M. RATHNASWAMY : Sir, in view of the fact that a number of vacancies lapse because suitable candidates from the Scheduled Castes are not forthcoming for these appointments, will the Government consider the advisability of carrying forward these vacancies for another two years so that within that time there might be possibilities for Harijans to apply for these posts?



4th April 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM : Further posts will be available for them in the vacancies arising hereafter. If sufficient number of candidates to fill up those vacancies become available, I will be more than happy.

SRI K. VINAYAKAM : Sir, if suitable candidates from Scheduled Castes are not available for these jobs, to which class of people these posts go? Do they go to the backward communities?

THE HON. SRI C. SUBRAMANIAM : They go to all of them. It is all governed by a rotation already fixed. First the vacancies go to backward communities, then to Scheduled Castes, then to forward communities, etc. So, the vacancies go to backward communities as well as to non-backward communities.

### *Bed-strength in Government hospitals*

* 3541 Q.—SRI A. M. RATHNASWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) the number of beds available at present in the Government Hospital of Indigenous Medicine at Madras; and

(b) the number of beds added during the last 12 months?

THE HON. SRI A. B. SHETTY : (a) Two hundred and seventy.

(b) Sixty.

SRI S. DAIVASIGAMONEY : Sir, the new block of the hospital of indigenous medicine in Poonamalle High Road is exposed to public view. May I know from the Government whether they will take immediate steps to see that this is rectified?

THE HON. SRI A. B. SHETTY : Yes, Sir.

SRI N. K. PALANISAMY : Sir, the Hon. Minister was telling us that 270 beds were provided. Out of these 270 beds, may I know how many beds were allotted for allopathic treatment and how many for treatment by indigenous medicine?

THE HON. SRI A. B. SHETTY : Ninety-four beds are allotted for modern medicine and surgery. One hundred and twenty-eight beds are allotted for Ayurveda, Siddha, Unani and research work. Fifty beds are allotted for maternity cases.

SRI V. R. KRISHNA AYYAR : Sir, do Government intend to treat cases in this hospital of indigenous medicine with indigenous medicine or with integrated medicine?

THE HON. SRI A. B. SHETTY : That depends on the nature of the case.

SRI A. M. RATHNASWAMY: Sir, there is a general complaint that maternity cases are put on the floor in the hospital of indigenous medicine. Will the Government consider the desirability of giving them beds? Will the Government see that particularly maternity cases are not put on the floor?

THE HON. SRI A. B. SHETTY: Maternity cases cannot be refused admission. When cases in excess of the bed-strength provided seek admission, they have to be put on the floor.

SRI V. BALAKRISHNAN: Sir, are the patients in allopathic beds treated by allopathic doctors or by the doctors of indigenous medicine?

THE HON. SRI A. B. SHETTY: Patients in modern medicine ward are treated by modern medicine doctors.

9-50 a.m. SRI S. RAMALINGAM: May I know whether there is any difference between the indigenous system of medicine and allopathic system of medicine in the treatment given to maternity cases?

THE HON. SRI A. B. SHETTY: The maternity cases are attended to by modern medicine people.

* 3542 Q.—SRI V. R. KRISHNA AYYAR: Will the Hon. the Minister for Health be pleased to state whether the Government have sanctioned any increase in the bed strength of hospitals in Malabar?

THE HON. SRI A. B. SHETTY: Yes, Sir.

SRI V. R. KRISHNA AYYAR: May I know whether any increase in the bed strength has been sanctioned in the Tellicherry Hospital where a new block has recently been opened as a result of popular effort?

THE HON. SRI A. B. SHETTY: No, so far.

SRI V. R. NAGARAJAN: Are the Government aware of the serious deficiency in the bed strength of the Headquarters Hospital at Cuddalore and whether the Government will take steps to relieve the situation?

THE HON. SRI A. B. SHETTY: The hon. Member may put a separate question.

SRI K. P. GOPALAN: May I know the total bed strength of the various hospitals in Malabar? May I also know how many extra beds the Government propose to put up in the various hospitals in Malabar?

THE HON. SRI A. B. SHETTY: Sir, the bed strength in the Headquarters Hospital and the Women and Children Hospital at Kozhikode have been increased. So also, the bed strength in Ponnani and Badagara hospitals has also been increased.



SRI V. R. KRISHNA AYYAR: So far as I could gather, the principle was that where a block was added as a result of popular effort the bed strength was raised *pro tanto*. Such a construction had been put up by the public in the hospital at Tellicherry. May I know whether in this case the Government will increase the bed strength in this hospital by 10 or 12 beds?

THE HON. SRI A. B. SHETTY: Yes, Sir, to the extent the bed strength has been provided for by putting up a building, to that extent sanction will be given.

*Harassment of Harijans*

* 3542-A Q.—SRI M. KATTIMUTHU: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government are aware that the houses of the Harijans living in Seruvambar village in Vriddhachalam taluk were set fire to by the caste-Hindus;

(b) if so, whether it is a fact that the affected Harijans have submitted a petition to the District Superintendent of Police, South Arcot district, on 2nd August 1955 in the matter; and

(c) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) to (c) I am answering the question on the assumption that the hon. Member is referring to the burning of some Harijan huts at Siruvambar on the 25th of August 1955, regarding which, the Harijans gave a mahazar through the hon. Member to the District Superintendent of Police, South Arcot, on the 1st of September 1955.

It is a fact that four Harijan huts were burnt on the 25th of August 1955. The occurrence was registered as a case of mischief by fire at the Mangalampet Police Station and it was investigated by the Sub-Inspector, Mangalampet, and the Inspector of Police, Ulundurpet. The case was however reported as undetectable, as there was no sufficient evidence. It cannot therefore be said that the caste-Hindus had committed the mischief.

Apart from the mahazar to which I have just referred, the Harijans have not given any other petitions to the District Superintendent of Police, South Arcot, in the matter.

SRI M. KATTIMUTHU: இந்த சேரியிலிருந்து ஐந்து வீடுகளை இந்த ஊரிலுள்ள கோனார்கள் எரித்தார்கள் என்பதற்கு தகுந்த ஆதாரத்தோடு சாட்சிகள் இருக்கின்றன. போலிசார் சரியாக விசாரிக்கவில்லை என்ற காரணத்தினால் அந்த கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது. போனவாரம்கூட நான் சென்று அந்த வீட்டைப் பார்த்தேன். கோனார்கள் எரித்தார்கள் என்பதற்கு தக்க சாட்சிகள் இருக்கின்றன. ஆதலால் இதை சர்க்கார் புனராலோசனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அம்மாதிரி நடவடிக்கை எடுக்காவிட்டால் இன்னும் இருக்கக்கூடிய வீடுகளை அந்தக் கோனார்கள், சரியான தொண்டு ஊழியம் செய்யவில்லை என்று கொளுத்தி விடுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் விசாரணை செய்தார். பிறகு கனம் அங்கத்தினர் டி.எஸ்.பி.-யிடம் விண்ணப்பம் கொடுத்ததால் அதற்கு மேல் போலீஸ் இன்ஸ்பெக்டர் தகுந்த ருசு இல்லை என்று கேசைத் தள்ளுபடி செய்துவிட்டார். ஆறு மாதத்திற்கு முன்பு நடந்த ஒரு கேசுக்கு இப்பொழுது சாட்சியங்கள் கிடைப்பது என்றால் அதை எவ்வளவு தூரம் நம்புவது, கோர்ட்டில் எவ்வளவு தூரம் நிற்கும் என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். தீ வைத்த கேசுக்கு ருசு கிடைப்பது என்பது எப்போதும் கடினம் என்பதை கனம் அங்கத்தினர் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

### *Kapaleeswarar Temple, Mylapore*

* 3542-B *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state whether any Harijan has been appointed as a trustee for the Kapaleeswarar temple at Mylapopre, Madras?

THE HON. SRI B. PARAMESWARAN : No, Sir.

SRI A. RATNAM : இந்தக் கோவிலுக்கு எத்தனை டிரஸ்டிகள் இருக்கிறார்கள். கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு ஹரிஜனங்கள் மனுக்கள் கொடுத்தது என்ன ஆயிற்று. இந்தக் கோவிலில் டிரஸ்டியாக இருப்பதற்கு எந்த எந்தத் தகுதி தேவை. கோவிலில் டிரஸ்டிகளை அதிகமாக்குவதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : இந்தக் கோவிலுக்கு மூன்று டிரஸ்டிகள்தான் போடவேண்டும் என்று ஸ்கீமில் இருக்கிறது. அதை மாற்றி அமைத்து ஐந்து பேருக்குக் கொடுக்கலாம் என்பதை பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம். ஆகவே இப்பொழுது ஹரிஜனங்களைப் போடவேண்டுமென்றாலும் அந்த ஸ்கீமை மாற்றி அமைக்கவேண்டும். அதை மாற்றி அமைக்கும்போது கவனிக்கலாம்.

### *Traffic congestion in the City*

* 3542-C *Q.*—SRI A. M. RATHNASWAMY : Will the Hon. the Minister for Religious Endowments and Transports be pleased to state—

(*a*) whether the Government have received from the Corporation of Madras an application for loan recently to carry out improvements to relieve traffic congestion at important road junctions in the City; and

(*b*) if so, the amount of the loan?

THE HON. SRI B. PARAMESWARAN : (*a*) & (*b*) The Corporation of Madras has not applied for a loan but has asked for an *ex-gratis* grant of Rs. 2 lakhs during 1956–57 to carry out improvements to traffic arrangements in the Madras City.

### *Engineering College, Guindy*

* 3542-D *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Government have asked this Government during 1955 to hand over the Guindy Engineering College to them for converting it into a higher technological institute;



(*b*) if so, the action taken by this Government in the matter; and

(*c*) whether this Government are taking any steps to convert this college into a higher technological institute and, if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) It was first decided that the College of Engineering, Guindy, might be handed over to the Government of India, provided that the Government of India reserved certain seats every year in the under-graduate course for students from this State and also the existing staff in the College was absorbed. As these conditions were not fully accepted by the Government of India, this Government decided to drop the proposal to hand over the College to the Government of India.

On further reconsideration this Government have agreed to hand over the Engineering College at Guindy subject to the condition that specific reservation of admission for 100 students from this State is made in the College for a period of five years, and that an outright grant is made by the Central Government to enable the State Government to open a new engineering college. The matter will be discussed at the next meeting of the Southern Regional Committee of the All-India Council for Technical Education.

### *Official Language Commission*

* 3542-E *Q.*—SRI A. M. RATHNASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state whether it is a fact that this Government have changed their stand on the question of official language after the visit of the Official Language Commission to Madras recently and are now prepared to continue the use of English as the language medium in technical and professional colleges till 1965 and if so, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : The views of this Government in regard to the language problem have been set out in the Explanatory Memorandum prepared in connexion with the Questionnaire issued by the Official Language Commission, copies of which have already been supplied to all Members of the House. This Government have not changed their stand on the question of official language since the visit of the Commission to Madras.

As regards the medium of instruction in scientific and professional colleges, which is not the same thing as the Official Language, attention of the Member is invited to paragraphs 24 to 28 of the Explanatory Memorandum referred to. The question of changing the present medium of instruction in Colleges referred to in paragraph 28 in still under the consideration of the Government.

*Pension rules for aided school teachers*

* 3542-F Q.—SRI M. NARAYANA KURUP: Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the answers furnished to question No. 3022 on 27th January 1956, whether the Government have received the remarks of the Accountant-General, Madras, on the pension rules framed for the aided school teachers?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir. But the Accountant-General has addressed the Auditor-General of India for concurrence for undertaking the work relating to the Pension Scheme and his further report in that matter is awaited. I may also tell the House that I had a discussion with the Auditor-General. He has orally agreed to the scheme. Only formal concurrence from him is awaited.

*Raja's College, Pudukkottai*

* 3542-G Q.—SRI V. BALAKRISHNAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there was a course of studies for Minor Engineering in the Raja's College of Pudukkottai Division, Tiruchirappalli district;

(b) when such a course was abolished; and

(c) the reasons for such abolition?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) to (c) The course in 'Electrical Engineering' in the Raja's College, Pudukkottai, under Part III of the Intermediate was discontinued from the academic year 1955–56, as it was not attracting students and was becoming very uneconomic.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

### MESSAGE FROM THE COUNCIL.

MR. SPEAKER: I have to announce to the House the following message, dated the 3rd April 1956, received from the Hon. the Chairman, Madras Legislative Council:—

"In accordance with rule 115 of the Madras Council Rules, I transmit a copy of the Pudukkottai (Settlement of Inams) Amendment Bill, 1956 (L.C. Bill No. 2 of 1956), as passed by the Legislative Council on the 3rd April 1956 and signed by me for the concurrence of the Assembly."



## III. GOVERNMENT MOTION.

10 a.m

### (1) DRAFT OUTLINE OF THE SECOND FIVE-YEAR PLAN—*cont.*

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I think once again I will have to ask the indulgence of the non-Tamil Members because I think I will have to make my reply in Tamil. I am sure particularly in view of the speech made by the Leader of the Opposition, it is necessary that many of the hon. Members should know what the attitude of the Government is with reference to the various suggestions made by the Leader of the Opposition. That is the excuse that I am making for my reply in Tamil even though I find it a little bit difficult to express myself in Tamil in view of the fact that, as far as this subject is concerned, I have been thinking in English and I have been speaking in English. But still, I shall again make an attempt to make the hon. Members understand my point of view and the Government point of view.

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திற்கு நீண்ட பதில் கொடுக்கவேண்டியது அவசியமில்லை என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் கனம் எதிர் கட்சித் தலைவர் ஸ்ரீ. பி. ராமமூர்த்தி பேசியதற்குப் பிறகு, கொஞ்சம் விவரமாகவே பதில் சொல்ல வேண்டும் என்ற அபிப்பிராயம் எனக்கு ஏற்பட்டது. அதற்குக் காரணம் அவர் சொல்லிய பல விஷயங்களிலே எனக்கும் அவருக்கும் அபிப்பிராய மாறுபாடு இருக்கிறதென்பது அல்ல. அவர் சொல்லிய பல விஷயங்களை நான் முன்பே ஒப்புக்கொண்டிருக்கிறேன். இப்போதும் நான் அதை மறுத்துச் சொல்ல விரும்பவில்லை. ஆனால், அதே காரணத்தால், நான் இப்போது சில விஷயங்களை விவரமாக விளக்கிச் சொல்வது அவசியமாகிறது; ஏனென்றால், சில விஷயங்களை ஒத்துக்கொள்ளும்போது, மற்ற விஷயங்களையும் ஒத்துக் கொண்டால் நன்றாக இருக்குமே என்று பல பேருக்கு சந்தேகங்கள் இருக்கலாம். ஆகவே, ஸ்ரீ ராமமூர்த்தி அவர்கள் சொன்னதையெல்லாம் ஒரேயடியாக நான் எதிர்ப்பதாக இருந்தால், நீண்டபிரசங்கம் செய்வது அவசியமில்லை; அவர்கள் சொன்னதில் சில விஷயங்களை மட்டும் ஒத்துக் கொள்வதால்தான், மற்ற விஷயங்களில் மாறுபாடுகள் இருப்பதற்குக் காரணம் என்ன என்று தெளிவாகச் சொல்வது அவசியமாகிறது. இரண்டு பேர்களும் சொல்லும் விஷயங்களையும் கனம் அங்கத்தினர்கள் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதும் அவசியமாகிறது. இந்தக் காரணங்களால்தான், கொஞ்சம் நேரமானாலும்கூட, விஷயங்களை விளக்கமாகச் சொல்லவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

முதலில் ஸ்ரீ ராமமூர்த்தி அவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஏதோ, அவர் என்னுடைய பேச்சில் கொஞ்சம் நல்ல அம்சங்கள் இருந்ததென்று சொன்னார் என்பதற்காக, அந்தப் பாராட்டுதலை அப்படியே திருப்பி, அவருக்கு பெருமை கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு நான் இப்படிச் சொல்லவில்லை. அப்படிச் செய்வது பற்றி "**Mutual Admiration Society**" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அந்த மாதிரியாக என்னுடைய பாராட்டுதலை அர்த்தம் செய்துகொள்ள வேண்டியதில்லை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது, ஸ்ரீ ராமமூர்த்தியின் சில அபிப்பிராயங்களை நான் ஒத்துக்கொள்ள முடியாமல் இருந்தாலும்கூட, அவரை நான் பெருமை பொருந்தியவராகவே என்றைக்கும் நினைத்து வந்திருக்கிறேன் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே "**Mutual Admiration Society**" என்று அர்த்தம் எடுத்துக்கொள்வதென்றால், அது இப்போது ஏற்பட்டதல்ல; ரொம்ப காலத்திற்கு முன்பாகவே ஏற்பட்டது என்று சொல்லிக்கொள்கிறேன்.

[Sri C. Subramaniam] [4th April 1956

நான் இப்போது சொல்லப்போகிற விஷயத்தை கனம் அங்கத்தினர்கள் கொஞ்சம் கவனித்துக் கேட்கவேண்டும்; ஏனென்றல் முக்கியமான அடிப்படையான விஷயங்களில் இருக்கின்ற மாறுதல்களைப்பற்றிச் சொல்லப் போகிறேன். ஸ்ரீ ராமமூர்த்தி பேசும்போது, முன்பு நகல் திட்டத்தில் குறிப்பிட்டிருந்த குறிக்கோள்களையும் இப்போது ஏற்பட்டிருக்கும் மாறுதல்களையும் எடுத்துக்காட்டி, முதலாளிகளின் பிரசாரத்தால்தான் இந்த மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கூறினர். "திட்டக் கமிஷனில் உள்ளவர்களின் அபிப்பிராயத்தையோ, அல்லது கவர்ன்மெண்டில் உள்ளவர்களின் அபிப்பிராயத்தையோ மாற்றக்கூடிய சக்தியை முதலாளிகள் பெற்றிருக்கும் காரணத்தால்தான் இந்த மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்பு சொல்லப்பட்ட யோசனைகளையே அமுலுக்குக் கொண்டுவரும்படி செய்வதற்காக, மக்களின் சக்திகளையெல்லாம் சேர்த்து, நமது சர்க்காருக்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கவேண்டும். ஆகவே நாம் எல்லோரும் ஒன்றுபட்டிருக்கவேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, முதலாளிகளுக்குச் சலுகைகள் கொடுப்பதற்காக இந்த நகல் திட்டத்தில் ஒரு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னல், சில பேர்கள் நம்பிவிடலாம். இதற்குத் தகுந்த முறையில்தான் முதலாளிகளின் பத்திரிகைகளும் எழுதி வந்திருக்கின்றன. முதலாளிகளின் பத்திரிகைகள் எழுதிவந்த விதத்தைப் பற்றியும் ஸ்ரீ ராமமூர்த்தி எடுத்துக் காண்பித்தார். ஆனல் என் அபிப்பிராயத்தில், தங்களுக்கு அவசியமான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன என்று முதலாளிகள் சந்தோஷப்பட்டால், உடனே முதலாளிகளுக்குச் சலுகைகள் கொடுப்பதற்காக இந்த மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டுவிட்டனவே என்று மனவருத்தப்படுவதானது அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வருவதாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த அபிப்பிராய வித்தியாசத்திற்குக் காரணங்கள் என்ன என்பதைப்பற்றி நாம் முதலில் யோசிக்கவேண்டும். இதற்கு அடிப்படையான காரணங்கள் இருக்கின்றன என்பதையும் நான் முதலில் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். நான் "அமெரிக்காவில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டது. ரஷ்யாவிலும் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டது. இந்த இரண்டு தேசங்களையும் நாம் பின்பற்ற முடியாது" என்று அன்றைக்குச் சொன்னேன். அதைப்பற்றி ஸ்ரீ ராமமூர்த்தி அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆனல் நான் சொன்னதிலுள்ள பூரா அர்த்தத்தையும் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. எந்த உள் அர்த்தத்தோடு நான் அந்த வார்த்தைகளைச் சொன்னேனே அந்த அர்த்தத்தை அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டு, நான் சொன்னதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாது போய்விட்டார்கள். முதலாளித்துவத்தை அடிப்படையாகக்கொண்டு அமெரிக்காவில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டது என்பது தான் நான் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம். தனிப்பட்டவர்கள் தங்கள் இஷ்டம்போல மக்களை உபயோகப்படுத்தித் தொழிலபிவிருத்தி செய்யலாம் என்று அமெரிக்காவில் முதலாளிகளுக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டு தொழிலபிவிருத்தி ஏற்பட்டது. நாட்டின் பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாதென்ற கட்டுப்பாடு இல்லாமல், அவரவர்கள் இஷ்டம்போல் முதலாளித்துவம் பெறுவதற்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டு, அமெரிக்காவில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டது. இந்த அடிப்படையில் அங்கே பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டது. ஆனலும், அமெரிக்காவில் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையும், பாமர மக்களின் வாழ்க்கை நிலையும் உயர்ந்ததாகவே இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. அமெரிக்காவில் பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்வதற்கு நான் தயாராயிருக்கிறேன். அமெரிக்காவில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும்கூட, அங்குள்ள பாமர மக்களின் வாழ்க்கை நிலை வேறெந்த நாட்டிலும் உள்ள பாமர மக்களின் வாழ்க்கை நிலையைவிட மிகவும் உயர்ந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். ரஷியப் பொருளாதார நிபுணர்களும் இதை ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். ஆனல் அமெரிக்காவில், 200 அல்லது 250 வருஷங்களாக பாமர மக்கள் கஷ்டப்பட்டு உழைத்ததன் காரணமாக, பாமர மக்கள் அடிமைகளாக உபயோகிக்கப்பட்டதின் பேரில்,



4th April 1956] [Sri C. Subramaniam]

பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையை அனுசரித்து நமது நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது என்றுதான் நான் சொன்னேன்; அந்த நாட்டில் போட்ட திட்டங்களின் அடிப்படையில் நமது நாட்டில் திட்டங்கள் போடவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

ரஷியாவிலும் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அங்கே "**Totalitarian Planning**" என்ற முறையில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. அதாவது, சர்வாதிகார முறையில் அங்கே பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டது. "**Totalitarian**" என்ற ஆங்கிலப் பதத்திற்கு, தமிழில் "சர்வாதிகார முறை" என்பதை சரியான பதமாக எடுத்துக்கொள்ள முடியாது. இருந்தாலும், நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்று சொல்வதற்காக, அந்த பதத்தை உபயோகப்படுத்துகிறேன். ஒரு **Totalitarian regime**-ல் திட்டங்கள் எந்த முறையில் நிறைவேற்றப்பட்டனவோ, அந்த முறையில் நமது நாட்டில் திட்டங்களை நிறைவேற்ற முடியுமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். நமது நாட்டில் அந்த முறையைக் கையாளக்கூடாதென்று நாம் முடிவு செய்திருக்கிறோம். நமது நாட்டில் ஸோஷலிஸ சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்று நாம் தீர்மானித்திருக்கிறோம். அதாவது, ரஷ்யாவின் லட்சிய சமுதாயம் எதுவோ, அந்த லட்சிய சமுதாயத்தை நமது நாட்டில் அமைக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறோம். அந்த சமுதாயத்தை அடைவதற்கு, நாம் சர்வாதிகாரப் பாதையில் செல்வதா அல்லது சமாதானப் பதையில்—ஜனநாயகப் பாதையிலேயே—செல்வதா என்பதைப்பற்றி யோசிக்கும்போது, சமாதானப் பாதையிலேயே, ஜனநாயகப் பாதையிலேயே செல்லவேண்டுமென்பதை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். சமாதானப் (ஜனநாயக) பாதையில் செல்வதா, அல்லது சர்வாதிகாரப் பாதையில் செல்வதா என்பதுதான் இன்றைக்கு உலக அரங்குகளிலெல்லாம் இருக்கின்ற பிரச்னை. ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் இடையில் இருக்கின்ற முறண்பாடுகளையும், சச்சரவுகளையும்கூட சமாதானமான முறையில் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று நாம் சொல்கிறோம். நமது நாடு சம்பந்தப்பட்டமட்டில், நமது நாட்டிற்கும் மற்ற நாடுகளுக்கும் இடையில் உள்ள தகராறுகளை மட்டுமின்றி, இங்கே உள் நாட்டிலேயே உள்ள பிரச்னைகளையும் தீர்ப்பதற்காகச் செய்யவேண்டிய மாறுதல்களையும் இங்கே சமாதானமான முறையில் செய்யவேண்டுமென்று நாம் ஒத்துக்கொண்டிருக்கிறோம்.

10-10 a.m.

இப்பொழுது கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இதிலே அபிப்பிராய பேதம் இருக்காது என்று நான் நம்புகின்றேன். ரஷ்யாவிலே ஏற்பட்டிருக்கிற மாறுதலை அனுசரித்து, இப்பொழுது இங்கு கம்யூனிஸ்டுக் கட்சியினர் செய்திருக்கக்கூடிய தீர்மானங்களைப் படித்துப்பார்க்கும்போது, ஓரளவு சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கு பலாத்காரம் தேவையில்லை, உள்நாட்டுக் கலகம் தேவையில்லை, ஒரு வகுப்புக்கும் இன்னொரு வகுப்புக்கும் வர்க்கப் போராட்டம் (class struggle) அவசியமில்லை என்ற கொள்கையை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள் என்று தான் நான் நினைக்கவேண்டியிருக்கிறது. நான் அவர்களுடைய தீர்மானங்களை ஒருவேளை தப்பாக அர்த்தம் பண்ணிக்கொண்டிருக்கிறேனே என்பது எனக்குத் தெரியாது. இப்பொழுதுதான் ஆரம்பமாக இருப்பதால், போகப் போக அவர்களுடைய லட்சியங்கள் என்ன என்பது பூர்ணமாக விளங்கும். அவர்களுக்குள்ளேயே குழப்பமான நிலை இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். ஆனல், ஓரளவு இன்றைக்கு இந்த மாறுதலை ஒப்புக்கொண்டிருக்கிருர்கள் என்றுதான் நான் நம்புகிறேன். ஆனல், திட்டமான அளவில் ஓரளவு ஒப்புக்கொள்வதற்கு வந்தாலும், அவர்களிடமே குழப்பமான நிலைமை இருக்கிற காரணத்தால், அவர்கள் பேசுவதிலிருந்து முன்பு கொண்டிருந்த வர்க்கப் போராட்ட அடிப்படையில்தானே என்று நினைக்கவேண்டியிருக்கிறது. வர்க்கப் போராட்டத்தின் மூலம் தான் முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்கிற அடிப்படையிலேதான் அவர்கள் இன்னும் பேசிக்கொண்டு வருகிருர்கள். இன்னும் நினைத்துக்கொண்டு வருகிருர்கள், அதைத் தவிர்க்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஜனநாயக முறையிலே, சமாதான முறையிலே முன்னேற்றம் ஏற்பட

வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய லட்சியம். அதுதான் அரசாங்கத்தினுடைய லட்சியமும் ஆகும். அவர்களுடைய கொள்கை நம்முடைய திட்டத்தை எப்படிப் பாதிக்கிறது என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்கவேண்டும்.

பொருளாதாரத் துறையில் நம் நாடு முன்னேறவேண்டுமானால், இயந்திரங்களையே உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரச்சாலைகளை நாம் உண்டாக்கியாகவேண்டும் என்று நான் முதலிலே எடுத்துச் சொன்னேன். அதை இன்றைக்கு எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அந்த இயந்திரசாலைகளை நாம் உண்டாக்குவோமானால், உடனடியாக மக்களுக்குப் பயன்தரக்கூடிய பொருள்கள் அதிலே உற்பத்தியாகாது. பயனை முழுவதும் அனுபவிப்பதற்கு பத்து, பதினைந்து வருஷங்கள் ஆகும். ஆகவே, எவ்வளவுக்கு எவ்வளவு இந்த கன ரகத் தொழிற்சாலைகளிலே நம்முடைய பணத்தையும் உழைப்பையும் பொருளையும் நாம் கொண்டு செலுத்துகிறோமோ அந்த அளவுக்கு நாட்டின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருள்கள் உற்பத்தி செய்யக்கூடிய அளவு குறைந்துதான் ஆகும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. எவ்வளவு தூரம் மக்களுடைய அன்றாடத் தேவையைப் பூர்த்தியாக்க முடியுமோ அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். எவ்வளவு தூரத்திற்குப் பிற்காலத்திலே பலன் தரக்கூடிய கன ரகத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு நம்முடைய உழைப்பையும், பொருளையும், வசதியையும், சக்தியையும் உபயோகப்படுத்தவேண்டும் என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது.

சர்வாதிகார நாடுகளிலும்கூட ஒரு அளவுக்கு மீறி மக்களுடைய தேவைகளைக் குறைத்துவிட முடியாது. ஓரளவுக்காவது நம் மக்களுடைய உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்துதான் ஆகவேண்டும். ஆனால், சர்வாதிகார அமைப்பிலும், **totalitarian** அமைப்பிலும் மக்களுடைய தேவைகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் சுலபம். ஆனால், ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு சமாதான முறையிலே முன்னேற வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கும்போது மக்களுடைய தேவைகளைக் கட்டுப்படுத்துவது என்பது ஓரளவுக்குக் கஷ்டம். அதற்கு மக்களுடைய சம்மதமும் ஓரளவு இருந்தாகவேண்டும். மக்களுக்கு இருக்கிற தரித்திர நிலைமையையும் உத்தேசித்து, எவ்வளவு தூரம் கட்டுப்படுத்த முடியும் என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். இதுதான் இன்றைக்குக் கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய நோக்கத்திற்கும், காங்கிரஸ் கட்சியினுடைய நோக்கத்திற்கும் இருக்கிற அடிப்படையான வித்தியாசம்.

அப்படிப் பார்க்கும்போதுதான், நாம் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே, இந்த திட்டத்தின் மூலமாக, 1,200 கோடி ரூபாய்க்கு நோட் அடிப்பதன் மூலமாக இன்னும் பல தொழில்களை ஆரம்பிப்பதற்காக பணத்தை சமுதாயத்திற்குக் கொடுக்கும்போது, சமுதாய மக்களிடத்திலே பணம் அதிகமாக இருக்கும். அப்படி பணம் அதிகமாக இருக்கும்போது, சர்வாதிகார முறையிலே கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி மக்களுடைய வாங்கும் சக்தியைக் குறைத்தாகவேண்டும். பொருள் இவ்வளவு தான் இருக்கிறது, ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் பொருள்களை ஒருவரும் விற்கக் கூடாது, ஒரு குறிப்பிட்ட அளவு விலைக்குமேல் ஒருவரும் பணம் கொடுத்து வாங்கி உபயோகிக்கக்கூடாது என்று கட்டுப்பாடு ஏற்படுத்துவது ஒரு முறை. அந்தக் கட்டுப்பாட்டை எவ்வளவு தூரம் நம்முடைய நாட்டிலே இருக்கும் சூழ்நிலையில் வெற்றிகரமாக நடத்தமுடியும் என்பதற்கு நாம் பரீட்சை நடத்திப் பார்த்திருக்கிறோம். அவ்வளவு வெற்றிகரமாக நடத்த முடியாத நிலைமையில்தான் இருந்திருக்கிறோம். வேறு நாடுகளைப்போல், ஒருவனை "ப்ளாக் மார்க்கெட்" செய்தவுன் என்று சர்க்கார் நினைத்தால் அவனை எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் சுட்டுக் கொன்றுவிடலாம் அல்லது ஜெயிலில் பத்து வருஷம் போட்டுவிடலாம், அந்தமான் தீவுக்கோ வேறு கண்காணாத இடத்திற்கோ அனுப்பிவிடலாம். கள்ளமார்க்கெட் செய்தவனை சமூகத் துரோகியாகக் கருதி அவ்வளவு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தால்தான் கட்டுப்பாடுகளை நல்ல முறையில் அமுலுக்குக்





கொண்டுவரமுடியும். இல்லாவிட்டால் முடியாது. ஆகையால்தான், இப்பொழுது யோசித்துப் பார்த்து கனரகத் தொழிற்சாலைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. கனரகத் தொழிலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஜனங்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உற்பத்தி குறைந்துதான் ஆகும். இரண்டுக்கும் இருக்கக்கூடிய முரண்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்த்து, சமாதான முறையிலே எப்படிச் செய்வது என்பதை யோசித்துப் பார்த்த பிற்பாடுதான், சிறிய மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

ஏதோ நேரு அவர்கள் லட்சியவாதியாக இருந்தாலும், அவருக்கு அறிவுக் கூர்மை இல்லை, அதனால் மற்றவர்கள் அவரை ஏமாற்றிவிடுகிறார்கள் என்று நினைப்பது தவறு. கனம் அங்கத்தினர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தனிப்பட்டவர்கள் அதுமாதிரி அங்கு ஒரு சிலர் அதற்கு ஒப்புக்கொண்டாலும்கூட, நிதி அமைச்சர் ஸ்ரீ தேஷ்முக் அவர்களும், வர்த்தக மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களும், திட்டக் கமிஷனில் இருக்கிறவர்களும் முதலாளிகளுடைய ஏஜெண்டுகளாக இருந்து திட்டத்தை ஏதோ உருத் தெரியாத முறையில் மாற்றி பிரதம மந்திரி நேரு அவர்களையும் மற்றவர்களையும் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு சிலர் சொன்னால் அவர்கள் விஷயம் தெரியாமல் பேசுகிறார்கள் என்றுதான் நினைக்கவேண்டும் என்று நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பிரச்னையை நன்றாக அலசிப் பார்த்து எவ்வளவு தூரம் நாம் கனரகத் தொழிலில், பின்னால் பலன் தரத்தக்க முறையிலே, எவ்வளவு வசதிகளையும், பொருளையும், உழைப்பையும் இதிலே செலுத்துவது என்று தீர்மானித்து, அதற்குமேல் மக்களுடைய உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எவ்வளவு தூரம் நாம் முயற்சி செய்யவேண்டும், வசதியையும் பொருளையும் மற்றவைகளையும் உபயோகப்படுத்தவேண்டும் என்பதைப்பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலையில் இருக்கிறோம். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், நாம் ஜனநாயக முறையிலே முன்னேற வேண்டும், மக்களிடத்திலே அதிகக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்து அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது என்ற நிலைமையில், இருக்கும்போது, உடனடியான அன்றாடத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு நாம் ஓரளவு முயற்சி செய்துதான் ஆகவேண்டும்.

மக்களின் அன்றாடத் தேவைகளை எப்படி உற்பத்தி செய்வது என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்கவேண்டும். சிறு தொழில்கள் மூலமாக குடிசைக் கைத்தொழில்கள் மூலமாக செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால், அங்கத்தினர்களுக்கு ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குப் பெரிய தொழிற்சாலைகளை கட்டுவதற்கு நமக்கு வேண்டிய வசதி இருக்கிறது. அதற்கு வேண்டிய அனுபவம் நமக்கு இருக்கிறது. ஆனால், சிறு கைத்தொழில்கள் குடிசைத் தொழில்கள் மூலம் மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவேண்டிய பொருளை உற்பத்தி செய்யவேண்டும், அதை ஏற்பாடு செய்யவேண்டுமென்று நாம் நினைக்கும்போது, அதற்கு வேண்டிய அனுபவம் பெற்ற உத்தியோகஸ்தர்களையும், அனுபவம் பெற்ற தொழில் நிபுணர்களையெல்லாம் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய ஒரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவதும் எவ்வளவு கஷ்டமாக இருக்கிறதென்பதை ஒன்றிரண்டு மாதங்களாக நாம் தினசரி பார்த்துக்கொண்டு வருகிறோம். சிறு கைத்தொழில்களை நிர்வகிப்பதற்கு, குடிசைத் தொழில்களை இன்னும் பரப்புவதற்கு, எந்த எந்த முறையிலே நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி இப்பொழுது ரொம்ப தீவிரமாக அந்த இலாகா அமைச்சரவர்களும் அதிலே இருக்கக்கூடிய அதிகாரிகளும், நிதி இலாகாவும், நிதி இலாகாவுக்கும் திட்டக் கமிஷனுக்கும் எனக்குச் சம்பந்தம் இருப்பதால் நானும், எல்லோருமாகச் சேர்ந்து யோசித்துக்கொண்டிருக்கிறோம். இதில் இருக்கும் கஷ்டம் என்னவென்றால், தொழில் நிபுணர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. அதிலும் அனுபவம் பெற்றவர்களைக் கண்டுபிடிப்பது இன்னும் கஷ்டமாக

இருக்கிறது. இது எவ்விதம் அமையப் போகிறது, எவ்வளவு உற்பத்தி
செய்ய முடியும் என்பதைப்பற்றி தீர்க்கமாக முடிவு சொல்வதற்கு இய
லாமல் இருக்கிறது. ஆகையால்தான், கார்வே கமிட்டியை நியமித்தார்
கள். அந்தக் கமிட்டியினர் இது சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் ஆலோ
சித்துப் பார்த்து, எவ்வளவு தூரம் சிறு தொழில்கள் மூலமாக, குடிசைத்
தொழில்கள் மூலமாக, கிராம கைத்தொழில்கள் மூலமாக ஜனங்களுடைய
அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முடியும், எவ்வளவு உற்
பத்தி செய்யமுடியும் என்று கணக்கிட்டு அதைப்பற்றி ஆலோசனை செய்
வதற்கு அவர்களுடைய கமிட்டி அறிக்கை இன்று நம்மிடம் இருக்
கிறது. அதை வைத்துக்கொண்டு பார்த்தாலும் அவர்கள் இம்மாதிரி
செய்யலாம். ஆனால், எவ்வளவு தூரம் பலன் கொடுக்கப் போகிறது
என்பதைப்பற்றி அவர்கள் இன்னும் தீர்க்கமாகச் சொல்வதற்கில்லை.
ஏனென்றால், அவர்களுக்கு அனுபவம் இல்லை. போதிய புள்ளி விவரங்கள்
நம்மிடம் இல்லை. அப்படியிருக்கும்போது பூராவுக்குமே சிறு தொழில்
களையும், குடிசைத் தொழில்களையும் நம்பி, நம் மக்களுக்கு வேண்டிய
துணி, நம் மக்களுக்கு வேண்டிய வீடுகள், கல்வித் துறைக்கான வசதிகள்
வைத்தியத் துறை வசதிகள் இதுபோன்றவைகளை இதிலிருந்தே செய்வ
தற்கு முடியுமா என்பது சந்தேமகமாக இருக்கிறது. அப்படிச் சந்தேகமாக
இருக்கும்போது சந்தேகத்திலே விட்டுவிடலாமா, வேறு இயந்திரத் தொழில்
கள் மூலமாவது இன்னும் இந்த உடனடியான தேவைப் பொருள்களை
உற்பத்தி செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டாமா என்பதை
யோசித்த பிறகு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். பூராவையுமே நாம்
குடிசைத் தொழில்கள் மூலமாகவே உற்பத்தி செய்யமுடியும் என்று
பரீட்சை மூலமாகத் துணிவு ஏற்படுகிறவரை இயந்திரத் தொழில்களை நாம்
விட்டுவிடக்கூடாது என்ற முறையில்தான் இயந்திரத் தொழில் மூலமாகவும்
ஓரளவு உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அதற்கும் வழி
வகை செய்தாகவேண்டும் என்று ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்
ஏற்பட்டிருக்கிறது.

10–20 a.m. ஏதோ முதலாளிகளுக்கு சலுகைகள் கொடுப்பதாக இல்லை. சமுதாய
அமைப்பில் மக்களிடத்தில் தேவைகள் அதிகமாக இருக்கிறது. அதை
ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். இப்பொழுது அதை ஒப்புக்கொள்ள
வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ப்ளானிங் கமிஷன், டெவலப்
மெண்ட் கவுன்சிலில் இருக்கக் கூடிய அங்கத்தினர்கள் முதலாளிகள்
பக்கம் சாய்ந்து விட்டார்கள் என்று சொல்வது விஷயத்தைத் தெரிந்து
கொள்ளாமல்தான் சொல்லுகிறார்கள் என்று சொல்ல வேண்டியதாக
இருக்கிறது. அப்படிக் குற்றம் சாட்டுவதும் சரியல்ல. நல்ல முறையில்
உதவி செய்யவேண்டும் என்ற அபிப்பிராயத்தில்தான் அவர்கள் இன்
றைக்கு உழைத்து வருகிறார்கள். அதை நம்புவதற்கும் நான் தயாராக
இருக்கிறேன். ஆனால் குற்றம் சாட்டுகிறவர்கள் எல்லோரும் விஷயத்தைத்
தெரிந்து கொள்ளவில்லை என்றுதான் நான் சொல்லுகிறேன். இது
ஒரு விஷயம்.

அடுத்தபடியாக கனரகத் தொழில் அடிப்படையில் இப்பொழுது
உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியதாக இருக்
கிறது. எதற்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ
அவைகளுக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்
என்று அதற்கு வேண்டிய மூலதனமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது
முதல் காரணம். இரண்டாவதாக நாம் வெளிநாடுகளிலிருந்து ஏராள
மான பொருள்களை பெற வேண்டியதாக இருக்கிறது. இன்னொரு பக்கம்
இரும்பு, உருக்குப் பொருள்களை நாம் பெற வேண்டியதாக இருக்கிறது.
அவைகளை நாம் வெளிநாடுகளிலிருந்து தருவிக்க வேண்டுமானால்
அதற்கு பதிலாக நாம் இங்கேயிருந்து சில பொருள்களை ஏற்றுமதி செய்ய
வேண்டியதாக இருக்கிறது. அப்படி இங்கிருக்கும் பொருள்களை ஏற்று
மதி செய்துவிட்டு அதற்கு பதிலாக அங்கிருந்து நமக்கு வேண்டிய
பொருள்களை நாம் வாங்கவேண்டியதாக இருக்கிறது. அப்படி இங்கிருந்து
பல பொருள்களை ஏற்றுமதி செய்தால்தான் அங்கிருந்து நாம் சில
பொருள்களை வாங்கமுடியும். அப்படி இன்றைக்கு நாம் ஏற்றுமதி
செய்யக்கூடிய பொருள்களின் தரம் குறையாமல் இருக்கவேண்டும்.





அத்துடன் உற்பத்தியையும் குறைக்காமல் ஓரளவு அதிகப்படுத்தி அதிக மான பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். நாம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக வாங்கவேண்டியதாக இருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் அதிகமாக ஏற்றுமதி செய்யவேண்டியதாக ஆகிறது. இப்பொழுது நாம் வெளிநாட்டிலிருந்து சில பொருள்களை கடன் வாங்கிக்கொண்டு வருகிறோம். வெளிநாடுகளிலிருந்து நாம் பல பொருள்களை பிச்சை வாங்கும்படியான நிலைமையில் நாம் இருக்கிறோம். அதனால் நாம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியாக வேண்டும். அப்படி நாம் முக்கியமாக ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள் என்னவென்பதைப் பார்க்கவேண்டும். இன்றைக்கு நாம் முக்கியமாக ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களில் ஒன்று துணி. இப்பொழுது நாம் ஏராளமான துணியை வெளிநாட்டிற்கு அதிகப்படியாக ஏற்றுமதி செய்து கொண்டு வருகிறோம்.

**Sri R. KRISHNASWAMY NAIDU**: கனம் சபாநாயகர் அவர்களே, பொருளாதாரத் துறையில் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டு வருகிறோம். அந்த வாழ்க்கைத் தரம் ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் வித்யாசமாக இருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் மக்களுடைய சமுதாயமும் மற்றொரு நாட்டினுடைய சமுதாயமும் வித்யாசமாக இருக்கிறது. அவரவர்களுடைய வாழ்க்கைக்குத் தக்க பொருள்கள் எந்த அளவில் இருக்கவேண்டுமோ அந்த அளவு நாட்டிற்கு நாடு வித்யாசமாக இருக்கிறது, மாறுபட்டிருக்கிறது. நம்முடைய தேசத்தின் பொருளாதார நிலைமைக்கும், நாகரீகத்திற்கும் மற்ற தேசத்தின் பொருளாதார நிலைமைக்கும் நாகரீகத்திற்கும் மாறுபாடு இருக்கிறது. அதனால் இந்நாட்டிற்கும் வேறு நாட்டிற்கும் ஒரு திட்டம் வகுத்து வாழ்க்கைத் தரம் என்பது குறைந்த பட்சம் அல்லது உயர்ந்த பட்சம் என்று நிர்ணயிக்கப்பட வேண்டும் அல்லவா ? வாழ்க்கை தரத்திற்கு வேண்டிய பொருள்களை அவ்வப்போது நிர்ணயிக்கப்பட வேண்டும் அல்லவா ? அதற்கான திட்டங்கள் இருக்கின்றனவா ? இவைகளை அடிப்படையாகக்கொண்டு அவைகளை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதற்கு விளக்கங்கள் கூறினால் மிகவும் சௌகரியமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: மனிதருக்கு மனிதர் வித்யாசம் உண்டு என்பதில் சந்தேகம் இல்லை. சிலருக்கு நல்ல சாப்பாட்டு வசதி வேண்டும், சிலருக்கு ஸ்பெஷல் உணவு வேண்டியதாக இருக்கும், சிலருக்கு விருந்து சாப்பாடு வேண்டியதாக இருக்கும். அதனால் இவைகளில் அபிப்பிராய பேதம் இருக்கும். அதனால் ஒவ்வொன்றுக்கும் வித்யாசம் உண்டு. ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் எல்லாவற்றையும் பூர்த்தி செய்திருக்கிறோமா என்பதைப் பார்க்க வேண்டும்.

நாம் மக்களுக்கு துணி அவசியம் கொடுக்கவேண்டும். ஆதிகாலத்தைப் போல் இல்லாமல் இப்பொழுது ஒவ்வொருவருக்கும் நாலைந்து துணி வேண்டியதாக இருக்கிறது. பனியன், கோட், டை முதலியவைகளை போட்டுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆதிகாலத்தில் கீழே ஒரு வேஷ்டியும் மேலே ஒரு துண்டும் இருந்தால் போதும் என்றிருந்தது. ஆனால் இப்பொழுது நாலைந்து துணி வேண்டியதாக இருக்கிறது. அத்துடன் சுகாதார முறையில் துணிகளைப் போட்டுக்கொண்டு நாம் பழகிவிட்டோம். சுகாதார முறையில் அணிந்து கொள்வதற்கு எவ்வளவு துணி வேண்டும் என்பதை நாம் இன்றைக்கு நிர்ணயித்து விட்டோம், அதைக் குறைக்க முடியாது. நம்முடைய சமூகத்தில் எல்லா மக்களுக்கும் துணி ஓரளவு அவசியம் வேண்டியதாக இருக்கிறது என்று ஏற்படுகிறது. அதைப்பற்றி சந்தேகம் இல்லை. அதை நாம் உற்பத்தி செய்தாக வேண்டும். தவிர குடியிருக்க மாளிகை ஒவ்வொருவருக்கும் இல்லாவிட்டாலும் ஒவ்வொருவருக்கும் குடியிருக்க ஒரு வீடாவது வேண்டும். குடிசைகளாவது வேண்டும். அதுவும் சுகாதார முறையில் இருக்கவேண்டும். இதில் அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது. அதற்கு அடுத்தப்படியாக கல்வி. எல்லோருக்கும் கல்வி வேண்டியது அவசியம் என்பதையும் எல்லோரும்

ஒப்புக்கொள்ளவேண்டும். அதிலும் அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது. கல்வி கொடுக்கவேண்டும் என்றால் அதற்கு கட்டிடங்கள் வேண்டும். சாதாரணமாக அதற்கு புஸ்தகங்கள் வேண்டும். இதிலும் அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது. இதேமாதிரி வைத்திய வசதி. அதுவும் வேண்டிய அளவு இருக்கவேண்டும். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பார்த்தால் நம்முடைய தேவைகளை அடுத்த 25 வருஷத்தில் பூர்த்தி செய்துகொள்ளாலம். அது ஒரு பிரமாத காரியமென்றுதான் ஒப்புக்கொள்ளவேண்டும். இதற்குமேல் ஒவ்வொருவரும் ரிப்ரிஜரேட்டர் வைத்துக் கொள்வது வேறு விஷயம், கார்களை வாங்கி வைத்துக்கொள்வது வேறு விஷயம். அதற்கு வேறு திட்டமிட்டு வேலை செய்யவேண்டும். இந்த திட்டங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு அதற்குத் தக்கபடி வேலை செய்யவேண்டியதாக இருக்கிறது. இன்னும் மற்ற தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய சாதனங்கள் இன்றைக்கு இருக்கிறதா ? அதற்கு வேண்டிய உற்பத்தியை செய்துகொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளையும் நாம் செய்துகொண்டு வருகிறோம். இதற்கு மேல் ஆராய்ச்சி செய்து விளக்கங்கள் சொல்லத்தேவையில்லை. இதைப் பற்றி சர்ச்சை செய்ய வேண்டியதும் அவசியம் இல்லை. தேவைகளை எப்படி பூர்த்தி செய்து கொள்வது ? இன்றைக்கு அதை எதன் மூலமாகச் செய்வது என்பதை யோசிக்கவேண்டும். இந்தத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குள் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வேண்டியதாக இருக்கிறது. 36 கோடி மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதற்கு வேண்டிய விவரங்களை தயாரித்து அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு அதன்படி கட்டுப்பட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். நான் சொல்லி வந்தது என்னவென்றால் ஏற்றுமதி விஷயத்தில் நாம் . . .

SRI N. K. PALANISAMY : நேற்று கனம் ராமமூர்த்தி பேசும்போது ஒன்று சொன்னார். அதாவது மகலநோபிஸ் திட்டத்தை ஏன் முதலில் ஒப்புக் கொண்டீர்கள், பின்னாடி ஏன் அதை கை விட்டு விட்டீர்கள் என்று கேட்டார். முதலில் ஒப்புக்கொண்டு பின்னாடி அதை மாற்ற வேண்டியதன் அவசியம் என்ன ? 200 கோடி ரூபாய் தனிப்பட்ட மூலதனத்திற்கு கடன் கொடுப்பதாக இருந்தது. அதை 700 கோடிக்கு உயர்த்த வேண்டிய நிலைமை என்ன ? பப்ளிக் செக்டாரிலிருந்து ப்ரைவேட் செக்டாருக்கு அதிகப்படியான பணம் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன ? அதனால் திட்டம் அமுல் நடத்துவதில் பாதகம் ஏற்படும் அல்லவா ? இப்படி தனிப்பட்ட மூலதனத்தை அதிகப்படியாக்கினால் சர்க்கார் அவர்களுக்கு அடிமையாகக்கூடிய நிலைமை ஏற்படுகிறதல்லவா ? இது பிரயோசனம் இல்லை. இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மகலநோபிஸ் திட்டத்தை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதைப்பற்றிய விவாதம் இல்லை. அதை பற்றி யோசிக்க வேண்டிய விஷயம் அல்ல. மதத்தில் குருட்டு நம்பிக்கையால் கண்மூடித்தனமான நம்பிக்கை ஏற்படுவது போல் இதிலும் ஏற்படுவது சரியல்ல. மகலநோபிஸ் திட்டத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கலாம். குருட்டு நம்பிக்கை சரிவர நடைபெறாது. உண்மையான தேவைகளில் நம்பிக்கை வேண்டுமேயொழிய குருட்டு நம்பிக்கையில் காரியம் நடைபெறாது. இதை அங்கத்தினர்கள் உணர வேண்டும். மகலநோபிஸ் சொல்லி விட்டார் என்பதை ஏற்றுக்கொண்டால் நாம் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை.

இன்றைக்கு இருக்கும் நிலைமையில் ஏற்றுமதியை நாம் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம். வெளி நாடுகளிலிருந்து இன்றைக்கு நாம் பல யந்தரங்களையும் அதற்கு வேண்டிய சாதனங்களையும் பெற வேண்டியதாக இருக்கிறது. மற்ற பொருள்களையும் பெற வேண்டியதாக இருக்கிறது. பொருளாதார அபிவிருத்திக்கு நாம் இறக்குமதி செய்யும் அளவிற்கு நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியும் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. பண்டம் மாற்றுதல் முறையில் நாம் பொருள்களை





கொடுத்து வாங்கவேண்டியதாக இருக்கிறது. நாம் ஏற்றுமதி செய்யக் கூடிய பொருள்கள் மற்றவர்களுடைய பொருள்களுடன் போட்டி போடக் கூடியதாக இருக்கவேண்டும். அதற்கு வேண்டிய சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். துணியை எடுத்துக் கொண்டால் துணிக்கு ஏன் அதிகமான மூலதனம் ஒதுக்கவில்லை என்று கம்யூனிஸ்ட் ஆட்சேபனை செய்துகொண்டு வருகிறார்கள். துணியைப் பொருத்த வரையில் நாம் இது வரையில் லாங்காஷயரிலிருந்து வரவழைத்துக்கொண்டு வந்தோம். இப்பொழுது அவர்களுடன் நாம் போட்டி போடக் கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறோம். இது அங்கத்தினர்களுக்கு நன்கு தெரியும். நம்முடைய துணி இப்பொழுது அமெரிக்காவிற்குப் போகிறது. இதுவும் அங்கத்தினர்களுக்கு நன்கு தெரியும். ஆப்ரிக்காவிற்குப் போகிறது, பல நாடுகளுக்குப் போகிறது. பலத்த போட்டி இருக்கிறது. ஜப்பானுடன் எந்த அளவில் போட்டி போடுகிறது என்பது அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் நாம் ஏற்றுமதி செய்யும் பொருள்களின் விலையும் குறைவாக இருக்க வேண்டும் அத்துடன் நல்ல தரம் உள்ளதாகவும் இருக்கவேண்டும். நாம் அதிகப்படியான விலை வைத்தால் அவர்கள் வாங்க மாட்டார்கள். தரமும் குறையக் கூடாது. அத்துடன் உற்பத்தியும் அதிகமாக ஏற்பட வேண்டும். அதை எந்த முறையில் செய்ய முடியும் என்பதையும் பார்க்கவேண்டும். அம்பர் சர்க்கா இருக்கிறது, கைத்தறி இருக்கிறது. இவைகளை வைத்துக் கொண்டு எந்த அளவில் உற்பத்தியைப் பெருக்கலாம் என்பதை யோசிக்கவேண்டும். அப்படி அதிகப்படியாக உற்பத்தி செய்து அதை தரம் குறையாமல் வெளி நாடுகளுக்கு வேறு அனுப்ப வேண்டியதாக இருக்கிறது. நாம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையவேண்டும் என்று அதிகப்படியான விலை வைத்தால் அவர்கள் அதை வாங்க மாட்டார்கள். தரம் குறைந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதையெல்லாம் யோசித்துச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஏற்றுமதி பாதிக்காத முறையில் எல்லாவற்றையும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்கு ஆலைகளை ராஷனைலேசேஷன், மாடர்னைசேஷன், ப்ரொடக்ஷன் என்று சொல்வார்களே அந்த முறையில் அவைகளை பாதுகாக்கவேண்டும். அதன் மூலம் ஏற்றுமதி பாதிக்காத அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த காரணத்தால் இன்று துணி ஆலை ஓரளவு பாதுகாக்கப்பட 10-30 a.m.
வேண்டும். இதற்காக ஓரளவு மூலதனம் ஒதுக்கியாக வேண்டுமென்று ஒப்புக்கொண்டிருக்கிறோம். தனிப்பட்ட முதலாளிகள் அதிக லாபம் சம்பாதிக்க வேண்டுமென்பதற்க்காக அல்ல. இன்று ஓரளவு ஒப்புக்கொண்டு திட்டத்தை மாற்றி இருப்பதற்கு காரணம் இன்று முதலிலே சொல்லியது போல் நம் அடிப்படை தேவை உடனே பூர்த்தியாக வேண்டும். அதே மாதிரி (Jute) சணலை எடுத்துக்கொண்டால் நாம் அதை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு இப்போது போட்டி இருக்கிறது. சணலுக்கு பதில் செயற்கை சணல் செய்வதால் போட்டி இருக்கிறது. வெளி நாடுகளில் நமக்கிருக்கிற சந்தையை, Market -ஐ விட்டுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. இதிலே பணம் போடக்கூடாது. இதிலே எந்த விதமான முற்போக்கும் வேண்டியதில்லை, நம் பொருளாதாரத்திற்கு அவசியமில்லை என்று நினைத்தால் வெளி நாடுகளிலே சணலை விற்க முடியாது. அந்த அளவிற்கு வெளிநாட்டு செலாவணி நமக்கு குறைவு ஆகும். இதை அனுசரித்துதான் இப்போது தனியார் தொகுதியிலே மூலதனம் போடவேண்டியதவசியமென்று ஒப்புக்கொண்டு அந்த அளவிற்கு மாற்றி இருக்கிறார்கள். இன்று வெளிநாடுகளுக்கு சாமான்கள் அனுப்புவதினால் நம் நாட்டிற்கு இயந்திர சாமான்கள் வரவேண்டுமென்று நினைக்கும்போது இந்த ஏற்றுமதியின் முழு பலனும் சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டியதவசியம். ஆகவே வெளி நாட்டு வர்த்தகத்திற்கு சாமான்கள் அனுப்புவதைப் பற்றி தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறார்கள். இதைப் பற்றி ராமமூர்த்தி அவர்களின் யோசனையை முழு மனதுடன் வரவேற்கிறேன். இன்று தனிப்பட்டவர்கள் ஏற்றுமதி வியாபாரத்தை தங்கள் சொந்த நலத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்கிறார்களே தவிர நாட்டின் நன்மைக்காக செய்வதில்லை. நாட்டிற்கு எவ்வளவு இயந்திர சாமான்கள் கிடைக்கவேண்டுமோ அந்த

அளவிற்கு கிடைக்கவில்லையென்று ஒத்துக்கொள்ள நான் தயாராயிருக்
கிறேன். நம் நாட்டிலிருந்து **monopoly trade** என்று சொல்லுவார்
களே அது போகவேண்டும். அந்தமாதிரி வியாபாரம் தனிப்பட்டவர்கள்
நடத்திக் கொண்டிருக்கட்டும் என்று சொல்வது நம் நாட்டிற்கு பெரிய
பாதகத்தை விளைவிக்கும். இதுதான் என் அபிப்பிராயம். இதைதான்
நான் 1½ வருஷ காலமாக சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன்.
இதை உடனே திடீர் என்று மாற்றிவிட முடியாது. வெளி நாட்டு
வியாபாரத்தை சர்க்கார் நடத்தவேண்டுமென்றால் அதற்கு தகுதியும்,
அனுபவமுமுள்ளவர்களும் வேண்டும். திறமை வாய்ந்த உத்தியோகஸ்தர்
கள் வேண்டும். இதுவெல்லாம் உடனே செய்ய முடியாது. இவையெல்லா
மில்லாமல் உடனே எடுத்துக் கொண்டால் அவர்கள் பரிகசிப்பார்கள்
சர்க்கார் எடுத்து என்ன ஆயிற்றென்று. சர்க்கார் மூலமாகத் தான்
இந்த வெளிநாட்டு வர்த்தகம் நடத்தவேண்டுமென்றால், நாட்டின்
நன்மை எவ்வளவு தூரம் பாதிக்கப்படாமலிருக்கிறதென்பதையும் பார்த்துக்
கொள்ளவேண்டும். இதை நாம் கவனித்தாக் வேண்டும். அதற்கான
ஆலோசனையை இப்போது நாம் செய்துகொண்டிருக்கிறோம். என்ன
முடிவு செய்வார்கள் என்பதைப்பற்றி இப்போது சொல்வதற்கில்லை,
ஏனெனில் ஆலோசனையிலே இருக்கக்கூடிய ஒரு விஷயத்தைப் பற்றி
முடிவாக சொல்ல முடியாது. தனிபட்டவர்கள் என்ன சொல்லு
கிறார்கள். நாங்களும் இந்த நாட்டிலேதானிருக்கிறோம். எங்களுக்கும்
தேச பத்தி உண்டு. ஏன் எங்கள் திறமையை நீங்கள் உபயோகித்துக்
கொள்ளக்கூடாதென்று சொல்லுகிறார்கள். அவர்கள் திறமையை பயன்
படுத்திக் கொள்வது நம் கடமை. ஆனால் தனியோரின் குறையைப்பற்றி
புஸ்தகம் புஸ்தமாக எழுதலாம். அவர்கள் திறமையால் உற்பத்தி செய்ய
லாம். உற்பத்தியை குறைவான செலவில் செய்யலாம். தனிப் பட்டவர்
களுக்கு அதிக லாபம் வருவதினால் தீங்கு என்ன என்பதை யோசித்துப்
பார்க்கும்போது அதன் மூலமாக ஏதாவது தீங்கு ஏற்பட்டால் அந்த
அளவிற்கு ஏதாவது செய்யவேண்டும். லாபத்தை கட்டுப்படுத்துவது
பெரிய கஷ்டம். ஒரு சில முதலாளிகளை அல்லது ஒரு சில உற்பத்தி
சாலைகளை கட்டுப்படுத்துவது மிகவும் சுலபம். ஆகவே தான் இம்மாதிரி
தனிப்பட்டோர் தொழில்கள் புதியதாக ஏற்படும்போது, இந்த நாட்டின்
சமுதாய நலத்திற்காக ஏற்படவேண்டும். தனிப்பட்டவர்களின் லாபத்திற்
காக அல்ல என்பதை மனத்திலே வைத்துக் கொண்டு அதற்கான ஏற்
பாடுகளை செய்யவேண்டும். அவர்கள் திறமையை உபயோகித்துக்கொள்ள
நாம் தயாராய் இருக்கிறோம். ஆனால் அதனால் நாட்டிற்கு ஆபத்து ஏற்
படக்கூடாது. என்னதான் கட்டுபாடுகளிருந்தாலும் என்னதான் சட்டங்
கள் போட்டாலும் அவையெல்லாம் மீறி விடுகிறார்கள். இன்று ஏற்ற
தாழ்வு குறையவேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் தனிப்பட்
டோர் மூலதனம் போட்டு தொழில் நடத்துவதினால் ஏராளமான வரும்படி
ஏற்படுமென்று சொல்லுவதிலே சந்தேகமே இல்லை. அதுவும் செலாவணி
அதிகரித்திருப்பதால் அதிக லாபம் கிடைக்கும். தனிப்பட்டவர்கள் உயர்ந்து
கொண்டே இருந்தால் இந்த ஏற்ற தாழ்வு அதிகமாகிக் கொண்டே
இருக்கும். இந்த ஏற்ற தாழ்வை நீக்க வேண்டுமென்ற லட்சியத்தை
நாம் வைத்திருக்கிறோம். ஆகவே லாபத்திலே ஒரு வரம்பு ஏற்பட வேண்
டும். தனிப்பட்டவர்கள் வருமானத்திலே ஒரு வரம்பு ஏற்பட வேண்டும்.
இதைப்பற்றியெல்லாம் ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்
கத்திலே எங்கள் திறமையை ஏன் உபயோகிக்கக் கூடாதென்று கேட்கிறார்
கள். ஆனால் சமுதாயத்தை பாதிக்கும்படியான விஷயங்களை அகற்ற
நினைக்கும்போது, கூக்குரல் எழுப்புகிறார்கள். இந்த மனோபாவமிருந்தால்
நாம் எப்படி வேலை செய்வது ? தனிப்பட்டவர்கள் எங்கள் இஷ்டம்போல்
நாங்கள் லாபத்தை அடைந்து கொண்டிருப்போமென்று சொன்னால்,
தனியோர் தொழில் நடத்த முடியாதென்றுதான் சொல்லுகிறோம்.
தனியோர் துறையிலும், பொது துறையிலும் இருக்கக்கூடிய வித்தியாசங்
களை போக்க முடியும். தனியோர் துறையிலே கட்டுப்பாடுகளை ஏற்படுத்த
முடியாவிட்டால், இன்று இருக்கக்கூடிய நிலைமையிலே தனியோர் தொழில்
களை பொது துறைக்கு கொண்டு வந்து விட முடியும். தனியோர் துறை
அவசியமா என்பதைப்பற்றி பின்னால் யோசித்துக் கொள்ளலாம். ஆனால்





இன்று எல்லா துறைகளையும் உபயோகப்படுத்திக்கொள்வது மிகவும்
அவசியம். தனியோர் தொகுதியினால் ஏற்படக்கூடிய சமுதாய பாத
கத்தை நீக்க வேண்டுமென்பதற்காக, தனிப்பட்டவர்கள் வருமானத்
திற்கு வரம்பு ஏற்படுத்த வேண்டுமென்று ஆலோசனை சொல்லப்பட்டிருக்
கிறது. ஏதோ முதலாளிகளுக்கு சலுகை காட்டும் திட்டமாக இருப்பதாக
சொல்லுவது இதை சரியாக அர்த்தம் செய்துக் கொள்ளவில்லை என்று
தான் அர்த்தமென்று கனம் **Ramamurthi** அவர்களுக்கு சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். இத்தகைய விஷயங்களிலே நாம் யோசித்து
ஜனநாயக அடிப்படையிலே சமாதான முறையிலே மாறுதல் செய்துக்
கொள்ளவேண்டும். வெறும் சட்டத்தின் பலத்தினால் மட்டுமல்ல.
இன்று நம் கடமை நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டியது.
தனிப்பட்டவர்கள் லாபத்திற்காக அல்ல, நாட்டின் நன்மைக்காக என்பதை
எவ்வளவுக்கு எவ்வளவு மனமாற்றமடைகிறார்களோ அவ்வளவுக்கு
அவ்வளவு நாம் போடக்கூடிய சட்டங்கள் நிறைவேற முடியும். அப்படி
இல்லாமல் சட்டங்கள் போட்டால் அதை அமுல் நடத்த மக்களின் ஒத்துழைப்பு 10-40 a.m.
மிகவும் அவசியம். அப்படி இல்லாமல் நாம் சட்டம் போட்டதும் அதை வக்
கீல்களின் உதவியைக் கொண்டும், சட்ட நிபுணர்களின் உதவியைக்
கொண்டும் அந்தச் சட்டத்தை எப்படி மீற முடியும் என்பதைப்பற்றி
நாம் எப்போதுமே ஆலோசித்துக் கொண்டிருக்கிறோமென்று சொன்னால்
இதன் மூலமாக பெரிய பாதகம்தான் நேரிடும். ஆகையினால் காந்திஜி
அவர்கள் சொல்லியமாதிரி வெரும் சட்டம் மட்டுமன்றி மக்களின் மன
மாறுதலும் அவசியமென்று சொல்லிய மாதிரி, அந்த மக்களின் மன
மாற்றத்தை ஏற்படுத்துவது மிக முக்கியமாக இருக்கிறது. அதிலும். பொது
மக்களின் மனம் சுலபமாக மாறிவிடும். ஆனால் முதலாளிகளின் மன
மும் மாறி ஆக வேண்டும். அதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்தி
யாக வேண்டும். ஆகையினால் இன்று நான் ராமமூர்த்தி அவர்கள் கட்சி
யினரைக்கேட்டுக்கொள்ளுவது முதலாளிகளை நம் விரோதிகளென்று ஒதுக்கி
வைக்காமல் அவர்களும் நமது நாட்டின் நன்மைக்காகப் பாடுபடுவதற்
கான சூழ் நிலையை ஏற்படுத்தினால்தான் நாம் நல்ல முறையில் முன்
னேற முடியும். ஆனால் ராமமூர்த்தியின் வாதம் இந்த முதலாளிகளை
நம்பமுடியாது. அவர்கள் செய்யக்கூடிய காரியங்களெல்லாம் மக்களின்
நன்மைக்குப் பாதகமாக இருக்கும். ஆகவே அவர்களை எவ்வளவு
தூரம் ஒதுக்கி வைக்க முடியுமோ அவ்வளவு தூரம் ஒதுக்கி வைக்க
வேண்டுமென்ற முறையில் பேசி இருக்கிறார். அதில் என்ன பாதகம்
இருக்கிறது என்பதைக் கவனித்து அந்தப் பாதகத்தை நீக்க வேண்டும்,
அதற்காக, அவர்களின் மன மாற்றத்திற்காக நாம் முயற்சிக்க வேண்டும்.
அவர்களிடமிருந்து ஏற்படுகிற நன்மையை நாம் பயன்படுத்திக்
கொள்ளவேண்டும். ஆனால் **Russia**-வில் அப்படியல்ல. இன்று
வெளியாகிறது. ஸ்டாலினின் சர்வாதிகாரப் ஆட்சி எப்படி நடந்துவந்தது
என்பதை இன்று உலகம் அறிந்து வருகிறது. அப்படிப்பட்ட நிர்வாகத்தை
நாம் ஏற்படுத்த வேண்டுமென்றால் எல்லாவிதக்கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தி
விடலாம். தேவைகளைக் குறைத்துக்கொண்டு தியாகம் செய்து ஆக
வேண்டுமென்று சொல்லுவது மட்டுமன்றி அதை நிர்பந்திக்கவும் முடியும்.
ஆனால் அப்படிப்பட்ட ஆட்சி நல்லதா என்பதை யோசித்துப்பார்க்க
வேண்டும். இன்று உலகம் பூராவாகவும், ரஷ்யா உள்பட, இது மாதிரி
ஆட்சி கூடாது என மனித சமுதாயத்தின் அபிப்பிராயம் திரண்டு வரு
கிறது. அப்படி இருக்கும்போது இப்படித் தவறான பாதையில் பொரு
ளாதார அபிவிருத்திக்கு அங்கே கொண்டு போய் இருந்தாலும், அவ்
வளவு சர்வாதிகார ஆட்சி அவசியமா என்று யோசித்துப்பார்த்தால் அது
அவசியமில்லை என்ற முடிவிற்குத் தான் வருகிறோம். அப்படிப் பாதகம்
விளைவிக்கும் எதுவும் அவசியமில்லை என்பதை நாம். உணரும்போது
நாம் தவறான பாதையில் போகாமல் நாம் நல்ல பாதையில் செல்ல
வேண்டும் என்பதை கம்யூனிஸ்ட் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்வார்கள்
அந்த முறையில் நல்ல அருமையான யோசனைகளைச் சொல்லுவதற்கான
சக்தி அவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளத் தயா
ராயிருக்கிறேன். ஆனால் அவர்களின் பழைய பாதையிலேயே செல்ல
வேண்டுமென்ற பிடிவாதத்தில் இருக்காமல் இன்று உலகத்திலுள்ள
மாறுதல்களை உணர்ந்து, அவர்கள் ஒரு நல்ல பாதையை ஏற்றுக்கொள்ள

[Sri C. Subramaniam] [4th April 1956

முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் இதைப்
பற்றி யோசனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.
அவர்கள் அப்படி யோசனை செய்தபிறகு அவர்கள் ஆலோசனை சொல்லட்
டும். அதை நாங்கள் ஆலோசித்துப் பார்த்து ஏற்றுக்கொள்ளத் தயா
ராயிருக்கிறோம். இன்று நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும் ஒன்று
பட்டு இயங்க வேண்டியது மிகவும் அவசியம். அது P.S.P.யாகவோ
கம்யூனிஸ்ட்களாகவோ அல்லது வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும்
சரி, இன்று இந்தப் பொருளாதார அபிவிருத்தி சம்பந்தப்பட்டமட்டில்
எல்லோரும் ஒன்றுபட்டு ஒத்துழைத்தால் தான் நாம் முன்னேற முடியும்.
இதை அடிப்படையாகக் கொண்டுதானிருக்கிறது நிலச் சீர்திருத்தம்.
அதைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் விரிவாகப் பேசினார்கள். அவர்கள்,
இதுப்பற்றித் திட்டக் கமிஷனில் சொல்லப்பட்டிருந்தாலும் சட்டம் செய்
வதற்குத் தயங்குகிறார்கள் என்று சொன்னார்கள். தஞ்சை ஜில்லா சட்
டத்தையும் இன்னும் சில உதாரணங்களையும் சொல்லிக்காட்டினார்கள்.
அதே மாதிரித்தான் நில வரம்பு பற்றியும் கூறினார்கள். ஆனல் நாம்
அதை அமுல் நடத்துவது எப்படி என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.
அந்த மாதிரிச் சட்டம் கொண்டு வருவதின் மூலம் நமது விவசாயத்துறை
யில் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்கக்கூடிய முறையை நாம் கையாள
வேண்டும். அதிகமான நிலங்களை எடுத்துக்கொண்டு இன்னும் அதி
மான வசதி உள்ளவர்களுக்கு பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று நாம்
சொல்லவில்லை. ஆனல் இன்று ஏழையாகவும், நிலமில்லாதவர்களாக
வும் எந்த விதமான வாழ்க்கைக்கும் வழி இல்லாதவர்களுக்கும் அந்த
நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். அவர்கள்
நிலத்தைச் சீர்திருத்துவதற்கு எப்படிப்பட்ட மார்கத்தை செய்யவேண்டு
மென்று நாம் யோசித்துக்கொண்டிருக்கிறோம். ரஷ்யாவில் இந்த விஷ
யத்தில் எவ்வளவு கஷ்டமிருந்தது என்பதையும் அதை அவர்கள் எப்படிச்
சமாளிக்க வேண்டி வந்தது என்பதைப் பற்றியும் நாம் சரித்திரத்தின்
மூலமாக பார்த்திருக்கிறோம். ஏனெனில் இது Factory labour
போன்ற காரியமல்ல. கிராமத்திற்குக் கிராமம் மாறுபட்டு இருக்கக்கூடிய
விஷயமாகும். ஆகையினல் இதில் பாதகம் விளையாமல் பார்த்துக்கொள்ள
வேண்டியது நமது கடமையாகும். ஏனெனில் இதில் பாதகம் ஏற்பட்டால்
உணவு உற்பத்தியைப் பாதிக்கும். அதனல் உணவுக் கஷ்டம் நமக்கு
நாட்டில் ஏற்படும். அதனல் வெளிநாடுகளிலிருந்து நாம் உணவை
வர வழைக்க வேண்டிவரும். இதற்காக வெளிநாட்டுச் செலாவணியை
நாம் நாடவேண்டி வருகிறது. ஆகையினல் நாம் சிறிது சிறிதான மாறு
தலை ஏற்படுத்தி வரவேண்டுமென்ற கொள்கையைக் கையாளுவதின்
காரணம் முதலாளிகளின் அல்லது நிலப் பிரபுக்களின் நன்மைக்காக
அல்ல. நாட்டின் நன்மையை அடிப்படையாகக் கொண்டுதான் நடக்கி
றோம்.

இன்று பூமி தானத்தைப் பற்றி எடுத்துக்கொண்டாலும் அதே கொள்
கையில் தான் அதை வரவேற்கிறோம். கம்யூனிஸ்ட்கள் விநோபாஜியின்
பூமிதானத்தைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்றால் அன்று காந்திஜி
யின் சத்தியாகரஹத்தைப் பற்றி எப்படி நினைத்துக்கொண்டிருந்தார்க
ளோ அதேமுறையில் தான் இன்று இந்த பூமிதானத்தைப் பற்றியும்
கருதுகிறார்கள். அவர்கள் இது அடிப்படையிலேயே தவறு என்றும் நிலச்
சீர்திருத்தத்திற்கு இது குறுக்கே வருகிறது என்றும் கருதுகிறார்கள்.
ஆகவே அதைத் தடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்கள் பேசு
கிறார்கள். அன்று கம்யூனிஸ்ட்கள் மகாத்மாஜியை ஏகாதிபத்தியத்தின்
கையாள் என்று சொல்லிய மாதிரி தான் இன்று அவர்கள் விநோபாஜி
யைப்பற்றிக் கருதுகிறார்கள். பேசியும் வருகிறார்கள். ஆனல் இது தவறு
என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று வேறு
எந்த விதத்திலும் சமுதாயத்தில் பெரிய மாறுதலை ஏற்படுத்திவிட முடி
யாது. மக்களின் மனம் எவ்வளவுக்கெவ்வளவு மாறி வருகிறதோ அவ்
வளவுக்கவ்வளவு தான் சட்டத்தை அமுல் நடத்த முடியும். மக்களின்
மனம் மாறாமல் இருந்தால் எப்படிக் கள்ளுக்கடையை எடுத்துக்கொண்
டால் அதை எப்படி மீறுவது அதாவது மதுவிலக்கு சட்டத்தை எப்படி



4th April 1956] [Sri C. Subramaniam]

மீறுவது என்று குடிக்கிற மக்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ அதே
நிலைமைதான் ஏற்படும். ஆகையினல்தான் நான் இன்று விநோபாஜியின்
பூமிதான இயக்கத்தை வரவேற்கிறேன். ஏனெனில் இன்று ஒரு புதிய
சக்தியை மக்களுக்கு அந்த இயக்கம் கொடுக்கிறது. நாட்டிலுள்ள நிலப்
பிரச்னைக்கு சட்டத்தைக் காட்டி ஒரு விதத்தில் நிர்பந்திக்க வேண்டி இருக்
கிறது. அந்த சட்டத்திற்குப் பின்னல் போலீஸ், ராணுவ பலம் இருக்
கிறது என்கிற காரணத்தினல் ஒருவன் சட்டத்தை ஒப்புக்கொள்ளாவிட்டா
லும் அவன் அதற்குப் பணிய வேண்டி வருகிறது. ஆனல் இந்த விநோ
பாஜியின் இயக்கம் அதற்கு எதிராக அந்தமாதிரி நிலம் மாற்றப்படுவது
ஓரளவிற்கு நியாயம் தான் என்பதை ஒப்புக்கொண்டால் தான்
சட்டத்தை அமுல் நடத்துவது சுலபமாக இருக்கும். ஆகவே
நான் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களை விநோபாஜியின் இயக்கத்தைப் 10-50
பற்றி சிந்தனை செய்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் a.m.
கொள்கிறேன். ஆனல் கண்டிப்பாக அவர்கள் இதை ஒப்புக்கொள்ள வேண்டு
மென்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு என்னுடைய அபிப்பிராயத்
தில், விநோபாஜியின் இயக்கத்திற்காக மக்கள் தாராளமாக நிலம் வழங்கி
வருவதைப் பார்த்தால், மக்களின் மனம் எவ்வளவு மாறுதல் அடைந்
திருக்கிறது என்பது தெளிவாகிறது. ஒரு அங்குல நிலத்திற்கு கொலை
செய்பவர்கள்கூட எவ்வளவு நிலங்களை தானக முன்வந்து வழங்கி இருக்
கிறார்கள் பாருங்கள். இதற்கு மனமாற்றந்தான் முக்கியம். போலீஸ்
ராணுவம் இவைகளை உபயோகித்து, பலாத்தகாரம், புரட்சி, நிர்ப்பந்தம்
செய்வது இவ்வகையில் அவசியமில்லை. உலகத்திலிருக்கும் முறண்பாடு
களெல்லாம், ஒரு தேசத்திற்கும் இன்னுமொரு தேசத்திற்கும் இருக்கக்
கூடிய முறண்பாடுகளாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு தேசத்திலும்,
மற்றொரு தேசத்திலும் இருக்கக்கூடிய வர்க்கத்திற்கு வர்க்கம் இடையி
லுள்ள முறண்பாடுகளாக இருந்தாலும் சரி, இவைகளை தீர்த்துவைக்க
பலாத்காரம், நிர்ப்பந்தம், அவசியமில்லை. உலகத்தில் மனித தர்மத்தை
நிலைநாட்ட முடியுமென்ற சக்தியை மகாத்மாகாந்தி அவர்கள் நமக்கு
காட்டிவிட்டுப்போயிருக்கிறார். காந்தி காட்டிய வழியில் நிலத்துறையிலும்
மக்களின் மனமாறுதலைச் செய்யமுடியுமென்பது, விநோபாஜியின் இயக்கம்
நமக்கு எடுத்துக்காட்டுகிறது. தேசப் பிரச்னையிலும், பொருளாதார
பிரச்னையிலும், இந்த சக்தியை நாம் காண்பித்து, மாறுதல் ஏற்படுத்த
முடியும் என்பதுதான் நம் கொள்கை. விநோபாஜி அவர்கள் நம்
முடைய ராஜ்ஜியத்திற்கு அடுத்த மாதத்தில் வர இருக்கிறார். மூன்று,
நான்கு மாதங்கள், நம் ராஜ்ஜியத்தில் அவர் சுற்றுப்பிரயாணம் செய்ய
இருக்கிறார். அந்த மூன்று மாத காலங்களில் ஏற்படக்கூடிய நிலம்
வைத்திருக்கும் நம்மக்களின் மனமாறுதல், வேறு எத்தனை சட்டம்
போட்டாலும், இந்த மாறுதல் ஏற்பட்டுவிடாது. ஆகவே முதலாளிகளின்
மன மாற்றத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு
நிலவார நிர்ணயம் 60 சத விகிதம் அல்லது 40 சத விகிதம் வேண்டு
மென்று கோறி பெரிய மகாநாடு போட்டு தீர்மானம் செய்து விடுவதால்
அவர்களுடைய மணமாறுதல் ஏற்படாது. தஞ்சை ஜில்லாவில் இருக்கிற
வர்கள் இதைப் பார்த்திருக்கிறார்கள். மனித சமுதாயத்தில், புதிய
சக்திகளின் மூலம், புதிய பாதைகளை நாம் வகுத்து, முன்னேற
வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதைப்பற்றி நாம் யோசிக்க வேண்டி
யது அவசியம். இன்னும் நாம் யோசித்துப் பார்க்க வேண்டிய விஷ
யங்கள் பல இருக்கின்றன. இந்தத் திட்டத்தை அமுல் நடத்தப்போகும்
காலத்தில் நாம் இவைகளை நினைத்துப் பார்க்க வேண்டும். இத்திட்டத்தின்
Draft Outline-ல் சில விஷயங்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்
கள். நிலச் சீர்திருத்தம் செய்வதில், நில வரம்பை ஏற்படுத்தவேண்டு
மென்று சொல்லி இருக்கிறார்கள். இந்த சீர்திருத்தத்திற்கான ஒரு
சூழ்நிலையை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தத்துவத்தை அடிப்படை
யாக வைத்துக்கொண்டு கனம் ராமமூர்த்தி அவர்களும், கம்யூனிஸ்டு கட்சி
அங்கத்தினர்களும், யோசித்துப்பார்ப்பார்களானல் கட்டாயம் நாம் போகிற
வழி சரியான வழிதானென்று அவர்களுக்குத் தெரியும். சில சமயங்களில்
தாமதம் ஏற்பட்டாலும் கூட நாம் போகிற வழி சரியான வழிதானென்று
அவர்களுக்கு தெரியும். இன்னும் ஒன்று தான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். இன்றுள்ள விலை உயர்வைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்

கள். நான் இதை ஒப்புக்கொள்கிறேன். இது என்ன காரணத்தால் ஏற்படுகிறது என்பதில் பல யூகங்கள் இருக்கின்றன. அதிகமாக நோட்டுகளை அச்சடிப்பதால் பொருள்களின் விலை உயர்வு ஏற்படுவதாக சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இத்திட்டத்தின் உயர்வைக் குறைக்க சிலர் இதை உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள். இந்த விலை உயர்வு எதனால் ஏற்படுகிறது ? இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதனைப் பண வீக்கம் (inflation) என்று சொல்வார்கள். இதை எல்லாம் நாம் யோசித்துப் பார்க்கவேண்டியது அவசியம். பண வீக்கம் ஏற்பட்டு, அதன் காரணத்தால் விலை உயர்வு ஏற்பட்டால், பொருளாதாரத்தின் உயர்வில் தடை ஏற்படுமென்பது நமக்குத் தெரியும் இது தான் திட்டத்தைப் பற்றி நாம் யோசித்துப் பார்க்க வேண்டிய முக்கியமான விஷயம். இதைப்பற்றி நாம் பல இடங்களில் விவாதம் செய்ய வேண்டும். இதைப்பற்றி பல இடங்களில் நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். நாம் நினைப்பதுதான் சரி என்ற நிலைமை ஏற்படக்கூடாது. மாற்று எண்ணத்தில் இருக்கும் அர்த்த மென்ன என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நான் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களுக்குச் சொல்வதைத்தான் காங்கிரஸ்காரர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொருளாதாரத் துறையில் நாம் முன்னேறுவதற்காக ஒரு கூட்டு முன்னணி (Joint-Front) அமைத்துக்கொள்ளுவது மிகவும் அவசியம். பொருளாதாரத்துறை வளர்ச்சியில் எல்லா கட்சிகளின் கூட்டணியை அமைப்பதென்றால் அதை நான் வரவேற்கிறேன். இவ்வகையில் எல்லா கட்சிக்காரர்களையும் நான் ஒத்துழைக்கக் கோருகிறேன். இப்பொழுது கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கை மாறிவருவதால், அவர்களின் ஒத்துழைப்பையும் நான் கோருகிறேன். வேறு காரணத்திற்காக சிலர் என்னை ராஜிநாமா செய்யவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். எனக்கு பல பேர்கள் கூட இதற்காக கடிதம் எழுதி இருக்கிறார்கள். இதற்கு நான் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வறுமையில் மக்கள் வாடிக்கொண்டிருக்கிறார்களே அதற்காக என்ன திட்டங்கள் தீட்டுவது என்பதுதான் எனக்கு முக்கியம். இதற்காக ஒரு கூட்டணி (Joint-Front) ஏற்படுத்தினால் அதில் நான் உழைக்கத் தயார்.

**Sri S. C. C. ANTHONY PILLAI : The Hon. Minister has called for a Joint-Front on economic issues. But in the constitution of committees with regard to the Five-year Plan, inspite of the fact that the Communist Party has been knocking at the doors of these committees for a long period of time, the Hon. Minister refused to grant them admission to these committees. Then what is the point in calling for such co-operation and Joint-Front, when in practice, Joint-Fronts are not established ?.**

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நான் நிர்வாகப் பொருப்பில் இருக்கக்கூடியவன். இந்த சமயத்தில் ஒத்துழைப்பு கிடைக்குமா என்பதை பார்க்கவேண்டியதாக இருக்கிறது. நான் இப்போது நினைப்பது எல்லா கட்சிகளும் ஒத்துழைப்பார்கள் என்ற ஒரு சூழ் நிலையில்தான், கோருகிறேன். இதற்கு முன்பு அவர்களுடைய ஒத்துழைப்பைக் கோறி இருந்தால் அவர்கள் கொடுத்திருக்கமாட்டார்கள் என்பது என் எண்ணம்.

11 a.m. நாளைக்குத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு, பொருளாதார முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்புத் தருவது பற்றி எதாவது திட்டம், யோசனை வெளியிட்டிருப்பார்கள் ஆனால் கட்டாயம் அத்தகைய ஒத்துழைப்பு பெற நான் தயாராயிருக்கிறேன். ஆனால் ஒத்துழைப்பு என்று சொல்லிக் கொண்டு உள்ளே வந்து ஐந்தாம் படைவேலை செய்யக்கூடிய ஒத்துழைப்பு தான் என்றால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இதற்கு ஒரு நாளும் சம்மதிக்கப்போவதில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது மாதிரி ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் பொருளாதாரத் திட்டத்தைப் பொறுத்த மட்டில் நான் ஒன்றுபட்ட யோசனையை வரவேற்கத்



தயாராயிருக்கிறேன். இந்த விஷயங்களில் கலந்து ஆலோசித்து ஒரு நல்ல முடிவிற்கு வரத்தயாராயிருக்கிறோம் என்றாலும் என்னைப் பொறுத்த வரை இந்த உறுதிமொழியைக் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லோருடைய யோசனைகளையும் கேட்கத் தயாராயிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது தான் இன்றைக்கு இருக்கக்கூடிய முக்கியமான உண்மை. இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்துக்கு 172 கோடி ரூபாய் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கியிருப்பது போதாது, அது இன்னும் அதிகம் வேண்டுமென்று சொன்னார்கள். நான் விரும்பினால் மத்ய சர்க்காரிடம் சண்டை போட்டு 200 கோடி ரூபாய் பெற முடியு மென்று என் நண்பர்கள் சிலர் பேசினார்கள். இப்படி 200 கோடி ரூபாய் பெறுவதனால் மட்டும் பெரிய பலன் ஒன்றும் ஏற்பட்டு விட முடியாது. கிடைக்கும் பணத்தை எப்படி உபயோகப்படுத்துகிறோம் என்ற நிலை வந்திருக்கிறது. இதை எவ்வளவு தூரம் விரயம் இல்லாமல் அத்யாவசியமான செலவுகளுக்கு நல்ல ஏற்பாடான முறையில் சிறந்த திட்டங்களுக்காக அவற்றை நிறைவேற்ற செலவு செய்கிறோம் என்று இப்படிப்பட்ட முறையிலே நம்முடைய பொறுப்பு இருக்கவேண்டும். திட்டம் போட்டு திட்டமிடப்பட்ட வகையிலே கிடைக்கும் பணத்தைச் செலவழித்தால் தான் பூர்ண பலன் காண முடியும். அப்படியின்றி திட்டமிடாமல், இஷ்டம் போல் செலவழிப்பதானால் 172 கோடி அல்ல 200 கோடி ரூபாய் கிடைத்தாலும் ஒரு பலனும் இல்லாமல் போய் விடலாம். அது ரொம்பவும் முக்கியம் என்பதை நீங்கள் அனைவரும் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இதை அனுசரித்துத்தான் ஒரு நிர்வாக அமைப்பு ஏற்படுத்தி ஆகவேண்டும். அதற்காக மக்களை தயாரித்தாகவேண்டும். அவர்களுக்குப் பயிற்சி கவனித்துக் கொடுத்தாகவேண்டும், இன்றைக்கு ஏற்பாடு செய்து வருவதெல்லாம் இதை உத்தேசித்துத் தான். இதில் 172 கோடி ரூபாய்க்கு மேலும் அதிகம் கிடைக்கவேண்டுமென்று பல அங்கத்தினர்கள் ஒன்று பட்டு தங்களுடைய அபிப்பிராயத்தை சபையிலே தெரிவித்தார்கள். இதைப் பற்றி நான் ரொம்பவும் மகிழ்ச்சி அடைகிறேன். யாராவது தருவார்களானால் நாம் இந்தக்காரியங்களைச் சாதித்து விடலாம். அப்படிச் சாதிப்பது அப்போதுதான் சுலபம் என்று பலர் கருதுகிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் எனக்கு இதில் நம்பிக்கையில்லை. மக்கள் செயலில் இறங்கும் போது தான் அதிகம் சாதிக்க முடியும். நான் நினைத்துக் கொண்டு இருந்தேன் வேறு ஒரு சந்தர்ப்பத்திலே. தட்சணராஜ்ய ஏற்பாடு இருக்குமானால் இந்தத் திட்டத்தை மாற்றி அமைத்து விட முடியுமென்று நம்பிக்கை எனக்கு ஆரம்பத்திலே இருந்தது. அப்படி ஏற்படுமானால் மத்ய சர்க்காரிடம் இருந்து இன்னும் அதிக சலுகைகள் பெற முடியுமென்று நம்பிக்கையும் எனக்கு இருந்தது. சாதிக்க முடியுமென்று நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் அந்த நிலைமை இப்போது போய் விட்டது. ஆகையினால் இந்தக் காரணத்தினால் சிறிய ஒரு திட்டத்தைப் போடவேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் நாட்டின் நன்மைக்கு நாம் என்ன செய்ய முடியுமென்பதைத்தான் இப்போது யோசித்துப் பார்க்கவேண்டும். அது நம் கடமை. நாட்டின் அபிவிருத்தியை நினைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தைச் செய்திருக்கிறோம். இன்னும் 50 கோடி, 60 கோடி வேண்டும் என்று மலைத்து உட்கார்ந்து விடவில்லை. இப்போது உள்ள ஒரு சூழ்நிலையிலே என்ன செய்து நாட்டின் முன்னேற்றத்துக்கு ஏற்பாடு செய்ய முடியுமென்று இன்றைக்கு நாம் யோசனை செய்து பார்க்கவேண்டும். இதிலே மக்களுடைய ஆதரவு, மக்களின் முழுசக்தி, மக்களின் பிரதிநிதிகள் என்று இந்த சபையிலே உள்ள உங்களுடைய முழு ஆதரவு வேண்டுமென்று நான் கோருகிறேன், மிகமிக முக்கியமான காரணம். ஆனால் இன்றைக்கு இந்த 172 கோடியை 200 கோடி ஆக்குவது சுலபமல்ல. ஏன் என்றால் இன்றைக்கு ராஜ்யம் பிரியப் போகின்றது. நம்மிடம் இருந்து ஒரு பகுதி வேறு ஒரு ராஜ்யத்திற்கு போகப்போகிறது. அதற்குப் பின்னால் நம்முடைய திட்டத்தை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். அதை எப்படிப் பரிசீலனை செய்து எப்படி மாற்றி அமைக்க வேண்டும் என்பதைப் பற்றியும் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகையினால் ஏதோ முடிவு ஏற்பட்டு விட்டதாக நினைக்க வேண்டாம். எதை

யும் மாற்றிக் கொள்வதற்கு தயாராயிருக்கிறேன் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திட்டக்கமிஷன் இடத்திலே நம்மைப் பொறுத்தவரை மலையாளப்பகுதி, தென் கன்னடப்பகுதி ஆகிய இவை வெளியே செல்லப்போகிறது, ஆகையினால் இந்தத் திட்டத்துக்கு ஒரு முடிவான ஒரு நிலைக்கு கொண்டு வரவேண்டுமானால் அது அக்டோபர் மாதத்தில்தான் முடியுமென்று சொல்லியிருக்கிறேன். ராஜ்யச் சீரமைப்பைப் பொறுத்துத் தான் நமது முடிவை மாற்றிச் சொள்ள வேண்டும் இன்றைக்கு இருக்கக் கூடிய இந்த ஒரு வருஷத்தில் என்ன செய்யப் போகிறோம் என்பதைப் பற்றி முடிவுசெய்து திட்டம் போட்டு நடத்துகிறோம். 38 கோடி ரூபாய் கிடைக்கவில்லையே என்று நாம் மலைத்துப் போகவேண்டிய அவசியமே இல்லை. என்னைப் பொறுத்த வரையில் நான் இதனால் மலைத்துப் போய் விடவில்லை. இதிலே பல சௌகரியங்கள் அபிவிருத்தி முதலிய செய்வதற்கு முயற்சி செய்து நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு, மக்களின் வறுமையை நீக்குவதற்கு, மக்கள் சந்தோஷமாக வாழ்வதற்கு ஆக இந்தத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டியது மிகவும் முக்கியம். அவசியமானதும் கூட. இதிலே அந்தோணி பிள்ளை சொன்னார்கள் புள்ளி விவரங்களினால் ஒரு பலனும் ஏற்படாதென்று. ஆனால் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தான் எந்தத் திட்டத்தையும் அமைக்க வேண்டுமென்ற ஒரு உண்மையை இப்போது தான் உணர்ந்திருக்கிறோம். இந்த இரண்டு வருஷ காலமாக கிடைத்த அனுபவத்திலிருந்து புள்ளி விவரங்கள் அவசியம் என்று சொல்லப்படுகிறது. பெறும் புள்ளி விவரங்கள் வெறும் பொய் என்று சொல்லப்படுகிறது. அப்படி நினைத்துக் கொண்டு இருந்த காலம் இப்போது மாறி விட்டது. புள்ளி விவரங்களின் அவசியத்தை உணர்ந்திருக்கிறோம். புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு Statistics போடுவது ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு செலவழித்தாக வேண்டும், செலவழிப்பது மூலமாகப்பலன் காணும் என்று புள்ளி விவரங்களைக் கொண்டு அளவு எடுத்துக் கொண்டு நல்ல முறையிலே இன்று நம்முடைய திட்டத்தை உருவாக்கிக் கொண்டு வருகிறோம். அதற்கான எல்லா நடவடிக்கைகளையும், நிர்வாக அமைப்பை அமைத்துக் கொண்டு வருகிறோம். ஆங்காங்கு Statistical Bureau, Statistical Department அமைத்து அதிலே முன்னேற்றம் அடைய எல்லா விதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். Statistics வந்து அமுல் ஆகிற நம் ராஜ்யத்தைப்பொறுத்தமட்டில் இதைப் பற்றி அதிகம் சொல்லிக்கொண்டு இருக்க வேண்டியதில்லை. ஆனால் இரண்டு விஷயத்தைப் பற்றி மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயத் துறையைப் பொறுத்தவரை புள்ளி விவரங்கள் இல்லை என்று சொல்ல முடியாது. ஒரு அளவுக்கு இருக்கிறது. 1950–51ல் இந்தியா முழுவதும் விவசாயத்தில் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். இதில 1950–51ல் 240 கோடி நம்முடைய பகுதியிலேஉற்பத்தி ஆகி இருக்கிறது. ஆனால் 1955–56ல் கணக்கு பார்க்கும்போது 328 கோடி இருப்பதாக கணக்குப் போட்டிருக்கிறார்கள். அதாவது 37 சதவிகிதம் அதிகம் என்று, நாம் நினைத்து விடக்கூடாது. 37 சதவிகிதம் அதிகம் நாம் உற்பத்தியை அதிகப்படுத்த நம் முயற்சிகளாலே ஏற்பாடு செய்து விட்டோம் என்று நினைப்பது தவறு. 1950–51ல் பஞ்சம், எங்கு பார்த்தாலும் பஞ்சம் தான் ஏற்பட்டிருந்தது. உற்பத்தி 240 கோடியிலிருந்து 328 கோடியாக 88 கோடி திட்டம் காரணமாக அதிகரித்து விட்டது என்று நினைத்து விடக்கூடாது. இப்படி திட்டங்களின் காரணமாகத் தான் 37 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது என்றால் தப்புக் கணக்குக்காகத்தான் முடியும். சாதாரணமாக அவ்வளவு விளைச்சல் ஏற்பட்டிருக்காது. பொதுவாக திட்டத்தின் காரணமாக எவ்வளவு ஏற்பட்டிருக்கிறது, ஏற்பட்டு இருக்கவேண்டும் என்பதை அடிப்படையாக எடுத்துக்கொண்டு கணக்குப் போட்டு பார்க்கிறோம். இந்தக் கணக்குக் சரி என்று சொல்ல வேண்டிய இல்லை. உற்பத்தி அதிகம் ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன. நல்லபடி திட்டத்தைப் போட்டு அதை அமுல் செய்தால் உற்பத்தி நிச்சயமாக அதிகம் ஆகிறது. அதேமாதிரி ஏரி, குளங்களை ஆயிரக் கணக்கிலே செலவழித்து (ரிப்பேர்) பழுது பார்த்து அவைகள் எல்லாம் உபயோகப்பட்டு வருகின்றன. உபயோகம் இல்லாமல்





கிடந்த ஏரி குளங்கள் எல்லாம் இதேமாதிரி (National Extension Service) தேசிய விஸ்தரிப்புத் திட்டம் (Community Project) சமுதாய நலத் திட்டம் மூலமாக போதிய தண்ணீர் இருப்பதற்கு நல்ல முறையிலே, அவைகளுடைய தரம் உயர்வதற்கு வேண்டிய பலவிதமான நடவடிக்கைகள், நல்ல மாடுகள் பெருகுவதற்கு வேண்டிய முறைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதன் மூலம் எல்லாம் உண்மையிலே அபிவிருத்தி இல்லை என்று சொல்லுவார்களானால் இது ஒரு கண்மூடித்தனம் தான் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தொழில்களிலே நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். கணக்குக் கேட்டால் இத்தனை சத விகிதம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. கணக்குப் போட முடியாது என்று இன்னறைக்குச் சொல்லுகிறேன். உற்பத்திச் சாலைகளை எடுத்துக் கொள்வோமானால், Factories-களில் கணக்குப் போடுவது சுலபம். அதிலே அவர்கள் கணக்குப் போட்டிருக்கிறார்கள். அதன் பிரகாரம் 100-க்கு 43 சதம் இந்தியா பூராவும் இந்த உற்பத்திச் சாலைகள் இந்த ஐந்து வருஷத்தில் அதிகம் ஏற்பட்டிருக்கிறது. என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்கு விவசாயத் துறையை விட கொஞ்சம் accurate என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நம் ஊரைப் பொறுத்த மட்டில் எவ்வளவு ஏற்பட்டிருக்கிறது என்றால் 22 சதம் அதிகமாகி இருக்கிறது. ஆகையினால் உற்பத்திச் சாலைகள் அகில இந்தியாவை எடுத்துக் கொண்டு பார்க்கும்போது இங்கு உற்பத்தி ஆகி இருப்பது அதில இந்திய அளவிற்கு நம்மிடம் ஏற்பட வில்லை என்பதில் சந்தேகம் இல்லை. இந்த உற்பத்தி சாலைகளில் இயந்திர சம்பந்தமான உற்பத்தி ஏற்பட்டிருப்பதைப் பற்றிக் குறிப்பிடும்போது தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். இதிலே உற்பத்தியை அதிகப்படுத்த பங்கு கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு வந்து அடைக்கவேண்டாமென்று அது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால் இன்றைக்கு எப்படி எல்லா இயந்திரமும் உற்பத்தியை அதிகமாக்கவேண்டும் என்பதைப்பற்றி ராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அதேமாதிரி தான் வேலை நிறுத்தமும் அதன் மூலமாக ஒரு நாளைக்கு பல இயந்திரங்கள் தேசத்திற்கு நஷ்டம். தேசிய நஷ்டம் என்பதை தொழிலாளர்தலைவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். சர்க்கார் கொள்கை தொழிலாளர்களுக்கு உரிமைகள் இருக்கவேண்டுமென்று பார்த்துக் கொள்வது. இது சர்க்காரின் கடமை. அதே சமயத்தில் இதன் காரணமாக உற்பத்தி பாதிக்கபடுவதைத்தடுக்க வேண்டியது தொழிலாளர் தலைவர்களின் கடமை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இதையும் மனதில் வைத்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு நாளைக்கு வேலைக்கு போகவேண்டாமென்று வேலை நிறுத்தம் நடத்தக்கூடாது அப்படிச் செய்வது தேசிய நஷ்டம் தான். இதனால் லாபம் ஏற்படவில்லை என்பதை உணரவேண்டும். லாபம் ஏற்பட வில்லை என்றால் நஷ்டம் தான். நமக்கு எண்ணிப் பார்க்ககூட முடியாத முறையிலே நஷ்டம் ஏற்படுகிறது என்பதை அந்தோணிப் பிள்ளை அறிவார்கள் என்று நம்புகிறேன். எந்த அளவிற்கு Binny Company-ன் தேசிய உற்பத்தி குறைந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டு ஆக வேண்டும். ஆகையினாலே நான் நினைக்கிறேன் ஒரு நாளைக்கு தொழிலுக்கு போகாவிட்டால் என்ன நம்முடைய உரிமைக்காக ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்யலாம் என்று நினைக்கலாம். இது தேசிய நஷ்டம் என்கிறேன்.

தொழிலாளர்களின் நலன்கள் வளரவேண்டுமென்று திரும்பதிரும்ப வற்புறுத்த நான் தயாராயிருக்கிறேன். அதிக உற்பத்தி லாபம் கிடைத்தால் அதை எல்லாரும் பங்கு போட்டுக் கொள்ளலாம். ஆனால் உற்பத்திக்கு குறைவு நஷ்டம். நஷ்டம் ஆனால் அதைத் திரும்ப பெறுவது என்பது முடியாது. ஆகவே தொழிலாளர் தலைவர்கள் பொருள் நஷ்டம் ஆகாமல் உற்பத்தி பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுதான் விஷயம். உற்பத்தியைப் பற்றி பேசிக்கொண்டே போனால் எவ்வளவோ பேசலாம். ஆகவே நான் இப்போழுது கேட்டுக்கொள்வது இதில் இருக்கக்கூடிய புள்ளி விவரங்களைக் கொண்டு பொதுமக்கள் யோசிப்பது மட்டும் அல்ல. ஒவ் 11-10 a.m.

வொரு அங்கத்தினரும். இதைப்பற்றி யோசிக்கவேண்டும். பொதுமக்கள் ஒவ்வொருவரும் இதைப்பற்றி யோசிக்க வேண்டும். இதன் மூலம் நல்ல திட்டங்கள் உருவாகும். இந்த திட்டத்தின் மூலம் ஏற்படக் கூடிய பலாபலன்கள் யார் யாருக்கு அவசியமாக இருக்குமோ அவர்களுக்கெல்லாம் உதவக்கூடிய நிலையில் அந்த திட்டத்தை நடத்தவேண்டும், இதுதான் நாட்டின் முன் உள்ள பிரச்சனை. நாட்டின் வறுமை போக வேண்டும். அதற்காக பாடுபட அனைவரையும் அழைக்கிறேன். ஆகவே பொருள் உற்பத்தியை பெருக்குவதற்காக எல்லாரும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்போழுது வருகிற திருத்தம் நியாயமானது. அந்த திருத்தத்தையும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**SRI E. L. RAGHAVA MUDALIAR :** கனம் அமைச்சர் அவர்களே, விலையேற்றமும் பணவீக்கமும் ஏற்படும் என்று சொல்லிவிட்டு அதை சமாளிக்க தகுந்த யோசனைகள் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். இந்த நகல் திட்டத்தைப் பற்றி யோசிக்கும்போது public sector-க்கு அதிக வசதி செய்து கொடுப்பதினால் விலையேற்றம் ஏற்படும் என்று தெரிந்தும் அதைத்தடுக்க ஏதாவது திட்டம் தயாரித்து இருக்கிறார்களா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** பணவீக்கம் ஏற்படுமானால் அதைத்தடுக்க திட்டத்தை சர்க்கார் தயாரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதைப்பற்றி சர்க்கார் கவனிக்கவில்லை என்று அங்கத்தினர்கள் நினைத்துக்கொள்ளக்கூடாது. அதைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டுமானால் இன்னும் பத்து நிமிஷத்திற்கு மேல் ஆகும். வேறு விஷயத்தைப்பற்றி யோசிக்கும்போது **inflation** ஐப்பற்றி விவாதம் ஏற்படும்போது அதைப்பற்றிக் கூறவிரும்புகிறேன். சர்க்கார் இந்தவிஷயத்தைப்பற்றி ஆலோசித்து வருகிறார்கள் என்பதைப்பற்றி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**MR. SPEAKER :** I believe the Government are accepting the amendments.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** Yes, Sir.

**MR. SPEAKER :** The question is—

" *Add* the following at the end :—

' and on such consideration, this House is of the opinion that the allotment of Rs. 170·3 crores to this State is totally inadequate to meet the developmental needs of the State'."

The amendment was put and carried.

**MR. SPEAKER :** The question is—

" *Add* the following at the end :—

' and on further consideration, this House is of opinion that due consideration should be given to the needs and the suitability of this State for the location of heavy industries in this State and for the due allotment for the same in the Plan'."

The amendment was put and carried.

**MR. SPEAKER :** I now put the motion, as amended, to the vote of the House. The question is—

" That the Draft Outline of the Second Five-Year Plan be taken into consideration and on such consideration, this House is of the opinion that the allotment of Rs. 170·3 crores to this State is totally inadequate to meet the developmental needs of the State and this House is also of opinion that due consideration should be given to the needs and the suitability of this State for the location of heavy industries in this State and for due allotment for the same in the Plan ".





The motion was put and carried unanimously.

## IV.—NON-OFFICIAL MOTION.

### REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES.

**MR. SPEAKER :** The Report of the Committee of Privileges on the definition of the term ' Precincts of the House ' will be taken into consideration in the next session.

## III.—GOVERNMENT MOTION—*cont.*

### (2) AMENDMENTS TO THE RULES UNDER THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACT, 1948.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** Sir, I move—

" That the following draft amendment to the rules published with Revenue Department Notification, dated the 21st December 1949, at pages 397–398 of the Rules Supplement to Part I of the *Fort. St. George Gazette*, dated the 27th December 1949, as subsequently amended which it is proposed to make in exercise of the powers conferred by section 40 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948), be approved :—

*Draft Amendment.*

To rule 3 of the said rules, the following proviso shall be added, namely :—

' Provided that in the case of any estate where the settlement operations are completed in fasli 1365, the Government may postpone the deposit of the whole or part of the compensation due in respect of that estate by a further period not exceeding six months '."

Sir, this is merely a technical amendment. Within nine months after the estates are taken over, we have to settle the entire compensation payable. Now we find that certain deductions have got to be made in respect of the excess collections which these estate owners have made from the ryots and which we have decided to return to the ryots. This will take some time to make the adjustments. That is why, we seek power under this rule to postpone the payment by another six months. I hope there will not be any objection to passing this amendment.

* **SRI V. K. RAMASWAMI MUDALIAR :** Mr. Speaker, Sir, even as it is, there is lot of delay and inconvenience regarding settlement and payment of compensation. So far as religious

institutions are concerned, most of them are starving and there is no puja done in many of the temples. Many of the displaced zamindars are financially in a very bad state. I would request the Government—while I will have no objection to postponements—to see that payments are made as early as possible. Even now, survey and settlement work is not being done as expeditiously as possible. This is my submission.

The motion was put and carried and the amendment was approved.

## V.—NON-OFFICIAL BILL.

### THE MADRAS MARUMAKKATTAYAM (AMENDMENT) BILL, 1954 (L.A. BILL NO. 16 OF 1954).

SRI M. NARAYANAN NAMBIAR: Sir, I beg to present the report of the Joint Select Committee on the Madras Marumakkattayam (Amendment) Bill, 1954 (L.A. Bill No. 16 of 1954). Thank you, Sir.

## VI.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS STATE AID TO INDUSTRIES (AMENDMENT) BILL, 1956 (L.C. BILL NO. 1 OF 1956) * AS PASSED BY THE COUNCIL.

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I move—

"That the Madras State Aid to Industries (Amendment) Bill, 1956 (L.C. Bill No. 1 of 1956), as passed by the Legislative Council be taken into consideration".

This is a non-controversial measure. As hon. Members are aware, in the Second Five-Year Plan, we are giving importance to the establishment of small-scale and cottage industries. For the purpose of promoting the small-scale and cottage industries, it is necessary to give Government aid. In the present Act, which is an antiquated one, if I may say so, there are many obstacles to giving aid to these industries. There are delays in giving aid because of the complicated procedure laid down in the Act for the purpose of giving aid. Also it is not possible under the existing Act to give aid by way of supplying the necessary machinery to the various industries. Therefore it is sought by this amendment to simplify the procedure and at the same time enlarge the scope of the aid to industries. The Government are taking sufficient safeguards to see that the provisions are not misused. This will always be watched by the Government. I may assure hon. Members that even though the provisions are being liberalized, how this Act is being worked will always be watched by the Government. We will see as far as humanly possible that there are no abuses. I would request the House to agree to this motion.

* Printed as Appendix I on pages 602-603 infra.



MR. SPEAKER: Motion moved—

"That the Madras State Aid to Industries (Amendment) Bill, 1956 (L.C. Bill No. 1 of 1956), as passed by the Legislative Council be taken into consideration."

*SRI K. T. RAJU: "கனம் சபாநாயகர் அவர்களே! இந்த 11-17 a.m.
தொழில் உதவி திருத்த மசோதாவை நான் வரவேற்கிறேன். காரணம் அதில் இன்றையதினம் கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியது போல நமது ராஜ்யத்தில் இதுவரை குடிசைத் தொழிலுக்கு மட்டும் கடன் வசதி செய்யப்பட்டிருந்தது. ரூபாய் ஐந்நூறு வரைதான் கொடுக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் குடிசைத் தொழில்களுக்குமட்டும் இல்லாமல் சிறு தொழில்களுக்கும் ரூபாய் ஐந்து லட்சம் வரை கடன் வசதி செய்துகொடுக்கலாம் என்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தின்மூலம் "சுயமாக சிறு தொழில்களும் குடிசைத் தொழில்களும் முன்னேறுவதற்கு கடன் உதவி அல்லது மானிய உதவி செய்வதற்கு" என்பது திருத்தத்தின் அடிப்படை நோக்கமாக இருக்கிறது. ஆகவே நாங்கள் வரவேற்கிறோம். இதே சமயத்தில் நம் ராஜ்யத்தில் நமக்குத் தேவையான பொருள்கள் பெரும்பாலும் பெரும் தொழில்கள் மூலம்தான் உற்பத்தியாகிறது. முதல் ஐந்தாண்டு திட்டத்தில் குடிசைத் தொழில் வளர்ச்சிக்கென்று வசதி செய்து கொடுத்தார்கள். இந்த ஐந்தாண்டு திட்டத்தில் குடிசைத் தொழில்களுக்கல்லாமல், சிறு தொழில்கள் பெருகவும் வசதி செய்ய முன்வந்திருக்கிறார்கள். சிறு தொழில்களுக்கு ஆங்காங்கே மூலதனம் போடுவது என்பது முடியாத காரியம். சென்னை ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால் Factory-கள் மூலம் சிறு தொழில்களுக்கான இயந்திரச் சாமான்களை தயார் செய்வதற்கும் மற்றும் காரியங்களைச் செய்வதற்கும் நூற்றுக்கணக்கான திறமையான தொழிலாளிகள் நம் ராஜ்யத்தில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இப்படிப்பட்ட கடன் உதவி செய்வதின்மூலம் அவர்கள் தாங்களாகவே சிறு தொழில்களை ஏற்படுத்த முன் வருவார்கள். அவர்களுக்கு உதவுவது மாத்திரமல்ல, நாட்டின் வளம் பெருகச் செய்யக்கூடியது. ஆகவே அவர்களை உற்சாகப்படுத்துவது நம் கடமை. ஆகையினால்தான் சர்க்காருக்கு சில யோசனைகள் சொல்ல விரும்புவது எல்லாம். நம் ராஜ்யத்திற்கு எந்த தொழில்கள் தேவையாக இருக்கின்றன. எப்படிபட்ட தொழில்கள் செய்கிறவர்களுக்கு எப்படி உதவி செய்யவேண்டுமென்றும் என்ன தொழில்களை எந்த இடத்தில் ஆரம்பிப்பது என்பது போன்ற விவரங்களைப்பற்றிய Survey ஒன்று நடத்தவேண்டும். சிறு தொழில்களில் முக்கியமானது எது என்று பார்த்து அதற்கு முக்கியத்வம் கொடுக்கவேண்டும். எப்படிப்பட்டவைகளுக்கு முதலில் கடன் வசதி செய்யவேண்டுமென்ற விவரங்கள் இருக்குமானால் அவைகளுக்கு உடனடியாக உதவிசெய்து கொடுக்கமுடியும். இப்பொழுது இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதின்மூலம் Director அவர்கள் Board-ஐயும் சர்க்காரையும் கலந்துகொள்ளாமலே கடன் கொடுக்க முடியும். இந்தமாதிரி ஐம்பது ஆயிரம் கிடைக்கும். சர்க்காரைக் கலந்துகொள்ளாமலே Director-க்கு ரூ ஐம்பது ஆயிரம் கொடுக்க செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பொது மக்களுக்கு பண உதவி கொடுக்க கூடிய நிலைமையை உண்டுபண்ணக்கூடிய மசோதாவை ஏற்றுக்கொள்வது நம் கடமையாகும். காரணம் கடன் வசதி செய்துகொடுக்கும் விஷயத்தில் நாம் பல விஷயங்களையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி உதவி பெறுவதிலுள்ள அனுகூலங்களையும் கவனித்து அந்த வசதி கிடைக்குமானால் அந்த உதவியை துஷ்பிரயோகம் ஆகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்த மாதிரி கடன் கிடைக்க வசதியாக இருந்தாலும் இந்த மாதிரியான சமயத்தில் நாம் முன் ஜாக்கிரதையாக இருப்பதுடன் நாம் வாங்குகிற பணம், பெற்றுக்கொள்கிற உதவி சரியான முறையில் பயன்படுகிறதா என்று பார்க்கவேண்டும், நம் தமிழ் நாட்டில் இருந்துவருகிற நிபுணர்களையெல்லாம் அவர்களுடைய ஆராய்ச்சி எல்லாம் உபயோகப்படுத்தி இந்த தொழில்களுக்கு உதவிகரமாக இருப்பதற்கு நாம்

[Sri K. T. Raju] [4th April, 1956

தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். முதலாவது நாம் சர்க்கார் உதவியின்மூலம் என்ன தொழில்களில் எப்படி எப்படி வளர்ச்சி ஏற்படுகிறது என்று நாம் பார்க்கவேண்டும். சர்க்கார் உதவியினால் உண்டாகும் தொழில்களின் தன்மை என்ன, இதில் அரசாங்கத்தின் மேற்பார்வை எப்படி யிருக்கிறது, நல்ல வகையில் செலவு செய்யப்படுகிறதா என்கிற கண்காணிப்பு இருந்தால்தான் இந்த மாதிரி சர்க்கார் உதவியுடன் நடத்தப்படுகிற சிறு தொழில்கள் பெருவாரியாக முன்னேற்றம் அடைந்து உற்பத்தியும் பெருகக்கூடும். இதை மக்கள் சரியான முறையில் பரிசீலிக்கவேண்டும். இது நம் கடமை. அப்படிச் செய்வதினால் நாட்டில் தொழில் வளம் ஏற்பட்டு இந்த மசோதாவினால் உத்தேசிக்கப்பட்டுள்ள நோக்கமும் நல்ல முறையில் நடந்தேற ஏதுவாக இருக்கும். சர்க்காரும் நாட்டின் தேவையை உணர்ந்து கடன் வசதியை உபயோகிப்பதிலுள்ள கஷ்டங்களை நீக்கி தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏதுவான தொழில்களை நடத்துவதற்கான எல்லா காரியங்களையும் செய்ய வேண்டும். 1922-ம் வருஷம் ஏற்படுத்திய இந்த தொழில்களுக்கு அரசாங்க கடன் உதவி அளிக்கும் சட்டத்தை விரிவுபடுத்துவதற்காக, மத்திய சார்க்காரினால் ஏற்படுத்தப்பட்ட திட்டக்கமிஷனின் யோசனையின் காரணமாக முக்கியமான சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இந்தத் திருத்தங்களை நான் ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. PALANIYANDI**: கனம் சபா நாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டுவந்திருக்கும் சிறு தொழில்களுக்கு கடன் உதவி அளிக்கும் மசோதாவை நான் ஆதரித்து சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சிறு தொழில்களுக்காக அரசாங்கம் ஐந்து லட்சம் ரூபாய் அளித்திருக்கிறது. விஸ்வேஸ்வரய்யா கமிட்டியின் யதாஸ்தை அமுலுக்கு கொண்டுவர முடியாமல் சட்டங்களெல்லாம் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. சிறு தொழில்களுக்கு பண உதவி செய்வதற்கு சட்டம் குறுக்கே நிற்கிறது.

சதாரணமாக சிறு கைத்தொழில் வேலை செய்பவர்களெல்லாம் தங்கள் உழைப்பைத்தான் தருவார்கள். அவர்களால் பணம் கொடுக்க முடியாது. இதுவரையிலும் அந்தத் தொழிலாளிகள் தங்கள் உழைப்பைக் கொடுத்து முதலாளிகளுக்கு அடிமையாகி கூலிவாங்கிக்கொண்டு வாழ்கிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் பணம் கொடுக்க முடியுமா என்றுதான் கேட்க ஆசைப்படுகிறேன். சென்ற யுத்தம் வந்த காலத்திலே பல தொழிற்சாலைகளுக்கு வெளிநாட்டிலிருந்து மோட்டார் ஸ்பேர் பார்ட்ஸ்கள் இறக்குமதி செய்ய முடியாத காரணத்தினால் பல மோட்டார் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. ஆனால் அதற்குப்பதிலாக சிறு வொர்க் ஷாப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. சண்டை முடிந்த பிறகு இறக்குமதிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டன. கனம் நிதி மந்திரி அவர்கள் பேசும்போது கூட "கோயமுத்தூர் ஜில்லாவிலே நல்லவேலை செய்யக்கூடிய நிபுணர்கள் இருக்கிறார்கள், எந்த வேலையை எடுத்துக்கொண்டாலும் திறமை உள்ளவர்கள் இருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். மேனாட்டில் உள்ள தொழிலாளிகளைப் போல வேலைசெய்யும் திறமை உள்ளவர்கள் தமிழ் நாட்டிலும் இருக்கிறார்கள். ஆகையால் அவர்களை ஒன்று சேர்த்து தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு பண உதவி அளிக்கவேண்டும். அவர்கள் உழைப்பைக்கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவு முறையின் மூலம் அவர்கள் தொழில் நடத்துவதற்கு சர்க்கார் பணம் உதவி செய்தால் அவர்கள் காரியங்களை சாதிக்க முடியும். அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருப்பது பணம். ஆதலால் அரசாங்கம் அதை உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்நாட்டில் இருக்கக்கூடிய சிறு தொழில்களும், கைத்தொழில்களும் எவ்வளவு இருக்கின்றன வென்று சர்வே செய்து அவைகளுக்கு பண உதவி செய்யவேண்டும். ஜப்பானிலே சிறு சிறு கைத்தொழிலுக்கு அரசாங்கம் ஆதரவு அளித்து வருகின்றன. அதேமாதிரியாக சிறு சிறு கைத்தொழிலுக்கு நமது அரசாங்கமும் பணம் உதவி அளித்து ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



4th April 1956] [Sri M. Palaniyandi]

இன்றையதினம் தமிழ்நாட்டில் தோல்பதனிடும் தொழில் ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. அத் தோல் பதனிடும் தொழிலாளர்களாகிய சக்கிலிகள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் உழைப்பைக் கொடுத்து, தோலைப் பதனிட்டு தங்கள் வாழ்நாளைக் கழிக்கிறார்கள். மிகவும் வறுமை நிலையில் வாடுகிறார்கள். உழைப்பது அவர்கள்; ஆனால் பெறுவதெல்லாம் முதலாளிகள். குறைந்த ஊதியத்தைப் பெற்று கஷ்ட ஜீவனம் நடத்துகிறார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டுறவு முறையில் தொழிற்சாலை ஏற்படுத்தினால், அவர்கள் சமூகம் முன்னேறும். அவர்களிடை வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கும் வழி ஏற்படும். அவர்களிடம் முதலாளிகள் நல்ல உழைப்பை வாங்கிக்கொண்டு, வெளிநாடுகளுக்கு பதனிடப்பட்ட தோலை ஏற்றுமதி செய்து நல்ல லாபம் அடைகிறார்கள். இந்த ஏழைத் தொழிலாளருக்கு கூட்டுறவு மூலம் அரசாங்கம் பண உதவி செய்தால் அவர்களின் நிலைமையும் மாறும். அப்பொழுதுதான் அவர்கள் தொழில் நடத்துவதற்கும், வியாபாரம் செய்வதற்கும் தைரியம் ஏற்படும். அவர்களால் நடத்தப்படும் தொழில்களிலோ, வியாபாரத்திலோ வரும் லாபம் எல்லாம் வேறு யாருக்கும் போய்ச் சேராமல், அவர்கள் கைக்கே போய்ச் சேரும். இப்பொழுது அவர்களுக்கு சரியானபடி கூலி கிடைப்பதில்லை. அவர்கள் சரியானபடி வாங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். ஆகையால்தான் இந்த கைத்தொழில் திருத்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இன்னும் விஸ்வேஸ்வரய்யா கமிட்டி யாதாஸ்தின் பிரகாரம் எல்லா இடங்களிலும் சரியானபடி நடைபெறுவதற்கு அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது தொழிலைப்பற்றிய எவ்விதமான சர்வேயும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். எந்தெந்த விளைபொருள்களை வைத்துக்கொண்டு எந்தெந்த தொழில்களை நடத்தமுடியும். எந்தெந்த வியாபாரத்தை செய்யமுடியும். அப்படி வியாபாரம் செய்தால் எந்தெந்த பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியும், என்பதைப்பற்றிய சர்வே தயாரிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்தச் சிறு கைத் தொழில்கள் மூலம் மக்களுக்கு உதவி செய்ய முடியும். இந்த ஏழைத் தொழிலாள மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இந்த திருத்தத்தை ஆதரித்து, என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri V. R. NAGARAJAN**: Mr. Speaker, Sir, I welcome this Bill, for more reasons than one. Firstly when we are laying considerable emphasis on the development of small-scale and cottage industries in the Second Five-Year Plan it is but appropriate that such a measure is introduced to give encouragement to small-scale and cottage industries. At present, Sir, the Director of Industries and Commerce has no powers to grant aid under the State Aid to Industries Act, 1922. All applications for grant of aid will have to be placed before the Board of Industries. I am a member of the Board of Industries. The Director of Industries and Commerce has often told us that a lot of time is taken up in sanctioning aid irrespective of the amount involved, as every application for aid has to be considered and disposed of by the Board of Industries only. It will be very advantageous if the Director of Industries and Commerce and his subordinates are entrusted with the power of sanctioning grants. I am glad that the relevant provision in the original Act is being amended in this Bill with a view to empower the Director of Industries and Commerce to grant aid to any cottage or small-scale industry up to an amount or value not exceeding twenty-five thousand rupees and to empower the

[Sri V. R. Nagarajan] [4th April 1956

subordinate officials to grant aid up to an amount not exceeding ten thousand rupees. I hope, as a result of passing this amendment, it will be possible to set up a net work of cottage and small-scale industries in the State. At present, Sir, large loans like Rs. five lakhs or Rs. ten lakhs are given for starting heavy industries like Vanaspathi industry. Instead of locking up huge sums in such useless ventures, the Government would do well to grant aid to a number of useful small-scale and cottage industries. Any help given by Government to start small-scale industries will be of considerable help to villagers in our State. With regard to the handloom industry also, this amending legislation will go a great way in providing the much needed help to a large number of handloom weavers in the State.

This Bill, Sir, seeks to amend section 6 of the old Act also so that subsidy may be granted for the conduct of research or for the purchase of implements or machinery or for any other specific purpose. It is not only our duty to help the growth of small-scale industries and cottage industries but we must also give encouragement to those who conduct research in the matter of development of small-scale industries. The amendment brought forward by the Government will be very useful for carrying out this purpose.

This Bill seeks to amend section 20 of the main Act so as to enable the Government to give help for marketing of products in the possession of any industrial business or enterprise. The amendment reads as follows :—

"(iii) after clause (g), the following clauses shall be added, namely :—

(h) from assisting any industrial business or enterprise in the purchase of implements or machinery;

(i) from assisting in the marketing of products in the possession of any industrial business or enterprise."

Even though, in our State, very many industries have been started, adequate facilities have not been provided on a decent scale for the marketing of the goods produced. Even though our producers are very successful in producing goods needed by the consumers, still, as there are not adequate marketing facilities, they are not able to push their goods into the market. In the case of mraketing commercial crops like cotton, groundnut, etc., lack of facilities for marketing the products is very keenly felt. In my own district of South Arcot, there is a very big co-operative society dealing in marketing groundnut. There are branches of the society established in the different taluks of the district. These societies gather groundnut from the various producers of groundnut in their area and market them. This amendment is a very useful one and will go a long way in helping persons who are not able to find market for the goods produced by them.

On the whole, the provisions of this Bill will conduce to the development of small-scale and cottage industries and I welcome the Bill.



4th April 1956]

Sri P. K. GOPALAKRISHNAN : Mr. Speaker, Sir, while welcoming this Bill, I would like to make a few remarks. This Bill makes provision for liberalizing the conditions for the grant of loans and aids to cottage and small-scale industries. Nowadays cottage industries are being organized on a co-operative basis. I want, Sir, that special preference should be given in the matter of giving aid to small-scale and cottage industries organized on a co-operative basis. Now, most of the cottage industries started by individuals are not flourishing. But they are bound to be a success if they are organized on a co-operative basis. I therefore want the Government to make a provision that preference in the matter of granting aid will be shown to cottage industries and small-scale industries organized on a co-operative basis. In Malabar many cottage industries are being organized on a co-operative basis. For example, co-operative societies have been organized for producing jaggery. The Government have given permission to tap coconut jaggery juice only to these co-operative societies. But these societies which have been started for the manufacture of jaggery are now facing very many difficulties on account of competition from the sugar and gur industries. If the Government give suitable aid to these cottage industries, they will be able to tide over the difficulties and flourish.

Then, Sir, there is the mat-making industry in Malabar district. Here mat is made out of screwpine. This industry gives employment to thousands of women all over the district. This industry will flourish very much if it is organized on a co-operative basis. The women at present are able to earn only three to four annas for a day's labour. If only Government give liberal aid to this industry and enable it to be organized on a co-operative basis, this industry will flourish very much and the workers employed in this industry will also get a living wage. The Government must take steps to help this industry because it is giving occupation to thousands of women in Malabar.

Then, there is the coir industry. Government are now thinking in terms of organizing coir industry also on a co-operative basis. 11-45 a.m.
In the Second Five-Year Plan, the Government want to organize about fifty co-operative societies in Malabar for coir industry. But, there is very little provision made for granting aid to these societies. With the passing of this Bill, I hope the Government will be in a position to give proper aid to coir co-operative societies. If proper aid is given, these societies can absorb not only thousands but even lakhs of workers who are engaged in that industry. This is one of the most important industries scattered throughout the coast-line of Malabar and if that industry is organized on a co-operative basis and if proper aid is given, unemployment in the coastal regions of Malabar can be solved to an extent though not in full. So, some of these industries which can be organized on a co-operative basis should be organized as such and Government should always give preference to co-operative societies whenever they want to give aid to these industries.

[Sri P. K. Gopalakrishnan] [4th April 1956

Secondly, let me deal with the agriculture side also. Our Prime Minister has dealt with the position of organizing agriculture also on a co-operative basis. That alone will help to mechanise our agriculture. The fragmentation of land is one of the acute problems that faces our country and that can be solved only through organizing co-operative farming. If only the Government include the agricultural co-operatives also in the sphere of granting aid under this Bill, then there will be incentive among peasants to organize agricultural co-operatives and organize agriculture in a mechanised way. So, I hope that proper amendment will be brought from the Government side itself to include agricultural co-operatives in the purview of granting aid with reference to small-scale industries. Then only, agricultural co-operatives will be in a position to buy agricultural implements and utilize them for improving agriculture and production. Government should see that fragmentation of holdings is avoided and agriculture organized on a co-operative basis. If that is done, it will be a great step undertaken by the Government. Production is bound to increase and the peasants will also be benefited. I hope that in the purview of this Bill, Government will include necessary provision for granting aid to co-operatives and not to individual peasants with regard to small-scale and cottage industries. I once again request the Government to see that several of the cottage industries which give occupation to thousands of people in the State and especially in Malabar are surveyed by them and they should see that they are organized on co-operative basis. They should see that co-operatives alone are given preference always in the matter of giving Government aid. With these words, I hope that this Bill, when enacted into law, will go a long way in helping our cottage and small-scale industries and also agriculture and will go a great way in dealing with the unemployment situation in the country.

11-50 a.m. * SRI O. KORAN: മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ചെറിയ വ്യവസായങ്ങൾക്ക് ഗവമ്മേണ്ടിൽനിന്നു ധനസഹായം ചെയ്യുന്നതിനുവേണ്ടിയുള്ള ഈ ബില്ല് ചർച്ചചെയ്യുന്ന അവസരത്തിൽ ചില കാര്യങ്ങൾ ഗവമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധയിൽ കൊണ്ടുവരാൻ ആഗ്രഹിക്കുന്നു. ഇന്ത്യയെപ്പോലെ കാർഷികപ്രധാനമായ ഒരു രാജ്യത്തു കുടിൽവ്യവസായങ്ങൾക്കുള്ള പ്രാധാന്യത്തെപ്പററി ഇന്നു ആരെയും പറഞ്ഞു മനസ്സിലാക്കേണ്ടതില്ല. ഗവമ്മേണ്ടു അതു എപ്പോഴും പറയാറുണ്ട്. എന്നിട്ടും ഏതെല്ലാം കുടിൽവ്യവസായങ്ങളാണ് നമ്മുടെ നാട്ടിലുള്ളതു്, ഇനിയും ഏതെല്ലാം നടപ്പിൽവരുത്താൻ കഴിയും, ഇന്നുള്ള വ്യവസായങ്ങളെ എങ്ങിനെയെല്ലാം അഭിവൃദ്ധിപ്പെടുത്താൻ കഴിയും എന്നിങ്ങനെയുള്ള കാര്യങ്ങളെ സംബന്ധിച്ചു ഗവമ്മേണ്ടു ശരിയായ ഒരന്വേഷണം നടത്തിയിട്ടില്ല. ഗവമ്മേണ്ടിനു അങ്ങിനെ വല്ല പരിപാടിയുമുണ്ടോ എന്നു ഈ അസംബ്ലിയിൽതന്നെ ചോദ്യം ചോദിച്ച സന്ദർഭങ്ങളിൽ ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി ഇല്ലെന്നുള്ള മട്ടിലാണ് ഉത്തരം നല്കിയിട്ടുള്ളതു്. അതിനുവേണ്ടി അടുത്ത കാലത്തെങ്ങും നടപടികളെടുക്കുവാൻ ആലോചനയില്ലെന്നും മനസ്സിലാക്കേണ്ടിയിരിക്കുന്നു. ചെറുകിട വ്യവസായങ്ങൾക്കും കുടിൽവ്യവസായങ്ങൾക്കും ധനസഹായം ചെയ്യുവാൻ ഗവമ്മേണ്ടു മുന്നോട്ടുവന്നിരിക്കുന്നതു് സ്വാഗതാർഹമാണെങ്കിലും അത്തരം വ്യവസായങ്ങളെപ്പററി ശരിയായ കണക്കുകളും വിവരങ്ങളും കൈയിലില്ലാതെ നിയമമുണ്ടാക്കിയതുകൊണ്ടുമാത്രം കുടിൽവ്യവസായങ്ങൾ അഭിവൃദ്ധിപ്പെടാൻ സാദ്ധ്യതയില്ല. ലോകത്തിലെ ഏററവും ചെറിയ രാജ്യങ്ങളിലൊന്നായ ജപ്പാൻ ഏററവും മുന്നണിയിലുള്ള രാജ്യങ്ങളുടെ കൂട്ടത്തിൽ സ്ഥാനം പിടിച്ചിട്ടുള്ളതു് കുടിൽവ്യവസായങ്ങളുടേയും ചെറുകിട വ്യവസായങ്ങളുടേയും അഭിവൃദ്ധിമൂലമാണ്. പക്ഷെ നമ്മുടെ ഗവമ്മേണ്ടിനെപ്പററി പറയുകയാണെങ്കിൽ കുടിൽവ്യവസായങ്ങളെ സംബന്ധിച്ചു ഒരു



4th April 1956] [Sri O. Koran]

അന്വേഷണം നടത്താൻപോലും ഇതുവരെ സാധിച്ചിട്ടില്ല. ഈ സന്ദർഭത്തിൽ മലബാറിലെ ചെറുകിട വ്യവസായങ്ങളേയും കുടിൽവ്യവസായങ്ങളേയും സംബന്ധിക്കുന്ന ചില പ്രശ്നങ്ങൾ പ്രത്യേകം ചൂണ്ടിക്കാണിക്കാനാഗ്രഹിക്കുന്നു.

തൊഴിലില്ലായ്മ അങ്ങേയററം കൊടുമ്പിരിക്കൊണ്ടിരിക്കുന്ന ഒരു പ്രദേശമാണ് മലബാർ. അവിടെ നല്ല നിലയിൽ നടത്താൻ സാധിക്കുന്ന അനവധി കുടിൽവ്യവസായങ്ങളുണ്ട്. എന്റെ സ്നേഹിതൻ ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ ശ്രീ പി. കെ. ഗോപാലകൃഷ്ണൻ ചകിരി വ്യവസായത്തിന്റെ കാര്യം എടുത്തുപറയുകയുണ്ടായി. പശ്ചിമതീരത്തു വലിയ തോതിൽ നടന്നുകൊണ്ടിരിക്കുന്ന ഒരു വ്യവസായമാണ് ചകിരി വ്യവസായം. ഇനിയും വളരെയധികം അഭിവൃദ്ധിപ്പെടുത്താൻ സാദ്ധ്യതകളുള്ള ഒരു വ്യവസായവുമാണിതു്. അതിനെ സഹകരണാടിസ്ഥാനത്തിൽ സംഘടിപ്പിക്കണമെന്നു വളരെക്കാലമായി ആവശ്യപ്പെട്ടുകൊണ്ടിരുന്നിട്ടും അതിനു ഇനിയും ഗവമ്മേണ്ടു മുന്നോട്ടുവന്നിട്ടില്ല. ചകിരിവ്യവസായത്തിന്റെ അഭിവൃദ്ധിയെ ആശ്രയിച്ചാണ് പശ്ചിമതീരത്തിലെ ലക്ഷക്കണക്കിനാളുകളുടെ ജീവിതാഭിവൃദ്ധി നിലകൊള്ളുന്നതു്. നാളികേരത്തിൽനിന്നു കിട്ടുന്ന ചിരട്ട മുതലായവകൊണ്ടു കട്ടകൾ, കൌതുകവസ്തുക്കൾ തുടങ്ങിയുള്ളവ നിർമ്മിക്കാനും ഇതുവരെ യാതൊരു ശ്രമവും നടത്തിയിട്ടില്ല. ചകിരി വ്യവസായത്തിനു സഹകരണസംഘങ്ങളേർപ്പെടുത്തുകയാണെങ്കിൽ ഇങ്ങനെയുള്ള മററു വ്യവസായങ്ങളും അഭിവൃദ്ധിപ്പെടുത്താൻ സാധിക്കും.

മുള, ചൂരൽ മുതലായവകൊണ്ടു കൊട്ട, പായ് തുടങ്ങിയുള്ള സാധനങ്ങളുണ്ടാക്കുകയെന്നുള്ളതു് ഇന്നും മലബാറിൽ ധാരാളമായുള്ള ഒരു വ്യവസായമാണ്. കൃഷിത്തൊഴിലാളികളും ഹരിജനങ്ങളുമാണ് ഈ തൊഴിലുകളിൽ അധികവും ഏർപ്പെട്ടിരിക്കുന്നതു്. അവക്കു യാതൊരു പ്രോത്സാഹനവും ഇല്ലാതെ കിടക്കുകയാണ്.

ഇന്നു ഗവമ്മേണ്ടിൽനിന്നു സഹായധനം കിട്ടുന്നതു് പണക്കാർക്കും ഗവമ്മേണ്ടിൽ സ്വാധീനം ചെലുത്താൻ സാധിക്കുന്ന കൂട്ടർക്കും മാത്രമാണ്. കൈത്തൊഴിലാളികൾക്കും ഗ്രാമീണർക്കും ഗവമ്മേണ്ടിൽനിന്നും സഹായം കിട്ടണമെങ്കിൽ സഹകരണാടിസ്ഥാനത്തിൽ സംഘടിച്ചാലേ പററൂ. ഈ നിയമം പാസ്സാക്കുന്നതോടുകൂടിത്തന്നെ ഈ രാജ്യത്തു ഏതെല്ലാം കുടിൽവ്യവസായങ്ങൾക്കു സാദ്ധ്യതയുണ്ടെന്നും ഏതെല്ലാം വ്യവസായങ്ങളെ സഹകരണാടിസ്ഥാനത്തിൽ സംഘടിപ്പിക്കാൻ സാധിക്കുമെന്നും കൂലങ്കഷമായ ഒരന്വേഷണം നടത്താൻകൂടി ഗവമ്മേണ്ടു മുന്നോട്ടു വരണമെന്നാണ് എനിക്കു പ്രധാനമായും ചൂണ്ടിക്കാണിക്കാനുള്ളതു്. എങ്കിൽ മാത്രമേ നമ്മുടെ നാട്ടിലെ സാധാരണക്കാരും സാധുക്കളുമായ തൊഴിലാളികൾക്കു ഈ നിയമത്തിന്റെ അടിസ്ഥാനത്തിൽ ഗവമ്മേണ്ടിൽനിന്നു സഹായം കിട്ടാനുള്ള സാദ്ധ്യതയുണ്ടാകൂ.

മലബാറിലെ കൈത്തറി നെയ്ത്തുകാരുടെ പ്രശ്നം അടുത്ത ദിവസം തന്നെ ഇവിടെ ചോദ്യോത്തരവേളയിൽ ഉന്നയിക്കപ്പെട്ടിട്ടുണ്ട്. കൈത്തറിക്കാരുടെ കുടുംബങ്ങൾ ഇന്നു പരപ്പനങ്ങാടി, താനൂർ മുതലായ സ്ഥലങ്ങളിൽനിന്നു സ്ത്രീകളും കുട്ടികളുമടക്കം കോഴിക്കോട്ടു മുതലായ സ്ഥലങ്ങളിൽ പോയി ഭിക്ഷയെടുത്തു ജീവിക്കുകയാണ്. പതിനായിരക്കണക്കിനുള്ള ആളുകൾ ഏർപ്പെട്ടിരിക്കുന്ന ഒരു കുടിൽവ്യവസായമാണ് കൈത്തറി നെയ്ത്തു്. അതിനു യാതൊരു പ്രോത്സാഹനവും കിട്ടാത്തതുനിമിത്തം ആ തൊഴിലാളികളും അവരുടെ കുടുംബങ്ങളും ഇന്നു പിച്ചതെണ്ടിയും പട്ടിണി കിടന്നും നശിച്ചുകൊണ്ടിരിക്കയാണ്. അവർക്കു ഒരു പാത്രം കഞ്ഞിക്കു വകയില്ല. അവരുടെ വീടുകൾ കെട്ടിമേയാതെ മഴയിലൊലിച്ചുപോയ്ക്കൊണ്ടിരിക്കുന്നു. അഭിവൃദ്ധിപ്പെടാൻ സാദ്ധ്യതയില്ലെന്നു മാത്രമല്ല, പട്ടിണി പോക്കാനും നാട്ടിൽ കിടന്നു പൊറുക്കാനുംപോലും സാദ്ധ്യമല്ലാത്ത സാഹചര്യങ്ങളാണ് അവർക്കുള്ളതു്. അങ്ങിനെയുള്ള കൈത്തറിക്കാരെ കൂടി സഹകരണാടിസ്ഥാനത്തിൽ സംഘടിപ്പിച്ചു സഹായധനം നൽകാൻ ഗവമ്മേണ്ടു മുന്നോട്ടുവരണമെന്നു ഞാൻ പ്രത്യേകം അഭ്യർത്ഥിച്ചുകൊള്ളുന്നു. ഇന്നു യാചകന്മാരായിക്കഴിയുന്ന എത്രയോ ആയിരം തൊഴിലാളികളെ പുനരുദ്ധരിക്കാൻ അതുകൊണ്ടു സാധിക്കും.

മലബാറിൽ അഭിവൃദ്ധിപ്പെടുത്താൻ സാദ്ധ്യതയുള്ള മറെറാരു വ്യവസായമാണ് തീപ്പെട്ടി വ്യവസായം. തമിഴ്നാട്ടിലെ ശിവകാശി മുതലായ സ്ഥലങ്ങളിൽ എത്രയോ ആയിരം ആളുകൾ ഇന്നു തീപ്പെട്ടി വ്യവസായത്തിലേർപ്പെട്ടിരിക്കുന്നുണ്ട്. ഗ്രാമങ്ങളിൽ സ്ത്രീകൾക്കു ചെയ്യാൻ കഴിയുന്ന ഒരു കുടിൽവ്യവസായമാണിതു്. മലബാറിലും തീപ്പെട്ടി

വ്യവസായം ഒരു യന്ത്രവൽകൃത വ്യവസായമെന്ന നിലക്കല്ലാതെ കുടിൽവ്യവസായമായി സംഘടിപ്പിക്കുകയാണെങ്കിൽ എത്രയോ ആയിരം ആളുകൾക്കു നല്ലൊരു തൊഴിലായിത്തീരും. ഇങ്ങിനെ എത്രയെത്ര കൈത്തൊഴിലുകളാണ് പ്രോത്സാഹനമില്ലാതെ മലബാറിൽ നശിച്ചുകിടക്കുന്നതു ! ഈ വ്യവസായങ്ങളെയെല്ലാം ഉദ്ധരിച്ചു അവിടത്തെ ഭയങ്കരമായ തൊഴിലില്ലായ്മക്കു ഗവർമ്മെണ്ട് പരിഹാരം കാണാൻ മുന്നോട്ടുവരേണ്ടിയിരിക്കുന്നു. എങ്കിൽ മാത്രമേ ഈ നിയമം പാസ്സാക്കിയതുകൊണ്ട് യഥാർത്ഥത്തിലുള്ള ചെറുകിട വ്യവസായക്കാർക്കും കൈത്തൊഴിലുകാർക്കും രക്ഷയുണ്ടാവൂ എന്നെടുത്തുപറഞ്ഞുകൊണ്ടും ഇത്രയും പറയാൻ സന്ദർഭം തന്നതിന്നു അങ്ങേക്കു നന്ദി പറഞ്ഞുകൊണ്ടും ഞാൻ എന്റെ പ്രസംഗം അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു.

11-55 a.m. * **SRI P. VENKATESA SHOLAGAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சிறு தொழில்களுக்குக் கடன் உதவி அளிக்கும் திருத்த மசோதாவை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் நம் நாட்டில் பல தொழில்களை சர்க்கார் உரிமைப் படுத்தியும்கூட தொழிலாளர்களுக்குக் கூலி அளிப்பதில் சமாதானம் இல்லை. சர்க்கரைத் தொழில் அபிவிருத்தி அடையவும் வேண்டிய வசதி கொடுக்கப்படுகிறது. குடிசைத் தொழில்களுக்கு ஜீவாதாரமான உதவி செய்யக்கூடிய அளவிலே, சட்டத்தைத் திருத்தி அமைப்பது, மிக மிக வரவேற்கக்கூடிய விஷயமாகும். பலர் சிறு தொழில்களை ஏற்படுத்துவதற்குத் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கும், சுகாதார வசதிகள் பெறுவதற்கும் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் இச்சட்டம் உதவும் என்று நம்புகிறேன். சென்ற யுத்த காலத்திற்கு முன், கூப்பர் கலப்பை என்ற ஒரு வகை கலப்பை வெளி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது. இப்போது அதே போன்ற ஒரு கலப்பை போஸ் கலப்பை என்ற பெயருடன் ராமனுதபுரத்தில் செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கலப்பை உற்பத்தி வெகு சுலபமான தொழிலாக இருந்த போதிலும் மிகுந்த பலன் தரக்கூடிய சாதனமாக இருக்கிறது. இது போன்ற சில பல தொழில்கள் எவ்வளவோ இருக்கின்றன. இந்தத் தொழில்களுக்கு இப்பொழுது கொண்டு வரப்படும் திருத்த மசோதாவானது பெரிய உதவிகரமாய் இருக்கும் என்று நம்புகிறேன்.

மேலும் இந்தச் சட்டமானது இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் உதவியாய் இருக்கும் என்று நம்புகிறேன். இம்மாதிரியான தொழில்களுக்குக் கடன் கொடுத்து உதவுவதற்குச் சாதகமாய் இருக்கும். இப்பொழுது செல்வம் மிகுந்தவர்களும், பணம் படைத்தவர்களும், சிபார்சு உடையவர்களும்தான் இந்த "ஸ்டேட் எய்ட்" இண்டஸ்டிரிஸ் சட்டத்தின் மூலம் எல்லா உதவிகளையும் பெற்று வருகிறார்கள். ஒருவருடைய சிபார்சும் இல்லாமல் பெரிய சக்தி இல்லாமல், பணம் இல்லாமல் எந்தத் தொழிலையும் நிறுவதற்கு முயற்சி செய்தால் அது கைகூடுவது என்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இப்படி நடைமுறையிலே அதிகமாக ஏழைகளுக்குப் பயன் படாமல் இருக்கும் திட்டத்தை நாடு சுபிட்சமடைவதற்குக் கொண்டுவருவதாகக் கூறுகிறார்கள். காலப் போக்கில், அதிகாரத்தில் இருப்பவர்களிடம் சாதாரண ஜனங்கள் போய் நேரடியாக ஒவ்வொரு காரியத்திற்கும் முயற்சி எடுப்பதற்கு, ஒருவித கஷ்டமின்றி அவர்களுக்கு வேண்டிய சௌகர்யங்கள் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**SRI S. RAMALINGAM** : கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன்பு விவாதத்தில் இருக்கும் இந்த மசோதாவை நாங்கள் வரவேற்கிறோம். சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமக் கைத்தொழில்கள் முதலிய தொழில்கள் வளருவதற்கான வகையில், அவைகளை நடத்துபவர்களுக்கு நிறையக் கடன் உதவியும், "ஸப்ஸிடி.யும்" கொடுப்பதற்கு வகை செய்வதற்காக, ஏற்கனவேயுள்ள சட்டத்தைத் திருத்தி இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த மசோதாவை நாங்கள் வரவேற்கிறோம். இப்போது, நாட்டில், குறிப்பாக, தொழில் அபிவிருத்தி அதிகமாக ஏற்படவேண்டும். தொழில்களை அபிவிருத்திசெய்து வேலையில்லாத் திண்



டாட்டத்தையும் போக்கவேண்டும். இந்த நோக்கங்களோடு நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கும்போது, இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதை நாங்கள் மிகவும் வரவேற்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தின் மீது நடந்த விவாதத்திற்கு பதிலளிக்கும் போது கனம் நிதி மந்திரி அவர்கள் "இந்த நாட்டிலுள்ள முதலாளிகள் தேசத்திற்கு உகந்தவர்கள் அல்ல என்று கருதி, கம்யூனிஸ்டுகள் அவர்களை வெறுக்கிறார்கள். முதலாளிகள் ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்று கம்யூனிஸ்டுகள் பேசுகிறார்கள்" என்று கூறினார்கள். இந்த நாட்டிலுள்ள முதலாளிகள் ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால் நாங்கள் கூறுவதெல்லாம், அவர்கள் கூறியது போலே, "இந்த நாட்டிலுள்ள முதலாளிகள், தேசத்தின் நன்மையை உத்தேசித்து, தாங்கள் லாபமடைவதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான முறையிலும், தேசம் முன்னேறுவதற்கு உதவுதற்கான முறையிலும், தொழில்களை நடத்தினால், இந்த முதலாளிகளை வளர்ப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை" என்பது தான். அந்த அடிப்படையில் சில அம்சங்கள் இந்த மசோதாவில் இருப்பதால், நாங்கள் இந்த மசோதாவை வரவேற்கிறோம். சர்க்காரிடமிருந்து கடன் உதவியோ, மற்ற உதவியோ பெறும் தொழிற்சாலைக்காரர்கள், சர்க்காரால் குறிப்பிடப்படக்கூடிய எண்ணிக்கை மாணவர்களுக்கு அந்தத் தொழில்களில் பயிற்சியளிக்கவேண்டும் என்று ஏற்கெனவேயுள்ள சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அம்மாதிரி பல மாணவர்களுக்குப் பயிற்சி யளித்தால் இன்னும் பல தொழிற்சாலைகளை புதிதாக ஆரம்பிக்கமுடியும். சென்ற ஆண்டுகளில், இந்தச் சட்டம் அமலில் இருந்த போது, சர்க்காரிடமிருந்து கடன் உதவி பெறும் தொழிற்சாலைக்காரர்கள் அந்தப் பகுதிப் பணத்தை, எந்த அளவுக்கு மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதுபற்றி பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. தொழிற்சாலைக்காரர்கள் சர்க்கார் கொடுக்கும் கடன்களை, தங்கள் சொந்த நலன்களையே பிரதானமாகக் கருதி, உபயோகித்திருக்கிறார்களா, அல்லது நாட்டின் நன்மையைக் கருதி, சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் மாணவர்களுக்குப் பயிற்சியளித்திருக்கிறார்களா என்று பரிசீலனை செய்திருப்பதாகத் தெரியவில்லை. எத்தனை மாணவர்களுக்கு தொழிற்சாலைக்காரர்கள் பயிற்சியளித்திருக்கிறார்கள் என்று கணக்கெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இனிமேலாவது, இந்தச் சட்டத்தை அமல் நடத்தும்போது, சர்க்காரிடமிருந்து கடன் உதவி பெறும் தொழிற்சாலைக்காரர்கள் தங்கள் சொந்த நலன்களுக்கே பணத்தை உபயோகிக்காமல் நாட்டின் நலன்களுக்காக உபயோகிக்கும்படி செய்வதில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது தொழில்களை விஸ்தரிப்பதற்காக இந்தச் சட்டத்தைத் திருத்துவதாகச் சொல்லப்படுகிறது. சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள் துஷ்பிரயோகம் செய்யப்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது இந்த சபையோரின் கவலையாகவும், சர்க்காரின் பொறுப்பாகவும் இருக்கவேண்டுமென்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன். முன்பே பல தவறுகள் நடந்திருக்கின்றன. தவறுகள் நடக்கவில்லை என்று சொல்லமுடியாது.

மேலும், சட்டத்தை liberalize பண்ணுகிறதாகச் சொல்லும்போது, எந்த அளவுக்கு தொழிற்சாலைகாரர்களுக்கு அதிக உதவி கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குத்தான் கொடுக்க வேண்டும். குறைந்தபட்ச உதவி ரூபாய் ஐந்து லட்சம் என்று கூறப்பட்டிருக்கிறது. குடிசைத் தொழில், சிறு கைத்தொழில் முதலிய தொழில்களாக இருந்தால் ரூபாய் 25,000 உதவியளிப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சலுகையைப் பயன் படுத்திக்கொண்டு, ஒரு சிலர் பூராப் பணத்தையும் தாங்களே பெற்றுக்கொண்டு மற்ற தொழிற்சாலைக்காரர்கள் உதவி பெற முடியாமல் செய்துவிடலாம். இதைத் தடுப்பதற்கு இந்த மசோதாவில் வகை செய்யப்படவில்லை. இதைத் தடுக்காவிட்டால், நாட்டில் வளரவேண்டிய எல்லாத் தொழில்களும் வளரமுடியாது ; கடன் உதவி பெற வேண்டிய பல தொழிற்சாலைக்காரர்கள் கடன் உதவிபெறமுடியாத நிலை

ஏற்படலாம். ஆகவே எல்லாத் தொழில்களும் வளருவதற்காக, கடன் உதவி தேவைப்படும் எல்லாத் தொழிற்சாலைக்காரர்களுக்கும் பணம் கிடைப்பதற்கு மசோதாவில் வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷம் நவம்பர் மாத இறுதியில் தஞ்சாவூர், ராமநாதபுரம் ஆகிய ஜில்லாக்களில் புயல் வந்தது. அங்கே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக, அரசாங்கத்தார் தங்களுடைய சக்தி பூராவையும் அந்தப் பக்கங்களில் திருப்பிவிட்டார்கள். அம்மாதிரிச் செய்துவிட்டு, தாங்கள் அந்த மக்களுக்கு தாராளமாக உதவி செய்திருப்பதாகச் சொன்னார்கள். மீண்டும் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களுடைய வாழ்க்கையைப் புனர் நிர்மாணம் செய்வதற்காக, சில விதிகளைத் திருத்தி, அவர்களுக்குக் கடன் தாராளமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்லப்பட்டது. உடனடியாக நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தும்கூட, புயலால் பாதிக்கப்பட்ட அனேக மக்களுக்கு உதவி இன்னும் கிடைக்கவில்லை. புயலால் பாதிக்கப்பட்டவர்களில் எத்தனைபேருக்கு இதுவரை கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சமீபத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் சொல்லும் போது, மன்னார்குடித் தாலுகாவிலிருந்து 4,000 பேர்கள் கடன் கோரி மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களில் 70 பேருக்குத்தான் கடன் கொடுக்கப்பட்டது என்றும், கனம் ரெவின்யூ மந்திரி ஸ்ரீ. மாணிக்கவேலு நாயக்கர் அவர்கள் கூறினார்கள். அந்த மாதிரி, "சர்க்கார் கொடுக்கும் கடன் உதவி துஷ்பிரயோகம் செய்யப்படாமலிருக்கப்பதற்காக, நாங்கள் ஜாக்கிறதையாக இருக்கிறோம், ஜாக்கிறதையாக இருக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டு, வெகு ஜாக்கிரதையாக இருந்து, ஒருவருக்கும் உதவியளிக்காமலிருட்பதும் கூடாது. ஆகவே, எந்த அளவுக்கு தொழிற்சாலைகாரர்களுக்கு பண உதவியளிக்கும் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமோ, அந்த அளவிற்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; எந்த அளவிற்கு உதவ வேண்டுமோ அந்த அளவிற்கு உதவ வேண்டும். அப்படிச் செய்தால்தான் எல்லாத் தொழிற்சாலைகாரர்களுக்கும் பண உதவி கிடைக்கும், எல்லாத் தொழில்களும் மேலும் மேலும் அபிவிருத்தியடையும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI A. GOVINDASAMY NAYAGAR: கனம் சபாநாயகர் அவர்களே, தொழில்களின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக, தொழில்களுக்கு சர்க்கார் உதவியளிப்பதற்காகக் கொண்டுவந்துள்ள இந்தத் திருத்த மசோதாவை நான் வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டில் தேசீயப் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால், உள் நாட்டுத் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். நம் நாட்டில் வளர்ச்சியடைந்து வரக்கூடிய தொழில்கள் விஷயத்தில் அதிக அக்கரை காட்டி, அந்தத் தொழில்களை நடத்துகிறவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக, அவர்களுக்கு பண உதவியும் அளித்தால், நமது நாட்டில் எல்லாத் தொழில்களும நிச்சயமாக வளரும்; மேலும், நமது நாட்டில் உற்பத்தியாகிற பொருள்களையே உபயோகிக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் நமது நாட்டு மக்களிடையே வளரும். நம் நாட்டில், சாதாரணமாக, க்ஷவரம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினாலும் கூட, வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பிளேடுகளைத்தான் வாங்கி உபயோகிக்க வேண்டுமென்ற எண்ணம் பெரும்பான்மையோருக்கு இருந்துவருகிறது. அது தான் நீண்ட நாட்களுக்கு உபயோகப்படும் என்ற நம்பிக்கை மக்களிடையே பரவிவருகிறது. அத்தகைய எண்ணம் தவறானது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக, ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்கள் அரையணாவுக்கு ஒரு பிளேடு வீதம் விற்கக்கூடியவாறு பிளேடுகளைத் தயாரிக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டினார்கள். அந்த பிளேடுகளையும் பல மாதங்களுக்கு உபயோகப்படுத்தமுடியும். இம்மாதிரியான தொழில்களுக்கு நம் நாட்டில் சர்க்கார் உதவி செய்யவில்லை. இம்மாதிரியான பல தொழில்களை





நடத்துவதற்கு ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்கள் முன்வந்தும், அவர்களுக்கு சர்க்கார் உதவியளிக்காததால், அவர்கள் அந்தத் தொழில்களை நடத்த முடியவில்லை. இதன் காரணமாகத்தான், அவர்கள் அதிருப்தியடைந்து, 12-01 a.m. சில வருடங்களுக்கு முன்பு, சென்னையில் பல கட்சிகளைக் கொண்ட மகா நாடு ஒன்றைக் கூட்டி, அந்த மகா நாட்டில் தாம் தயாரித்த மலிவான ரேடியோ செட்டுகளையும், கெடியாரம், பிளேட் இன்னும் பல பொருள்களையும் உடைத்தெறிந்தார்கள். தொழிலிலே ஜி. டி. நாயுடு அவர்களுக்கு அனுபவம் அதிகம். ஆனால், சர்க்கார் அக்கறை காட்டவில்லை என்ற அதிருப்தியோடு அந்தக் காரியத்தைச் செய்தார்கள். இப்பொழுது இத்தகைய திருத்த மசோதா வருவதால் திரு. ஜி.டி. நாயுடு அவர்களைக் கொண்டு எப்படி யாவது சிறு தொழில்களை விருத்தி செய்யவேண்டும். அவருடைய உதவியைக் கொண்டு காரியங்களைச் செய்தால் சிறு தொழில்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுகிறேன்.

மேலும், சென்னையிலே மவுண்ட் ரோடிலே இருக்கிற இண்டஸ்ட்ரியல் ம்யூஸியத்திற்கு திரு. வெங்கடசாமி நாயுடு அவர்கள் தலைவராக இருந்து வருகிறார். அந்த ஸ்தாபனத்திற்கு சர்க்கார் ஐயாயிரம் ரூபாய் சன்மானம் கொடுக்கிறார்கள். அது போதாது. ஒரு லட்ச ரூபாயாகவாவது அதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்திலே மியூஸியம் வைத்திருக்கிறார்கள். அதிலே விற்பனைப் பிரிவும் இருக்கிறது. தமிழ் நாட்டின் பல பகுதிகளிலே கைத்தொழில்களின்மூலம் உற்பத்தியாகும் பலவிதமான சாமான்கள் அங்கு வைத்திருக்கிறார்கள். அங்கு வைக்கப்பட்டிருக்கும் சாமான்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு நியாயமான விலையிலே விற்கப்படுகின்றன. தேசீயத்திலே நம்பிக்கையுள்ளவர்கள், நம்முடைய நாட்டுத் தொழில்கள் வளரவேண்டுமென்ற நல்ல எண்ணம் கொண்டவர்கள் எல்லாம் அந்தப் பொருள்களை வாங்கி உபயோகிக்கிறார்கள். வெளிநாட்டுப் பொருள்களை பகிஷ்கரிக்கும் அளவுக்கும் உள் நாட்டுப்பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்ற அளவுக்கும் அங்குள்ள பொருள்களை பெருமையோடு வாங்குகிறார்கள். பொருட் காட்சி நடத்தும் இடங்களிலெல்லாம் மேற்படி ஸ்தாபனத்தார் தங்களுடைய இண்டஸ்ட்ரியல் மியூஸியத்திலுள்ள பொருள்களை கண்காட்சிச் சாலைகளில் வைக்கிறார்கள். பொதுமக்களெல்லோரும் இம்மாதிரி பொருள்களை வாங்கி உபயோகிக்கும் அளவில் பொருட்காட்சிச் சாலைகளில் எல்லாம் வைத்து பிரபலப்படுத்துகிறார்கள். இதற்கு போட்டியாக ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் அஸோஸியேஷன் என்று ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கி யிருக்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் மியூஸியத்திற்குப் போட்டியாக வருகிற அளவுக்கு அது இயங்கிவருகிறது. இண்டஸ்ட்ரியல் மியூஸியத்திற்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாத முறையிலே ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் அஸோஸியேஷன் இயங்க வேண்டுமென்றும், மியூஸியத்தை நல்ல முறையிலே பாதுகாக்கவேண்டுமென்றும் கனம் நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், சிறு சிறு தொழில்களுக்கு நிதி வழங்கும்போது இந்த தொழில் ஸ்தாபனத்தின் மூலமாக வழங்கினால் நலமாக இருக்கும். நல்ல அனுபவசாலியாகவுள்ள திரு. வெங்கடசாமி நாயுடு போன்றவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சர்க்காரத் தரப்பிலுள்ள திரு. ராஜம் ராமசாமி போன்றவர்களும் அந்த ஸ்தாபனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். Director of Industries அவர்களும் இதில் அங்கம் வகிக்கிறார்கள். சிறு சிறு தொழில்களுக்கு சர்க்கார் நிதி வழங்கும்போது இந்த ஸ்தானத்தின் மூலமாக வழங்கினால் தொழில்களுக்குப் பாதுகாப்பு இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய தென்னாற்காடு ஜில்லாவிலே, எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் திரு. வி. ஆர். நாகராஜன் அவர்கள் பேசியதுபோல், வனஸ்பதி தொழிற்சாலைக்காக சர்க்கார் பத்து லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறதேயொழிய, தொழில் இன்னும் ஆரம்பமாகவில்லை. அந்தப் பணத்தை திரும்பி வாங்கிவிடும் அளவிலே

ஏற்படலாம். ஆகவே எல்லாத் தொழில்களும் வளருவதற்காக, கடன் உதவி தேவைப்படும் எல்லாத் தொழிற்சாலைக்காரர்களுக்கும் பணம் கிடைப்பதற்கு மசோதாவில் வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷம் நவம்பர் மாத இறுதியில் தஞ்சாவூர், ராமநாதபுரம் ஆகிய ஜில்லாக்களில் புயல் வந்தது. அங்கே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக, அரசாங்கத்தார் தங்களுடைய சக்தி பூராவையும் அந்தப் பக்கங்களில் திருப்பிவிட்டார்கள். அம்மாதிரிச் செய்துவிட்டு, தாங்கள் அந்த மக்களுக்கு தாராளமாக உதவி செய்திருப்பதாகச் சொன்னார்கள். மீண்டும் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களுடைய வாழ்க்கையைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக, சில விதிகளைத் திருத்தி, அவர்களுக்குக் கடன் தாராளமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்லப்பட்டது. உடனடியாக நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தும்கூட, புயலால் பாதிக்கப்பட்ட அனேக மக்களுக்கு உதவி இன்னும் கிடைக்கவில்லை. புயலால் பாதிக்கப்பட்டவர்களில் எத்தனைபேருக்கு இதுவரை கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சமீபத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் சொல்லும்போது, மன்னார்குடித் தாலுகாவிலிருந்து 4,000 பேர்கள் கடன் கோரி மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களில் 70 பேருக்குத்தான் கடன் கொடுக்கப்பட்டது என்றும், கனம் ரெவின்யூ மந்திரி ஸ்ரீ. மாணிக்கவேலு நாயக்கர் அவர்கள் கூறினார்கள். அந்த மாதிரி, "சர்க்கார் கொடுக்கும் கடன் உதவி துஷ்பிரயோகம் செய்யப்படாமலிருக்கப்பதற்காக, நாங்கள் ஜாக்கிறதையாக இருக்கிறோம், ஜாக்கிறதையாக இருக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டு, வெகு ஜாக்கிரதையாக இருந்து, ஒருவருக்கும் உதவியளிக்காமலிருப்பதும் கூடாது. ஆகவே, எந்த அளவுக்கு தொழிற்சாலைகாரர்களுக்கு பண உதவியளிக்கும் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமோ, அந்த அளவிற்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; எந்த அளவிற்கு உதவ வேண்டுமோ அந்த அளவிற்கு உதவ வேண்டும். அப்படிச் செய்தால்தான் எல்லாத் தொழிற்சாலைகாரர்களுக்கும் பண உதவி கிடைக்கும், எல்லாத் தொழில்களும் மேலும் மேலும் அபிவிருத்தியடையும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

***Sri A. GOVINDASAMY NAYAGAR**: கனம் சபாநாயகர் அவர்களே, தொழில்களின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக, தொழில்களுக்கு சர்க்கார் உதவியளிப்பதற்காகக் கொண்டுவந்துள்ள இந்தத் திருத்த மசோதாவை நான் வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டில் தேசீயப் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால், உள் நாட்டுத் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். நம் நாட்டில் வளர்ச்சியடைந்துவரக்கூடிய தொழில்கள் விஷயத்தில் அதிக அக்கரை காட்டி, அந்தத் தொழில்களை நடத்துகிறவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக, அவர்களுக்கு பண உதவியும் அளித்தால், நமது நாட்டில் எல்லாத் தொழில்களும நிச்சயமாக வளரும்; மேலும், நமது நாட்டில் உற்பத்தியாகிற பொருள்களையே உபயோகிக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் நமது நாட்டு மக்களிடையே வளரும். நம் நாட்டில், சாதாரணமாக, க்ஷவரம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினாலும் கூட, வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பிளேடுகளைத்தான் வாங்கி உபயோகிக்க வேண்டுமென்ற எண்ணம் பெரும்பான்மையோருக்கு இருந்துவருகிறது. அது தான் நீண்ட நாட்களுக்கு உபயோகப்படும் என்ற நம்பிக்கை மக்களிடையே பரவிவருகிறது. அத்தகைய எண்ணம் தவறானது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக, ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்கள் அரையணாவுக்கு ஒரு பிளேடு வீதம் விற்கக்கூடியவாறு பிளேடுகளைத் தயாரிக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டினார்கள். அந்த பிளேடுகளையும் பல மாதங்களுக்கு உபயோகப்படுத்தமுடியும். இம்மாதிரியான தொழில்களுக்கு நம் நாட்டில் சர்க்கார் உதவி செய்யவில்லை. இம்மாதிரியான பல தொழில்களை





நடத்துவதற்கு ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்கள் முன்வந்தும், அவர்களுக்கு சர்க்கார் உதவியளிக்காததால், அவர்கள் அந்தத் தொழில்களை நடத்த முடியவில்லை. இதன் காரணமாகத்தான், அவர்கள் அதிருப்தியடைந்து, 12-01 a.m. சில வருடங்களுக்கு முன்பு, சென்னையில் பல கட்சிகளைக் கொண்ட மகா நாடு ஒன்றைக் கூட்டி, அந்த மகா நாட்டில் தாம் தயாரித்த மலிவான ரேடியோ ஸெட்டுகளையும், கெடியாரம், பிளேட் இன்னும் பல பொருள்களையும் உடைத்தெறிந்தார்கள். தொழிலிலே ஜி. டி. நாயுடு அவர்களுக்கு அனுபவம் அதிகம். ஆனால், சர்க்கார் அக்கறை காட்டவில்லை என்ற அதிருப்தியோடு அந்தக் காரியத்தைச் செய்தார்கள். இப்பொழுது இத்தகைய திருத்த மசோதா வருவதால் திரு. ஜி.டி. நாயுடு அவர்களைக் கொண்டு எப்படி யாவது சிறு தொழில்களை விருத்தி செய்யவேண்டும். அவருடைய உதவியைக் கொண்டு காரியங்களைச் செய்தால் சிறு தொழில்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுகிறேன்.

மேலும், சென்னையிலே மவுண்ட் ரோடிலே இருக்கிற இண்டஸ்ட்ரியல் ம்யூஸியத்திற்கு திரு. வெங்கடசாமி நாயுடு அவர்கள் தலைவராக இருந்து வருகிறார். அந்த ஸ்தாபனத்திற்கு சர்க்கார் ஐயாயிரம் ரூபாய் சன்மானம் கொடுக்கிறார்கள். அது போதாது. ஒரு லட்ச ரூபாயாகவாவது அதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்திலே மியூஸியம் வைத்திருக்கிறார்கள். அதிலே விற்பனைப் பிரிவும் இருக்கிறது. தமிழ் நாட்டின் பல பகுதிகளிலே கைத்தொழில்களின்மூலம் உற்பத்தியாகும் பலவிதமான சாமான்கள் அங்கு வைத்திருக்கிறார்கள். அங்கு வைக்கப்பட்டிருக்கும் சாமான்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு நியாயமான விலையிலே விற்கப்படுகின்றன. தேசீயத்திலே நம்பிக்கையுள்ளவர்கள், நம்முடைய நாட்டுத் தொழில்கள் வளரவேண்டுமென்ற நல்ல எண்ணம் கொண்டவர்கள் எல்லாம் அந்தப் பொருள்களை வாங்கி உபயோகிக்கிறார்கள். வெளிநாட்டுப் பொருள்களை பகிஷ்கரிக்கும் அளவுக்கும் உள் நாட்டுப்பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்ற அளவுக்கும் அங்குள்ள பொருள்களை பெருமையோடு வாங்குகிறார்கள். பொருட் காட்சி நடத்தும் இடங்களிலெல்லாம் மேற்படி ஸ்தாபனத்தார் தங்களுடைய இண்டஸ்ட்ரியல் மியூஸியத்திலுள்ள பொருள்களை கண்காட்சிச் சாலைகளில் வைக்கிறார்கள். பொதுமக்களெல்லோரும் இம்மாதிரி பொருள்களை வாங்கி உபயோகிக்கும் அளவில் பொருட்காட்சிச் சாலைகளில் எல்லாம் வைத்து பிரபலப்படுத்துகிறார்கள். இதற்கு போட்டியாக ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் அஸோஸியேஷன் என்று ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கி யிருக்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் மியூஸியத்திற்குப் போட்டியாக வருகிற அளவுக்கு அது இயங்கிவருகிறது. இண்டஸ்ட்ரியல் மியூஸியத்திற்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாத முறையிலே ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் அஸோஸியேஷன் இயங்க வேண்டுமென்றும், மியூஸியத்தை நல்ல முறையிலே பாதுகாக்கவேண்டுமென்றும் கனம் நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், சிறு சிறு தொழில்களுக்கு நிதி வழங்கும்போது இந்த தொழில் ஸ்தாபனத்தின் மூலமாக வழங்கினால் நலமாக இருக்கும். நல்ல அனுபவசாலியாகவுள்ள திரு. வெங்கடசாமி நாயுடு போன்றவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சர்க்கார்த் தரப்பிலுள்ள திரு. ராஜம் ராமசாமி போன்றவர்களும் அந்த ஸ்தாபனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். Director of Industries அவர்களும் இதில் அங்கம் வகிக்கிறார்கள். சிறு சிறு தொழில்களுக்கு சர்க்கார் நிதி வழங்கும்போது இந்த ஸ்தானத்தின் மூலமாக வழங்கினால் தொழில்களுக்குப் பாதுகாப்பு இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய தென்னாற்காடு ஜில்லாவிலே, எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் திரு. வி. ஆர். நாகராஜன் அவர்கள் பேசியதுபோல், வனஸ்பதி தொழிற்சாலைக்காக சர்க்கார் பத்து லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறதேயொழிய, தொழில் இன்னும் ஆரம்பமாகவில்லை. அந்தப் பணத்தை திரும்பி வாங்கிவிடும் அளவிலே

[Sri A. Govindasamy Nayagar] [4th April 1956

சர்க்கார் யோசித்து வருவதாக நமது தொழில் மந்திரி கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் சொன்னார்கள். பணத்தைத் திருப்பி வாங்காமல் சர்க்காரோ அல்லது கூட்டுறவு முறையிலோ வனஸ்பதித் தொழிற் சாலையை எடுத்து நடத்துவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தென்னாற்காடு ஜில்லாவிலே அதிகமாக மணிலாக்கொட்டை உற்பத்தியாகிறது. மூலப்பொருள் ஏராளமாக அங்கு கிடைப்பதால் அங்கு ஒரு வனஸ்பதித் தொழிற்சாலையை ஏற்படுத்தினால் நன்மை ஏற்படும்; வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும், விவசாயிகளுடைய பொருளாதார நிலையும் உயரமுடியும். ஆகையால், வனஸ்பதித் தொழிற்சாலையை தனி ஸ்தாபனத்தார் ஆரம்பிக்காவிட்டால், சர்க்காரே எடுத்து நடத்தினால் மிகவும் லாபகரமாக இருக்கும், அந்த வட்டார மக்களுக்கு நன்மை பயக்குமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மறுபடியும் வலியுறுத்திச் சொல்கின்றேன்.

தென்னாற்காடு ஜில்லாவிலே பண்ணுருட்டியில் கையினால் பொம்மை செய்யும் தொழில் நடந்துவருகிறது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்வர்களுக்குப் போதுமான பண வசதி இல்லாததாலும், அரசாங்கத்தினிடமிருந்து எந்தவிதமான உதவி இல்லாத காரணத்தாலும் தொழில்கள் நசிக்கக்கூடிய நிலை இருக்கிறது. அரசாங்கம் உதவி செய்தால் பொம்மை செய்யும் தொழில் பண்ணுருட்டியில் அபிவிருத்தியடையும். திண்டிவனம் தாலூகாவில் பொம்மையப்பாளையம் என்ற கிராமத்தில் இருக்கிற ஆண் பெண் அனைவரும் பொம்மை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் சர்க்கார் உதவி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

தென்னை மரங்கள் அதிகமாக இருக்கும் பகுதியில் கயிறு தயாரிக்கும் தொழில்களை இப்பொழுது ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்கள். மலையாளத்தில் எப்படி கயிறு தயாரிக்கும் தொழில் நடந்து வருகிறதோ அதே அளவுக்கு தென்னாற்காடு ஜில்லாவில் கயிறு தயாரிக்கும் தொழிலில் மக்கள் ஈடுபட்டிருப்பதால், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் சர்க்கார் உதவி செய்து, அந்தத் தொழிலுக்கும் ஊக்கம் அளிக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தென்னாற்காடு ஜில்லாவிலே கடலூர் பழைய டவுனில் O.P.C. ஆயில் ரிபைனரி ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மணிலா எண்ணெய் சுத்தம் செய்யும் ஸ்தாபனம் அது. அதற்குத் தனிப்பட்ட முதலாளியால்தான் ஏற்பாடு செய்யப் பட்டுவருகிறது. அரசாங்கம் இதற்கும் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த ஆயில் ரிபைனரியை மராமத்து இலாகா மந்திரி அவர்கள் திறந்து வைத்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில், "சர்க்கார் இதற்கு வேண்டிய உதவியை அவசியம் செய்யும்" என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்த வாக்குறுதியை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்தி, இதுபோன்ற புதிய புதிய ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற்கான முறையிலே ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தென்னாற்காடு ஜில்லாவிலே ஆயில் டெக்னாலஜி ஏற்படுத்தி அதன்மூலமாக தென்னாற்காடு ஜில்லாவில் விளையக்கூடிய எண்ணெய் வித்துகளிலிருந்து நன்மை பெறுவதற்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I find that there has been an unanimous welcome to this Bill from all sides of the House. That is because this will encourage the small-scale and village industries. Particularly during the Second Five-Year Plan, it is necessary to utilize all the talents available in this sector for the purpose of increasing our productive capacity. Many



4th April 1956] [Sri C. Subramaniam]

good artisans and many good workmen to-day find it impossible to establish a workshop or a foundry or a factory for want of capital. I hope, Sir, that this measure will help all those people to get the necessary capital for establishing these workshops and foundries. I may assure hon. Members of the House that we will do our best to see that all deserving cases will get help under the amended provisions of this measure.

The hon. Member, Sri Gopalakrishnan, was making a suggestion that the agricultural co-operative concerns also should be helped under this measure. Sir, this is a Bill under which the Director of Industries and Commerce will be in charge of the functions of distributing the various loans and assistance to the industrial concerns. Therefore, it will not possible to include the agricultural sector also in this Bill. Further, separate measures will be taken for the purpose of encouraging the co-operative sector in the field of agriculture. Therefore, I do not think that it is necessary to insert such a provision in this Bill. I hope the House will accept the motion and also pass the Bill unanimously.

MR. SPEAKER : The question is—

"That the Madras State Aid to Industries (Amendment) Bill, 1956 (L.C. Bill No. 1 of 1956) as passed by the Legislative Council be taken into consideration." 12-10 p.m.

The motion was put and carried and the Bill was considered.

Clauses 2 and 4 and clause 3 were put and carried.

*Clause 5.*

SRI P. K. GOPALAKRISHNAN : Sir, I have given notice of an amendment to this clause.

MR. SPEAKER : I understand that the hon. Member has given the amendment in the office only just now. Anyway, he can speak on the clause.

SRI P. K. GOPALAKRISHNAN : The object of my amendment is to include agricultural co-operative society within the meaning of "small-scale industry". The hon. Minister said in the couse of his reply that this Act will be administered by the Director of Industries and Commerce and that agriculture and industry could not be combined. My suggestion was to see that agriculture was organized into an industry. In the civilized society of to-day, the difference between agriculture and industry is becoming narrower and narrower, because agricultural operations are carried on a mechanised basis. Therefore the distinction between agriculture and industry can be removed and agricultural co-operative society may also be included within the meaning of "small-scale industry". This suggestion was made by me with a view to give an incentive to farmers for organizing agricultural co-operatives and to see that agriculture also was organized on an industrial basis, as these steps will be of immense help.

THE HON. SRI C. SUBRAMANIAM : I have already stated why I am unable to accept the suggestion. I do not think we can mix it up with this Bill. I may assure the hon. Member that we will certainly keep this suggestion in mind and provide necessary funds for the improvement of agriculture.

The clause was put and carried.

Clauses 6, 7, 8, 9, 10, 11, 12 and 13 were put and carried.

*Clause* 14.

SRI P. K. GOPALAKRISHNAN : The conditions, restrictions and limitations which the State Government may lay down may be placed on the table of the House.

THE HON. SRI C. SUBRAMANIAM : They will always be placed on the table.

The clause was put and carried.

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR : கனம் சபா நாயகர் அவர்களே, இந்த ஷரத்தின் மூலம் குடிசைத் தொழில்களுக்கு சகாயம் செய்வதற்கு ஏற்பாட்டைச் சர்க்கார் செய்திருக்கிறது. குடிசைத் தொழில்களின் மூலம் உற்பத்தியாகும் சில பொருள்கள் இயந்திரசாலைகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உதாரணமாக, மானமதுரையில் குடிசைத் தொழிலாக சிமெண்ட் குழாய்களை ஒரு குடும்பத்தார் உற்பத்தி செய்து வருகிறார்கள். அதே சிமெண்ட் குழாய்களை உற்பத்தி செய்ய இயந்திர சாலை வைத்து நடத்தும் ஒரு கோடீஸ்வரரால் பல இடங்களில் தொழிற்சாலைகள் நடத்தப்பட்டு அந்தத் தொழிற்சாலைகளில் மேற்படி குழாய்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இப்பொழுது சர்க்கார் குடிசைத் தொழிலாக சிமெண்டு குழாய்கள் உற்பத்தி செய்பவர்களுக்கு எவ்வளவு பணச் சகாயம் கடனாக உதவிய போதிலுங்கூட, குடிசைத் தொழிலாக நடத்தி வரும் இவர்கள், இந்தச் சமான்களை உற்பத்தி செய்வதற்குச் செலவிடும் பணத்தைக் காட்டிலும் மிகவும் குறைவான தொகையைச் செலவழித்து பெரு முதலாளிகள் அதே குழாய்களை இயந்திர மூலம் உற்பத்தி செய்ய சகாயங்கள் இருக்கின்றன. அவ்விதம் இருக்கும்போது குடிசைத் தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் என்ன விலைக்கு விற்றால்தான் கட்டுமோ அந்த விலைக்கு மிகக் குறைந்த விலையிலேயே அவர்கள் தங்களுடைய சாமான்களை மார்க்கெட்டில் விற்பதற்குத் தயாராக வந்து, இவர்களுடன் போட்டி போட்டு, குடிசைத் தொழில்களை நசுங்கச் செய்த பிற்பாடு, தாங்கள் ஏகபோக உரிமையை அடைந்து, தங்கள் சாமான்களை, விலை உயர்த்தி பெருத்த லாபத்திற்கு விற்கலாமென்ற நோக்கத்துடன் பெரு முதலாளிகள் வேலை செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட அநீதியான போட்டிக்கு இடம் இருக்கக் கூடாது. மானமதுரையில் மாணிக்கம் அண்டு ஸன் குடும்பத்தார் வேறு சில குடும்பங்களை தங்களுடைய உதவிக்குச் சேர்த்துக் கொண்டு சிமெண்டுக் குழாய்களைத் தயாரித்து வருகிறார்கள்.

இராமனாதபுரம் ஜில்லாவில் சமீபத்தில் ஏற்பட்ட புயலின் கொடூரத்தினால் கண்மாய்கள் உடைந்து, மடைகள் சீரழிந்து போய் விட்டதினால் சிமெண்ட் குழாய்கள் அங்கு ஏராளமாக வேண்டியிருக்கின்றன. சர்க்காரே மராமத்து வேலைகளைக் கைக் கொண்டிருப்பதால் சர்க்காரே சிமெண்ட் குழாய்களை வாங்கி மராமத்து வேலைகளைச் செய்யும்படியான நிலைமையில் இருக்கிறார்கள். இந்த நிலைமையில் சிமெண்டுக் குழாய்களுக்கு ஏராளமாக கிராக்கி இருக்கிறதென்பதைத் தெரிந்து, இயந்திரங்களின் மூலம் உற்பத்தி செய்பவர்கள் தங்களுடைய சாமான்களை மிக மிகக்





குறைந்த விலைக்கு சர்க்காருக்குக் கொடுக்க முன்வந்து குடிசைத் தொழில்கள் நடத்திவருபவர்களை எப்படியாவது நசுக்கி விடவேண்டும் என்று முயற்சி செய்து வருகிறார்கள். ஆகையால், சர்க்கார் இது விஷயத்தில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், தாங்கள் கடன் மாத்திரம் கொடுத்தால் போதாது; அநீதியான போட்டியை ஏற்படுத்தி சிறு தொழிலாளிகளை நசிக்கி விடும்படியாக முயற்சி செய்கிறவர்களுக்கு ஒரு வசதியையும் செய்து கொடுக்கக்கூடாது என்பதை மனதில் வைத்துக் கொண்டு, தாங்கள் மராமத்துக்காக வாங்க வேண்டிய சிமெண்ட் குழாய்களுக்கு குடிசைத் தொழில்களாக வேலைசெய்து வருபவர்கள் எவ்வளவு சர்க்காருக்கு ஸப்ளை செய்ய முடியுமோ அவ்வளவு ஸப்ளையையும் செய்த பிற்பாடுதான், உபரியாக வேண்டிய சாமான்களை இயந்திரசாலைகளில் உற்பத்தி செய்பவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளவேண்டுமென்ற ஒரு கொள்கையை அனுஷ்டிக்க வேண்டும். அப்படி அனுஷ்டித்தால்தான் பெரிய அளவில் இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யும் தொழிலாளிகளுடைய கெட்ட நோக்கம் நிறைவேறாமல், குடிசைத் தொழிலை விருத்தி செய்து அதன் மூலம் வயிறு பிழைக்கவேண்டுமென்று முயற்சித்து வரும் சில குடும்பத்தார்கள் முன்னுக்கு வர முடியும். ஆகையால், இது விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்தி அநீதியான போட்டி, இயந்திர சாலைகளை நடத்துபவர்களினால் ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்பட்டாலுங்கூட குடிசைத் தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் சாமான்களுக்கே முதல் சலுகைகாட்டி, சர்க்கார் அந்தச் சாமான்களை வாங்கி, அவர்களிடமிருந்து உற்பத்தியாகும் பொருள்கள் எல்லாவற்றையும் வாங்கியபிற்பாடு, மீதி தேவைப்படும் சாமான்களைத்தான் பெரு முதலாளிகளிடமிருந்து வாங்க வேண்டுமென்ற கொள்கையை அனுஷ்டிக்க வேண்டும் என்பதாக கேட்டுக் கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

SRI M. PALANIYANDI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கிருஷ்ணசாமி அய்யங்கார் சொன்ன விஷயம் பூராவையும் நான் 12-19 a.m.
முழு மனதுடன் ஆதரிக்கிறேன். சாதாரணமாக வெளி நாட்டிலிருந்து வரக் கூடிய சாமான்களின் விலையைக் கட்டுப் படுத்துவதற்கு டாரிப் கமிஷன் இருக்கிறது. அதைப் போலவே இப்பொழுது உள்நாட்டில் பல தொழில்கள் நடைபெற்று வருகின்றன. ஹ்யூம்பைப் போன்றவைகள் உள்நாட்டில் செய்யப்படுகின்றன. இந்தியன் ஹ்யூம்பைப் கம்பெனி இந்தியா பூராவும் தொழில் நடத்தி வருகிறது. அப்படி தொழில் நடத்திவரும்போது அவர்கள் சிறிய தொழில் செய்யக் கூடியவர்களை நசுக்கும் வகையில் வழிவகை செய்துகொண்டு வருகிறார்கள். இந்த மாகாணங்களில் விலை குறைவாக வைத்துக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். வேறு மாகாணத்தில் அதிகப்படியான விலை வைத்து விற்கிறார்கள். அதனால் இந்த மாகாணத்தில் நடைபெற்று வரும் சிறிய தொழில் பாதிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் ஹ்யூம்பைப் முதலியவைகள் செய்வதற்கு வேண்டிய நல்ல மண் கிடைக்கிறது. அதை பயன்படுத்திக் கொண்டு இங்குள்ள தொழிலாளர்கள் பைப்கள் செய்து வந்தால் அவர்களுடன் பெரிய கம்பெனிகள் போட்டி போடுகின்றன. அதனால் அரசாங்கம் முன் வந்து சிறிய கைத்தொழில்காரர்களுக்கு கடன் கொடுத்து உதவி செய்வதோடல்லாமல் அவர்களுடைய தொழில் பாதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ரிப்ராக்டரி தொழில் நடத்துகிறார்கள். சிமெண்ட் பைப்கள் ரயில்வேக்களுக்கும் மற்ற வேலைகளுக்கும் வேண்டியதாக இருக்கிறது. முனிசிபாலிட்டிகளில் வேண்டியதாக இருக்கிறது. அண்டர் க்ரௌண்ட் ட்ரெயினேஜ்க்கு வேண்டியதாக இருக்கிறது. இந்தத் தொழில் நமது மாகாணத்தில் குடிசைத் தொழிலாக இருக்கிறது. மற்றும் போர்சிலின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவைகளையெல்லாம் வளம் பெறச் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கூட்டுறவு மூலமாகவோ அல்லது சர்க்கார் எடுத்து நடத்தவோ முன் வரவேண்டும். வெளி மாகாணங்களோடு அவர்களால் போட்டிபோட முடியாது. அதனால்

[Sri M. Palaniyandi] [4th April 1956

இந்த அரசாங்கம் அந்தத் தொழில்களை எடுத்து நடத்த வேண்டும். அதை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வாய்ப்பு தமிழ் நாட்டில் இருக்கிறது. இதை நமது பொருள் அமைச்சர் பார்த்து அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நமது நாட்டில் பாக்ஸைட் கிடைக்கிறது. மாங்கனிஸ் கிடைக்கிறது. வெளியே போகவேண்டியது இல்லை. இவைகளை வைத்துக் கொண்டு உருக்கு ஆலைகளில் பிராக்டரியையும் ஆரம்பிக்க வேண்டும். குடிசைத் தொழில் மூலமாக தொழிலாளர்களுக்கு அதிகப்படியான வேலை கிடைப்பதற்கு இந்த அரசாங்கம் வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI A. RATNAM: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் மூலமாக டைரெக்டர் அப் இண்டஸ்ட்ரீசுக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் கடன் கொடுப்பதில் கையாளப்படும் முறை மிகவும் மோசமாக இருக்கிறது. அதிகாரிகள் கடன் கொடுக்கும்போது சம்பந்தப்பட்ட தொழில் நடத்துகிறவர்களுக்கு சொத்து இருக்கிறதா என்று பார்த்துக் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. கடன் வாங்கக் கூடிய பணத்திற்கு அதிகமான சொத்து இருக்கிறதா, கடன் கொடுத்தால் அது திருப்பி வாங்க வசதி இருக்குமா என்பதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்து பார்த்துத்தான் கடன் கொடுக்கிறார்கள். கடனுக்குத் தக்க மதிப்பு இருக்கிறதா என்றும் பார்க்கிறார்கள். சில சமயங்களில் அப்படி கடன் கொடுத்தாலும் கடன் திருப்பி வராமல் இருந்தால் கடன் கொடுத்தவராக இருந்தால் அவரையோ அல்லது கடன் கொடுக்க சிபாரிசு செய்தவராக இருந்தால் அவரையோ அந்த கடனுக்குப் பொறுப்பாளி என்று அரசாங்கம்கருதுகிறது. அதனால் அவர்கள் தாங்கள் கொடுத்த கடனுக்கு பொறுப்பாளிகளாகி விடுகிறார்கள். இவ்விதம் பொறுப்பாளிகள் என்று கருதுவதால் அந்த அதிகாரிகள் கடன் கொடுக்க முன் வரமாட்டேன் என்கிறார்கள். அதனால் கடன் கேட்கிறவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். அதனால் கடன் வாங்கக் கூடிய மதிப்பு இருக்கிறதா இல்லையா என்று அறிவதற்கு இஞ்சினியர்களும், கலெக்டர், டிபார்ட்மெண்ட் தாசில்தார்கள், ரிவினியூ இன்ஸ்பெக்டர்கள் வருகிறார்கள். இதன் மத்தியில் இரண்டு மூன்று வருஷங்களுக்கு கொடுத்த கடன் திருப்பி வராமல் இருந்தால் கடனை சிபாரிசு செய்த அதிகாரியின் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். அதனால் அதிகாரிகள் கடன் கொடுக்க சிபாரிசு செய்வதில்லை. இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிபந்தனை இருக்கக்கூடாது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

கலெக்டர் ஏதாகிலும் கடன் திரும்பி வருவதற்கு வசதி இல்லை என்று எழுதி விட்டால் அவனுக்கு கடனே கிடைக்காத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. தொழில் நடத்துகிறவர்கள் உண்மையிலேயே கடன் வாங்கிக் கொள்ள வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். இப்பொழுது நடைபெற்று வருவது எப்படி இருக்கிறது என்றால் மேலதிகாரிகளுக்குத் தெரிந்தவராக இருந்தாலும் அல்லது காங்கிரஸ்காரர்களுக்கு தெரிந்தவர்களாக இருந்தாலும்தான் கடன் வாங்குவதற்கு வசதியாக இருக்கிறது. மற்றப்படி சாதாரண மக்களுக்கும் நியாயமாக தொழில் நடத்துகிறவர்களுக்கும் கடன் கிடைப்பது என்பது அரிதாக இருக்கிறது. காரணம் இப்பொழுது இருக்கக்கூடிய நிர்ப்பந்தம்தான். நமது நாட்டில் தொழில் வளர்ச்சி அடைய வேண்டுமானால் அந்த நிர்ப்பந்தம் இருக்கக் கூடாது. கடன் கொடுக்கும்போது சொத்து மதிப்பு இருக்கலாம். இரண்டு மூன்று அல்லது பத்து வருஷங்கள் கழித்து அந்த மதிப்பு இல்லாமல் போய் விடலாம். அதனால் கடன் கொடுக்கவேண்டும் என்று சொன்ன அதிகாரியின் பேரிலோ அல்லது கடன் கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்த அதிகாரியின் பேரிலோ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது சரியல்ல. இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் இருந்தால், நியாயமாக தொழில் நடத்துவதற்கு



4th April 1956] [Sri A. Ratnam]

கடன் வாங்க இடைஞ்சலாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதற்கு அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

Clauses 15, 16, 16-A, 17 and 18 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

"That the Madras State Aid to Industries (Amendment) Bill, 1956 (L.C. Bill No. 1 of 1956) as passed by the Legislative Council, be passed.

MR. SPEAKER: Motion moved:

"That the Madras State Aid to Industries (Amendment) Bill, 1956 (L.C. Bill No. 1 of 1956) as passed by the Legislative Council, be passed.

SRI A. RATNAM: கனம் சபாநாயகர் அவர்களே, துர்ப்பாக்கிய வசமாக நான் இந்த மசோதா எடுத்துக் கொண்டபோது ஆரம்பத்தில் இல்லை. இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருந்தேன். அந்த திருத்தத்தை ஒரு மாதத்திற்கு முன்னாடியே கொடுத்திருந்தாலும் அதை எடுத்துக் கொள்ளப்படாமல் என்னை ஏமாற்றியிருக்கிறார்கள். நான் ஏமாற்றப்பட்டிருக்கிறேன். காரணம் இந்த மசோதாவை முதன் முதலில் இந்த சட்ட சபைக்குக் கொண்டு வராமல் கவுன்சிலில் முதலில் கொண்டு வந்து பாஸ் பண்ணிக் கொண்டு அதன் பிறகு இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் அதை தவிர்க்க முடியாமல் போய்விட்டது. இந்த மசோதாவில் அதிகப்படியாக பரிசீலனை செய்யவேண்டியது இல்லாவிட்டாலும் சில விஷயங்களை விளக்குவதற்கு அதை செலெக் கமிட்டிக்கு விடவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருந்தேன். அந்தத் திருத்தத்தை இப்பொழுது ஏற்றுக் கொள்ள முடியாமல் போய் விட்டது. டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீசுக்கு அதிகப்படியான அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நல்ல நோக்கத்துடன் தான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். புதிய தொழில் ஆரம்பிக்கக் கூடியவர்களுக்கு இந்த மசோதா எந்த விதமான வழிவகையும் செய்யவில்லை. ஆனால் லட்சக் கணக்கான ரூபாய் முதல் போட்டு கைத்தொழில் ஆரம்பிக்கக் கூடிய முதலாளிகளுக்குத்தான் இந்த மசோதா வழிவகை செய்கிறது. நம்முடைய நாட்டில் தொழில் வளம் அதிகமாக ஆரம்பிக்க வேண்டும். பொருள் இல்லாதவர்களுக்கு கடன் கொடுக்கவேண்டும். கூட்டுறவு முறையிலோ அல்லது வேறு விதங்களிலோ அல்லது மானியம் கொடுத்தோ நாம் தொழில்களை ஆரம்பிக்கக் கூடியவர்களுக்கு உதவி செய்யவேண்டும். இந்த நல்ல நோக்கத்துடன் கொண்டுவரப்பட். மசோதாவானது புதிதாக ஆரம்பிக்கப் போகிற மக்களுக்கு நன்மை செய்வதாக இருக்காது. ஏனென்றால் கடன் கேட்டால் கடன் வாங்குவதற்கு முடியாமல் இருக்கிறது. கடன் கொடுப்பதில் பல சிக்கல்களைப் புகுத்தியிருக்கிறார்கள். நம் நாட்டில் தொழில் வளம்பெற கைத்தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் ஆரம்பித்தால் ஒழிய இந்த மசோதாவானது நல்ல முறையில் பயன்படாது. நல்ல முறையில் பலன் அளிக்காது. அவைகளைப்பற்றி பரிசீலனை செய்வதற்குத்தான் நான் திருத்தம் கொடுத்திருந்தேன். கைத்தொழிலையும் குடிசைத் தொழிலையும் ஆரம்பிப்பதற்கு எந்தந்த வழிவகை செய்யவேண்டும் என்பதற்காகத்தான் திருத்தங்கள் கொடுத் 12-26 p.m.

திருந்தேன். குடிசைத் தொழில்களை ஆரம்பிப்பதாக இருந்தாலும் அதிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. கைத்தொழில்களை ஆரம்பிக்க திட்டம் போடுகிறார்கள், உத்தரவு போடுகிறார்கள். ஆனால் நாட்டில் சரியான முறையில் கைத்தொழில்கள் நடைபெறவில்லை. எந்த விதத்திலும் அபிவிருத்தி அடைந்ததாக இல்லை. யார் கைத்தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்று முன்வந்தாலும் அவர்களுக்கு எந்த முறையிலும் நன்மை செய்ததாகத் தெரியவில்லை. ஆயிரக்கணக்கான மனுக்கள் வருகின்றன. அவைகள் கவனிக்கப்படவே இல்லை. கடன் வேண்டும் என்று ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்தாலும் அவைகள் அப்படியே கட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இப்படி அநேகம் மனுக்கள் போடப்பட்டு அவைகள் கட்டி வைக்கப் பட்டிருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். 200-க்கு மேற் பட்ட மிஷின்களை வைத்துக் கொண்டு தொழில் நடத்திக் கொண்டுவருகிறார்கள். அவர்கள் கடன் வேண்டும் என்று கேட்டும் அவர்களுக்கு இன்னும் கடன் கொடுக்கப்படவில்லை. அவ்வளவு மோசமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. தானே செலவு செய்து பல தொழில்களை நடத்திக் கொண்டு வருகிறவர்களுக்கு அவர்கள் வாங்கிய கடனுக்குக் கொடுக்கவேண்டிய வட்டியைக்கூட திருப்பிக் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மோசமான நிலைமையில் இவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்கு திருத்தங்கள் கொடுக்கவேண்டும் என்றிருந்தேன். கொடுக்க முடியாமல் போய்விட்டது. இந்த மசோதாவில் பல திருத்தங்கள் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவைகளை செய்வதற்கு சர்க்கார் சீக்கிரத்தில் முன் வருவார்கள் என்று எதிர் பார்க்கிறேன். இன்றைக்கு குடிசைத் தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். அதையும் பாஸ் பண்ணப் போகிறோம். அதனால் இதைப்பற்றி அதிகம் பேசுவதற்கு இல்லை. கடன் வாங்குவதில் இப்பொழுது இருக்கக்கூடிய நிர்ப்பந்தத்தை எடுத்து விடவேண்டும் என்று மட்டும் கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் மற்றொரு திருத்தத்தை கனம் அமைச்சர் அவர்களே கொண்டு வந்து இதை நிறைவேற்றுவார்கள் என்று நினைக்கிறேன். அப்படி திருத்தங்கள் கொண்டு வந்து தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்பட்ட மக்களும் அதிகப்படியான வசதி அடைவதற்கு வேண்டிய வழிவகை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

12-35 p.m. லட்சக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்து பல தொழில்களை ஆரம்பிக்கிறார்கள். பித்தான் போன்றவைகளை குடிசைத் தொழில் மூலம் பண்ணுவது என்றால் ஒரு பித்தான் விலை காலணா ஆகும். ஆனால் அணாவுக்குப் பத்து பித்தான்கள் கிடைக்கும்படியாக வெளி நாடுகளில் இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்கிறார்கள். நம் நாட்டிலும் கூட அந்த இயந்திரங்களை தருவித்து இந்த மாதிரியான சிறிய சாமான்களை அதிகமாக உற்பத்தி செய்யலாம். இதனைத் தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும்படியாக விட்டு அவர்கள் கொள்ளை லாபம் அடிக்க இடமளிக்கக் கூடாது. சர்க்காரே இவற்றை நடத்தி ஏழை மக்களுக்கு எல்லாம் நன்மை உண்டாக்கும்படியாகச் செய்யவேண்டும். இது மூன்றும் வாசிப்பாகையால் நான் அதிகம் பேச விரும்பவில்லை. சர்க்கார் இவற்றில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன் அமர்கிறேன்.

**SRI V. MUTHU**: கனம் சபாநாயகர் அவர்களே, சிறு குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் ஏழை ஹரிஜன மக்கள் தான். கூடை, பாய், பெட்டி போன்றவைகளை எல்லாம் செய்கிறார்கள். ஸ்ரீ ரத்தினம் சொன்னது போல இந்த ஏழை மக்களுக்கு குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு நேரிடையாகக் கடன் உதவி அளிப்பதாகத் தெரியவில்லை. பல குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிற ஹரிஜன மக்களுக்கு உதவி செய்வது அரிதாக இருக்கிறது. ஆகையால் நான் வேண்டிக் கொள்வது என்ன



வென்றால், குடிசைத் தொழில்களில் ஈடு பட்டிருக்கும் மக்களுக்கு எல்லாம் நபர்ஜாமீன் பேரிலோ, பொருள் ஜாமீன் பேரிலோ கடன் உதவி செய்ய தேவையான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டும். சட்டம் அதற்கு பொருந்த வில்லை என்றால் சட்டத்தையே திருத்தவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI P. S. KRISHNASWAMY AYYANGAR**: Sir, Clause 18 of the Bill seeks to give retrospective effect to the provisions of the Bill. It says—

"Any aid given to any industrial business or enterprise by the State Government from the Consolidated Fund of the State or out of the funds placed at the disposal of the State Government by the Central Government or any other authority after the 26th September 1953 shall be deemed to have been given under the provisions of the principal Act, as amended by this Act . . ."

The latter portion seems to nullify the effect of the earlier portion. The latter portion of the clause says—

" . . . and all the provisions of that Act as so amended shall, with effect from the commencement of this Act, apply to the aid so given".

This latter portion therefore does not give it retrospective effect. The intention of the clause seems to be to give retrospective effect to the provisions of the Bill. But the latter portion of the clause denies such retrospective effect. This seems to be the interpretation in my opinion. If I am not correct, it is left to the Government to have the clause as it is.

**SRI S. RAMALINGAM**: கனம் சபாநாயகர் அவர்களே இந்த மசோதாவில் உள்ள எட்டாவது ஷரத்தின் நான்காவது பகுதியில், விண்ணப்பங்களைப் பற்றி எல்லாம் பரிசீலனை செய்து யோசனை சொல்வதற்காக ஜில்லாக்களில் கமிட்டி ஏற்படுத்தலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்தப் பிரிவை உபயோகித்து கமிட்டிகள் ஏற்படுத்தியிருக்கிறார்களா என்ற தகவல் எனக்குத் தெரியாது. அப்படி ஏற்படுத்தப்படாமலிருந்தால் உடனடியாக அம்மாதிரி கமிட்டிகளை ஏற்படுத்தி கடன் வினியோகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: Sir, in regard to clause 18 which we have already passed, I am afraid Sri Krishnaswami Ayyangar is a little bit late in saying what he said. This clause was considered by the other House and this House also has considered it. This clause has also been scrutinized by the authorities. I do not see there is any inconsistency. Anyhow, I shall look into the matter.

As regards the speech made by Sri A. Ratnam, I may assure him that all genuine cases of applications for promoting industries will be considered by the Director of Industries and Commerce and aid will be given. But if anybody should like to take advantage of this Bill and get money for bogus purposes, whoever might be the person concerned, I am sure he will not get. If any individual case is brought to the notice of the Government where a genuine case

[Sri C. Subramaniam] [4th April 1956

has not been considered or where simply because a particular person is concerned, whether he is a member of the Assembly or anybody else, he has been granted any aid under the provisions of this Bill, and that aid has been given simply to favour him and not for the purpose of promoting an industry, the Government will take severe and strict action in the matter. Therefore, the hon. Member may rest assured that nobody will be able to get undue advantage under
12-40 p.m. the provisions of the Bill and get aid. Mr. Ratnam himself has a grievance in this matter but that should be left as an individual grievance. I have looked into the matter and my view is that it cannot be treated as a grievance and that the refusal is unjustifiable. As far as the other provisions are concerned, I may assure him that it is the intention of the Government to see that this measure promotes small scale and cottage industries. It is only from this point of view that the provisions of this measure will be worked out and I hope we will have the co-operation of the entire House in seeing that all abuses are avoided. If any abuses are noticed, I request hon. Members to bring them to the notice of the Government so that proper action may be taken. That is all I have got to say.

Mr. SPEAKER: The question is—

"That the Madras State Aid to Industries (Amendment) Bill, 1956 (L.C. Bill No. 1 of 1956) be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE PUDUKKOTTAI (SETTLEMENT OF INAMS) AMENDMENT BILL, 1956 (L.C. BILL NO. 1 OF 1956),* AS PASSED BY THE COUNCIL.

The Hon. Sri C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I beg to move—

"That the Pudukkottai (Settlement of Inams) Amendment Bill, 1956 (L.C. Bill No. 2 of 1956) as passed by the Council be taken into consideration."

This is a very simple measure. In section 6 of the Pudukkottai (Settlement of Inams) Act, 1955 it is provided that two estates should be excluded from the scope of the Act. Now, it is found that there is no justification for the exclusion of these two estates from the scope of the Act. That is why, we are now bringing forward this measure to amend section 6 of the Pudukkottai (Settlement of Inams) Act, 1955. I do not think there is any controversial point with regard to the provisions of this Bill.

Mr. SPEAKER: Motion moved—

"That the Pudukkottai (Settlement of Inams) Amendment Bill, 1956 (L.C. Bill No. 2 of 1956) as passed by the Council be taken into consideration."

* Printed as Appendix II on page 606 infra.



4th April 1956]

The motion was put and carried and the Bill was considered. Clauses 2, 1 and the Preamble were put and carried.

The Hon. Sri C. SUBRAMANIAM: Sir, I move—

"That the Pudukkottai (Settlement of Inams) Amendment Bill, 1956 (L.C. Bill No. 2 of 1956) be passed.

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS COMPULSORY LABOUR (AMENDMENT) BILL, 1956 (L.A. BILL NO. 3 OF 1956)—*cont.*

Mr. SPEAKER: We shall now take up clause by clause consideration of the Bill. The Hon. Minister for Finance will now move the official amendments to clause 2.

*Clause* 2.

The Hon. Sri C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I move—

"*For* the first sub-clause of clause 2 of the Bill, *substitute* the following:—

'6. *Liabiliy of persons refusing to contribute labour to the maintenance of irrigation and drainage works*:—

(1) Every person owning lands served by any irrigation or drainage work or any work connected therewith shall, whenever required by public notice by the head of the village under the orders of the Tahsildar or other superior revenue officer, contribute labour for repairing or properly maintaining such irrigation or drainage work or for repairing or properly maintaining any work connected with such irrigation or drainage work;'."

"*Add* the following sentence to sub-clause (5):—

It is possible, not by providing Government schools, not by providing teachers who are something better than what they are now, but it is by giving the children mid-day meals and free books which will not tell upon their parents' purses. Millions of our people who are very poor are finding their lives battle very hard and are unable to withstand the struggle. All talk about Five-Year Plans by us will hardly arouse in them any enthusiasm. Unless we create some improvements in their social conditions, we will not be able to bring their children to the schools, whatever be the scheme we evolve, whether it be the 10-year school course or the 11-year school course or the scheme evolved by Radhakrishnan Committee and all that. What is vital is that the poor and the little children must be made to attend the schools as a kind of haven from home where they can get at least mid-day meals, and where they need not faint for lack of food during afternoons. I was inaugurating the other day a function connected with the supplying of mid-day meals to children studying in a High School. When I was speaking on that occasion, when I was half-way through my speech, I was told that a boy actually fainted and I then thought that that was enough justification for the inauguration of mid-day meals in that High school. Therefore, before we talk realistically of these schemes and about the changing patterns of education, we must make arrangements for the supply of mid-day meals to poor children. It may be asked, there may be a good many children who may feel it *infra dig* in taking meals supplied in the schools, and longingly they may cast their glances at the boys munching their food. But we have to coax them and tell them that there is nothing *infra dig* and ask them to participate in the eating also. As regards children who are of very well-to-do people, this will not create any discomfort. The same principles applies with regard to books also. Books must be supplied freely to all poor children. Now, children are asked to carry a number of

1 p.m.

books. How could poor parents afford to purchase so many books for their children? Government must also see that books are supplied to poor children freely. I would therefore suggest to the Hon. Minister that these are the conditions which are necessary before we can talk realistically of changing the pattern of education.

I wish to refer to one other matter and that is about the content of education given. I would like to contribute one thought on this matter. I find from the White Paper that the syllabus was largely framed under the rules of 1939. Nowadays children are more familiar with Eskimos living in far off countries than with the aboriginal tribes living in the hills near by. The entire system has to be scrapped. What is the point in nationalising education, if we are going to allow people to masquerade as false patriots? We must change the content of education so that it may really become 'Indian' and for making it really 'Indian' we need not borrow ideas from Russia or England or America. We must be in a position to generate pride in our children to be the sons and daughters of India. For that we must reorientate the syllabus in all the schools so that we may create umpteen little patriots in our country who take pride in things Indian and who know better of what is taking place in India. At present children know of things happening in distant Norway only and do not know what is happening in their own neighbouring areas. History is a very important subject, and the syllabus for that subject must be changed. Another subject which is important is Geography. Many students in Malabar may not be able to answer where Malampuzha project is situated but they may be in a position to answer where the biggest project in the world is located. Many of us, persons like me, may not be able to answer questions which our little children are asked to answer to-day. But these children will blink if we ask them something about our own people. Therefore, the content of our education must be recast. Then alone we can go into the processes of education. I am in entire agreement with the Hon. Minister with regard to the suggestions made in that respect. I think the shift system need not die simply because it has been sponsored by somebody who is considered to be anathema in some part of the State. We must look at these things from a rational point of view. This system must be introduced wherever it can make headway. At the same time if we press the thing home with Government fiat or authority there is bound to be counter reaction. Let us therefore press it home gently. But the shift system will not work successfully unless we increase the pay of teachers. If we do not increase the pay of teachers we will be sabotaging the scheme at the other end. But if we give a proper pay to the teachers then the scheme may work to a very great degree. If only the wheels are properly greased and if all of them are made to move together, then the entire machinery may produce something better.

As regards the point whether we should have a 11-year course or a 12-year course, the Hon. Minister perhaps struck an intelligent via media. In this connexion, the Hon. Minister was referring to accusations that Brahmans or rich men were behind this move and so on. There may be something behind these but I do not want to dive deep into local politics because I do not know the local background behind all these charges. But that is only by the way. The point is that the suggestion made by the Hon. Minister that boys aged 5½ years can be admitted in schools is a kind of via media which must be welcomed. We must not allow children to remain idle during any part of their academic career and we have to provide some continuous schooling for them. The 12-year school course is not necessary and the four year High School course will give sufficient scope for children to become finished products. With the diversified course introduced, at the beginning of the four years, we must be able to produce children who will fit into the society, who will be able to fit into some factory as a worker or fit to take some course in a Polytechnical Institute. I know brilliant S.S.L.C. passed candidate asking for recommendation letters for their being taken in as conductors or as watchmen or as clerks at Rs. 20 or Rs. 25 per month. I have asked them whether they are willing to work in my farm at Rs. 50 per month but they say, 'no'. They are rather prepared to work at Rs. 20 or Rs. 25 as conductors in buses than to work with their hands in farms. If any advertisement is made seeking applications for conductors' posts, in the district of Malabar, we will get a thousand applications from S.S.L.C. passed people. Nowadays people are not prepared to work with their hands. They are largely bookish. Therefore the debunking of the gentleman's idea of earning money for their livelihood must be our first task. So, I would suggest that we must have a diversified course so that students may fit into life thereafter. The present anomaly of persons not being able to fit into life after their school education must vanish.



So, I congratulate the Government on its recommendation that multi-purpose system must be introduced. This is a good system 1-10 p.m.
and I therefore warmly welcome that.

Then, I should like to say one or two things and wind up because I have taken more than the time allotted. One thing is about language. I was watching very closely the Hon. Minister's reply because I know that it is a thorny and controversial question and if the Minister says something to-morrow's newspapers will probably be viewing all the aspects of it. But one thing is very important. That is, if we are really going to drive home the national outlook, we cannot forget the inevitability of Hindi or any other language. We must have a national language. It does not matter whether we knew Tamil, Malayalam or any other language. For practical convenience, we must have some language as national language if we are going to drive all the fissipavous tendencies by which people were affected and this must also be a unifying factor. It has been suggested that Hindi or Hindustani may be going to be that language. What I would like to say is "Let us have Tamil or Malayalam impregnated into Hindi so that Hindi men in the north may not feel elated or arrogant and let Tamils or Malayalees also feel that at least they have a synthetic language which in

[Sri V. R. Krishna Ayyar] [5th April 1956

India may be known as Indian Language." But then, there is hardly any doubt we must have a national language if we are going to survive as a nation. We must give due importance to our educational system. To-day what we see is and I have a shrewd suspicion that it is really the anti-Hindi feeling that gets sublimated and translated into a pro-English enthusiasm. May be eminent men are there supporting English. But they are of the old world. Eminent men—who have earned their eminence because they can handle and conquer the world with the English language—may be loath to part with English. But today English is going to lose importance and we are living in a very different state in which we cannot give artificial importance to English simply because we dislike Hindi or some other language. Therefore, I would suggest a mild modification, that is, the regional language—Tamil or Malayalam—must be the first language. The second one must be English. We cannot part with it straightaway. But then, the national language, whichever it is, and the English language must receive equal consideration. It may be optional, I have no objection. But, it need not be relegated to a third place.

One other submission I would like to make is that the test of a candidate when he is given a S.S.L.C. certificate or some other certificate should not be merely the result of examinations and marks. We are obsessed with marks. That kind of bringing down the morale of our young men and women is not the proper way. It is wrong. There are many people thinking like that. But, I for one, would feel that examinations should not be the sole test—whether one man should stand or fall in life. The overwhelming obsession of examination and marks should certainly perish.

Finally Sir, while commending the Government for various new suggestions brought up here, I also commend them for the comprehensive White Paper placed before us so that all the aspects might be discussed. I also repeat what the Hon. Minister has stated 'Let us make a national approach to the whole problem.' Let us talk as patriots of India. Let us study the question carefully and forge a pattern, a noble pattern, for our children, grand-children and great grand-children so that India may grow as it really deserves to be at least for the coming generations. Thank you.

1-15 p.m. **Sri A. SAMBASIVAM:** மதிப்பிற்குரிய சபைத் தலைவரவர்களே, இப்போது நமது கல்வி அமைச்சர் அவர்கள் அவை முன் வைத்துள்ள இந்த வெள்ளை அறிக்கையை வரவேற்று இந்த முயற்சியைப் பாராட்டுகின்ற முறையிலே நான் பேச முன் வந்திருக்கிறேன். அவர் பேச்சை மிகவும் கூர்ந்து கவனித்ததில் அதை விமர்சனம் செய்கின்ற முறையிலே அதிலே தோன்றுகிற சில ஐயப்பாடுகளை விளக்குகின்ற முறையிலேதான் மற்ற அங்கத்தினர்களும் கவனிக்கவேண்டும் என்று ஒரு சிறிது பேச விரும்புகிறேன். அறிக்கையிலே மற்ற எல்லா வகைகளையும் விட நம்முடைய பள்ளிக்கூடத்து மாணவர்களின் செலவு ஆரம்பக் கல்விக்கு மிகவும் அதிகம். திருவாங்கூர் இரண்டு பங்குக்கு மேலாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது எங்களுடைய கட்சியிலே எடுத்துக் கூறினார்கள். எதிர்ப்பக்கத்திலே பேசிய திரு Kandasami, V. R. கிருஷ்ண ஐயர் இப்படி தனிப்பட்ட மானேஜ்மெண்ட்கள் பற்றி மிகத் தெளிவாக பேசினார்கள். நன்கொடை என்பது இப்படி



5th April 1956] [Sri A. Sambasivam]

செலவுக்கு வந்துவிட்டதற்கு தனிப்பட்டவர்கள் ஸ்தாபனங்கள்தான் காரணம். இதிலே தவருகச் சொல்லவேண்டுமென்று ஒன்றும் இல்லை. இதில் உடனடியாக சர்க்கார் தீவிர கவனம் செலுத்தவேண்டும். அந்த துறையிலே இருப்பவர்களுக்கு ஒரு அறிக்கை செய்யும்படி ஆக, ஆராயும்படியாக கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆறு கோடி ரூபாய் ஆரம்பத்தில் இந்த ஆரம்பப் பள்ளிகளுக்காகச் செலவு செய்கிறோம். 30 லட்சம் குழந்தைகளுக்கு 20 ரூபாய் செலவாக வேண்டும். ஆனால் 38 லட்சம் அல்லது ஆரம்பப்படிப்பிலே மாத்திரம் 35 லட்சத்துக்கு குறையாமல் படிக்கிருர்கள். அவர்களுக்கு எப்படி 24 ரூபாய் ஆகிறது. வெறும் புள்ளி விவரங்களைப் பார்த்தால் ஒரு அச்சம் அல்லது குழப்பம் கணக்கிலே ஏதாவது தப்பாகப் போய்விட்டதா தவறு நேர்ந்து இருக்கிறதா என்று சந்தேகம் ஏற்படுகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது இருக்கும் புள்ளி விவரங்கள் சரியான முறையில்தான் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி அங்கத்தினர் சொல்லும் முறையில் ஏதாவது தவறு நேர்ந்திருந்தால் திருத்திக்கொள்ளத் தயாராயிருக்கிறோம். ஆனால் கவர்ன்மெண்ட் கணக்கு சரியாகத்தான் போடப்பட்டிருக்கிறது.

SRI A. SAMBASIVAM: நான் சொல்வதன் கணக்கு தப்பு என்பதல்ல. சந்தேகம்தான்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கல்விக்காக கவர்ன்மெண்ட் செலவழிப்பது 6 கோடி ரூபாய். ஆனால் மொத்தம் செலவாகிறது 6½ கோடி ரூபாய். ஆள் ஒன்றுக்கு இந்த வாய்ப்பாட்டுக் கணக்கில்தான் எவ்வளவு செலவு என்று சொல்லப்பட்டு இருக்கிறது. லோகல் பாடீஸ், முனிசிபல் போர்டுகளையும் கணக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். 38 லட்சம் பேர்களுக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது. 5–15–0 தலை ஒன்றுக்கு. பீஸ் கலெக்ட் பண்ணுகிறது அதிலே 8 அணு ஒரு ஆளுக்கு. இப்படி கணக்குப் போட்டதிலே கவர்ன்மெண்ட் கணக்கு 14–8–0 ரூபாய்தான்.

SRI A. SAMBASIVAM: அடுத்தபடியாக மாணவர்களின் பள்ளி வயதைப்பற்றி ஒரு சந்தேகம். மாண்டிசோரி திட்டத்தை பரப்பியதற்குக் காரணம் சிறு பிள்ளைகள் அதன் அறிவுக்கு வந்து அது தன் மன நிலையை ஒத்த மற்ற பையன்களோடு பழக்கப்படுகிறது. அது, கருத்துகளை தங்கள் உள்ளத்திலே ஏற்றுக்கொள்ளும் பருவம். 3 வயதில் இருந்து, 4, 5 வயதுவரை எதுவும் தெளிவாக அமையும் பருவம் அது, இதனாலே 3 வயதிலேதான் இப்படி நர்சரி ஸ்கூல், கிண்டர் கார்டன் ஸ்கூல் இதிலே இருந்து மாணவர்கள் படிக்க வேண்டுமென்று சொல்லுகிருர்கள். ஆனால் அந்த திட்டத்தைப்பற்றி இப்போது தென் இந்திய ஆசிரியர்கள் சங்கம் கூட திட்டம் வகுக்கவில்லை என்று சொல்லுகிருர்கள். அப்படி இருக்கும்போது 5 வயது ஆக இன்றைக்கும் கூட அவர்கள் பள்ளியில் சேராமல் இருக்கிருர்கள். நாம் ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அது ஏதோ ஒரு வகையிலே எதிர்கட்சிக்காரர்கள் முந்திக் கொண்டு சொல்லி விட்டார்கள் என்பதினால் நாம் விட்டு விட முடியாது. அடுத்தபடியாக இந்த ஆதாரக்கல்வி, ஆரம்பக்கல்வி, நடுத்தரக் கல்வி அல்லது ஹைஸ்கூல் உயர்தரக் கல்வி இந்த மூன்றும் அளிக்கப் போகிரோம் என்பதைப்பற்றி அறிக்கை பூராவும் பார்க்காமல் அமைச்சர் அவர்கள் பேச்சில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆதாரக் கல்வி என்று எடுத்துக்கொள்ளும்போது அதிலே shift முறை சாத்தியமா இல்லையா என்று சொல்ல வேண்டுகிரோம். இன்னும் திருவாங்கூரிலே ஷிப்ட் முறையை ஆரம்ப, 3, 4 வகுப்புகளில் வைத்திருக்கிருர்கள். நாம் இப்போது எந்த வயதில் ஆரம்பப்படிப்பு அல்லது ஆதாரப் படிப்பு நடுத்தரக் கல்வி இது எப்படி பெருக்கப் போகிரோம் எப்படி கொண்டு போய் சேர்த்து ஒரு வயதில் படிப்பு உள்ளத்திலே கொண்டு வரப்போகிரோம் என்ற இந்த விஷயத்தை நாம் எல்லோரும் ஆரம்பிக்கவேண்டும். அங்கத்தினர்கள் நன்ருக தீவிரமாக

சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடுத்தபடியாக இந்த புதிய கல்வித் திட்டம் அமுலுக்கு வரும்போது ஒரு நல்ல சூழ் நிலை ஏற்படவேண்டும். இந்த திட்டத்தை நடத்துகிறபோது ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டும். இதை ரொம்பவும் முக்கியமாக சர்க்கார் கவனிக்க வேண்டும். நம்முடைய திட்டத்தை யார் நிறைவேற்றுகிறார்களோ அவர்கள் பூர்ணமாக திருப்தி ஊக்கம் உடையவர்களாக இருந்தால்தான் நம் திட்டம் பலன் தரமுடியும். ஆகவே இதில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும்.

ஆகவே சமுதாயத் துறையிலும் சரி, ஆசாரத்திலும் சரி பொருளாதார துறையைப்பற்றிக் கவனிக்க வேண்டியதவசியம். பெற்றோர்கள் அதாவது வரி கொடுக்கக்கூடியவர்களும் சமுதாயமும் ஏற்றுக் கொள்வதான முறையில் கல்வியை நல்ல முறையில் நாட்டிலுள்ள வருங்கால சமுதாயத்தை நல்ல முறையில் அமைக்க வேண்டுவது நம் கடமை. இந்த திட்டமும் நல்ல முறையில் நடந்தேறக்கூடிய வழிகளைக் கண்டு பிடித்து அதற்கான விஷயங்களை உண்டாக்கிக் கொடுக்க வேண்டியதும் நம் கடமை. முதலாவது இந்தத் திட்டத்தை அமுல் செய்யக் கூடியவர்கள் ஆசிரியர்கள் தான். ஆகவே ஆசிரியர்கள் திருப்தியுடன் இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சம்பளத்தை அதிகரிப்பதற்கான திட்டத்தைப்பற்றியும் யோசனை செய்து அதற்கான வழிகளையும் திட்டத்துடனேயே வெளியிட்டிருக்க வேண்டும். கல்வி முறையை அமைத்த பிறகு ஆசிரியர்கள் சம்பள உயர்வைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நான் சொல்கிறேன் நாம் எவ்வளவு சொன்னாலும் அவர்கள் திருப்தியாக இருக்க மாட்டார்கள். ஆகவே முதலில் ஆசிரியர்களைத் திருப்தி செய்யும் வகையில் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும் முதலிலேயே செய்து கொடுக்க வேண்டும். பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும். இரண்டாவது ஆரம்பக் கல்வி முதலில் கவனிக்கப்பட வேண்டிய ஒரு முக்கியமான விஷயம். பொருளாதாரத் துறையில் ஆரம்ப ஆசிரியர்கள் சம்பளம் ஒரு முக்யமான கவனிக்கப்பட வேண்டிய விஷயம். அரசாங்கத்தின் செலவு உயர்ந்து கொண்டு போய்விடும் என்று சொன்னார்கள். அரசாங்கத்தின் செலவு இந்த இனத்தில் மட்டும் உயரும் என்பது அல்ல. உதாரணமாக எடுத்துக் கொண்டால் சென்னை அரசாங்கத்தில் **1936-37**-வது வருஷ வரவு செலவுத் திட்டத்தையும் **1955-56**-ம் வருஷ வரவு செலவு திட்டத்தையும் எடுத்துக் கொண்டு பார்த்தோமானால் இப்பொழுது எவ்வளவோ பங்கு செலவினங்கள் அதிகமாகிக் கொண்டு விட்டது. அதே மாதிரி அரசாங்கத்தின் வருமானமும் உயர்ந்திருக்கிறது என்பது தெரியும். ஆகவே நாம் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றி வைக்க எவ்வளவோ பணம் செலவு செய்ய வேண்டும். இன்னும் ஐந்து அல்லது பத்து வருஷத்திற்குள் அதாவது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்குப் பின் அரசாங்கத்தின் வருமானம் எவ்வளவோ உயர்ந்து விடும். முந்நூறு கோடிக்கு அதிகமாக வருமானம் வரலாம். சமூகத்தின் முன்னேற்றத்தாலும் தொழில் வளர்ச்சியாலும் வருமானம் உயர்ந்து கொண்டே யிருக்கும். அப்படியிருக்கும்போது ஆசிரியர்கள் சம்பளத்தையும் குறிப்பிட்டு நிலைமைக்கு ஏற்ற வகையில் ஆசிரியர்களின் சம்பளத்தையும் உயர்த்தி அவர்களுக்கு திருப்தி உண்டாக்கக் கூடிய திட்டத்தையும் வெளியிட வேண்டும். திடீரென்று உயர்த்தாவிட்டாலும் படிப்படியாகவாவது உயர்த்த வேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டு திட்டம் தயார் செய்தாவது ஆசிரியர்களை திருப்திபடுத்த வேண்டும். சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார்: பசி பசி என்று கத்துகிறவனைப் படி படி என்றால் என்ன ஆகும். அவனுக்கு படிப்பதினால் என்ன பயன் என்று பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்: அதற்குப் பதிலாக சரியான உணவு கொடுக்க வேண்டும். அந்த முறையில் நாட்டின் கல்வி திட்டத்தை அமைக்க வேண்டும். ஆகவே இதைப்பற்றி எல்லோரும் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். பொருளாதார விஷயத்தைப் பொறுத்த வரையில் நம் நாட்டில் எல்லா ஊர்களிலும் கோவில்கள் இருக்கின்றன. கோவில்களுக்கு தர்மத்திற்காக வேண்டி சொத்து ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சொத்தைக் கல்வித் துறையில் செலவு செய்யலாம். ஆனால்



அங்கே தர்மகர்த்தாவாக இருக்கக்கூடியவர்கள் சாமிக்கு என்று சமைத்து சாமிக்கும் கொடுக்காமல் அவைகளை தங்கள் சொந்த நலன்களுக்காகவே பயன்படுத்திக்கொண்டு மக்களை ஏமாற்றக்கூடிய புத்திசாலித்தனமும் அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் இதற்குக் கணக்குக் கொடுப்பதில்லை. இதில் சர்க்கார் தலையிட்டு பலவிடங்களில் கோவில்களில் இருக்கிற பணத்தை மாணவர்களுக்கு சாப்பாடு போடுவதற்கு உபயோகப்படக் கூடிய ஒரு திட்டத்தை அமைத்து விடலாம். நூற்றுக்கு 90 கிராமங்களில் எவ்வளவு திறமையான நிர்வாகமாயிருந்தாலும் ஏமாற்றி விடுகிறார்கள். ஆகவே ஓரளவுக்கு இந்த விஷயத்தில் தலையிட்டு நல்ல முறையில் கல்வி திட்டத்தை அமைக்க முடியுமா என்பதைப்பற்றி யோசனை செய்ய வேண்டும். ஆரம்ப கல்வி திட்டத்தில் **shift** முறையினால் எல்லாருக்கும் படிப்பு தேவை என்பதை மனதில் வைத்துக்கொண்டு திட்டத்தை அமைக்க வேண்டும். நாட்டில் உள்ளவர்களுக்கு எல்லாம் குறித்த காலத்திற்குள் கல்வி போதிக்கவேண்டும். காலையில் இரண்டு மணி நேரம் மாலையில் இரண்டு மணி நேரம் கல்வி கற்க வேண்டியது என்று இருந்தால் அந்த அளவுக்கு இருக்கிற ஆசிரியர்களைக் கொண்டே செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். ஆகவே செலவை மட்டுப்படுத்தி அல்லது செலவு அதிகமாக செய்ய முடியாது என்ற காரணத்திற்காகவாவது இந்த முறையை அமூலாக்க வேண்டும். குறித்த காலத்திற்குள் மாணவர்கள் எல்லாரையும் படித்தவர்களாக்க வேண்டும். ஆனால் அந்தக் காரணத்திற்காக கல்வியின் தரம் குறைந்து போகவிடக் கூடாது. அதற்குத் தயாராயிருக்கவேண்டும். இந்த விஷயத்தில் தியாகம் செய்ய வேண்டும் என்று வெள்ளையர் சில யோசனைகள் சொன்னார்கள். அந்த மாதிரி யோசனைகளை நாம் ஒப்புக் கொள்ளக் கூடாது. ஆகவே பெற்றோர்கள் படித்தவர்களாக இருக்கக்கூடிய பகுதிகளில் அல்லது **Municipality**-களில் முதலில் இந்த **shift** முறையை அமுல் செய்து பார்க்கலாம். அதைப் பார்த்து பிறகு மற்றவர்களுக்கு நிதானமாகக் கொண்டு வரலாம். இதே சமயத்தில் திடீரென்று **shift** முறையை ஏற்படுத்தி அதற்காக கிராம மக்களை ஏமாற்றி சலுகைகளை யெல்லாம் பிடுங்கி நகர மக்களுக்கு கொடுத்து விடக்கூடாது. இந்த திட்டத்திற்கு மக்கள் ஆதரவு இருக்கிறதா என்பதைப்பற்றி சிந்தித்து சரியான கல்வி முறையை அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்த ஒரு துறையில் மிக முக்யமாக கவனிக்க வேண்டியதிருக்கிறது. இந்தத் திட்டப்படி கிராம பள்ளிகளை ஆதாரக் கல்வி பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்று முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்பொழுது இந்த பள்ளிகள் எப்படி யிருக்கின்றன என்று பார்க்க வேண்டும். ஆரம்ப பள்ளியிலேயே 8-ம் வகுப்பில் இருக்கக்கூடியவர்கள் **High School**-ல் சேரக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். அப்படி திட்டத்தில் முன்னேற்றம் செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 5-வது வகுப்பில் படிக்கக்கூடிய மாணவர்கள் 2 வருஷத்தில் அங்கே படிப்பை முடித்துக்கொண்டு **High School**-ல் படிக்கலாம். **Higher Elementary School**-ல் 8-ம் வகுப்பில் படித்துவிட்டு **High School**-ல் 4-வது பாரத்தில் படிக்கலாம் என்று இருக்கவேண்டும். **Pre-University Course** படித்த மாணவர்கள் நாலு ஆண்டில் படித்து முடித்துக்கொள்ள வேண்டும். **Pre-University Course High School**-ல் முடித்துக்கொள்ளலாம் என்ற யோசனை ஓரளவு எல்லாரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. அந்தமாதிரி வசதி செய்துகொடுத்து ஆரம்ப பள்ளியில் 8-ம் வகுப்பு படித்தவர்கள் **High School**-ல் **fourth form** அல்லது ஒன்பதாவது வகுப்பில் படிக்கக்கூடிய நிலைமையில் மாற்றி அமைக்கவேண்டும் என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும். இந்த **Middle School Course** கட்டத்திலிருந்து உடனடியாக உயர்தர பள்ளியில் சேரலாம் என்ற **rule** இந்த திட்டத்தில் இல்லை.

DEPUTY SPEAKER: The hon. Member will continue his speech after lunch. The House will now rise and meet again at 3 p.m. to-day.

**The House then adjourned.**

**(After lunch—3 p.m.)**

MR. SPEAKER: The hon. Member Sri Sambasiva Rediar will now continue his speech.

SRI A. SAMBASIVAM: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஆசிரியர்கள், மாணவர்கள் சம்பள விகிதங்கள் தனிப்பட்டவர்கள் பள்ளிகளில் ஒரு மாதிரியும், ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு நிர்வாகங்களில் ஒரு மாதிரியும் இருப்பதற்கு இதில் இடம் இருக்கிறதா ? என்பது தெரியவில்லை. நாம் எப்படி இப்பொழுது ஆசிரியர் சம்பள விகிதத்திலே ஒன்றுபோல் இருக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோமோ அது போலவே மாணவர்கள் சம்பள விகிதமும் சராசரியெல்லாம் ஒன்றுபோல் இருப்பதுதான் முறை.

பொதுவாகப் பார்க்கும்போது, காலையில் எதிர்ப்பக்கத்து அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபோல், தனிப்பட்டவர்கள் நடத்துகிற பள்ளிகளில் ஆசிரியர்களின் சம்பளம், பஞ்சப்படி, நடைமுறைச் செலவு, பள்ளிக் கட்டிட வாடகை இவ்வளவும் நாமே கொடுத்தும்கூட மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூல் செய்கிறார்கள் என்றால், அது எதற்காக என்பதே நமக்குப் புரியவில்லை.

எங்கள் ஊரிலே ஒரு தனிப்பட்டவர் நடத்துகிற பள்ளியில் என்னுடைய பிள்ளைக்கு நான் சம்பளம் கொடுத்துவருகிறேன். மூன்றாவது வகுப்பில் படிக்கும் பிள்ளைக்கு மாதமொன்றுக்கு 12 அணா சம்பளம் வாங்குகிறார்கள். 6 அணாவா, 12 அணாவா என்று நான் கேட்டனுப்பியும் 12 அணாதான் என்று சொல்லி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். பள்ளிக் கூடத்திற்கு நாம் முழுச் சம்பளம் கொடுக்கிறோம். கட்டிட வாடகை கொடுக்கிறோம். இவ்வளவு கொடுத்தும் சம்பளம் வாங்குகிறார்கள் என்று சொன்னால் அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள், "பின்னாலே அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்கிறபோது, இப்பொழுது நாம் எவ்வளவு சம்பளம் வாங்குகிறோமோ இதையெல்லாம் கணக்குப்போட்டு, ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதுபோல நமக்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்போகிறார்கள்" என்ற எண்ணம் அவர்களிடத்திலே இருக்கிறது. அதனால், இந்தத் திட்டத்திலே நாம் முக்கியமாக கவனிக்கவேண்டியது எல்லா தனிப்பட்ட மானேஜ்மென்டையும் எடுத்துவிட்டு, நம் முன்னாலே அழகப்பா கமிட்டியார் சிபார்சு செய்திருப்பதுபோல, தனிப்பட்டவர்கள் நிர்வாகத்தில் இல்லாதபடி ஒரு பிரதேச குழுவினிடத்திலோ பஞ்சாயத்து போர்டு, ஸ்தல ஸ்தாபனங்களிடத்திலோ ஒப்படைப்பதா என்பதை அங்கத்தினர்கள் எல்லோரும் அரசாங்கமும் சீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.

ஷிப்ட் இருக்கிற மாகாணங்கள் போக ஷிப்ட் முறை இல்லாத பிற மாகாணங்களில் மாணவன் ஒன்றுக்கு 14 முதல் 15 ரூபாய் வரை இருக்கும்போது நம் மாகாணத்தில் மட்டும் 24 ரூபாய் வரை செலவாகிறது என்று சொன்னால், தனிப்பட்டவர்களுடைய புள்ளி விவரம் காரணமாக இருக்கலாமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். எப்படிப் பார்க்கப் போனாலும், தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகளில் உபாத்தியாயரும்சரி, பொதுவாழ்விலே அக்கறையுள்ள தனிப்பட்டவர்களும் சரி அதிருப்தி கொண்டிருக்கிறார்கள்: பழைய காலத்தில் தனிப்பட்டவர்கள் பள்ளிக்கூடம் நடத்தினார்கள் என்றால் அவர்கள் சமுதாய நோக்கத்தோடு நல்ல பெயரைப் பெற்றுக்கொள்வதற்காக நடத்தினார்கள். ஆனால், இன்றைக்கு பள்ளிக்கூடங்களை நடத்துகிறவர்கள் அப்படி இல்லை. போட்டி இருக்கும் காரணத்தினால் பள்ளிக்கூடத்திலே சிறு திறமை இருக்கிறதே தவிர, மற்ற இடங்களிலே அப்படி இல்லை.

மேற்படிப்பை எடுத்துக்கொண்டால், அரசாங்கக் கல்லூரிக்கு இன்றைக்கு மதிப்பு இருக்கிறது. அரசாங்கம் நடத்துவதினால் தரம் குறைந்துவிட்டது, அதாவது பச்சையப்பன் கல்லூரி போன்றவைகளை தனிப்பட்டவர்கள் நடத்துவதால் ஏதோ பெருமை வந்துவிட்டது என்று சொன்னால் அதை யாரும் நம்பமாட்டார்கள். அரசாங்கம்கூட நல்ல முறையில்





கவனித்து நடத்தமுடியும். நம்முடைய நாடு, நம்முடைய சமுதாயம், நாம் எல்லோரும் பொதுவாழ்வில் அக்கறை காட்டவேண்டுமென்று எண்ணம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களிடையே ஓரளவு வளர்ச்சி அடைந்திருக்கிறது. நம்முடைய ஊர், நம்முடைய தேசம், நம்முடைய ராஜ்யம் என்ற எண்ணம் மக்களிடத்திலே படிப்படியாக வளருகிறபோது எல்லாவற்றையும் அரசாங்கமே மேற்கொள்ள முயற்சிப்பதுதான் மிகவும் பொருத்தமாகும். இவற்றையெல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து, இதை எந்த அளவுக்கு நாம் செய்யவேண்டுமென்பதற்கு அங்கத்தினர்கள் யோசனை சொல்வார்கள். குறிப்பாக, நண்பர் முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னதுபோல, கல்வி அமைச்சர் அவர்களே இதைத் திரும்ப கமிட்டிக்கு விடப்போகிறோம், மீண்டும் இங்குள்ள அங்கத்தினர்களுடைய ஆலோசனை மட்டுமல்லாமல், கல்வியிலே தேர்ச்சி பெற்றவர்களுடைய அபிப்பிராயத்தையும் சமுதாயத்தில் பெரியோர்களுடைய அபிப்பிராயத்தையும் கலந்துகொண்டு மீண்டும் உருவான கருத்தைச் சபை முன் வைத்து, அதன்பிறகு தான் அமுல் செய்யப்போகிறோம் என்று சொன்னதினால் எனக்குத் தெரிந்த இரண்டொரு கருத்தை நான் சபை முன் வைத்திருக்கிறேன்.

ஆசிரியர்களின் சம்பள உயர்வு, பிள்ளைகளுக்கு இடைவேளை உணவு, ஆசிரியர் பள்ளிகளை அதிகப்படுத்துவது, இவைகளையெல்லாம் பார்க்கும்போது, ஆசிரியர் சம்பளத்திற்காக அதிகமாக ஏற்படும் செலவைச் சமாளிக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். புதிய திட்டத்தை அமுல் நடத்துவதற்கு, அல்லது சர்வே செய்வதற்கு, மேற்பார்வை பார்ப்பதற்கு தனிப்பட்ட அதிகாரி நியமிக்கலாமா என்ற குறிப்பு இருக்கிறது. அது எதற்காக இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. அரசாங்கம் இருக்கிறது. அதன் கீழே அதற்காக ஒரு இலாகா இருக்கிறது. அந்த இலாகாவுக்கு ஒரு தலைவர் இருக்கிறார். அவருக்கு உதவியாளர்களும் இருக்கிறார்கள். இத்தனை பேரும் இருக்கும்போது, மேற்கொண்டு ஏதாவது இடையிலே நேர்ந்தால், அதற்கென்று ஒரு கமிட்டியை நியமிக்கிறோம், ஆறு மாதம், மூன்று மாதம் அந்தக் கமிட்டி, சம்பந்தப்பட்ட பிரச்னையைப் பரிசீலித்து கடைசியில் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, இதற்கு என்று ஒரு தனிப்பட்ட அதிகாரி நியமிப்பதா என்ற குறிப்பும் இருக்கிறது. அதனுடைய கருத்து என்ன, எந்த நோக்கத்திற்குச் செய்யப்பட்டது என்று எனக்குப் புரியவில்லை. தனிப்பட்ட அதிகாரிக்கு சின்ன செலவுதான் ஆகுமென்றாலும், அந்தச் செலவு செய்யவேண்டியது அவசியந்தானா என்பதையும் யோசிக்கவேண்டும். ஒழுங்கு, கட்டுப்பாடு என்று வரும்போது முக்கியமான துறையாகிய கல்வித் துறையில் கல்வி இலாகா தலைவருக்கே எல்லா அதிகாரமும் இருந்தால் கட்டுப்பாடும் ஒழுங்கும் இருக்கும். அப்படியில்லாமல் தனித் தனி பிரிவு என்று ஏற்பட்டு, அது அதற்கு ஒரு அதிகாரி என்று பிரித்துவிட்டால், கல்வித் துறையில் இருக்கவேண்டிய கட்டுப்பாடும் ஒழுங்கும் குலைந்துவிடுமா என்பதையும் சிந்திக்கவேண்டும். தனிப்பட்டவரை நியமிப்பதா என்ற ஒரு வரி எந்த நோக்கத்தோடு போடப்பட்டது என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் பின்னால் பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி விளக்கவில்லை. தனிப்பட்ட அதிகாரி அவசியமா என்று அங்கத்தினர்களையும் அமைச்சரவர்களையும் சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிப்பட்ட சில முக்கியமான கருத்துக்களையெல்லாம் அங்கத்தினர்கள் சிந்தித்து, இதைப்பற்றி ஆலோசனை கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். பரந்த அளவிலே, இன்றைக்கு கல்வித் துறையிலே இருக்கிற நிலையைத் தெளிவாக எல்லோருக்கும் புரியும்படி எடுத்துக்காட்ட முயற்சித்த கல்வி இலாகாவினருக்கும் கல்வி மந்திரி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI G. SAMIA KOORAYAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் ஆஜர் செய்யப்பட்டிருக்கிற கல்வி திட்டத்தின்பேரில் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றேன். 1960-ம் வருஷத்திற்குள்ளே நாட்டின் எழுத்தறிவின்மையைப் போக்கவேண்டுமென்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பூர்த்தி பண்ணுவதற்கான

3-15 p.m.

ஏற்பாடு இந்தத் திட்டத்தில் இருக்கிறதாகச் சொல்ல முடியாது. அதற்கான பண வசதியோ கட்டிட வசதியோ மற்ற வசதிகளோ இல்லை என்று பெருவாரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

படிக்கிற வசதி ஒரு நாளைக்கு மூன்று மணி நேரம்கூட இருக்கக்கூடாது, இரண்டரை மணி நேரமே போதுமானது என்று கமிட்டியார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ராஜாஜி கொண்டு வந்த ஷிப்ட் சிஸ்டத்தின்படி மூன்று மணி நேரம் வீதம் இரண்டு ஷிப்டுகள் வைத்து நடத்தலாம். இருக்கிற பொருளாதாரத்தைக்கொண்டும், கட்டிட வசதியைக்கொண்டும் 1960-ம் வருஷத்திற்குள்ளே எழுத்தறிவின்மையைப் போக்கிவிடமுடியும் என்ற திட்டத்தைச் சமர்ப்பித்தபோது இங்கு அதை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இப்பொழுதும் அந்த ஷிப்ட் ஸிஸ்டத்தை ஆரம்பிக்கலாமா என்ற ஒரு நடவடிக்கையும் இருக்கிறது. பழைய திட்டத்தை, ஏதோ கைவிடப்பட்டது என்பதைப் பொருட்படுத்தாமல், மீண்டும் தீவிரமாக, நன்றாக ஆலோசனை செய்து ஷிப்ட் ஸிஸ்டத்தை ஆரம்பித்து 1960-ம் வருஷத்திற்குள்ளே எழுத்தறிவின்மையைப் போக்கலாமா என்பதை இந்தச் சபை மிகுந்த கவனத்தோடு ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இரண்டாவதாக, 11 வருஷ ஆரம்பக் கல்வி முதல் செகண்டரி கல்வி முடியும் வரைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று பிரிவு வகுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 8-வது வகுப்பு வரையிலும் ஆரம்பக் கல்வியாகவும், அதற்குமேலே 4-வது படிவம் முதல் செகண்டரி கல்வியாகவும் இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டப்படி பார்க்கப்போனால் செகண்டரி கல்வி நான்கு வருஷம் இருக்கவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. அப்படி இருப்பதினால் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் கிராமாந்திரத்தில் படிக்கிறவர்கள் ஒரு வருஷத்திற்கு முன்பே உயர்தரப் பள்ளியில் சேரவேண்டியிருக்கிறது. உயர்தரப் படிப்போடு நிறுத்துகிறவர்களுக்கு இனி ஒரு வருஷம் அதிகமாகப் படிக்கவேண்டுமென்று இருக்கிறது. அப்படியில்லாமல் நடுத்தரமான மத்திய தரத்திலே எட்டு வருஷம் இருப்பதை அதிலே உபயோகப்படுத்தி, செகண்டரி ஸ்கூலுக்குப் போகிறவர்களுக்கும் படிப்பை நிறுத்துகிறவர்கள் பொருத்தமாக அதிலே உயர்ந்த ஸ்தானத்தை ஏற்படுத்திவிடலாம். அது இரண்டுக்கும் பொருத்தமாக இருக்கும். கிராமாந்திரங்களிலிருந்து ஹைஸ்கூலுக்குப் போகிறவர்களுக்கு உயர்தரப் பள்ளியில் மூன்று வருஷமாயிருந்தால் செலவு குறையும். அவர்களுக்கு நன்மையாக இருக்கும். ஒரு வருஷம் அதிகமாகப் படிக்கவேண்டியிருந்தால் கிராமத்தவர்களுக்குச் செலவு ஏற்படும். இதையும் நன்றாக ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

3·15 p.m. குழந்தைகளுடைய வயது ஆறிலிருந்து ஐந்தரைக்குப் போடப்பட்டிருக்கிறது. லண்டன் முதலிய குளிர்ந்த பிரதேசத்தில்கூட ஐந்து வயது என்று போடப்பட்டிருக்கிறது. அதனால் இங்கு நாம் குழந்தைகளுடைய வயது 4 என்று வைக்கலாம் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அதனால் கவர்ன்மெண்ட் ஐந்து வயது என்று வைத்திருப்பதை 4½ வயது என்று வைக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

ஹிந்தி விஷயமாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஹிந்தி அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லவில்லை. இப்பொழுது இருப்பதைப் பார்த்தால் அது அலட்சியப்படுத்தப்பட்டிருப்பதாகத்தான் தோன்றுகிறது. நாம் அடைந்த சுதந்தரத்தை காப்பாற்ற வேண்டுமானால் மத்திய அரசாங்கத்துடன் நாம் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். ஹிந்தியை நாம் வைத்துக்கொண்டால்தான் மத்திய அரசாங்கத்துடன் நாம் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள முடியும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நம் மாகாணத்தின் பிரதேச மொழியில் நிர்வாகத்தை நடத்தினாலும்கூட மத்திய அரசாங்கத்துடன் நாம் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும் என்றால் ஹிந்திப் படிப்புக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். 1937ம் வருஷத்திலேயே ராஜாஜி அவர்கள் இதை கட்டாயபாடமாக வைக்கவேண்டும் என்று சொன்னார். அதற்கு அப்பொழுது எதிர்ப்பு ஏற்பட்டுஅது கைவிடப்





பட்டுவிட்டது. எப்பொழுது அதைக் கட்டாயப்படுத்துகிறோமோ அப்பொழுது தான் நமக்கு மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடிய சாத்தியம் ஏற்படும். நாம் எப்படி ஆங்கிலத்தை மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக்கொள்வதற்கு என்று வைத்துக்கொண்டிருந்தோமோ அதைப்போலவே ஹிந்தியையும் வைத்துக்கொள்ளவெண்டும். கூடிய சீக்கிரத்தில் ஹிந்தி கட்டாயமாகவே வந்து தீரும். அதனால் இப்பொழுதே அதைக் கட்டாயப்பாடமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறேன். அதற்கு ஏற்படும் எதிர்ப்பை பொருள்படுத்தாமல் அரசாங்கம் இன்னும் ஐந்து வருஷங்களில் அதைக் கட்டாயப் பாடமாக வாசிக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தைக்கொண்டு வரவேண்டும். அப்படிக் கட்டாயப்பாடமாக வைத்தால்தான் பிற்காலத்தில் நாம் நன்மை அடைய முடியும். இல்லாவிட்டால் இதுவரையில் சொல்லிக்கொண்டு வருகிற மாதிரி புகார் வரும். அப்பொழுது இந்த அரசாங்கம் அதில் செவி சாய்க்கவேண்டுடியதாக வரும். இப்பொழுது ஆங்கிலத்தை வைத்துக்கொண்டு அரசாங்கத்துடன் தென்னாடு தொடர்பு இல்லாமல் செய்துவிட்டது என்று புகார் செய்து வந்ததுபோல் மறுபடியும் புகார் செய்வதற்கான நிலைமை ஏற்படும். அதைத் தவிர்க்க ஹிந்தியை ஆறாவது வகுப்பிலிருந்தே கட்டாயப்பாடமாக ஆரம்பிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்நாட்டில் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னதாக சமஸ்கிருத பாஷை அரசாங்க பாஷையாக இருந்து வந்தது. பிறகு அதைக் கைவிட்டு விட்டார்கள். அதனால் மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. அதனால் நமக்கு சுதந்தரம் இல்லாமல் போய்விட்டது. அதனால் நாம் அடைந்த சுதந்தரத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால் மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ள ஒரு பொது மொழி இருக்க வேண்டும். இந்தியாவில் அதிகப்படியான ஜனத்தொகை பேசுகிற பாஷை ஹிந்திதான். அதனால் அதைத்தான் கட்டாயப் பாடமாக வைக்க வேண்டும். அப்பொழுது தான் அது பிரயோசனப்படும்.

அடுத்தபடியாக உபாத்தியாயர்களுடைய சம்பளத்தைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுதுள்ள ரிப்போர்ட்டில் அதைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. முற்காலத்தில் ஆசிரியர்களுடைய மதிப்பு அதிகமாக இருந்தது. இப்பொழுது அவர்களுக்கு அவ்வளவு மதிப்பு இல்லை. அவர்களால் கண்யமாக வாழ முடியவில்லை. ஏன் என்று கேட்டால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்கள் கண்யமாக வாழக்கூடிய அளவில் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அதிகமான சம்பளம் இருந்தால்தான் அவர்களுக்குப் பிரயோசனமாக இருக்கும், கண்யமாக வாழ முடியும். குறைந்த பட்சம் அவர்களுக்கு இப்பொழுது இருப்பதைவிட அதிகப்படியாக பத்து ரூபாயாவது கொடுத்தால்தான் அவர்கள் கண்யமாக வாழ முடியும். அப்பொழுதுதான் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டு குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க முன் வருவார்கள். ஆகவே இதையெல்லாம் நன்கு ஆலோசனை செய்து இந்த வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI P. RANGASWAMI REDDIAR: கனம் சபாநாயகர் 3-18
அவர்களே, கல்வியினுடைய குறிக்கோள் என்ன என்று சரியானபடி p.m.
திட்டவட்டமாக மக்களிடத்திலேயும் பலருக்குத் தெரியவில்லை. சர்க்காருடைய "**aims of education**" என்பதைப் பற்றியும் இந்த வெள்ளை அறிக்கையின் மூலமாகவோ அல்லது கனம் கல்வி மந்திரி அவர்கள் காலையில் நிகழ்த்திய பிரசங்கத்தின் மூலமாகவோ சரியானபடி தெரிந்து கொள்ள முடியவில்லை என்று என்னைப் பொறுத்த வரையில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்திய அரசியல் சட்டம் ஆர்ட்டிகிள் 45-ல் என்ன சொல்லியிருக்கிறது என்றால்

**"45. The State shall endeavour to provide, within a period of ten years from the Commencement of this Constitution, for free and Compulsory Education for all children until they complete the age of fourteen years."**

என்று சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய ஹையர் எலிமெண்டரி ஸ்டேஜ் அல்லது மிடில் ஸ்கூல் ஸ்டேஜ் எது என்று சொல்லப்படவில்லை. ஐந்து வயதிலேயே கல்வியை ஆரம்பிக்க வேண்டும் என்று வைத்துக்கொண்டால் பதினைலாவது வயதிற்குள் ஐந்தாவது பாரம் அல்லது பத்தாவது ஸ்டாண்டர்ட் படித்தாக வேண்டும். பன்னிரண்டாவது வயதில் எட்டாவது ஸ்டாண்டர்ட் அல்லது மூன்றாவது பாரம் படித்தாக வேண்டும். 1960-ம் வருஷத்திற்குள் இந்நாட்டிலுள்ள 14 வயது வரையில் இருக்கும் ஆண், பெண் எல்லோருக்கும் கல்வியை கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் இப்பொழுது போட்டிருக்கப்பட்ட திட்டத்தின்படி ஐந்து வருஷங்களில் அப்படிச் செய்துவிட முடியுமா ? அது சாத்தியமான காரியம் என்று நான் கருதவில்லை. எலிமெண்டரி எடுகேஷன் கமிட்டி ரிப்போர்ட்டில் பாரகிராப் 26-ல் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்

"It is expected that successful completion of Standard V gives the pupil permanent literacy."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஐந்தாவது ஸ்டாண்டர்ட் வரையில் படித்து விட்டால் அவர்கள் "Literate" என்று சொல்லக்கூடும். இந்நாட்டிலுள்ள எல்லோருக்கும் ஐந்தாவது ஸ்டாண்டர்ட் வரையில் கல்வி அளிக்க வேண்டியதுதான் சர்க்காருடைய முதல் கடமையாக இருக்க வேண்டும். அதற்காக எவ்வளவு செலவாகிறது, அதனால் லாப நஷ்டம் என்ன என்பதை பரிசீலனை செய்து அதற்கு மட்டும் முதலில் இடம் கொடுக்க வேண்டும். அதற்கான திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். அப்படிப்பட்ட திட்டம் செய்தால் போதும் என்பது அரசியல் சட்டத்தை வகுத்தவர்களுடைய நோக்கம். பதினான்கு வயது வரையில் கல்வி அளிக்க வேண்டும் என்று ரிப்போர்ட்டில் இருக்கிறது. ஐந்தாவது வயது முதற்கொண்டு படிக்க வேண்டும் என்பதும் ஐந்தாவது ஸ்டாண்டர்ட் வரையில் படிக்க வேண்டும் என்பதும் சர்ச்சைக்கு உள்ள விஷயமாக இருக்கிறது. அதில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும் அதற்கு உபகரணமாக இருக்கிறவர்களுக்கும் சர்ச்சைக்கு இடமாக இருக்கிறது. இதில் கல்வி கற்கும் குழந்தைகளிடையேயும் பெற்றோர்களிடையேயும் அல்லது பள்ளி மாணவர்களிடையேயும் இருக்கிற அபிப்பிராயம் என்ன என்பதை ஆராய வேண்டும். அநேகமாக படித்தவர்கள் எல்லோரும் வேலைக்குப் போக வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். "வேலை" என்பதை கொஞ்சம் விளக்க வேண்டியதாக இருக்கிறது. அவரவர்கள் செய்து வருகிற வேலை அல்ல, உடல் உழைப்பு வேலை அல்ல. இன்று காலையில் கனம் வி. ஆர். கிருஷ்ண அய்யர் குறிப்பிட்டது போல் ஏதோ சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் ப்யூன் வேலையாக இருந்தாலும் அல்லது வேறு எந்த வேலையாக இருந்தாலும் சரி அந்த மாதிரியான வேலை கிடைக்குமா என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு பள்ளிக்கு எல்லோரும் செல்கிறார்கள் என்று சொல்வது சரியோ அல்லது தப்போ என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. பி.ஏ., இண்டர்மீடியேட் அல்லது எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் எல்லோரும் உழைப்பு கம்மியாக இருக்க வேண்டும் வருவாய் அதிகமாக இருக்க வேண்டும் அப்படிப்பட்ட வேலையைத்தான் பார்க்க வேண்டும் என்று பெற்றோர்களும் மாணவர்களும் நினைக்கிறார்கள், அம்மாதிரியான வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் படித்தார்களே தவிர வேறு வகைக்கு இல்லை, ஆகவே கல்வியினுடைய நோக்கம் என்னதுதான் என்று ஒரு "honest opinion" அல்லது "honest expression" உள்ளபடியே மனோ பாவத்தைப் பொறுத்து இருப்பதை பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள், சர்க்கார் என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி வரையறுத்துச் சொல்லப் படவில்லை. இந்த அரசாங்கத்தில் என்ன என்ன வேலைகளிருக்கின்றன, அவைகளுக்கு எத்தனை பேர்களுக்கு வேலை எவ்வளவு சம்பளம் கொடுக்க முடியும் என்பது மக்களுக்குத் தெரியவில்லை. கிராடுவேட்கள், இண்டர்மீடியேட், எஸ்.எஸ்.எல்.சி. எட்டாவது ஸ்டாண்டர்ட் படித்தவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் இவ்வளவுதான் என்று குறைத்து சொல்லி விட்டால் ஓரளவு பெருவாரியான மக்கள் படிக்க வேண்டுமென்கிற மோகமும், தப்பு எண்ணத்துடன் படிக்கும் மோகம் தணியும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று காலை கனம் நிதி மந்திரி அவர்கள்



கல்வியைப்பற்றி பேசும்போது "விடுதலை" பத்திரிகையை மனதில் கொண்டு பேசியிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். விடுதலைப் பத்திரிகையில் இரண்டு நாட்கள் தொடர்ந்தாற்போல் இதைப்பற்றி எழுதி வந்தார்கள். அது சரியோ அல்லது தப்போ அதைப்பற்றி நான் சொல்ல முன் வரவில்லை. பொதுவாக இந்த சென்னை ராஜ்யத்தில் கொஞ்சம் நல்ல பத்திரிகை என்று கருதப்படுகிற சுதேசமித்திரன் பத்திரிகையே இந்தக் கல்வி மாறுதலைப்பற்றி தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால் :

'பொதுவாக கூறுமிடத்து தமிழ் நாட்டில் குழந்தைகளின் உணர்வு நான்கு வயதிலேயே உருவாகி விடுகிற தென்பதை அனுபவத்தில் பார்க்கிறோம். எளிதில் எவ்விஷயமும் பதியக்கூடிய பருவநிலை இச்சமயத்தில் ஆறு வயது வரை குழந்தைகள் வீணாக அலைய விடுவது உசிதமல்ல.' இம்மாதிரி சுதேசமித்திரன் பேபரிலேயே எழுதியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் திட்டத்தைப் பார்த்தால் பிராமணர்களுக்கும், பணக்காரர்களுக்கும் உதவியாக இருக்கும்படியாக திட்டம் புகுத்தப்பட்டிருக்கிறது என்று சிலர் குற்றம் சாட்டுகிறார்கள் என்று குறிப்பிட்டார். நேர்முகமாக உதவி செய்வதாக அதில் குறிப்பிட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மறைமுகமாக உதவி தருவதாகச் சொல்லுகிறார்கள். பிராமணர்கள் அநேகமாக கிராமங்களில் இருப்பதில்லை. நகரங்களில்தான் இருக்கிறார்கள். அதைப் போலவே பணக்காரர்களும் டவுனில்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு டவுனில் இருக்க வசதி அதிகமாக இருக்கிறது.

பிராமணர்கள் தெரிந்தோ, தெரியமலோ கிராமங்களில் வசிப்பதில்லை. 3-25 p.m.
நகரங்களுக்கு வந்து விட்டார்கள். அதைப் போலவே பிராமணர் அல்லாதார்களிலும், உத்தியோகத்தில் இருப்பவர்கள் நகரங்களில் இருக்கிறார்கள். இவர்களுடைய குழந்தைகள் பெரும்பாலும் சின்ன வயதிலேயே எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டு விடுகிறார்கள். நான் என்னுடைய பிள்ளையை அமராவதிபுதூரிலுள்ள முருகப்பா மகளிர் இல்லத்தில் படிக்க விட்டிருந்தேன். அங்கே மாண்டிசேரி முறையில் பாடபோதனை நடை பெற்று வருகிறது. என்பையனுக்கு தற்சமயம் 10½ வயது ஆகிறது. நன்றாகப் படிக்கிறான். நான்கு வயதிலேயே புத்தகங்கள் படிக்கவும் திருக்குறள் ஒப்புவிக்கவும் கற்றுக்கொண்டான். ஆனால் அப்போது எதுவும் எழுதத் தெரியவில்லை. பெரும்பாலான குழந்தைகள் சிறு வயதில் படிக்காமல் போகின்ற நிலை தான் இருக்கிறது. கனம் மந்திரி அவர்கள் பேசும்போது விடுதலையில் வந்துள்ள தலையங்கத்தில் ஏதோ தவறாகக் குறிப்பிட்டிருப்பது போலச் சொன்னார்கள். அவர்கள் குற்றம் எதுவும் சாட்டியிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. உள்ள விஷயங்களை உள்ளபடியே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதனை நாமும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். படித்தவர்களுடைய குழந்தைகளுக்கும், படிக்காதவர்களுடைய குழந்தைகளுக்கும் கல்வி அபிவிருத்தியில் வித்தியாசம் இருக்கிறதைக் காண்கிறோம். அதே போல நகரங்களில் இருக்கும் குழந்தைகளுக்கும், கிராமங்களில் இருக்கும் குழந்தைகளுக்கும் வித்தியாசம் இருப்பதைக்காண்கிறோம். ஆகவேதான் பெரும்பாலான குழந்தைகளின் நன்மையை உத்தேசித்து ஆரம்பப் பள்ளி படிப்பின் காலம் ஐந்து வயதிலிருந்து ஆறு வயதாக உயர்த்தப்படக் கூடாது என்று நான் கருதுகிறேன். "இளமையில் கல்," "ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையுமா", என்பன போன்ற பழமொழிகள் நாட்டில் இருக்கின்றன. "ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையுமா", என்கின்ற பழமொழியே, சிறு வயதிலேயே மாணவர்கள் படிப்பதற்கான வசதி ஏற்படுத்தப்படவேண்டுமென்ற அடிப்படையில், கல்வியை ஒட்டி வழக்கில் வந்த மரபு மொழியாக இருக்க வேண்டும். நான் 1931-ல் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்தேன். அப்பொழுது ஆப்ஷனல் பாடம் Mathematics and Physics ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு பாட திட்டம் மாறிவிட்டது. அது தான் முன்பு இருந்த பாட திட்டத்தின் கடைசி வருஷம். கல்லூரிக்குப் போகும் காலத்தையும் 17 ஆக உயர்த்துவது சரியல்ல. இதை உயர்த்துவதற்காக ஆரம்பக் கல்வி வயதை 5-ல் இருந்து 6 ஆக உயர்த்துவது போலத்தோன்றுகிறது. இது சரியல்ல. இப்பொழுதே எஸ்.எஸ்.எல்.ஸி. படித்து விட்டு, காலேஜில்

யில் இந்தி ஆசிரியர் இருக்கிறார். ஆனால் அங்கு ஹிந்தி வகுப்பு நேரத்தில் மற்ற பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இன்று கல்லூரிகளில் பல ஆயிரம் பேர் ஹிந்தி படிக்கிறார்கள். அவர்கள் அனேகமாக படித்த வகுப்பை அதாவது பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர்களென்றே சொல்லி விடலாம். அப்படி இருப்பதினால் இன்னும் 10 வருஷங்களில் தேசத்தில் முன் போல பார்ப்பனர்கள் ஹிந்தி படித்து விட்டார்கள், மற்றவர்களுக்கு சலுகை வர வேண்டும் என்ற கூச்சல் கிளம்பத்தான் செய்யும். ஏனெனில் தேசிய ஐக்கியத்தில் நல்ல உறுதி உடையவர்கள் திட்ட வட்டமாக நல்ல முறையில் ஹிந்தியை எல்லோரும் கற்க வசதியாக கல்வித் திட்டத்தை வகுப்பார்களென்று நான் கருதுகிறேன். இன்று ஹிந்தி இஷ்டப் பாடமாக **(optional)**-ஆகக் கொள்ளக்கூடியவன் சைபர் வாங்கினாலும் பாஸ். ஹிந்தியில் கைத் தொழில் கல்வியைப் பார்ப்போம். இன்று **Engineering College**-ல் மற்ற பாடங்களில் அதிகமான மார்க்கு வாங்கி இருந்தாலும் **craft** கைத்தொழில் பாடத்தில் மார்க் வாங்கினால்தான் தேர்வு செய்யப்படுகிறான். அதே மாதிரி அங்கே தச்சு வேலை யில் அல்லது இரும்பு வேலை, கொல்லன் வேலையில் பாஸ் பண்ணினால்தான் மேலே செல்ல முடியும். மற்றப்படி மற்ற பாடங்களில் நிறைய மார்க்கு வாங்கி இருந்தாலும் கூட அவன் தவறி விடுகிறான். ஆனால் **Secondary School** பரீக்ஷையில் கைத்தொழில் **(craft)**-க்கு மார்க்கு இல்லை. அதே மாதிரி ஹிந்திக்கும் மார்க்கு வேண்டுமென்று இல்லை. இந்தப் பாடங்களை மாணவன் புறக்கணிப்பதில் ஆச்சரியம் இல்லை. இந்த நிலைமையில் நாம் போய்க்கொண்டிருந்தால் நம் தேசிய ஐக்கியமும் வளர்ச்சியும் எப்படி ஏற்படும் என்றுதான் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகவே ஹிந்தி இஷ்டப்பாடமாக ஆக **optional subject** ஆக இருந்தால் கூட குறைந்தது 20 அல்லது 25 மார்க்காவது வாங்க வேண்டுமென்று ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது. இன்று பல பாடசாலைகளில் ஹிந்தி விஷயத்தில் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஹிந்தி பண்டிதர்கள் இருந்தும் அங்கு இந்தி பாட வகுப்புகள் நடப்பதில்லை. அரசாங்க பணம் விரயமாகிறது. திருப்பளாத்துறையில் நடக்கிற விவேகாநந்த வித்யாவனம் போன்ற பள்ளிக் கூடங்களில் ஹிந்தி படித்துத் தான் ஆக வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அந்த மாதிரிப் பள்ளிக் கூடத்தில் படிக்கிறவர்கள்தான் பிற்காலத்தில் நாட்டில் முன்னுக்கு வருவார்கள். ஆகவே கண்டிப்பாக ஹிந்திக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து ஆக வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். இல்லை யென்றால் நமது தேச பிதா விற்கு நாம் பெரிய துரோகம் செய்கிறோம் என்றுதான் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்தியை நமது பள்ளிக்கூடங்களில் 4-வது பாரத்தில் ஆரம்பித்தால் கூடப் போதும். அதிலிருந்து நாம் மேலும் மேலும் பெருக்கிக் கொள்ளலாம்.

**SRI S. RAMALINGAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று நம் நாட்டில் நிலவிவரும் கல்வி திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்பதுபற்றி இந்த நாட்டில் அனேகமாக அபிப்பிராய பேதம் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். ஏனெனில் இப்போது இருக்கக்கூடிய கல்வித் திட்டம் சுதந்திரம் அடைந்த இந்த நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை. இந்தத் திட்டத்தினால் பல்லாயிரக்கணக்கான படித்த மாணவர்கள் வேலை இல்லாத் திண்டாட்டத்தினால் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் நமது நாட்டின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமலிருக்கிறது. இப்போது அமுலிலுள்ள திட்டமானது சென்ற காலத்தில் ஆட்சியில் இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன் ஆட்சி இயந்திரத்தைத் திறமையாக நடத்துவதற்கு எந்த அளவு தேவையோ அந்த அளவிற்கு அதை நிலை நாட்டுகிற முறையில் தான் அமைக்கப்பட்டிருக்கிறது. மற்றப்படி நாட்டின் நன்மைக்காக இல்லை என்கிற காரணத்தினால் இந்தத் திட்டம் மாற்றி அமைய வேண்டுமென்ற அபிப்பிராயம் அனேகமாக ஏகோபித்த அபிப்பிராயமாக இருப்பதினால் அந்த முறையில் நாம் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்ற விஷயம்தான் சர்ச்சையில் இருந்து வருகிறது. இப்போது நாம் மாற்றி அமைக்கும் கல்வித் திட்டம் பிற்காலத்தில் வரக் கூடிய நம் குழந்தைகள் இந்த நாட்டை மிக உன்னதமான நிலைமைக்குக்



கொண்டுவருவதற்கு அவர்களை நாம் தயாரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நமது கல்வித் திட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும். இப்போது 200 வருஷ பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக்குப்பிறகு நாம் விடுதலை அடைந்து இருந்தாலும் நாம் பொருளாதாரத்துறையில் மிகவும் பின்தங்கி இருக்கிறோம். நம் நாட்டு மக்கள் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடுஇன்றி கஷ்டப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றி அமைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இப்போது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் முனைந்திருக்கிறோம். இந்த நாட்டின் பொருளாதாரத்துறையில் துரிதமான வளர்ச்சியைக் காணவேண்டுமென்றால் அது இயந்திர வளர்ச்சியினால் தான் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். இப்போது அந்த இயந்திர வளர்ச்சியைத் துரிதப் படுத்தக்கூடிய முறையில் நாம் எந்த அளவிற்குச் சாதகமான கல்வித் திட்டத்தை வகுக்கிறோமோ அந்த அளவிற்கு நாம் பயிற்சி அளிக்கக்கூடிய மாணவர்கள் அதை நிறைவேற்ற முடியும். இன்றுள்ள **Secondary Education** முறையில் இப்போது பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் **S.S.L.C.** பாஸ் பண்ணிவிட்டு எந்த வேலைக்கும் லாயக்கு அற்றவர்களாகத் திண்டாடுவதை நாம் பார்க்கிறோம். அவர்கள் சர்க்கார் உத்தியோகத்திற்கு போக வேண்டுமென்றால் அங்கே ஒரு **Service Commission** வைத்திருக்கிறார்கள். காலேஜிற்குப் போகவேண்டுமென்றால் அங்கே ஒரு விதமான **Test** வைத்திருக்கிறார்கள். அல்லது இதே மாதிரி **Polytechnic**-க்குப் போக வேண்டுமென்றால் அவர்களுக்கு ஒரு விதமான **Selection** வைத்திருக்கிறார்கள். இந்த மாதிரி சர்க்கார் உத்தியோகத்திற்கோ அல்லது காலேஜிற்கோ அல்லது பாலிடெக்னிக்கிற்கோ போக வேண்டுமென்றால் அவர்கள் அதற்கு லாயக்காக இல்லை. ஆகவே இந்த நிலைமையைப் போக்கி இது போன்ற ஒவ்வொரு தொழிலுக்கும் போக வேண்டுமென்றால் அல்லது **College**-ல் சேர வேண்டுமென்றால் அதற்கான பயிற்சி என்ற முறையில் அதற்கான ஸ்தாபனத்தை நாம் அமைத்துக்கொண்டால் மேலும் முன்னேறக்கூடிய நிலைமைக்குச் சௌகரியமாக இருக்கும். ஆனால் இப்போதுள்ள நிலைமையில் பிள்ளையைப் படிக்க வைத்த பிறகு கூடத் தங்கள் பிள்ளைக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை பெற்றோருக்கு இல்லை. ஆகவே இந்த நிலைமையை நாம் அகற்றி மாணவர்கள் ஒரு கோர்ஸ் **(Course)** படித்த பிறகு அடுத்தபடியாக அவர்கள் மேல் உத்தியோகத்திற்கோ, காலேஜ் படிப்பிற்கோ போவதற்கான நிலைமையை ஏற்படுத்தக் கூடிய முறையில் நமது **Secondary Education** முறையை வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது சர்க்கார் கொண்டுவந்திருக்கும் வெள்ளை அறிக்கையில், அவர்கள் செய்திருக்கும் சிபார்சுபடி, **Higher Secondary Education** கீழ் **Academic Course** என்றும் **Bifurcated Course** என்றும் இரு பிரிவுகளாக பிரித்திருக்கிறார்கள். **Academic Course**-ல் படித்த மாணவர்கள், **College Course** படிக்க வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். **Bifurcated Course** படிக்கிறவர்கள் **Secretariat Course**-ஆவது **Commercial Course**-ஆவது எடுத்துக்கொள்ள அவர்களுக்கு வசதிகள் இருக்க வேண்டும். **Teacher's Training Course**-லும் அவர்களை **Select** செய்ய வேண்டும். மற்றத் தொழில் கல்லூரிகளிலும், **Engineering Course**-ல் சேருவதற்கு அவர்களுக்கு உத்திரவாதம் கொடுத்தால் மாணவர்கள் அதிகமாக உற்சாகம் காண்பித்து, அதில் அவர்கள் படிக்க ஊக்கமிருக்கும். **Academic Course** எடுத்துக்கொள்பவர்கள் **B.A. Degree** பெற்றுப் போகவேண்டுமென்ற எண்ணம் மாணவர்களின் பெற்றோர்களுக்குஇருப்பது இயற்கை. ஆனால் அப்படிப்பட்ட மாணவர்கள் **B.A.** வரை படிக்க மூன்று வருஷங்களாகும். அந்த காலத்தில் அவர்கள் பெற்றோர்களின் கண்காணிப்பில் இருக்க முடியாது. அவர்கள் **pass** செய்து விட்டால் நல்லதாகப் போய்விடும். அப்படி இல்லாமல் **fail**-ஆகி விட்டால் அவர்கள் **S.S.L.C. pass** செய்தவர்களாகத்தான் கருதப்படும். **Academic Course**-ல் அதிகமாக செல்வாக்கு இருக்கிறது. ஆனால் **Bifurcated Course**-ல் செல்வாக்கு அதிகமாக இருக்க வேண்டுமென்றால் **Teaching Course pass** செய்துவிட்டால்

[Sri S. Ramalingam] [5th April 1956

அவர்களுக்கு உடனடியாக உபாத்தியாயர் வேலை கொடுக்க வேண்டும், அல்லது அவர்கள் **Co-operative Training pass** செய்துவிட்டாலும் உடனடியாக அந்த **department**-ல் அவர்களுக்கு வேலை கொடுக்கும் படியான சூழ்நிலை ஏற்படவேண்டும். பெற்றோர்களுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய மனோபாவம், தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்ற ஆசை வரும் காலத்தில் ஒரு புதிய உற்சாகம் அவர்களுக்கு ஏற்பட்டுவரும் காலத்தில் இவைகளை செய்து கொடுக்கவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக ஒரு சின்ன **Complication** இருக்கிறது. **Secondary Course** என்றும் **Higher Elementary Course** என்றும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. **Higher Elementary School**-ல் **8**-வது வகுப்புடன் முடித்துக்கொள்ளும் பிள்ளைகள் **Secondary Course** சேர்ந்தாக வேண்டும். ஒரு **System**-த்திலிருந்து மற்றொரு **System**-க்கு மாற்றிக்கொள்ளும் நேரத் **(Transit period)**-தில் இருக்கும் கஷ்டத்தை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். கிராமாந்திரங்களில் இருக்கும் பிள்ளைகள் **Higher Elementary School**-ல் 8-வது வகுப்பு **pass** செய்து விட்ட பிறகு வேறு வேலைக்குப்போகவேண்டிய வசதி அவர்களுக்கு ஒன்றுமில்லை. சில இடங்களில்தான் அவர்களுக்கு 8-வது வகுப்பு வரை படிக்க வசதியுள்ளது. அப்படி இல்லாத இடங்களில் உள்ள பிள்ளைகள் பெரிய நகரங்களுக்குத்தான் படிக்கப்போக வேண்டும். 7-வது வகுப்பு வரை படித்த பிறகு 8-வது வகுப்பில் சேர நகரத்திற்கு அவர்கள் வரவேண்டும். இந்த மாதிரி போக வேண்டுமென்று அவர்களுடைய பெற்றோர்களுக்கு தெரியாது. பக்கத்தில் பள்ளிக்கூடம் இருக்கும்போது எதற்காக பிள்ளைகளை தூரமான இடங்களுக்கு படிக்க அனுப்பவேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆகவே **Higher Elementary Course** முடிந்த பிறகு தங்கள் பிள்ளைகளை நிறுத்திவிட வேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். இப்படி செய்ய விடக்கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதிலும் அவர்கள் 8-வது வகுப்பு **pass** செய்த பிறகு **Secondary Course**-க்கு போக வேண்டுமென்றால், மீண்டும் அந்த பிள்ளைகள் அங்கே 8-வது வகுப்பில்தான் சேர வேண்டுமென்று சொல்வது சரி அல்ல. அப்படிப்பட்ட பிள்ளைகளை 9-வது வகுப்பில் சேருவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். பழையபடி அவர்கள் 8-வது வகுப்பிலேயே படிக்கவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு **Interest** இருக்காது. இன்றைக்கு முக்கியமாக மாணவர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டம் பாஷைதான். **Secondary Course**-ஐ முடித்த பிறகு அவர்கள் கல்லூரிக்குப் போனால் அங்கே போதனு மொழி ஆங்கிலமாக இருக்கிறது. **S.S.L.C.** வரையில் தமிழில் படித்த மாணவர்களுக்கு கல்லூரியில் ஆங்கிலம் படிக்க கஷ்டமாக இருப்பதால் அவர்கள் **fail** ஆகி விடுகிறார்கள். சில பிள்ளைகள் மாத்திரம் அதிக முயற்சி எடுத்து **pass** செய்து விடுகிறார்கள். இன்றைக்கு நம் ராச்சியத்தில் தமிழை பிரதேச பாஷையாக, சர்க்கார் பாஷையாக கொண்டு வர வேண்டுமென்று ஒப்புக்கொண்டிருப்பதால், இது ராஜ்ய புனரமைப்பு ஏற்பட்ட பிறகு அதாவது வருகிற **October**-ல் கொண்டுவர முடியுமென்று நான் நினைக்கிறேன். தமிழ் பிரதேச பாஷையாக வரும் காலத்தில் மாணவர்களுக்கு தமிழ் தான் போதனு மொழியாக இருக்க வேண்டுமென்பதில் ஆட்சேபனை கிடையாது. கல்லூரிகளிலும் தமிழ்தான் போதனு மொழியாக இருக்க வேண்டும். உடனே இதை அமுலுக்கு கொண்டு வர வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நான் இப்போது பேசும்போதுகூட ஆங்கிலம் கலந்த தமிழில்தான் பேசுகிறேன். நாம் தமிழில் தான் பேச வேண்டுமென்ற அவசியமில்லை. முக்கியமாக நாம் உபயோகப்படுத்திவரும் ஆங்கில வார்த்தைகளுக்குப் பதிலாக தகுந்த தமிழ் வார்த்தைகளைப் பொருக்கி எடுத்து ஒரு **Vocabulary** தயார் செய்து கொடுத்தால், சுத்த தமிழில் நாம் பேச முடியும். **Science** இன்னும் மற்ற **Technical** பாட புத்தகங்களை தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். **1965**-ம் வருஷத்திற்கு பிறகு இவைகளைக் கல்லூரிகளில் தமிழில் சொல்லிக் கொடுக்க முடியும் என்று **White Paper Report**-ல் ஒன்றும் காணவில்லை. இப்போது இந்த அறிக்கை விட்ட பிறகு, வேறு யாராவது சர்க்காரில் அதிகாரத்திற்கு வருகிறவர்கள் இதை பார்த்துக்கொள்ளட்டுமென்று சர்க்கார் நினைக்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. **1965**-க்குப்



5th April 1956] [Sri S. Ramalingam]

பிறகு கண்டிப்பாக கல்லூரிகளில் தமிழ்தான் போதனு மொழியாக இருக்குமென்ற வகையில் சர்க்கார் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

அதற்கான ஏற்பாடுகளை இன்றைக்கு அளிப்பதில் இருக்கக்கூடிய சிக்கல் 4-05
களும் அதிகமாக இருக்கிறது. நாங்கள் சொல்வது பள்ளிச் செலவு 3, 4 p.m.
பங்கு செலவு ஏற்படுகிறது. அதைக்குறைப்பதற்கான வழிகள் செய்ய முடியமாவென்று பார்க்கவேண்டும். இதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விரைவில் நம்முடைய வாத்தியார்களின் நிலைமையையும் மாற்றியாகவேண்டும். தமிழில் ஒரு பழமொழி உண்டு 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்று. ஆனால் அப்படிப்பட்ட பழமொழிகளுக்கு மதிப்பு இருக்கிறதா என்றால் இல்லை. எழுத்தறிவித்தவன் எல்லா இடத்திலும் கீழாக மதிக்கப்படுகிறான். அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளமும் குறைவு என்பது மட்டுமல்ல, மதிப்பும் கௌரவமும் கிடையாது. இந்தப் பிரச்னையில் சர்க்கார் கொஞ்சம் அதிக உதவி கொடுக்க முடியும் என்கிற யோசனை சர்க்காரிடம் இல்லை. அதைப்பற்றி பின்னால் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பேசுகிறேன். அவர்களில் பலபேருக்கு **Security of Service** வேலை உத்திரவாதம் கிடையாது. சாதாரண கடை குமஸ்தாவை வேலையைவிட்டு நிறுத்தவேண்டுமானாலும் வேலை நிறுத்த நோட்டீஸ் இருக்கிறது. வேலையை விட்டு வெளி யேற்றவிடாமல் செய்து வேலையை விட்டு வெளியேற்றவேண்டுமானால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறார்கள். இந்த உதவிகூட இன்றைக்கு வாத்தியார்களுக்குக் கிடையாது. கடவுளுக்கும், வாத்தியார்களுக்கும் இன்றைக்கு அந்த நிலைமைதான். இதை சர்க்கார் உடனடியாகக் கவனிக்கவேண்டும். கவனம் செலுத்துவதுடன் அவர்கள் பிரைவேட் மானேஜ்மெண்ட்டில் இருந்தாலும் சரி ஜில்லா போர்டு மானேஜ்மெண்டில் இருந்தாலும் சரி, சர்க்கார் மானேஜ்மெண்ட்டில் இருந்தாலும் சரி சர்வீஸ் உத்திரவாதம் வேலையை விட்டு வெளியே தள்ளுவதனால் குறிப்பிட்ட சில விசாரணைகள் செய்யவேண்டியது அவசியம். இப்படிச் செய்யத் தவறிவிட்டால் இன்றைக்கு வாத்தியார்களுக்கு உற்சாகம் இருக்காது. இவர்கள் கையிலே கொடுக்கும் பொறுப்பு இருக்கிறதே இது மகத்தான பொறுப்பு. குழந்தைகளை தயாரிக்கவேண்டிய மாபெரும் பொறுப்பு அவர்களிடத்திலே கொடுக்கிறோம், ஆனால் இவர்களுக்கு சம்பளம் மிகமிகக் குறைச்சல். **White Paper 30, 40** பக்கம் இருக்கிறது. இருந்தாலும் அது விளக்கமாக இல்லை, இரண்டாவது அந்த **Course** அதிகமாக இருக்கிறது. எட்டு வருஷத்தில் படிக்கவேண்டியதை இப்போது 7 வருஷத்தில் சொல்லிக்கொடுக்கனும். **Number of students** ஜாஸ்தி, அதனால் வாத்தியார்களுக்கு கஷ்டம் அதிகப்படுத்தப்பட்டுவிட்டது. வாழ்க்கையைச் சீர்படுத்தவேண்டுமேன்ற முறையிலே நாம் திட்டம் நிறை வேற்றுகிறோம் என்பதை கவனித்து ஆவனசெய்யவேண்டும்.

**Sri V. BALAKRISHNAN** : தலைவரவர்களே, இன்று நிதி அமைச்சர் 4-08
சபைமுன் சமர்ப்பித்த வெள்ளை அறிக்கையின் நகல் எனக்கு p.m.
உரிய காலத்தில் கிடைக்கவில்லை. கல்வி மந்திரி விளக்கியதன் காரணமாக நான் வாசித்தபோது இருந்ததைவிட அவர்கள் விளக்கிய பிறகு வெள்ளை அறிக்கையில் கண்டுள்ள நல்ல அம்சங்களை அறிந்து அவைகளுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். அவரது ஊக்கத்தை ஆசீர்வதிக்கவேண்டுமென்ற எண்ணத்தால் முன்வந்திருக்கிறேன். முதலிலே ஆரம்பக் கல்வி விஷயத்தைப் பற்றிப் பேசுகிறேன். ஆரம்ப பள்ளிப்படிப்பை எல்லாம் இப்போதுள்ள நிலைமையிலே இருந்து பாதுகாக்கப்பட வேண்டும். உடனடியாக சர்க்கார் இதிலே தலையிட்டு மாவட்ட அதிகாரத்திலே உள்ள பள்ளிக்கூடங்களை எல்லாம் மாற்றி **D.P.I.**-யிடம் ஒப்படைக்க கேட்டுக்கொள்ளுகிறேன். ஏன் என்றால் இன்றைக்கு அங்குள்ள நிலைமைகளின் தன்மை மிக மிக மோசமாக இருக்கிறது. அப்படியே இருந்துகொண்டுவருகிறது. ஏதோ பல ஆண்டுகளுக்கு முன்னால் வெள்ளையாட்சியின் கீழே மக்கள் பிரதி நிதித்வம் பெறுவதற்குவேண்டிய அநுபவம் பெறவேண்டும், **National Plan Activities**-களில் பூரணமான அநுபவம் பெறவேண்டும். அவைகளை எல்லாம் அவர்களிடத்திலே ஒப்படைத்து

அவர்களை தேசத்தொண்டிற்கு தயார் செய்வதற்கு ஒருவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினால் செய்யப்பட்டது. அந்தக் காலம் மலை ஏறிவிட்டது. இப்போது நாம் இருப்பது அந்தக் காலம் அல்ல. அந்தக் காலத்திலிருந்து முன்னேறிவிட்டோம். இப்போது இங்கு இருப்பவர்கள் எல்லாம் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு இந்த இடத்திலே அங்கத்தினர்களாக இருக்கும் இந்த நிலைமையிலே இன்னும் இப்படி விட்டு வைத்திருப்பது ஏன்? ஆரம்பப்பள்ளிக்கூட நிர்வாகத்தில் கட்சி அரசியலுக்கு இடம் கொடுத்து மாவட்ட அங்கத்தினர்களிடம் அதிகாரத்தை வைத்து இருப்பதால் அவர்களுக்கு இஷ்டப்படாத வாத்தியார்களை எல்லாம் வஞ்சம் தீர்த்துக் கொள்கிறார்கள். சாதாரண வாத்தியார் மாவட்ட அங்கத்தினர்களைக் கண்டால் மேல்வேஷ்டியை எடுத்துவிடவேண்டும். இப்படி மேல் வேஷ்டியை எடுப்பதில் ஏதாவது சிறிது தாமதம் ஏற்பட்டுவிட்டாலும் கூட அல்லது மறந்துவிட்டாலும் அது ஒரு குற்றம் ஆக்கப்படுகிறது. அவர்கள் இருக்கிற இடத்திலே இருந்து எங்கோ முன்பின் தெரியாத இடத்திற்கு மாற்றப்படுகிறார்கள். அந்த அதிகாரத்தை மாவட்ட உப தலைவர்களிடம் ஒப்படைத்தால் அந்த மாவட்ட உப தலைவர்களிடம் முறையிட்டு தங்கள் குறையை நிவர்த்தித்துக்கொள்ள முடியும். காலையிலே தான் என் நண்பர் திரு. Palaniandi மாவட்ட உப தலைவர்கள் இந்த வாத்தியார்களிடத்திலே வந்து ஒரு அறிக்கையைக் காட்டிக்கொண்டு இந்த நிதிக்கு இவ்வளவு தொகை போடு என்று கேட்கிறார்கள். தலைவர் கல்வி இலாகாவுக்கு இருப்பதைப்போல் இந்த அதிகாரத்தை மாவட்ட நிர்வாகத்தில் அதை பங்கிட்டு இந்த அதிகாரத்தை உபதலைவர்களிடம் கொடுத்துவிடுகிறார்கள்.

**HON. MEMBERS** : எங்கே.

**SRI V. BALAKRISHNAN** : District Board-களிலே.

**SRI K. RAJARAM NAIDU** : அதை மாற்றியாச்சு.

**SRI V. BALAKRISHNAN** : என் நண்பர் சொல்வதுபோல் அப்படி மாற்றி இருந்தால் நான் மிக மிக சந்தோஷப்படுகிறேன், அங்கத்தினருக்கு அதிகம் அதைப்பற்றித் தெரியும். நிர்வாகத்திலே இருந்து இருப்பவர். அப்படி இருக்கும் பட்சத்தில் நான் மிகவும் சந்தோஷப்படுவேன். ஆனால் அப்படி இல்லாவிட்டால் திருத்தி அமைக்க வேண்டுமென்று நான் கோருகிறேன். ஆரம்பக் கல்விபற்றிப் பேசும் போது சீமான் ரங்கசாமி ரெட்டியார் சொன்னார்கள். நம் கிராமத்திலே இருக்கும் பெரும்பாலான ஜனங்களுக்கு படிப்புக்கொடுக்கவேண்டும். படிப்பு என்றால் படிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அவர்களுடைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அனுப்புவதில்லை. அப்படியே தங்கள் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதிலே இரு சாரார் இருக்கிறார்கள். மூன்று, நான்கு வயதில் இருந்து 10 12 வயது வரை பெற்றோர்கள் பிள்ளைகளை அனுப்புகிறார்கள் என்றால் அந்தப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போய் படிக்கவேண்டுமென்று நல்ல நோக்கத்துடன் அவர்கள் அனுப்புவதில்லை. ஏதோ பிள்ளைகள் வீட்டில் இருந்தால் தங்களுக்குத் தொந்திரவு கொடுக்கிறார்கள் என்று கருதி, இவர்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டால் வீட்டிலே தொந்தரவு இல்லாமல் வேலை செய்யமுடியுமென்று எண்ணுகிற காரணத்தினாலே அங்கேயாவது போய்த் தொலையட்டும், பள்ளிக்கூடத்திலே போய் அங்கே விளையாடிவிட்டு வரட்டும் என்று அனுப்புகிறார்கள் ஒரு சாரார். அடுத்த சாரார் கொஞ்சம் வசதி உள்ளவர்கள் குழந்தைகள் உள்ள நிலைமையில் படிப்பதற்கு அனுப்புகிறார்கள். இவர்கள் படிக்கக்கூடிய நிலைமையில் உள்ளவர்கள். அதனால் தங்கள் பிள்ளைகளை படிப்பதற்கு அந்த வயதிலேயே அனுப்புகிறார்கள். அவர்கள் எந்த நோக்கத்துடன் அனுப்புகிறார்கள் என்றால் கல்வி அறிவு பெறவேண்டும், பகுத்தறிவு பெறவேண்டுமென்று ஒரே நோக்கத்திற்காக. ஆனால் நம் கிராமத்திலே இருக்கிறவர்கள் நோக்கம் இது அல்ல. நம்முடைய பிள்ளைகள் B.A. பாஸ் பண்ணினால்போதும், பெரும்பாலும் உயர்ந்த உத்யோகத்துக்கு வந்து விடலாம் என்ற நோக்கத்துடன்தான். நாம் பட்டணங்களிலே உள்ளவர்கள் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைக்கிறோம். இந்த மனப்பான்மைதான்



நம்மிடத்தில் இன்று நிலவுகிறது. கிராமங்களிலே உள்ள ஜனங்களுக்கு சர்க்கார் ஓரளவு படிப்பு கொடுக்கவேண்டும்., வசதிசெய்து தரவேண்டும் என்று விரும்புகிறார்கள். பிள்ளைகள் படித்துவிட்டு S.S.L.C. பாஸ் செய்துவிட்டு அவர்களுக்கு வேலை கிடைக்காமல் தூங்குகிறார்கள். இந்த பிள்ளைகள் படித்து இருப்பதைப் பார்த்து அவர்களுக்கு வேலைக்கிடைக்காமல் இருக்கும் நிலைமையை உணர்ந்து பெற்றோர்கள் அதிகப்படியான பணத்தை செலவு செய்து அதிக வீணாகப்போனதும் பார்த்து இப்போது பிள்ளைகளை அனுப்பவேண்டுமென்று இஷ்டப்படுவதில்லை. இப்போது இந்த மனப்பான்மையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். இப்படி நம்முடைய படிப்பின் மூலமாகப்படித்துவிட்டு வந்த பிள்ளைகளும் வேலை கிடைக்காவிட்டாலும்கூட கிராமத்திலே சென்று வீட்டிலே உள்ள வேலையை பார்ப்போம் என்ற எண்ணம் அதுவும் இல்லை. படித்த காரணத்தினால் பெற்றோர்களுக்கு உதவியாக விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. உட்கார்ந்திருந்தாலும் இருப்பார்களே தவிர விவசாயத்தில் தகப்பன் கஷ்டப்பட்டாலும்கூட தகப்பனுக்கு வயலிலே போய் உதவி செய்வதில்லை. அவனுக்கு உதவியாக மாடுகளை மேய்ப்பது, அவைகளைக் கட்டுவது முதலிய வேலைகளில் ஈடுபடுவதில்லை. அந்தத் தகப்பன் தன் மகனைப் பார்த்து இந்த மாட்டைப் பிடித்துக் கட்டு என்று சொன்னால் அந்த மகன் தகப்பனைப் பார்த்து **You old hag** என்று சொல்லுகிறான். அதேபோல்தான் இப்போது இருக்கிற கல்வி முறை குழந்தைகளைத் தயாரித்து அனுப்புகிறது. பிள்ளைகள் படித்துவிட்டு வந்து வேலை இல்லாத காரணத்தினால் இன்றைக்கு கிராம வாசிகள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு போக வேண்டியதில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இந்த முறையை மாற்றவேண்டும். இந்த முறையை மாற்றி அமைத்தாகவேண்டும் என்றால் ஒவ்வொருவரும் படித்தாக வேண்டும். படிக்கிறவர்கள் உத்தியோகத்திற்காகப் படிக்கக்கூடாது என்ற மனப்பான்மை ஏற்படுவதற்கு வேண்டி நம்முடைய கல்வி அமைச்சர் அவசியம் முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அடிப்படையாக இதர நாடுகளிலே இந்த மனப்பான்மையை வளர்த்து வருவதற்கு Elementary Secondary School-களிலே, ஒவ்வொரு கிராமத்திலும் கிண்டர் கார்டன் ஸ்கூல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த நாட்டிலும் அந்த முறையைக் கொண்டுவந்து பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு ஆசை ஏற்பட்டால் பெற்றோர்களைப் பார்த்து பிள்ளைகள் நல்ல முறையிலே பெற்றோர்களின் பழக்க வழக்கங்களை வளர்த்துவரும் முறையிலே கிண்டர்கார்டன் முறை உகந்ததாக இருக்கிறது என்று நினைக்கிறேன். இதர நாடுகளில் வயதைப் பற்றி அவர்கள் பார்ப்பதில்லை. நமது நாட்டிலே மட்டும் தான் 5 வயது, 6 வயதாக வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மந்திரி அவர்கள் சொன்ன கருத்துக்களை ஓரளவு ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அவர்கள் சொல்லியபடி கல்விச்சூழ்நிலையால் பெரும்பாலான பிராமண குடும்பத்திலே அனைவரும் படித்து இருப்பார்கள். அண்ணன் படிக்க காலையிலும் மாலையிலும் புஸ்தகத்தைத் திறந்து உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தவுடன் இரண்டு, மூன்று வயது உள்ள குழந்தை பக்கத்திலே உட்கார்ந்து முன்னாலே பென்சிலால் தரையிலே கிறுக்க ஆரம்பிக்கிறது. இதே மாதிரி கிராமத்திலே பார்ப்போமானால் ஒரு குழந்தை, 2, 3 வயதுள்ள குழந்தை அதனுடைய தாயார் சாணி எடுக்கும்போது தாயாருடன் சாணி எடுக்கும். மண்ணைச் சுரண்டினால் இதுவும் மண்ணைச் சுரண்டும். ஆகையினால் குழந்தைகள் உள்ளத்திலே பதியக்கூடிய இந்த வயதில் அவர்கள் மனதை நல்ல முறையிலே அமைக்கவேண்டியது மிக அவசியம்.

ஆகையினால் படிப்பதில் அவர்கள் முன்னேறி இருக்கிறார்கள். அது 4-15
தான் காரணம். நாமும் பார்த்திருக்கலாம். பார்ப்பனர் சமூகத்தில் p.m.
படிக்காதவர்கள் இல்லையென்று சந்தோஷத்துடன் சொல்லுகிறேன். நாம் பார்க்கலாம் Bus, Rail-ல் அவர்கள் யாராயிருந்தாலும், வெள்ளை சேலை கட்டியவர்கள்கூட, கையில் கல்கியை வைத்துப் படித்துக்கொண்டுதான் போவார்கள். எதற்காக 5 வயதிலிருந்து 6 வயது வரை நீடிக்க வேண்டுமென்று கேட்கிறேன். இதர நாடுகளில் எந்த கட்டத்திலும் குறைந்த வயது என்று குறிப்பிட்டிருப்பதாக தெரியவில்லை. இலங்கையில் இவ்வளவு வயதிற்குள் ஆரம்பக்கல்வி முடித்திருக்கவேண்டுமென்பது

[Sri V. Balakrishnan] [5th April 1956

இல்லை. இவ்வளவு வயதுக்குப் பிறகுதான் **University Education**-க்குப் போகவேண்டும் என்பதும் இல்லை. ஆரம்பக்கல்வி முடித்துவிட்டு **University**-க்கு முன் மூன்று பிரிவுகளாக பிரித்திருக்கிறார்கள். **Classical, Vocational** என்றும் பிரித்து மாணவர்களுக்கு எதில் **aptitude** இருக்கிறது என்று பார்த்துவிடுகிறார்கள். இந்த இரண்டிலும் வராதவர்களை **Commercial training**-க்கு அனுப்பி விடுவார்கள். இப்படி மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டு அதை வைத்துக்கொண்டு அவர்களுக்கு படிப்புசொல்லிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இலங்கையில் அதன் காரணமாக எந்தெந்த வேலைக்கு **aptitude** இருக்கிறதோ அந்தந்த வேலைக்கு போகிறார்கள். அதனால் சர்க்காரும் பாதிக்கப்படவில்லை. திறமையாகவும் இருக்கிறார்கள். வேலையும் தாராளமாகக் கிடைக்கிறது. ஆனால் நம் நாட்டில் இந்த மாதிரியில்லை. படித்தவர்கள் தெருக்களில் ஆடு மாடுகள் மாதிரி அலைந்து கொண்டிருக்கிறார்கள். அநேக **B.A.**-க்கள் என்னிடம் **Certificate**-க்காக வரும்போது அவர்களை கேள்விகேட்பது உண்டு. நீங்கள் குடியிருக்கும் ஊரில் எவ்வளவு ஜனத்தொகை என்று கேட்டால் தெரியாது. எங்கே என்னென்ன தொழில்சாலைகள் இருக்கிறது என்று கேட்டால் அவர்கள் தெரியாது என்றுதான் சொல்கிறார்கள். **Little knowledge is dangerous** என்பது மாதிரி அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்பட்டு தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைமையில் தான் இருக்கிறார்கள். எந்தெந்த வேலைக்கு யார் யார் லாயக்கு என்று பார்த்து அதற்கென்று திட்டம் வகுத்து அவர்கள் சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு அந்த முறையில் கல்வித் திட்டம் வகுப்பது நல்லது என்று சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்களே! ஆரம்பக் கல்வி விஷயத்தில் இவ்வளவு வருஷங்களுக்குள் எல்லாரும் படித்தவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கும் தருணத்தில் அவர்கள் சொன்னார்கள். **Rajaji** கல்வித் திட்டம் ஒரு சிறந்த திட்டம் என்று நானும் அதை அப்படியே ஆதரிக்கிறேன். **Rajaji** அந்தக் காலத்தில் அந்தத் திட்டத்தைப்பற்றி சரியான பிரசாரம் செய்யாத காரணத்தால் பலர் பல கண்ணோட்டத்தில் பார்த்தாலும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. மேல்படி அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவார்களானால் கொண்டுவந்து மக்களுக்கு விஷயங்களை சரியாக எடுத்து சொல்வார்களானால் மக்கள் அந்த திட்டத்தை ஒப்புக்கொள்ள தயாராயிருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனால் 35 per cent அல்லது 40 per cent மக்கள் ஒரே சமயத்தில் படிக்க பணம் வேண்டுமென்று சொன்னார்கள். மக்கள் என்ன சொல்கிறார்கள், இதே திட்டம் **Rajaji** கொண்டு வந்தபோது இதே காரணத்திற்காக கைவிடப்பட்டது. எங்களுக்கு வரி கொடுக்க முடியாது. வரியே கேட்கக்கூடாது. எங்கள் பிள்ளைகள் சும்மா இருக்கட்டும். படித்தவர்களே உத்தியோகம் இல்லாமல் இருக்கிறார்கள். எங்கள் தொழிலே இருக்கிறது. ஏர் இருக்கின்றது, கலப்பை இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு உழுது பிழைத்துக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இப்பொழுது விஷயம் தெரிந்த பிறகு அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் அதற்காக பணம் தயாரித்து இந்த **Rajaji** முறையை ஏற்படுத்தி அதாவது **Shift system**-ஐ ஏற்படுத்தி அதிக செலவு இல்லாமல் செய்தால் மக்கள் ஒப்புக்கொள்ள தயாராய் இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவர்கள் அதில் அடங்கியுள்ள அம்சங்களைப்பற்றி மக்களுக்கு தெளிவான முறையில் எடுத்துச் சொல்வார்களானால் மக்கள் அதை ஆதரிக்க தயங்க மாட்டார்கள் என்று வலியுறுத்தவும் விரும்புகிறேன். இதைப்பற்றி அவர்களுக்கு சந்தேகம் இருக்க வேண்டியதில்லை. ஆகவே நான் மறுபடியும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது. சுரங்க வரி போடாமல் **Shift system** திட்டத்தை ஏற்படுத்தவேண்டும். நம் நாட்டில் எதற்காக தேசீய பாஷை இருக்கவேண்டுமென்று நான் கேட்கிறேன். சுயராஜ்யம் வருவதற்கு முன்பு **Pudukkottai** தனி சமஸ்தானமாக இருக்கும்பொழுது நாங்கள் **Hindi**-க்கு ஆதரவு கொடுத்திருக்கிறோம், கொடுத்துவந்தோம். **Hindi** ஆசிரியர்களுக்கு இஷ்டப்பட்டு **Hindi** படிக்க வந்தவர்களுக்கு எல்லாம் படிப்புக் கொடுப்பதற்காக கட்டணம் கொடுக்கப்பட்டது. அதற்கான **light** செலவும் கொடுக்கப்பட்டது. ஆனால் சமஸ்தானம் சென்னை ராஜ்யத்துடன்



5th April 1956] [Sri V. Balakrishnan]

இணைக்கப்பட்ட பிறகு இது எல்லாம் நிறுத்தி விடப்பட்டது. **Hindi**-க்கு ஆதரவு கொடுக்கிறார்கள் என்று சொல்வதற்காக இல்லை. ஒரு புது பாஷை கற்றுக்கொள்வதினால் என்ன தவறு இருக்கிறது என்று காட்டுவதற்காக இதைச் சொல்கிறேன். அதற்கு ஏன் ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டால் இதில் எவ்வளவு பொருத்தம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். இந்த நாட்டில் **Hindi**-யை தேசீய பாஷை என்பதற்காக அல்ல. ஒரு பாஷையைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு தேசத்திற்கு ஒரு பாஷைதான் இருக்கவேண்டும் என்பது அல்ல. நான் **Committee**-ல் இருக்கும்போது ஒரு **German** பெண்ணைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்கள் சொன்னார்கள், எங்கள் தேசத்தில் மூன்று பாஷைகள் படிக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஒன்று **English** அது **International language** என்பதற்காக அதைப் படிக்கிறோம். **German** பாஷையையும் படிக்கிறோம். இன்னும் **Latin** பாஷையையும் படிக்கவேண்டும். அது **Classical language** என்பதற்காக படிக்கிறோம் என்று சொன்னார்கள். வெளி இடங்களுக்குப் போகக்கூடிய வாய்ப்பு ஏற்படும்போது இவைகள் பிரயோஜனமாயிருக்கும். அவைகளைப் படித்ததினால் **United Nations Organization (U.N.O.)** இவைகளில் பெரிய பெரிய உத்தியோகங்கள் கிடைக்கின்றன. நிறைய பணம் சம்பளமாக வாங்குகிறோம். என் தங்கை **U.N.O.**-ல் இருக்கிறாள் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த மாதிரி **Hindi** கட்டாய பாடம் என்பதற்காக அல்ல. அது கட்டாய பாடமாக இருக்கவேண்டியவசியம் இல்லை. ஆனால் **Hindi** தெரிந்து கொள்வதினால் குற்றம் இல்லை. ஆனால் **Hindi**-ல் இவ்வளவு **marks** வாங்கினால்தான் **promotion** கிடைக்கும் என்று இருக்கவேண்டிய அவசியம் இல்லை. **(Interruption.)**

கட்டாயமாக படிக்க விரும்பக்கூடியவர்களும், மத்திய சர்க்காரில் உத்தியோகம் செய்யவேண்டுமென்று நினைக்கக் கூடியவர்களும் **Hindi**-ஐப் படிக்கட்டும். அதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் **Optional** ஆக எடுத்துக்கொள்ளலாம். அவர்களுக்கு மட்டும் **marks** கட்டாயமாக இருக்க வேண்டுமென்பது சொன்னேன். இப்பொழுது பேருக்குத்தான் **Hindi** சொல்லிக்கொடுக்கிறார்கள். இதற்காகத்தான் சொன்னேன்.

**Hindi** எல்லாரும் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். ஆனால் **promotion**-க்கு இவ்வளவு **marks** என்று இருக்கக்கூடாது. அங்கேதான் **Element of compulsion** வருகிறது. **Sri V. R. Krishnan** வெள்ளை அறிக்கையை பரிபூர்ணமாகப் படித்திருந்தால் குறைசொல்ல இடம் இருக்காது.

* SRI P. B. K. RAJA CHIDAMBARAM: Mr. Speaker, Sir, let me congratulate the Hon. the Minister for Education for the bold attempt he has made to solve this very complicated problem. This is an age of planned development and in every sphere of life we are talking of plans, targets and achievements. In the sphere of education, however, there has been no definite plan hitherto. Of course, some attempts have been made here and there, but, unfortunately, these attempts have not resulted in proper plans which can be implemented to the advantage of the State. The plans have proved disastrous either to the framers of the plans or the plans themselves. The result has been that nobody has been bold enough to come forward with a definite comprehensive plan for the reorganization of education at the various stages. It was a question of "Who should take the responsibility?", or, in other words, "Who is to bell the cat?". I am happy, therefore, to find that the Hon. Minister for Education has not only come out with a plan but has placed it before this House for our discussion. This

[Sri P. B. K. Raja Chidambaram] [5th April 1956

is especially noteworthy because he did not adopt the usual method of consulting his advisers and the Departmental officers in formulating the plan and then confronting the Legislature and the public with a fait accompli. I am thankful for the opportunity given to us and to the public to study the plan and discuss it.

Personally I do not claim to be an educationist. I am only a layman. Anyhow, I am convinced that the future of our country rests on the plan of education which we are going to adopt. With this view in my mind and with the greatest interest, I read the White Paper which was presented to us. My first impression is that it is rather too lengthy and the arguments advanced and the proposals made are too complicated and confusing. The White Paper is highly technical and a layman like me is apt to be confused by figures like 104 per cent, etc. It deals with a large number of details, which I submit is unnecessary. The problem for the Government and for the Legislature is to indicate in broad outlines the various stages of education and the organisational pattern of education and to prescribe certain standards of attainment which can be expected at the end of each stage of education. The details regarding the curriculum and the personnel to carry out these plans can be safely left to the Department concerned. With the limited time available at my disposal, I do not propose to go into all the proposals in the plan.

First, let me take the duration of the secondary education course. Happily our Government have not accepted the proposal of the Secondary Education Commission to have the schooling for a period of 12 years. I must congratulate the Hon. Minister for that wise decision. Inasmuch as our Government have come to a wise decision, I need not go into the merits or *pros* and *cons* of that decision. But, Sir, my joy is rather short-lived, because the White Paper is unjust in the apportionment of the duration allotted to each stage of education. According to the present pattern of education in our State, the courses of study are five years of elementary education, three years of middle school education and three years of high school education. According to the White Paper, the future pattern will be five years of primary education, two years of middle school education and four years of secondary or higher secondary education.

4-30 p.m. The White Paper in its anxiety to give 4 years to the Higher Secondary Stage has taken away one year from the Middle School stage. This, according to my mind, is a very unfair apportionment of the years at our disposal and it is bound to cause the greatest harm to the common man. The accepted pattern, according to the Government of India, is 8 years of integrated Basic Education and 3 years of Higher Secondary Education. The draft syllabuses for Higher Secondary Schools under the scheme for reorganization of Secondary Education issued by the All-India Council for Secondary Education has accepted this pattern and drawn up the draft syllabuses. This accepted pattern consists of 8 years of integrated Elementary (Basic) Education, 3 years of Secondary Education and



5th April 1956] [Sri P. B. K. Raja Chidambaram]

3 years of University Education. This uniform pattern was adopted by the Government of India only after examining all the issues arising out of the recommendations made by the Secondary Education Commission. I do not see any reason why we should not accept the pattern suggested by the Government of India and why adopt a different pattern. Members may probably know that there is a Higher Secondary School in Delhi intended for Madrasi children. The other day, our Government gave a very decent donation to that school for construction of additional buildings. In that school, the Higher Secondary Course is only of 3 years' duration. If Madrasi children in Delhi could complete the Higher Secondary stage in 3 years and attain a standard high enough to entitle them to admission in the Degree Course, is it seriously suggested that Madrasi children living in Madras itself are inferior in intelligence and capacity for application?

The main argument put forward for a four-year Higher Secondary course are that there would be greater scope for learning a vocation in the multi-purpose schools and for attaining a high academic standard in the Higher Secondary Schools. It has been the accepted policy that the diversified courses have been introduced in the Secondary Schools only to give a vocational bias and not vocational competence to the students. The argument that the four years Higher Secondary course is necessary to make the pupils attain an academic high standard, high enough to make them eligible for admission to University cannot also hold water when we know that this standard is attained by children in many States by a three-year Higher Secondary Course.

I do appreciate the fact that academic standards have deteriorated very much in recent years in our Secondary schools. It is up to us to find out why this is so. Is it because that the course is of 3 years' duration, or is it because of other reasons? It is up to us to find out why the standards have fallen. Here, I must, however, say that I am more interested in retaining the 8-year period for Elementary Education than bother about the duration of the Higher Secondary Course. I am not at all satisfied with the arguments advanced for taking away one year from the Middle School course and giving it to the High School course. It is like robbing hundred poor men in order that one rich man may enjoy the comforts he is accustomed to. Elementary Education is intended for the majority of the people of our country. The provision of this facility is the least that any Government could do in the matter of helping the people to grow into efficient citizens. It is very strange that the White Paper states that by upgrading the efficiency of instruction in the first 7 standards it is possible to make the children attain a higher standard during the 7-year period of Elementary Education. We know that it is only the Elementary Grade teachers and Secondary Grade teachers who are teaching in Elementary schools. Their general educational qualification is very low. We know that even candidates who get 20 or 25 per cent of the marks in the S.S.L.C. examination are admitted to the Training Schools and it is absolutely impossible to expect them to be so

[Sri P. B. K. Raja Chidambaram] [5th April 1956

efficient in their work as to make the pupils attain the 8-year standard of education in a period of 7 years. It is strange that the White Paper should think that Graduate teachers employed in Secondary Schools will require 4-years to make the students fit for the Degree Course whereas it expects the teachers with far inferior qualifications to make the pupils attain the 8-year standard in 7 years. I am afraid this is the result of either confused thinking or the anxiety to please some people by giving four years to the Higher Secondary stage.

Another salient feature of the White Paper is the fixation of the age limits for the various stages of education. The White Paper says that for the present the age of admission to an Elementary School may be fixed at 5½ and later on raised to 6. I do not understand why the present age limit of five should be given up in favour of a higher age-limit. The Hon. Minister took great pains to convince us that raising the age-limit to 6 is quite good. But he has not explained how the present age limit is injurious. It has been the tradition in our country from time immemorial to begin the formal education of children at the age of 5. If this age is raised to 6 or 5½, the child is apt to lose its brightness and its educability to a great extent. The seed will develop into a plant only if it is sown at the proper time. It will become useless if it is out of season. In the same manner, if children are to benefit by the instruction imparted in the school they should be admitted in the school at the proper age. In fact, in modern times, when children come into contact with the results of scientific and technological advancement it should be possible to begin their education even at an earlier age. This has been recognized very well with the result that pre-primary education has been holding the attention of the educationists for a very long time now. Unfortunately, the financial position of the country may not have enabled the Government to provide widespread facilities for pre-primary education with the result that it looks like a luxury to-day which can be enjoyed only by children of well-to-do parents. So far as I know, children coming from educationally advanced sections of the society are brought up in an educated and enlightened atmosphere in the home and they do not require the facilities of pre-primary education as much as children hailing from poverty stricken, illiterate and unenlightened homes. If pre-primary education is necessary at all it is necessary only in the case of children coming from poor homes. It is absolutely necessary to take away such children from the distressing atmosphere of the poverty-stricken homes and put them to school as early as possible. The atmosphere in the school, however ill-equipped it may be, is far more conducive to the education of the children than the atmosphere of the homes of the majority of the people of our country. It is therefore necessary that the children should be taken away from this atmosphere as early as possible and hence the need to put them to school at least as soon as they complete the age of 5, if not earlier. If the children are left without formal schooling until they attain the age of 6 it is very doubtful whether they will derive the maximum benefit from schooling.



5th April 1956] [Sri P. B. K. Raja Chidambaram]

Regarding the pupil-teacher ratio in elementary schools from what the Hon. Minister said this morning and from a perusal of the White Paper, I find that there are only three alternatives. Either the pupil-teacher ratio should be raised to 60 pupils per teacher or the Finance Minister should be given at least Rs. 12 crores to be spent on Elementary Education. The third alternative will be reverting back to the shift system. Personally, I think that if somehow or other the Finance Minister comes forward with a proposal for spending twelve crores of rupees, on Elementary Education the Assembly and the public will be only too glad to give him twelve crores so that he can immediately introduce free, universal, compulsory elementary education. If that is not possible, for God's sake, I would request the Finance Minister not to revert to increasing the pupil teacher ratio. There is no use comparing figures obtaining in foreign countries. Where is the comparison between the qualifications of teachers in Western countries and in our country? I would earnestly appeal to him to get money and give free, compulsory education to all the children in our country. For that purpose, let him not revert to the point of raising the pupil teacher ratio. Let him at least have the shift system introduced in our schools.

4-40 p.m.

*SRI V. MUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, விவாதத்தில் இருக்கும் கல்வித் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முன்பெல்லாம் சொல்வோம் : “வெள்ளைக்கார ஆட்சியில் கல்வி நிலை மோசமாய்விட்டது ; அவர்கள் தங்களுடைய ஆட்சியை இங்கு நிலைநாட்டிக்கொள்வதற்கு குமஸ்தாக்களையும், அதிகாரிகளையும் சிருஷ்டி செய்வதற்காகவும், தங்களுடைய அதிகாரத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதற்காகவும் போதிய அளவு கல்வி பெற்றவர்கள் மாத்திரம் இருந்தால் போதும் என்ற முறையில்தான் இந்த நாட்டில் கல்வி அபிவிருத்தி செய்தார்கள்” என்று குறை சொல்வதுண்டு. இன்று அந்த நிலை மாறிவிட்டது. எந்த மாதிரி, முறையான கல்வி நம் நாட்டு மக்களுக்கு வேண்டும் என்பதை நிர்ணயிப்பது நம்முடைய கையில் இருக்கிறது. சுதந்திரம் பெற்று சில வருஷங்கள் ஆனபோதிலுங்கூட, துரதிருஷ்டவசமாக இன்றைக்கும் பழைய முறையை ஒழித்துவிட்டு, ஸ்திரமான முறைக்கு இன்னும் வரவில்லை. யோசித்துக்கொண்டே இருக்கிறோம்.

சென்ற வருஷம் கூட இதுபற்றி ஒரு நிலைக்கு வரவேண்டுமென்று ராஜாஜி அவர்கள் குறைந்தபட்சம் ஆரம்பக் கல்வியையாவது ஒரு வகைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற வகையில் கொண்டுவர முயற்சித்தார்கள். நாட்டில் ஏற்கெனவேயுள்ள, வகுப்பு துவேஷம், அரசியல் வாதம், இவைகளெல்லாம் குறுக்கிட்டு மேற்படி கல்வித் திட்டம் அமுல் செய்யமுடியாமல் தடங்கல் ஏற்பட்டுவிட்டது. அந்த முறையில் ஆட்சேபணை சொல்லப்பட்டது ஷிப்ட் முறை ஒன்றுதான். ஷிப்ட் முறைகூட எப்படி வேண்டாமென்று நினைத்தார்கள் என்றால், ஒரு வேளை படிக்கவிட்டு மாலை பூராவும் குழந்தைகளைத் தெருவிலே சுற்ற விட்டால் கெட்டு அலைந்து போவார்கள் என்ற ஒரு ஆட்சேபணை சொல்லித்தான் அந்த முறை ஆட்சேபிக்கப்பட்டது. இந்தக் கல்வித் திட்டத்தில் கூட ஷிப்ட் முறையைக் கையாளாவிட்டால் அரசியல் சட்டத்தில் சொன்னமாதிரி ஒரு குறித்த காலத்தில் குறித்த அளவு கல்வி பெற முடியாது. ஏனென்றால் தற்போதைய பள்ளிக்கூடங்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பொருளாதார நிலை இவையெல்லாம் உத்தேசித்து நம் கல்வியை சீர்திருத்த வேண்டுமானால் ஷிப்ட் முறை இருக்கத்தான்வேண்டும். ஷிப்ட் முறை, நான் சொல்லப்போகும் ஒரு மாற்றத்துடன் இருக்கவேண்டும். அதாவது காலை நேரத்தில் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் படிக்கவிட்டு, மத்தியான வேளை வீட்டுக்கு அனுப்பிவிடுவது

என்ற முறை முடியாத காரியம். அவர்களை மத்தியானம் வீட்டுக்கு அனுப்பிவிடாமல், இடைவேளையில் பகல் உணவு கொடுத்து, மாலை வரையில் பள்ளிக்கூட காம்பவுண்டிலேயே வைத்து, அங்கு விளையாட்டுச் சொல்லிக் கொடுத்தும், உடல் பயிற்சி சொல்லிக்கொடுத்தும், தோட்ட வேலைகளில் ஈடுபடும்படியும் செய்தால் அவர்கள் மாலை வரையில் பெற்றோர்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் பள்ளிக்கூட காம்பவுண்டிற்குள்ளேயே இருப்பார்கள். இப்படிச் செய்தால் பெற்றோர்களுக்கு யாதொரு ஆட்சேபணையும் இருக்காது. மத்தியானத்திற்குப் பிறகு பள்ளிக்கூடத்தில் வைத்துக் கொள்ளாமல் வீட்டுக்கு அனுப்பிவிட்டால்தான் பிள்ளைகள் தெருவில் அலைந்து திரிந்து கெட்டு விடுகிறார்கள். ஏனென்றால், பிள்ளைகள் வீடு திரும்பும்போது பெற்றோர்கள் வயல்களிலோ மற்றும் வெளியிடங்களிலோ தங்கள் பிழைப்புக்காகப் போய்விடுகிறார்கள். அதனால் பகலில் வீடு திரும்பும் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்ள முடியாது. ஆகவே, ஷிப்ட் முறையை, நான் சொன்ன சிறு மாற்றத்துடன் கையாண்டால் அநேக வகைகளில் நமக்கு லாபகரமாக இருக்கும். பிள்ளைகளும் பள்ளிக்கூடங்களில் இருப்பார்கள். பெற்றோர்களுக்கும் கஷ்டம் இருக்காது. பிள்ளைகளுக்கும் பகல் உணவு கிடைக்கும். மாலை வேளைகளில் விளையாடுவதால் உடல் நலமும் விருத்தியாகும். அரசியல் சட்டத்தில் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளும் கல்வி அறிவு பெறுவார்கள். சர்க்காருக்கும் அதிகப் பணச் செலவு ஏற்படாது.

பாரதியார் பாடியிருக்கிறார் :

“ காலை எழுந்தவுடன் படிப்பு
பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா.”

பாரதியார் வேறு நாட்டுக் கவி அல்ல. நம் நாட்டுக் கவிதான். நம் நாட்டிலேயே பிறந்தவர். நம்முடைய குழந்தைகள் எப்படி கல்வி கற்கவேண்டுமென்று பாடியிருக்கிறார் “ மாலை முழுதும் விளையாட்டு ” என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். அதன்படி பிள்ளைகளை விளையாட விட்டால் நன்மை உண்டு. பள்ளிக்கூடக் காம்பவுண்டுக்குள்ளேயே பிள்ளைகளுக்கு விளையாட்டு, உடல் பயிற்சி முதலியவை சொல்லிக்கொடுத்தால் பெற்றோர்களுக்கு ஆட்சேபனை இல்லை. மாலை முழுதும் விளையாட குழந்தைகள் வழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று முன்கூட்டியே தீர்க்கதரிசனமாக பாரதியார் சொல்லியிருக்கிறார். ஆகவே, ஷிப்ட் முறையில் பாடம் சொல்லிக்கொடுத்து மாலை வேளையில் விளையாட்டு, உடல் பயிற்சி சொல்லிக்கொடுத்தால் ஷிப்டு முறையில் யாதொரு தப்பும் இல்லை.

பல அங்கத்தினர்கள் வெள்ளை அறிக்கையில் கண்டுள்ள பல அம்சங்களைப் பற்றி தங்களுடைய யோசனையைத் தெரிவித்தார்கள். அதே விஷயங்களைப்பற்றி நானும் சொல்லிக்கொண்டிருக்கப்போவதில்லை. ஆசிரியர்களுடைய சம்பளம் உயரவேண்டுமென்று அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். சம்பளம் உயரவேண்டும் என்பதை நானும் ஆதரிக்கிறேன்.

பிள்ளைகள் ஐந்து வயதில் கல்வி கற்க ஆரம்பிக்கவேண்டும். “ இளமையிற் கல் ” என்று பழமொழி உண்டு. இள வயதில் பாடம் பதிவது போல் மேற்கொண்ட வயதில் பதியாது. இளமையில் பதிவதுதான் கடைசி வரையில் நிற்கும். ஐந்து வயதில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தால் தப்பு இல்லை. $5\frac{1}{2}$ வயதில் ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஐந்துக்கும் ஐந்தரைக்கும் அதிக வித்தியாசம் இல்லாததால் அதைப் பற்றி பிரமாதமான ஆட்சேபணை ஒன்றும் இருப்பதற்கில்லை. ஐந்து வயதிலேயே பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதில் தப்பு இல்லை. ஐந்து வயதிலேயே பிராம்மணரல்லாத குழந்தைகளுக்கும் பிராம்மணக் குழந்தைகளோடு போட்டி போடக்கூடிய ஆற்றல் இருக்கிறது. ஐந்து வயதிலே கல்வியை ஆரம்பித்து, கல்வி கற்பதற்கு நல்ல சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொடுத்தால் எல்லாக் குழந்தைகளும் ஒருவரோடு ஒருவர் நல்ல முறையில் பழகி கல்வி அறிவு பெற்றுவிடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.



ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்படவேண்டும். பள்ளிக்கூடங்களை விருத்தி செய்யவேண்டும். பிள்ளைகளுக்கு மத்தியான உணவு கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும். பகல் உணவு இல்லாமல் எப்படிப்பட்ட உயர் தரமான, சீர்திருத்தமான கல்வி கொடுத்தாலும் பிள்ளைகள் கற்க முடியாது. சமுதாயத்திலே தாழ்மையான வறுமையான நிலையில் இருக்கும் பிள்ளைகளுக்கு பகல் உணவு அத்தியாவசியமானது. ஆகவே, பகல் உணவு கொடுப்பதற்கு கட்டாயமாக ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

ஏற்கெனவே இருந்துவரும் கல்வி முறையினால் என்ன நன்மை இருக்கிறது ? ஏதோ உத்தியோகம் கிடைக்கவேண்டும் என்ற நினைப்பிலே கல்வி கற்கப்போகிறார்களேயொழிய வேறொன்றுமில்லை. அந்தக் காலத்தில் இப்படிப்பட்ட மனோபாவம் இருக்கவில்லை. கல்வி என்றால் என்ன என்பதைப் பற்றி திருவள்ளுவர் சொன்னதையும் கம்பர் சொன்னதையும் மறந்து விட்டோம். கல்வி கற்பதென்றால் உத்தியோகத்திற்குப் போவதற்கு என்ற குறிக்கோள் நிலவிவருகிறது. கல்வி கற்றவர்களெல்லாம் உத்தியோகங்களுக்குத்தான் போகவேண்டும் என்ற எண்ணம் நீடித்திருக்குமானால், எல்லோரும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக வேண்டியதேதவிர, சாதாரண ஜனங்களைப் பார்க்கமுடியாது. எல்லா ஜனங்களும் சர்க்கார் ஊழியர்களாகிவிட்டால் மக்கள் பகுதி என்பது இருக்கவேமுடியாது. ஐந்தாவது வகுப்பு படித்தவர்கள்கூட சர்க்காரில் ஒரு பியூன் வேலையோ பங்கா இழுக்கும் வேலையோ வேண்டுமென்று நினைக்கிறார்களேயொழிய வேறு தொழிலில் ஈடுபடவேண்டும் என்ற நினைவு கிடையாது. ஏதோ ஐந்தாவது வரை படித்துவிட்டோம், எழுத்து அறிவு வாசனை அடைந்துவிட்டோம் என்ற நிம்மதி ஏற்படுவது கிடையாது. இந்த நிலைமையை வளர்த்துக்கொண்டு போகாமல் நிலைமையைக் கட்டுப்படுத்தி, மட்டுப்படுத்தி சர்க்கார் உத்தியோகத்தில் குறைந்தபட்சம் தான் இருக்கவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

படிப்பு என்றால் என்ன ? ஒருவன் எண்ணுவதை வெளியில் எடுத்துச் சொல்வதற்கும், தன்னுடைய கருத்துக்களை எழுதுவதற்கும், படிப்பதற்கும், உலகத்தில் நடக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கும் என்ற முறை இருக்கவேண்டும், **Three R's** என்று சொல்லக்கூடிய முறையில் கல்வி இருக்கவேண்டும். சர்க்கார் உத்தியோகத்தைத்தான் பெறவேண்டுமென்ற நிலை மாறவேண்டும்.

சமுதாயத்தில் கல்வி ஓரளவு இருக்கவேண்டும். மற்றவர்களோடு பேசி, பழகி, உலகத்தில் இருக்கிற விஷயங்களில் பொதுவான ஞானம் பெற வேண்டும். குமஸ்தாக்களாக வேண்டுமென்ற குறிக்கோள் இருக்குமானால் எத்தனை பேரைப் படித்து வைத்துதான் என்ன பிரயோஜனம் ? பி.ஏ., எம்.ஏ., படித்துத்தான் அறிவாளியாக முடியும் என்ற நிலைமை மாற வேண்டும்.

கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று எல்லோரும் சொல்கிறார்கள். தரம் குறைந்துவிட்டது என்று சொன்னால், அதற்குக் காரணம் என்ன ? சினிமா, நாடகம், கலை, காதல், காமம் இம்மாதிரியான விஷயங்களில் மாணவர்களுடைய உணர்ச்சி போவதற்கான சூழ்நிலை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு போகிறது. பழங்காலத்தில் உள்ளதுபோல் கல்வி நிலையங்களில் நல்ல பண்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவைகளை வளர்ப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டாக்கவேண்டும்.

ஆரம்பப் பள்ளி, நடுத்தரப் பள்ளி, உயர்தரப் பள்ளி இவைகளில் படிக்கும் பிள்ளைகளும் பெண்களும் பள்ளிக்கூடம் விட்டு வெளிவரும் போதும், பள்ளிக்கூடம் போகும்போதும், ஒழுக்கத்துடனும், கட்டுப்பாடுடனும் நடந்துகொள்கிறார்களா என்று பார்த்தால், அது சற்று குறைவாகத்தான் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் சினிமாப் பேச்சுத்தான். சினிமாப் பாட்டுத்தான். பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறு மாணவிகள், மாணவர்கள், சிறு வயதாக இருந்தாலும்கூட பழைய காலத்தில் உள்ள பண்பாடோடு இருப்பதில்லை. வேறொன்றும் தெரியாவிட்டாலும், சினிமாப் பாட்டுதான் மாணவர்களின் வாயிலிருந்து வருகிறது. “ பெண்ணின் மனதைத் தொட்டுப் போனவரே . . . உங்கள் எண்ணத்தைச் சொல்லிவிட்டுப் போங்க . . .”

என்ற முறையில் பள்ளிக்கூட மாணவ, மாணவிகள் பாடுவது சர்வ சகஜமாகிவிட்டது. இப்படிப்பட்ட நிலைமை நாட்டில் வரக்கூடாது. கல்வி அமைச்சரவர்களும் இந்த விஷயத்தில் கவனம் வைத்திருக்கிறார்கள். இன்னும் அதிகமான கவனத்தைச் செலுத்தி, கல்வி நிலையங்களில் நாஸ்திகம், அரசியல், காதல் கட்டுரைகள் இவைகள் இல்லாதபடி பார்த்துக்கொள்வது கல்வியின் குறிக்கோளாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திட்டத்தை ஆதரித்து, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

**Sri D. KRISHNAMURTHI GOUNDER :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கனம் கல்வி அமைச்சர் சொன்னார், ஏதோ சில செய்தித் தாள்கள் இதைப்பற்றி வித்யாசமாக எழுதியிருக்கிறார்கள் என்றும், இந்த திட்டத்தில் ஆசாரியார் அவர்களுடைய திட்டத்தைப் புகுத்தப்பார்க்கிறார்கள் என்றும் எழுதியிருப்பதாகச் சொன்னார். அதிலும் முக்கியமாக "விடுதலை" பத்திரிகை அப்படி எழுதியிருப்பதாக பொருள்படும்படி சொன்னார். ஆனால் "விடுதலை" பத்திரிகையில் கூறி இருப்பது என்னவென்றால் இந்த திட்டத்தில் சில நன்மைகள் இருக்கின்றன என்று எழுதி இருக்கிறது. சில நன்மைகள் இந்த திட்டத்தில் இருந்தாலும் இங்கு பேசுவதைப் பார்த்தால் கனம் ஆச்சாரியார் அவர்கள் முன்பு கொண்டு வந்த திட்டத்தை மறைமுகமாக புகுத்துகிறார்களோ என்று சந்தேகிக்கும்படியாக இருக்கிறது.

இப்பொழுது "ஷிப்ட் முறை, ஷிப்ட் முறை" என்று கூறுகிறார்கள். ஷிப்ட் முறை எதற்காக வந்தது என்றால் ஒரு குழந்தை குறைந்தது 5½ மணி நேரமாவது கலாசாலையில் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் முழு நேரத்தையும் கல்வியில் செலவிட வசதியாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம். இதைப்பற்றி பல அங்கத்தினர்கள் இங்கும் வெளியிலும் கூறுகிறார்கள். இந்த முறை நல்ல முறை. அதனால் அதையே ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் இந்த திட்டத்தில் முன்பு கொண்டு வந்த ஆச்சாரியார் திட்டத்தை மறைமுகமாகக் கொண்டுவந்தால், மறைமுகமாக புகுத்தினால், கண்டிப்பாக கனம் கல்வி அமைச்சர் அவர்கள் தோல்விதான் அடைவார் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் ஏழை குழந்தைகளுக்கு ஒரு வேளை கல்வி போதாது. அவர்கள் நன்கு படிக்கவேண்டுமென்றால் அவர்கள் முழு நேரமும் கல்விச்சாலையிலேயே இருக்கவேண்டும். அங்கேயே இருந்து உழைக்கவேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** ஒரு வேளை நல்லதா என்பதைப்பற்றி அபிப்பிராயம் சொல்வதற்கு கனம் அங்கத்தினருக்கு உரிமை இருக்கிறது. அதைக்கூட வேண்டாம் என்று கனம் அங்கத்தினர் சொன்னால் அவர் தப்பு செய்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

**Sri D. KRISHNAMURTHI GOUNDER :** எங்களுக்கு உரிமை இருக்கிறது. அதை மறைமுகமாக புகுத்தக்கூடாது என்றுதான் சொல்லுகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நான் செய்யவேண்டும் என்று நினைத்தால் அதை மறைமுகமாகச் செய்யவேண்டிய அவசியம் இல்லை. நேரடியாகவே செய்வேன்.

**Sri D. KRISHNAMURTHI GOUNDER :** இந்த கல்வி சீர்திருத்தமானது முதலில் பள்ளியில் ஆரம்பிக்கிறது. உயர்தர ஆரம்பப் பள்ளியில் ஆரம்பமாகிறது. வயதைப்பற்றியும் சில சச்சரவுகள் இருக்கின்றன. குறைந்தது ஐந்து வருஷத்தில் சேர்ப்பது என்பதை இப்பொழுது நடைமுறையில் ஏற்றுக்கொண்டு நடந்துகொண்டு வருகிறது. ஏதோ கலாசாலைகள் நிர்ணயித்து விட்டார்கள். ஆனால் அந்த வயதை உயர்த்தவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார். ஆரம்பப் பள்ளியில் வாசிக்கக் கூடியவர்களில் எவ்வளவு பேர்கள் கலாசாலைக்குப் [illegible] போகிறார்கள் என்பதைக் கேட்கிறேன். எவ்வளவோ ஏழை [illegible] கடைசி வரையில் படிக்க முடியாமல் போய்விடுகிறார்கள். [illegible]





தில் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆரம்பப் பள்ளிகளில் சேருகிறவர்கள் ஐந்தாவது, எட்டாவது ஸ்டான்டர்டு கூட முடிப்பது இல்லை. தற்போதுள்ள கல்வி முறைப்படி அவரவர்கள் குறைந்தது ஐந்து வயதில் சேர்ப்பதாக இருந்தால் மிகுந்த நல்லதாக இருக்கும். இப்பொழுது பார்க்கலாம் நமது அமைச்சர் அவர்கள் சொல்லுவதுபோல் பணக்காரர்களும் வேறு சில வகுப்பினர்களும் தான் தங்களுடைய குழந்தைகளை கான்வெண்ட் பள்ளிகளுக்கு மூன்றாவது வயதிலேயே அனுப்பிவிடுகிறார்கள். அப்படி இருக்கும்போது ஐந்து வயதிலேயே குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்பிவைக்க கட்டாயப்படுத்தவேண்டும்.

மேலும் கிராமங்களில் இருப்பவர்கள் தங்களுடைய குழந்தைகளை 5½ வயதிலேயே பள்ளிகளுக்கு அனுப்புவது இல்லை. அவர்கள் ஏழைகளாக இருப்பதால் மற்ற காரியங்களில் ஈடுபடுத்தி விடுகிறார்கள். அதனால் குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்புவதற்கு மறந்து விடுகிறார்கள். ஆகையால் நான் அரசாங்கத்தை வேண்டிக்கொள்வது என்னவென்றால் கனம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து வயதை உயர்த்தவேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் 1 முதல் 5 வரையிலும், 5 முதல் 8-ஆவது ஸ்டாண்டர்ட் வரையிலும் ஹைஸ்கூல் முதலியவைகளில் இப்பொழுது கல்வி திட்டம் வைத்திருக்கிறார்கள். அதாவது சிலபஸ், பாட திட்டங்கள், இவைகள் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். அம்மாதிரி இருந்தால்தான் அவர்கள் படிக்க மிகுந்த வசதியாக இருக்கும். தற்போது எட்டாவது ஸ்டாண்டர்ட் படித்துவிட்டு நாலாவது பாரத்திற்குப் போனால் அங்கு படிக்க கஷ்டமாக இருக்கிறது. தரம் குறைவாக இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். கலாசாலைகளிலும் "தரம் குறைந்துவிட்டது, தரம் குறைந்துவிட்டது" என்று சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் என்ன? அதற்குக் காரணம் கீழேயெல்லாம் தாய் பாஷையில் படித்துவிட்டு அங்கு போனால் ஆங்கிலத்தில் படிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. அதிலும் தமிழ் மக்கள் எல்லோரும் இண்டர்மீடியட்டில் தமிழில் படித்துவிட்டு அதாவது இரண்டு வருஷங்கள் தமிழில் படித்துவிட்டு மேலே போய் பாஸ் பண்ணவேண்டும் என்றால் அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் ஆரம்பப் பள்ளியிலேயே அவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்கவேண்டும். உயர்தர ஆரம்பப் பள்ளியிலும் அதற்கு அடுத்தாற்போல் உயர் நிலைப் பள்ளியிலும் ஒரே புஸ்தகத்தை பாடப் புஸ்தகமாக வைக்கவேண்டும். அதற்குத் தகுந்த விதிகளைச் செய்யவேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அதைத்தான் திட்டத்திலும் சொல்லி இருக்கிறார்கள்.

**Sri D. KRISHNAMURTHI GOUNDER :** ஒரே மாதிரியாக இருந்தால் நல்லது. மேலும் ஆங்கிலத்தை கட்டாயமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதுவும் வரவேற்கத்தக்கதுதான். முக்கியமாக இதற்கு என்று ஒரு தனிக் குழுவை ஏற்படுத்தப்போவதாகவும் சொல்லுகிறார்கள். அப்படி ஏற்படுத்தும்போது நாட்டிலுள்ள எல்லா கட்சி தலைவர்களையும் கலந்து அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் எங்கள் கட்சித் தலைவர் திராவிடப் பெரியார் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை அமைத்து வைத்திருக்கிறார். அதாவது குறைந்த காலத்தில் குறைந்த செலவில் நல்ல படிப்பு எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும் என்று கொண்டுவந்திருக்கிறார். அதன் மூலம் எல்லோரும் குறைந்த காலத்தில் எழுதப் படிக்க தெரிந்துவிட்டால் போதும் என்று அந்த திட்டத்தில் இருப்பதாக சொல்லியிருக்கிறார். ஆகையால் அவர்களை தயவு செய்து வரவழைத்து அவரைக் கலந்து ஆலோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri K. RAJARAM NAIDU :** அந்த திட்டத்தைப்பற்றி தெரிந்திருந்தால் அதை விளக்கவேண்டும் என்று கேட்கிறார்கள்.

**Sri D. KRISHNAMURTHI GOUNDER :** அவரைக் கேட்டால் அவரே விளக்குவார், அதாவது படிப்புக் காலத்தைக் குறைப்பது. இப்

[Sri D. Krishnamurthi Gounder] [5th April 1956]

போது ஹிந்து மதத்தின் பெயரால் அனாவசியமாக பல விழாக்களுக்கு என்று விடுமுறை நாட்கள் விடுகிறார்கள். அப்படி விடாமல் காலத்தைக் குறைப்பது என்பது ஒன்று. அப்படிக் குறைத்துவிட்டால் குறுகிய காலத்தில் குழந்தைகளுக்கு எழுதப் படிக்க தெரிந்துவிடும். கணக்குப் போடுவது, கூட்டல், கழித்தல், வகுத்தல் முதலியவைகள் கற்றுக்கொள்ளலாம். இவைகள் வந்தால் போதும் என்று சொல்லுகிறார். இது அவருடைய திட்டம். எல்லோரும் கலாசாலையில் படிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. குறைந்த அளவில் நல்ல படிப்பைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் அவருடைய திட்டம்.

அடுத்தபடியாக சர்க்கார் முக்கியமாக கவனிக்கவேண்டியது ஒன்று. அதற்கு என்ன எதிர்ப்பு வந்தாலும் கல்வி அமைச்சர் அதற்கு தயாராக இருக்கவேண்டும். கல்வி திட்டத்திற்கு வேண்டிய பாட புஸ்தகங்களை சர்க்காரே அச்சடிக்க எடுத்துக்கொள்ளவேண்டும். இது முக்கியமான விஷயம். அதனால் பலர் பல எதிர்ப்புகளை கொண்டுவரலாம். அதை தைரியமாகச் செய்தால் அதை நாங்கள் வரவேற்போம். இப்பொழுது நமக்கு தனித் தமிழ் ராஜ்யம் வரப்போகிறது. எல்லாம் தமிழிலேயே வரப்போகிறது. அதனால் எல்லா இடங்களிலும் ஒரே விதமான பாடங்களை படிக்கும் படியாக இருந்தால் நலமாக இருக்கும். இதை மிகவும் கவனிக்கவேண்டும். ஆசிரியர்களுடைய சம்பளத்தை கவனித்தால் மிகவும் கேவலமாக இருக்கிறது. அவர்களுக்கு வாழ்க்கைக்குத் தக்க வழிவகை செய்து கொடுக்க வேண்டும். அதற்குத் தக்கபடி அவர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டும். அதற்கு வேண்டிய திட்டம் இந்த அறிக்கையில் இல்லை. பணம் இல்லை என்று சொன்னால் அதற்கு நாங்கள் வழி சொல்லுகிறோம். நமது ராஜ்யத்தில் எவ்வளவோ கோவில்கள் இருக்கின்றன. அங்கும் மற்ற இடங்களிலும் பல பொருள்கள் தேங்கிக் கிடக்கின்றன. அவைகள் அனாவசியமாக செலவழிக்கப்படுகின்றன. அதற்கு வேண்டிய ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அந்தப் பணத்தை கல்விக்கு செலவு செய்யவேண்டும். அதற்கு அரசாங்கம் முற்படுவார்கள் என்று நம்புகிறேன்.

பத்து வருஷம் வரையில் இலவசக் கல்வி கொடுக்கவேண்டும் என்று அரசியல் சட்டத்தில் எழுதிவிட்டார்கள். அது சர்க்காருடைய கடமையும் என்று எழுதிவிட்டார்கள். அதை தட்டிக் கழிக்காமல் ஆரம்பக் கல்வியிலேயே அவர்கள் ஏற்று நடத்தவேண்டும். எனக்கு முன்பு பேசியவர்கள் தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்விக்கூடங்கள் வியாபார ஸ்தலங்களாக மாறிவிட்டன என்று சொல்லுகிறார்கள். அது முற்றிலும் உண்மை. ஆனால் மிஷனரிகள் நடத்தும் பள்ளிகள் அப்படி இல்லை என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகள் அவரவர்களுடைய பொறுப்பில் நடைபெறுகின்றன. அவர்கள் லாபத்தைக் கருதி நடத்துகிறார்கள் என்று நம்புகிறேன். அரசாங்கம் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் முறையில் ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை அமைத்திருக்கிறார்கள். அங்கங்கு தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகளில் ஏழை மக்கள் முன்னுக்கு வரவேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்கள் நடத்தவில்லை. ஆகவே சர்க்கார் அவர்கள் . . . . .

Mr. SPEAKER : The House will now adjourn and meet again to-morrow at 9-30 a.m.

The House then adjourned.

### IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

1. *Summary statement of main issues of the White Paper on Education.*

2. *Report of the Elementary Education Reforms Committee, Madras State, 1955.*

3. *Tamil translation of the recommendations of the Elementary Education Reforms Committee, Madras State, 1955.*

4. *Second Report of the Committee on Assurances.*



5th April 1956]

## APPENDIX I.

[Vide answer to starred question No. 3544 asked by Sri A. M. Rathnaswamy at the meeting of the Legislative Assembly held on 5th April 1956, page 611 supra.]

***List of Co-operative Credit Societies liquidated during the last financial year, i.e., from 1st April 1954 to 31st March 1955.***

| *Name of the circle.* (1) | *Name of the society whose registration was cancelled during the last financial year.* (2) | *Reasons far liquidation.* (3) |
|---|---|---|
| Ramanathapuram. | 1 Kallal Co-operative Credit Society. | Number of members reduced below statutory minimum. |
| Tirukkoyilur .. | 2 Paruthipuram Co-operative Credit Society. | Members applied for voluntary liquidation. |
| Do. .. | 3 Devadanampettai Co-operative Credit Society. | Mismanagement by the Board and lack of interest among the members. |
